கங்கை கொண்ட சோழன்

பாகம்-3

(சரித்திர நாவல்)



பாலகுமாரன்

கங்கை கொண்ட சோழன்

(சரித்திர நாவல்)

(மூன்றாம் பாகம்)

பாலகுமாரன்

மின்னூலாக்கம் : செல்லா

விசா பப்ளிகேஷன்ஸ்
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்,
பழைய எண்: 28, புது எண்: 13, சிவப்பிரகாசம் சாலை
தியாகராய நகர், சென்னை 600 017.
தொலைபேசி: 24342899, 24327696
e-mail: enquiry@thirumagalnilayam.com

மின்னூலாக்கம்
செல்லா

www.minnoolakam.blogspot.com

முதற் பதிப்பு ஜனவரி, 2014
இரண்டாம் பதிப்பு ஏப்ரல், 2014
மூன்றாம் பதிப்பு ஆகஸ்ட், 2014

உரிமை ஆசிரியருக்கு ©

- Title GANGAI KONDA CHOZHAN PART - III
- By **Balakumaran**
- Third Edition August 2014
- Paper 18.6 kg.
- Total No. of Pages 520

விலை **ரூ.340/-**

திருமகள் நிலையம்
"சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்"
முதல் மாடி எண்.13, சிவப்பிரகாசம் தெரு,
தி.நகர், சென்னை–600 017.
தொலைபேசி எண் 2434 2899, 24327696
பேக்ஸ் எண் 91–44–24341559
E-mail enquiry@thirumagalnilayam.com
website www.thirumagalnilayam.com

Typesetting **RVK DESIGNERS,**
Chennai - 2. Mobile 9710329866
rvkdesigners@yahoo.co.in
Printed at Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

முன்னுரை

இனிய ஸ்நேகிதங்களுக்கு,

வணக்கம். வாழிய நலம். இறையருளாலும், குரு அருளாலும் கங்கை கொண்ட சோழன் மூன்றாம் பாகம் எழுதி முடித்தாகி விட்டது.

முடியாது. இத்தோடு முடிந்து போயிற்று என்று நானும், என்னை சார்ந்தவர்களும் நினைத்துக் கொண்டிருக்க, அதிலிருந்து மீட்டு என்னை என் குருநாதர் எழுத வைத்திருக்கிறார். திருவண்ணாமலை மகான், கடவுளின் குழந்தை அடியார்க்கு நல்லான் எங்கள் சற்குருநாதர் பகவான் யோகி ராம்சுரத் குமாருக்கு எங்கள் பணிவான வணக்கங்கள்.

COPD என்கிற அந்த நோய் தொற்று அத்தனை பலமாக இருந்தது. ஒரு பிடி மூச்சுக்கு தவிக்க வேண்டியிருந்தது. 'தப்பித்து வந்தேன் அம்மா', என்று பாடத் தோன்றியது. எனக்காக பிரார்த்தனை செய்த அத்தனை உள்ளங்களுக்கும், நான் மீண்டு வர காரணமாய் இருந்த மயிலை யோகி ராம்சுரத்குமார் சத்சங்க அன்பர்களுக்கும் என் நமஸ்காரங்களை தெரிவித்துக்கொள்கிறேன். இரவு, பகலாக என் சத்சங்கம் என்னை பேணிக் காத்தது. பதினைந்து நாள் படுக்கைக்கு பிறகு மீண்டு எழுந்து வந்து விட்டேன். ஆனாலும், நுரையீரல் தொற்றுக்கு உண்டான மாத்திரை, மருந்துகளின் வேகம் மிக அதிகமாக இருந்தது. எழுந்து நிற்க முடியவில்லை. இரண்டு கால்களிலும், இடுப்பிலும் வலுவில்லை. உட்கார்ந்துவிட்டு எழுந்தால் நிற்பதற்கு ஒன்றரை நிமிடம் ஆகியது. நின்ற பிறகு நடப்பதற்கு சிரமம் இருந்தது. யார் தோளையாவது பிடித்துக் கொண்டு நடக்க வேண்டும். அல்லது சுவர் பிடித்து நடக்க வேண்டும். அல்லது கம்பு ஊன்றி நடக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. விழுந்து விடுவேனோ என்று அதிகம் பயந்தேன். விழுந்தால் சுக்குநூறாவது திண்ணம் என்று நினைத்தேன். ஆனால் என் நண்பர்கள் பேருதவி செய்தார்கள். நன்றி என்ற வார்த்தை

யெல்லாம் போதவே போதாது. அடுத்த ஜென்மத்திற்கும் நான் கடன்பட்டிருக்கிறேன். பயணப்பட முடியாமல் நோய் தடுத்தது.

இதனால் மூன்றாம் பாகம் எழுத வேண்டியது தள்ளிப் போயிற்று. இன்னும் பயணம் செய்ய வேண்டுமே. கங்கை வரை அரையன் ராஜராஜன் போயிருக்கிறார். சக்ரவர்த்தி இராஜேந் திரர் அனுப்பியிருக்கிறார். நாம் போக வேண்டுமே என்று தவித் தேன். கங்கையை பார்க்காமல், அந்த வழி பயணப்படாமல் எப்படி நாவல் எழுதுவது, ஒரிஸா போக வேண்டாமா, கோதாவரி தாண்ட வேண்டாமா, கோதாவரியின் கரையிலுள்ள பித்தாபுரம் போக வேண்டாமா, வேங்கிக்கு போக வேண்டாமா என்று நான் அதிகம் யோசித்தேன். நின்று நடக்கவே தவிக்கிற போது இவ்வளவு தொலைவு எப்படி பயணிப்பது, கங்கை வரை போகும்போது நான் மட்டுமா போக முடியும். என் இரண்டு மனைவியரும் துணை வந்தார்கள். பாக்கியலக்ஷ்மி எங்கு போனாலும் என்னோடு இணைந்து கொள்வார். இந்த முறை என் டாக்டர் மகேஷ் அவர்களும் என்னோடு என் ஜாக்கிரதைக் காக சேர்த்து கொண்டார்கள். விமானப் பயணமும், கார் பயண முமாக இவர்கள் ஐவரோடு நான் அலைந்தேன். நான் ஒரு சாதாரண எழுத்தாளன். ஏழையும் அல்ல, பெரும் பணக்காரனும் அல்ல. மத்தியதர வர்க்கம். எனக்கு இந்த சாகசங்கள் அதிகம் பண நெருக்கடியை தரக்கூடியவை. ஆனால், அதை நான் பொருட்படுத்தவில்லை. நகைகள் விற்றாவது காசுகள் தரு கிறோம் என்று மனைவியர் சொன்னார்கள். சந்தோஷமாக இருந்தது. ஆனால் எதுவும் விற்காமல் காசு கிடைத்தது.

உடல் தேறுவதற்காக காத்திருந்தேன். பயணங்கள் மேற் கொண்டேன். கங்கை கரையின் பெரும்பகுதியை அலசினேன். கடல் கலக்கும் இடத்திற்கு போய் வந்தேன். மூத்தோர் மனக் கேதம் கங்கையும், கடலும் கலக்கின்ற இடத்தில் தீர்க்கும் பொருட்டு அமர்ந்து தர்ப்பணங்கள் செய்தேன். படகு பயணம் மேற்கொண்டேன். வாகனத்தில் ஏறி முன்னும், பின்னும் சுழன்றேன். பிரம்மபுத்ராவிற்குள் நுழைந்தேன். அங்கே காமாக்யா கோவிலில் அம்மனை தரிசித்தேன். மலைப்பாங்கான அந்த பகுதியை சுற்றினேன். கங்கையை விட அகலமான பிரம்மபுத்ரா வில் சவாரி செய்தேன். எங்கே இணைகிறது என்று தேடினேன். நிதானமாய் வீடு வந்தேன்.

அந்த மூங்கில் காடுகள், கடற்கரை கிராமங்கள், அங்குள்ள பரதவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் எல்லோரையும் உன்னிப்பாக கவனித்தேன். நாலு வீட்டிற்கு ஒரு குளம், ஒரு குளத்தை சுற்றி ஒன்றோ, அல்லது இரண்டு, மூன்றோ வீடுகள், எல்லார் வீட்டை சுற்றிலும் மூங்கில் புதர்கள். சணல் விதைத் தல், அறுத்தல், பகுத்தல் என்று பார்த்தேன். மீன் உணவு இல்லாத வீடு இல்லை என்று தெரிந்தது. மீனை ஆவலாக சாப்பிட்டார்கள். அங்கு சந்தித்த நண்பர்கள் இதைவிட ருசி யான உணவு இல்லை. நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அற்புத மான உணவை இழக்கிறீர்கள். அந்த இழப்பிற்கு ஈடாக எதுவும் இல்லை. காய்கறிகள் எல்லாம் பொய், புரதம் அதிகம் இருப்பது மீனில் மட்டுமே. ஒரு மீன் சாப்பிட்டு பார்க்கிறீர்களா என்றெல் லாம் வற்புறுத்தினார்கள். உள்ளூர ஆசை இருப்பினும் மறுத்து விட்டேன். இந்த வயதில் அந்த பரீட்சை செய்ய என் மனம் ஒப்பவில்லை. வயிறு ஒன்றுதான் சேதமில்லாமல் இருக்கிறது. அதற்கும் கேடு வரக்கூடாது என்று கவலைப்பட்டேன்.

அந்த ஊரின் அமைப்பும், மக்களின் வாழ்க்கையும், பெண் களின் உழைப்பும், போர் நடந்த இடங்களும், கரையும், கரை யோர கிராமங்களும் எனக்கு நிறைய சொல்லிக் கொடுத்தன. படகின் நுனியில் இராஜேந்திர சோழனாய் தலைப்பாகை கட்டிக் கொண்டு பெரும் நாவாய்களை கடக்கும்பொழுது ஆவலாய் பார்த்தேன். அடடா. இன்னும் இளவயதில் வந்திருக்க வேண் டிய இடம் அல்லவா என்ற ஏக்கம் எழுந்தது.

நண்பர்களே, வடகிழக்கு பக்கம், வடமேற்கு பக்கம், வடக்கு பக்கம் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை இருந்தால் இப்போதே செய்துவிடுங்கள். ஒரு இடத்தில் இரண்டு, மூன்று நாட்கள் தங்கி இருங்கள். கங்கை கரையோரம் ஒரு வாரம் இருக்கலாம். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பக்கம் அலையலாம். நீத்தார் கடன் முக்கியம் என்றால் ஒரு நாள் வைத்துக் கொண்டு மற்ற நாளெல்லாம் கங்கையை நீங்கள் ரசிக்கலாம்.

ஒரு தமிழ் வேந்தன் வடக்கே வெகுதூரம் போய் கங்கையை கொண்டு வந்து, அதை தன் ஊர் சிவனுக்கு அபிஷேகம் செய்து, மற்ற எல்லா கோவில்களுக்கும் அனுப்பி, தன் நாகரீகத்தை அங்கு நாட்டி, அவர்கள் நாகரீகத்தை இங்கு கொண்டு வந்து பரப்பி

இருக்கிறான். இந்த தைரியத்தினாலேயே இதைச் செய்தால் அதை செய்ய முடியாதா என்று கடற்பயணமும் மேற்கொண் டான். அவன் கங்கைக்கு போனதற்கு காரணம் பலதாக இருப் பினும், ஒன்றன் மீது ஒன்று ஏறி நாவாய்கள், பெரிய வங்கங் கள் என்பது பிடித்தும், வாங்கியும் வந்து, கிழக்கே உள்ள ஸ்ரீவிஜயத்தின் மீது படையெடுத்து அங்கிருந்த புத்த மதத் தினர் கொட்டம் அடக்கி, அங்கு கடல் வழி பயணத்திற்கும், வணிகர்களுக்கும் பேர் இடைஞ்சல் செய்த ஸ்ரீவிஜயத்து வீரர் களை அடித்து, உட்கார வைத்து சீனத்திற்கு போகும் பாதையை செப்பனிட்டான். இவனால் அவன் எகிறுகிறான், அவனால் இவன் எகிறுகிறான் என்று தொடர்ந்து பல பெயர்கள் சொல்லப் பட, அத்தனை பேர் முதுகெலும்பையும் அடித்து நொறுக் கினான். இந்த பாகத்திற்கு அடுத்த பாகத்தில் அந்த படை யெடுப்பு வரும். மாபாளம், லங்கா சோகம், கடாரம், ஸ்ரீவிஜ யத்தை தாக்கி எரியூட்டிய விஷயங்கள் வரும். ஸ்ரீவிஜயம் மட்டுமே தண்டிக்கக்கூடிய விஷயம் அல்ல. சிறிய கண்களும், குட்டையான உருவமும், மெல்லிய உடம்பும் உள்ள சீனத்தின் சாயல் உள்ள இந்த மக்களை மிரட்டி வைக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அதிகம் மிரண்டு போனார்கள். சீனத்து வழி எளிதாயிற்று. அடுத்த மூன்று தலைமுறைக்கு கடல் வாணிபம் மிகச் சிறப்பாக இருந்தது.

இந்த மூன்றாம் பாகத்திற்காக நான் பயணப்பட்டது மட்டுமல்லாமல், இரவு, பகலாக பல புத்தகங்கள் படித்து, மனதில் ஏற்றிக்கொண்டு என் அறையை சுற்றி பல தகவல் களை போஸ்டராக ஒட்டியும், வெள்ளை பலகையில் எழுதி யும் வைத்துக் கொண்டேன். எந்த நேரமும் கண்ணில் பட வேண்டிய சில விஷயங்களை குறித்துக் கொண்டேன். இதற் கெல்லாம் பல நண்பர்கள் உதவி செய்தார்கள். மறுபடியும் சோழதேசம் பயணப்பட்டேன். கங்கை கொண்ட சோழபுரத்திற்கு போய் கண்ணில் ஜலம் விட்டு நின்றேன். எப்பேர்பட்ட மகோன் னதமான சாம்ராஜ்யம் சரிந்து போயிற்று என்று திகைப்படைந் தேன். எனக்கு சரித்திரத்தின் வாயிலாக மனிதகுல வாழ்க்கை புரிந்தது. இந்தக் காலத்தின் முன்பு எதுவும் நில்லாது. எல்லாவற் றையும் காலம் அழித்துக் கொண்டு போய்விடும். உங்கள் மொழி,

மதம், நாகரீகம் எல்லாவற்றையும் காலம் சுருட்டி தின்றுவிடும். இராஜேந்திர சோழரின் மொழி உங்களுக்கு சர்வ நிச்சயமாய் புரியாது. அந்த கல்வெட்டில் ஒரு வாக்கியம் படிக்க இயலாது, அது தமிழ்தான். ஆனால் உங்கள் தமிழ் அல்ல. அந்த கல்வெட்டுகளிலிருந்தும், செப்பு பட்டயங்களிலிருந்தும் விஷயங்கள் புத்தகங்கள் மூலம் சேகரித்தேன். பட்டயங்கள் சென்னை அருங்காட்சியத்தில் இருப்பதை தடவி பார்த்தேன். பல ஆய்வாளர்களின் புத்தகங்களும், அறிவுரைகளும் எனக்கு இந்த புதினம் எழுத உதவி செய்தன.

என்னுடையது சரித்திர புதினம். இதில் சரித்திரம் கொஞ்சம். புதினம் அதிகமாகவும் இருக்கும். அதாவது உண்மையான தகவலும், இப்படி இருந்திருக்கக்கூடும் என்ற கற்பனையும் இருக்கும். இப்படி ஒரு வெற்றி இருந்தால் எப்படி இருக்கும் வாழ்க்கை. இவ்வளவு தூரம் நடக்க வேண்டுமென்றால் என்னென்ன வேதனைகள் இருந்திருக்கும். இந்த காடுகளை எப்படி அறுத்து போயிருப்பார்கள். காசிக்கு என்ன வழி. அங்கே எங்கு தங்கியிருப்பான். எல்லா இடமும் மாறிப் போயிற்றே. மாறாதது என்ன. எந்த இடத்தில் மிலாடுடையாரும், இன்னும் இரண்டு தளபதிகளும் மாண்டு போனார்கள். எங்கே அந்த சின்னங்கள். கொள்ளிப்பாகை எங்கிருக்கிறது என்றெல்லாம் தேடினேன்.

இன்னும் உங்களுக்கு தெளிவாக சொல்ல வேண்டுமென்றால் இந்திரதத்தன் கைது செய்யப்பட்டு சோழதேசம் அனுப்பப்பட்டது நிஜம். அவன் மகன் இறந்தது நிஜம். எப்படி இறந்தான் தெரியாது. நான் இந்திரதத்தனே கொன்றுவிட்டான் என்று கற்பனை செய்தேன். அதற்கு வலுவான காரணங்கள் இருந்தன. எந்த ஒரு போரும் முதல் போரிலேயே முடிந்து விடுவதில்லை. இரண்டாவது ஒரு படை திரட்டி தாக்குவது என்பது இன்று வரை எல்லா போர்களிலும் நடந்திருக்கிறது. சரித்திரங்கள் பற்றி படித்தவர்களுக்கு இது தெரியக்கூடும். தோற்று ஓடியதாக எவரும் காணாமல் போனதில்லை. மறுபடியும் குழுவாக சேர்ந்து தடம் பார்த்து தாக்குதல்கள் நடத்தத் தான் செய்வார்கள். தண்டபுத்தி தர்மபாலன், கோசலதேசத்து கோவிந்த சந்திரன், உத்திரலாடத்து மகிபாலன் இவர்களெல்லாம்

நிஜம். அவர்கள் தலையில் கங்கை நீர் கொண்டு வந்தது கல்வெட்டுகளில் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

ஆனால் போர் எப்படி நடந்தது. எது உத்திரலாடம், எது தட்சிணலாடம், எது கோசலம், எது தண்டபுத்தி, எது வேங்கி, எது வழி, இவற்றை ஒருவாறுதான் ஊகிக்க முடிகிறது. திட்ட மிட்ட எல்லைகள் இல்லை. அந்த எல்லைகள் எல்லாம் மாறிப் போயிற்று. எல்லா நேரமும் மழை பெய்கின்ற ஒரு ஊர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது அஸ்ஸாமில் இருக்கின்ற சிரபுஞ்சி. சிரபுஞ்சிக்கு போயிருக்கிறான் என்றால் பிரம்ம புத்ராவை கடந்துதான் போயிருக்க வேண்டும். மலைகளில் ஏறி, இறங்கியிருக்க வேண்டும். அந்த மழையில் நனைந் திருக்க வேண்டும். காமாக்யா தரிசனம் பார்த்திருக்க வேண்டும்.

இவைகளை தெள்ளத் தெளிவாக யூகம் செய்ய முடிகிறது. யார் போனார்கள். அரையன் ராஜராஜன். அரையன் ராஜராஜன் மட்டுமே போயிருப்பானா. இல்லை. அருண்மொழிபட்டனும். எப்படி தாக்குதல் நடந்திருக்கும். எப்படி மகிபாலன் என்கிற முரட்டு அரசனை ஜெயித்திருப்பார்கள். கிடுக்கி தாக்குதல். இது என் கற்பனை. அருண்மொழிபட்டனும், அரையன் ராஜராஜ னும் இரண்டு பக்கமாக தாக்க, வேறொரு பக்கம் வீரமாதேவி வர, மகிபாலன் மிரண்டிருக்க வேண்டும். இப்போதும் உத்திர லாடம் என்று அழைக்கப்படுகின்ற மேற்கு வங்கம் எளிதான இடம் அல்ல. நல்ல பாதைகள் இல்லை.

நான் அஸ்ஸாம் முழுவதும் சுற்றி வந்தேன். அந்த வாழ்க்கை முறையும் ஆச்சரியமாக இருந்தது. இந்த பயணங் கள் என் மனதை கிளர்ச்சியூட்டி பல விஷயங்கள் எழுதத் தூண்டின. கங்கை ஏழு கிளைகளாக பிரிகின்ற இடத்தில் எப்படியெல்லாம் நுழைந்திருக்கலாம் என்றும், யானைப்பாலம் எங்கு அமைத்திருக்கலாம் என்றும் நான் யூகித்து எழுதினேன்.

விமலாதித்தன் இராஜேந்திரசோழனின் தங்கையான குந்தவையை காதலித்து மணம் செய்து கொண்டான் என்ற தகவல் உண்டு. அவன் தஞ்சம் கேட்டு திருவையாறில் தங்கி யிருக்கும்பொழுது அந்த சந்திப்பு நிகழ்ந்திருக்கலாம். இராஜ ராஜரின் மகள் என்பதால் செல்லமாக வளர்க்கப்பட்டிருக்கலாம். ஒரு கர்வம் கலந்த பெண்மணியாக அவர் இருந்திருக்கலாம்.

விமலாதித்தன் குந்தவையை மணந்ததும், அதற்கு பின் இன்னொரு பெண்ணை மணந்ததும் விமலாதித்தனுக்கும், குந்தவைக்கும் இராஜ நரேந்திரன் பிறந்ததும், அடுத்த மேலை சாளுக்கிய பெண்மணிக்கு விஷ்ணுவர்தன விஜயாதித்தன் பிறந்ததும், குந்தவையின் மகனான இராஜராஜ நரேந்திரனை துரத்திவிட்டு அவன் பட்டத்திற்கு வந்ததும், அதற்கு துணை யாக மேலைசாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனும் .அவன் துணைவர்களான கங்கே யாதவும் மற்ற மந்திரிகள் இருந்ததும், அதனால் கீழை சாளுக்கியம் மேலை சாளுக்கியம் வசப்பட் டதும், அங்கிருந்து குந்தவை தப்பித்து வந்ததும் நிஜம். இதற்கு காரணம் குந்தவையின் அடாத செயல்களாக இருக்கலாம் என்பது என் யூகம். எளிதாக எப்படி சக்களத்தி மகனுக்கு விட்டு கொடுத்துவிட்டு ஓடிவந்து விட்டாள். ஏன் புறக்கணிக்கப்பட் டாள் என்ற கேள்விகள் எழுந்தன. நான் இப்படி யூகம் செய்தேன்.

அவளுடைய வருகைக்கு பிறகே இராஜேந்திர சோழர் தன்னுடைய மருமகனை அதாவது இராஜராஜ நரேந்திரனை குந்தவையின் மகனை காப்பாற்ற படையெடுத்து வேங்கி நோக்கி போயிருக்கிறார். அந்த போரில் அரையன் ராஜராஜ னும், இராஜேந்திரனின் மகனான இராஜராஜாதித்தனும், வீர இராஜேந்திரனும், அருண்மொழிபட்டனும் கலந்து கொண் டிருக்கிறார்கள். வேங்கியை ஜெயித்தால் போதாது, ஒட்ட தேசத்தையும் ஜெயிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தது. கீழை சாளுக்கியத்திற்கு மேலாக உள்ள ஒட்ட தேசத்தை அறுத்து எறியும்போது மேலை சாளுக்கியத்தின் தூண்டுதல் அங்கும் இருக்கும் என்று வெட்டி எறிந்தபோது, இன்னும் சற்று வடக்கே போனால் கீழைச் சாளுக்கியத்திற்கு தொந்தரவுக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தண்டபுத்தி யும், தட்சிணலாடமும் தண்டிக்கப்படும். அவைகள் பலவீன மானவை என்று இராஜேந்திரருக்கு தெரிய, அரையன் ராஜ ராஜனுக்கு புரிய, அவர்கள் தொடர்ந்து போனார்கள். கங்கை கைக்கு எட்டிய தூரத்தில் இருப்பது தெரிந்து இன்னும் பயணப் பட்டார்கள். கடைசியில் மகிபாலன் எதிர்ப்பு பெரிதாக இருக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் இல்லை. வெகு எளிதாக கங்கை கரை வரை போய் நீர் கொண்டு வந்து கொடுக்க முடிந்தது. சோழ தேசத்தை வளமூட்ட முடிந்தது.

இருநூற்றைம்பது நாவல்கள் எழுதிய பாங்கு, அந்த கை ஓட்டம், அந்த மனஓட்டம் என்னை இந்த நாவல்கள் எழுத உற்சாகப்படுத்தியது.

என்னுடைய பலமே, எவ்வளவு அளவு சரித்திரம் சேர்க்க வேண்டும். எத்தனை அளவு கதை சொல்ல வேண்டும் என்ற கலவையில் நான் தெளிவாக இருந்ததுதான். அந்த கலவையை எடுத்து ஊற்றுகிற பொழுது சரியான வாக்கியங்களை, சரியான விவாதங்களை, சரியான உணர்ச்சி பொங்கலை, சரியான கோப தாபத்தை நான் அவைகளில் கொண்டு வந்துவிடுவேன். சமூக நாவல் எழுதும்போது ஏற்பட்ட இந்த பக்குவம் சரித்திர நாவல் எழுதும் போது இவை நிஜமாக நடந்தது போன்ற தோற்றத்தை வாசகர்களுக்கு கொடுத்துவிடுகின்றன. அப்பொழுதுதான் சரித்திரம் மனதில் ஒட்டும். இல்லையெனில் சரித்திரம் ஒரு கன்றாவி, ஒரு தலையெழுத்து என்று வந்துவிடும். நமது சரித்திரத்தை ஒருபொழுதும் இந்த நிலைக்கு கொண்டு வரக் கூடாது. இது வெறும் பாடப் புத்தகமாக இருக்கக்கூடாது. இது என்ன என்று தெரிய வேண்டும். இதனுடைய வளமையை புரிந்து கொள்ள வேண்டும். இராஜேந்திர சோழர் யார் என்று புரிந்து கொள்ள வேண்டும். பரத கண்டத்தில் வேறு எந்த அரசனும் இராஜேந்திரனுக்கு நிகராக இல்லை. அசோகரோ, ஹர்ஷரோ இல்லை. அவர்களெல்லாம் வட இந்தியாவில் அற்புதமாக கொண்டாடுகிறார்கள். ஆனால் தமிழராகிய நமக்கு இராஜேந்திரசோழனின் பெருமை, தெரியவேயில்லை என்பது ஒரு வெட்கக்கேடான விஷயம். வேதனையான விஷயம். வடக்கே இருப்பவர்கள் இதை பாராட்டமாட்டார்கள். பல சரித்திர ஆசிரியர்கள் இதை இழிவாகவே பேசியிருக்கிறார்கள். திரு. பானாஜி என்பவர் இராஜேந்திரசோழன் படையெடுத்து வரவில்லை. அனுமதி கேட்டு தீர்த்த யாத்திரை வந்தான் என்று நாக்கில் நரம்பில்லாமல் எழுதுகிறார். வேதனையாக இருந்தது. இது நிஜம் என்று வடக்கே பலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி வந்து ஜெயித்துவிட முடியுமா ஒரு தமிழன் என்று கேள்வி கேட்கிறார்கள். இதை மாற்றியமைக்க வேண்டாமா. உங்களுக்கு நாவலில் சொன்னால்தானே சரித்திரம் படிக்க

போவீர்கள். நீங்கள் சரித்திரம் படிக்க போக வேண்டும். கல்வெட்டு ஆய்வாளராக இருக்க வேண்டும். பட்டயங்கள் படிக்க வேண்டும் என்று ஆவலை தூண்டி விடுவதற்காகவே நான் இந்த நாவல்களை வாழ்க்கை கலந்து எழுதுகிறேன். இதில் ஒவ்வொரு வரியும் உண்மை என்று நான் சொல்லமாட்டேன். பொய்யென்றும் சொல்வதற்கில்லை. சரித்திரமும், கற்பனையும் மிகச் சரியான அளவில் கலந்திருக்கிறேன். கிட்டத்தட்ட நூறு பேர்களை இந்த நாவலில் என்னால் எழுத முடியும். நான்காம் பாகத்தில் எழுதியிருக்கிறேன். சும்மா உங்களால் தாங்க முடிகிறதா என்று காட்டியிருக்கிறேன். உங்களால் தாங்கவே முடியாது. அத்தனை பெயர்கள் தேவையில்லை. நினைவில் வைத்துக் கொள்ள முடியாது.

சரித்திரத்தில் இன்னொரு முக்கியமான விஷயம் நடந்தது. கஜினிமுகமது வடமேற்கேயிருந்து படையெடுத்து காபூல் நோக்கி வந்தபோது அவனை எதிர்ப்பார் யாரும் இல்லை. எதிர்த்தவர் வெகுசீக்கிரம் அடிபட்டார். துருக்கர்களின் இந்த வேகத்திற்கு பிளந்து கிடந்த, பிரிந்த கிடந்த, சகோதரச் சண்டையில் மூழ்கி கிடந்த இந்து அரசர்கள் பலியானார்கள். துருக்கர்களிடையே பகைமை உணர்ச்சி இருந்தாலும், ஜாதி சண்டையிருந்தாலும் அவர்கள் போர் என்று வருகிறபோது ஒன்றாகக் கூடி, பச்சை நிலமான, ஆறுகள் பாய்ந்து வளமான இந்த நிலத்தின் மீது ஆசை வைத்தார்கள். வெறும் பாலைவனத்தில் ஒரு கட்டை விரல் நீர் குடிக்க வழி இல்லாதவர்கள். புரண்டு ஓடும் நதியை கண்டு திகைத்துப் போனார்கள். இத்தனை பயிர்களா, இத்தனை உணவுகளா என்று திகைத்து போனார்கள். அந்த படையெடுப்பை இராஜேந்திர சோழன் எதிர்கொண்டான் என்றும், தாக்கினான் என்றும் சில தகவல்கள் உண்டு. அவன் பஞ்சசீலம் வரை ஐந்து நதிகள் பாயும் குஜராத் தாண்டி போயிருக்கிறான் என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். சிந்து நதியில் உலவி இருக்கிறான் என்று எழுதியிருக்கிறார்கள். என்னால் நம்ப முடியவில்லை. இது என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாசுணி என்றால் அது அங்கே இருக்கின்ற தேசம் என்று சொல்கிறார்கள். மாசுணி தேசம் என்று கிழக்கே ஒரு சிறு பகுதி நாகர்களுடைய குடியிருப்பு என்றே எனக்கு தோன்றுகிறது. இதை பிற்காலத்தில் வருபவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என்று நம்புகின்றேன்.

ஆனால் போஜராஜனை நோக்கி, கோசல தேசத்து வழியாக ஒரு படை, போஜராஜனின் உதவிக்கு அடைந்தபோது கஜினிமுகமது பெரும் படையோடு போஜராஜன் காத்திருக்கிறான் என்று தெரிந்து பின்னடைந்தான் என்ற செய்தியை ஏற்றுக்கொள்ள முடிகிறது. இராஜேந்திர சோழனால் கஜினி முகமதுவின் வருகை தடைபட்டது. அவன் வங்காளத்தை தொடவே இல்லை. அது இராஜேந்திர சோழனால் தடுத்து நிறுத்தப்பட்டது. இராஜேந்திர சோழனுக்கு கஜினியை விரட்ட வேண்டுமென்று எண்ணம் இல்லை. அவன் போர் வீரர்கள் தாங்க மாட்டார்கள் என்றே நினைத்தான். ஒருவேளை இராஜேந்திரன் அரையன் ராஜராஜனோடு போய் இருந்தால் தொடர்ந்து போயிருக்கலாம். அரையன் ராஜன் மட்டுமே போயிருப்பதால் மன்னருடைய கட்டளையை பெறவில்லையே என்று பின்னடைந்திருக்கக் கூடும்.

உத்திரலாடத்திலிருந்தும், தட்சிணலாடத்திலிருந்தும், ஒட்டதேசத்திலிருந்தும் சிலைகளை பறித்துக்கொண்டு வந்திருக்கிறான். தோரண வாயில்களை கல்லாலும், மரத்தாலும் செய்தவற்றை கொண்டு வந்திருக்கிறான். தன் வாயிற்படியில் வைத்திருக்கிறான். அந்த சிலைகள் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வந்திருக்கின்றன. ஆனால் எதன் காரணமாகவோ அது உள்ளே வரவில்லை. அது அரசனுடைய கட்டளையா, பொதுமக்களின் விருப்பமா, அல்லது அந்த நகரத்தை உருவாக்கிய நித்த வினோதக பெருந்தச்சன் இரவியினுடைய கோபமா என்று தெளிவாகவில்லை. நான் இரவியினுடைய கோபமாக இருக்கும் என்று கற்பனை செய்திருக்கிறேன். ஒரு சிற்பி அல்லது சித்திரக்காரன் தனது சித்திரகூடத்திற்குள் வேறு ஒரு சித்திரத்தை, சிற்பத்தை நிர்மாணிக்க அனுமதிக்க மாட்டான் என்பதே ஒரு மனிதகுணம் என்று எனக்கு தோன்றியது. அந்த சிலைகள் எந்த பராமரிப்பும் இல்லாமல் செங்கல்மேடு என்ற கிராமத்தில் அதாவது கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து தெற்கே உள்ள ஒரு கிராமத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. வரிசையாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. கோவில் கட்டி எழுப்பி, மிகச் சரியாக பூஜை செய்ய வேண்டிய விஷயங்கள் அப்படி இல்லாமல்

கிராமத்து மக்களால் வெறுமே திலகமிட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. சரியான வழிபாடு இல்லாமல் இருக்கின்றன. வழிபாடுகள் இருந்தால் தான் சிலைகள் காலம் தாண்டி நிற்கும். இல்லையெனில் எவர் வக்கிரமாவது அதை உடைத்து விடக்கூடும். அவைகளை பேணி பாதுகாக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு. இராஜேந்திர சோழனுக்கு தருகின்ற மரியாதை. வடக்கே கங்கை வரை போய் வந்து தமிழர் பெருமையை நிலைநாட்டிய ஒரு அரசனுடைய மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு அந்த சிலைகளை நாம் தரிசித்துவிட்டு வரவேண்டும்.

யாராவது இராஜேந்திர சோழன் தமிழன் அல்ல. அவன் பார்ப்பனருக்கு துணை போனவன். அந்தணரை இங்கு கொண்டு வந்து கலாச்சார மாறுதலை ஏற்படுத்தியவன் என்றும் சொல்லக்கூடும். சொல்கிறவர்கள் வளர்ந்திருக்கிறார்கள். அது முக்கியமல்ல. அந்த காலகட்டத்தில் பார்ப்பன கலப்பு ஒரு நாகரீகமாக கருதப்பட்டிருக்கிறது. அது சரியா, தவறா என்பது விவாதத்திற்குரிய விஷயம். இதனால் திராவிட கலாச்சாரம் சிறிது பாதிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் திராவிட கலாச்சாரம் என்பது அரசன் சொன்னதாகத்தான் அன்று இருந்தது. அதில் பிராமணர்களுக்கு பெரும் பங்கு இருந்தது. தமிழ் நல்ல இடத்தில் இருந்தது, வடமொழிக்கும் மரியாதை இருந்தது.

இந்த நிலை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பும் இருந்தது என்பது உண்மை. இப்பொழுதுதான் வடமொழி இன்னும் பின்னடைந்து தமிழ் பற்றி சிந்திக்க ஆரம்பித்திருக்கிறோம். காலம் எந்தவித மாறுதல்களையும், எப்பொழுது வேண்டுமானாலும் செய்யும். ஒரு குழுவாக இயங்கி எதையும் மாற்றி விட முடியாது. காலத்தின் ஓட்டத்தை கணிக்கவே முடியாது. இது என் அபிப்ராயம்.

பெண்டிர் பண்டாரம் கொணர்ந்து என்று பல அரசர்கள் கல்வெட்டில் இருக்கிறது. இதை விளக்கப் போனால் அவ்வளவு சுபிட்சமாக இருக்காது. எல்லா போர்களிலும் பாதிக்கப்படுவது பெண்கள்தான். சமீபத்தில் ஈழமும் சாட்சி. பாலியல் வன்முறை அங்கு இயல்புதான். இதை தடுக்கவே முடியாது. இது எல்லா காலத்திலும், எல்லோராலும் நடத்தப்பட்டிருக்கிறது.

மிக அமைதியான காலத்தில் நூறு வருடங்கள் வாழ்ந்து விட்ட நாம் இதை புரிந்து கொள்ள முடியாது. ஒரு படையெடுப்பில் நாம் கலந்து கொண்டாலோ அல்லது ஒரு படையெடுப்பு நம் ஊரில் நடந்தாலோ தான் இந்த அவலம் தெரியும். ஒரு சமாதான காலத்தில் மூக்கை நோண்டிக் கொண்டு சரித்திரம் படித்தால் அது அவ்வளவு உவப்பாக இருக்காது. தமிழர்கள் அவ்விதமாக எல்லாம் செய்ய மாட்டார்கள். அவர்கள் நாகரீகம் மிக்கவர்கள் என்று சில தமிழ் குரல்கள் வரக்கூடும். இராஜேந்திர சோழனை மகாபாவி என்றும், பெண்களையும், குழந்தைகளையும் துன்புறுத்தினான் என்றும், குழந்தைகளை கொன்றான் என்றும் தெளிவான கல்வெட்டு இருக்கிறது. பிடித்து வந்த பெண்களை ஊருக்குள் நுழையாமல் தனியாக ஒரு இடத்திலே குடிசை கட்டி தங்க வைத்து பிறகு கட்டிடங்கள் கட்டி அதை பொதுமகளிர் இல்லமாக மாற்றியது சரித்திரத்தில் இருக்கிறது. கலிங்கத்துபரணி என்கிற விஷயத்தை ஆழ்ந்து கவனமாக படித்தால் சோழர்கள் செய்திருக்கிறார்கள் என்று தெரியும்.

தெலுங்கும், கர்நாடக மொழியும், வேறு சில மொழிகளும் படியேறி அந்த வீட்டிற்குள் போனதும் கலவையாக கேட்டன. பெண்கள் இங்கும், அங்கும் ஓடினார்கள். அது பார்ப்பதற்கு வினோதமாக இருந்தது என்று கலிங்கத்துபரணி சொல்கிறது. ''நேயக்கலவி மயக்கத்தே நிகழ்ந்த மொழியைக் கிளி உரைப்ப' என்று இன்னும் சற்று கீழிறங்கி வேறொரு பாடல் சொல்கிறது. கலிங்கத்து பரணியில் பெண்கள் அவஸ்தையை புரிந்து கொண்டால் தமிழர் நாகரீகத்தில் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு என்று புரிபடும். இந்த நல்லதும், கெட்டதும் இன்றைக்கும் நமது உடம்பில், உள்ளத்தில் ஊறியிருக்கிறது என்றும் தெரியவரும். இப்படி நடந்திருக்கக்கூடும் என்பதை நான் சூசகமாக சொல்லியிருக்கிறேன். கதற கதற கற்பழித்தார் என்று முன்பு ஒரு செய்தித்தாளில் வரும். அப்படி எழுதுவதே அங்குள்ள செய்தியாளர்களின் விருப்பமாக இருந்தது. இது பிற்பாடு குறைந்து போயிற்று. கற்பழிப்பை விட இந்த வாக்கியத்தின் வேகம் மிக மூர்க்கமாக இருந்தது. நான் கதற

கதற கற்பழித்தார்கள் என்று எழுதாமல் இன்னும் நளினமாக கையாண்டேன்.

சரித்திரத்தின் பக்கங்களில் பெண்கள் பேரவஸ்தை பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும். இன்றைய பெண்ணுரிமை குரல் அன்று அறவே இல்லை. பெண்ணுரிமை குரல்கள் எழுப்பப்பட்ட பிறகும் பெண்ணை நோக்கிய பாலியல் வன்முறை குறைந்த பாடில்லை. மிக நாகரீகமான நகரங்களிலும் இவை கணக்கின்றி கிடக்கின்றன.

இந்த நாவலை எழுதிய, எழுதும் போது உதவிசெய்த சிலரை, நான் இங்கு தனித்து குறிப்பிட வேண்டியிருக்கிறது.

சீதாராமன் என்ற கும்பகோணத்தை சேர்ந்த எனது நண்பர். கட்டிடங்கள் எழுப்பி விற்பனை செய்பவர். இதில் உறுதுணையாக இருந்தார். அவர் உதவிக்கு நான் எந்த கைமாறும் செய்ய முடியாது. அவர் உதவி இல்லாமல் இந்த புதினம் உற்சாகம் அடைந்திருக்காது. தன்னுடைய வேலையை தாண்டி கணிணியில் விஷயங்கள் தேடிஇதைச் செய்தார். அவர் ஒரு முனைவர் பட்டம் பெற வேண்டிய ஆராய்ச்சியாளரும் கூட. வெகுசீக்கிரம் அவர் முனைவர் பட்டம் பெறுவார்.

கடல் பற்றிய செய்திகளை ஓரளவு நண்பர் ஒரிசா பாலு செய்து கொடுத்தார். ஆனால் தொடர்ந்து அவரால் உதவ முடியவில்லை. யாருக்கு நன்றி சொல்கிறேனோ இல்லையோ நீலகண்ட சாஸ்திரியாருக்கு நன்றி சொல்ல வேண்டும். அவருடைய சோழர்கள் ஒன்றாம் பாகம் இரண்டாம் பாகம் என்ற புத்தகங்கள்தான் இந்த புதினத்திற்கு அடிப்படை. அவருடைய செய்திகளின் வழியேதான் இந்த நாவலை நான் எழுதியிருக்கிறேன். சேரர் கோட்டை என்ற நாவலை எழுதிய நண்பர் கோகுல் சேஷாத்திரியும் என்னை உற்சாகமூட்டினார். அவர் மிகச் சிறந்த சரித்திர எழுத்தாளர். அமெரிக்காவில் இருக்கிறார். அங்கிருந்தபடியே திராவிட தேசத்தை பற்றி எழுதிக் கொண்டிருக்கிறார்.

திருமதி பாக்கியலக்ஷ்மி சேகர் அவர்கள்தான் நான் ஒலிநாடாவில் பதிவு செய்ய செய்ய இதை எழுத்தாக்கிக் கொண்டு வந்தார்கள். ஒரு குடும்பத் தலைவிக்கு இது கடுமை

யான பணி, தன் வீட்டையும் கவனித்து எனக்கும் உதவி செய்த அவர் பாங்கு மிகப் பெரியது. அவர்கள் ஆன்மீகத்திலும் நல்ல முன்னேற்றம் உடையவர்கள். பிற்பாடு அவர்களை பற்றி உங்களுக்கு தெரிய வரும்.

மனதிற்குள் தோன்றியவற்றை உடனே எழுதிவிட முடியாதல்லவா. கோர்வையாக சிந்திக்கிறேனா என்று நான் யோசித்து பார்க்க செளம்யா ரவிச்சந்திரனும், ஜெயலஷ்மி சூர்யபிரகாஷும், டாக்டர் மகேஷ்பதியும், அவர் துணைவி பூர்ணிமாவும் உதவினார்கள்.

வாசகர்களாகிய உங்களுடைய பேரன்பு என்னை திகைக்க வைக்கிறது. என்னுடைய பதிப்பகத்தாருக்கு இது போகுமா என்ற சந்தேகம் இருந்தது. ‘மூன்று பாகத்தில் முடித்து விடுங்கய்யா’ என்ற விண்ணப்பம் இருந்தது. நான் அதை அலட்சியம் செய்தேன். ஒரு நாவல் எப்பொழுது முடிய வேண்டும் என்று நாவல் தான் தீர்மானிக்கும். எழுத்தாளன் அல்ல என்பது எனக்கு தெளிவாக புரிந்த விஷயம். மூன்றாம பாகத்தில் இந்த புதினம் முடிவடையவில்லை. நான்காம் பாகம் தொடருகிறது. முதல் இரண்டு பாகமும் இரண்டாயிரம் பிரதிகள் உடனடியாக விற்று தீர்த்ததால் அடுத்தபடியான அச்சு ஏறல் நடந்து விட்டது. ஒன்றாம், இரண்டாம் பாகம் மறுபதிப்பு வந்துவிட்டது. மூன்றாம் பாகம் வருகிறபொழுது அவைகள் மூன்றாம் பதிப்புக்கு தயாராக இருக்கும் என்றே சொல்கிறார்கள். அதற்கு காரணம் உங்களுடைய அன்பு. நட்பு.

கங்கை கொண்ட சோழன் எழுதிய பிறகுதான் உடையாரை பற்றிய பாராட்டுதல்கள் எனக்கு அதிகம் வர ஆரம்பித்தன. இது இராமாயணம், மகாபாரதம் போன்றது என்று உணர்ச்சிவசப்பட்டு முகநூலில் ஒரு நண்பர் பொங்கி பொங்கி எழுதியிருந்தார். எனக்கு அப்படியெல்லாம் கர்வம் இல்லை. ஆனால் உங்கள் ஆதரவு கண்டு எனக்கு பெரிய சிலிர்ப்பு உண்டு. சரியாக எழுதினால் தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என்ற தெளிவும் உண்டு.

என் மனைவியர் கமலாவும் சாந்தாவும் கங்கை கரைக்கு என்னோடு வந்தார்கள். சிறிது இருமினாலும் மருந்தோடு வந்து விடுவார்கள்.

மகள் ஸ்ரீகௌரி நாவல் வளர்ச்சி பற்றி விசாரித்துக் கொண்டேயிருப்பார். நான் இரவில் விழித்து நாவல் சொல்ல, என் மகள் சூர்யா டீ போட்டு தந்து, கால் பிடித்துவிட்டு பிறகு தன் சினிமா எழுத்து வேலை பார்ப்பார். என் வீடு இதமானது. இதுவே என் எழுத்தின் பலம்.

புத்தகத்தை பிழை திருத்தம் செய்வது என்பது ஒரு கடுமையான பணி. திரு. ஹரிஹரன் என்ற நண்பர். என் வாசகர் ஐடியில் உத்தியோகம் செய்பவர் இதை திறன்பட செய்து கொடுத்தார். அட்டைபட வடிவத்திலும் அவர் பங்கு உண்டு. அவருக்கும் என் பணிவான நன்றி கலந்த வணக்கம்.

மூன்றாம் பாகம் படித்து விட்டு உங்கள் கருத்துகளை எவ்விதமேனும் சொல்லுங்கள். ஆக்கப்பணியில் அது ஊக்கு விக்கும். பெரும்பாலான வாசகர்களை புத்தக கண்காட்சியில் நான் பார்க்கிறேன். பத்து நாளில் ஐந்தாறு நாட்களாவது வந்து விடுகிறேன். நாம் அங்கே சந்திப்போம்.

வணக்கம்.

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்
ஜெயகுருராயா

என்றென்றும் அன்புடன்,
பாலகுமாரன்

சென்னை-4
11-12-2013



உத்தேசமான ஒரு வரைபடம்

யோகி ராம்சுரத்குமார்

கங்கை கொண்ட சோழன்

மூன்றாம் பாகம்

அத்யாயம்

65

கடல் நீலமும், வான் நீலமும் வெவ்வேறானவை. நீலம் தான் எனினும் வேறுவகை நிறத்தையும், குணத்தையும் கொண்டிருக்கின்றன. கடல் மேல் பரப்பில் குளுமையாக இருக்கிறது. உள்ளே சூடாக இருக்கிறது. வானம் மேல் பரப்பில் சூடாக இருக்கிறது. உள்ளே போகப் போக குளுமையாகி விடுகிறது.

கடல் பெண். வானம் ஆண். கடலும், வானமும் புணருகின்ற இடம்போல வெகுதூரத்தில் ஒரு மெல்லிய கோட்டில் வெள்ளி வழிந்தது போல, தகடு போல ஒரு வெளிச்சம் மின்னிக் கொண்டிருக்கிறது. இது உதயம். எந்த நாள். எந்த மாதம். எந்த வருடம். எதுவும் தெரியவில்லை. லட்சக்கணக்கான உதயம் போல இதுவும் ஒரு உதயம்.

கடவுளே, சர்வேசா இன்றைக்கு எவரிடமும் அடிபடாது நிம்மதியாக சோறு உண்ணவேண்டும். வெகுசீக்கிரம் கரை தெரியவேண்டும். இதுவே என் பிரார்த்தனை. எத்தனை நாள் கடலில் இருந்திருக்கிறோம் என்பதும் மறந்து போயிற்று. எங்கிருந்து கிளம்பினோம் என்பது கூட மெல்லியதாய் அழியத் துவங்கிவிட்டது. சீனத்துக்கு அருகே உள்ள பலதீவுகளில் ஒரு தீவிலிருந்து கிளம்பினோம். அந்த மொழியில் 'இது சீனமா' என்று கேட்டதற்கு வேறு என்னமோ பதில் சொன்னார்கள். 'லோங் சாங்' என்றார்கள். எல்லாமும் ங் கில் ஆரம்பித்து ங் கில் முடிகிறது. நிறைய இந்த சப்தங்களே அதிகம் இருக்கின்றன.

தமிழில் இருக்கின்ற ட, டு, ப, க இவைகளெல்லாம் சீன மொழியில் இருப்பதாக தெரியவில்லை. 'ஆ' என்று தொண்டையை அகட்டி அவர்கள் வாய் பிளந்து சப்தம் போடுவதேயில்லை. எல்லாம் மூடின வாய்க்குள் பேசின வார்த்தைகளாக இருக்கின்றன.

என்னமோ செய்ய வேண்டும் என்று கிளம்பி ஏதேதோ செய்து வாழ்க்கை இடதும், வலதுமாக மேலும், கீழுமாக திசையற்று அலைந்து கொண்டிருக்கிறது. பிள்ளையார் பிடிக்க குரங்காயிற்று என்று சொல்வார்கள். இது பேயாக வந்தது. பேய் உருவம் செய்தது போல்தான் ஆகியது. உலகம் முழுவதும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இளமையில் இருந்தது. அது எளிதான விஷயம் அல்ல. மிக வலுவான புஜங்களும், மிக நீண்ட கத்திகளும், பெரிய படையும் இருந்தால்தான் உலகம் சுற்ற முடியும். உலகத்தின் கால்வாசி வந்த போதே நிறைய ரத்த சேதாரம் ஏற்பட்டது. முதுகு முழுக்க சவுக்கடிகள். பற்கள் எல்லாம் உடைந்து விட்டன. கண்ணுக்கு கீழே கனத்த காயம் ஏற்பட்டு புருவம் மூடிக்கொண்டு ஒற்றைக் கண்ணாய் தெரிகிறது. விரல்களில் நடுக்கம் வந்துவிட்டது. ஆனால் குளிரோடு போராடி போராடி உடம்பில் ஒரு சூடு இருக்கிறது. கொஞ்சம் முழங்கால் மடிந்த வண்ணம் நடக்க வேண்டியிருக்கிறது. இதுவும் பழக்கம் என்றுதான் சீனர்கள் சொல்கிறார்கள். படகு ஆட்டத்திற்கு காலை மடித்து மடித்து நீ நடக்கும்பொழுதே வாத்துபோல நடக்கிறாய் என்கிறார்கள். மனிதக் குரங்கு போல் இருக்கிறாய் என்று சொன்னார்கள். அவர்களுக்கு அவன் ஒரு கேலி பொருள். அவர்களுக்கு அவன் ஒரு விசித்திரம். அவர்கள் அவனை ஆதரிக்கவும் செய்தார்கள். அந்நியப்படுத்தவும் செய்தார்கள். அவர்கள் உண்ணும் போது அவன் வரக்கூடாது. அவர்கள் உல்லாசமாக இருக்கும்பொழுது அவனை கூப்பிட்டு வைத்து பேசுவார்கள்.

நேற்று பேச்சு வேறு மாதிரியாக இருந்தது. கடற்கரைக்கு திரும்பவேண்டும். உணவு பொருள்களுக்கு எங்கு போவது என்று யோசித்து, ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்கள் போல் இருந்தார்கள். அவனை அழைத்து உட்காரச் சொன்னார்கள்.

குடிக்க மது கொடுத்தார்கள். ஒரு உப்பிட்ட ஆட்டிறைச்சி துண்டை தூக்கிப் போட்டார்கள். மீன் துவையல் கொடுத்தார்கள். ஒரே ஒரு கரண்டி சோறு இருந்தது. அவன் சந்தோஷமானான்.

''என்ன இன்றைக்கு'' என்று கேட்டான்.

''கரை திரும்பப் போகிறோம். உன் உதவி வேண்டும்'' என்றார்கள்.

''எந்த கரைக்கு?'' அவன் ஆவலாகக் கேட்டான்.

''உன்னுடைய ஊர்பக்கம் போகப் போவதில்லை. நாம் வங்கதேசம் போகப் போகிறோம்.''

''வங்கமா. அங்கு என்ன வேலை. அங்கு கொள்ளை அடிக்க என்ன இருக்கிறது.''

''இல்லை இந்த முறை கொள்ளை அடிக்க போவதில்லை. வெளியே கொள்ளை அடித்த பொன், பொருளிலிருந்து கொஞ்சம் கயிறுகளும், இன்னொரு நாவாயும் வாங்கலாம் என்ற எண்ணம். வங்கத்து கயிறுகள் மிகத் தரமானவையாக இருக்கும். அதனை சீனர்கள் வாங்கி எங்களுக்கு அதிக விலைக்கு விற்கிறார்கள். இரண்டு கை நீளம் ஒரு பொன் சொல்கிறார்கள். நமக்கு பல கை நீளம் வேண்டும். பொன் கொடுத்து கட்டுப்படி ஆகாது. எனவே நேரடியாகப் போய் யார் கயிறு முறுக்குகிறார்களோ அங்கு வாங்கவேண்டும் என்ற எண்ணம்''

''உங்களை உள்ளே விடுவார்களா, எந்த தேசம் என்று சொல்வீர்கள்?''

''ஏதோ ஒரு புரியாத தேசத்தை சொல்லிக் கொள்ளலாம். ஏன், ஸ்ரீ விஜயம் என்று கூட சொல்லிக் கொள்ளலாம்.''

''உங்களைப் பார்த்தால் தெள்ளத் தெளிவாக சீனர்கள் என்று தெரிகிறது. ஸ்ரீ விஜயம் என்று எப்படி நம்புவார்கள்?''

''நான் உடைமாற்றிக் கொண்டு விடுவேன். இப்படியா போவேன்.'' அந்த கடற்படை தலைவன் பதில் சொன்னான்.

''சரி, அதற்கு நான் எதற்கு? எனக்கு ஏன் கறிசோறு''

''எங்களுக்கு அந்த பாஷை சிறிதும் புரியவில்லை. உனக்கு வங்க மொழி தெரியுமா.''

''தெரியாது.''

''ஆனால் சமஸ்கிருதம் தெரியுமல்லவா.''

''தெரியும்.''

''பரதகண்டம் முழுவதும் சமஸ்கிருதம் பேசப்படுகிறது. அதுவே முக்கிய மொழியாக இருக்கிறது. வங்க தேசத்தில் உள்ள வியாபாரிகளுக்கும் சமஸ்கிருதம் கொச்சையாக தெரிந்திருக்கும். உனக்கும் கொச்சையாகத்தானே தெரியும்'' என்று கடற்படை தளபதி கேட்க,

''ஆமாம்'' என்று பதில் சொன்னான்.

''நல்லது. வியாபாரம் செய்ய இந்த மொழி போதும். எங்களுக்கு கயிறு வாங்க நீ உதவி செய்ய வேண்டும். பாய் மரம் ஏற்றும் கயிறுகள். பாய்மரத்தை இணைக்கும் கயிறுகள். கீழே படகு அடிபடாமல் இருக்கின்ற மத்திம கயிறுகள், படகை கரையில் கட்டும் கனத்த கயிறுகள் என்று பலதும் வேண்டும்.

கனத்த கயிறு பிய்ந்து பிய்ந்து நாராக வருகிறது. எந்த கரையிலும் நிற்க முடியாமல் போகுமோ என்று பயம் வருகிறது. போய் மண்ணில் புதைத்துதான் நிற்க வேண்டும். பிறகு படகுகள் போட்டு நாவாயை இழுக்க வேண்டும். அதுவரை சேதாரம் ஆகாமல் இருக்க வேண்டும் என்ற பயம் ஏற்படுகிறது. ஆழமுள்ள கணவாய்களில் போய் நிற்பதற்கு கனமான கரைக் கயிறுகள் வேண்டும். இந்த கரை கயிறுகள் வாங்கத்தான் நாம் போகிறோம். நமக்கு போய் மிஞ்சினதையும் ஏற்றி வரலாம். அதை வேறு எங்கேனும் விலை கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். உதவி செய்வாயா.''

அவன் ''சரி'' என்று தலையசைத்தான். தலையசைப்பதை தவிர அவனுக்கு வேறு வழியில்லை. விதி அவனை அப்படித்தான் வைத்திருந்தது.

ஸ்ரீ விஜயத்தில் அவன் சீனர்களால் கைது செய்யப்பட்டான். ஸ்ரீ விஜயத்து ஆள் இல்லை என்று முகம் பார்த்ததும் தெரிந்துவிட்டது. ஓரமாய் உட்கார வைத்துவிட்டார்கள். ஸ்ரீ விஜயத்து மாலுமிகளை கத்தியால் குத்தி கொலை செய்தார்கள். அவர்களுடைய நாவாய்களை நாசம் செய்தார்கள்.

அங்கிருந்து துடுப்பு போட வேண்டுமென்று பல பேரை வாங்கிக் கொண்டார்கள். இவனை சிறை பிடித்து அழைத்து வந்து நாவாயின் முன்பகுதியில் துடுப்பு போடும்படி சொன்னார்கள்.

பதினாறு பதினாறு என்று முப்பத்திரண்டு பேர் உள்ள அடுக்கு அது. ஒரு துடுப்புக்கு இரண்டு பேர். எகிறி முரட்டுத்தனம் செய்கிற ஆட்களை துடுப்புக்கு அருகிலேயே விலங்கு போட்டு வைத்திருந்தார்கள். துடுப்பிலேயே தூங்க வைத்தார்கள். வேகமாக துடுப்பு போடச் சொல்லி முதுகிலே அடிப்பார்கள். உயிர் வாழத் தகுந்த உணவுதான் தருவார்கள். உடை என்பது கோவணம் தவிர வேறு எதுவும் இருக்காது.

ஆனால் இவனுக்கு சங்கிலி போடவில்லை. சீனம் வருகிறாயா என்று கேட்டபோது அவன் சிரித்தான்.

''நீங்கள் போகிற இடம்தான் நான் போகிற இடம்'' என்று பாலி மொழியில் பதில் சொன்னான். அதில் ஒரு சீனனுக்கு பாலி மொழி புரிந்திருந்தது. மற்றபடி அவர்கள் மொழி அவனுக்கு எதுவும் புரியவில்லை. ஒரு வருடத்திற்கு மேலாக துடுப்பு போட்டு இங்கேயும், அங்கேயும் நகர்ந்தான். சிறிய படகுகளை மடக்கி கொள்ளையடித்தும், பெரிய நாவாய்கள் மீது முட்டி சேதமாக்கியும், சேதமாகி மூழ்குகின்ற நாவாயிலிருந்து பொருள்கள் எடுத்து வந்தும் அவர்கள் கொள்ளையடித்தார்கள்.

சீனர்கள்தான் என்றாலும் ஒரே மாகாணமாக இல்லாது பல்வேறு விதமான மொழிகள் பேசும் சீனக் குழுவாக அது இருந்தது. காம்பேஜம், மாயிருடி கங்கம், இலங்கா சோகம் என்று பல ஊர்களிலிருந்தும் இந்தக் கொள்ளைக்காரர்கள் ஒன்று சேர்ந்திருந்தார்கள். அங்கு உள்ளவர்களுக்கு தேசம் இல்லை. நிலம் இல்லை. கடல்தான் அவர்கள் தேசம். கடல்தான் அவர்கள் உழைத்து சம்பாதிக்கின்ற நிலம். அவர்கள் உழைப்பு கொள்ளையடிப்பது. எந்தவித கொடியும் இல்லாமல் இரவு நேரம் வேகமாக துடுப்பு போட்டு மரக்கலன்களை அணுகுவார்கள். மரக்கலன்கள் தூங்கியபடி இருக்கும். அருகே போனதும் துடுப்பு போடுவதை நிறுத்துவார்கள். காற்றுவாக்காக அந்த பக்கம்

செலுத்துவார்கள். போய் முன்னேயோ, பின்னேயோ இடிப்பார் கள். மரக்கலம் விழித்துக் கொள்ளும். அதற்குள் கயிறு வீசியும், கட்டைகள் போட்டும் அந்த மரக்கலத்திற்குள் ஆயுதங்களோடு புகுந்து எழுந்திருக்கின்ற ஆட்களை வெட்டி வீழ்த்தி, அப்படியே கயிறு போட்டு பிணைத்து இழுத்துக் கொண்டு வருவார்கள். உள்ளே இருக்கின்ற சாமான்களை கொள்ளை யடிப்பார்கள். மரக்கலம் சேதமாகவில்லை என்றால் கொண்டு போய் வேறு ஒரு தீவில் அதை நெருக்கி வந்தவிலைக்கு விற்று விட்டு மற்றவைகளை எடுத்துக் கொண்டு போய் சீனத்திற்கு திரும்புவார்கள். சீனத்தில் அவர்கள் கொள்ளை யடித்த பொருளுக்கு மிகப் பெரிய மதிப்பு இருக்கும்.

சீன வியாபாரிகள் எப்பொழுது கடற்கொள்ளையர்கள் வருவார்கள் என்று காத்திருப்பார்கள். ஆயிரம் கழஞ்சு விலை யுள்ள ஒரு புத்தர் சிலையை ஐந்து கழஞ்சுக்கு கேட்பார்கள். ஐநூறுக்கு வந்து நிற்பார்கள். மிக ஆனந்தமாக வாங்கிக் கொண்டு போவார்கள். கருங்கல் சிலை, தங்க சிலை, வெண் கல சிலை, பாத்திரங்கள் என்றும், பொற்கழஞ்சுகள் என்றும், மரச்சாமான்கள் என்றும் கொள்ளை அடிக்கப்பட்ட பல்வேறு பொருள்கள் அங்கு பண்டமாற்று செய்யப்படும். மறுபடியும் உணவு தானியங்கள் ஏற்றிக் கொண்டு சாராய பீப்பாய் களோடும், நீர்குடங்களோடும் அவர்கள் பயணிப்பார்கள். ஆடு களும், கோழிகளும் இருக்கும். உலர்ந்த கட்டைகள் மிக முக்கியமாகத் தேவைப்படும். நெருப்பு அணையாமல் இருக்க கூண்டு விளக்குகள் வாங்கப்படும். எண்ணெய் பல கூஜாக் களில் சேமித்து வைக்கப்படும். புதிய ஆயுதங்களை வாங்கு வார்கள். அடிமைகளை வாங்குவார்கள். மறுபடியும் கடற் கொள்ளைக்கு கடலில் அலைவார்கள். பத்து, பதினைந்து நாள் கழித்து ஏதேனும் மரக்கலம் தெரிந்தால் பின் தொடர்வார் கள். அந்த மரக்கலம் பயந்துபோய் விரைவாகும். இவர்கள் விரைவாக தங்கள் நாவாய்களை செலுத்துவார்கள்.

எந்தெந்த பாய்மரத்தை எந்தெந்த திசையில் திருப் பினால் காற்றில் கொப்பளித்துக் கொண்டு போகும் என்று அவர்களுக்குத் தெரியும். ஒரு பாய்மரத்தில் பட்டு சிதறி காற்று

கங்கையும் கடலும் சந்திக்கின்ற, கங்கா சாகர். நீத்தார் கடனுக்கான இடம். இருநூறு நாய்கள் சண்டையே போடாது. இவைகள் பித்ரு வடிவமாம். எது என் அப்பனோ, யார் என் தாயோ. அறிகிலேன்.

காமாக்யா கோயில் அஸ்ஸாம் கௌஹாத்திக்கு அருகில். மஹிபாலன் தேசம்.
சிலையின் பழமை பாருங்கள். என் சாக்த உபாசனை சீறி எழுந்த இடம் இது.

நதிக்கு நடுவே தீவு. தீவுக்குள் கோயில்.
ஒரே வானிலே ஒரே மண்ணிலே. பாட்டு பொங்கிய நேரம்.

ப்ரும்ம புத்ரா நதி. என் மனைவி கமலா, சாந்தா, நான்.

இன்னொரு பாய்மரத்திற்கு போய் அதையும் உப்ப வைத்து வெகுவேகமாக நீரை கிழித்துக் கொண்டு போகும் தன்மை யாக மரக்கலத்தை ஓட்டத் தெரியும். எப்படிபோய் துடுப்பு களை உடைப்பது, எப்படி போய் முன்பக்கம் முட்டுவது, எப்படி போய் கயிறு போட்டு இணைத்து வெகுதூரம் இழுத்துக் கொண்டு போவது என்பதெல்லாம் அவர்களுக்கு அத்துப்படி. மிகுந்த சாமர்த்தியசாலிகள். தந்திரசாலிகள். இவர்களில் ஒருவருக்கொருவரே பொன் பொருட்களை ஏமாற்றி ஒதுக்கிக் கொள்வார்கள். அவைகளை அங்கங்கே மறைத்து வைப்பார் கள். முதல் துடுப்பின் கனம் கிட்டத்தட்ட ஒரு தொடை அளவு இருக்கும். அதன் நடுவே ஓட்டை போட்டு அது முழுதும் ஒரு மாலுமி பொற்காசுகள் சேகரித்து வைத்திருக்கிறான். அதை ஒருநாள் மொத்தமுமாக எடுத்துக்கொண்டு கரை இறங்கி அவன் தேசத்திற்கு போய் விடுவான். அதற்கு வேறு நாவாய் கள் பார்த்துக் கொள்வான். எத்தனை காலம் கொள்ளை அடிப்பது என்ற அலுப்பு அந்த மாலுமியிடம் இருந்தது. அவன் காசு சேர்த்து வைப்பது இவனுக்கு மட்டுமே தெரியும். இவன் அதை சேகரிக்க உதவி செய்தான். பதிலுக்கு துடுப்பு போடும் போது பாலோ, பழரசமோ, மாமிசத் துண்டோ உண்ண கிடைக் கும். அந்த மாலுமி மறைத்துக் கொண்டு வந்து கொடுப்பான்.

இப்போது இந்த நல்ல நிலைக்கு கூட அந்த மாலுமிதான் காரணம். அவர்தான் சீனமொழியில் அவனுடைய யோக்யதை பற்றி விவரித்திருக்க வேண்டும். அதனால்தான் இன்றைக்கு கறியும், சோறும் கிடைத்திருக்கிறது. அவன் எழுந்த பிறகு கடல் பக்கம் கை அலம்பினான். முகம் துடைத்துக் கொண் டான். இடுப்புத் துண்டை உதறி உடம்பெல்லாம் துடைத்துக் கொண்டான். அவனை மறுபடியும் அழைத்தார்கள். கோமணத் தோடு போய் நின்றான். அவனுக்கு உணவு கொடுத்தார்கள். இடுப்பிலே கட்டிக் கொள்ள சுருக்கு கயிறு கொடுத்தார்கள். தோளில் போர்த்திக் கொள்ள சால்வை கொடுத்தார்கள். கையிலே கட்டிக்கொள்ள இரும்புபட்டை கொடுத்தார்கள். முழங்கை நீளமுள்ள யவனத்து குறுவாள் கொடுத்தார்கள்.

''இன்றிலிருந்து நீயும் ஒரு மாலுமி.'' என்று சொன்னார் கள். அவன் பாதரட்சை வேண்டும் என்று கேட்டான். ''கரை

இறங்கியதும் சம்பாதித்துக் கொள்.'' என்று சொன்னார்கள். இரண்டு பொற்காசுகள் கொடுத்தார்கள்.

அன்றைக்கு நல்ல உதயம். அவன் வாழ்க்கை மாறியது.

''தென்னாடுடைய சிவனே போற்றி. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.'' என்று சூரியனை பார்த்து கரம் குவித்தான்.

'ஆதித்யம் ஹிருதயம் புண்யம்

சர்வ சத்ரு விநாசனம்' என்று பாடத் துவங்கினான். அவனை சீனர்கள் வியப்போடு பார்த்தார்கள். அவன் கொஞ்சம் தயங்கி நிற்க, ''பாடு, பாடு' என்று சொன்னார்கள்.

இராமாயணத்தில் ஒரு பகுதியாக அந்த பாடல் வரு கிறது.

அவன் தொடர்ந்து பாடினான். கண்களின் ஓரம் நீர் கட்டியது. ''இந்த வாழ்க்கையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துவிடப்பா.'' அவன் கெஞ்சினான். திரும்பி சீனர்களை பார்த்தான். அவர்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான். அந்த தீர்மானம் மெல்லிய சிரிப்பாக, நட்பு விளிம்பாக வெளிப்பட்டது. சீனர்களும் அதை புரிந்துகொண்டு தலையசைத்து ஆமோதித்தார்கள். ஒரு நட்பு அங்கே நிலவியது.

துடுப்பு போடுகின்ற நாற்பது பேருக்கிடையே ஒரு கைதி இருந்தான். அவன் வங்கதேசத்தை சேர்ந்தவன் என்பது அவனுக்கு தெரிந்திருந்தது. ஆனால் அவன் பேசுவதே இல்லை. தன் மொழியையோ, தேசத்தையோ சொல்வதில்லை. ஆனாலும் ஒரு தடவை கனவு உளறலின்போது அவன் பேசியது புரிந்துவிட்டது. அது வங்கமொழி என்று தெரிந்து விட்டது. அவன் அவனை சமாதானப்படுத்தினான். அவனுக்கு கிடைத்த மது கஷாயத்தை அவனுக்கு கொடுத்தான். அவன் முதுகில் சவுக்கால் அடிக்கப்பட்டு ரத்தம் பெருகி சீழ் கோர்த் திருந்தது. துடுப்பு போடும்போது கடுமையாக வலித்தது. அவன் உள்ளுக்குள் உண்பதற்கு குளிகை தந்தான். முதுகில் களிம்பு தடவினான். மூன்று நாட்களில் குணம் தெரிந்தது. அவன் மருந்துக்கு நன்றி சொன்னான்.

''வங்கமொழிதானே'' என்று கேட்டதற்கு அவன் ''ஆம்'' என்று சொன்னான். அதற்கு மேல் 'கேட்பதற்கு அவன் முயற்சி செய்யவில்லை.

''நீ எந்த ஊர்?'' என்று அந்த வங்க மாலுமி கேட்டான்.

''நான் பாண்டிய தேசம். கொற்கை துறைமுகத்திலிருந்து கிளம்பினேன். புகார் போனேன். புகாரிலிருந்து கிளம்பி முல்லை தீவு போனேன். முல்லைத் தீவிலிருந்து நடுவில் உள்ள தீவு களுக்குப் போய் அங்கிருந்து ஸ்ரீவிஜயம் நோக்கி வரும்போது இவர்கள் வளைத்து பிடித்து விட்டார்கள். நான் வியாபாரி தான். அதே நேரம் நாவாய் வேலைகள் நன்றாக தெரிந்ததால் மாலுமியாக சேர்ந்து கொண்டேன். மாலுமியாக வேலை செய்தேன். அதற்கு காசு கிடைக்கும். என்னுடைய இடத்தில் நிறைய சாமான்கள் வாங்கி வைத்துக் கொள்வேன். அதை கொண்டுபோய் நேரிடையாகவோ அல்லது நாவாய் மாலுமிகள் மூலமாகவோ விற்பேன். அது எங்கே விற்கப்படும் என்பது எனக்கு நன்கு தெரியும். பருத்தி புடவைகள் நிறைய கட்டிக் கொண்டு வருவேன். அது இடத்தை அடைக்கும் என்பதால் மூங்கில் கோலில் மிளகும், ஏலமும், லவங்கப்பட்டையும் போட்டு வருவேன். நல்ல தேன் கொண்டு வருவேன். இவை களால் நல்ல வியாபாரம் என்னால் செய்ய முடிந்தது. பல இடங் களில் விற்று நிறைய பொருள் சேகரிப்பேன். பொற் கழஞ்சுகள் வாங்குவேன். அங்கிருந்து ஆயுதங்களும், பட்டுத் துணிமணி களும் வாங்குவேன். சோழ தேசத்திற்கும், பாண்டிய தேசத் திற்கும் கொண்டு போய் விற்பேன். பிறகு கரை இறங்கி என் ஊருக்கு போய் ஐந்து மாதம் இருந்துவிட்டு பிறகு மறுபடியும் கிளம்புவேன்.

எனக்கு மனைவி, மக்கள் மீது அவ்வளவு பிடித்தம் இல்லை. ஏதோ ஊர் என்று ஒரு மனிதருக்கு இருக்க வேண்டு மல்லவா. அதற்காக சோழ தேசத்தின் எல்லையில் இருக்கின்ற பாண்டிய தேசத்து கிராமத்தில் என் வீட்டை அமைத்துக் கொண்டேன். உண்மையில் என்வீடு இன்னும் உள்ளடங்கி இருக்கிறது. மாலுமிக்கு எது ஊர்? எங்கெல்லாம் பெண் இருக் கிறதோ, எங்கெல்லாம் படுத்துக் கொள்ள ஆள் இருக்கிறதோ அதெல்லாம் அவன் ஊர்தான். நிலம் என்பதின் மீது, ஊர்

என்பதின் மீது எனக்கு காதல் இல்லை. ஊருக்கு போன சில மாதத்திலேயே கடல் பயணத்திற்கு அழைப்பு வந்து விடும். கடற் காற்றுக்கு ஏக்கம் வந்து விடும். சுதந்திரமாக ஒரு நாவாயில் ஏறி எல்லையில்லாத கடலுக்குள் புகுந்து விட வேண்டும் என்ற வெறி வரும். அங்கே என் வீடு என்பதற்கு சில பொற் காசுகள் கொடுத்துவிட்டு வாழ்ந்த பிறகு கிளம்பிவிடுவேன். கடற்கரை பட்டிணத்தில் துணிகள் வாங்கிக் கொள்வேன். சோழ தேசத்தில்தான் அற்புதமான விஷயங்கள் கிடைக்கும். நல்ல சிலைகள் கிடைக்கும். முழங்கை உயர வெண்கலச் சிலை கள் பலதும் வாங்கி வந்து கொடுப்பேன். அவற்றிற்கு ஸ்ரீ விஜ யத்தில் மிகப் பெரிய மதிப்பு. பத்து பொற்காசுக்கு வாங்கிய ஒரு நடராஜர் சிலை ஆயிரம் பொற்காசிற்கு விற்றேன். நான் ஐநூறு காசுக்கு வாங்கி வந்ததாக பொய் சொன்னேன். அதுகூட இல்லாமல் எப்படி நான் இவ்வளவு தொலைவு வரமுடியும் என்று கேட்டதற்கு அவன் வாங்கிக் கொண்டான். அவன் அதை விட அதிகமாக விற்றான் என்றும் கேள்வி. உள்ளங்கை அகல சிலைகளை ஒரு ஜாடியில் போட்டு அதில் அரிசியை கொட்டி வைத்து விடுவேன். அரிசி உண்பதற்கு. அடிபடாமல் இருப் பதற்கு அவைகளை அரிசியில் புதைத்து வைப்பதால் பளபளப் பாக புதிது போல மின்னும். எடுத்து நன்றாக மெருகேற்றி ஸ்ரீ விஜய கடற்கரையிலேயே விற்று விடுவேன். ஸ்ரீ விஜயத்து வேசிகள் வாங்குவார்கள். அவர்களுக்கு அம்மாதிரியான சாமி சிலைகள் பிடிக்கும். படுத்து எழுந்த சம்பாத்யம் தானே. எவ்வ ளவு காசு கேட்டாலும் அவர்களுக்கு அதன் உண்மை மதிப்பு தெரியாது. அவர்கள் மனம் உருகியதுதான் முக்கியம். அதிகம் உருகியவர்களுக்கு அதிகம் காசு. சரியான வேட்டை ஸ்ரீ விஜயத் தில்தான் நடக்கும்.

பிறகு கடாரம், காம்போஜம், இலங்கா சோகம், மாயிருடி கங்கம் என்று பல ஊர்களுக்கும் பலதும் விற்பனை செய்து கொண்டு போவேன். இறங்குகின்ற இடத்தில் விற்பேன். அங்கேயே ஏதாவது வாங்குவேன். அதை கொண்டுபோய் மறுபடியும் இன்னொரு இடத்தில் விற்பேன். அங்கேயும் ஏதாவது வாங்குவேன். காசு குட்டிபோட்டுக் கொண்டே இருக்கும். மறுபடியும் ஐந்துமாதம் ஊருக்கு வந்து உண்டு உறங்கி பெண்டுகளோடு போகித்து விட்டு வருவேன். இந்த

முறை நல்ல காரியம் ஒன்று செய்தேன். எங்கள் ஊர் கோவில் சிதிலமடைந்து இருந்தது. ஊர்மக்கள் ஒன்றாக கூடி வீட்டு வாசலுக்கு வந்து எங்களுக்காக இதை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். என்னிடம் ஆறு மூங்கில் கழிகள் இருந்தன. ஆறிலும் பொற்காசுகள் இருந்தன. அதில் ஒன்றை உடைத்து பாதி கழியில் உள்ள பொற்காசுகள் கொடுத்தேன். அவர்கள் பெருத்த சந்தோஷம் அடைந்தார்கள். எனக்கு தினமும் பரிவட்டம் கட்டினார்கள். கோவில் மாலை போட்டார்கள். கோவில் சோறு கொண்டு வந்து கொடுத்தார்கள். என் பெண்டு, பிள்ளைகளுக்கும் மிகப்பெரிய மரியாதை இருந்தது. என் கண் எதிரேயே அந்த கோவில் மிகச் சிறப்பாக உருவாயிற்று. அந்த சிற்பி வந்து தனக்கு ஏதேனும் தனியாக காசுகொடு என்று கேட்டபோது நான் விரல் நீளமுள்ள ஒரு தங்கப் பாளத்தை கொடுத்தேன். அவன் வாயெல்லாம் பல்லாக விழுந்து வணங்கினான்.

இந்த கோவிலை மிகச்சிறப்பாக கொண்டு வர வேண்டும். கருங்கல் வேலை அதிகமாக கொண்டு வர வேண்டும். அதற்குண்டான ஆட்களை கொண்டு வரவேண்டும். சிற்பங்கள் நுணுக்கமாக இருக்க வேண்டும். மேலே விமானம் தஞ்சை விமானத்தை ஒட்டியிருக்க வேண்டும் என்றெல்லாம் உத்தரவு பிறப்பிக்க அம்மாதிரி அக்கோவில் உருவாயிற்று. முன் மண்டபம் கட்ட வேண்டும். சுற்று மதில் சுவர் எழுப்ப வேண்டும். யானையும், பசுக்களும் கோவிலில் பராமரிக்க வாங்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். தாசிகள் ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். அதற்காக நான் மறுபடியும் பயணப்பட வேண்டும் என்று தீர்மானித்தேன்.

முன்னெல்லாம் கடல் என்ற ஆசை மட்டுமே இருக்கும். இப்போது கடல் என்ற விஷயத்திற்கப்பால் கோவில் கட்ட காசு சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. அதனால் தானோ என்னமோ என்னுடைய வாழ்க்கை திசை மாறிப் போயிற்று. ஆறு கடல் பயணங்கள் எந்த சேதாரமும் இல்லாமல் போனேன். இந்தமுறை இவர்களிடம் சிக்கிக் கொண்டேன். ஆனால் அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். படகு துடுப்பு போடு என்று இரண்டு மாதம் வைத்திருந்தார்கள். பிறகு எதனாலேயோ விடுவித்து மேலே கொண்டு வந்து தளத்தை சுத்தம் செய்யவும், பாய் மரம் இறக்கவும் கற்றுக் கொடுத்தார்கள்.

நான் அவைகளை சீராக செய்வதால் கயிறுகளை மடிக்கவும், கயிறுகளை பற்றிய கணக்குகளும், நீரோட்டம் பற்றியும், நாவாயினுடைய வேகம் பற்றியும், திசைகள் பற்றியும் சொல்லிக் கொடுத்தார்கள். நான் நல்ல மாலுமிதான். இவர்களோடு சேர்ந்து சிறந்த மாலுமியாகி விட்டேன். நான் துடுப்பு போடுவேன். பாய்மரம் விரிப்பேன். ஆனால் மூன்று தண்டுகள் கொண்ட இந்த நாவாயில் பாய்மரங்கள் வேறானவை. முன்னே இருப்பவற்றை நேராக வைத்து, பின்னே இருப்பவற்றை கோணலாக்கினால் காற்று கோணலான முறையில் சுற்றி வளைத்து நாவாயின் மீது மோதும். ஒரு பாய்மரத்தின் மீது மோதிய காற்று இன்னொரு பாய்மரத்தின் மீது மோதி கடைசி பாய்மரத்தை வேகமாகத் தாக்கும். அந்த வளைவினால் கடைசி பாய்மரம் மிக உப்பலாக வேகம் அதிகரிக்கும். காற்று திசை மாறியது என்றால் அதற்கேற்றபடி பாய்மரத்தையும் திசை மாற்ற வேண்டும். காற்று திசை மாறுவதை தோள்பட்டையில் உணர வேண்டும். உச்சிக் குடுமியில் உணர வேண்டும். சில சமயம் நடுமுதுகின் கீழும் நாம் உணர முடியும். நூல் வைத்து பார்க்க, கயிறு அசைத்து பார்க்க நீர் ஊற்றிப் பார்த்து என்று பல்வேறு விதமாக காற்றின் திசையை அறிய வேண்டும். நீரோட்டத்தை பார்க்கத்தான் தனி கண்கள் தேவை. அந்த நீலம் வேறுவிதமாக இருக்கும். அந்த இடத்தில் மீன்கள் அசைவு வேறுவிதமாக இருக்கும்.

தளத்திற்கு பதவி உயர்வு செய்தாலும் துடுப்பு போடும் வேதனை எனக்கு தெரியும் என்பதால் உன்னிடம் பிரியமாக இருந்தேன். அடுத்த முறை நிலத்தில் இருக்கும்பொழுது உனக்கு உதவி செய்கிறேன். நீ வேண்டுமானால் தப்பித்து போய்விடு. அல்லது உன்னுடைய ஊருக்கு போகும்பொழுது அங்கு இறக்கி விடுகிறேன். இவர்களிடம் பேசி விடுதலை வாங்கி தருகிறேன். நாங்கள் வேறு ஆட்களை பிடித்துக் கொள்கிறோம். கவலைப்பட வேண்டாம். என்று ஆறுதல் சொல்ல அவன் இவனிடம் ஆறுதலாக இருந்தான்.

வங்கத்திற்கு போகிறோம் என்றதும் அவன் ஞாபகம் வந்தது. அவன் மீது அக்கறை வந்தது. அவ்வப்பொழுது அவன் அருகே போய் உட்கார்ந்து அல்லது கீழே உள்ள தளத்தில்

படுக்கை அறையில் அவனுக்கருகே உட்கார்ந்து வங்க மொழியில் சில வார்த்தைகளை கேட்டு தெரிந்து கொண்டான். சமஸ்கிருதம் போதும், வெகு சுலபமாக வியாபாரம் செய்யலாம் என்று அவனுக்கு அழுத்தம் திருத்தமாக சொல்லப்பட்டது. அவன் நிம்மதியானான்.

நல்லவேளை, மறுபடியும் தொழில் செய்ய முடியும். வங்கத்திலிருந்து கிளம்பி, வங்காள விரிகுடா வழியாக கொற்கையோ, புகாரோ அடைந்து விட முடியும். அங்கிருந்து ஊருக்கு போக முடியும். கிளம்பி வெகுநாளாயிற்று. எத்தனை வருடம் என்று கூட தெரியவில்லை. இவர்களோடு சுற்றியதில் காலமே மறந்து போய்விட்டது. அவர்களுக்கும் காலம் தெரிய வில்லை. எங்கேயோ கிளம்பி, எங்கேயோ இறங்கி, ஏதோ கொள்ளை அடித்து கொள்ளை அடித்து தானியங்களும், மாமிசங்களும் எடுத்து வந்து பல நாட்களாக ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தரை பற்றிய விஷயங்கள் எதுவும் தெரியவில்லை. சூரிய உதயம், அஸ்தமனம் இதுவே தெரியும். இரவில் நட்சத்திரங்களை வைத்துக்கொண்டு எங்கு போகிறோம் என்று தெரியும். பசுத்தோலின் மீது படங் கள் வரைந்து இந்த இடத்தில் இருக்கிறோம் என்று ஊசி குத்தி சொல்வார்கள். அது ஓரளவு சரியாக இருக்கும். கடற்கரை களுக்கு குறி வைத்தது போல போவார்கள். சரியான இடத்தில் திசைமாறி கடற்கரைக்கு நேரே போகாமல் சற்றுதள்ளி புதர்கள் நிறைந்த இடத்தில் இறங்கி அங்கிருந்து நடந்து கிராமங்களுக்கு போய் வாள்முனையிலோ, காசு கொடுத்தோ குதிரைகள் சம்பாதித்து பட்டணங்களுக்கு போவார்கள். அங்கே எப்படி இருக்கிறது விஷயம் என்று தெரிந்து கொண்டு திரும்புவார்கள். மறுபடியும் நாவாய் ஏறி அந்த துறைமுகத் திற்கு போய் இரவோடு இரவாக நெருப்பு தரித்த அம்புகளை தொடுத்து கரையோரம் நிற்கின்ற நாவாய்களை எரித்து கலவரமூட்டி கொள்ளை அடிப்பார்கள். கடற்கரைக்கு வந்து கொண்டிருக்கின்ற நாவாய்களை மறித்து அங்கிருந்து சாமான் கள் பறிப்பார்கள். உணவுகளை பறிப்பார்கள். பிறகு கிளம்பி வந்துவிடுவார்கள். அவர்கள் நிலம் இறங்குவதற்கு காரணம் ஊரை நோட்டமிடுவது மட்டுமல்ல, பெண்களை அனுபவிப் பதும் முக்கியம். கடலில் பயணம் செய்கிறவனுக்கு நிலம் என்பது

வெறும் குடிசையும், அரண்மனையும், தென்னந்தோப்பும் இருக்கின்ற இடம் அல்ல. நிலம் என்பது பெண். காசு கொடுத்தால் எவள் வலிய வந்து கட்டிக் கொள்கிறாளோ அவளை தேர்ந்தெடுப்பதற்குத்தான் மாலுமி போவான். மாலுமிக்கு பத்தினி பெண்டிர் முக்கியமே இல்லை. அவன் அவர்களை ஒரு ஜென்மமாக மதிப்பதே இல்லை. பரத்தையரோடு மட்டுமே அவனுக்கு சகவாசம் உண்டு. அதுமட்டுமே அவனுக்கு நிலம் என்ற சுகத்தை தருகிறது.

அவன் மெல்ல எழுந்தபோது வங்கதேசத்து மாலுமி, ''உங்கள் பெயரென்ன? நான் தமிழன் என்றுதானே அழைக்கிறேன். உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டான்.

''என் பெயர் மாணிக்கவாசகன். மதுரை கோவிலை கண்டிருக்கிறாயா. மிக பிரம்மாண்டமானது. அதற்கு அருகே உள்ள கிராமத்தில் வைகை நதிக் கரையில் பிறந்தேன். மாணிக்கவாசகர் என்ற ஒரு மிகப்பெரிய புலவர் இருந்தார். அவர் நினைவாக இந்த பெயரை எனக்கு வைத்தார்கள். அவர் பாடல்கள் எனக்கு பலதும் மனப்பாடம். அவரைத் தவிர வேறு சில புலவர்களின் பாடல்களும் எனக்கு மனப்பாடம். சிவனை குறித்த பாடல்களையெல்லாம் என் தந்தையார் எனக்கு போதித்தார். எனது தமையனும் தினமும் சிவபூஜை செய்து, வயல்களில் உழுது தோப்புகளில் மரங்கள் நட்டுவிட்டு நல்ல காசு சம்பாதிக்கிறார்கள். நான் ஒருவன்தான் இப்படி இருக்கிறேன். ஆனால் என்னுடைய காசு பார்த்து அவர்கள் பிரமிக்கிறார்கள். நான் கோவில் கட்டுகிறேன் என்றதும் ஓடிவந்து பார்த்தார்கள். 'நீ ஊருக்கு போனால் நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று என் அண்ணன்கள் சொன்னதும் எனக்கு சிரிப்புதான் வந்தது. ஆனால் நான் அவரை அனுமதிக்கவில்லை. என் மனைவியிடம் நிறைய காசு கொடுத்து அவ்வப்போது கோவிலுக்கு கொடு என்று சொல்லி வந்திருக்கிறேன். அவள் அழகி அல்ல. என்னைப்போல் முரட்டுகுணம் உடையவள். ஆனால் மகாகெட்டிக்காரி, நிர்வாக தகுதி உள்ளவள். எனக்கு ஐந்து குழந்தைகள். ஒரு பெண். நாலு பையன்கள். ஆனால் அவர்களை கடலுக்கு அனுப்பவே மாட்டேன் என்று சொல்லியிருக்கிறாள். அவர்களிடம் சத்தியம் வாங்கியிருக்கிறாள். கடலுக்கு

போய் ஒரு பெண் பிள்ளையின் வயிற்றெரிச்சலை கொட்டிக் கொள்வது இந்த தலைமுறையோடு முடியட்டும் என்று கூச்சலிடுவாள். நான் சிரித்துக் கொள்வேன்.

கடலினுடைய சுகம் எல்லோருக்கும் தெரியாது. நீ நிலத் திற்கு போனால் மறுபடியும் கடலுக்கு வருவாயா. அல்லது· நிலத்திற்கு உள்ளேயே· இருந்து விடுவாயா.'' அவன் யோசித் தான்.

''கடலுக்கு வரமாட்டேன். நிலத்திற்குள் ஆறு இருக்கின்ற இடத்திற்கு நான் போய் விடுவேன். வங்க தேசத்திலிருந்து இன்னும் கிழக்கே மலைகள் மீது பல கிராமங்கள் இருக்கின்றன. மிகக் குளுமையான கிராமங்கள். அடிக்கடி மழை பெய்கின்ற கிராமங்கள். பிரம்மபுத்ரா என்ற அருமையான நதி ஓடுகிறது. மிகச் செழிப்பாக நிறைய விதமான பயிர்கள் வளர்கின்றன. இடுப்பு உயரத்திற்கு மேலே நெல் வளரும். நன்கு கிடைக்கும். கோதுமை பயிர் செய்வோம். அதையெல்லாம் விட, மூங்கிலும், மூங்கில் அரிசியும், தேனும் வெகு எளிதாக கிடைக்கும்.

நான் மூங்கில் பயிர் செய்ய விரும்புகின்றேன். ஆற்றோரம் நிலம் வாங்கி கொத்து கொத்தாக மூங்கில் நட்டு அவற்றை அறுத்து விற்கலாம். மிக நல்ல விலைக்கு போகும். நாவாய்கள் கட்ட மூங்கில்கள் வாங்கிக் கொண்டு போவார்கள். சிறிய தோணிகளுக்கெல்லாம் மூங்கில்தான் ஆதாரம். சிறிய தோணி களுக்கு நிறைய மூங்கில் தேவைப்படும், வெறும் மூங்கி லாலே கூட படகு செய்து விட முடியும். குடிசைகளுக்கும், சில சமயம் மாட மாளிகைகளுக்கும் மூங்கில்கள் அவசியமாகும். போர் செய்ய வில்லும், அம்பும், ஈட்டியும் வெறும் இரும்பிலா செய்ய முடியும். அதற்கும் மூங்கில்தான் தேவை. மூங்கிலி லிருந்து பல்வேறு விஷயங்கள் செய்யலாம். சிறிது சிறிதாக நறுக்கி கெட்டிமனான கூடைகள் முடையலாம். மூங்கிலுக்கு நீர் ஊற்ற வேண்டியதில்லை. ஆற்றிலிருந்து பூமியில் கிடைக் கின்ற நீர்தான். அவைகளாலே அவை செழிப்பாக வளரும். தினமும் மூங்கில் எப்படி இருக்கிறதென்று குதிரை ஏறி சுற்றிப் பார்த்துவிட்டு எனக்கென்று உணவுக்காக வயலில் கோதுமை விளைவித்துக் கொள்வேன்.

எங்களுடைய பக்கமெல்லாம் நான்கு வீடுகளுக்கு ஒரு குளம் இருக்கும். அந்த குளத்தை நான்காக பிரித்து வலைகள் கட்டி மீன்கள் வளர்ப்போம். மீன்கள் கொழுக்கும் வரை அதற்கு உணவுகள் போடுவோம். கறித் துண்டுகள் போடுவோம். மீன்கள் கொழுத்து வளரும். பிறகு இறங்கி கையால் பிடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்து குழம்பு சமைத்து விடுவோம். புதிய மீன். துடி துடிக்கின்ற மீன் குழம்பில் போட்டு சாப்பிட்டு பார். அத்தனை சுவை. நல்ல மாம்பழம் போல ஒரு சுவை மீனில் இருக்கும். இனிப்பாகவே இருக்கும்.'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தான்.

நிலத்தின் மீது அவனுக்கு இருக்கும் ஆசை மாணிக்க வாசகத்திற்கு தெரிந்தது. மாணிக்கவாசகம் தான் வேறு என்று நினைத்துக் கொண்டான். வங்க மனிதனை உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான். வங்க மொழி தெரிந்த ஒருவன் இருப்பதை அவர்கள் சீனர்களுக்கு சொல்லவில்லை. சொன்னால் அவனை விடுவிக்கவே மாட் டார்கள்.

எப்போது கங்கைநதி முகத்துவாரத்தை அடைவோம் என்று மாணிக்கவாசகம் காத்துக் கொண்டிருந்தான். சீன மது அவனுக்கு தரப்பட்டது. தூங்குவதற்கு தடிதாக ஒரு தூளியும் கொடுத்தார்கள். உறுதியான புடவைத் துணியில் கட்டப்பட்ட அந்த ஏணையில் அவன் சுகமாகத் தூங்கினான்.

இரண்டு பக்கமும் அடர்த்தியான குன்றுகள் உள்ள வழி யினூடே கோதாவரி விரைவாகப் போயிற்று. மழை இல்லை என்பதால் மணற்திட்டுகள் அங்கங்கே இருந்தன. இராஜேந்திர சோழர் ஏறி இருந்த படகு அன்ன முகப்பு உள்ள தோணி. ஒரே ஒரு கம்பம் நடப்பட்டு, ஒரே ஒரு பாய்மரம் போடப்பட்டு அந்த பாய்மரத்தில் புலிச்சின்னம் வரையப்பட்டிருந்தது. அதற்குள் சோழவீரர்கள் இந்த தோணியை வாங்கி, சோழ தேசத்து தோணியாக மாற்றி விட்டார்கள். உள்ளுக்குள்ளே நீண்ட மரப்பலகைகளில் வீரர்கள் குத்திட்டு உட்கார்ந்திருந் தார்கள். இராஜேந்திர சோழரையும் சேர்த்து நாற்பத்தியாறு வீரர்கள் இருந்தார்கள்.

பாய்மரத்து பலகைகள் உறுதியாக இருந்தன. பக்கப் பலகைகள் புதிதாக இருந்தன. உட்காரும் இடங்களில் புதிதாய் வர்ணம் தீட்டப்பட்டிருந்தது. தோணியை கரைக்கு இழுத்து செப்பனிட்டு சரி செய்திருப்பார்கள் போலும். அங்கங்கே கப்பிகளில் எண்ணெய் மொழுக்கு இருந்ததால் பாய்மரம் சப்தம் இல்லாமல் ஏறி இறங்கிற்று. நல்ல சீறலோடு முகத்துவாரம் நோக்கி ஓடிற்று. ஒரு நாள் பயணத்தில் சமவெளி சட்டென்று தெரிந்தது. ஆறு குறுகலாயிற்று. இரண்டு பக்கமும் மணல் மேட்டில் மோதாமல் மிக கவனமாக செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் படகு இடதும், வலதும் ஆடிற்று. உட்கார்ந்திருந்தவர்கள் உருண்டு விழுந்தார்கள். பக்கவாட்டில் மரங்களை பிடித்துக்கொள்ள முயற்சி செய்தார்கள். விழுந்தவர்களை பார்த்து விழாதவர்கள் சிரித்தார்கள். இராஜேந்திர சோழரும் கீழே விழப் போக ஒரு கோதாவரிக்கரை மாலுமி சட்டென்று ஆரத் தழுவிக் கொண்டான். இடுப்பை இறுக்கக் கட்டிக் கொண்டான்.

''பரவாயில்லை விடு.''

''இல்லை. ஆட்டம் அதிகமாக இருக்கிறது. இன்னும் மோசமாக ஆடும்.'' என்று சொன்னான். அவர் மெல்ல நடந்து அன்னப்பறவையின் சிறகை பிடித்துக் கொண்டார். இடது பக்கம் நாலுமுழங்கை இறங்கி வலது பக்கம் நாலுமுழம் இறங்கி மாற்றி மாற்றி ஆடிக்கொண்டிருந்தது. முன்பக்கமும், பின் பக்கமும் ஆடிற்று.

''இதென்ன நாலாதிசையும் படகு ஆடுகிறதே ஏன் இப்படி?''

''ஒரு கூடலின் போது கட்டில் ஆடத்தானே செய்யும்.'' அந்த மாலுமி சொன்னான். அவனுக்கு இராஜேந்திர சோழருடைய உண்மையான மதிப்பு தெரியவில்லை. யாரோ பெருந்தனக்காரர் என்ற எண்ணம்தான் இருந்தது. அவனை அருகே இருந்த சேனாதிபதி அதட்டி விலக்கினான்.

''என்ன சொல்கிறான் அவன்?''

''நதி பெண்.''

''சரி.''

''கடல் ஆண்.''

''ஓஹோ''

''இரண்டு பேரும் சந்திக்கிறார்கள். கடல் உள்ளே வருகிறது. நதி கடல் நோக்கி போகிறது. கடலினுடைய அலைகள் நதியினுடைய அலைகளை ஆரத்தழுவிக் கொள்கின்றன. இந்த இடத்தில் கூடல் நடந்து கொண்டிருக்கிறது. எனவேதான் இந்த ஆட்டம். முன்பக்கமும் அலை. பின்பக்கமும் அலை. இடது பக்கமும் அலை. வலதுபக்கமும் அலை. அதனால் சுழியாக இது போகிறது. தோணி பெரிதாக இருப்பதால் கவிழ வாய்ப்பில்லை. சிறிய படகு கவிழ்ந்துவிடும். சிறிது நேரம் இந்த தீவை தாண்டி விட்டால் கடலுக்குள் போய்விடலாம்.''

''அது தீவா.''

''ஆமாம்.''

''எப்படி சொல்கிறாய்?''

''வெறும் மணற்பரப்பு. குத்துச் செடிகள், உயரமான மரங்கள் எதுவும் இல்லை. சில தென்னைகள் தவிர. எனவே இது தீவாகத்தான் இருக்கும். அதைத் தவிர செம்படவருடைய வலைகள் காயவைக்கப்பட்டிருக்கின்றன. தீவுகளில் செம்படவர்கள் தான் தங்கியிருப்பார்கள். வேறு குடியிருப்புகள் இருக்காது. அதனால்தான் அவ்விதம் சொன்னேன்.'' என்று சொல்ல, அந்த தீவை வியப்போடு பார்த்து வந்தார்.

நிறைய தெரிந்து கொள்ள வேண்டும். எனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்று உள்ளுக்குள்ளே நினைத்துக் கொண்டார்.

படகு இப்பொழுது முன்னும் பின்னுமாக அசைந்து, மேலும், கீழுமாக ஆடி கடல் நோக்கி போயிற்று. கடலில் ஒரு குறிப்பிட்ட இடம் வந்த பிறகு ஆட்டம் நின்றது. பாய்மரம் முழுவதுமாக விரிக்கப்பட அந்த பாய்மர வேகத்தில் கடலுக்குள் அன்னப்பட்சியென படகினை கிழித்துக் கொண்டு வருகிற காற்றுக்கு எதிரே வேகமாக பயணித்தது.

அந்த மாலுமி பாய்மரத்தை திசைமாற்றினான். படகு சற்று நின்று வேறுபக்கம் திசை திரும்பியது. மறுபடியும் திசை

மாற்றினான். இப்பொழுது வேறு பக்கம் திரும்பியது. அவன் திசை மாற்றுகின்ற வேகத்தையும், படகு திசை மாறுவதையும் அவர் ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"இன்னும் போ உள்ளே" என்று கட்டளையிட்டார்.

"உணவு அதிகம் எடுத்துக் கொள்ளவில்லை. வெறுமே அரிசியும், காய்கறிகளும் வைத்திருக்கிறோம்."

"இந்த தீவுகளில் எதுவும் கிடைக்காதா."

"என்ன கிடைக்கும். உலர்ந்த மீன்கள் தான் கிடைக்கும்."

"இன்னும் எவ்வளவு தூரம் உள்ளே போக வேண்டும் என்கிறீர்கள்."

"இன்னும் கொஞ்சம் தூரம் போய் பார்ப்போமே. இன்னும் அமைதியாக இருக்கிறதா என்று பார்ப்போமே."

"இன்று அமைதியாக இருக்கிறது. நாளை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது."

"என்ன ஆகும்?"

"கடல் கொந்தளிப்பு ஏற்படலாம். கடல் நீரோட்டங்கள் வரலாம். நீரோட்டம் வந்தால் வேறு வழியின்றி அதோடு போக வேண்டியிருக்கும். நீரோட்டத்திலிருந்து வெளிப் படுவது கடினம். மிகப்பெரிய துடுப்புகளை போட்டு நீரோட் டத்தை உடைத்துக் கொண்டு வெளியே வர வேண்டும்."

"நீரோட்டம் எங்கே?"

"இப்பொழுது கண்களில் தென்படவில்லை. எப்பொழு தேனும் தென்படலாம்." தொலைவே ஒரு கருப்புப்புள்ளி தெரிந்தது. அந்த மாலுமி எழுந்தான். உயரே பார்த்தான். வேக மாக தண்டில் ஏறினான். பாய்மர உச்சியில் நின்று கொண்டான். அங்கிருந்து ஏதோ ஒரு மொழியில் கத்தினான்.

"என்ன சொல்கிறான்?"

"ஒரு நாவாய் வருகிறது என்று சொல்கிறான்."

"நாவாயா. எதை நோக்கி வருகிறது." அவர் கீழிருந்து கேட்க,

"அது ஏதோ ஒரு பக்கம் போகிறது."

''அப்படியா. நாம் போய் அந்த நாவாயை பார்ப்போம்.''

''வெகுதூரம் போக வேண்டும்.''

''வெகுதூரம் என்றால்?''

''இன்னும் அரைநாள் பயணிக்க வேண்டும்.''

''பயணிப்போம்.'' ஆவலாகச் சொன்னார்.

''உணவு குறைவாக இருக்கிறது'' மறுபடியும் அந்த படைத்தளபதி சொன்னான்.

''இருக்கட்டுமய்யா. குறைவாக உண்போம். என்னவென்று பார்த்து விடுவோம்.'' அவர்கள் அந்த நாவாயை நோக்கி படகை செலுத்தினார்கள். நாவாயும் அவர்களை நோக்கி வந்தது.

''யாரடா அவன் தோணிதானே.''

''ஆமாம் தோணிதான்.''

''என்ன புலிச்சின்னம் வரைந்திருக்கிறது. புலி முகமா. நாய் முகமா.

''இல்லை. புலிமுகம்'' அவனிடம் தூரதிருஷ்டி கண்ணாடி இருந்தது. அந்த நீண்ட குழல் வழியாக பார்க்கும்பொழுது தொலைதூரம் இருப்பது அருகில் தெரிந்தன. அந்த சீனன் அதை மடக்கிக் கொண்டான்.

''என்னது இது. இப்படி ஒரு சின்னம் பார்த்ததில்லையே.'' அவன் அந்த சீன மாலுமியிடம் அந்த நீண்ட தொலைக்கருவி வாங்கினான். வாங்கி தன் கண்களுக்கு சரியாக வைத்துக் கொண்டு அந்த தோணியை தேடினான். தோணிக்குள் ஆட்கள் இருப்பது தெரிந்தது. புலிமுகம் தெரிந்தது.

'இது சோழத் தோணி. சோழர் தோணி இங்கு ஏன் வந்தது. ஏன் தோணியில் சோழர்கள் வருகிறார்கள்.' அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''இது'' ஆரம்பித்தான். வேண்டாம். இதை சீனர்களிடம் சொல்ல வேண்டாம். வருவது சோழர் தோணியாக இருந்தால் நாம் பேசிக் கொள்ளலாம்.

''என்ன இது'' சீனன் அதட்டினான்.

''இது என்னவென்று தெரியவில்லை. புதிதாக இருக் கிறது.'' அவன் தூரதிருஷ்டி கண்ணாடியை மடக்கி சீனனிடம் கொடுத்தான்.

''இன்னும் பாய்மரங்களை சரியாக விரியுங்கள். துடுப்பு போடச் சொல்லுங்கள். வேகமாக'' நாவாய் மிக வேகமாக அந்த தோணியை நெருங்கியது. இடுப்பு வாளை உறுதியாக இராஜேந்திரர் பிடித்துக் கொண்டார். தோணியின் முன்னும் பின்னும் வேகமாக நடந்து பார்த்தார். வீரர்களை நோக்கி, ''ஒருவேளை தாக்குதல் நடக்கலாம். தாக்குதல் நடத்தி அந்த நாவாயை கைப்பற்றும் ஆசை எனக்கு வரலாம். அது என்ன நாவாய் என்பதை பொறுத்துதான் இருக்கிறது. அது பாண்டிய தேசத்து நாவாயோ, அல்லது வேறு நாவாயாக இருந்தாலோ விட்டு விடலாம். மற்றபடிக்கு சீனத்து நாவாயாக இருந்தால் மடக்கி பிடிக்கலாம்.''

மேலே இருந்தவன் கீழே இறங்கி வந்தான்.

''திரும்புங்கள். திரும்புங்கள்'' என்று கத்தினான்.

''ஏன் எதற்கு திரும்ப வேண்டும்.''

''அவர்கள் கடற் கொள்ளையர்கள்.''

''என்ன?''

''கடற்கொள்ளையர்கள். கருப்புக் கொடி போட்டிருக்கிறார் கள். கடற்கொள்ளையர்கள். பார்த்தால் மிக மோசமாக நடந்து கொள்வார்கள். அத்தனை பேரையும் கைது செய்துகொண்டு போவார்கள். திருப்புங்கள். திருப்புங்கள். இப்பொழுது திருப் பினால் தப்பித்து விடலாம்.''

ஆனால் இராஜேந்திரர் சீறினார். ''படகு துடுப்பு போடுங் கள். நாவாய் நோக்கி நமது தோணி போகட்டும். மிக பிரம் மாண்டமான அந்த நாவாய் நோக்கி தோணி போயிற்று. அந்த மாலுமி ஒடுங்கிப் போய் தோணியின் பின் பக்கத்தில் உட் கார்ந்து கொண்டான். முன்பக்கம் இராஜேந்திரர் இருந்தார்.

என்ன பெரிய நாவாயாக இருந்தாலும் சரி எனக்கு அது வேண்டும் என்று ஆசைப்பட்டார். திரும்பி அதே விஷயத்தை அவருடைய வீரர்களிடம் சொன்னார். வீரர்கள் தங்களுடைய

வாளையும், வேலையும் இரும்பு பட்டையில் தீட்டி அவர் சொன்னதை ஆமோதித்தார்கள். நாவாய் நோக்கி தோணி போன போது மாலை நேரம் வந்தது.

நாவாயின் பாய்மரங்கள் மடமடவென்று இறக்கப்பட்டன. நாவாய் நங்கூரம் இடப்பட்டது. துடுப்புகள் உள்வாங்கின. தோணி நாவாயை சுற்றி வந்தது.

''என்ன செய்கிறான் அவன்.'' வியப்போடு மன்னர் கேட்டார். மாலுமி அருகே வந்து நாவாயை உற்றுப் பார்ததான்.

''நங்கூரம் போட்டு விட்டான். நீங்கள் அருகில் வர வேண்டும் என்று விரும்புகின்றான். நீங்கள் உள்ளே வந்து தாக்கினால் உங்களை வெட்டி எறிவான். அவன் தாக்கு தலுக்கு தயாராக இருக்கிறான். ஒரு கோட்டை போல இருக் கிறான். அவன் உங்களை வந்து தாக்கமாட்டான். நீங்கள் வர வேண்டும் என்று நினைக்கிறான்.'' அவர் அவன் சொல்வதை புரிந்து கொண்டார்.

என்ன செய்வது யோசித்தார். அவருக்கு சட்டென்று ஒரு எண்ணம் தோன்றியது.

நாற்பது வீரர்களில் ஐந்து பேர் தவிர மற்றவர்களை மரப் பலகை மறைப்பில் படுத்துக் கொள்ளச் சொன்னார்.

''என்ன இருக்கிறது கைவசம் உணவு'' என்று மறுபடியும் கேட்டார்.

''ஒரு மூட்டை அரிசி. ஒரு மூட்டை காய்கறி.''

''நல்லது. நாம் வியாபாரிகள். அரிசி வேண்டுமா என்று கேளுங்கள்.'' அவர் தலைப்பாகை கட்டிக் கொண்டார். வாளை அன்னப் பட்சியின் கீழே மறைத்து வைத்தார். ஒருவன் கைதட்டி கூப்பிட்டான். நாவாயிலிருந்து ஒருவன் எட்டிப் பார்த்தான்.

''என்ன வேண்டும்?''

''அரிசி இருக்கிறது. வாங்கிக் கொள்கிறாயா.'' உரக்க கத்தினான். மொழி தெரியவில்லை. உணவு உண்பது போல் காட்டி மூட்டையை காட்டினான்.

மேலிருந்து கயிறு இறக்கப்பட்டது. கயிறில் அரிசி மூட்டை கட்டப்பட்டது.

இருக்கின்ற ஒரு அரிசி மூட்டையும் மேலே போகிறதே. வீரர்கள் கவலையோடு பார்த்தார்கள். அரிசி மூட்டை மேலே போனபிறகு மேலே பல பேச்சுக்குரல்கள் கேட்டது. மெல்ல வந்து எட்டி பார்த்தார்கள். அரிசியை எடுத்து மெல்லுவதும் தெரிந்தது. மறுபடியும் கயிறு வீசப்பட்டது. இன்னொரு மூட்டை அனுப்பப்பட்டது.

''காசு கொடு. காசு கொடு.'' இராஜேந்திர சோழர் விரலை சுண்டி காசு கேட்டார்.

ஒரு மூட்டை பொன் தோணி நோக்கி வீசப்பட்டது. வந்து இறங்கி பிரித்துப் பார்த்தார். அற்புதமான பொன்கள். சின்ன நாணயங்களாக இருக்காமல் உருண்டை உருண்டையாக இருக்கின்ற பொன்கள். மறுபடியும் கயிறு போட்டு மூட்டை கேட்டான். அந்த கயிற்றுக்கு காய்கறி மூட்டை அனுப்பப் பட்டது. இன்னும் இரண்டு கயிறுகள் இறக்கப்பட்டன. கோணி யில் இரண்டு வீரர்களை உள்ளே புகுந்து கொள்ளச் சொன் னார். அதையும் கட்டினார். மேலே அனுப்பச் சொன்னார். மேலே போனார்கள். அவர் நாவாய்க்கு அருகே போனார். தன் அருகே இருந்த கயிறை தூக்கி மேலேவீசினார். மேலே எங்கேயோ போய் சிக்கிக் கொண்டது. மடமடவென்று கயிறு பிடித்து மேலே ஏறினார். ஆட்களுடைய கோணிகளும் மேலே ஏறின. கோணியை பிரித்ததும் சட்டென்று வீரர்கள் வெளியே வந்தார்கள். யார் பிரித்தார்களோ அவர்களை தாக்கினார்கள். கத்திகள் உருவப்பட்டன. சிறிய கலவரம் தொடங்கிற்று.

★ ★ ★

அத்யாயம்

66

மூன்றாம் ஆளாக நீண்ட கத்தியுடன் இராஜேந்திர சோழர் கயிறின் வழியாக நாவாய் மீது ஏறி அந்த தளத்தில் குதித்தது தான் வெற்றிக்கு காரணம். நடு தண்டில் பாய்மரம் பயத்தில் இழுத்துவிட சிக்கிக் கொண்டதுதான் அந்த நாவாய் தோல் விக்கு காரணம். அந்த சிக்கலை நீக்கிவிட அவன் நூல் ஏணி யில் மிக வேகமாக தண்டின் மீது ஏறினான். நடுப்பகுதிக்கு சென்று கயிறு விடுவிக்க முயற்சித்தான். கயிறு இறுக்க மாட்டிக் கொண்டிருந்தது. அறுத்துவிடலாமா என்று யோசித்தான். கீழே குரல் கேட்டது.

''விடாதே. வெட்டு. வெட்டு. எல்லா கயிறுகளையும் கீழே வீசு. ஆட்களை மேலே வரச் சொல்.'' பல கயிறுகள் முதலில் ஏறிய இரண்டு வீரர்களால் கீழே வீசப்பட்டன. ஒரு பெரிய கயிறு வடத்தை பிடித்து சட்டென்று முறுக்கிட்டு இராஜேந்திர சோழர் வீசினார். அது நாவாயை கரை ஒதுங்கும்போது கட்டும் கயிறு. தடிமனான கயிறு. அவ்வளவு பெரிய கயிறை ஒரு மனிதன் தூக்கி வீச முடியாது. இராஜேந்திர சோழரால் அந்த நேரத்தில் பரபரப்புக்காக, அந்த நேரத்தில் வேகத்திற்காக, அந்த நேரத்தில் வெற்றி அடைவதற்காக மிகுந்த உற்சாகத் தோடு முழு பலத்தோடு தூக்கி எடுத்து வீசப்பட்டது. அந்த கயிறு மூலம் ஆறேழுபேர் ஒன்றாக மேலே வந்தார்கள். மற்ற கயிறுகள் மேலே எழுந்து வந்தன. இடுப்பில் எப்பொழுதும் உடும்பு வைத்திருக்கிறவன் பலகைமீது வீசி மிக வேகமாக மேலே ஏறி வந்தான். தண்டு பிடித்து உள்ளே வந்தான். நூற்றி இருபது நொடிக்குள் உள்ளுக்குள்ளே பதினைந்து சோழவீரர் கள் வந்தார்கள். இராஜேந்திர சோழரை நோக்கி ஒரு உள்ளங்கை நீள அம்பு விடப்பட்டது. எதேச்சையாக கத்தி வீச அதில் பட்டு துண்டானது. ஒரு நீளவாட்டான பெட்டி, அந்த பெட்டியின்

நடுவில் துளை, அம்புகளை அதில் பரப்பி வைத்திருந்தார்கள். ஒவ்வொரு அம்பாக ஒரு சுருள் கம்பியில் இணைந்து தட்டி விட்டால் பெட்டிக்குள் இருக்கும் அம்பு வேகமாக ஓடி வரு கிறது. உள்ளங்கை நீள அம்பு உடம்புக்குள் இறங்கினால் பிடுங்கிகூட போட முடியாது. மரணம் நிச்சயம். அம்பு உள்ளே உடம்பின் நடுப் பகுதியில் நின்று விடும். மேற்பக்கம் ரத்தம் பொங்கி தசை மூடிக் கொள்ளும். உள்ளுக்குள் இருக்கும் உறுப்புகளை கிழித்து வெகுசீக்கிரம் மரணம் ஏற்படுத்தும் மிக மிக மோசமான ஒரு ஆயுதம்.

தன்னுடைய நீண்ட கத்தியை முழு பலத்தோடு அந்த அம்பு பெட்டியை வைத்திருக்கும் சீனன் மீது வீசி எறிந்தார். கத்தி பறந்து போய் அவன் நெஞ்சில் சொருகியது. முதுகு வழியே வெளியே வந்தது. தாவி முன்னேறினார். கத்தியை பிடித்து இழுத்தார். அருகே இருந்தவன் தலையில் அடித்தார். ஓடிப்போய் வேறு ஒரு வீரனை தாக்கிக் கொண்டிருந்தவன் முதுகில் வெட்டினார். நாலா பக்கமும் சுழன்று போரிட்டார். உள் ளுக்குள் வந்த வீரர்கள் மற்ற படைவீரர்களோடு சண்டை போட்டார்கள். எல்லோரும் உரத்த குரலில் தமிழ் பேசினார்கள். ‘சோழம் சோழம்’ என்று சொன்னார்கள். மாணிக்கவாசகனுக்கு உடம்பு நடுங்கியது.

தமிழ். வெகுநாளைக்கு பிறகு காதுக்கு இனிமையான தமிழ். சோழதேசமா. அதுதான் புலி முகமா. பாயும் புலி அல்லவா இருக்கும். வெறும் முகம் வரைந்திருக்கிறார்களே. இது சொல் லாமல் சொல்லும் விஷயமா. ஒரு ரகசிய செய்தியா. யாரது கீழே. இவ்வளவு தடிமனாய். இவ்வளவு பெரிய கத்தியோடு. நெஞ்சிலே சிகப்பு ஆரம் இருக்கிறது. கையிலே கேயூரமும், கடகமும் இருக்கின்றன. யாரது. காதிலே வீரக் கழல் இருக்கிறது. பாதரட்சை அணிந்திருக்கிறார். தளபதியா. குறுநில மன்னனா. அல்லது அல்லது.. திகைத்தான். இறங்கலாமா. அங்கேயே நின்று விடலாமா. அவன் கவனமாக காத்திருந்தான். மாலை மங்கி வருகிறது. சட்டென்று யாருக்கும் மேலே பார்க்க தோன் றாது. அவன் உடும்பாக நடுத்தண்டில் ஒட்டிக் கொண்டிருந்தான்.

எல்லா கடற் கொள்ளையர்களையும் அடித்து துவைத்து தரையில் சாய்த்து குற்றுயிரானவர்களை மறுபடியும் குத்தி

கொன்று கடலில் தூக்கி போட்டார்கள். அடிபட்டு கிடந்தவனுக்கு கட்டி கொள்ள துணியை கிழித்து கொடுத்தார்கள். இறந்தவர்கள் உடல்களிலிருந்து ஆயுதங்களையம், கழுத்து மணிகளையும், கையிலிருந்த மோதிரங்களையும் பிடுங்கிக் கொண்டார்கள். எல்லாவற்றையும் மூட்டை கட்டினார்கள். அந்த தடிமனான மனிதரின் பாதத்தில் வைத்தார்கள். 'திருமன்னி வளர' என்று உரத்து கோஷமிட்டார்கள். 'மாமன்னர் இராஜேந்திரர் வாழ்க' என்று சொன்னார்கள். மாமன்னர் இராஜேந்திரரா. அவன் கை நழுவிற்று. இடுப்பில் இருந்த கட்டாரி பெரும் சப்தத்துடன் தரையில் மோதிற்று. எல்லோரும் மேலே பார்த்தார்கள். அவனை அம்புகள் குறிபார்த்தன. அவன் மெல்ல கீழே இறங்கி வந்தான். திரும்பினான். அவரை நோக்கி கைகூப்பினான். அப்படி கை கூப்புவது சோழ தேசத்து பாண்டிய தேசத்து வழக்கம். திராவிட நாகரீகம். இராஜேந்திர சோழர் உற்று அவனை பார்த்தார். சாயல் வட இந்திய சாயலாக இல்லையே. பரத கண்டத்தின் கலிங்கமாகவோ, வங்காளமாகவோ இல்லையே. சீன நாவாயில் திராவிட முகம் ஏது. அவர் அவனை அருகே வரச் சொன்னார். அருகே வந்தான். மற்றவர்கள் இராஜேந்திரரை சூழ்ந்து கொண்டார்கள். அவன் தாக்கிவிடாது இருக்க ஓடிப்போய் அவன் கையை பின்னால் கட்டினார்கள். இடுப்பில் உள்ள வாளை பறித்தார்கள். அவன் அணிந்திருந்த பாதரட்சையை அழுத்திக்கொண்டு அவனை பின்னே தள்ளினார்கள். பாதரட்சை அறுந்தது. அவன் வெறும் காலோடு இருந்தான்.

''யார் நீ?'' இராஜேந்திரசோழர் சமஸ்கிருதத்தில் கேட்டார். அவன் மெல்ல சிரித்தான்.

''இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடலினில் கலந்த அமுதோடு நஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே.''

என்று பாடினான்.

''அடேய். அடேய். அற்புதமான தமிழ். மிகச் சிறப்பாக பாடுகிறாய். தமிழனா நீ.'' யாரோ ஒருவர் உரத்து கேட்டார். இராஜேந்திர சோழர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்பெயர் மாணிக்கவாசகம். அவன் அவரை நோக்கி பேசினான்.

''நான் பாண்டியநாட்டை சேர்ந்தவன். பாண்டிய நாடும் சோழநாடும் இருக்கின்ற எல்லையில் இருப்பவன். கடந்த பதி மூன்று வருடங்களாக நான் பாண்டிய தேசத்து கடற் படை யில் வணிக கடற்படையில் மாலுமியாக இருக்கிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்னால் இந்தச் சீனப் படகால் என் படகு தாக்கப்பட்டு என்னை கைதியாக எடுத்துக் கொண்டு போனார் கள். ஸ்ரீ விஜயத்து வீரர்களை கொன்று போட்டார்கள். நான் திராவிடன் என்பதால் என்னை உயிரோடு விட்டார்கள். படகு இழுக்க என்னை அடிமையாக வைத்துக் கொண்டார்கள். பிறகு அதிலிருந்து விடுவித்து பாய்மரம் மாற்றவும், மேல்தளம் சுத்தம் செய்யவும், சுக்கான் போடவும், நங்கூரம் இறக்கவும் எனக்கு சொல்லிக் கொடுத்து என்னை நல்ல மாலுமியாக ஆக்கினார்கள். நாங்கள் வங்கதேசம் நோக்கி போய்க் கொண் டிருக்கிறோம். அப்பொழுதுதான் பிடித்து விட்டீர்கள். நான் சீனக் கடற் கொள்ளையரின் கைதி. அவர்களின் அடிமை. இப் பொழுது உங்கள் அடிமை. உங்கள் அடிமையாக இருப்பது சந்தோஷம்.''

''நான் யார் என்று தெரியுமா?'' மண்டியிட்ட அவனை பார்த்து அவர் கேட்டார்.

''மாமன்னர் இராஜேந்திரர் என்று தெரியும். உங்களைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் தந்தையை நான் அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். அவர் தளர்ந்து நீங்கள் உரமாக நின்றிருந்த காட்சியையும் நான் தஞ்சையில் கண் டிருக்கிறேன். தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலுக்கு நீங்கள் வரும்பொழுது உங்களை சுற்றியுள்ள சேனாதிபதிகளையும் நான் பார்த்திருக்கிறேன். அரையன் ராஜராஜன், அருண்மொழி பட்டன், உத்தமசோழ மிலாடுடையார், இராஜராஜ பிரம்மராயர் என்று பலரையும் எனக்கு தெரியும். தெரியும் என்றால் பரிச் சயம் அல்ல. அவர்கள் இன்னார் என்று தெரியும். சாதாரண படைவீரனாக அவர்களை வியப்போடு நான் பார்த்திருக் கிறேன். உங்களை இங்கே சந்திப்பேன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. உங்களை சந்தித்தது மகிழ்ச்சி. என்னை

நீங்கள் அடிமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவன் அவரை குனிந்து வணங்கினான். அவர் அவனை எழுப்பினார். அவன் கைகளை கட்டவிழ்த்து விட்டார்கள்.

''ஏன் வங்கம் போகிறீர்கள்?''

''கயிறு வாங்குவதற்கு.''

''என்ன கயிறு.''

''நாவாய்க்கு கயிறு வேண்டும். கடற் காற்றால் கயிறுகள் நைந்து கொண்டே இருக்கும். நாவாய் கயிறுகள் எல்லா இடத்திலும் மாற்றிவிட வேண்டும். இல்லையெனில் புயல்காற்று வீசும்பொழுது கயிறு பிய்ந்து படகு கவிழும் நிலை ஏற்படும். மேலே பாருங்கள். பல இடங்களில் கயிறுகள் பிய்த்துக் கொண்டிருக்கின்றன. பாய்மரமும் சரியாக இல்லை. எனவே, இந்த நாவாயை செப்பனிட கயிறு வாங்க நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம். இந்த நாவாய்க்கு மட்டுமல்ல. இந்த நாவாய் அல்லாது கூடுதலாகவும் நாங்கள் கயிறு வாங்குவோம். அதை கொண்டுபோய் காம்போஜத்திலோ, கடாரத்திலோ, ஸ்ரீ விஜயத்திலோ விற்போம்.''

''இவர்களுடைய தேசம் எது?''

''இந்த நாவாய்க்கு தேசம் இல்லை, இவர்கள் சீனத்திலிருந்து தப்பி வந்த மாலுமிகள். சீன அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டவர்கள். படகுக்கு துடுப்பு போட வந்தவர்கள் திடீரென்று கலகம் செய்து, படகை கைப்பற்றிக் கொண்டு அவர்கள் இப்பொழுது கொள்ளையர்களாக மாறிவிட்டார்கள். இவர்கள் கொள்ளையர்களாக மாறி பத்து வருடங்களுக்கு மேல் ஆயிற்று. ஸ்ரீ விஜயத்தில் இவர்களால் நான் கைது செய்யப்பட்டேன். அது இரண்டு வருடமாயிற்று.''

''இவர்கள் கொள்ளை அடித்ததை எங்கு செலவு செய்வார்கள்.''

''எங்கு செலவு செய்ய முடியும். எந்த பூமி இவர்களை ஏற்றுக் கொள்ளும். இங்கு வாங்கி அங்கு விற்று, அங்கு வாங்கி இங்கு விற்று கரையில் இறங்கி கண்டமேனிக்கு செலவு செய்து பெண்டுகளை அனுபவித்து, குடித்து, கொஞ்ச காலம்

வாழ்ந்து விட்டு மறுபடியும் நாவாய்க்கு ஏறுவதுதான் இவர்களுடைய வேலை. நாடோடித்தனமான கும்பல். எந்த லட்சியமும் இல்லாத கும்பல். இவர்களுக்குள்ளேயே அடிக்கடி சண்டை வரும். இவர்களை சமாதானப்படுத்துவதற்கு பெரும் பாடாகப் போகும்.''

''மாணிக்கவாசகம், இப்பொழுது பாண்டிய தேசம் எப்படி இருக்கிறது தெரியுமா?''

''தெரியும். சோழ தேசத்தால் ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் வெளியூர் சென்றிருந்த போது உங்கள் சோழ தேசத்து பெரும்படையோடு பாண்டியதேசம் நோக்கி படையெடுத்து வந்தீர்கள். சேர தேசத்தை தாக்கிவிட்டு பிறகு பாண்டிய தேசத்தை கபளீகரம் செய்தீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் பாண்டியனும் இல்லை. சோழனும் இல்லை. நடுவாந்திரம். என்னுடைய ஊரில் நான் பெரியகோவில் விமானம் போலவே ஒன்று அமைக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். சிவனுக்கு கோவில் எழுப்பிக் கொண்டிருக்கிறேன். எனக்கு தரையில் வாழ பிடிக்காது. கடலுக்கு வந்து விடுவேன். இரண்டு மாதம் அல்லது மூன்று மாதம்தான் நான் தரையில் இருக்க முடியும். பிறகு கடல்தான் என்னுடைய வாழ்விடமாகப் போகும்.''

அவன் சொன்னபோது அவனோடு அதிகம் பேச வேண்டும் என்று இராஜேந்திரர் நினைத்துக் கொண்டார். அவன் உடம்பில் இரத்த காயங்கள் இருந்தன. அதற்கு கட்டு போடச் சொன்னார். யார், எவர் என்று மாலுமிகளை அடையாளம் காட்டச் சொன்னார். அவன் அடையாளம் காட்டினான்.

''சரி. இவர்கள் உனக்கு தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். சகல மரியாதையுடன் இவர்களை நீ ஜல அடக்கம் செய்து விடலாம்.'' என்று சொல்ல, அவன் ஒரு வாள் வாங்கிக் கொண்டான். அவர்கள் நெஞ்சை கீறினான். பெரிய பலகையில் வைத்தான். பலகையை அப்படியே நீரில் சாய்த்தான். பதினாறு சடலங்கள் நெஞ்சு வெட்டப்பட்டு, 'நமச்சிவாயம், நமச்சிவாயம்' என்று சொல்லப்பட்டு கடலில் இறக்கப்பட்டன. மீன்கள் அதிகம் எகிறிக் கொண்டு வந்தன. கடலில் அந்த சடலங்கள் விழுந்த சில நிமிடங்களிலேயே அது கபளீகரம்

செய்யப்பட்டிருக்கும் என்று புரிந்தது. காயப்பட்ட சிலரை கையை பிணைத்து கீழே வைத்தார்கள். அவன் அந்த நாவாயை அவருக்கு சுற்றிக் காட்டினான்.

''இதுதான் சுக்கான். இந்த சுக்கானுக்கு நேர் கீழே மிகப் பெரிய பலகை இருக்கிறது. அந்த பலகை வலதும், இடதும் திரும்பும். வலது திரும்பினால் நாவாய் வலது பக்கமும், பலகை இடது திரும்பினால் இடது பக்கமும் போகும். இது முன் பக்கம் இருப்பதுபோல பின்பக்கமும் இருக்கும். பின்பக்கத்தில் இருப்பதும் இந்த திருப்பத்திற்கு உதவி செய்யும்'' என்று சொல்லி, அந்த சக்கரத்தை சுழற்றி காட்டினான்.

''ஆறு முறை சக்கரம் சுழன்றால் ஒரு கை அகலம் பலகை நகரும், இருபது முறை சுழன்றால் மூன்று கை அகலம் பலகை நகரும். மூன்று கை அகலத்துக்கு மேல் பலகை நகர்த்தக் கூடாது. ஒரு மாதிரி நிறுத்திவிட வேண்டும். அதற்கு அப்பாலும் திருப்பினால் நாவாய் கவிழ்வதற்கு வாய்ப்பிருக்கிறது'' என்று சொன்னான். கீழே இறங்கினான்.

மூன்று தளபதிகளும், இராஜேந்திரரும் அவனை பின் தொடர்ந்தார்கள்.

''இது மூன்று தண்டு நாவாய். இது ஒரு தண்டு. இது நடு தண்டு. பிறகு இருப்பது மூன்றாம் தண்டு, இந்த மூன்றாம் தண்டில் உள்ள பாய்மரங்கள் மிக வேகமாக இயங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளை இப்படி திருப்பி வைத்து நடு தண்டையும் திருப்பி வைத்து, இந்த முதல் தண்டில் முழு வேகமாக காற்றை செலுத்தினால் நாவாய் வேக மாகப் போகும். இந்த நாவாயில் நடுவே இரண்டு அறைகள் இருக்கின்றன. ஒன்று தலைவனுக்கு உண்டானது. இவை களில் தொட்டில் போல கட்டில்கள் செய்திருப்பார்கள். உருண்டு கீழே விழாமல் இருப்பதற்கு இடதும், வலதும் மெத்தை கள் தைத்திருப்பார்கள். கொஞ்சம் குழிவான இடத்தில் படுத்து உறங்குவார்கள். தலைவனுடைய அறை கீழே முழுவதும் கம்பளம் விரிக்கப்பட்டு, இடையறாது எரியும் விளக்கு ஏற்றப் பட்டு, பொக்கிஷ அறைக்கு அருகே இருக்கும். இதுவே பொக்கிஷ அறை.''

''உள்ளே என்ன இருக்கும்?''

''எனக்கு தெரியாது.''

''இதனுடைய திறவுகோல் எங்கே இருக்கிறது?''

''திறவுகோல் அந்த தலைவனிடம்தான் இருக்கும்.''

''அவனை தூக்கி கடலில் போட்டு விட்டோமே.''

''அவன் இடுப்பில் வைத்திருக்கமாட்டான். இங்கேதான் எங்காவது சொருகி வைத்திருப்பான்.'' அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். படுக்கையை துழாவினான். பிறகு மேற்கூரையில் ஒரு இடத்தை தட்டினான். அந்த இடம் திறந்து கொண்டது. அங்கிருந்து திறவுகோல் கீழே விழுந்தது. திறவு கோலை இரகசிய அறையில் வைத்து திருப்பினான். கதவு கடினமாக இருந்தது. வேகமாக இழுத்து வீரர்கள் திறந்தார்கள். உள்ளே இருளாக இருந்தது. சுடர் விளக்கு ஒளியை எடுத்துக்கொண்டு இராஜேந்திரர் உள்ளே போனார். திகைத்தார்.

ஆள்உயர பானை முழுவதும் தங்க நாணயங்கள் அடுக் கப்பட்டிருந்தன. புத்தர் சிலைகள் இருந்தன. ஒரு கொற்றவை சிலையும், ஒரு இரும்பு தூணும் இருந்தன. பாத்திரங்கள் அதிகம் இருந்தன. வெவ்வேறு விதமான சிலைகள் இருந்தன. ஆயுதங் கள் இருந்தன. பெட்டி அம்பு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அது மிகப்பெரிய திறனுடையதாய் இருப்பதை அவர் திறந்து பார்த்து தெரிந்து கொண்டார். அதை அடித்தால் கிட்டத்தட்ட ஆறு கோல் தூரத்திற்கு போய் ஆளை தைக்கும் வலுவுடையது என்பதையும் புரிந்து கொண்டார். அதை மறுபடியும் அடுக்கி வைத்தார். பொக்கிஷ அறையை இழுத்து மூடினார். ஒரு கை நாணயம் மட்டும் எடுத்து வந்திருந்தார். அதை தன்னுடைய வீரர்களுக்கு கொடுத்தார். இழுத்து பூட்டினார். திறவுகோலை தன்னுடைய இடுப்பில் வைத்துக் கொண்டார். அவர்கள் கீழே இறங்கினார்கள்.

தளபதிகள் தூங்குகின்ற ஏணைகளை பார்த்தார்கள். சமையல் செய்கின்ற இடத்தை கவனித்தார்கள். சமையல் படகின் வெளியில் திறந்த வெளியில் செய்யப்பட்டிருந்தது. அவசியமானால் வெய்யிலிருந்து தப்பித்துக் கொள்ள கூடாரம்

போல் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. கூடாரத்தை இழுத்து சமையல் செய்யும் செய்யும் நேரத்தில் அதை காபந்தாக போட்டுக் கொள்வார்கள். பிறகு புகை வெளியே போக வேண் டும். உள்ளுக்குள்ளே சுற்றக்கூடாது என்பதற்காக திறந்து விட்டு விடுவார்கள். வெப்பமும் வெளியே போய்விடும். புகை யும் அகன்றுவிடும். அதனாலேயே திறந்து மூடக்கூடிய விஷய மாக சமையலறை இருந்தது. இன்னும் கீழே போனார்கள்.

அங்கே முப்பதுக்கும் மேலாக சங்கிலியால் பிணைக்கப் பட்டு துடுப்பு போடுபவர்கள் இருந்தது தெரிந்தது. பலபேரை அடித்து ரணப்படுத்தி இருந்தார்கள். அவர் வந்து நின்றார்.

‘‘இவர்கள் பேசும் மொழி தெரியுமா.’’

‘‘ஒவ்வொருவரும் ஒவ்வொரு மொழி பேசுபவர்கள். அடிப்படையாக சீன மொழியும் தெரியும். அதோ, அங்கிருப் பவன் வங்க மொழி பேசுகிறவன். அவனும் எனக்கு தெரியும்.’’

‘‘அப்படியா. வங்க தேசத்தவனா. அவன் எப்படி மாட்டி னான்.’’

‘‘எந்த இடத்தில் மாட்டினான் என்பது அவனுக்கே தெரிய வில்லை. எது கேட்டாலும் பேந்த பேந்த முழிக்கிறான். ஆனால் வங்கமொழி நன்றாகப் பேசுகிறான். வங்கத்திற்கு போகப் போகிறோம் என்று அவனுக்கு சொல்லி இருக்கிறேன். சந்தோஷமானான். அங்கு போனதும் விடுதலை தருகிறேன் என்று வாக்கு கொடுத்திருக்கிறேன். இனி என் வாக்கு செல்லு படி ஆகாது. அது உங்கள் விருப்பம்.’’

‘‘எனக்கு உதவி செய்யட்டும். அவனை விடுவிக்கிறேன்’’ என்று இராஜேந்திரர் சொல்ல, அதை அவன் மொழிபெயர்த்து அவனிடம் சொன்னான். இராஜேந்திரரை நோக்கி அந்த வங்க வீரன் கை கூப்பினான்.

மற்ற வீரர்களுக்கு இராஜேந்திரர் யார் என்று சீன மொழி யில் சொல்லப்பட்டது. அவர்கள் புரிந்து கொண்டார்கள். பாலி மொழியில் பேசப்பட்டது. அதையும் சிலபேர் அறிந்து கொண் டார் கள். அவரை நோக்கி கை கூப்பினார்கள். நெஞ்சில் கை வைத்து குனிந்து வணக்கம் சொன்னார்கள். அவர்கள் காலில்

இருந்த சங்கிலிகளை விடுவிக்கச் சொல்லி, மேல் தளத்திற்கு வரச் சொல்லி இராஜேந்திரர் கட்டளையிட்டார்.

''நாவாய் எங்கு போக வேண்டும்?'' என்று மாணிக்க வாசகன் கேட்டான்.

''இந்த நாவாயின் மாலுமி இப்போதைக்கு நீ. இந்த நாவாய் கோதாவரியின் முகத்துவாரத்துக்கு போக வேண்டும். கோதாவரியில் நுழைய முடியுமா என்று பார்க்க வேண்டும். கோதாவரியில் தட்டாது உள்ளுக்குள் நுழைந்தால் அங்கு முகத்துவாரத்தில் நங்கூரம் இட்டு நிற்க வேண்டும். நங்கூரம் இருக்கின்றனவா.''

''பல நங்கூரங்கள் இருக்கின்றன. விதம்விதமாக இருக் கின்றன.'' அவன் நங்கூரங்களை வரிசைபடுத்திக் காட்டி னான். பெரும் கருங்கற்கள் இல்லாது கொக்கி போல் இருக் கின்ற நங்கூரங்களும் அவருக்கு காண்பிக்கப்பட்டன. இருட்டியது. தலைவனுடைய அறைக்குள் நுழைந்து ஒரு தளபதியோடு கதவை சாத்திக் கொண்டார். அயற்சியாக இருந்தது. அங்கிருந்த கோதுமை பண்டத்தையும், உப்பிட்ட மாமிசத்தையும் கொஞ்சம் உண்டார். சிறிது மது குடித்தார். மெல்ல படுக்கையில். சாய்ந்தார். அந்த பாய்மர நாவாய் காற்றின் உதவியால் கோதாவரிக்கரை முகத்துவாரத்தை விடியல் நேரத்தில் அடைந்தது. நங்கூரம் இட்டு நின்றது. மணல் தட்டும் என்ற நினைப்பு இருப்பதால் உள்ளுக்குள் போக வேண்டாம் என்று அவன் தீர்மானித்தான். தோணி பின் தொடர்ந்தது. அவர்கள் கடற்கரையில் நங்கூரம் இட்டு நின்ற நாவாயிலிருந்து கீழே இறங்கினார்கள். அவனும் கீழே இறங் கினான். தோணியில் ஏறிக்கொண்டான். மற்றவர்கள் நாவாயில் இருந்தார்கள். பத்து சோழ வீரர்கள் அதற்கு பாதுகாப்பாக இருந் தார்கள். மற்றவரோடு இராஜேந்திர சோழர் தோணியில் ஏறி கோதாவரியின் உள்ளே நுழைந்தார். கோதாவரிக்கு அருகே நின்று அங்கிருந்து குதிரை ஏறி வேங்கி நோக்கி போனார். வழி நெடுக அவனோடு உரையாடினார். மாணிக்கவாசகம் தன்னுடைய நினைவிலிருந்து எல்லா விஷயங்களையும் யோசித்து அவரிடம் சொன்னான்.

"சீன தேசம் எப்படிப்பட்ட தேசம்?"

"மிக செழிப்பான தேசம். பருவ மழை சரியாக பெய்கின்ற தேசம். மலைகளும், ஆறுகளும், சிற்றோடைகளும் உள்ள தேசம். நீரை அவர்கள் மிகச் சிக்கனமாகவும், சாதுர்யமாகவும் பயன்படுத்துகிறார்கள்."

"சீன நாகரீகம் எப்படிப்பட்டது?"

"மிக உயர்வானது. பெண்களுக்கு நாம் கொடுக்கின்ற மரியாதை அவர்கள் கொடுக்கவில்லை. கொஞ்சம் போகப் பொருளாகத்தான் அவர்கள் வைத்திருக்கிறார்கள்."

"சீனர்கள் பௌத்த மதத்தினரா?"

"பல்வேறு மதத்தினர் இருக்கிறார்கள். பௌத்தம் சற்று பரவி வருகிறது. ஆனால் முழுமையாக இல்லை. சீனர்களுக்கென்று ஒரு கடவுளும், வழிபாடுகளும் இருக்கின்றன. பேய், பிசாசு போன்ற உருவங்களை பயங்கரமான முகங்களை அவர்கள் வழிபடுகிறார்கள். குறிப்பாக நம்முடையதுபோல இயற்கை சக்திகளை கடவுளாக வழிபடுகிறார்கள். மின்னல் என்ற கடவுள், மேகம் என்று ஒரு கடவுள், மழை என்று ஒரு கடவுள், நிலம் என்று ஒரு கடவுள், ஆறு என்று ஒரு பெண் கடவுள் என்று பல்வேறு விதங்களாக அவர்கள் வணங்குகிறார்கள். இயற்கைதான் அவர்களுக்கு முக்கியமாக இருக்கிறது. இவற்றையெல்லாம் படைத்த ஒரு சக்தி இருக்கிறது என்று வெட்டவெளியை அவர்கள் கும்பிடுகிறார்கள். நிறைய தூபங்கள் ஏற்றி வைக்கிறார்கள். நாம் விளக்கேற்றி வைப்பது போல அவர்களுக்கு தூபம் ஒரு முக்கியமான விஷயம். வாசனையான தூபங்களுக்கு அவர்கள் மிகவும் ஆவல் காட்டுவார்கள். ஸ்ரீவிஜயத்திலிருந்தும், இலங்கையிலிருந்தும், சேர தேசத்திலிருந்தும் வாசனைப் பொருள்கள் சீனத்திற்கு பயணப்படுகின்றன. எந்த நாவாய் வந்தாலும் வாசனை பொருட்களை பற்றித்தான் கேள்வி இருக்கும். அந்த விசாரிப்பு முடிந்த பிறகுதான் மற்ற பொருள் நோக்கி அவர்கள் திரும்புவார்கள்.

அவர்களும் மிகச்சிறப்பான வாசனை தைலங்களை தயாரிப்பார்கள்.

என்னிடம் ஒன்று இருக்கிறது.'' அவன் தன்னுடைய சட்டை உள்பகுதியிலிருந்து ஒரு பீங்கான் குப்பியை எடுத்து காட்டினான்.

''இது என்ன?''

''மண்ணை கெட்டி செய்து அதில் சுட்டு எடுத்தது. மேலே வழவழப்பாக இருக்கிறது பார்த்தீர்களா. இது அந்த ஊர்மண். அந்த ஊர் வர்ணம்.'' என்று சொல்லி கொடுத்தான். அவர் முகர்ந்து பார்த்தார். நெடி மூக்கை துளைத்தது.

''நல்லது.'' என்று தன்னுடைய மெய்க்காப்பாளனிடம் நீட்டினார்.

''இது பரவை நாச்சியாருக்கு வேண்டும். ஞாபகப்படுத்து'' என்று எச்சரித்தார். அன்று பிற்பகல் மரத்தடியில் அவனோடு உணவு உண்டார்.

''சீனப் பெண்களை போகமாகத் தான் நடத்துகிறார்கள் என்கிறாயே. போகத்தில் சிறந்தவர்களா.''

''அப்படி சொல்ல முடியாது. மிக சிறிய உருவம் உடையவர்கள். ஆண் என்றால் அவனுக்கு அடங்கி நடக்க வேண்டும். அவனுக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர்கள். போகத்தைவிட அவர்கள் செய்யும் சிஷ்ருஷைகள் மிகவும் சந்தோஷமாக இருக்கும். உதாரணமாக, கால் பிடித்து விடுவது, முதுகுக்கு எண்ணெய் தேய்த்து சொறிந்து விடுவது, அழுத்தி விடுவது, கண்களுக்கு எண்ணெய் ஊற்றி வருடி விடுவது என்றெல்லாம் செய்வார்கள். அப்படியே சுற்றி திரும்பலாம். மூன்று முறை புணர்ந்தது போல ஒரு சுகத்தை அந்த பெண்கள் புணராமலேயே தருவார்கள்.''

''அட, கேட்கவே கிறுகிறுப்பாக இருக்கிறதே. இதனால் உடல் உபாதைகள் தீருமல்லவா.''

''நிச்சயம் தீரும். இதற்காகவே பெண்கள் பயிற்சிவிக்கப் படுகிறார்கள்.''

''அங்கு என்ன வகையான உணவு. அரிசி சோறா.''

''அய்யோ. அந்த கண்றாவியை கேட்காதீர்கள்.'' அவன் தலையில் அடித்துக் கொண்டான். வீரர்களும், இராஜேந்திரரும் அவனை ஆவலோடு பார்த்தார்கள்.

''அவர்களுக்கு புரதம் மிக முக்கியமான உணவு. அரிசி சோறு துணைக்காக இருக்கும். அரிசி சோற்றில் புரதம் அதிகம் இல்லை. எனவே, எதில் புரத சத்து அதிகம் இருக்கிறதோ அதை உண்பார்கள். புரத சத்து எதில் அதிகம் இருக்கிறது சொல்லுங் கள்.''

''ஆடா.'' இராஜேந்திரர் கேட்டார்.

''மாடு'' இன்னொருவன் சொன்னான்.

''இல்லை. கோழியில் புரதசத்து அதிகம் இருக்கிறது.'' வேறொருவன் குறுக்கிட்டான்.

''அனைத்தும் தவறு. பாம்பில்தான் புரதசத்து அதிகம் இருக்கிறது.''

''என்ன?'' அனைவரும் முகம் சுளித்தார்கள்.

''தலையை வெட்டி விட்டு, தோலை உரித்து உள்ளிருக் கும் சதையை அப்படியே சுருட்டி அரை வேக்காடாக ஆவி யில் வேகவைத்து, மேலே மிளகையும், உப்பையும் தூவி, அதை நான்காக நறுக்கி குச்சியில் குத்தி எடுத்து உண்பார்கள்.''

''கடவுளே.'' இராஜேந்திர சோழர் சிலிர்த்துக் கொண்டார். மற்ற வீரர்கள் வாய் பொத்திக் கொண்டார்கள்.

''இது மட்டுமல்ல, சொன்னால் இங்கு பலபேர் வாயில் அடித்து விடுவீர்கள்.''

''என்ன உணவு?''

''வண்டுகள், நத்தைகள், கீறிகள், முயல்கள்.''

''போதும் போதும் நிறுத்து.''

''ஏன் அவர்கள் விரும்பி உண்பது ஓணான்கூட. இரா ஜேந்திர சோழர் உதறி எழுந்து நின்றார். மறுபடியும் வந்து உட் கார்ந்தார்.

''என்னடா. அற்புதமான நாகரீகம் என்கிறாய். உணவில் நாகரீகமே இல்லையே. விலங்கு போல உண்கிறார்களே. செழுமையான தேசம் என்று சொல்கிறீர்கள். அரிசி இருக்கிறது என்கிறீர்கள். பயிர் பச்சை இருக்கிறது என்கிறீர்கள்.''

''ஆமாம். பயிர் பச்சைகளில் புரதம் அதிகம் இல்லை. புரதம் அதிகம் இருக்கின்ற உணவு பாம்பு.'' அவனிடம் பேசப் பேச, மாணிக்கவாசகம் அங்குள்ள அத்தனை பேரிடமும் ஒட்டிக் கொண்டான்.

''சீனர்கள் நியாய தர்மத்திற்கு கட்டுப்பட்டவர்களா?''

''ஆமாம், தாக்க வேண்டாம் என்று சொன்னால் தாக்க மாட்டார்கள். சொல்லுக்கு கட்டுப்படுவார்கள். நாம் சூழ்ச்சி செய்தாலோ மிகக் கடுமையாக தண்டிப்பார்கள். அவர்களுடைய தண்டனை முறைகளும் மிக மோசமானதாக இருக்கும்.''

''எப்படி?''

''இரண்டு கையையும், காலையும் பிணைத்து குதிரை யில் இணைத்து, குதிரையை சவுக்கால் அடித்து ஓட வைப்பார் கள். உடம்பு இரண்டாக பிய்ந்து போகும்.''

''கடவுளே.'' இராஜேந்திரர் மறுபடியும் முகம் சுளித்துக் கொண்டார்.

''அமைதியாக மரணமடைய வேண்டுமென்றால் விரல் நீள ஊசி எடுத்து அதில் விஷம் தோய்த்து காதுகளில் சொருகி விடுவார்கள். விஷம் மெல்ல மெல்ல இறங்கி பிறகு மூச்சு திணறி மரணம் ஏற்படும். இறப்பதே இறந்தவருக்கு தெரியாது போகும். விஷ ஊசி குத்தப் போகிறோம். வலி இல்லாத மரணம் உனக்கு ஏற்படும். எனவே மரணத்திற்கு தயாராக இரு. என்று சொல்லி அவனை குளிக்க வைத்து, நல்ல உணவு கொடுத்து பிறகு மரணமடையச் செய்வார்கள்.''

''வேறு வகையான சித்ரவதைகள் உண்டா.''

''மரக்கூண்டில் அடைத்து பிறகு அவனை கடலில் தூக்கி போட்டு விடுவார்கள். அவனுக்கு தலையெழுத்து இருந்தால், விதி இருந்தால் அந்த மரக்கூண்டு எங்கேனும் கரை ஒதுங்கி பிழைத்து கொள்ளட்டும் என்று சொல்லி, அந்த கூண்டில் உணவு வைத்திருப்பார்கள். நீரும் வைத்திருப்பார்கள். அவன் மீன் பிடித்து உண்பதற்கு தூண்டிலும் வைத்திருப்பார்கள். அவன் உயிரோடு இருப்பது கடவுளுடைய கையில் இருக் கிறது என்று சொல்லி கடலில் தூக்கி போட்டு விடுவார்கள்.

இவ்வளவு உயரம்தான் கூண்டு இருக்கும்.'' இடுப்பு உயரத்தை காட்டினான்.

''நிற்க முடியாதா.''

''சுருண்டு உட்கார்ந்து கொள்ளலாம். அவ்வளவுதான். சம்மணமிட்டு உட்கார்ந்து கொள்ளலாம். அதிலேயே தண்ணீர் குடுவை, உணவு பாத்திரம் போன்றவைகள் இருக்கும். கூண்டு திறக்க முடியாதபடி மிக உறுதியான மரத்தால் செய்யப்பட்டிருக்கும். சில சமயம் கை, கால்களை கூண்டினோடு பிணைத்தும் அவர்கள் அனுப்புவது உண்டு.''

''கடவுளே. என்ன நாகரீகம் இது. இவ்வளவு குரூரமாக இருக்கிறார்களே. இதற்கு வெட்டி சாய்த்து விட்டு போகலாமே.''

''அவர்களுக்கு வெட்டி போடுவதை விட இதுதான் நல்ல தண்டனை என்று சொல்வார்கள். துரோகிகளுக்கு இந்த மாதிரியான தண்டனைகள் வழங்குவது அவர்கள் வழக்கம். அவன் மரண பரியந்தம் முதல் துரோகத்தை நினைத்து நினைத்து சாக வேண்டும் என்பதே இந்த ஏற்பாடு.''

''ஹா. இந்த விளக்கம் சரியாகத்தான் இருக்கிறது. இராஜேந்திர சோழர் பெருமூச்சு விட்டார்.

''அங்கிருந்து என்ன வாங்கி வருவீர்கள்.''

''பட்டு. மிக உயர்ந்த ரக பட்டு. சுருள் சுருளாக ஆள் உயரத்திற்கு தடிமனாக சுருட்டப்பட்டு இருபது கோல், முப்பது கோல் நீளத்திற்கு மெல்லிய பட்டுகள் கிடைக்கும். பட்டு பூச்சியின் கூட்டிலிருந்து அந்த நூலை எடுத்து கோர்த்து பிறகு மெல்லிய தறியில் நெய்து கொண்டு வருகிறார்கள். அநேகமாக பெண்கள்தான் இந்த வேலையை செய்கிறார்கள்.

ஓட்டையிட்டு அதிலும் நூல் பருத்தியிலிருந்து அடுத்து அந்த நூலிலும் துணி நெய்கிறார்கள். பித்தளையில், வெண்கலத்தில் உருக்கி செய்த பாண்டங்கள் அதிகம் இருக்கும். மர வேலைகளில் மிகவும் தேர்ந்தவர்கள். விதம் விதமான ஆயுதங்கள் இருக்கும். அவர்கள் கத்தி செய்தால் அந்த கத்தி காலா காலத்துக்கும் உழைக்கும். ஆயுதங்கள் வாங்குவதற்கே

ஸ்ரீவிஜயத்திலிருந்தும், காம்போஜம், கடாரத்திலிருந்தும் நாவாய்கள் சீனத்திற்கு போகும்.''

''சீனர்களுக்கு என்ன தேவைப்படும்?''

''நம்முடைய கிராம்பு, ஏலம், தேக்கங்கட்டை, சந்தனக் கட்டை, மயிற்பீலி, மூலிகைகள், விதைகள் என்று பலதும் தேவைப்படுகிறது. அவைகளை வைத்துக்கொண்டு அவர்கள் அற்புதமான மருந்துகள் தயாரிக்கிறார்கள். நம்மை விட தாவரத்தை பற்றி அவர்களுக்கு ஞானம் அதிகம் இருக்கிறது.

அரசங்கன்றுகள், ஆலங்கன்றுகள் எல்லாம் மிக நல்ல விலைக்கு போகும்.''

''நல்ல விலை என்றால்.''

''இடுப்பு உயர அரசங்கன்று நூறு பொன்.''

''என்னது. காட்டில் அங்கங்கே கிடைக்கின்ற அரசங் குச்சிக்கு நூறு பொன்னா.''

''ஆமாம் ஆலம் விழுதாக இருந்தால் முன்னூறு, நானூறு பொன் கொடுப்பார்கள்.'' அவன் விதம் விதமாக விளக்கினான். எப்பொழுதும் அவனைச் சுற்றி கூட்டம் இருந்தது. இராஜேந்திரர் அவனை தன் அருகே படுக்க வைத்துக் கொண்டார்.

மூன்று நாள் பிரயாணத்தில் கோதாவரி கரை ஓரமாக வேங்கியை அடைந்தார்கள். வேங்கி குதூகலமாயிற்று. அடிக்கடி எக்காளங்கள் ஊதப்பட்டன. வேங்கியினுடைய கீழை சாளுக்கிய பெண்கள் சபையில் வந்து புதிதாக நடனம் செய் திருக்கிறோம் என்று சொல்லி, நாற்பது பேர் வரிசையாக நின்று பிறகு விதம் விதமாக வந்து அற்புதமாக நடனம் ஆடினார் கள். இராஜேந்திரசோழர் அவர்களுக்கு பொன் கழஞ்சுகள் பரிசளித்தார்.

குகன் இராமரை காட்டிற்கு கொண்டு போய் விட்ட படலம். மூன்று மணி நேரம் போடப் போகிறோம் என்று சொன் னார்கள். இரவு நாடகம் அற்புதமாக இருந்தது. விளக்கொளி யில் மரக்கலம் போலவும், பெரிய தோணி போலவும் அவர்கள் கட்டையில் செய்து அதில் துடுப்பு போடுவது போல நடித்து அதில் தள்ளாடுவது போல் நடித்து, இராமரை கைபிடித்து

அழைத்துக்கொண்டு மறுகரைக்கு போய் அந்த கரையில் அவரை இறக்கி. அவர் தூங்கும்போது காவல் காத்த குக னுடைய அன்பை, இராமர் குகனை தழுவிக் கொண்டு 'உன்னோடு ஐவரானோம்' என்று சொன்ன விஷயத்தை நடித்து காட்டினார்கள். இராமர் பிரியும் பொழுது குகன் விக்கி விக்கி அழுவது பார்த்து வேதனைப்பட்டார்கள். பரதாழ்வா ருக்கு துணையாக இருக்க வேண்டுமென்று இராமர் சொல்ல, அந்த கட்டளையை நிறைவேற்ற கீழே விழுந்து வணங்கி ஏற்றுக்கொண்ட குகனை பார்த்து கை கூப்பினார்கள்.

கீழைசாளுக்கியத்து பெண்கள் இராஜேந்திர சோழரை சந்தோஷப்படுத்துவது என்ற கங்கணத்தோடு நாட்டிய நாட கங்கள் பலதும் அரங்கேற்றினார்கள்.

பதினைந்து நாள் நகர்ந்தன. ஜெயங்கொண்டத்திலிருந்து பதினாறு யானைகளிலும், நூற்றுக் கணக்கான மாட்டு வண்டி களிலும் இராஜேந்திர சோழருடைய மனைவியர் அத்தனை பேரும் வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் ஊரை அலங்கரித்தார்கள். கோட்டையை சுத்தப்படுத்தினார் கள். கொடிகளாலும், மலர்களாலும் வாயிலை தினசரி அலங் கரித்தார்கள். தெருவெங்கும் கோலமிட்டார்கள். அவர்களை மகிழ்விக்க இன்னும் நல்ல நாட்டிய நாடகங்கள் செய்ய வேண் டும் என்று கீழை சாளுக்கிய தேவரடியார்களுக்கு உத்தரவிடப் பட்டிருந்தது.

தங்க வைக்கும் இடம் எது. யாரெல்லாம் வருகிறார்கள். எத்தனை பேர் வருகிறார்கள். யாருக்கெல்லாம் எங்கு இடம் என்று சொல்ல, அறுபது பேர் கொண்ட அந்தபுரத்து பெண் கள் இருக்கின்ற இடமாக ஒரு பெரிய மாளிகை தேர்ந்தெடுக் கப்பட்டு, அங்கு சுத்தம் செய்யப்பட்டு, அங்கு மரவேலை களும், சுண்ணம் அடித்தலும் நடைபெற்றது. அரசணைகள் அமைக்கப்பட்டன. அரசரோடு பேசுகின்ற தனியான இடமும் அமைக்கப்பட்டது. அது காற்றோட்டமாகவும், வேறு யாரும் உள்ளே புக முடியாததாகவும், சௌகரியமாக இருந்தது.

இராஜேந்திரசோழர் சோழப்படையின் வேகத்தை பார்த்து சந்தோஷமானார். அவருக்கு தொடர்ந்து அரையன் ராஜராஜ னோடு போகமுடியவில்லையே என்ற ஏக்கம் கொஞ்சம்

குறைந்தது. புதிய ஆடைகளுக்காகவும், கூடுதலான உணவு களுக்காகவும் பரவை பரபரத்தாள். கீழை சாளுக்கியத்தின் எல்லா பகுதிகளுக்கும் ஆட்கள் போய் வந்தார்கள். நல்ல ஆடைகள் வாங்கி வந்தார்கள். அந்த புடவைகளை பலவிதமாக மடித்து இடுப்பில் உடனடியாக உடுத்திக் கொள்ளும்படியாக இவருக்கு இந்த அளவு, அவருக்கு இந்த அளவு என்று பரவை கட்டளை இட்டு தைக்க வைத்தாள். நகைகள் செய்யச் சொன்னாள். நகைகள் காசு கொடுத்து வாங்கினாள்.

அந்தபுரத்து பெண்களின் வருகைக்காக ஆவலோடு வேங்கி காத்துக் கொண்டிருந்தது.

மஞ்சள் நிற புலிக்கொடிகள் நூறோடு குதிரைப்படை உள்ளே நுழைந்தது. பிறகு விலகி மாட்டு வண்டிகள் உள்ளே போக அனுமதித்தது. மாட்டு வண்டிகள் முன்னே போய் அந்தப் புரத்தின் பின்புறம் நகர்ந்தன. அவைகளில் பொற்காசு மூட்டை களும், துணி மூட்டைகளும், உணவுப் பொருட்களும் இருந் தன. வழி நெடுக மக்கள் கொடுத்த பரிசு பொருட்களை இரா ஜேந்திர சோழரின் அந்தபுரத்து அரசிகள் வாங்கி அவருக்காக கொண்டு வந்திருந்தார்கள்.

பிறகு யானைகள் வந்தன. யானைகள் மேலுள்ள அரசி கள் ஜனங்களை பார்த்து ஆவலாக கையசைத்தார்கள். பொற் காசுகளை வீசினார்கள். பொருள்களை தூக்கி எறிந்தார்கள். குண்டாய் கொழு கொழுவென இருந்த ஒரு சிறுவனை நோக்கி பட்டமகிஷி கை நீட்டினாள். அவனை மேலே அனுப்பு என்றாள். அவன் சற்று மிரட்சியோடு மேலே வந்தான். அவனை நெஞ்சோடு இறுக்கி முத்தமாரி பொழிந்தாள். 'உன் பெயர் என்ன' என்று கேட்டாள். அவன் தெலுங்கில் ஏதோ பதில் சொன்னான். நாராயணன் என்பது போல சத்தம் இருந்தது.

'ஆவரா, வைஷ்ணவ தேசமல்லவா. உன் பெயர் அப்படித் தான் இருக்கும். வாழ்க நாராயணன்.' என்று அவன் தலையில் கை வைத்தாள். அவன் இடுப்பில் ஐந்து தங்க நாணயம் வைத்து துணியில் சுற்றி அழுத்தி சொருகினாள். கீழே இறக்கினாள். தாயும், தந்தையும் கை கூப்பினார்கள். யானை நகர்ந்தது. கோட்டை தாண்டியது. அந்தப்புரத்திற்கு எதிரே வந்தது. அந்தப்

புரத்தில் வந்து இறங்குகின்ற வேளையில் குதிரையில் ஏறி, பிறகு கீழே இறங்கி, படிகளில் ஏறி அரசிகளுக்காக காத்திருந் தார்கள். யானைகள் மெல்ல அமர்ந்தன. ஏணி போடப்பட்டது. ஏணியில் காலூன்றி, வீரர்களின் கை பிடித்து அரசிகள் கீழ் இறங்கினார்கள். குழந்தைகள் குதித்தார்கள். கல்யாணப் பெண் ணான இராஜேந்திர சோழரின் மகளும் கீழ் இறங்கினாள். தந்தையை நோக்கி ஓடினாள். அவர் கைகளை விரிக்க ஓடிப் போய் தழுவிக் கொண்டாள்.

''அடேயப்பா. நல்ல திடமாக இருக்கிறாளே. பருவவயது வந்து மிகச் செழிப்பாக இருக்கிறாளே.'' இராஜேந்திர சோழர் அவள் தலையை தடவினார். நெற்றியில் முத்தமிட்டார். கன்னத்தை ஏந்திக்கொண்டு அவளை கண்குளிர பார்த்தார். தந்தையும், மகளும் பாசத்தில் போட்டி போட்டுக் கொண்டு கண்களின் வழியே அன்பை பெருக்கினார்கள். இராஜேந்திர சோழரின் மனைவியர் இந்த காட்சியை கண்கொட்டாது பார்த் தார்கள்.

துக்கமும், சந்தோஷமுமான ஒரு சூழ்நிலை அங்கு பரவியது. சந்தித்த சந்தோஷமும், இத்தனை நாள் பிரிந்தேனே உம்மைப் போய் என்கிற துக்கமும் ஒருசேர எழுந்தது. அது ஒரு வினோதமான உணர்வுக் கலவை. வாழ்க்கையில் சில சமயமே சில பேருக்கே நேரும்.

அத்தனை பெண்டிரும் உள்ளே போனார்கள். நடு கூடத் திற்கு போய் நீர் குடித்தார்கள். மோர் குடித்தார்கள். பழச்சாரும் தரப்பட்டது. பிறகு முகம் கழுவி, பொட்டிட்டு தேவார, திரு வாசகங்களை பாடினார்கள். மாளிகையை சுற்றி வந்து, உள் ளுக்குள் எந்தெந்த பொருள்கள் எங்கெங்கு இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். மாட்டு வண்டிகளிலும், யானைகளி லும் வந்த பெட்டிகள் இறக்கி வைக்கப்பட்டன. சிரித்ததும், பாடியதும் பசியை கிளறியது. உணவு தட்டுகள் கொண்டு வரப் பட்டது. உணவு பரிமாறப்பட்டது. மறுபடியும் சிரித்து, பேசிய படி உண்டார்கள். இராஜேந்திரசோழரை நிறைய விசாரித் தார்கள். போர் பற்றி விசாரித்தார்கள்.

இராஜராஜ பிரம்மராயரும், மிலாடுடையாரும், சோழ கங்கரும் இறந்துபோனது பற்றி கண்ணில் நீர் துளிர்க்க கேள்வி கேட்டார்கள். இராஜேந்திரர் விவரிக்க தலைகுனிந்து அமர்ந் திருந்தார்கள். நெஞ்சில் கை வைத்து அவர்கள் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு வணக்கம் சொன்னார்கள்.

மனுக்குலகேசரி பற்றி பேச்சு வந்தது. எழுந்து வந்து இராஜேந்திரருக்கு அருகே உட்கார்ந்து கொண்டார்கள்.

''ஒரு துக்கம் இருந்தது உண்மை. இப்போது இல்லை. அவன் வீர மரணம் அடைந்துவிட்டான். அவனுக்காக பல இடங்களில் நான் கற்றளிகள் எழுப்பப் போகிறேன். இங்கு யாரும் அழ வேண்டாம். மனுக்குல கேசரியின் தாய் வரவில்லை. அல்லவா. அவளால் வரமுடியாது. பரவாயில்லை. ஊருக்கு திரும்பும்போது சமாதானம் செய்து கொள்ளலாம். ஒற்றை மகனை இழந்து தவிக்கின்ற அவளுடைய வேதனை மிகப் பெரியது. ஆனாலும் இந்த துக்கம் நடக்காமல் இருந்து இருக் கலாம்.'' எல்லோரும் இராஜேந்திர சோழரை நெருங்கி உட்கார்ந்து கொள்ள, இராஜேந்திர சோழர் உச்சி மண்டபத்தை பார்த்தார். மெல்ல முக்கோக்கிழானடி கனைத்து சற்று தொலை வில் உள்ள அம்மங்காதேவியை உற்றுப் பார்த்தார். மிகச் சிறிய தாக தலையசைத்தாள். அது வெளியே போ என்பதற்கு அர்த்த மாக இருந்தது.

இந்த நேரத்தில் மகனை இழந்து தவிக்கின்ற இராஜேந் திரரை தழுவிக்கொண்டும், முத்தமிட்டும் ஆறுதல் சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது. வளர்ந்த பெண் அருகே இருக்க இதை எப்படி செய்ய முடியும். எனவே, அவள் உற்று அம்மங்காதேவியை பார்த்தாள். அம்மங்கா புரிந்து கொண் டாள். நிலம்பட குனிந்து வணங்கினாள். மெல்ல பின்னடைந் தாள். அழகாக ஒரு பட்டாம்பூச்சியை போல வெளியேறி னாள்.

இராஜேந்திரசோழர் இறந்து போன மனுக்குலகேசரியின் நினைவாகவே இருந்தார். முக்கோக்கிழானடி மெல்ல அருகே வந்து தாவி அவர் புஜங்களை இறுக்க அணைத்துக் கொண் டாள். கழுத்தில் முகம் புதைத்தாள். எழுந்து கன்னங்களில்

முத்தமிட்டாள். அவள் உடம்பு முழுவதும் அவர் மீது படர்ந்தது. இராஜேந்திரர் சடக்கென்று எழுந்தார். அம்மங்கா எங்கே என்று பார்த்தார். வாசற் கதவு சார்த்தி இருப்பதை பார்த்து தெளிந்தார். மெல்ல முக்கோக்கிழானடியை அணைத்துக் கொண்டார். மற்ற அரசிகளும் அருகே வந்தார்கள்.

துக்கத்தை சந்தோஷத்தால் தீர்ப்பது என்பது ஒரு அழகான வழி. கூடல் என்பது சந்தோஷமாயின் துக்கம் என்பதை துடைக்க அது அற்புதமான துணி. காயம்பட்ட இடத்தை மருந்து பதித்த துணியால் துடைப்பது போல அந்த அரசிகள் இராஜேந்திரருடைய மனக் காயத்தை தழுவியும், முத்தமிட்டும் மாற்றினார்கள்.

அம்மங்காதேவி மாளிகைக்கு வெளிப்புறம் உள்ள தாழ் வாரத்தில் நின்றிருந்தாள். அந்த கைப்படி சுவருக்கு ஒரு கோல் கீழே பச்சை புல்வெளி இருந்தது. பத்து படிகட்டுகள் இறங்கினால்தான் தெருவை சென்றடைய முடியும். தெருவுக்கும், மாளிகைக்கும் இடையே உள்ள இடத்தில் பச்சை புல்வெளிகளாலும், செடி, கொடிகளாலும் அழகுபடுத்தியிருந்தார்கள்.

என்ன பூ இது என்று தெருவை பார்க்க தெருவின் எதிர் பக்கம் சிலபேர் அவளையே பார்த்து கொண்டிருந்தார்கள். காட்டுவாசிகள் போல இருந்தார்கள். வேடுவர் போலவும் இருந்தார்கள். எல்லா பெண்களும் கையில் கோல் வைத்திருந்தார்கள். ஆண்கள் தோளில் சின்ன தம்பூரா வைத்திருந்தார்கள். பெரிய கூட்டமாய் இருந்தார்கள்.

விசித்திரமாக இருக்கிறார்களே. யார் இவர்கள், மெல்ல உள்ளே எட்டி பார்த்து ஒரு சேடியை அழைத்தாள். சேடி ஓடி வந்ததும் சுட்டிக்காட்டினாள்.

''யார் அது?''

''அவர்கள் காட்டில் வாழ்பவர்கள். குறி சொல்பவர்கள். சோதி செப்பேவாரு என்று அவர்களுக்கு பெயர். சோதிடம் சொல்பவர்கள் என்பதை தெலுங்கில் அப்படி அழைப்பார்கள்.

''ஏன் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்?''

''தெரியவில்லையே.'' அந்த சேடியும் ஆச்சரியப்பட்டாள். ஆனால் அவர்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

''நீ போய் விசாரித்து வாயேன்.'' சேடி கீழிறங்கினாள். சாலை தாண்டினாள். எதிர்பக்கம் உள்ள மாளிகைக்கு அருகே சுவரோரமாய் நின்றிருந்தவர்களை அணுகி என்ன என்று விசா ரித்தாள்.

''அந்த அம்மாளை இன்னும் அருகே வந்து உற்று பார்க்க வேண்டும். அவர்களுக்கு சோதிடம் சொல்ல வேண்டும்'' என்று அவர்கள் ஒரே குரலில் சொல்ல, திரும்பி வந்து சேடி சொன்னாள்.

''இல்லை. இது எனக்கு தெரியாது. நான் இதற்கு உத்தரவு தர முடியாது. முக்கோகிழானடிகளோ, வீரமாதேவியோ தான் பேசமுடியும். அவர்கள் இராஜேந்திர சோழரிடம் சொல்லி விட்டுத்தான் இவர்களை அருகே அனுப்புவார்கள். எனவே, எனக்கு வேண்டாம்'' என்று சொன்னாள்.

முக்கோகிழானடிகள், ''அவர்களை வரிசைப்படுத்து'' என்றாள். அவள் சரி என்று சொல்வதற்கு எத்தனித்தபோது சட்டென்று அந்த சேடியை அம்மங்கா நிறுத்தினாள். உள்ளே போனாள். ஐந்து கழஞ்சு பொன் கொண்டு வந்து அவளிடம் கொடுத்து, ''என் அன்பாகக் கொடு'' என்றாள்.

''இது அதிகம் அம்மா.''

''பரவாயில்லை கொடு. என்று சொல்ல, அந்த சேடி ஐந்து கழஞ்சுகளோடு எழுந்து வந்தாள். எதிர்பக்கம் போய் அவர்களுக்கு அந்த கழஞ்சு கொடுத்தாள். ஓ என்று குலவை போடும் சத்தம் கேட்டது. அவர்கள் சந்தோஷமாக கையெடுத்து கும்பிட்டார்கள். அம்மங்கா நெஞ்சில் கை வைத்து மீண்டும் வணக்கம் சொன்னாள். கும்பிட்டார்கள். விலகினாள். உள்ளே வந்தாள். கூடத்திற்கு போய் முற்றத்தில் அமர்ந்து கொண் டாள். அவளுக்கு அவர்களிடம் பேசவேண்டும். தன் எதிர்காலம் பற்றி அவர்களிடம் கேட்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

அவர்கள் பெண்கள் ஐந்து பேரும் ஆண்கள் ஏழு பேரு மாய் உள்ளே நுழைந்தார்கள். அதில் வயதான கிழவன் தம்பூர் மீட்டிக் கொண்டே உள்ளே நுழைந்தான். பெரிய மரக்கட்டையை எதிரே வைத்தான். குடிப்பதற்கு தண்ணீர் கேட்டான். அவர் களுக்கு குடிப்பதற்கு தண்ணீரும், கஞ்சியும், கறியமுதும் தரப்பட்டது. அவர்கள் அதை வாங்கிக்கொண்டு வெளிப்பக்க தாழ்வாரத்திற்கு போனார்கள்.. அந்த வெளிப்பக்க தாழ்வாரத் தில் சாப்பிட்டார்கள். முகம் துடைத்துக் கொண்டார்கள். நீர் குடித்தார்கள் மறுபடியும் உள்ளே நுழைந்தார்கள். தம்பூர் ஸ்ருதி கேட்டது. அவர்கள் துணி விரித்தார்கள். துணியில் வெற்றிலை, பாக்கும், பழங்களும், முற்றிய தேங்காய்களும் வைக்கப்பட்டன. புடவைகள் நாலைந்து வைக்கப்பட்டன. அவர்கள் சந்தோஷமானார்கள். இன்னொரு மரக்குடுவையில் பத்து கழஞ்சுகள் போட்டு, அவர்களில் பெரியவரிடம் கொடுத் தார்கள். அவன் வாங்கி தலையில் வைத்துக் கொண்டு ''மிகவும் சந்தோஷம். மிகவும் சந்தோஷம்'' என்று பிளிறினான்.

அவர்கள் எல்லோரும் சட்டென்று மௌனமானார்கள். மனம் குவித்தார்கள். எதிரே ஒரு மரக்கட்டையை மிகக் கவன மாக, மரியாதையாக அந்த கிழவன் வைத்தான். ''அம்மா, அம்மா.'' என்று சொன்னான். இடுப்பிலிருந்து திருநீறும், குங்கும மும் எடுத்து அந்த பலகையின் மீது தடவினான். பூக்கள் எடுத்து வந்து அந்த பலகையின் மீது வைத்தான்.

''அம்மா, இங்கு வந்து உட்கார். எங்களுக்கு பதில் சொல். அரசியார் உத்தரவு கேட்க வந்திருக்கிறார்கள். எங்களுக்கு என்ன தெரியும். எனக்கு எழுத தெரியாது. படிக்க தெரியாது. நான் தூங்குவேன். சாப்பிடுவேன். அவ்வளவு தான் தெரியும். எங்கள் குலத்திற்கே அதைத் தவிர வேறு எந்த ஞானமும் இல்லை. எங்களுக்கு உதவி செய்ய நீ இருக்கிறாய். உன் னுடைய பலத்தினாலேயே நாங்கள் வாழ்கிறோம். அம்மா, எங்களுக்கு உதவி செய். இந்த அரசியைப் பற்றி எங்களுக்குச் சொல்.'' அம்மங்காவை சுட்டி காட்டினான்.

அந்த இடத்தில் மறுபடியும் மௌனம் நிலவியது.

யாரோ ஒரு பெண் துள்ளி எழுந்து குதித்து இன்னொருவர் தோளை பற்றிக் கொண்டாள்.

''வந்துவிட்டாயா. வா. வா.'' அந்த பெண் சாதாரண மானாள். எதிரே பலகையில் யாரோ உட்காருவது போல தோன் றியது.

அவன் இடுப்பிலிருந்து மரக்கரண்டி போல ஒரு விஷயம் எடுத்து சொம்பிலுள்ள நீரை எடுத்து அந்த பலகையின் மீது உயரே காட்டினான். மெல்ல சரித்தான். அகப்பையிலிருந்து தண்ணீர் கீழே விழுந்தது. ஆனால் மரப்பலகையில் பட வில்லை. மறுபடியும் எடுத்தான். மீண்டும் மெல்ல சாய்த்தான். தண்ணீர் அகப்பையிலிருந்து கீழே விழுந்தது. ஆனால் மரப் பலகையில் படவில்லை. எந்த இடத்திலும் இல்லை. ஒரு சொட்டு தண்ணீர் கூட அந்த பலகையில் படாமல் எங்கோ மாயமாய் மறைந்தது. யாரோ குடித்து விட்டதுபோல இருந்தது.

அரசிகள் திகைத்தார்கள். ''அய்யோ'' என்று நெஞ்சில் கை வைத்தார்கள்.

மெல்ல ஒரு பெண் அந்த அரசியை பார்த்தாள்,

''அய்யோ என்று எப்பொழுதும் சொல்லாதீர்கள். அம்மா என்று சொல்லுங்கள். அம்மா என்று சொல்லுங்கள். அம்மா என்று சொல்லுங்கள்'' என்று அறிவுறுத்த, திருபுவனமாதேவி கைகூப்பி, இதோ என்று சொல்லி, ''அம்மா'' என்று சொன் னாள். அவர்கள் அவளை ஆசிர்வதித்தார்கள்.

★ ★ ★

அத்யாயம்

67

அம்மங்காதேவி வாய் பிளந்தாள். திருபுவனமாதேவிக்கு நெஞ்சடைப்பது போல் இருந்தது. முக்கோக்கிழானடிகள் இவர்களிடம் என்ன கேட்க வேண்டுமென்று வேகமாக யோசித்தாள். வீரமாதேவிக்கு இது நிஜமா, பொய்யா. ஏமாற்று கிறானா. எப்படி ஏமாற்றுகிறான் என்ற சிந்தனை ஓடிற்று.

தொலைவில் இருந்த வீரன் எழுந்து வந்தான். அவர்களுக்கு அருகில் நின்றான்.

''அம்மா, இது குறளி வேலை. இராஜேந்திரருடைய அனுமதி இல்லாமல் இந்த குறளி வேலையை செய்யாதீர் கள். இவர்களால் மனிதர்களை பேச முடியாமல் கட்ட முடியும். இவர்களை அப்புறப்படுத்துவதே நல்லது. இவர்கள் ஒன்றும் எதிர்காலத்தை கணித்து விடக்கூடியவர்கள் அல்ல. இவர் களை அனுப்பி விடுங்கள்'' என்று உரத்த குரலில் சொன்னான். முக்கோக் கிழானடிகள் அவனை கோபத்தோடு பார்த்தாள்.

''இவன் யார்? தேவையில்லாமல் உள்ளே நுழைவது. நீ போ. விலகி நில். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.'' என்று திடமாகச் சொன்னாள். அவன் தயங்கி நின்றான்.

''போங்கள்'' என்று சொல்லும்பொழுது அவன் அவர்களை நோக்கி நின்றான்.

''ஏதேனும் தவறு நடந்தால் அடித்து பல்லை பெயர்த்து விடுவேன்'' என்று அவர்களை நோக்கி கை காட்டினான்.

''மறுபடியும் இப்படி செய்யாதீர்கள் அய்யா.'' அந்த கிழவன் அவனை பார்த்து உரத்து சொன்னான்.

அந்த வீரன் அவரை முறைத்து பார்த்தான்.

''இந்த முறைப்பு இங்கு சொல்லாதே. உங்கள் வேலையை கவனித்து கொண்டு போங்கள். உத்தரவிட்டாகி விட்ட தல்லவா. ஏன் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று சொல்ல, மறுபடியும் அவன் கையை ஓங்கினான்.

அந்த கிழவன் கையில் இருக்கின்ற சிறு கோலை பட் டென்று கட்டையில் அடித்தான். கட்டை எகிறி அடங்கியது. அந்த வீரன் கை ஓங்கியபடியே இருந்தது. கையில் வலி ஏற்பட்டிருக்கக் கூடும். அவன் முகம் முறுக்கி முனகினான். இன்னும் ஒரு அடி அடிக்க, மறுபடியும் வலி அதிகமாயிற்று.

''இல்லை. விட்டுவிடு. என்னை விட்டு விடு.'' அவன் கதறினான். மெல்ல கோலை திருப்பி தரையில் நட அவ னுடைய கை கீழ் இறங்கியது.

மெல்ல விலகிப் போனான். திரும்பி அந்த கிழவன் முக்கோக் கிழனாடியை வணங்கினான்.

''என்னுடைய அதிகப்பிரசங்கித்தனத்திற்கு மன்னிக்கவும். எங்களால் மனிதர்களை கட்ட முடியும். எவ்வளவு முயற்சித் தாலும் ஒன்றரை நாழிகைக்கு மேல் எங்களுடைய வித்தை செல்லுபடியாகாது. இது மிகவும் எளிதான விஷயம். இதை நீங்கள் கூட கற்றுக் கொள்ளலாம். வலியில் முனகிய அந்த வீரன் கூட கற்றுக் கொள்ளலாம். இது ஒன்றும் கடினம் இல்லை. ஆனால் இதனால் சகலமும் செய்துவிட முடியாது.

எங்களுடைய வாழ்க்கை பற்றி நாங்கள் தெரிந்து கொள்ள முடியாது. தெரிந்து கொள்ளவும் கூடாது. மற்றவர் வாழ்க்கை பற்றி மற்றவருடைய மன விசாரங்கள் அடங்குவதற்கு நாங்கள் உதவி செய்கிறோம். இது எங்களுக்கு எங்கள் குல தெய்வம் இட்ட கட்டளை. எங்கள் குல தெய்வம் இதோ இந்த பலகை யில் வந்து அமர்ந்துவிட்டாள். அவளிடம் என்ன கேட்க வேண் டுமோ கேளுங்கள்.'' கைகூப்பி பணிவாக பதில் சொன்னான். அந்த பெண்களும் கைகூப்பி தலைகுனிந்து வணங்கினார்கள்.

''நாங்கள் இந்த பெண்ணை பற்றித்தான் குறி கேட்க வந்திருக்கிறோம். அம்மங்காதேவி இராஜேந்திர சோழரின் இரண்

டாவது மகள். இவளுக்கு மூத்தவள் இருக்கிறாள். அவளுக்கு திருமணம் ஆகிவிட்டது. திருச்சிராப்பள்ளியில் இருக்கிறாள். இங்கு நாங்கள் வந்தது இவள் திருமணம் பொருட்டு.

இராஜராஜ நரேந்திரன் என்கிற வேங்கி தேசத்து இளவரச னுக்கு இவளை மணமுடிக்கப் போகிறோம். இவள் வாழ்க்கை எப்படி இருக்கும். இவள் நலமாக இருப்பாளா. இவளுடைய புருஷன் நீண்ட நெடுங்காலம் வாழ்வானா. இவளுக்கு நல்ல குழந்தைகள் பிறக்குமா. இவள் தேசத்திற்கு ஆபத்தில்லாமல் இருக்குமா என்றெல்லாம் கேட்க வந்திருக்கிறோம். ஏனென் றால் ஒரு ஆட்டை பலி கொடுப்பது போலத்தான் அம்மங்காவை இங்கு அழைத்து வந்திருக்கிறோம்.

அவள் நன்றாக இருக்க வேண்டுமே என்ற கவலை பெற்றவளாகிய எனக்கும், மற்றவருக்கும் இருக்கிறது. எங்களுக் கெல்லாம் செல்லம் இவள். இவளைப் பற்றி தயவுசெய்து உங்கள் தாயிடம் கேட்டு குறளி சொல்லுங்கள்.''

சுருக்குப் பையிலிருந்து ஒரு கழஞ்சு எடுத்து அந்த பலகையின் அருகே வைத்தாள். அந்த கிழவன் அதை எடுத்துக் கொண்டான். தன்னுடைய வேட்டி மடிப்பில் சொருகிக் கொண்டான்.

அவர்களுக்குள் வேகமாக காட்டுவாசிகளின் தெலுங்கு மொழியில் பேசிக் கொண்டார்கள்.

''சொல்லு சொல்லு சொல்லு'' என்று அவன் கூச்சலிட் டான்.

சடக்கென்று அங்குள்ள ஒரு பெண்ணுக்கு ஆவேசம் வந்து எழுந்து அடங்கினாள். அரச குடும்பத்தினர் திகைப் போடும், திகிலோடும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

வீரர்கள் எழுந்து நின்று அருகே வர முற்பட, அந்த கிழவன் திரும்பி, ''அய்யாமார்களே, இது உங்களுக்கு சம்மந்த மில்லாத விஷயம். இதுபற்றி நீங்கள் காது கொடுத்தும் கேட்கக் கூடாது. இன்னும் சற்று விலகி இருங்கள்.'' என்று சொல்ல, கிழவன் தன்குரலை சட்டென்று மாற்றிக் கொண்டு அடிக்குர லில் பேசினான்.

''என் தாய் இங்கு வந்துவிட்டாள். சொல்கிறேன் என்று இந்த பெண் மூலம் சொல்லிவிட்டாள். இந்த தாயினுடைய வாக்காக உங்களுக்கு அவள் சொன்னதை நான் சொல்கிறேன்.

உங்களுடைய மகள் அம்மங்காதேவி இராஜேந்திர சோழருடைய புதல்வி தீர்க்க சுமங்கலியாக இருப்பாள். இவளுக்கு சுமங்கலி வயது அறுபது. ஆயுசு எண்பத்திரெண்டு. இவர் பல சிவாலயங்கள் கட்டுவார். மிகச் சிறந்த ராணியாக இருப்பார். இவருக்கு எந்தவித கெடுதலும் வராது. இவரைச் சுற்றி கடவுள் காப்பு போட்டு இருக்கிறான். இவரை மிக உயர்ந்த இடத்திலே கொண்டு போக இருக்கிறான்.

அம்மங்காதேவி தன் வாழ்க்கையினுடைய கஷ்ட நஷ்டங்களை பார்க்காது சோழதேசம் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இராஜராஜ நரேந்திரனுக்கு வாழ்க்கை பட வந்திருக்கிறார். இது மிகப் பெரிய தியாகம். இந்த தியாகத்திற்கு பலன் இல்லாமல் போகாது. அதற்கு பலன் உண்டு. அதன் பலன்'' அவன் சொல்லிவிட்டு நிறுத்தினான்.

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். கிழவன் கைகூப்பினான். வானம் பார்த்தான். மறுபடியும் அவளை பார்த்தான். சிரித்தான்.

''மிக உத்தமமான ஒரு மகன் இவருக்கு பிறப்பான். இவன் சோழ சாம்ராஜ்ஜியம் முழுவதும் ஆள்வான். தெற்கே குமரியிலிருந்து வடக்கே வெகுதூரம் வரை எனக்கு வாயில் பெயர் நுழையாத தேசங்களையெல்லாம் வளைத்துக் கொண்டு வந்து நிறுத்துவான். கிழக்கு கடற்கரை பக்கம் பெரிய கடற்படையோடு போய் இராஜேந்திரர் போக முடியாத இடங்களுக்கெல்லாம் இவன் போய் வெற்றிக் கொடி நாட்டி வருவான். சோழ தேசத்து செல்வத்தை பெருக்குவான். சோழ தேசத்தின் வளத்தை மிகவும் பெரிதாக்குவான். மிக உத்தமமான அரசன் என்று சரித்திரத்தில் பெயர் வாங்குவான்.

நான் பத்தடி தொலைவில் உட்கார்ந்து இருக்கிறேன். இதற்கு முன்பு அம்மங்காதேவியை நான் பார்த்ததில்லை. உங்கள் யாரையும் சந்தித்ததில்லை. காடு விட்டு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் வேங்கி வந்து அடைந்தோம். வேங்கி விடுதலை ஆகிவிட்டது என்று அறிந்தோம்.

கங்கே யாதவினுடைய ஆட்சியில் எங்கள் பெண்டு களுக்கு நிம்மதி இல்லை. பாதுகாப்பு இல்லை. எனவேதான் காடுகளில் பதுங்கி இருந்தோம். எங்கள் தாய் உத்தரவிட்டதை தொடர்ந்து இங்கு வந்திருக்கிறோம். எங்களுக்கு வறுமை அதிகம். எங்கள் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றன. இங்கு பிழைப்பு தேடியும், உணவு தேடியும் வந்திருக்கிறோம். நீங்கள் கொடுத்த காசில் நிறைய தானியங்கள் வாங்குவோம். மாட்டு வண்டிகள் வாங்குவோம். அதை எடுத்துக் கொண்டு ஊருக்குப் போவோம். அங்கு பட்டினி கிடக்கும் எங்கள் குழந் தைகளை பசியாற்றுவோம். இதற்காகவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். நீங்கள் கொடுத்த காசு எங்களுக்கு மிகவும் போதுமானதாக இருக்கிறது. உங்களுடைய அன்பு எங்களை நெகிழ்விக்கிறது. உங்கள் அனைவருக்கும் நல்லது நடக்கும்.

இவ்வளவு தொலைவில் உட்கார்ந்து கொண்டு உங்க ளுக்கு நம்பிக்கை ஏற்படும்படி நான் ஒன்று சொல்கிறேன்.

அம்மங்காதேவியின் தொப்புளுக்கு கீழே அடிவயிற்றி லிருந்து தொப்புளுக்கு நடுவே ஒரு அறுகோண முக்கோண ரேகை இருக்கும். வெள்ளை தழும்பாக, யாரோ கத்தியில் கீறியது போல மிகத் தெளிவாக ஒன்று இருக்கும். நீங்கள் சோதித்து பார்க்கலாம்.''

அவன் உட்கார்ந்து தலைகுனிந்து கொண்டான்.

அம்மங்காதேவியை எல்லோரும் ஆவலோடு பார்த்தார் கள். அவள் மெல்ல வீரமாதேவியின் மீது சாய்ந்து கொண்டாள்.

''ஆமாம் இருக்கிறது. அது அறுகோண முக்கோணமா தெரியாது. ஏதோ ஒரு தழும்பு போல இருக்கிறது.''

''வா பார்க்கலாம்.'' அவள் எழுந்தாள். இருவரும் அறைக் குள் போனார்கள்.

அம்மங்காதேவியை கட்டிலில் மல்லாத்தினாள். பாவா டையை தளர்த்தினாள். கீழே இறங்கினாள். தொப்புளுக்கு கீழே மிகத் தெளிவாக கோடு கிழித்தது போல, கத்தியால் கீறியது போல, கீறி தழும்பானது போல அறுகோண முக்கோணமும் நடுவில் புள்ளியும் இருந்தது. அவள் ஆச்சரியமானாள். அம்மங்கா தேவி எழுந்து உடுத்திக் கொண்டாள். இரண்டு பேரும்

வந்தார்கள். அரசபெண்டிர்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களை பார்த்து 'ஆமாம்' என்று தலை யாட்டினார்கள். கிழவனை நோக்கி இரண்டு பொன் கழஞ்சு வைத்தார்கள்.

''நீங்கள் சொல்வது உண்மை. அறுகோண முக்கோணம் இருக்கிறது. நாங்கள் பார்த்தோம். உங்கள் வாக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள் சொன்னதும் நன்றாக இருக்கிறது. ஆனால் நீங்கள் சொன்ன சொல் உறுதியாகும் என்று நம்பிக்கை வர வில்லை. உறுதியாகும்படி ஏதாவது சொல்ல முடியுமா. இவள் தழும்பு உங்களுக்கு எப்படியாவது தெரிந்திருக்கலாம். உங்கள் வாக்கு உறுதியாகும் என்று சொல்ல முடியுமா.''

''இன்னும் ஒரு நாழிகையில் மழை பெய்யும்.''

''என்ன?''

''இன்னும் ஒரு நாழிகையில் மழை பெய்யும், மழை பெய் தால் நான் சொன்னது உறுதி. நான் சொல்வது சத்தியம் என்று அர்த்தம்'' என்று அவர் உரத்த குரலில் சொன்னார்.

தொலைவில் இருந்த வீரர்கள் எட்டிப் பார்த்தார்கள்.

''இராஜேந்திர சோழரைப் பற்றி சொல்லுங்கள்.''

''அவரைப் பற்றி சொல்ல என்னம்மா இருக்கிறது. அவர் கடவுளின் குழந்தை. அவருக்கு எங்கு போனாலும் வெற்றி தான். ஆனால் உடம்பு சிறிது படுத்தும். அவருடைய அடி வயிறும், மேல் வயிறும் உப்பசத்தால் திணறும். அவர் உண் பதில் மிக கவனமாக இருக்க வேண்டும். உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்'' என்று சொன்னார்.

''நீ வைத்தியனா, ஜோசியனா?''

''நான் ஜோசியன் அம்மா. ஆனால் இன்ன நிவாரணம் என்று சொல்லும்போது வைத்தியனாகவும் இருப்பேன்.''

''அவருடைய ஆயுசுக்கு ஒரு கெடுதலும் இல்லையே?''

''இல்லை. அவருக்கு எண்பத்தி மூன்று வயது. எண்பது வயதில் அவருக்கு இன்னொரு திருமணம் ஆகும்.''

''என்னது. எண்பது வயதில் திருமணமா. எதற்காக?''

''அவருடைய ஆயுசு இன்னும் மூன்று வருடம் நீடிப்பதற் காக ஒரு நல்ல பெண்மணியை திருமணம் செய்து கொள்வார்.''

''அய்யோ பாவம் அந்த பெண்ணின் கதி என்ன?''

''அது நரபலிதான். எந்தவித சுகமும் இல்லாமல் அவள் விதவையாவாள்.''

''கடவுளே, கடவுளே.'' வீரமாதேவி காதை பொத்திக் கொண்டாள்.

''இவளின் திருமணம் நடக்குமா.''

''விமரிசையாக நடக்கும்.''

''போருக்கு சென்றவர்கள் ஒழுங்காக வருவார்களா''

''பத்தில் ஒரு பங்கு அடிபடும். மிச்சம் ஒன்பது பேர் வரு வார்கள். வந்து மிகச் சிறப்பாக கொண்டாடுவார்கள். வடக்கே வெகுதூரம் இமயமலை அடிவாரம் வரை போவார்கள். அங்கு உள்ள அரசர்களையெல்லாம் ஜெயித்து நிறைய பாத்திர, பண் டங்களோடும், சிலைகளோடும், தங்க காசுகளோடும், பெண்டி ரோடும் வருவார்கள்.''

''பெண்கள் எதற்கு?''

''போகத்திற்குத்தான். ஏழரை லட்சம் வீரர்கள் வருகிறார் கள். அவர்களுக்கு, மரணத்தைத் தாண்டி வந்தவர்களுக்கு விருந்து வேண்டாமா. பெண்களை கவர்ந்து வருவார்கள். உபயோகப் படுத்திக் கொள்வார்கள்.

இது வழக்கமான விஷயம்தான். போரில் உற்சாகம் அடை வதே வீரர்கள் பெண்டிர்களுக்காகத்தான். முதலில் காசு. இரண் டாவது பெண். மூன்றாவது ஊர் பார்க்கும் ஆசை. நாலாவது தான் சோழதேசத்தின் வெற்றி.''

''கடல் கடந்து போக வேண்டும் என்று சொல்கிறாரே?'' வீரமாதேவி ஆரம்பித்தாள்.

''இது சரியாக வருமா?''

''மிக அற்புதமாக வரும். அவர் எதை முன்னிட்டு போகி றாரோ அந்த ஊர் பாழ்படும். மற்ற பல ஊர்களை கொள்ளை

அடித்துக்கொண்டு மிகப்பெரிய செல்வத்தோடு திரும்புவார். ஆனால் அதுவே அவருக்கு கடைசி போராக இருக்கும்.

அம்மங்கா தேவியின் புதல்வன் க,கி,கு என்று பெயரிலே தன் முதல் எழுத்தை வைத்திருப்பவன், இராஜேந்திர சோழர் செய்ய வேண்டியதை தொடர்ந்து செய்வான். மிக விஸ்தார மான கடற்படையை அமைப்பான். அவன் கடலுக்கு போகின்ற வெற்றியோடு வந்திருக்கிறான். முருகனுடைய அருளோடு இருக்கிறான் என்பதால் தான் இவர்கள் வயிற்றில் அறுகோண முக்கோணம் இருக்கிறது.''

''என்னுடைய வயது என்ன?'' முக்கோக்கிழானடி கேட்டார்.

''இன்னும் பதினைந்து வருடங்களுக்கு உங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை அம்மா.''

''அவ்வளவுதானா?''

''நீண்ட நெடுங்காலம் வாழ்வது என்பது பிறகு உங்கள் பிரார்த்தனையால் வளர்ந்தாலும் வளரலாம்.''

''என்னுடைய வயது என்ன?'' வீரமாதேவி கேட்டாள்.

''இராஜேந்திர சோழர் இறந்த பிறகு ஒரு நாள் உயிரோடு இருப்பீர்கள். பிறகு அவர் இறப்பு தாளாமல் உங்களுக்கு மரணம் ஏற்படும்.''

''என்னுடைய வயது என்ன?'' அம்மங்காதேவி கீச்சுக் குரலில் கேட்டாள்.

''உங்கள் வயது எண்பத்தி மூன்று அம்மா. சோழ தேசத் தில் மரணமடைவீர்கள். வேங்கிக்கு வந்திருக்கிறீர்கள். இங்கு திருமணமாகும். இங்கு அரசாள்வீர்கள். ஆனால் ஒருமுறை சோழதேசம் போய்விட்டால் பிறகு மறுபடியும் இந்தபக்கம் வரமாட்டீர்கள்.''

''சோழ தேசம் நன்றாக இருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

''ஆஹா. என்ன அற்புதமாக கேட்டீர்கள். புருஷன் நன்றாக இருப்பதற்கு என்று கேட்கவில்லை. சோழதேசம் சோழதேசம் என்றே சிந்தித்து கொண்டிருக்கிறீர்கள். அம்மா, நிறைய

சிவாலயங்களுக்கு திருப்பணி செய்யுங்கள். அவைகளுக்கு பாத்திர, பண்டங்கள் கொடுங்கள். அந்தணர்களுக்கு உதவுங் கள். விவசாய நிலத்தை சரியாக பாதுகாக்குங்கள். விவசாயி களுக்கு வேண்டுமென்பதை கொடுங்கள். நீர், நிலைகளை பாதுகாத்து நன்கு விவசாயம் நடக்க ஏற்பாடு செய்யுங்கள். வரி வசூலில் கருணை காட்டுங்கள். வேற்று மொழி பெண் களிடம் இதமாக நடந்து கொள்ளுங்கள்.''

''கடைசியாக ஒரு கேள்வி.'' மறுபடியும் அம்மங்காதேவி பேசினாள்.

''இன்னும் எத்தனை கேள்வி வேண்டுமானாலும் கேட்க லாம். எதையும் சுருக்கிக் கொள்ள வேண்டாம். கேளுங்கள் தாயே.''

''என் புருஷன் நல்லவரா, வல்லவரா இரண்டும் இல் லையா?'' அவள் குரல் நடுங்கியது, கண்ணில் நீர் கட்டியது. அவள் தன் புருஷனைப் பற்றி கவலையோடு இருக்கிறாள் என்பது தெரிந்தது.

அவன் கை கூப்பினான்.

''உங்கள் புருஷன் வல்லவர் இல்லை. கொஞ்சம் நல்ல வர். இரண்டும் கெட்டான்.'' ஒரு மாற்றுக் குரலில் வேறு யாரோ பேசுவது போல் பேசினான்.

வீரமாதேவி சட்டென்று எகிறி அம்மங்காதேவியை அணைத்துக் கொண்டாள். அப்படி அணைத்துக் கொண்ட தாலோ என்னவோ அம்மங்காதேவிக்கு அழுகை பொங்கியது. சட்டென்று முகத்தை பொத்திக்கொண்டு விசும்பத் துவங் கினாள்.

போதும் என்று எல்லோருக்கும் தோன்றியது. சுருக்குப் பையில் இருந்த அத்தனை கழஞ்சுகளையும் தரையில் கொட்டி னாள். கழஞ்சுகள் உருண்டு விழுந்தன. முன்னேறி கிழவன் அவைகளை எடுத்துக் கொண்டான்.

''மூன்று வருடங்களாக சரியாக உணவு இல்லாமல் கிழங்குகளையும், இலைகளையும் தின்று வருகிறோம். நிறைய தானியங்களை இப்போது வாங்குவோம். உங்கள் பெயரால்

வாங்குவோம். அம்மங்காதேவி நன்றாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து வாங்குவோம். அள்ளி கொடுத்து விட்டீர்கள் அம்மா. எங்கள் வாழ்க்கை இனிமேல் நன்றாக இருக்கும். எங்கள் மீது எப்பொழுதுமே கருணை வைக்க வேண்டுமென்று அம்மங்காதேவி அவர்களுக்கு சொல்கிறேன். அவர்கள் அருள் ஆசியினால் நாங்கள் வருடத்திற்கு ஒருமுறை இதேநேரம் வந்துபோய் அவரை வாழ்த்துகிறோம்.

அம்மங்காதேவி அவர்கள் எங்கள்குல தெய்வத்தை ஒரு முறை வணங்க வேண்டும். இது எங்களுடைய வேண்டு கோள்.''

மற்ற அரசியர்கள் விலகிக் கொள்ள, அம்மங்காதேவி முன்னேறி வந்து அந்த பலகையை விழுந்து வணங்கினாள். தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டாள். மெல்ல இன்னும் நகர்ந்து பலகை விளிம்பில் முத்தமிட்டாள்.

அவர்கள் குலவையிட்டார்கள். மிக பலமாக குலவை இருந்தது.

''எங்கள் தாயை தீண்டினீர்கள் அம்மா. அவள் உங்கள் தலையை தொட்டு ஆசிர்வதித்தாள். மறுபடியும் சொல்கிறேன். உலகம் போற்றுகின்ற மிகச் சிறப்பான ஒரு குழந்தை உங்க ளுக்கு பிறக்கும். அவனுக்கு க, கி, கு என்ற எழுத்துக்களில் ஆரம்பிக்கின்ற குழந்தை பிறப்பான்.''

''வாழ்க சோழ தேசம், வாழ்க வேங்கி தேசம்'' என்று சொன்னார்கள். மெல்ல எழுந்தார்கள். மறுபடியும் குலவை யிட்டார்கள். பின்னடைந்தார்கள். வெளியேறினார்கள்.

அரசிகள் எல்லோரும் அதே இடத்தில் ஆணி அடித்தது போல திகைப்போடு இருந்தார்கள். அம்மங்காதேவி எழுந்தாள். உள்ளே போய் மேலே போட்ட துணியோடு மறுபடியும் வெளியே வந்தாள்.

''நான் இராஜராஜ நரேந்திரனை தேடிப் போகிறேன். அவரோடு ஒரு நாழிகை பேசிவிட்டு திரும்புவேன். என்னுடன் இரண்டு வீரர்களை அனுப்புங்கள்.'' வீரமாதேவிக்கு வேண்டு கோள் வைத்தாள்.

வீரமாதேவி கைதட்டி கட்டளையிட்டாள். இரண்டு வீரர்கள் அம்மங்கா தேவியை பின் தொடர்ந்தார்கள். அம்மங்கா தேவி தேர் ஏறினாள். ஒரு வீரன் விளிம்பில் தொற்றிக் கொண்டான். தேர் இராஜ நரேந்திரன் இருந்த வீடு நோக்கி போயிற்று.

வேங்கி தேசத்து தெருக்களில் வியாபாரம் நன்கு நடைபெற்றுக் கொண்டிருந்தன. தேர் வரும் சப்தம் கேட்டு ஜனங்கள் விலகினார்கள். அம்மங்காதேவி போவதை பார்த்துவிட்டு 'யாரது யாரது' என்று ஆவலோடு கேட்டார்கள். தெரிந்தவர்கள் பதில் சொன்னார்கள். தெரியாதவர்களும் தெரிந்தது போல யார் பெயரையோ சொன்னார்கள்.

அரச குடும்பத்தினரின் ஒவ்வொரு அசைவும் வேங்கி தேசத்தில் ஆவலோடு பார்க்கப்பட்டன.

''சோழ இளவரசிகள் தெருவில் வந்து பேசுவார்களாமே. அப்படி ஒன்றும் செய்யக் காணோமே'' என்ற எதிர்பார்ப்பும் அதிகம் இருந்தது.

இராஜநரேந்திரன் வீட்டு வாசலில் அம்மங்காதேவி காத்திருக்கும் பொழுது வெகுதொலைவில் நாற்பது, ஐம்பது ஊர்க்காரர்கள் ஒன்று திரண்டு அவளை நோக்கி கை கூப்பிய படியே இருந்தார்கள். அம்மங்காதேவி உற்றுப் பார்த்தாள். என்ன செய்வது. போய் பேசலாமா. இப்பொழுது இல்லை. இப்பொழுது மனம் வேறு ஒரு நிலையில் இருக்கிறது. அவர்களிடம் பேசினால் மனம் தளர்ந்து விடும். மென்மையாகி விடும். மனதை மென்மையாக வைத்துக்கொள்ளும் நேரம் இதுவல்ல. அவள் கையை உயர்த்தி, 'அங்கேயே இருங்கள்' என்று சொல்ல, அவர்கள் தலையசைத்தார்கள். கை கூப்புவதை நிறுத்திவிட்டு கைகளை கட்டிக் கொண்டார்கள். அதற்கு காத்திருக்கிறோம் என்ற சைகையாக இருந்தது.

தேரோட்டி வாசற்காவலனிடம் சொல்ல வாசற்காவலன் தடதடத்து உள்ளே போக, அந்த மாளிகைக்குள் பரபரப்பு கேட்டது. பல காவல் வீரர்கள் எட்டி பார்த்தார்கள். சிலர் மட மடவென்று கீழே இறங்கி வந்து உள்ளே வரும்படி சொன்னார்கள். அவர்களை பார்த்து சிரித்தபடி மௌனமாக அம்மங்கா தேவி நின்றிருந்தாள். வர வேண்டியவர் வந்தால் இறங்கி வருவேன் என்பதாக அந்த சைகை இருந்தது.

வீரர்களிடம் கடுமையாக இல்லை. இனிமையாக பார்த்தாள். ஒரு சிலரிடம் 'பெயர் என்ன?' என்று கேட்டாள். 'உள்ளே வாருங்கள்.' என்று அழைத்த போது, 'ம் வர வேண்டும்' என்று அமைதியாக பதில் சொன்னாள். வரத்தானே வேண்டும் என்ற பேச்சாக அது த்வனித்தது.

வாயில் காவலர்கள் மறுபடியும் உள்ளே போனார்கள். சிறிது நேரத்தில் பஞ்சகச்ச வேட்டியும், நல்ல சட்டையும், கழுத்தில் ஆரமும், தோளில் கேயூரமும், இடுப்பில் தோல் பட்டையும், அதில் சொருகிய நீண்ட கத்தியுமாக இராஜ நரேந்திரன் பதினைந்து படி உயரத்தில் உள்ள அந்த கட்டிடத்தின் விளிம்பில் நின்றான். இறங்கி வந்தான். அம்மங்காதேவி வந்ததை சொன்ன பிறகு இதையெல்லாம் அணிந்திருக்க வேண்டும் என்று அவளுக்கு தோன்றியது. சாதாரணமாக மேலே ஒரு அங்க வஸ்திரத்துடன் இறங்கி வந்திருந்தால் இதை விடவும் கம்பீரமாக இருந்திருப்பான் என்று எண்ணம் வந்தது.

ஒப்பனைகளுடன் வருகிறவனிடம் ஜாக்கிரதையாக பழக வேண்டும் என்ற எண்ணமும் ஓடிற்று.

அந்த மாளிகையின் கீழ்புறத்தில் குதிரைகள் இருக்கும் இடம் இருந்தது. பதினைந்து படி உயரே போனபிறகு ஒரு பெரிய தளம் இருந்தது. அதற்கு மேலும் ஐந்துபடி போன பிறகு அரண்மனைக்குள் உள்ளே நுழைய முடிந்தது. இராஜ நரேந்திரன் இறங்கி வந்து கைகூப்பி, தலை குனிந்து வணங்கினான்.

''அம்மங்காதேவி அவர்களுக்கு வணக்கம். உங்கள் வருகையை இராஜேந்திரரின் வருகையாகவே நினைத்து சந்தோஷப்படுகிறேன். என் மாளிகைக்கு வந்தது மிகப் பெரிய மகிழ்ச்சி. வரவேண்டும். தயவு செய்து என் மாளிகையில் உங்கள் பாதங்களை பதித்து அதை புனிதப்படுத்த வேண்டும்.'' அவன் வடமொழி கலந்த தமிழில் பேசினான்.

அவன் முன்னே போனான். அம்மங்காதேவி தேர்விட்டு இறங்கினாள். காலணிகளோடு கட்டிடத்தின் மேல் தாழ்வாரத்தில் காலணிகளை தளரவிட்டாள். பிறகு வெறும் கால்களோடு உள்ளே நுழைந்தாள். தரை சூடாக இருந்தது. இன்னும் உள்ளே

நுழைய கம்பளங்கள் விரிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. கம்பளத்தினூடே மிகப்பெரிய கூடத்தின் உள்ளே நுழைய விளக்குகள் தொங்க விடப்பட்டிருந்தன. இன்னும் உள்ளே போக பெரிய சிம்மாசனம் இருந்தது. அம்மங்காதேவி அந்த சிம்மாசனத்திற்கு அருகே போய் நின்றாள். அருகிலிருந்த வீரனிடம், ''விமலாதித்தர் அமர்ந்த சிம்மாசனமல்லவா இது.'' என்று கேட்டாள்.

''ஆமாம்.''

''நடுவே உடைந்து போயிற்று என்று கேள்விப்பட்டேனே.''

''ஆமாம். அதை சரிசெய்து இளவரசர் இங்கே புதுப்பித்து வைத்திருக்கிறார்.''

''விமலாதித்தரின் அடையாளமாகவா.''

''சரியாகச் சொன்னீர்கள். அதற்கு அடையாளமாகத்தான்.''

அவள் அந்த சிம்மாசனத்தை அடைய மூன்றுபடி ஏற வேண்டியிருந்தது. ஏறி நின்றாள். அந்த கம்பளம் இன்னும் மிருதுவாக இருந்தது. அவள் குனிந்து அந்த சிம்மாசனத்தை மண்டியிட்டு வணங்கினாள். கை கூப்பினாள்.

''உங்கள் இருப்பிடத்திற்கு வந்திருக்கிறேன் தந்தையே. என்னை அரவணைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மகனுக்கு மனைவியாகப் போகிறேன் மாமா. என்னை ஆசிர்வதியுங்கள். உங்கள் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு நீங்கள் இறந்த தேதியில் அவருக்கு ஞாபகப்படுத்தி அவரோடு நின்று உங்களுக்கு உண்டான நீரை நான் வார்ப்பேன். அப்படி அவர் அருகே இல்லையெனில் நீரும், உணவுமாய் ஏழைகளுக்கு தருவேன். அந்த ஏழைகளில் யாரோ ஒருவராக நீங்கள் இருந்து அந்த உணவை உட்கொள்ளும்படி வேண்டுகிறேன். உங்களுடைய ஆசிர்வாதம் இல்லாமல் என் குடும்பம் தழைக்காது. உங்கள் அன்பு இல்லாது நாங்கள் இன்பமாய் இருக்க முடியாது. எனவே, எங்கள் இன்பத்திற்கும், எங்கள் இல்லற வளர்ச்சிக்கும், நன்மக்கட்பேறுக்கும் நீங்கள் துணையாக இருக்க வேண்டும் என்று நான் மனதார கேட்டுக் கொள்கிறேன்.'' மறுபடியும்

மண்டியிட்டு வணங்கினாள். உள்ளுக்குள்ளே சில்லென்ற உணர்வு பரவியது. யாரோ முதுகில் தொடுவது தெரிந்தது. எழுந்து நின்றாள். கண்களில் நீர் திரண்டன. மேல் துணியால் கண்களை ஒற்றிக்கொண்டாள்.

எவ்வளவு வேதனையான ஒரு சாவு. மிக நல்ல மனிதர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நண்பர்களான துரோகிகள் கையில் சிக்கி அவஸ்தைப்பட்டிருக்கிறார். இவர் ஆத்மா நிச்சயம் தவித்தபடி இருக்கும். இன்றைக்கே இவர் ஆத்மா சாந்தியடைய இவர் மனக்கேதம் தீர நான் ஏதாவது செய்தாக வேண்டும்.' என்ன செய்ய வேண்டும் அப்பா.' அவள் மிருதுவாக மனதுக்குள் கேள்வி கேட்டாள். பதில் வரும் என்ற நம்பிக்கையோடு திரும்பி இராஜநரேந்திரனை பார்த் தாள். இராஜநரேந்திரன் திகைத்து கிடந்தான். நெகிழ்ந்து போயிருந்தான். அவனுக்கு அருகே அம்மங்கை வந்தாள். சிரித் தாள். கைகூப்பி வணங்கினாள். இராஜ நரேந்திரனும் மறுபடி யும் வணங்கினான்.

''உங்களோடு ஒரு அரை நாழிகை பேச வேண்டும். எங்கு பேசலாம்.''

''உள்ளே போய் விடலாம்.''

''வேண்டாம். அது ரகசியமானதாக போய் விடும். நான் அப்படி இருக்க விரும்பவில்லை. இந்த சிம்மாசனத்தில் நீங்கள் உட்கார்ந்து அருகே எனக்கு ஒரு ஆசனம் போடச் சொல்லுங் கள். உங்களோடு இந்த கூடத்திலேயே பேசிவிட்டு போய் விடுகிறேன்.''

அவன் யோசித்தான். 'சரி' என்று சொன்னான். அவளை தாண்டி படியேறி சிம்மாசனத்திற்கு போனான். திரும்பி நின்று கூடத்தை நோக்கி கைகூப்பினான். கண் மூடினான். தந்தை யின் அனுமதி பெற்று அந்த சிம்மாசனத்தில் அமர்ந்தான். அருகே ஒரு ஆசனம் போட சைகை செய்தான். வேகமாக முதுகு இல்லாத ஒரு ஆசனத்தை எடுத்து வந்து அவர்கள் அருகே வைத்தார்கள். இராஜ நரேந்திரன் கோபம் அடைந்தான்.

''வசதியானது'' என்று கேட்டான். அவர்கள் பரபரத்தார் கள்.

''இது போதும். அம்மங்காதேவி கை அமர்த்தினாள். ஏறி னாள். அந்த நான்கு கால்களுடைய மெத்தை தைத்த ஆசனத் தில் அமர்ந்து கொண்டாள். இராஜ நரேந்திரனுக்கும் அவளுக் கும் நான்குஅடி இடைவெளி இருந்தது. அவள் காவலர்களை பார்த்தாள். பத்து, பன்னிரெண்டு பேராய் அருகிலும், தொலை விலும், காவலர்கள் நின்றிருந்தார்கள். அவள் அவர்களை பார்த் ததும் விரைப்பானார்கள்.

''நீங்கள் அனைவரும் இந்த கூடத்திற்கு அப்பால் போய் நின்று கொண்டிருங்கள். நாங்கள் அனுமதிக்காமல் யாரை யும் உள்ளே விட வேண்டாம். எனக்கு இளவரசரோடு பேச வேண்டிய அவசியம் இருக்கிறது.'' என்று சொல்ல, அவர்கள் 'சரி' என்று தலையசைத்தார்கள். விரைவாக பின்னடைந்து அந்த கூடத்திற்கு வெளியே நின்று கொண்டார்கள். எப் பொழுது வேண்டுமானாலும் கூப்பிட்டால் வரவேண்டிய தொலைவோடும், கையில் ஈட்டியோடும், கேடயத்தோடும் ஒரு வீரன் நின்று கொண்டிருந்தான். இவர்கள் பேசுவது அவன் காதில் விழாது. ஆனால் அதேசமயம் கை உயர்த்தி னால் அருகே ஓடி வர முடியும். கிட்டத்தட்ட நாற்பது தப்படி கள் தொலைவே இருந்த அவன் விறைப்பாக அவர்களையே பார்த்தபடி இருந்தான்.

''உங்கள் வருகைக்கு நன்றி. நான் எதிர்பார்க்கவே யில்லை.'' இராஜ நரேந்திரன் பேசத் துவங்கினான்.

''முன்னரே உங்களை சந்தித்து பேச வேண்டும் என்று நினைத்தேன். பொருள்களை இறக்கி வைப்பதில், அடுக்கி வைப்பதில் நேரம் போய் விட்டது.

''மறுபடியும் சொல்கிறேன். நீங்கள் இங்கு வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. பேசும் சந்தர்ப்பம் ஏற்படும் என்று நினைக்கவேயில்லை. பேசவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் அந்த விருப்பத்தை வெளிப்படுத்தலாமா, வேண்டாமா என்ற சந்தேகம் இருந்தது. யாரிடம் வெளிப்படுத் துவது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். யாரைக் கேட் டாலும் இராஜேந்திரர்தான் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லிவிடுவார்களோ என்ற அச்சம் இருந்தது. இராஜேந் திரரிடம் போய் எப்படி கேட்பது என்ற தயக்கம் இருந்தது.

இதையெல்லாம் உடைத்துவிட்டு நீங்களே வந்துவிட்டீர்கள். இது சக்ரவர்த்தி இராஜேந்திரருக்கு தெரியுமா.''

''இல்லை. சொல்லப்படவில்லை. சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இம்மாதிரியான சிறு விஷயங்களுக் கெல்லாம் சக்ரவர்த்தியை நாங்கள் தொந்தரவு செய்வதில்லை. நான் இங்கு வந்ததற்கு ஒரு முக்கியமான காரணம் இருக் கிறது.''

''என்ன? என்ன காரணம் சொல்லுங்கள்.''

''நீங்கள் எனக்கு காட்டுகின்ற மரியாதை, என்னை மிக அமைதியாக அழைத்து வந்தது எல்லாம் எனக்கு பிடித்திருக் கிறது. நாம் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு சில விஷ யங்கள் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பு கின்றேன்.

உங்கள் தந்தையினுடைய வாழ்க்கை உங்களை நிச்சயம் பாதித்திருக்கும். உங்கள் சிற்றன்னையால் நீங்கள் அவமானப் படுத்தப்பட்டிருப்பீர்கள். உங்கள் தாயாரால் உங்களுக்கு சில சமயம் தலைகுனிவும், கோபமும் ஏற்பட்டிருக்கும். இந்த எண்ணங்களையெல்லாம் வைத்துக்கொண்டு திருமணம் செய்து கொள்ளும் மனைவியிடமும் நீங்கள் ஆரம்பத்திலேயே கசப்புணர்வை கொண்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தை சொல்வதற்காக இங்கு வந்தேன். நான் உங்கள் சிற்றன்னை யும் அல்ல. உங்கள் தாயும் அல்ல. அந்த குணாதிசியங்கள் என் னிடம் இல்லை. எதுவாகிலும் பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்பதில்தான் மிகுந்த நம்பிக்கை உடையவள். கணவனும், மனைவியும் எதுவாகிலும் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பவர்கள் என்பதை நம்புகிறவள். நம்முடைய சாஸ்திரங்கள் மனைவியை சகி என்று சொல்லுகின்றன. ஒரு அடி தூரம் என் பித்ருக்களின் பொருட்டு வருவாயாக. ஒரு அடிதூரம் என்னுடைய மாடு, கன்றுகளின் பொருட்டு என்னிடம் வருவாயாக. ஒரு அடிதூரம் தேவதைகளுக்குண் டான பூஜைகளுக்காக என்னிடம் வருவாயாக என்று சப்தபதி சொல்கிறது. ஏழு அடி தூரம் நடக்கும்பொழுது அந்த ஏழு அடியும் இந்த சத்தியத்தை சொல்லி நாம் திருமணம் செய்து

கொள்ளப் போகிறோம். இந்த சடங்குகள் அற்புதமானவை. பல்வேறு விஷயங்களுக்காகத்தான் நாம் ஒன்று சேர்ந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக நம் திருமணம் நம்மை மட்டும் யோசித்து கவலை கொள்ளுவது அல்ல, மிகச் சிறந்த ஒரு கணவனை உனக்கு கொண்டு வந்து தருகிறேன் என்று இரா ஜேந்திரர் எனக்கு சத்தியம் செய்ய வில்லை. உங்களுக்கு அப்படி யாரும் ஒரு வாக்கு கொடுத்து விடவில்லை.

சோழ தேசத்தின் பொருட்டு, அதன் வளர்ச்சியின் பொருட்டு, பாதுகாப்பின் பொருட்டு, தொடர்ந்து மேலும் வளரவேண்டும் என்பதின் பொருட்டு உங்களுக்கு, எனக்கு திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயம் செய்யப் பட்டு இருக்கிறது. இந்த திருமணத்தை நம்முடைய சம்மதம் கேட்காமலேயே, உனக்கு பிடித்திருக்கிறதா என்று என்னையோ, உங்களையோ கேட்காமலேயே சக்ரவர்த்தி அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். எப்படி இருப்பினும் நாம் கணவன் மனைவியாக இருந்துதான் ஆக வேண்டும். இது இருமனம் கூடிய திருமணம் அல்ல. இரண்டு தேசங்கள் கூடிய திருமணம். தேச விஸ்தரிப்புக்காக, தேச ஒற்றுமைக்காக ஏற் பட்டது என்பதில் எங்கள் குடும்பம் தெளிவாக இருக்கிறது. நீங்களும் அப்படித்தான் உணர்ந்திருப்பீர்கள் என்று நினைக் கிறேன். இது ஒரு அரசியல் ஒப்பந்தம் போல இரண்டு அரசாங் கத்தில் நடக்கின்ற இணைப்பு போல நடைபெறப் போகிறது. அதில் நாம் இருவரும் பகடைக் காய்களாக உட்கார வைக்கப் பட்டிருக்கிறோம்.

நான் ஏதும் தவறாக பேசுகிறேனா.'' சட்டென்று நிறுத்தி அவன் முகத்தை ஊடுருவி பார்த்தாள்.

''அற்புதமாகப் பேசுகிறீர்கள். என் மனதில் என்ன இருக் கிறதோ, அதைத்தான் சொல்கிறீர்கள். ஒரு உண்மையை ஓர் அரசிளங்குமரி இத்தனை தெளிவாக உணர்ந்திருக்கிறாள் என்கிறபொழுது, நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்கள், நிறைய ஞாபக சக்தி உடையவர்கள், யோசிக்க தெரிந்தவர்கள் என்பது எனக்கு புரிகிறது. அதில் சந்தோஷமாகவும் இருக்கிறது. இந்த சந்தோஷத்திற்கு காரணமும் இருக்கிறது.''

''என்ன காரணம்?''

''என் தாய் யோசிக்க தெரியாதவள். யோசிக்க கற்றுக் கொடுக்கப்படாதவள். என் தாயைப் பற்றி எனக்கு வேதனை இருக்கும் என்று போகிற போக்கில் ஒரு வார்த்தை சொன்னீர் கள். கொஞ்ச நஞ்சம் வேதனை அல்ல. மிகப்பெரிய வேதனை இருக்கிறது. அதே சமயம் அவள் என் தாய் என்ற நினைப்பும் இருக்கிறது. பல தவறுகளுக்கு காரணமானவள். கீழை சாளுக் கியத்தின் சரிவுக்கு காரணமானவள். என் தந்தையின் மரணத் திற்கு காரணமானவள் என் தாய்தான் என்பதை நினைக்கும் பொழுது என் வேதனை பன்மடங்காக பெருகுகிறது.

அவள் யாரால் வளர்க்கப்பட்டவள் என்று எனக்குத் தெரி யாது. ஆனால் வளர்க்கப்பட வேண்டிய விதத்தில் வளர்க்கப் படவில்லை. தன் மனதில் என்ன எண்ணம் இருக்கிறது என்பதை வெளிப்படுத்த அவளுக்கு தெரியாது. மிகக் கொச்சை யாக அதை செய்வாள். அடம் பிடிக்கிற ஆறு வயது குழந்தை யும், என் தாயும் ஒன்று. என் தாய்க்கு ஏழு வயது பூர்த்தியாக வில்லை என்பதே என்னுடைய அபிப்ராயம். இதன் விளைவாக நான் அதிகம் வேதனைப்பட்டேன். நானும் முட்டாளாக பதினாறு வயதுவரை இருந்தேன். என் தாயின் காலடி ஒட்டியே நடந்தேன். பிறகு மெல்ல விலகினேன். தனியே நின்று பார்த் தேன்.

அம்மங்காதேவி அவர்களே, எனக்கு யாரும் சொல்லித் தரவில்லை. நானாக நகர்ந்தேன். நானாக வளர்ந்தேன். நானாகப் புரிந்து கொண்டேன். ஒரு அரசிளங்குமரனாக எடை போட்டு பார்த்தால் என் வாழ்க்கை சோக மயமானது, தாயின் கோபத் தால் பாதிக்கப்பட்டும், தந்தையின் புறக்கணிப்பால் துக்கப் பட்டும், சுற்றியுள்ளோர்களால் வஞ்சிக்கப்பட்டும் வளர்ந்தவன் நான். என்னிடம் இருக்கின்ற ஒரே ஒரு பற்று சக்ரவர்த்தி இராஜேந்திர சோழர், அவர் எனக்கு தாய்மாமன். அவர் மிகச் சிறந்த வீரர், மிக அற்புதமான நிர்வாகி, இதுவரை தமிழகம் காணாத ஒரு சக்ரவர்த்தி, வணங்குவதற்குரிய பெரிய மகான் என்றுதான் எனக்குள் எண்ணம் இருக்கிறது. அவருடைய ஒரே மருமகன் ஆன என்னை எப்படியாவது கை பிடித்து தூக்கி விடுவார் என்ற எண்ணத்தில்தான் நான் உயிர் வாழ்ந்தேன்.

நடு நடுவே எனக்கு வேங்கியை விட்டு வெகுதூரம் இமய மலை அடிவாரத்திற்கு அடையாளம் இல்லாமல் போய்விட வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததுண்டு. அதை நான் நீக்கு வதற்காக உண்டான காரணம் இராஜேந்திரர் பற்றிய செய்திகள். அவருடைய போர் பற்றிய விவரங்கள்.

அம்மங்காதேவி, தொடர்ந்து பேசுங்கள். நான் பாதிக்கப் பட்டிருக்கிறேன் என்று நீங்கள் தெரிந்து கொண்டதே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. என் வாழ்க்கையில் ரகசியம் ஏதும் இல்லை. உங்கள் வாழ்க்கையில் ரகசியம் இருந்தால் அதுபற்றி எனக்கு கவலையில்லை. தயவுசெய்து தொடர்ந்து பேசுங்கள்.''

''அடேயப்பா, நான் நினைத்ததைவிட நீங்கள் நன்றாக பேசுகிறீர்கள். எனக்கு சந்தோஷமாக இருக்கிறது.'' தன் வலக் கையை எடுத்து அவன் வலக்கையின் மீது வைத்தாள். அவன் வலக்கையை தடவி விட்டாள். அவன் கண் மூடிக்கொண்டான்.

மிக நல்ல பெண்மணியிடம் தான் நெருங்கி அமர்ந்திருக் கிறோம். தனக்கு நல்ல துணைவி வரப் போகிறாள் என்று சந்தோஷமானான். அவன் நெஞ்சு பூரித்து கன்னத்தை தொட் டது. அவன் கண்கள் மலர்ந்தன. சற்று நேரம் முன்பு இருந்ததை விட, தான் இப்பொழுது அழகாக இருக்கிறோம் என்று அவனுக்கு தோன்றியது.

''என்ன பேச விரும்புகிறீர்களோ அதை தெளிவாகப் பேசுங்கள். முழுவதுமாக பேசுங்கள். எந்த தயக்கமும் இன்றி பேசுங்கள்.'' அவன் அவளுக்கு ஆதரவாகப் பேசினான்.

''உங்கள் தந்தையின் வாழ்க்கை சீரழிந்ததற்கு காரணம் உங்கள் தாயின் கர்வம் மட்டுமல்ல. அவருக்கு இரண்டாவது அரசியல் திருமணம் ஏற்படுத்தினார்கள். மேலை சாளுக்கியத் திலிருந்து பெண்ணெடுத்து வந்து, மேலை சாளுக்கியத்தின் ஆதரவு கிடைக்கும் என்று கொண்டு வந்து நிறுத்தினார்கள். சோழ தேசத்தின் ஆதரவுக்கு எதிராக அந்தப் பெண்மணியை செயல்படுத்த வைத்தார்கள். உங்கள் தந்தையினுடைய ஆவல் மேலை சாளுக்கியம் அல்ல. நல்ல மனைவி என்பதே. அதை உங்கள் தாய் பூர்த்தி செய்யவில்லை. சோழ தேசத்து இளவரசி சரியாக நடந்து கொள்ளவில்லை. எனவே, மேலை சாளுக்

கியத்து பெண்மணியின் கை ஓங்கி இரண்டு பக்கமும் தலை கொடுத்து அவஸ்தையாக வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது. இதை அதட்டியோ, மிரட்டியோ சமாளிக்கின்ற வலிமை உங்கள் தந்தைக்கு இல்லை. யாரையோ ஒருவரை புறக்கணித்து இவர் பக்கம்தான் நான் என்று நிற்கக்கூடிய திறமை இல்லை. அவருக்கு இராஜேந்திர சோழரிடமும் பயம். கங்கே யாதவிடமும் அச்சம். எனவே, தடுமாறினார். அடிமை யாக இருந்தார். இரண்டு மனைவிகளின் அதட்டலுக்கும் பயந்தார். அதைத் தாண்டி வேறு சிலருடைய அதிகாரத்திற்கும் தலைகுனிந்தார். மிகப் பரிதாபமான நிலைமை உங்கள் தந்தைக்கு இருந்திருக்கிறது. அந்த நிலைமை உங்களுக்கு வரக்கூடாது.

அந்த நிலைமை உங்களுக்கு வரக்கூடாது என்பதிற்கு அர்த்தம் ஒருகாலும் நீங்கள் இன்னொரு திருமணம் செய்து கொள்ளக் கூடாது. இந்த சபையில் உங்கள் மனைவி என்ற அந்தஸ்தோடு எவள் படியேறினாலும் அவள் சிரத்தை நான் கொய்வேன். அவளை அடித்துக் கொல்வேன். அதற்கு துணை யாக இருந்தவர்களை விரட்டி விரட்டி கொலை செய்வேன். அதற்கு ஒரு தேசம் முயற்சி செய்கிறது என்றால் அதை நிர்மூலப் படுத்துவேன். இது இராஜேந்திர சோழருடைய எண்ணம் அல்ல. என்னுடைய எண்ணம். என் புருஷன் எனக்கு மட்டுமே.

நீங்கள் எல்லோரும் மறவர்கள். படை எடுத்து வரும்போது, கொள்ளை அடித்துவரும் போது பெண்டுகளையும் கொள்ளை யடித்து வருவீர்கள். எதற்கு பெண்டுகளை கொள்ளையடிக் கிறீர்கள். காலில் பூ போட்டு பூஜை செய்யவா. சாக்த உபாஸகமா இல்லை, அவர்களை படுக்கையில் போட்டு பெண்டாளத் தான் செய்வீர்கள். தயவு செய்து தாராளமாகச் செய்யலாம். ஒரு தவறும் இல்லை. அது மறவருடைய முகம். உங்களுடைய ஆணாதிக்க புத்தி அதை எதிர்க்க என்னால் இயலாது. ஆனால் இந்த தேசத்திற்கு இன்னொரு அரசியல் என்பது கிடையாது. நான்தான் இங்கு சகலமும். நீங்கள் இல்லாது போனால் உங்கள் தளபதியோ, உங்கள் மந்திரியோ இங்கு அரசாங்கம் செய்ய முடியாது. நான் செய்வேன். என்னால் குதிரை ஓட்டவும், வாள்

எடுக்கவும் முடியும். என்னால் படைகளை தடுத்து நிறுத்தவும், படை எடுத்து போகவும் முடியும். அந்த திறன் பெற்றுத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

ஆனால், நான் படையெடுத்து போக வேண்டிய அவசியம் இல்லை. எனக்குத் துணையாக மிகச் சிறந்த சோழதேசத்து படைதளபதிகள் இங்கு இருப்பார்கள். இந்த நிர்வாகம் சோழ தேசத்து படை தளபதிகளின் கீழ்தான் இருக்கும்.

கீழை சாளுக்கியத்தை, அதன் நாகரீகத்தை நான் முழு வதுமாக ஏற்றுக் கொள்வேன். அதை வளர்க்க பாடுபடுவேன். கீழை சாளுக்கியம் திடமாக இருந்தால்தான் சோழதேசம் பல மாக இருக்கும். சோழதேசம் பலமாக இருந்தால்தான் பாண்டிய தேசமும், சேர தேசமும், நாஞ்சில் நாடும், ஏன் இலங்கை தேசமும் அமைதியாக இருக்கும். இதைத்தாண்டி கிழக்கே படை எடுக்க வேண்டிய நிர்பந்தமும் சோழ தேசத்திற்கு வந்திருக்கிறது. தொண்டை நாடும், கங்க நாடும், கொங்கு நாடும், குடகுமலையும் மிக அனுசரனையாக சோழ தேசத் திற்கு இருப்பதுபோல, கீழை சாளுக்கியமும் தனது நட்பு கரத்தை நீட்டி இறுகப் பற்றி செய்நன்றி மறவாது, அமைதியாக வும், ஆழமாகவும் இருக்கும்.

இராஜராஜ நரேந்திரரே, நாம் பகடைக்காய்கள்தான். நீங்கள் மன்மதன் என்று நான் உங்களை நினைக்கவும் இல்லை. நான் மிகப் பெரிய பேரழகி என்றும் உங்களிடம் வரவில்லை. என் அழகு சுமாரானது என்று எனக்குத் தெரியும். ஆனால் என் அன்பு தூய்மையானது. புருஷன் என்பது மிக முக்கியம் என்பதை, எனக்கு என்னுடைய வீடு சொல்லிக் கொடுத்திருக் கிறது. இராஜேந்திர சோழரை எப்படி என் தாயாரும், மற்றவர் களும் கொண்டாடுகிறார்கள் என்பது எனக்கு தெரிந்திருக் கிறது. உங்களுடைய தந்தையால் தான் கீழை சாளுக்கியம் அவஸ்தை பட்டது. மேலை சாளுக்கிய அரசும், ஒற்றுமையாக இருக்க அந்த திருமணம் நடந்தது. ஆனால் பிரிவினைதான் வளர்ந்தது. சோழதேசத்திற்கு நடுவேயும், மேலை சாளுக் கியத்திற்கு நடுவேயும் உங்கள் தந்தை மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட்டார். அந்த அவஸ்தை உங்களுக்கு வரலாகாது.

நீங்கள் சோழதேசத்தை மட்டுமே மணந்தவராக அதாவது என்னை மட்டுமே மணந்தவராக இருக்க வேண்டும். மேலை சாளுக்கியத்திலிருந்தோ, ஒட்ட தேசத்திலிருந்தோ பேரழகி கள் வந்தால் இங்கு படி ஏற முடியாது. எங்கேனும் போய் அனு பவித்து விட்டு வாருங்கள். அதோடு சரி. கால்கழுவி விட்டு உள்ளே நுழைய வேண்டியதுதான். மற்றபடிக்கு இங்கு யாரும் உள்ளே வர அனுமதி இல்லை. அனுமதிக்க மாட்டேன் என்பதை தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் கட்டளை இடவில்லை. இராஜராஜ நரேந்திரரே, என் விருப்பத்தை சொல்கிறேன். எது இந்த தேசத்தின் அழி வுக்கு காரணமாக இருந்ததோ அந்த காரியத்தை நான் மறுபடி யும் செய்யலாகாது என்று சொல்கிறேன்."

"நீங்கள் சொல்வது எனக்கு புரிகிறது அம்மங்காதேவி. இதில் ஒன்றும் எனக்கு நீங்கள் புதிதாக கற்றுக்கொடுக்கும் விஷயம் அல்ல. என் தாயினுடைய அவஸ்தையை நான் பார்க்கும்பொழுது அதற்கு பெரும் காரணம் என் தந்தை யினுடைய இரண்டாவது திருமணம். இது தேவையற்றது என்று நான் நினைத்தது உண்டு. இன்னொரு பெண்மணியை மணந்ததால் அல்லவா இங்கு இப்படி நடந்தது என்று யோசிப் பது உண்டு. என் தாயும் அனுசரனையாக இல்லையே. அதுதானே காரணம் என் தந்தை நகர என்ற எண்ணமும் வந்ததுண்டு. எனவே, ஏகபத்தினி விரதனாக, ஒரு மனைவி போதும் என்பவ னாக இருக்க வேண்டிய நிலைமையை நான் நன்றாக புரிந்து கொண்டிருக்கிறேன். இதை நீங்கள் கட்டளையாகச் சொன் னாலும், அன்பாகச் சொன்னாலும் இந்த எண்ணம் எனக்கு ஏற்கனவே இருக்கிறது என்பதை உங்களுக்கு தெளிவுபடுத்தி இதை நீங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பதைச் சொல்கிறேன்.

நீங்கள் சொல்வதுபோல அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில பெண்களை நான் விருப்பப்பட்டு அனுபவிக்கலாம். அவர்கள் அரசாள தகுதியுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். திருமணம் என்ற பந்தம் உங்களைத் தவிர வேறு யாரிடமும் இல்லை. அம்மங்காதேவி அவர்களே, உங்களிடம் இன்னொன்றை

சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். திருப்பதிக்கு போய் அங்கிருந்து திருமலை போய் வேங்கடவனை தரிசித்து அந்த இடத்தின் குளுமையில் மனம் மூழ்கி பல நாட்கள் இருந்து வேங்கடவன் என்னை ஆட்கொண்டான். அங்குள்ள ஜோதிடர்களை சந்தித்தேன். எனக்கு மிகச் சிறந்த மகன் பிறப்பான் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவன் சோழ தேசத்தை இதுவரை இல்லாத அளவுக்கு விஸ்தரிப்பான். மிகச் சிறந்த சக்ரவர்த்தியாக இருப்பான் என்று சொன்னார்கள். ஏன் இராஜேந்திர சோழரை விடவும் சிறப்பாக இருப்பான் என்பதும் கருத்தாக இருக்கிறது. எனக்கு பிறந்த பிள்ளை எப்படி சோழ தேசத்தை ஆளுவான் என்று கேட்டபோது, 'விதி அப்படித் தான்' என்று அவர்கள் சொன்னார்கள். இராஜ நரேந்திரனும், வீர இராஜேந்திரனும், இளவன் இராஜேந்திரனும் இன்னும் பலரும் இருக்க சோழ வம்சத்திற்கு என் மகன் எப்படி என்று நான் கேள்வி கேட்டதுண்டு. ஆனாலும் அவர்கள் காசுக்காக ஜோதிடம் சொல்கிறவர்கள் இல்லை. என்ன வேண்டும் என்று கழஞ்சுகளை இறைத்த போது அதை எடுத்து பொறுக்கி ஒரு பையில் போட்டு அதை ஏழைகளுக்கு வினியோகம் செய்யச் சொல்லிவிட்டார்கள். கோவிலில் ஒரு ஓலை நறுக்கு கொடுத்து தினசரி பகல் பொழுதில் ஒருவேளை உணவு எனக்கு தர வேண்டும் என்பதை கட்டளையாக எழுதுங்கள் அதுபோதும் என்று சொன்னார்கள். அந்த ஓலை நறுக்கை கீழைசாளுக்கியத் தின் சார்பாக கோவிலுக்கு கொடுத்திருக்கிறேன். அது தவிர, கோவிலுக்கு நான் கொடுத்த நன்கொடையினுடைய நன்றியுடையதலாய் இதைச் செய்ய சொல்லியிருக்கிறேன். ஒருவேளை சோற்றுக்குத்தான் அவர் எனக்கு ஜோதிடம் சொன்னார். அவர் என் தாயைப் பற்றியும், என் தந்தையைப் பற்றியும், என் தந்தையின் இறப்பு பற்றியும், இரண்டாவது பெண்ணினுடைய சீற்றம் பற்றியும், அந்த இரண்டாவது பெண் ணின் மகன் பற்றியும் எனக்கு தெளிவாகச் சொன்னார்கள். மறுபடியும் அவன் அரசாளுவான் என்றும் சொன்னார்கள். அதாவது நாம் இருவரும் அரியணை ஏறிய பிறகு மறுபடியும் அவன் உள்ளே நுழைவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, எந்த காரணம் கொண்டும் மேலை சாளுக்கியத்தின் பக்கம் போக வேண்டாம் என்று சொன்னார்கள்.

அம்மங்காதேவி அவர்களே, உங்கள் பயம் தேவையற்றது என்பதை சொல்வதற்காகவே நான் இவ்வளவு தூரம் பேச வேண்டியதாகி விட்டது. மறுபடியும் என் சகோதரன் இங்கு அரசாள வருவான் என்றால் எனக்கு எவளோடு மணத்தொடர்பு வேண்டும். எனக்கு இராஜேந்திரர் போதும், இராஜேந்திர ருடைய மகளை சீராடினால் தான் கீழை சாளுக்கியம் நலமாக இருக்கும். கீழை சாளுக்கியம் நலமாக இருந்தால்தான் நான் நலமாக இருப்பேன். நானும், கீழை சாளுக்கியமும் நலமாக இருந்தால்தான் சோழதேசம் பலமாக இருக்கும். இந்தக் கணக்கு எனக்கு தெள்ளத் தெளிவாக புரிகிறது.

பரத கண்டத்தின் தென்பகுதி முழுவதும் ஒரே குடைக்கு கீழ் ஆட்சிசெய்ய வேண்டும் என்ற எண்ணம் இராஜேந்திர சோழருக்கு உண்டு என்பது எனக்கு தெரியும். அவருடைய நிர்வாகத்தை நான் முழு மனதாக ஏற்கிறேன். அவருக்கு இணை யாக என் மகன் வருவான் என்ற செய்தி எனக்கு சந்தோஷம் அளிக்கிறது. நீங்கள் பேசுகின்ற தெளிவும், என்னுடைய எண்ணமும் ஒன்றாக இருக்கும்பொழுது நாம் நல்ல கணவன் மனைவியாக நிச்சயம் இருக்க முடியும் என்று தோன்றுகிறது.

நீங்கள் இங்கு வந்தது சந்தோஷம், எனக்காக இன்னொரு உதவி செய்ய வேண்டும்.''

''என்ன?'' அவள் ஏறிட்டு நோக்கினாள்.

''இந்த அரண்மனையை சுற்றி பார்க்க வேண்டும். இங்கு தான் நீங்கள் தங்கப் போகிறீர்கள். இந்த இடத்தில் உங்களுக்கு என்ன வசதி வேண்டும் என்று நீங்கள் சொல்ல வேண்டும். என் தந்தை இறந்த படுக்கையை நீங்கள் பார்க்க வேண்டும். அதையும் இந்த சிங்காசனத்தை போல் நீங்கள் வணங்க வேண்டும். என் தந்தை இன்னும் அங்கு இருக்கிறார் என்பதே என்னுடைய எண்ணம். அதை உங்களால் உணர முடிகிறதா என்றும் பாருங்கள்.'' அவன் அவளை அழைத்துப் போனான், வீரர்கள் பின்தொடர்ந்தார்கள். மேலே உள்ளவர்கள் விரைவாக நகர்ந்தார்கள்.

அந்த இடம் சுத்தமாகவும், வெளிச்சமாகவும் இருந்தது. அவள் விமலாதித்தன் இறந்த படுக்கையை மெல்ல தடவி னாள். தலையணையை முத்தமிட்டாள்.

''அய்யனே, நீங்கள் நொந்து இறந்திருப்பது எனக்கு தெரிகிறது. என் அடிவயிறு குழைகிறது. இனம்புரியாத வேதனை ஒன்று என் நெஞ்சில் மிதக்கிறது. உங்கள் வேதனை என்னையும் தொடுகிறது. உங்கள் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு இந்த இடத்தில் நான் வந்த பிறகு உமக்கு நான் அணையாத நெய் விளக்கு ஏற்றுவேன். இந்த அரண்மனையிலேயே இருக்க முயற்சி செய்வேன். இந்த இடத்தில் இருந்தபடியே கீழை சாளுக்கியம் முழுவதும் என் பார்வை படர நீங்கள் உதவி செய்ய வேண்டும். அய்யனே, அமைதியாக இருங்கள். எங்கள் வாழ்க்கையை ஆசீர்வதித்தருளும். இனிமையான தம்பதிகளாக, இணக்கமுள்ள தம்பதிகளாக நாங்கள் இருக்க உங்களை பிரார்த்தனை செய்கிறேன். நல்ல குழந்தைகளின் பொருட்டு உங்களை நமஸ்கரிக்கிறேன். உங்கள் பேரப் பிள்ளைகளை நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டும். அவள் கட்டிலை தழுவியபடியே கிடந்தாள். கண்ணில் நீர் கோர்த்து கன்னம் வழிந்து படுக்கையை நனைத்தது. அவன் சந்தோஷ மானான். இதைவிட பெரிய மரியாதை தன் தகப்பனுக்கு இல்லை என்று அவனுக்கு தோன்றியது. எப்பொழுது என் தகப்பனுக்கு இவ்வளவு பெரிய மரியாதை செய்கிறாயோ, என் தாய் செய்யாத மரியாதையை நீ தருகிறாயோ, உன்னை நான் கண்ணெனக் காப்பேன். இது உறுதி. அவன் மனதுக்குள் சபதம் மேற்கொண்டான்.

அவனுடைய பூஜை அறையில் நான்கடி உயர வேங்கடவன் கருஞ்சிலை இருந்தது. மலர்மாலைகள் அதை அலங்கரித்தன.

''நாங்கள் சைவம்தான் எனினும் திருப்பதிக்கு போன பிறகு திருமாலின் பக்தனாகி விட்டேன். தினமும் சிகப்பு நிற ஸ்ரீ சூர்ணம் அணிவேன். இப்போது அழிந்திருக்கலாம். பண்டிகை நாட்களில் மூன்று கோடுகளுடைய நாமம் அணிவது என்னுடைய விருப்பம். இராமாயணம் ஒருமுறை முழுவதும் படித்திருக்கிறேன். மறுபடியும் படிக்க முயற்சிக்கப் போகிறேன். இது கீழை சாளுக்கியத்தினனான என்னுடைய பிரார்த்தனை என்று சொல்லியே ஆரம்பிக்கிறேன். உங்கள்

எண்ணம் சோழ தேசமாக இருக்க, என் எண்ணம் கீழை சாளுக்கியமாக இருக்க, நாம் இருவரும் கை கோர்த்தால்தான் பலம் என்று தெரிந்திருக்க நாம் சத்தியமாக, நேர்மையாக இணைவோம்.'' அவன் சொன்னான். அவள் சிரித்தாள்.

''நானும் உங்களை சந்தோஷப்படுத்த ஒரு வாக்குறுதி கொடுக்க விரும்புகின்றேன்.''

''நல்லது. கேட்க காத்திருக்கிறேன்.'' அவன் சிரிப்போடு பேசினான்.

''உங்களுக்கு தமிழ் தெரியும். எழுதவும் படிக்கவும் தெரியும் என்பதை நான் அறிவேன்.''

''ஆமாம்.''

''அதேபோல் நான் தெலுங்கு எழுதவும், படிக்கவும், கவிதைகள் செய்யவும் கற்றுக் கொள்ளப் போகிறேன். தினமும் பண்டிதர் சபை கூட வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. கல்வி அறிவு உடையவர்களை நாம் நேசித்து கொண்டாடினால் அவர்கள் போய் ஜனங்களிடம் நம் பெருமையை சொல்வார்கள். ஜனங்களுக்கு நான் அன்னியன் என்று விலகல் இல்லாது அருகே வந்து பேசும்படியாக இருக்கும். தங்கள் மொழியை பேசுகின்ற ராணியை அவர்கள் விரும்புவார்கள். சில வார்த்தைகள் கற்றுக் கொண்டிருக்கிறேன்.''

''அப்படியா.'' அவன் வியந்தான்.

''பாகுன்னாராய்யா'' அவள் பிரியமாகக் கேட்டாள். அவன் வாய்விட்டு சிரித்தான்.

''உன்னானம்மா.'' அவன் பதில் சொன்னான். அவர்கள் இருவரும் கீழ் இறங்கினார்கள். கூடம் தாண்டினார்கள். தாழ்வாரப் பகுதிக்கு வந்தார்கள். அங்கிருந்தபடி மாளிகை வாசலை பார்த்தார்கள். தொலைவில் நின்ற கூட்டம் அருகே ஓடி வந்தது. சிறு தேரை சுற்றிக் கொண்டது. அவர்கள் இரண்டு பேரும் அருகருகே நிற்பதை பார்த்து மேல் துணியை மேலே விசிறி, 'கீழை சாளுக்கியம் வாழ்க' என்று சப்தம் இட்டது.

அவள் வலியப் போய் தனது இடது கையை அவன் வலது கையோடு கோர்த்துக் கொண்டாள். அவன் தன் இடது கையை வாளின் மீது வைத்துக் கொண்டான். அவளின் கை கோர்த்தபடி முதல் தாழ்வாரத்திலிருந்து அடுத்த தாழ்வாரம் இறங்கி, அடுத்த தாழ்வாரத்தின் மாளிகை கடைசி படிக்கு வந்தான். ஜனங்கள் அருகே வர, காவலர்கள் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். அவள் நடந்து சிறு தேர் ஏறினாள். அதன் குடைக் கம்பை பிடித்துக் கொண்டாள். ஜனங்கள் இன்னும் திமிற வழிவிடுங்கள் என்று சமிக்ஞை செய்தாள். ஜனங்கள் ஓடிவந்து அவளை சுற்றிக் கொண்டார்கள். விதம் விதமான குரலில் தெலுங்கு மொழி அங்கு பேசப்பட்டது.

''நீங்கள் யார்?'' என்று கேட்கப்பட்டது.

''நானா, அவரிடம் கேளுங்கள்.'' என்று இராஜராஜ நரேந் திரனை கை காட்டினாள்.

''சோழ சக்ரவர்த்தி இராஜேந்திர சோழருடைய இரண் டாவது மகள். எனக்கு மனைவியாகப் போகிறவள். கீழை சாளுக்கியத்தின் அரசியாக மின்னப் போகிறவள். உங்களுக் கெல்லாம் மகாராணியாக திகழப் போகிறவள். மேன்மை மிகுந்த மகாராணி அம்மங்கா தேவி.'' என்று உரத்த குரலில், கிட்டத் தட்ட கட்டியக்காரன் சொல்வது போல சொல்ல, அவர்கள் மறு படியும் கூச்சலிட்டார்கள்.

''வாழ்க வாழ்க'' என்று சொன்னார்கள்.

''வருக, வருக'' என்று சொன்னார்கள். எல்லா கூச்சலும் தெலுங்கு மொழியிலேயே இருந்தது. அவள் ஒரு கிழவனை அழைத்து அவனை பார்த்தாள். மறுபடியும் கிழவனை பார்த் தாள். ''பாகுன்னாராய்யா'' என்று கேட்டாள். கூட்டம் வெறி பிடித்தது போல் கத்தியது.

'உன்னானம்மா. உன்னானம்மா', கேட்காதவர்கள் எல்லோ ரும் பதில் சொன்னார்கள்.

ஒரு மொழியுனுடைய ஆளுமை அப்படிப் பட்டது. ஒரு மொழி உணர்வு பரிமாற்றத்திற்கு மிக முக்கியமானது. தன் மொழியை பேசக்கூடிய ஒரு மகாராணி வந்திருக்கிறாள்

என்பது அவர்களுக்கு மட்டில்லாத சந்தோஷத்தை கொடுத்தது. அவள் தெலுங்கை விரைவில் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உறுதி செய்து கொண்டாள். அவன் விடை கொடுத்தான். தேர் நகர்ந்தது. ஜனங்கள் பின் தொடர்ந்தார்கள். அவள் நிற்கும்படி ஆணையிட்டாள். கூட்டம் நின்றது. தேர் வளைந்து, திரும்பி வந்த இடம் நோக்கி ஓடிற்று.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். தன் வாழ்க்கை நன்றாக இருக்கும், உயர்வாக இருக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு வந்தது.

★ ★ ★

அத்யாயம் 68

பொன்னன் காரி மறவன் அல்ல உழவன். ஆனால் வீட்டிற்கு ஒரு ஆண் ஈட்டி ஏந்தி வரவேண்டும் என்று சொன்னதும் அவனுடைய தமையனார்களை ஊர் சந்தித்து அவனை அனுப்பும்படி கேட்டுக் கொண்டது. பத்து நாட்களுக்கு ஒரு வாள் பயிற்சி ஏற்பாடு செய்தது. பயிற்சி முடிந்ததும் பிடியில் அவன் பெயர் பொறித்த நீண்ட வாளை கொடுத்தது. இடுப்பில் சொருகிக் கொள்ளும் கட்டாரியை கொடுத்தது. அவனுடைய ஈட்டியை அவன் எடுத்துவரலாம் என்று சொன்னது.

அவன் குடந்தைக்கு அருகே உள்ள பழையாறையிலிருந்து கிளம்பி தஞ்சை மாநகருக்கு வந்தான். பழையாறை அவன் பிறந்த ஊர். அந்த ஊரில் அவன் மட்டும் பிறக்கவில்லை. மிகப் பெரிய மன்னர்களெல்லாம் பிறந்திருக்கிறார்கள். அந்த மன்னர்களுடைய மாளிகையெல்லாம் தகதகத்து மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. அருகே மிகப் பெரிய காவிரியின் கிளை நதி போக விவசாயம் நன்கு நடந்து வந்தது. தண்ணீர் குறைவாக இருக்கும் நாட்களில் ஒரு போகமும் காய்கறியும் விளையும். அருகே மன்னருடைய குடியிருப்புகள் இருந்ததால் பொதுமக்கள் அதிகம் சத்தம் செய்யாமல், ஆரவாரம் செய்யாமல் அமைதியாக வாழ பழகியிருந்தார்கள்.

பொன்னன் காரி யுத்தம் செய்ய போகிறோம் என்ற சந்தோஷம் மட்டும் அல்லது நெடுந்தொலைவு வடக்கே போகப் போகிறோம். கங்கையை தாண்டி கயிலைக்கும் போகலாம். அதுவரை ஊத்தை அடையாமல் இருக்க வேண்டும் என்று சந்தோஷப் பட்டான். ஊத்தை அடையாமல் இருக்க ஒரு நல்ல கருப்பு கிடாவை கருப்பண்ணசாமிக்கு பலி கொடுத்தான். அதில் சிறிதளவு ரத்தம் மட்டும் விரலால் நக்கி குடித்துவிட்டு அந்த மாமிசத்தை பஞ்சமர்களிடம் கொடுத்து விட்டான்.

''நான் சொல்லுதேன். நீ நல்லா வருவே. நான் சொல் லுதேன் நீ நல்லா வருவே.'' அவன் ஊர் எல்லையை தாண்டி வரும் வரையில் ஆண்களும் பெண்களுமாய் அந்த ஆட்டு மாமிசம் கொடுத்ததற்கு நன்றியாய் வழி முழுக்க வாழ்த்திக் கொண்டு வந்தார்கள். மற்றவர்களெல்லாம் இப்படி வாழ்த்த வெட்கப்படும் பொழுது அந்த வெள்ளை மனம் கொண்ட ஜனங்கள் மிக உற்சாகமாக வாழ்த்த வந்தார்கள்.

''போதும். நான் தஞ்சை நோக்கி போகிறேன்'' என்று சொன்னதும் அவனை ஊர் எல்லையில் நிற்க வைத்து குலவை போட்டார்கள். ''ஏதேனும் கொடு. என்று பெண் மடியை விரித்து நீட்டினாள். அதில் ஒரு கழஞ்சு பொன் போட்டான். அவள் சந்தோஷத்தில் துள்ளி குதித்தாள்.

''உனக்கல்ல. ஊருக்கு.'' என்று சொன்னதும், ''சரி'' என்று பல் தெரிய சிரித்தாள். அந்த ஒரு பொன்னுக்கு மூன்று, நான்கு கூடைகள் நெல் கிடைக்கும். அவள் சந்தோஷமாக குலவை போட்டாள்.

பொன்னன் காரி தஞ்சைக்கு போய் அங்கிருந்து ஜெயங் கொண்டத்திற்கு போய் ஜெயங்கொண்டத்திலிருந்து எசாளம், எண்ணாயிரம் போய், எசாளம், எண்ணாயிரத்திலிருந்து காஞ்சி புரம் போய், காஞ்சிபுரத்தில் பதினைந்து நாட்கள் வெறுமே ஊர் சுற்றி பார்த்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளைக்கு ஒவ் வொரு கோவிலாக சுற்றிவிட்டு வந்தான். ஒவ்வொரு இடத் திலும் ஒரு கதை கேட்டான். எசாளம், எண்ணாயிரம் பிரமிப் பாக இருந்தது. நல்ல கட்டுமானமாக ஊர் இருந்தது. ஊர் முழுவதும் அந்தணச் சிறுவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். காலை விடிந்த உடனேயே வேத கோஷங்கள் காதில் கேட்டன. மிகச் சிறந்த ஆச்சாரியார்கள் தெருவில் நடந்தபடி பள்ளிக்கு வந்தார்கள். பாடசாலையில் படி ஏறினார்கள். அவர்கள் வரும் இடத்தில் பெண்கள் நீர் தெளித்து கோலமிட்டு வைத்திருந்தார் கள். ஊர் மிகப் பண்பாடாக இருந்தது. காஞ்சிபுரத்தில் கூட குதியல் உண்டு. நாடகங்கள் உண்டு. பாட்டுகள் உண்டு. கூத்துகள் உண்டு. பொது மகளிர் கொத்து கொத்தாய் இருக் கின்ற வீதிகள் உண்டு. ஆனால், எசாளம், எண்ணாயிரத்தில் அது இல்லை. அது அந்தணர் குடியிருப்பு, பாடசாலை மிகுந்த

இடம். அங்குள்ள சிவன் கோவில் சுற்றி உள்ள பல்வேறு மாளிகைகளில், பல்வேறு ஆசிரியர்கள் உட்கார்ந்து தங்கள் குழந்தைகளுக்கு பாடம் போதித்தார்கள். ஒவ்வொரு மாளிகை களிலும் தனியாக சமையல் ஆகிக் கொண்டிருந்தது. மாணவர் களுக்கு மதியம் உணவு கொடுத்து சற்று நேரம் கண்மூடி அமர்ந்து கொள்ளச் சொல்வார்கள். இரவு ஏழு மணிக்கெல் லாம் ஊர் உறங்கிவிடும். பாட்டு, கூத்து எதுவும் இருக்காது. எப்பொழுதாவது இராமாயண, மகாபாரத கதை இருக்கும். அதையும் அவசரமேணியில் தான் அந்தண ஆச்சாரியார்கள் அனுபவிப்பார்கள்.

இராஜேந்திர சோழரின் குலகுரு அங்கு வசித்துவந்தார். ஈசான சிவ பண்டிதருடைய மேற் பார்வையில் அந்த ஊர் மிகக் கட்டுப்பாடாக இருந்தது.

வீரர்கள் வந்ததும் 'மெல்லப் பேசுங்கள்' என்று உத்தர விடப்பட்டது. அவர்களுக்கு திண்ணையில் படுக்க இடம் தரப் பட்டது. பாடசாலைக்கு நன்கொடை கொடுங்கள் என்ற கேட்கப்பட்டது. வீரர்கள் செப்புக்காசுகள், பொன்காசுகளை கொடுத்து அதற்கு தகுந்த மரியாதைகளை வாங்கிக் கொண் டார்கள். திருநீறு கொடுத்து அதை குழைத்து இட்டுக் கொள்ளச் சொன்னார்கள். எசாளம், எண்ணாயிரம் ஒரு அமைதி யான பட்டிணம் என்றால் காஞ்சிபுரம் இன்னும் பெரியது. இன்னும் கூத்து அதிகம். இடைவெளி விட்டு இடைவெளி பெரிய குடிசைகள் இருந்தன. எதற்கு இவ்வளவு பெரிய குடிசை கள் என்ற போது உள்ளே மூன்று, நான்கு தறிகள் இருப்பது தெரிந்தது. அந்த தறிகளுக்கு காற்று வருவதற்காக மேலே திறந்து விடப்பட்டிருந்தது. வெள்ளை நிற பலகைகள் அங்கங்கே திருப்பி விடப்பட்டு அந்த தறி இடம் வெளிச்சமாக இருந்தது. அதைத் தவிர விளக்குகளும் இருந்தன. நூல் அறுந் திருந்தால் அந்த விளக்கொளியில் எளிதாக முடிச்சுபோட்டு ஒட்டி அறுத்து மறுபடியும் கோலுக்குள் நுழைத்து குறுக்கும், நெடுக்குமாக அவைகளை அனுப்புவார்கள். தறி நெய்வதை பார்ப்பதே ஒரு சுகமாக இருந்தது. என்னால் இயக்க இயலுமா என்று கேட்டபோதே அவர்கள் சிரித்தார்கள். "ஒரு மாதம் கட்டை விரல் நோகும்படி உழைத்தால் பிறகு சிறிதளவு கற்றுக் கொள் ளலாம்."

''நீங்கள் எவ்வளவு நாளில் கற்றுக் கொண்டீர்கள்.''

''பத்து வயதிலிருந்து இதோ இந்த முப்பத்தாறு வயது வரை இதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.'' அவர்களின் ஒவ்வொரு இழுப்புக்கும் குழல் உள்ளே போவதை பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். 'டடார் டடார் டடார்' என்ற சத்தம் காதுக்கு நல்ல ஒலியாகப் பட்டது. பெரிய பெரிய வெள்ளை துணிகளை தோளில் சுமந்து வந்தார்கள். பெரிய பானையில் வெந்நீர் கொதிக்க வைத்தார்கள். வெந்நீரில் முக்கி எடுத்தார் கள். பிறகு தொட்டியில் சாயம் கலக்கினார்கள். சாயத்தில் அந்த துணி உறையை அமுக்கி சாயம் தோய்த்தார்கள். ஒருநாள் அந்த துணி சாயத்தை உறிஞ்சி கொள்ளும்படி வைத்தார்கள். பிறகு எடுத்து கொடிகளில் உலர்த்தினார்கள். நீண்ட ஒரு நீள பாம்பு போல அந்த துணி குறுக்கும், நெடுக்கும் கட்டிய கயிறுகளில் தவழ்ந்திருந்தது. தரையெங்கும். நீலச்சாயம் படர்ந்திருந்தது. பலபேருடைய கைகளில் எப்போதோ தோய்த்த சாயங்கள் ஒட்டியிருந்தன. சில பெண்களுக்கு நெஞ்சு முழுவதும், முகம் முழுவதும், கை முழுவதும் சிகப்பு, பச்சை, நீலம் போன்ற சாயங்கள் இருந்தன. அதைப்பற்றி அவர்கள் கவலையில்லாது இருந்தார்கள். பிறகு சாயம் தோய்த்த துணியில் வேறு ஒரு வர்ணத்தை எடுத்து வட்ட் வட்டமாக எழுதினார்கள். அதற்கு சுங்கிடிச்சேலை என்று பெயரிட்டார்கள். நீண்ட கட்டையால் வட்ட அச்சு வைத்து பூப்பூவாக பதித்தார்கள். அது இன்னும் சிறப் பாக இருந்தது. உடம்பு முழுவதும் நீலத் துணியில் சாமந்திப்பூ பூத்திருந்தன. ஒரு பெண்ணுக்கு அதை மேலே போட்டு பார்த்தார்கள். சட்டென்று அவள் முகமே மாறிப்போயிற்று. துணி அத்தனை அற்புதமாக இருந்தது. பிறகு அது காய்ந்த வுடன் கரை எழுதினார்கள். இறுக்க கட்டி அதன்மீது அச்சு அச்சாக வைத்தார்கள். காய்கறியில் முத்திரை பதித்தார்கள். அந்த அச்சு வளைவு வளைவான வேலைப்பாடுகளுடன் இருந்தது. மொத்தத் துணியும் வெகு விரைவில் தயாராகியது. அந்த துணிக்கு நல்ல விலை கிடைத்தது. வியாபாரிகள் துணி நன்கு உலரும் வரை காத்திருந்து பிறகு மூடிய மாட்டு வண்டி யில் எடுத்துப் போனார்கள். காஞ்சிபுரத்திலிருந்து மயிலைக்கும் மற்ற ஊர்களுக்கும் அந்த துணிகள் பிரயாணம் செய்தன. சோழ

தேசத்திற்குக்கூட இரண்டு மாட்டு வண்டிகள் நகர்ந்தன. ஒரு தெருவில் இம்மாதிரி பலநூறு குடும்பங்கள் புடவைகள் தயார் செய்தன.

ஆண்களும், பெண்களும் அந்த புடவைகளை வாங்கி உடுத்திக் கொண்டார்கள். அந்தணர்கள் மட்டும் பழுப்பான துணியை வாங்கிக் கொண்டார்கள். வெண்நிறமும் இல்லாது அதே சமயம் கறை போட்ட வேட்டியை அவர்கள் தயாரித் தார்கள். அந்தணர்களுக்காக வியாபாரிகள் அதை காசு கொடுத்து வாங்கிப் போனார்கள்.

எசாளம், எண்ணாயிரம் ஒரு போகம் விளையும் நிலம். நீரூற்றுகள் இருந்தாலும் விவசாய சத்தங்கள் வரக்கூடாது என்று அந்த ஊரின் பல இடங்களை வெறும் புல் வளர்க்கும் இடங்களாக மாற்றியிருந்தார்கள். அந்த புல் நிலங்களில் மாடுகள் மேய்ந்தன. புல் நிலங்களில் நீர் திருப்பி சேறாக்கி னார்கள். புற்கள் செழித்து வளர்ந்தன. வயல் என்பதே சற்று தள்ளிதான் இருந்தது. மாடு ஓட்டும் சத்தம் ஊருக்குள் கேட்கக் கூடாதாம். மாடுகளின் காதுகளில் கூட, கொண்டை மணியோ, கழுத்து மணியோ இல்லை, மாடுகள் அமைதியாகப் போய் அமைதியாக திருமபின. அமைதியான அந்த கிராமத்தை தாண்டி தொண்டை நாட்டிற்கு பயணம் செய்கிறபொழுது வழி நெடுக நெல்வயல்கள், பலா மரங்கள், மா மரங்கள் என்று பெரும் தோப்புகள் இருந்தன. தென்னந்தோப்பும் இடை யிடையே தென்பட்டது. காய்கள் மிக ருசியாக இருந்தன. பூந்தோட்டங்கள் இருந்தன. காஞ்சிபுரத்திற்கு அந்த பூக்களை குதிரையிலும், கழுதையிலும் ஏற்றி ஒரே இரவில் கொண்டு போய் சேர்த்தார்கள். காஞ்சிபுரத்தில் பல கோவில்களில் அவற் றிற்கு நல்ல விலை இருந்தன. பொது மகளிர் ஆவலாக அந்த பூக்களை வாங்கிக்கொண்டார்கள். வெளியே இருந்த சாத்தாணி தெருவிலிருந்து உள்ளே பூக்கள் போனதும் குவியல் குவிய லாக போடப்பட்டு விற்பனையாகின.

வேறொரு பக்கம் பாத்திரங்கள் செய்தார்கள். வேறொரு பக்கம் உணவு பண்டங்கள் செய்தார்கள். ஊரை புகையாக அடிக்காமல் ஊருக்கு வெளியே இவையெல்லாம் வைத்துக்

கொண்டு மாட்டு வண்டிகளில் பண்டங்கள் ஏற்றி ஊருக்கு கொண்டு வந்தார்கள். ஒரு மாட்டு வண்டி நிறைய அப்பம் வந்தது. தட்டு தட்டாக காஞ்சிபுரத்தின் எல்லா பகுதிக்கும் போயிற்று. காஞ்சிபுரம் என்ற நகரம் எது கொடுத்தாலும் வாங்கிக் கொண்டது.

மர வேலைகள் செய்பவர்கள் ஒரு பக்கம் இருந்தார்கள். அவர்களும் பொம்மைகளை, கதவு நாதாங்கிகளை, பெரிய கதவுகளை, மர இருக்கைகளை செய்து அனுப்பினர். ஊர் தூசு, துரும்பு இன்றி, சத்தம் இன்றி அதே சமயம் எதுவும் கிடைக்கும் இடமாக இருந்தது. காஞ்சிபுரத்திலிருந்து போகப் போக பல ஊர்களின் செழிப்பு மனதை தாக்கிற்று. அவையெல் லாம் நிரம்ப சத்தத்தோடும், கூச்சலோடும், சில நேரங்களில் சண்டை, சச்சரவுகளோடும் இருந்தன.

எசாளத்தின் அமைதி ஒருவிதம். காஞ்சிபுரத்தின் அமைதி ஒரு விதம். அது தாண்டி பலா மரங்களுக்கு நடுவேயுள்ள ஊரின் அமைதி ஒருவிதம், அதைத் தாண்டி கடற்கரை ஓரமாக திருவான்மியூர் வந்து அங்குள்ள வைத்தியநாதரை நமஸ்கரித்து கிளம்ப, திருவான்மியூரிலும் காய்கறிகள் அதிகம் விற்றன. இந்த காய்கறிகள் மயிலை போகின்றனவாம். இந்த திருவான் மியூர் நெற் கதிருக்கு நல்ல மதிப்பு உண்டாம். திருவான் மியூரிலிருந்து பல வண்டிகள் நகர்ந்து மயிலாப்பூருக்கு வந்தன. மயிலையை பார்த்ததும் பிரமிப்பாக இருந்தது. எப்பேர்பட்ட நகரம். எவ்வளவு வணிகர்கள். எத்தனை விதமான பெண்கள் என்று ஆச்சரியமாக இருந்தது. நான்கு புறமும் கட்டிடங்கள். பெரிய பெரிய வீடுகள். வீதிகளுக்கு நடுவே கரகாட்டக்காரர் கள். தடியில் ஏறி வித்தை செய்பவர்கள். கயிற்றில் ஆடி கரணம் அடிப்பவர்கள் என்று பொழுது போக்காகவே எல்லா விஷயங் களும் இருந்தன.

மயிலையிலிருந்து திடீரென்று கிளம்பச் சொன்னார்கள். வேங்கி நோக்கி வந்து, வேங்கியில் எந்த சண்டையும் இல்லா மல் ஊரை சுற்றிப் பார்த்து, அங்குள்ள பெண்டிரோடு காசு கொடுத்து சல்லாபமாக இருந்து பிறகு அங்கிருந்து கிளம்பி கோதாவரி நதி தாண்டி, ஒட்டதேசம் உள்ளே நுழைந்ததும் இது வரை இல்லாத கடுமையான யுத்தம் வந்து விட்டது.

முதுகு வாள் படையினர் நூறு பேர் நின்றிருந்தார்கள். இரண்டு மலைக்கு நடுவே உள்ள பாதையாக இருந்தது. அதன் வழியாகத் தான் ஒட்டர்கள் வருகிறார்கள் என்று சொல்லப் பட்டது. ஒட்டர்களை போய் தாக்காமல் அவர்கள் வந்ததும் தாக்க லாம் என்று நூறு பேர் நின்றிருந்தார்கள். அந்த நூறு பேருக்கு இடதும், வலதும் ஐம்பது ஐம்பது பேராக ஆட்கள் நின்றிருந் தார்கள். வலது பக்க ஐம்பது பேரில் பொன்னன் காரி நின்றிருந் தான். அடித்து, துவைத்து ஒட்ட தேசப் படைகள் முன்னேறி னால் அதை சுற்றி வளைத்துக் கொள்ளவும், திரும்ப ஓடி வந்தால் அடித்து தாக்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். கொஞ்சம் ஒதுக்குப்புறமாக நின்றிருந்தார்கள்.

ஒட்டர்படை சீறலுடன் ஓடிவந்தது. ஆட்கள் பாதரட்சை யுடனும், இறுக்கி கட்டிய உடையோடும், நீண்ட வாட்களோடும் இருந்தார்கள். எல்லா வீரர்களும் தடியாக இருந்தார்கள். உயர மாக இருந்தார்கள். ஒருமாதிரி சிகப்பாக இருந்தார்கள். 'வாடா சோழ நாயே' என்று கொக்கரித்தார்கள். சோழ வீரர்கள் வேக மாகத் தாக்கினார்கள். ஆனால் ஒட்ட வீரர்கள் தாக்குதல் வேக மாக இருந்தது. மிகக் கூர்மையாக இருந்தது. மிகக் கணக்காக இருந்தது. ஒரே நேரத்தில் இரண்டு பேரை வெட்டுகின்ற வேகம் அவர்களிடம் இருந்தது. அடித்து, துவைத்து, நெஞ்சுக் குள் கத்தி சொருகுகின்ற வித்தை தெரிந்திருந்தது. மூன்று நிமி டத்தில் நூறுபேர் கொண்ட சோழப்படை சிதறடிக்கப்பட்டது. பல வீரர்கள் உயிரற்று சடலமாக விழுந்தார்கள்.

பள்ளம் இறங்கி, மேடு ஏறி பொன்னன் காரி ஒட்டர்களை தாக்கினான். முதல் நூறு பேரை துவைத்த அந்தப்படை தாண்டி அடுத்த நூறுக்கு போயிற்று. இவன் இரண்டாவது நூறு படை யில் எதிர் கொண்டான். அந்தப்படை முதல் படையை விட மோசமாக இருந்தது. பெரிய உருவம் கொண்டவனும், தலைப் பாகை கட்டியவனும், அந்த தலைப்பாகையின் மீது தங்கக் கயிறு போட்டு இறுக்கியவனும், கேயுரங்கள் கொண்டவனும், குறுக்கே பூணூல் கொண்டவனும், இடுப்பில் தர்ப்பை யினால் பட்டையாக அணிந்திருந்தவனும், அந்த பட்டையில் வாள் உறையை சொருகியவனும், கையில் அகலமான வாள்

வைத்து இருப்பவனும், பாத ரட்சை கொண்டவனும், கழல்கள் தாங்கியவனும் உள்ள ஒருவன் ஓடிவந்தான். அவன் குதிரை யிலிருந்து சட்டென்று கீழே இறங்கி பொன்னன்காரியை நோக்கி ஓடிவந்தான். அவன் எதிரே வருபவன் தாக்கட்டும் என்று மடங்கி உட்கார்ந்து, கேடயத்தை நீட்டி, வாளை உருவி வைத்திருந்த பொன்னன் காரியை நோக்கி அவன் பத்தடி தூரத்தில் உயரே குதித்தான். அவன் தலைக்கு வருவான் என்று காரி நிமிர்ந்து பார்ப்பதற்குள் தன் வலக்காலால் அவன் கேட யத்தை உடைத்தான். தன் கையில் உள்ள கத்தியால் அவன் கத்தியை தட்டினான். அந்த கத்தியை தட்டி அதே வேகத்தில் இடப்பக்கம் உள்ள கன்னத்தில் அடித்தான். அவன் திமிறி எழு வதற்குள் வலப்பக்கம் அடி விழுந்தது. தோள்பட்டையில் அடி விழுந்தது. நெஞ்சில் வாளின் பிடியால் பொக்கென்று குத்தி னான். கீழே சமாளித்து விழ காலை இடறினான். மல்லாக்க கிடக்க அவனது வலக்கை அழுத்தி காலால் மிதித்து நசுக் கினான். மறுபடியும் தோள் பட்டையை ஓங்கி அடித்தான். எலும்புகள் உடையும் சத்தம் கேட்டது. வலக்கை வலியில் துடித்தது.

''சோழ வீரர்களை இறந்த பிறகு நெஞ்சு கீறி அனுப்பு வார்களாமே. நான் உயிரோடு இருக்கும் பொழுதே உன்னை நெஞ்சு கீறட்டுமா.'' அவன் உரக்கப் பேசினான். அவன் வடமொழியில் பேசியது அவனுக்கு புரிந்தது. அவன் எழுந் திருக்கும் போது தொண்டைக்குழியிலிருந்து தொப்புள் வரை நீண்டதாகக் கிழித்தான். மறுபடியும் தலையில் வாளின் அகலப் பக்கத்தோடு ஓங்கி அடித்தான். அவன் கண் கிறங்கி சாய, அவனைத் தாண்டி ஓடுவது தெரிந்தது.

''யார் அவன், யார் அவன்.'' கொஞ்ச நேர வலிக்குப் பிறகு அவன் விழித்துக் கொண்டான். அவனை ஏணியில் சோழ தேசத்து வைத்தியர்கள் தூக்கிக் கொண்டு போனார்கள்.

''யார் என்னை அடித்தது?''

''அவனா. அவன் பெயர் இந்திரதத்தன், ஒட்டர்களின் அரசன்.'' என்று பதில் வந்தது. அவன் மறுபடியும் அந்த முகத்தை நினைவுக்கு கொண்டு வந்தான். மூர்ச்சையானான்.

நான்கு நாட்களுக்குப் பிறகுதான் அவனுக்கு மயக்கம் தெளிந்தது. மயக்க மருந்து கலந்த மது கஷாயத்தை அவனுக்கு கொடுத்து அவன் வலியை குறைத்து உறங்க விட்டார்கள். காலையும், மாலையும் நீர்கஞ்சியை வாய்திறந்து மூங்கில் புனல் வைத்து ஊற்றினார்கள். மெல்ல, மெல்ல குடிக்க வைத்தார்கள். பிறகு உடைந்திருந்த எலும்பு ஒன்றாவதற்கு எண்ணெயில் நனைத்த துணியை மூங்கில் பத்தைகள் வைத்து இறுகக் கட்டினார்கள். அந்த கையை உடம்போடு பிணைத் தார்கள். வலது கையிலும் தசைப்பிசகு இருந்தது. அங்கும் எண்ணெய் தடவி இறுக கட்டியிருந்தார்கள். இடுப்பில் வலி இருந்தது. மல்லாக்க விழுந்ததில் அல்லது இந்திரதத்தன் எட்டி உதைத்ததில் ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் சோதித்துவிட்டு, 'இல்லை. தசை பிரண்டு இருக்கிறது' என்றார்கள். இரண்டு கன்னங்களில் விழுந்த அடியும் அவன் முகத்தை கோரமாக உப்ப வைத்திருந்தன. வலது பக்கம் வீங்கி கறுத்திருந்தது. கண்கள் இடுங்கி இருந்தது.

அவன் எழுந்து உட்கார்ந்து ஆற்றங்கரை பக்கம் போய் வந்தான். அவனால் குத்திட்டு உட்கார முடியவில்லை. வலி உயிர் போயிற்று. அருகே இருந்தவன் மூங்கில் கழி வெட்டிக் கொடுக்க, அதை பிடித்துக் கொண்டு எழுந்திருக்க முயற்சி செய்தான். இடுப்பு தள்ளாடிற்று. வலக்கை, இடக்கை இரண் டுமே முழுதாய் வேலைக்கு உதவாமல் இருந்தது. அவன் தடுமாறி சேற்றில் கால் வைத்து, ஆற்றுக்குள் இறங்கினான். இடுப்பு மூழ்கும் வரை குத்திட்டு உட்கார்ந்து கொண்டான். ஆசனவாய் வழியாக நீரை உறிஞ்சினான். பிறகு வேகமாக வெளியே பீய்ச்சினான். பிறகும் நீரை உறிஞ்சினான். வேகமாக நீரை பீய்ச்சினான். மூன்று முறை இவ்வாறு செய்த பிறகு, மலக்குடலும், ஆசனவாயும் சரியாயிற்று. அவன் தள்ளாடி எழுந்து வந்தான். மிக அயற்சியோடு மூங்கில் கட்டிலில் சாய்ந்து கொண்டான். இப்படி ஆசனவாய் அலம்பிக் கொள்ள அவனுக்கு சிறு வயதிலேயே சொல்லப்பட்டிருந்தது.

ஆற்றங்கரையில் புலிகள், முதலைகள் பதுங்கி இருக்கும். ஒரு கையில் மூங்கிலால் குத்திட்டு இன்னொரு கையை அலம்பிக் கொள்ள உபயோகப்படுத்த அவை அந்த நேரம்

பாயும். எனவே, இரண்டு கைகளிலும் ஆயுதம் வைத்து, உறிஞ்சி வெளியேற்ற அவனுக்கு சொல்லிக் கொடுத்திருந்தார்கள். இப்படி சொல்லித்தர அந்தணர்கள் காசு வாங்கினார்கள். ஊரில் பலபேருக்கு இந்த வித்தை தெரிந்திருந்தது. இப்பொழுது சிறிதளவு மதுக் கஷாயமும், மயக்க மருந்தும் கொடுத்தார்கள். வலி தெரியவில்லை. ஆனால் புத்தி தெளிவாக இல்லை. கயிற்று ஊஞ்சலில் இடம் மாற்றிக் கொண்டான். ஆனந்தமாக அசைந்தபடி தூங்கினான்.

மறுபடியும் விழித்தான். ஒட்டதேசத்து அந்தணர்கள் மருந்து பாத்திரங்களோடு முன்னும் பின்னும் அலைவதை பார்த்தான். ''யார் இவர்கள்?'' என்று கேட்டான். ''ஒட்டர்கள்'' என்று சொன்னார்கள்.

''எதிரிகள் தானே.''

''இல்லை. எதிரிகள் இல்லை. ஒட்ட தேசத்தை ஓரளவு அழித்துவிட்டோம்.''

''எப்படி? எப்படி?'' ஆவலாகக் கேட்டான்.

''இராஜேந்திரர் ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதை வைத்துக் கொண்டுதான் அரையன் ராஜராஜன் போர் திட்டத்தை மாற்றி இந்த போரை நடத்தினார்.''

''என்ன விதமாக மாற்றினார்?''

''வாள் படைகளை முன்னே அனுப்பவில்லை. முதல் நாள் நான்கு கைமா சேனைகள் ஒட்டர்களால் அடிபட்டன. திணறின. சோழப்படையில் பதினோறாயிரம் பேர் இறந்தார்கள். இன்னும் ஆறாயிரம் பேர் எழுந்திருக்க முடியாது கிடந்தார்கள். மீதியுள்ள படைகள் பின் வாங்கின. வரும் பாதையில் பள்ளம் தோண்டி, எண்ணெயில் தோய்த்த துணிகள் போட்டு, மூங்கில்கள் போட்டு தீ எரித்தனர். இரண்டு பக்கமும் கடும் நெருஞ்சிமரங்கள் இருக்கின்ற படியால் ஒட்டப்படைகள் முன்னேற முடியவில்லை. அதற்குள் இராஜேந்திரரிடமிருந்து செய்தி வந்தது. வாள் படைகளை அனுப்பாதே சேதமாகும். இரவி அனுப்பிய விற்பொறிகள் இருக்கின்றன அல்லவா. அவைகளை முன்னே அனுப்பு. அந்தப் பாதையில் இருபது இருபதாய் நிற்கவை. முன்னே இருபது, பின்னே இருபது என்று

நிற்க வைத்து அடுக்கடுக்காக உயரமான இடத்தில் போகும் படியாக தேரை நிமிர்த்தி வேகமாக விற்பொறிகளை இயக்கச் சொல், ஒரு பொறியிலிருந்து ஒரு நேரம் ஆறும், கிட்டத்தட்ட ஐம்பது பொறிகளிலிருந்து ஆறு ஆறாக அம்புகள் சாயட்டும், அம்புகள் வானில் போக அவைகள் எதிரியை நாசம் செய் யட்டும், குலைத்து விடட்டும். அங்கிருந்து ஈட்டிகள் வரும். அவைகளை கேடயத்தால் தடுத்துவிட முடியும். ஒட்டர்கள் விற்போரில் சிறந்தவர்கள் அல்ல. வாள் படையில், சிலம்பாட் டத்தில், மூங்கில் எறிவதில் தேர்ந்தவர்கள். எனவே, அம்புகள் தான் அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்கும் என்று சொல்ல, இருபது இருபது வண்டிகளாக ஐந்து இருபது வண்டிகள் முன்னே போயின. சாய்த்து நிறுத்தப்பட்டன. ஒன்றை விட ஒன்று உயரமாக நிற்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டன. பளீரென்று அம்புகள் ஒரே நேரத்தில் கிளம்ப, வானம் முழு வதும் அம்புகள் இருந்தன. மீண்டும் ஒரு சிறிய இடைவெளி யில் மறுபடியும் அம்பு வைத்து அடிக்கப்பட்டன. இரும்பு உருண்டைகள் இருப்பதை அருண்மொழி கண்டுபிடித்தார். தானியம் அடைப்பதற்கு கற்பொதிகளில் அந்த இரும்பு உருண்டைகளை போட்டு அறைப்பதற்கு பயன்படுத்தினார் கள். அந்த இரும்பு உருண்டைகளை அம்பு இருக்கும் இடத் தில் போட்டு இழுத்து அடிக்கச் சொல்ல இரும்பு உருண்டை கள் அந்தப் பக்கம் போய் விழுந்தன. பலத்த சேதம் உண்டா யிற்று. இரும்பு உருண்டைகள் மீது துணிகள் போட்டு எறிய வைத்து அவைகளையும் வீசினார்கள். இப்பொழுது நெருப்பு சீறி ஒட்டப்படையை தாக்கிற்று. அந்தப் பக்கம் பலத்த சேத மாயிற்று, நீண்ட வாட்களுடன், வில் அம்புகளுடன் நம் குதிரை வீரர்கள் உள்ளே நுழைந்தார்கள். கலவரமான படையை தாக்கினார்கள். நம் குதிரை வீரர்கள் உள்ளே நுழைந்ததும் அம்பு எறிவது நிறுத்தப்பட்டு விட்டது. பொறியோடு கூடிய தேர்கள் உள்ளே நுழைந்தன. அடுத்தபடியாக யானைகளை அரையன் ராஜராஜன் அனுப்ப, கோட்டைக்கு உள்ளுக்குள் போய் ஒளிந்து கொண்டு கதவு சாத்திக் கொண்டார்கள். அந்த பெரிய கோட்டைக்குள் அழகான ஒரு கோவில் இருந்தது. அதற்கு ராஜா ராணி என்று பெயராம். இந்திர லிங்கேஸ்வரர் என்று

லிங்கரூபமாக சிவபெருமான் இருக்கிறாராம். அம்பு எறிய கோபுரத்தை தாக்கியது. 'கோவில் இருக்கிறது. கோவில் இருக் கிறது' என்று அங்கிருந்து கத்தினார்கள். ஆனால் அரையன் ராஜராஜன் யோசித்தார். விடவில்லை. இடையறாது தாக்கு என்று சொல்ல, மறுபடியும் அம்பு மழை பெய்தது. கோட்டைக் குள் இருந்தபடியே ஒட்டர்கள் சரணடைந்தார்கள். உள்ளுக்குள் அம்பு வீசவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். இரண்டு வீரர்கள் குதிரையில் வந்து வாட்களை கீழே வைத்து சரண் அடைந்தார்கள். அவர்களிடம் விசாரிக்கப் பட்டது. அவர்கள் வாட்களை பிடுங்கிக் கொண்டு அரையன் ராஜராஜன் திருப்பி அனுப்பினார். உள்ளுக்குள் இருக்கின்ற இந்திரதத்தனை சரண் அடையச் சொன்னார்.

''அடேய், அடேய். அப்படியா, நான் அவனைப் பார்க்க வேண்டுமே. என்னால் போக முடியுமா.'' பொன்னன் காரி கத்தினான். ''இங்கிருந்து நீ மூன்று நாழிகை பயணம் போனால் அந்தப்பக்கம் போய்விடலாம். குதிரையில் ஓடி ஓடி பழகு. முதலில் வலிக்கும். வலியை பொறுத்துக்கொள். இடுப்பு சரி யாக உட்கார்ந்து விடும்'' என்று சொன்னார்கள். ஒரு சிறிய பெண் குதிரையை கொடுத்தார்கள். அதில் அவனை ஏற்றி விட்டார்கள். முதுகு பக்கம் மூங்கிலால் பலகை போல் செய்து அதில் சாய்ந்து கொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள். மெல்ல சாய்ந்தபடி, இடுப்பு வலியை பொறுத்துக் கொண்டு பொன்னன் காரி அந்த இடம் நோக்கி போனான்.

''ராஜா ராணி. என்ன அர்த்தம். ஒரு கோவிலுக்குப் போய் ராஜா ராணி என்று ஏன் பெயர்.'' அவன் ஆச்சரியமாக அடுத்து வரும் வீரனை வினவினான்.

அந்த வீரன் நன்கு விவரம் தெரிந்தவனாக இருந்தான்.

''ஒட்டதேசம் ஒரு விசித்திரமான இடம். ஒட்டர்களுடைய நடைமுறைகள் நம்மிடமிருந்து மிகவும் மாறுபாடு உடை யவை. ஒட்ட தேசத்தில் உள்ள ஜகன்னாதர் கோவிலில் அந்தணர்கள்தான் ஆட்சி செய்து வந்தார்கள். அங்கு வந்தால் அவர்கள் வைத்ததுதான் சட்டம். ராஜாவை கோவில் பெருக்கச் சொல்வார்கள். ராஜா பெருக்கித் தான் ஆக வேண்டும். ஆனால்

ர்ஜா பெருக்குவதற்கு தங்கத்தால் செய்யப்பட்ட துடைப்பம் தருவார்கள். ராஜா தங்கத்தால் செய்யப்பட்ட துடைப்பத்தால் பெருக்கி குப்பைகளை அள்ளி தங்கக் கூடைகளில் போட்டு அதை சுமந்து வெளியே போய் கொட்ட வேண்டும். உள்ளே இருக்கின்ற ஜகன்னாதர் பெரியவர். அவருக்கு ஊழியம் செய்கின்ற அந்தணர்கள் பெரியவர்கள். ஜகன்னாதரை வணங்குவதைப் போல அந்தணர்களையும் அரசர்களும் வணங்க வேண்டும். அரசர்கள் மூன்றாவது இடம். நான்காவது இடம் வணிகர்களுக்கு. ஐந்தாவது இடம் உழவர்களுக்கு என்றெல்லாம் போய்க் கொண்டிருந்தது.

அந்தணர்கள் நன்கு உண்டு கொழுத்து பயங்கரமாக இருப்பார்கள். இது உண்மையா என்று தெரியவில்லை. அந்த ஊரில் ஒரு பெண் பூப்படைந்தால் கொண்டு வந்து கோவிலில் விட்டுவிடுவார்கள். ஒரு குறிப்பிட்ட அந்தணரிடம் கொடுத்து தட்சணையும் கொடுத்து வணக்கம் சொல்வார்கள். அந்த பெண்ணை அவர் கட்டித் தழுவி உச்சி முகர்ந்து ஆசிர்வதித்து, அவளுக்கு காமம் பற்றியும் சொல்லி கொடுத்து, அவளை அனுபவித்துவிட்டு சில காலங்களில் திருப்பி அனுப்புவார். அந்த பெண் மலர்ச்சியோடு வருவாள். மறுபடியும் காணிக்கை செலுத்தி அவள் வீட்டார் தங்கள் பெண்ணை அழைத்துக் கொண்டு போவார்கள். பிறகு திருமணம் பேசுவார்கள். ஊரிலுள்ள எல்லா பெண்களுமே அந்தணர்கள் வசப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையா என்று தெரியவில்லை.

அவ்வளவு அதிகாரம் பெற்றவர்கள் இந்த அந்தணர்கள். இந்த அந்தணர்களுக்குள் கலவரம் ஏற்பட்டது. நானா, நீயா என்ற முறையில் வைத்து பூஜை செய்வதில் பிரச்சனை ஏற்பட்டது. அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள். ஒரு குழு நன்றாக யுத்தப்பயிற்சி செய்திருந்தது. மல்யுத்தம் செய்து பழகியிருந்தது. மூங்கில் கொம்பு அடித்து வீழ்த்த சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் திட்டமிட்டே இதை பல வருடங்களாக பயிற்சி செய்து வந்தார்கள். ஏதோ உடற்பயிற்சி என்று மற்ற அந்தணர்கள் நினைக்க இவர்கள்

உதைப்பயிற்சி என்பதை நிரூபித்தார்கள். அந்தணர்களாகிய அவர்களை விரட்டினார்கள். கோவில் தன்வசம் என்று சொன்னார்கள்.

மறுபடியும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அடுத்த அந்தணர்கள் ஒன்றுகூடி பேசினார்கள். இவன் இடத்தை பிடிப்பதற்கு ஏன் இப்படி சண்டை போட்டோம். இந்த மன்னர்கள் மறவர்கள் வலுவற்று இருக்கிறார்கள். நாம் இந்த கோவிலை பிடிப்பதற்கு பதிலாக தேசத்தை பிடித்தால் என்ன என்று பேசினார்கள். அப்பொழுது கோவிலை யார் பார்த்துக் கொள்வார்கள் மன்னர்களா. இல்லை. நம்மிடம் தோற்றோடிய அந்தணர்கள் இந்த கோவிலை கவனித்துக் கொள்வார்கள். நாம் அவர்களையும் கவனிப்போம். அரசாட்சியையும் கவனிப்போம். நமக்கு அடங்கியதாக இந்த கோவிலும், இந்த அந்தணர்களும், இந்த பொது மக்களும், இந்த மன்னர்களும், உழவர்களும், வணிகர்களும் இருப்பார்கள். நமது கொடிபறந்திருக்கும். அந்தக் கொடிதான் அந்தணக் கொடி, காவித் துணியில் சிவலிங்கம் வரைந்திருக்கும். இதுதான் நம் கொடி.

அவர்கள் வம்சத்தில் வந்தவன்தான் இந்த இந்திரதத்தன். மிகச் சிறந்த நிர்வாகி. மிகச் சிறந்த போராளி. சோழப்படையின் வேகத்திற்கு முன்னால் அவனால் எதிர்த்து நிற்க முடியவில்லை. பொறி அம்புகளை தாக்கு பிடிக்க முடியவில்லை. மொத்த சோழ தேசமும் நித்த வினோத பெருந்தச்ச ரவிக்கு கடன்பட்டிருக்கிறது. எங்கோ ஜெயங்கொண்டத்தில் அவன் வேலை செய்து கொண்டிருப்பான். ஆனால் நாம் ஜெயிக்க வேண்டும் என்று யோசித்து பல இரவுகள் உழைத்து இந்த விற்பொறியை கொண்டு வந்தான். இந்த விற்பொறி வித்தை காட்டி விட்டது. இடையறாது தலைக்கு மேல் அம்பு விழும் என்றால் எங்கே போர் செய்ய முடியும். ஒதுங்கித்தான் உட்கார வேண்டும். ஒதுங்கி உட்கார்ந்த போது குதிரைப்படைகள் போக, எறி அம்புகள் நிற்க குதிரைப்படை வெகு எளிதாக அவர்களை ஜெயித்துவிட்டது. இந்திரதத்தன் ஒடுங்கிக் கொண்டான்.'' அந்த வீரன் சொல்லி முடிக்க, அவன் ஆச்சரியத்தோடு எப்படி நடந்திருக்கும் என்று கற்பனை செய்யத் துவங்கினான்.

பொன்னன் காரியினுடைய வியப்பு மற்ற வீரர்களுக்கு சந்தோஷமாக இருந்தது.

''இத்தனை வலியை வைத்துக்கொண்டு போர்முனைக்கு வருகிறேன் என்கிறாயே. ஆச்சரியமப்பா.'' என்று ஒருவன் பாராட்டினான்.

''இப்படிப்பட்ட ஒரு போரில் நான் கலந்து கொள்ள வில்லையே. எனக்கு துக்கமாக இருக்கிறது.'' என்று பொன்னன் காரி பதில் சொன்னான். பொன்னன் காரிக்கு போரை விட, போர் நடந்த நேரமும், விதமும் மிக முக்கியமாக இருந்தன. ஊருக்கு போய் சொல்ல வேண்டாமா. தலைக்கு மேல் அறுநூறு அம்புகள் இருந்து கொண்டே இருக்கும். அப்படி விற்பொறி கள் இயக்குகிறார்கள் என்று ஊருக்கு போய் சொல்ல வேண் டாமா. அதைமட்டுமா சொல்வது ஒட்டதேசத்து கோவிலை, ஒட்டர்களுடைய உருவத்தை, ஒட்டர்களுடைய நடை, உடை பாவனைகளை, ஒட்ட பெண்களை, வங்காளத்தை, கங்கை கரையை அதைத்தாண்டி இருக்கின்ற ஊர்களை சொல்ல வேண்டாமா. இடுப்பு வலி என்ன இடுப்பு வலி. அவன் எண்ணெய் தடவச் சொன்னான். இடுப்பு மெல்ல மெல்ல உறுதியாயிற்று.

''மாணிக்க வாசகத்தை வரச் சொல்.'' வேங்கியில் உட் கார்ந்து கொண்டு அரசசபையில் உலாவிக் கொண்டிருந்த இராஜேந்திரர் ஆள் அனுப்பினார். அரை நாழிகையில் மாணிக்க வாசகம் வந்தான்.

''ஏன் இவ்வளவு தாமதம்?''

''அய்யா, குளித்துவிட்டு வருகிறேன்.''

''என்ன இப்போது குளியல்.''

''அய்யா. வேறொரு இடத்திற்கு போய் வந்தேன். அதனால் குளிக்கும்படி ஆயிற்று.''

''எந்த இடம்?'' அவன் பேசாது இருந்தான்.

''சரி. பெண்டிரோடு இருந்தாயா.''

''ஆமாம்.''

‘‘முடிந்ததா?’’

‘‘ஆயிற்று.’’

‘‘உன்னிடம் கடற்போர் பற்றியும், ஒட்ட தேசம் பற்றியும், வங்கதேசம் பற்றியும் பேச வேண்டும். ஒட்டதேசம் உள்ளே போயிருக்கிறாயா.’’

‘‘போயிருக்கிறேன் ஐயா.’’

‘‘எவ்வளவு நாள் இருந்தாய்.’’

‘‘ஒரு மாதத்திற்கு மேல் இருந்தேன்.’’

‘‘எதற்காக அவ்வளவு நாள் அங்கு தங்கினாய்.’

‘‘ஓட்ட தேசத்து கோவில்கள் மிக அழகானவை, அந்த சிற்ப கூடங்கள் மிக அழகானவை, கொல்லர் கூடங்களும் மிகப் பிரமாதமானவை, ஒட்டர்களை வெறும் முரடர்கள் என்று பலபேர் எண்ணியிருக்கிறார்கள். இல்லை. கலைக்கல்விகளில் தேர்ந்தவர்கள். வான சாஸ்திரம் அறிந்தவர்கள். அதில் ஒருவரிடம் கடல் மீது இருக்கும்போது நட்சத்திரங்களை கண்டு பிடிப்பது எப்படி என்று கற்றுக் கொள்ளப் போனேன். மற்ற விவரங்களையும் அறிந்தேன்.

‘‘அப்படியா. ஒட்டதேசம் பற்றி மிக நன்றாக தெரியும் என்று சொல்.’’

‘‘ஓரளவு தெரியும். உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்வேன்.’’

‘‘அதெப்படி என் கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்வாய்.’’

‘‘ஏனெனில் உங்களுக்கு ஒட்டதேசம் பற்றி தெரியாது. அதனால் உங்கள் கேள்விகள் எளிதாகத் தான் இருக்கும்.’’

மெல்ல கோபம் ஏற்படினும் அவன் பேச்சு சரியாக இருப்பதால் இராஜேந்திரசோழர் அடக்கிக் கொண்டார். அவரைச் சுற்றி அவர் தளபதிகள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

‘‘மாணிக்கவாசகம் உனக்கு தெரிந்தவரை உள்ள ஒட்ட தேசத்தை எனக்குச் சொல். ஒரு கதை போலச் சொல்.’’ இராஜேந்திர சோழர் கட்டளையிட்டார்.

''நீங்கள் சோழதேசம். மனு உங்கள் வம்சத்தை ஆரம் பித்தது. ஆகவே நீங்கள் சூரிய வம்சம்.''

''ஆமாம். அதனால் என்ன?''

''இப்பொழுது இருக்கின்ற இந்த வம்சத்தை ஆரம்பித் தவன் சிவகுப்தா என்பவன். அவன் சந்திர வம்சம். சோமவம்சி என்று அவர்கள் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள்.''

''அற்புதம். சரித்திரமே தெரிந்து வைத்திருக்கிறாயா.''

''எங்களுக்கு இதை பாடமாக சொல்லிக் கொடுத்த பிறகுதான் எதையும் சொல்லித் தருவார்கள். வானசாஸ்திரம் சொல்லித்தருவதற்கு முன்பு வம்சத்தின் பெயரைச் சொல்லி மனனம் பயில சொல்வார்கள்.''

''ஏன்? அவர்கள் வம்சம் எதற்கு மனனம் செய்வது?''

''அவர்கள் வம்சம் மிக உயர்ந்தது என்று மிக அலட் டலாக அவர்கள் சொல்லிக் கொள்வார்கள். எல்லோரும் அழகர்கள் என்று சொல்லிக் கொள்வாள்கள். எல்லோரும் நிதானமான புத்தியுடைவர்கள் என்று சொல்வார்கள். சூடு அதிகமான உடம்பு கூடலுக்கும் சரிவராது. கோட்டை ஆளவும் சரிவராது என்று சொல்வார்கள். அவர்கள் எப்பொழுதுமே குளுமையான உடம்பும், புத்தியும் உடையவர்கள் என்று அலட்டிக் கொள்வார்கள். அதனால்தான் எல்லா கலைகளிலும் சிறந்து இருக்கிறோம் என்று சொல்வார்கள்.

ஏன் சோமவம்சம் என்று பெயரிட்டிருக்கிறீர்கள் என்று கேட்க, இது மகாபாரதக் காலத்திலிருந்து அப்படித்தான் வரு கிறது. சிவகுப்தாதான் அந்தணர்களுக்கிடையே கலவரமூட்டி இரண்டாகப் பிரித்து தோற்றவர்களுக்கு கோவில் கொடுத்து தான் அரசாட்சியை கைப்பற்றிக் கொண்டான். அந்த சிவகுப்தா விற்கு மகாபாவகுப்தா ஜனனேஜயா என்கிற மகன் இருந் தான்.''

''அடடே அடடே, இதுவும் பாரதப் பெயராக இருக்கிறதே.''

''ஆமாம். மகாபாரதத்தில் வரும் பெயர்தான். அந்த வம்சம் தான். பாவகுப்தா, சிவகுப்தா என்று மாற்றி மாற்றி சோழர்கள்

வைத்துக் கொள்கிறார்களே இராஜகேசரி, பரகேசரி என்று அம்மாதிரி இவர்களும் வைத்துக் கொள்வார்கள்.''

''நல்லது. அழகாக இருக்கிறது. சொல்.''

''அந்த ஜனனேஜயனுக்கு இன்னொரு மகன் இருந்தான். அவன் பெயர் பீமரதா. ஏதோ ஒரு அரசியல் சூழ்ச்சியினால் மூத்த மகன் யயாதி கொல்லப் பட்டு விட்டான்.''

''அடே. அங்கேயுமா.''

''யார் கொன்றது என்று சொல்ல முடியவில்லை. உறுதி யான முடிவு இல்லை. யாருக்கும் யாரையும் விவரம் தெரி யாமல் தண்டிக்க விருப்பம் இல்லை. பீமரதா அரசாண்டான். ஜனனேஜயாவிற்கு அரசியின் மூலம் பிறந்தவர்கள் யயாதி, பீமரதா. தாசியின் மூலம் பிறந்தவன் விசித்திர வீர்யன்.''

''இதுவும் பாரதப் பெயர்தானா. விசித்திர வீர்யன் என்றால் வேலை தெரியாதவனாக, அசமஞ்சனாக இருக்க வேண்டுமே.''

''அப்படித்தான் இருந்தார் என்று சொல்லப் படுகிறது.''

''பிறகு?''

''விசித்திர வீர்யாவிற்கு ஒரு மகன் பிறந்தான்.''

''அவன் பெயர் அர்ஜுனன்.

''இல்லை. அபிமன்யு.''

''அடேய். அடேய். மகாபாரத்தையே மறுபடியும் கொண்டு வந்து நிறுத்துகிறாய். சொல். சொல். பீமரதா என்ன செய்தார்.''

''பீமரதாவிற்கு மூன்று பிள்ளைகள். மகாசிவ குப்தா, தர்மரதா, மகாபாவகுப்தா நதுஷா, பிறகு இந்திரதத்தா. இந்திர தத்தா ஆட்சிக்கு வருவார் என்று நினைக்கவில்லை என்பதால் அவருக்கு பாவகுப்தாவோ, சிவகுப்தாவோ என்று பட்டம் தரப் படவில்லை. இந்த தர்மரதா, அபிமன்யுவிற்கு கடும் எதிரியாக இருந்தார். அவர்களுக்கு ஒருகாலும் அரசாட்சி கிடையாது என்று சொன்னார். ஆனால் அபிமன்யு அரசாட்சி செய்ய வருவேன் என்று சொன்னான். ஒரு போரில் நடு மகனான நகுஷாவை கொன்றான். தர்மரதா பலவீனப்பட்டார். நகுஷா யுத்தத்தில் இறந்து போனது அவருக்கு தர்மரதாவிற்கு அதிர்ச்சி

யாக இருந்தது. சொந்த சகோதரனே கொன்றுவிட்டானே என்ற துக்கம் ஏற்பட்டது. அவர் மனம் தளர, இந்திரதத்தா அரசாட்சியை கைப்பற்றிக் கொண்டார். தர்மரதா அவர்மீது மிகவும் பிரியமாக இருந்தார். இந்திரதத்தாவும் தர்மரதாவின் ஆலோசனை இல்லாமல் நிர்வாகம் செய்வதில்லை. என்ன செய்வது முதலில் என்று தர்மரதா கேட்டார். 'சொந்த சகோதரர்களே எதிரியாகி விட்டார்களே, இது நிர்வாகக் கேடு வருமே' என்று சொன்னார்.

'இதற்கு ஒரு தீர்வுதான்.'

'என்ன?'

'அபிமன்யுவை கொல்வது.'

'போ. போய் கொன்றுவிடு' என்று தர்மரதா உத்தரவு கொடுக்க, இந்திரதத்தா படையெடுத்து விசித்திர வீர்யன் மகனான அபிமன்யுவை கழுத்தறுத்து கொலை செய்தார். பிறகு மொத்த ஒட்டதேசத்தையும், பிறகு கோசல தேசத்தையும், பிறகு கலிங்க தேசத்தையும் கைப்பற்றிக் கொண்டார். மிகப் பெரிய தந்திரக்காரர். சுத்தமாக சமஸ்கிருதம் பேசுவதில் வல்லவர். அந்தணர்களை ஆதரிப்பவர். தனக்கு துணையாக கோவில் அந்தணர்கள் இருக்க வேண்டும் என்று அவர்களிடம் மிக நல்ல நட்பு கொண்டு அவர்களுக்கு மேலும் சில அதிகாரங்கள் கொடுத்தார். ஒடுங்கிக் கிடந்த கோவில் அந்தணர்கள் மறுபடியும் தலைநிமிர்ந்தார்கள். அதேசமயம் இந்திரதத்தனை மிகவும் ஆதரித்தார்கள். அவன் ஆட்சிதான் தொடர வேண்டும் என்று விரும்பினார்கள்.

அபிமன்யுவின் மகன் சந்த்ரகாரயயாதி, அவனுக்கு மகனான உதயன் என்பவன் இப்பொழுது உயிரோடு இருக்கிறான். உதயனுடைய மகனுக்கு ஜனனேஜயன் என்று மூத்தவரின் பெயர் வைத்திருக்கிறார்கள். இந்திரதத்தனே அரசனாக அவர்கள் எல்லாம் மிகச்சிறிய தளபதிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உறவுச்சண்டை, பங்காளிச்சண்டை ஓய்ந்தது. யோசித்து பார்த்தால் சோழ தேசத்து பங்காளி சண்டைக்கும், இதற்கும் அதிகம் ஒற்றுமை இருக்கிறது.''

''ஆமாமடா. ஆமாம் அதேபோலவே இருக்கிறது. பீமரதாவின்மகன் இந்திரதத்தா. பீமரதா இராஜராஜசோழன். இந்திரதத்தா இராஜேந்திரசோழன். இரண்டு வம்சமும் முட்டிக் கொள்கிறது. எதற்கு. ஒரேவிதமான துக்கம். ஒரே விதமான வாழ்க்கை. எதற்கு நாம் அந்தணர்களை அடக்கி வைத்திருப்பது போல இந்திரதத்தனும் அந்தணர்களை அடக்கி வைத்திருக்கிறான். நமக்கு பங்காளிச் சண்டை ஏற்படுத்தி அதில் கொலைகள் நடந்தது போல அவர்களிடமும் நடந்திருக்கிறது. ஒரு வீரனை வரச்சொல். அரையன் ராஜராஜனுக்கு சமாதானம் பேசுகின்ற ஒரு நிலையை அதிகரிக்கச் சொல். அவன் சமாதானத்திற்கு வந்தால் உடனடியாக ஏற்றுக் கொள்ளச் சொல். அந்த கோவிலை கைப்பற்றச் சொல்.''

''எந்த கோவிலை அரசே.''

''பாண்டுரங்கன் கோவிலை.''

''இல்லை. பாண்டுரங்கன் கோவில் இன்னும் தொலைவில் இருக்கிறது. இப்பொழுது இந்திரதத்தா இருப்பது ராஜா ராணி கோவில்.''

''என்ன? ராஜா ராணி கோவிலா. என்னய்யா இது. கோவிலுக்குப் போய் ராஜா ராணி என்று, சிவன் ராஜா, பார்வதி ராணியா.''

''தெரியவில்லை. அப்படி இருக்காது என்று தோன்றுகிறது.'' மாணிக்க வாசகன் பதில் சொன்னான்.

''எப்படி இருக்கும் மாணிக்கவாசகம்.''

''அந்தணர்கள் ஆட்சி செய்கின்ற கோவிலாக இல்லை இது அரசர்கள் ஆட்சி செய்யும் கோவில். அரசர்களுக்கு உண்டான கோவில். அவர்கள் கருவரை வரை போய் வரக்கூடிய கோவில் என்று தெரிவிப்பதற்காக இது அரசரும், அரசியும் உள்ளே கர்ப்பகிருகத்தில் நுழையும் உரிமை உள்ளவர் என்பதற்காக கட்டப்பட்ட கோவில். உண்மையில் அந்த கோவிலில் உள்ள ஈசனின் பெயர் இந்திரலிங்கேஸ்வரர்.''

''அட, அட, தன் பெயரையே வைத்து விட்டானா. மிகச் சிறப்பானவனாக இருப்பான் போலிருக்கிறது. அவனை பார்க்க வேண்டும் போல் ஆவலாக இருக்கிறது. அவனை கைது

செய்து அழைத்து வரவேண்டும். அரையன் ராஜனுக்கு இதை யும் சொல், சமாதானத்திற்கு வந்தால் உடனடியாக சமாதானம் ஏற்கச்சொல். மிகப்பெரிய முடிவு மாணிக்க வாசகம் என்ற அந்த பாண்டிய தேசத்து மாலுமியால், அவன் தூண்டுதலால் எடுக்கப்பட்டது.

இராஜேந்திர சோழர் ஒரு நல்ல நாளில் அவனை அழைத்து, நல்ல துணிகள் கொடுத்து, தோளில் உபதளபதி கேயூரம் மாட்டி வலக்கையில் கடாரம் கொடுத்து, தலைப் பாகைக் கட்டிக்கொள்ளவும், தங்கநகை அணிந்து கொள்ளவும் உரிமை கொடுத்து, இடுப்பில் நீண்ட வாள் கொடுத்து, பாத ரட்சை அணிகின்ற உரிமை கொடுத்து அவனை சோழப் படையின் தளபதியாக நியமித்தார். அவனோடு தினந்தோறும் உட்கார்ந்து பேசினார்.

இராஜேந்திரசோழர் கட்டளையிட்டது போல விற்பொறி கள் பயன்படுத்தி அரையன் ராஜராஜன் ஜெயித்தார். எங்கோ இருக்கின்ற இராஜேந்திரருக்கு இங்கு நடப்பது எப்படி துல்லிய மாகத் தெரிகிறது என்று வியந்தார். எவ்வளவு தொலைவில் இருந்தாலும் இந்த சோழப்படை இராஜேந்திர சோழரின் கண்காணிப்பில் இருக்கிறது என்று தெரிந்து கொண்டார்.

யார் ஒற்றனாக போகிறார்கள். யார் தூதுவனாக வருகிறார் கள். அவருக்கு தெரியவில்லை.

ஆனால் அருண்மொழிப்பட்டனுக்கு தெரிந்திருந்தது. அரையன் ராஜராஜனோடு அதை பகிர்ந்து கொள்ளவில்லை.

இந்திரதத்தனுடைய கோட்டை, ராஜராணி கோவிலை சுற்றியுள்ள கோட்டை அடைபட்டு இருந்தது. வீரர்கள் யாரும் நடமாடவில்லை. பெரிய கதவு திறந்து அகழிக்கு அப்பால் அவர்கள் நின்று கொண்டு சோழப்படையை ஆராய்ந்தார் கள். சோழப்படை ஆரவாரம் செய்தது. மறுபடியும் உள்ளே போய் கதவு சாத்திக் கொண்டார்கள்.

திடீரென்று முரசு முழக்கம் கேட்டது. சோழ வீரர்கள் துள்ளி எழுந்தார்கள். அகழிக்கு மேல் இழுக்கப்பட்ட அந்த பாலம் உள்ளே தள்ளப்பட்டது. நேராக எதிர்கரைக்கு வந்து முட்டி நின்றது. இது தூக்குப்பாலம் இல்லை. தள்ளு பாலம்.

மிகச் சிறப்பான யுக்தி. இரண்டு பக்கமும் உருளையான எண்ணெய் தடவிய இரும்பு கம்பங்கள் இருக்க அந்த கம்பங்கள் மீது சக்கரம் பதிக்க வைத்து அந்த சக்கரத்திற்கு சட்டம் எழுதி அந்த சட்டத்தின்மீது பலகைகள் போட்டு உள்ளுக்குள் இருந்து அந்த சட்டத்தை தள்ளி எதிர்முனையை இணைத்தார்கள். பாலம் நாலு யானை ஏறி நின்றாலும் உறுதியாக இருக்கும் என்று பார்வைக்கு தெரிந்தது.

கதவு திறந்து வீரர்கள் வெளியே வந்து நின்றார்கள். உடைவாட்களை கீழே போட்டார்கள். வேலை எறிந்தார்கள். 'சரணடைந்தோம்' என்று கை கூப்பி தெரிவித்தார்கள்.

''இந்திரதத்தனை வரச்சொல்.'' ஒரு வீரனை அருகே அனுப்பி அவனிடம் சொல்லச் சொன்னார்.

அந்த வீரன் பாலத்தின் இந்த பக்கத்திலிருந்து அந்த பக்கம் உள்ளவர்களுக்கு 'இந்திரதத்தனை வரச்சொல்' என்று சொன்னான். மறுபடியும் வேறொரு ஆள் அனுப்பி அரையன் ராஜராஜன் ''தனியாக வரச்சொல்'' என்று கட்டளை இட்டார். அவன் தனியாக வரச்சொல் என்று உரத்து சொன்னான். வீரர்கள் திகைத்தார்கள். உள்ளே போனார்கள். கதவு மூடிக்கொண்டது. அன்று பிற்பகல் கதவு திறந்தது. விரியத் திறந்தது. வீரர்கள் வாள் உருவி உற்சாகமானார்கள். பாலம் தள்ளப்பட்டது.

சட்டென்று இடுப்பில் சுத்தமான ஆடையும், மேலே போர்வையும், கையிலே கேயூரமும், தலையிலே மணிமுடியும், இடுப்பில் வாளும் தரித்த ஒரு மனிதன் தோன்றினான். இந்திர தத்தன் என்று தெரிந்துவிட்டது. கை கூப்பினார்கள். இந்திர தத்தனும் கை கூப்பினான். நேரே வந்து பாலத்தின் நடுவே நின்று கொண்டான். சோழப்படை நோக்கி தலைகுனிந்து வணங்கினான். முன்னேறினான்.

''சோழம் சோழம் சோழம்'' என்று ஆர்ப்பரித்தார்கள். மிக நிதானமாக முன்னே வந்து ''யார் இராஜேந்திரர்'' என்று கேட்டான்.

இராஜேந்திரர் நான்தான் என்பதுபோல அரையன் ராஜ ராஜன் குதிரையில் வந்து அருகே நிறுத்தினார்.

;"நீர் அரையன் இராஜராஜனல்லவா. இராஜேந்திரர் வரவில்லையா. ஒட்டதேசத்திற்கு சண்டையிட உம்மைதான் அனுப்பினாரா" என்று வடமொழியில் இந்திரதத்தன் பேச, "ஆம்" என்று குதிரையில் இருந்தபடியே அரையன் ராஜராஜன் தலையசைத்தார்.

"நானும், என் படைகளும், என் கோட்டையும், என் மக்களும் சோழ வீரர்களின் வீரத்திற்கு முன்பு தலைவணங்கி நிற்கிறோம். உங்களிடம் சரணடைகிறோம். உள்ளே மிகப் பெரிய கோவில் இருக்கிறது. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கோவில். அதை தகர்க்க கூடாது. நீங்களும் சனாதான தர்மம். நானும் அதே தர்மத்தை கொண்டிருக்கிறேன். நம் கோவில் களை பரஸ்பரம் இடிப்பது தவறு.

உள்ளே லிங்க ரூபியாக சிவபெருமான் இருக்கிறார். வந்து தரிசிக்க வேண்டும்." மூச்சு வாங்கினான்.

"உங்களுடைய எண்ணம் என்ன? என் மணிமுடியை பறிப்பதா." மறுபடி கேட்டான்.

"இல்லை" ஒற்றை வார்த்தையில் அரையன் ராஜராஜன் பதில் சொன்னார்.

"அது சந்தோஷமாக இருக்கிறது. என் மணிமுடி தேவை யில்லை என்றால் வேறு எதற்காக ஒட்ட தேசம் நோக்கி சோழப் படைகள் வந்தன."

அருண்மொழிப்பட்டன் முன்னேறினான்.

"கங்கை கரைக்கு போக வேண்டும். கங்கை நீரை எடுத்துக் கொண்டு வந்து நாங்கள் கட்டியிருக்கும் கோவி லுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். இன்னும் பல கோவில்களுக்கு கங்கை நீர் எடுத்துப் போக வேண்டும். இவையே எங்கள் எண்ணம்."

"இதைச் சொல்லியிருந்தால் நான் வழி விட்டிருப் பேனே."

“கேட்டிருந்தால் சொல்லியிருப்போமே. மேலை சாளுக்கியத்திலிருந்து கங்கே யாதவ் உங்களோடு கலந்து கொண்டு எங்களை எதிர்க்கிறான் என்றல்லவா கேள்விப்பட்டோம்.”

“இல்லை. கங்கே யாதவை என்னோடு சேர்க்கவில்லை. அந்த நாயை நான் சேர்க்க மாட்டேன். அவன் துரோகி. எந்த நேரமும் எதிர்பக்கம் போய் சாய்ந்து கொண்டு நம்மை காட்டிக் கொடுக்கின்ற துரோகி. உண்மையில் ஒட்டர்களுக்கிடையில் கலகம் மூட்டியது அந்த நாய்தான். அவனை ஒருபொழுதும் ஒட்ட தேசம் சேர்க்காது.”

அரையன் ராஜராஜன் சந்தோஷமானார். குதிரையிலிருந்து கீழ் இறங்கினார். இரண்டு கையையும் விரித்தார். அந்த விரித்த கைகளுக்குள் தானும் கை விரித்து ஆர இந்திரதத்தன் தழுவிக் கொண்டான்.

ஆரவாரம் அதிகம் செய்யாமல் சோழப்படை அந்த பாலத்தை கடந்து இந்திரதத்தனின் ராஜாராணி அரண்மனைக்குள் நுழைந்தது. பல பகுதிகளாக பிரிந்து கோட்டையை வளைத்துக் கொண்டது. கோவிலுக்கு உள்ளே ஏறி பார்த்தது. அங்குள்ள சிலைகளை கண்டு வியந்தது.

அரையன் ராஜராஜனும், இந்திரதத்தனும் அரசவையில் சரிசமமாக உட்கார்ந்து கொண்டார்கள். அரையன் ராஜராஜனுக்கும் வெளியில் உள்ள வீரர்களுக்கும் உணவுகள் தாராளமாக தரப்பட்டன.

ஒவ்வொரு கோவிலாக அருண்மொழிப்பட்டன் ஏறி இறங்கி வந்தான். சிற்ப கூடத்திற்கு போய் வந்தான். திகைத்துப் போனான். அங்கு ஒரே ஒரு இரவிதான் இருக்கிறான். இங்கு பல இரவிகள் இருக்கிறார்கள். ஒட்ட தேசத்தின் சிறப்பு அதனுடைய கற்சிலைகளில் தெரிகிறது என்று வியந்தான்.

துணி நெசவும், பாத்திர பண்டங்கள் செய்திருப்பதும், உலோக வார்ப்பும், ஆயுதங்கள் செய்வதும் மிக சுத்தமாக, மிகத் தெளிவாக நல்ல கணக்குகளோடு இருந்தன. அந்தணர்களுடைய மேற்பார்வையில்தான் ஒவ்வொன்றும் செய்யப்பட்டன.

அருண்மொழிபட்டன் ஒட்டதேசம் பற்றி முழு விவரமும் ஒரு ஆளிடம் சொல்லி அனுப்பினான். அப்படி அனுப்புவதற்கு முன்பு அந்த ஆளை அரையன் ராஜராஜனிடம் சென்று பார்த்து விட்டு வரச் சொன்னான். அரையன் ராஜராஜன் அனுமதி அளித்ததும் அந்த ஆள் வெளியேறினான். அவனைத் தொடர்ந்து போக அரையன் ராஜராஜன் இன்னொரு ஆளை நியமித்தார்.

★ ★ ★

அத்யாயம்

69

ஆயிரம் கல் தொலைவு நடந்தும், குதிரையிலும் வந்த வீரர்கள் கடும் போருக்குப் பின் மாற்றான் தேசத்தில் காவல் காத்தபடி அடுத்த போருக்கு தயார் செய்தபடி இருக்கையில் வெவ்வேறு விதமான மனோநிலைமையில் தான் இருப்பார்கள். சோழப்படையில் ஒரு பெரும் பகுதி ஒட்டதேசம் எனப் படும் கலிங்கத்தில் நுழைந்து வெற்றிகொண்டு அதன் அரசன் அடிபணிய மிகவும் ஓய்வாக பல்வேறு இடங்களில் தங்கிக் கொண்டது. வீடு விட்டு வந்த படைவீரர்களின் மனோ நிலைமைகள் வெவ்வேறு விதமாக இருந்தன.

சட்டென்று ஒரு குழு வாளை உருவிக் கொண்டு பொது மகளிர் தங்கும் இடம் போய் அவர்களைத் தேடி கோட்டைக் குள் வேறு எங்கெல்லாம் பொது மகளிர் இருக்கிறார்கள் என்று நகரம் முழுவதும் தேடியது. அடுத்த ஊர்களிலிருந்தும், சோழப் படை ஊடறுத்து வந்த இடங்களிலும் வீரர்களை அனுப்பி பொது மகளிரை தூக்கி வந்தது. தளபதிகள் தங்கியிருந்த பல மாளிகைகளுக்குள் உள்ளிருந்தவர்களை பார்த்து விரட்டியது. சுத்தம் செய்பவர்கள், சமையல் செய்பவர்கள் இவர்களை வைத்துக் கொண்டது. தளபதிகள் காணாமல் போனார்கள். அவர்கள் குடும்பம் காட்டில் போய் பதுங்கிக் கொண்டது. அம் மாதிரியான இடத்தில் அந்த பெண்களை குடியமர்த்தினார்கள். அந்த மாளிகை முழுவதும் விதம் விதமான இடத்தில் திரைச் சீலையிட்டு கட்டில்கள் போட்டார்கள். அந்த கட்டில்கள் ஊரி லுள்ள குடுமிகள் வீட்டில் இருந்தவை. அவர்களையே தூக்கி வரச்செய்து போட்டார்கள். ஆறு மாளிகை முழுவதும் பொது மகளிர் நிரம்பிய உல்லாசமான ஒரு இடமாகப் போயிற்று. அவற்றை செவ்வனே நிர்வகிக்கவும், உள்ளுக்குள்ளே எந்த சண்டையும் இல்லாமல் பார்க்கவும் தலைவர்கள் நியமிக்கப்

பட்டார்கள். ஒவ்வொரு விதமான பெண்ணிற்கு ஏற்றபடி விலையை அவர்களே நிர்ணயம் செய்தார்கள். அந்த பெண்ணுக்கு கொடுக்க வேண்டிய பொன்னை சோழ வீரர்கள் நகரத்திற்கு உள்ளே போய் குடுமிகளை மிரட்டி கன்னத்தில் அடித்து பறித்து வந்தார்கள். தாலிகள் உள்பட பல தங்க நகைகள் பறித்து வரப்பட்டன. வேறு மந்திரிகளிடம் போய் அவர்கள் வீட்டிற்குள் நுழைந்து மரப்பெட்டிக்குள் வைத்திருந்த புடவைகளை மூட்டையாக கட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள். அவைகளை பத்து காசிற்கும், பதினைந்து காசிற்கும் மிக மலிவாக விற்றார்கள். அந்த நகைகளை எடுத்துக் கொண்டு போய் அந்த புடவைகளை கொண்டு போய் விரித்து பெண்களுக்கு ஆசை வார்த்தை காட்டினார்கள்.

'இது ஒரு நாள் தங்குவதற்கு' என்று அவர்கள் சொன்னால் சீறினார்கள். அடித்து இழுத்துக்கொண்டு போவேன் என்று பயமுறுத்தினார்கள். புடவையும், நகையும் கொடுத்து இரண்டு நாள் அவளோடு தங்கினார்கள். 'எவ்வளவு நாளாயிற்று' என்று இறுக்க தழுவிக் கொண்டார்கள்.

பொது மகளிர்தான் என்றாலும் அவளுக்கு சோழ வீரர்களின் மிரட்டல்கள் பிடிக்கவில்லை. அது இனம் புரியாத கலவரத்தை கொடுத்தன. மிருதுவாக பேச சோழ வீரர்களுக்கு தெரியவில்லை.

'எங்களையெல்லாம் அரசர் கூட மரியாதையாய் நடத்துவார் தெரியுமா' என்று ஒட்டதேசத்து மொழியும், சமஸ்கிருதமும் கலந்த மொழியில் பெரிய பெண்கள் பேச, அதை வயதானவர்கள் புரிந்து கொண்டார்கள்.

ருசித்து மகிழ்ந்த வீரர்கள் அந்த மாளிகையின் வாசலில் குடிபோதையில் கும்மாளமாக பேசினார்கள்.

''தமிழ் கவிஞர்கள் பாடியது இப்பொழுதானடா புரிகிறது. யானையினுடைய துதிக்கை போல தொடைகள் என்று வர்ணித்ததை கேள்விப்பட்டிருக்கிறேன். மல்லாந்து படுத்தபோது அவள் எழுந்து நின்றாள். அவள் பாதம் என் நெஞ்சில் இருந்தது. பாதத்திலிருந்து இடுப்புவரை பார்க்கும்பொழுது யானையின் துதிக்கை போலவே இருந்தது. அடடா, அடடா, என்ன அழகு.

என்ன கும்மாளம். கொஞ்சம் சீண்டி விட்டால் போதும், ஒட்டப் பெண்ணுக்கு வெறி எகிறி விடுகிறது. விரலால் வீணையை மீட்டுவதுபோல கொஞ்சம் நிதானமாக மீட்ட வேண்டும்'' என்று சொல்ல, எப்படி எப்படி என்று கேட்டு தெரிந்து கொண்டார்கள்.

'பட வர அல்குல்' என்பதற்கு அர்த்தம் தெரிந்ததில்லை. நாகத்தின் படத்தைப் போல் அல்குல் என்கிறான். 'என்னது இது, நாகத்தின் படம் அங்கு எங்கு வந்தது என்றுதான்' நான் யோசித்திருக்கிறேன். என் மனைவியோடு கூடியபோதெல்லாம் இரவில்தான் கூடியிருக்கிறேனே தவிர, சிறிய விளக்கு வைக்கக்கூட அவள் சம்மதிக்க மாட்டாள். தீப்பந்த வெளிச்சத்தில் அம்மணமாக பல பெண்களை பார்த்தபோது, என்ன அற்புதமாக வர்ணித்திருக்கிறான் என்பது புரிந்தது. அந்த இடம் மட்டுமல்ல எல்லா இடமும் தமிழ் கவிஞர்கள் பார்த்து பார்த்து வர்ணித்திருக்கிறார்கள்.

நான் ஈர்குச்சி எடுத்துக் கொண்டு போய் அளந்து விட்டு வந்தேன்.''

''என்ன எதற்காக?''

''ஈர்க்கு இடைபுகா இளமுலையாள் என்கிறார்கள். அப்படித்தான் இருந்தது அவள் மார்பு. திண்ணென்று இரண்டும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இருந்தது. நடுவிலே ஈர்க்கு சொருக முடியவில்லை. அவ்வளவு அழுத்தமாக திமிராக, கம்பீரமாக இருந்தது. என்ன பெண்களடா. அடேயப்பா. இனி இந்த போகம் போதும். நான் கங்கைக்கு போய் அங்கிருந்து நேரே இமயமலைக்கு போய் உட்கார்ந்து விடப் போகிறேன். இதுவரை அனுபவித்தது போதும்'' என்று உற்சாகமாகச் சொல்ல,

''இல்லை, பத்து நாளில் திரும்பி ஒட்டதேசம் வந்து விடுவாய்'' என்று இன்னொருவன் சொல்ல, வாய்விட்டு சிரித்தார்கள். இடம் அதிர்ந்தது.

பெண்களைப் பற்றி, போகத்தைப் பற்றி பேசுவதென்றால் ஆண்கள் எல்லோருக்குமே கதன குதூகலம்தான். மிகப்பெரிய

சந்தோஷம்தான். இது எல்லா காலத்திலும், எல்லா தேசத்திலும் ஒரே மாதிரியான விஷயம்.

ஆனால் சோழ வீரர்கள் குலப் பெண்களை தொட வில்லை. வற்புறுத்தவில்லை. பொதுமகளிரை விட மிக அழகான பெண்கள் தெருவில் போகும்பொழுது விலகிதான் நின்றார்கள். ஆனால் அந்த வீட்டிற்கு போய் 'ஏதேனும் கொடு' என்று கதவு தட்டி கேட்டார்கள். நகைகளையும், புடவைகளை யும், பாத்திரங்களையும் பறித்து வந்தார்கள். பல்வேறு வீடு களில் வம்பாக, தடாலடியாக அதட்டிப் பேசியபடி பறிமுதல்கள் நடந்தன. அவைகள் பொதுமகளிருக்கு தரப்பட்டன.

'அடேய், இது சேனாதிபதியின் மனைவி புடவை. எனக்கு வந்திருக்கிறது. பாரடி. இதை கட்டிக்கொண்டு என்ன ஆட்டம் ஆடுவாள் அவள்.' என்று ஒரு பொதுமகளிர் பேச, அவர்கள் எல்லோரும் வந்து சேனாதிபதி மனைவியின் புடவை என்பதை புரிந்துகொண்டார்கள். அதுதானா என்று மறவனிடம் கேட்டு தெரிந்து கொண்டார்கள்.

வேறொரு குழு இம்மாதிரியான அதட்டல் மிரட்டல் களில் ஈடுபடாது அமைதியாய் உட்கார்ந்திருந்தது. வரிசையில் நின்று உணவு வாங்கி சாப்பிட்டது. இன்னும் நல்ல உணவு வேண்டுமெனில் அருகில் உள்ள குலமகளிர் வீட்டிற்கு போய் இவ்விதமாக சமைத்துக்கொடு என்று வேண்டியது. அவர் களிடம் நல்ல கட்டில்கள் இருந்தால் வாங்கி வீட்டிற்கு வெளியே போட்டு போர்த்திக் கொண்டு சுகமாக தூங்கியது. மண் தரையில் படுத்தது, புல் தரையில் படுத்தது. ஓலைப் பாயில் படுத்தது. எல்லாம் மறந்து போய் மெத்தென்ற கட்டி லில் தூங்குகின்ற சுகம் அவர்களுக்கு வந்துவிட்டது. அந்த கட்டிலில் உட்கார்ந்து கனத்த வெற்றிலை பாக்கு சுவைத்தது.

''அடுத்த போருக்கு நான் இருப்பேனா என்று தெரிய வில்லை. அனேகமாக ஏதோ ஒரு நதிக்கரையில் நான் ஊத்தை அடைந்து விடுவேன்.''

''என்ன திடீரென்று.''

''நேற்று கனவு அப்படித்தான் வந்தது. நெஞ்சுக்குள் கத்தி சொருகுவது போல, இந்த போரைவிட அடுத்த போர் இன்னும்

மோசமாக இருக்கும். அந்த போரில் கங்கே யாதவ் இருக்கிறான். ரணசூரன் இருக்கிறான். ஒட்டதேசத்தை விட தட்சிணலாடம் மிகக் கொடுமையான மக்களை கொண்டது. மிகவும் மலைப் பாங்கான இடத்தை உடையது. எனவே, போர் புரிகின்ற மக்களும் கடினம். போர் புரிகின்ற இடமும் கடினம். அவர்கள் நம்முடைய போர் முறையை முற்றிலும் புரிந்து கொண்டு எப்படி தாக்குவோம். எங்கிருந்து தாக்குவோம் என்பதெல்லாம் தெளிவாக இந்நேரம் அறிந்து வைத்திருப்பார்கள். இந்திர தத்தன் தோல்விகூட நம்முடைய அதிர்ஷ்டம் தான் என்பது என்னுடைய எண்ணம். அவன் இன்னும் இரண்டு நாள் தாக்கு பிடித்திருந்தால் நாம் சோர்வடைந்திருப்போம். நாம் சோர் வடைந்தது தெரிந்திருந்தால் அவன் இன்னும் உற்சாகமாக தாக்கியிருப்பான். நாம் அலை அலையாக வந்ததை பார்த்து பயந்துவிட்டான். இப்படி எளிதாக வெற்றி அடுத்த போரில் கிடைக்காது. அந்த போரில் நான் இறந்து போனால் என் நெற்றி யில் விபூதி பூசி, என் காதில் பஞ்சாட்சரம் ஓது. இளம் வீர னிடம் வயதான வீரன் சொன்னான்.

''என்னமோ நீ இறந்து விடுவது போலவும் நான் இளமை யாக இருப்பதால் பிழைத்து விடுவது போலவும் சொல்கிறாய். மரணத்தில் இளமை ஏது. முதுமை ஏது. எப்பொழுது எவருக்கு நேரம் வருகிறதோ அப்பொழுது போய்க் கொண்டிருக்க வேண்டியதுதான். எனக்கும் கனவுகள் சரியாக இல்லை. பெரிய படிகளில் ஏறிக்கொண்டு போகிறேன். அது கயிலாயமா, சொர்க்கமா என்று தெரியவில்லை. விசாரிக்கிறேன். இரண்டும் ஒன்றுதானே என்று பதில் சொல்கிறார்கள்.'' என்று ஒரு இளம் வீரன் சொல்ல, மற்றவர்களெல்லாம் வாய்விட்டு சிரித்தார்கள்.

''இது மோசமான கனவுதான்.'' என்று ஒரு கிழவன் சொல்ல, அந்த இளைஞன் முகம் இருண்டது.

''ஏன் பயப்படுகிறாய். வாழ விரும்புகிறாயா. ஒன்றும் கடினம் இல்லை. இப்பொழுதே மெல்ல படையின் பின்பக்கம் போய்விடு. படை நகர நகர காலில் முள் குத்தி விட்டது என்று ஏதேனும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு முள்ளை பிடுங்கிக் கொண்டு இரு. படைகள் நகர்ந்து கொண்டிருக்கும்.

மறுபடியும் சேரச் சொன்னால் ஓடிப்போய் சேர்ந்து கொள். அப்படியே மறுபடியும் பின்னடைந்து விடு. கிட்டத்தட்ட படையின் கடைசி பகுதிக்கு போ. நிச்சயமாக அங்கு போர் வாசனை கூட இருக்காது.''

''அதாவது அம்மாதிரி இடங்களுக்கு போனால் சோழப் படையில் சாகாவரம் கிடைத்து விடும் என்று சொல்கிறீர்களா'' என்று சொன்னவனை எதிர்த்து இன்னொரு மத்திமமானவன் கேட்டான்.

''ஏன் அது ஒரு பத்திரமான இடம் அல்லவா.''

''இல்லை. நேற்று இரவு நம் வீரன் ஒருவன் இறந்து போனான். எப்படி தெரியுமா. இங்கிருந்து தோற்று ஓடிப் போனவர்கள் இரகசியமாக குழுக்கள் அமைத்து அவ்வப்போது உள்ளே வந்து அம்பெறிகிறார்கள். இரவு நேரம் உள்ளே வந்து தட்டி எழுப்பி வெட்டிக் கொல்கிறார்கள். மறுபடியும் காணாமல் போகிறார்கள். அந்த மாதிரி குழுக்கள் காடுகளில் இருக்கின்றன. அவர்களை தேடி வீரர்கள் போயிருக்கிறார்கள் என்றாலும் அந்த மாதிரியான தாக்குதல் எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கும். கோட்டை உப்பரிகை மேல் நின்று காவல் காத்துக் கொண்டிருப்பவரை நோக்கி ஆறு அம்புகள் வந்தன. ஐந்து அம்புகள் தைத்தன. அத்தனையும் மிகச்சரியாக, மிக வேகமாக விடப்பட்ட அம்புகள். பிடுங்கி எறிவதற்குள் இறந்து போனான். தாக்கியவர்கள் யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. கைது செய்ய முடியவில்லை.

அவன் ருசித்து சாப்பிடுகிறவன். ஒரு இலை நிறைய கோழி மாமிசம் வைத்திருந்தான். பாதி தான் சாப்பிட்டிருந்தான். மீதி மாமிசம் அப்படியே இருந்தது. அகழிகளில் உள்ள முதலைகளுக்கு போட்டு விட்டேன்'' எல்லோரும் இது கேட்டு மௌனமாக இருந்தார்கள். மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் வரும் என்று எல்லோர் மனமும் சொல்லிக் கொண்டு இருந்தது.

''நீங்கள் எல்லோரும் இப்படி அழுது கொண்டு இருக்கிறீர்கள். ஒரு தெரு திரும்பி அதற்கு அடுத்த தெரு போய் பார். வழி முழுவதும் கொண்டாட்டம். பெண்டிர் கூட்டம். தீப்பந்தத்தில் நடனமாடுகிறார்கள். துணியோடு. துணி இல்லாமல்.

ஒரே ஆரவாரம். அவர்கள் மரணத்தை கண்டு பயப்படுவதே யில்லை.''

''சும்மா இருடா.'' சொன்னவனை இன்னொருவன் அதட்டினான்.

''அதுவும் மரணத்தின் இன்னொரு முகம்தான். செத்துப் போய் விடுவோம். சகலமும் அனுபவித்து விடுவோம் என்று மதுகோப்பையும், பெண்டிர் கூட்டமுமாய் அலைகிறார்கள். உள்ளூரில் கொள்ளையடித்து உள்ளூரிலேயே பெண்கள் வாங்குகிறார்கள். ஊருக்கு போய் தன் பெண்டாட்டியிடம் இத்தனை பேரை இத்தனை நேரம் என்று கதையடித்துக் கொண்டிருப்பான். மானம் கெட்டவன்.''

''அழவும் கூடாது. ஆடவும் கூடாது. ஒரு போர் வீரன் என்ன தான் செய்ய வேண்டும்.''

''ஆஹா. இந்த கேள்வியை என்னிடம் கேட்டதை விட, அரையன் ராஜராஜனிடம் கேட்டிருக்க வேண்டுமே, அரையன் ராஜராஜனும், அருண்மொழிபட்டனும் போர் வீரர்கள்தானே. அவர்கள் எப்படி இருப்பார்கள். அவர்களுடைய நிலைமை என்ன என்று எப்பொழுதாவது யோசித்து பார்த்திருக்கிறாயா. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிப் பார்த்திருக் கிறீர்களா. போ. இரண்டு பேர் கிளம்பி அரையன் ராஜராஜன் என்ன செய்கிறார். அருண்மொழி பட்டன் என்ன செய்கிறார் என்று தேடி கண்டுபிடித்துக்கொண்டு நாளை சபைக்கு வாருங் கள். அது பற்றி பேசுவோம்.'' ஒரு கிழவன் சொல்ல, அந்த சபை அமைதியாயிற்று.

''தண்டநாயகர் அரையன் ராஜராஜரா, அவர் கோவி லுக்கு போயிருக்கிறாரே.'' செய்தி வந்தது. சோழ வீரர்கள் திகைத்தார்கள்.

அடடா. ஒரு ஊரில் வெற்றி பெற்றால் அந்த ஊரில் உள்ள கோவில்களுக்கு போவதை விட்டு விட்டு ஆட்டம், பாட்டமும் அய்யோ என்ற அழுகையும் அபத்தம்தானே, அரையன் ராஜராஜன் கெட்டிக்காரர். கோவிலுக்கு போகிறார். அங்குபோய் அடுத்த வெற்றிக்காக வேண்டிக் கொள்வார்

என்று நினைத்தார்கள். அவசரமாக கோவிலுக்கு போகச் சொன்னார்கள்.

கோவிலில் ஒட்ட தேசத்து கல் தச்சர் கூட்டம் அதிகம் இருந்தது. ஒரு வயதான கல் தச்சரை பார்த்து சோழ தேசத்து உப தளபதி கேட்டான்.

''அய்யா, எதற்கு கல்தச்சர்கள் கூடியிருக்கிறீர்கள். கோவில் கட்டப் போகிறீர்களா. அல்லது தங்கம் வேயப் போகிறீர்களா.''

''ஒரு எழவும் இல்லை. கோவிலை இடிக்கப் போகிறார் கள்.'' அந்த சிற்பி வெறுப்புடன் சொன்னான்.

''யார்?''

''சோழர்கள். உங்கள் ஆட்கள்.'' என்று பதிலுக்கு அவன் சீறினான்.

''என்னது. சோழ தேசமா. கோவிலை இடிப்பதா. ஒருக் காலும் செய்யாதே. வைணவக் கோவிலோ, சிவன் கோவிலோ, பௌத்த கோவிலோ. தீண்டவே தீண்டாதே. மாளிகையை இடிக்கும். கோட்டையை துவம்சம் செய்யும். ஆனால் கோவிலை இடித்ததாக சரித்திரமே இல்லையே. என்ன இது.'' என்று வியந்தபோது, உள்ளே ''தூக்கு தூக்கு'' என்று சத்தம் கேட்டது.

கட்டை வைத்து கயிறு கட்டி மேலே இழுத்து ஒரு காளிச் சிலையை அரையன் ராஜராஜன் பார்க்க அப்படியே கொண்டு வந்து வெளியே வைத்தார்கள். காளி மிக அழகாக இருந்தாள். வலதுகால் கீழே இருந்தது. இடது காலை மடித்து வைத்திருந் தாள். மெல்லிய இடுப்பு. பெரிய முலைகள். அழகிய மெல்லிய குருத்து போன்ற கைகள். பெரிய அதரம். காலின்கீழ் அசுரனை மிதித்திருந்தாள். தலை உச்சியில் தீ எரிவது போல சிலை செய்யப்பட்டிருந்தது. எட்டு கைகளில் எட்டு விதமான ஆயு தங்கள் இருந்தன. கோவிலுள்ள அந்தணர் யாரோ நெஞ்சில் அடித்துக் கொண்டு அழும் சத்தம் கேட்டது.

''அப்படியே துணி சுற்றுங்கள். துணியின் மீது வைக்கோல் பிரி சுற்றுங்கள். வைக்கோல் பிரியின் மீது மறுபடியும் துணி சுற்றுங்கள். இதை ஆடாது அசையாது கனத்த துணியில் தூளி

போல செய்து அதை மூங்கிலில் சொருகி அப்படியே இரண்டு யானைகளுக்கு நடுவே எடுத்து வாருங்கள். இது வண்டியின் மீதோ, பூமியின் மீதோ படக்கூடாது. எந்நேரமும் உயரவே இருக்க வேண்டும். என்று அரையன் ராஜராஜன் உரக்க கட்டளை இட, அந்த அழகிய சிலையின் மீது துணிகள் போர்த் தப்பட்டன. பல்வேறு .வீடுகளிலிருந்து துணிகள் வாங்கப் பட்டன.

''இதோ என் துணியை எடுத்துக் கொண்டு போ'' என்று இடுப்பு துணியை அவிழ்த்து ஒரு கல்தச்சன் வீசினான்.. கோவ ணத்தோடு நின்றான். மேல் சால்வையை பலபேர் கொடுத்தார் கள்.

தங்கள் அருமையான காளி தன்னுடைய போர்வையை போர்த்திக்கொண்டு அற்புதமாகப் போகட்டும் என்று விடை பெறுவது போல் கொடுத்தார்கள்.

துணி சுற்றப்பட்டன. துணிகள் மீது வைக்கோல் பிரி கயிறாக திரிக்கப்பட்டு சுற்றப்பட்டது. அதன்மீது மறுபடியும் துணி சுற்றப்பட்டது. மூன்று மூங்கில்களுக்கு நடுவே தூளி கட்டி அவளை அழகாக கீழே இறக்கி எடுத்துப் போனார்கள். யானையின் மீது ஏற்றினார்கள்.

''இம்மாதிரி பல சிலைகள் வேண்டும்.'' அரையன் ராஜ ராஜன் கட்டளையிட்டார். அங்குள்ள சிற்பிகள் 'சரி' என்று தலையசைத்தார்கள். இது உலகமகாக் கொள்ளை என்று சோழ வீரர்களுக்கு தோன்றியது.

''பண்டாரங்களை கொள்ளையடிக்காமல் சாமி சிலை களை கொள்ளையடிக்கிறீர்களே ஏன்?'' என்று அரையன் ராஜனின் தளபதியை கேட்க,

''பண்டாரங்களை கொள்ளை அடித்தாகிவிட்டது. மீதம் என்ன இருக்கிறது என்று பார்த்தபொழுது இம்மாதிரி அழகிய சிலைகள் இருக்கின்றன. இவைகளை இராஜேந்திர சோழ ருக்கு பரிசாக அளிக்க வேண்டுமென்று அரையன் ராஜராஜன் ஏற்பாடு செய்திருக்கிறார். இம்மாதிரியான சிலைகளை பார்த் தால் இராஜேந்திரர் பரவசமடைவார். அதையும் தவிர.''

“அதையும் தவிர....

“உனக்கெதற்கு சொல்வது போ.” அந்த தளபதி உப தளபதியை விரட்டினான்.

“சொல்லுங்களேன். என்ன குறை வந்துவிடப் போகிறது. உங்கள் வீரத்திற்கு முன்னால் யார் கேள்வி கேட்டுவிடப் போகிறார்கள். அதையும் தவிர,” என்று உபதளபதி எடுத்துக் கொடுத்தான்.

“அங்கே ஜெயங்கொண்டத்தில் நித்த வினோதப் பெருந் தச்ச இரவி என்று ஒருவன் இருக்கிறான். பார்த்திருக்கிறாயா.”

“இல்லை. கேள்விப்பட்டிருக்கிறேன்.”

“அவன் மறவர்களை மதிப்பதே இல்லை. தான் தெய்வ காரியம் செய்வது போலவும், தனக்கு எல்லாம் தெரிந்தது போல வும், தன்னால் அரசாங்கம் நடத்த முடியும் என்பது போலவும் தான் சிற்பத் தொழில் செய்ய மட்டுமே வந்தவனில்லை. அவன் அரசாளப் பிறந்தவன் போலவும் நடந்து கொள்கிறான். மறவர்களை வேலைக்காரர்களைப் போல் நினைக்கிறான். ‘வெறும் வாளும், உடம்பில் மாமிசமும் இருந்து கொள்ளை யடித்து வருகிறீர்கள். என்ன கொள்ளையடித்து வருகிறீர்கள் என்றாவது தெரியுமா’ என்று இழிவாகப் பேசுகிறான். அவன் வழிகாட்டலின் பேரில் அரையன் ராஜராஜன் இராஜேந்திர ருக்கு பிடித்தமான விஷயங்கள் என்று பலதும் செய்து கொண் டிருக்கிறார். அதில் ஒன்று கோவில் சிலைகள். மிக அற்புத மான கோவில் சிலைகளை தேர்ந்தெடுத்து அவைகளை அப்படியே பெயர்த்து எடுத்துக் கொண்டு நம்முடைய ஊருக்கு கொண்டு போவதாக எண்ணம்.”

“நம் ஊரில்தான் இரவி இருக்கிறானே.”

“அந்த இரவிக்கு காண்பிக்க வேண்டுமடா.”

“எதற்கு?”

“உனக்கு மட்டும்தான் கல்லில் பொம்மை செதுக்க முடியுமா. உன்னை விட கொம்பன்களெல்லாம் இருக்கிறார்கள் பலர். இந்த சிலைக்கு ஈடாக உன்னுடைய சிலை ஈடாகுமா

என்றெல்லாம் கேலி செய்வதற்கும், அதைவிட இது அற்புதம் என்று வியப்பதற்கும், அவன் தலையில் தட்டி வைப்பதற்கும் இம்மாதிரி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.''

''இது தேவைதானா.''

''அடேய். இதை யார் சொல்வது. யாருக்கு சொல்வது. அரையன் ராஜராஜன் தீர்மானித்து விட்டார். இரவியின் தலையில் அரைக்க வேண்டுமென்று. அரைத்துக் கொண்டிருக்கிறார். பார்த்துக் கொண்டிரு.''

''இம்மாதிரி எத்தனை சிலைகள் வேண்டும்.''

''இதெல்லாம் என்னடா கணக்கு. கண்ணில் பட்டதை எடுத்துக் கொண்டு போக வேண்டும். இதை மூளி இல்லாமல் எடுத்துவிட்டீர்களா. அதற்குத்தான் நேரே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். இன்னும் பல இடங்களில் இருப்பதாக சொல்கிறார்கள். அவைகளை எடுத்து வர உத்தரவிட வேண்டும். அரையன் ராஜராஜன் பார்ப்பதற்கு முன்பு நகர்ந்து போய்விடு. நீ யார். எங்கிருந்து வருகிறாய் என்று கேள்வி கேட்டால் உனக்கு பதில் சொல்ல முடியாது.''

''ஏன் சொல்ல முடியாது. சொல்ல முடியுமே.''

''என்ன சொல்வாய்?''

''அரையன் ராஜராஜன் அவர்கள் மிகப் பெரிய கலை பித்தர். அவர் சோழக் கலையில் ஆர்வம் கொண்டவர். சிற்பக் கலையில் விருப்பம் உடையவர். அவர் நல்ல சிலைகளை பார்த்தவுடன் அவை சோழ தேசத்திற்கு வரவேண்டுமென்ற விருப்பத்தோடு எடுத்துப் போகிறார். சோழ தேசத்து சிற்பிகளுக்கு பரிசளிப்பதற்காக அவைகளை கவர்ந்து வருகிறார். இந்த யுத்தத்தின் நோக்கமே நல்ல கலைகளை சோழ தேசத்திற்கு கொண்டு வருவதுதான்.''

''அடப்பாவி. சோழதேசம் உருப்படாமல் போவதற்கு இந்த கிறுக்குத்தனம்தான் காரணம். ஒருவர் காலை ஒருவர் வாரி சோழ தேசத்தின் வளர்ச்சியை நாம் பெரிதும் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இங்குள்ள அரசியலமைப்பை பார். மறவர்களையெல்லாம் ஓரமாக உட்கார வைத்துக் கொண்டு அந்தணர்கள் அரசாட்சி

செய்கிறார்கள். சவுக்கால் விளாறுகிறார்கள். கோலெடுத்து சண்டை போடுகிறார்கள். கத்தி எடுத்து வெட்டி வீழ்த்துகிறார் கள். அழகாக படை எடுத்து வருகிறார்கள். இவர்களை விட மிகவும் துணிச்சலும், தெளிவும், தைரியமும் உடையவர்களாம் தட்சிணலாடத்தில் உள்ளவர்கள். ரணசூரன் அங்கு தான் இருக்கிறான். தட்சிணலாடத்து அரசர்களும் உத்திரலாடத்து அரசர்களும் ஒன்று சேர்ந்து கொண்டு மேலை சாளுக்கிய தளபதியான கங்கே யாதவ் தலைமையில் ஒன்று திரண்டு போருக்கு வரத் தயாராகுகிறார்கள்.''

''என்ன?''

''நாம் போக வேண்டாம். அவர்கள் விடுவிக்கப் போகி றார்கள்.''

''யாரை?''

''இந்த ஒட்டதேசத்தை. ஒட்டதேசம் அவர்களுக்கு தாயாதியாம். உத்திரலாடமும், தட்சிணலாடமும் ஒட்டதேசத்தில் உரிமை கொண்டாடப் போகிறார்களாம். ஒட்டதேசத்து அந்தணர்களின் ஆட்சியால்தான் அது கவிழ்ந்து விட்டதாம். மறவர்கள் இருந்திருந்தால் வெட்டியிருக்க மாட்டார்களாம். எனவே, அந்தணர்களை விலக்கி ஒட்டதேசத்தில் மறுபடியும் மறவர்களின் சாம்ராஜ்யத்தை பரவ வைக்க உத்திரலாடத் திலிருந்தும், தட்சிணலாடத்திலிருந்தும் ரணசூரன் பெரும் படையோடு வந்து கொண்டிருக்கிறான்.''

''நாம் இங்கு சிலைகளை நோண்டிக் கொண்டிருக் கிறோமே.''

''வருவதற்கு நேரமாகும். அதுவரை என்ன செய்வது. இப்படி ஏதாவது அனுப்பிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.''

தளபதி நகர, உபதளபதி பின்வாங்க அவர்கள் மெல்ல நகர்ந்து வேறு இடத்திற்கு போனார்கள்.

''ஏன் வருவதற்கு நேரமாகும். என்ன மிருதுவான நடை யில் வந்தாலும் ஆறுநாள் நடையில் வந்து விடலாமே. ஏன் நேரமாகும்.''

"தெரியவில்லையே" என்றார்கள்.

ஒரு ஒட்டதேசத்து அந்தணனை பிடித்து "எத்தனை நேரத்தில் வரலாம்" என்று கேட்டார்கள்.

"ஆறு நாட்களில் வந்து விடலாம். ஆனால் ஆறு நாட்களில் வர மாட்டார்கள்."

"ஏன்?"

"வடகிழக்கு பருவமழை வர ஆரம்பித்துவிட்டது. வங்கத்தில் துவங்கிவிட்டது. காற்று சில்லென்று வீசுகிறது. இது ஆவணி மாதம். மழையும் இல்லை, வெய்யிலும் இல்லை, குளுமையான காற்று அடித்துக் கொண்டிருக்கிறது. மரங்கள் மழைக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன. இலைகளை உதிர்த்துக் கொண்டிருக்கின்றன. வறண்ட பூமி தண்ணீர் குடிக்க காத்துக் கொண்டிருக்கிறது. கடல் அலைகளை பார்த்தீர்களா. சுழற்காற்று வருவதற்குண்டான அறிகுறிகள் இருக்கின்றன. வங்கத்திலிருந்து சுழற்காற்று முட்டி மோதி தெற்கே நகரத் துவங்கினால் அது சூறாவளியாகத்தான் இருக்கும். வங்கத்தை நோக்கி ஒரு சூறாவளி போய்விட்டது. அங்கு சுழன்று அங்கு இருந்து இப்பொழுது தெற்காக திரும்பும். அந்த தெற்காக திரும்பும் பொழுது வலுவடையலாம். வலு குறையலாம். வலு வடைந்தால் நாஸ்தி. வலு குறைந்தால் மழை.

காட்டு மிருகங்கள் குகைக்குள் நுழையத் துவங்கி விட்டனவாம். எறும்புகள் மேலேறிக் கொண்டிருக்கின்றன. எனவே, மழை ஓரிரு நாளில் வரும். மழை வந்தால் படை நகருவது கஷ்டம்."

"என்னய்யா பேசுகிறீர்கள். மழைக்கும் படைக்கும் என்ன கஷ்டம். நாங்களெல்லாம் மழையில் நனைந்து வரவில்லையா."

"உங்கள் பக்கத்திலிருந்து வருகின்ற மழை மழையே அல்ல, தெற்கே போகப் போக பலவீனப்பட்டு மழை பூந்தூறலாய் தான் பெய்கிறது. அதையே நீங்கள் அடைமழை என்று சொல்வீர்கள். அடைமழை என்பதற்கு அர்த்தம் தெரிய சிறிது நாள் ஒட்டதேசத்தில் தங்கிவிட்டு போங்கள். அடுத்த ஒரு அடி

தூரத்தில் முகம் தெரியாது. யார் இருக்கிறார்கள் என்று தெரியாது. மூன்று திரை போட்டு மறைத்ததுபோல எதிரே இருப்பவர்கள் தெரிவார்கள். எனவே, இந்த மழையை அனுபவித்து விட்டு பிறகு வடக்கு நோக்கி போங்கள். மழை அதிகமானால் வடக்கு நோக்கி போவது மிகவும் கடினம். ஏனெனில் வடக்கே தட்சிண லாடமும், உத்திரலாடமும் மேடு, பள்ளங்கள் உடையது. சிறு சிறு குன்றுகள் உடையது. அவைகளின் மேல் ஏறினால் ஒரு அடி பிசகினாலும் போதும் அதலபாதாளத்திற்கு கொண்டு போய் சேர்க்கும். எனவே, இதற்குப் பிறகுதான் உங்களுக்கு இருக்கிறது உண்மையான சோதனை.''

அந்த பண்டிதர் சொல்ல, சோழ வீரர்கள் பயந்தார்கள்.

''இவையெல்லாம் அரையன் ராஜராஜனுக்கு தெரியுமா.'' அந்த உபதளபதி கவலைப்பட்டான். ஒரு ஓலையில் சுருக்க மாக எழுதினான். அதை உடனடியாக அரையன் ராஜராஜனிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்று வழி செய்தான்.

அந்த ஓலை மறுநாள் காலை அரையன் ராஜன் மடியில் இருந்தது.

''யாரது? இந்த உபதளபதி மிகத் தெளிவாக இருக்கி றானே. இன்னும் யுத்தம் பற்றி சிந்திக்கிறானே, குடித்து விட்டு ஆடாது, பெண்களோடு கூத்தாடாது உட்கார்ந்து அழாது, வெறுமே தின்று தூங்காது அடேய், இவன் அடுத்தபடி யோசிக் கிறானே. பருவமழை பற்றி பேசுகிறானே. அழைத்து வா.'' அரையன் ராஜராஜன் உண்ணும்பொழுது அந்த உபதளபதி வரவழைக்கப்பட்டான். உட்கார ஆசனம் தரப்பட்டது. 'நிற்கி றேன்' என்று சொன்னபோது அதட்டி உட்கார வைக்கப்பட் டான். அவன் எதிரேயும் இன்னொரு ஆசனம் வைக்கப்பட்டது. அதன் மீது உணவு பரிமாறப்பட்டது.

''நான் மட்டும் எப்படி சாப்பிடுவது.''

''நீ சாப்பிட்டிருந்தாலும் பரவாயில்லை. சாப்பிடு'' என்று சொல்ல, அவர்களுக்கு மீனும், கோழிக்கறியும், ஆட்டு வறுவ லும் தரப்பட்டன. சிறிதளவு சோறு இருந்தது. அவர்கள் மாமி சத்தை ரசித்து, இழுத்து, கடித்து, உறிஞ்சி உண்டார்கள்.

''இளம் ஆடு. ஆனால் கொழுப்பு அதிகம். எவ்வளவு சுவையாக இருக்கிறது பார்த்தீர்களா.''

''ஆமாம். கறவைகள் கொழுத்து இருக்கின்றன. பெண்கள் கொழுத்து இருக்கிறார்கள். ஆண்கள் கொழுத்து இருக்கிறார்கள். ஆனால் வெகு எளிதிலேயே தோற்றுப் போனார்கள். என்ன காரணம் உபதளபதி.''

சமையற்காரர் பேச்சை காதில் வாங்கிக் .கொண்டே அரையன் ராஜராஜன் உபதளபதியை கேட்டார்.

''அதை நான் விசாரித்து அறிந்து கொண்டேன்.''

''சொல்லும். என்ன விசாரித்தீர்.''

''இவர்கள் தோல்வி எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. என்ன காரணம் என்று இவர்கள் வீரர்களிடம் கேட்டேன். அவர்கள் பதில் சொன்னார்கள்.''

''என்ன?''

''மறவர்கள் சரியாக ஒத்துழைக்கவில்லை.''

''அடடே என்ன இது.''

''ஆமாம். அவர்களுக்குள் பிளவு இருக்கிறது. அந்தணர்கள் வாள்ஏந்தி யுத்தத்திற்கு போகிறார்கள் என்பதால் மறவர்கள் வெறும் பெயருக்குத்தான் போரிட்டிருக்கிறார்கள். வணிகர்களும் அந்தணர்களுடன் சுமூகமாக இல்லை. அதைத் தவிர.'' உபதளபதி நிறுத்தினான்.

''அதைத் தவிர சொல்லும்.''

''அதைத் தவிர, அந்தணர்களுக்கிடையேயும் பிளவு இருக்கிறது. கோவிலில் உள்ள அந்தணர்களுக்கு இவர்கள் யுத்தத்திற்கு போவதை விரும்பவில்லை. மறவர்களை முன்னே அனுப்பாமல் தாங்களே போய் ஜெயித்துவிட்டு வருவோம் என்று கூக்குரலிட்டது பிடிக்கவில்லை. இந்த முறை வெற்றி கிடையாது என்று சபித்திருக்கிறார்கள். குங்கும அட்சதை கொடுக்க முடியாது என்று மறுத்திருக்கிறார்கள். வந்து உங்களை கவனித்துக் கொள்கிறோம். சாட்டைகள் தயாராக

இருக்கட்டும் என்று அரசாட்சி செய்யும் அந்தணர்கள் கோவில் அந்தணர்களை பயமுறுத்திவிட்டு வந்திருக்கிறார்கள். எனவே, ஒரு மிகப் பெரிய நிர்வாக குழப்பம் இருக்கிறது. மறவர்களை கோவில் அந்தணர்கள் தனியாக அழைத்து பின்னடையுங்கள் என்று உத்தரவிட்டதாகவும் செய்தி இருந்தது.

ஆக, படையின் மூன்று பகுதி வேண்டுமென்றே பின்னடைய அந்தணர்கள் முன்னேற முடியாமல் போயிற்று.''

''இது அரசாளும் அந்தணர்களுக்கு தெரிய வில்லையா.''

''தெரிந்திருக்க வேண்டும். தெரிந்திருக்கலாம். ஆனாலும் மறவர்களை அவர்களும் உற்சாகப் படுத்தியிருக்கிறார்கள். அந்த போரில் ஜெயித்தால் அரசின் நிர்வாகத்தில் பெரும் பகுதியை மறவர்களிடம் ஒப்படைப்பதாக குறிப்பாக வரி வசூலிக்கும் விஷயத்தை ஒப்படைப்பதாக சொல்லியிருக்கிறார்கள். செய்வார்களா. மாட்டார்கள். இது மறவர்களுக்கும் தெரியும். அதனால்தான் பின்னடைவு வந்தது.''

''பிறகு எப்படியாவது இவர்கள் மறவர்களை சமாளித்திருக்க வேண்டுமே.''

''மறவர்கள் தேவையில்லை என்றும் இவர்கள் நினைத்திருக்கிறார்கள்.''

''என்ன காரணம்?''

''மறவர்கள் தங்களுக்கு இணையாகவே போரிடுவதில்லை. சோழப்படையை எப்படி எதிர்ப்பார்கள். நாமே சோழப் படையை ஜெயித்துவிடலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்.''

''அதற்கு என்ன காரணம்?''

''வெறும் ஒன்றரை லட்சம் வீரர்கள் மட்டும் முன்னேறியது காரணம்.''

''அவ்வளவுதான் படை என்று நினைத்து விட்டானா.''

''ஆமாம். அலை அலையாய் ஒன்றரை, ஒன்றரை லட்சமாக நாலாபுறமும் சூழ்ந்து கொண்ட படைகளை பார்த்ததும் மூன்றாம்நாள் போரில் பயந்து விட்டான். பின்னடைந்து விட்டான்.''

''அப்படி பின்னடைந்ததுதான் சரியான விஷயம்.''

''ஏன் இப்பொழுது சொல்கிறீர்?''

''எதற்கு சண்டை என்று பிறகுதான் யோசித்திருக்கிறான். நீங்கள் கடந்து உள்ளே போக வேண்டும் அவ்வளவுதானே. வழிவிடு என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய முன்னோர்கள். அதாவது அந்த அந்தணர்களுடைய குருமார் கள் எதற்கு சண்டை. ஏன் போட்டுக்கொள்கிறாய். ஏன் வீரமாக தொடை தட்டிக் கொள்கிறாய். அவன் உன்னுடைய ஆட்சியை பிடித்து அரசாட்சி செய்யவா வந்திருக்கிறான் என்று கேட்டிருக் கிறார்கள். இல்லை என்பது அவர்கள் வாதமாக இருந்தது. அதை புரிந்து கொண்டதும் தடுத்து விட்டான். நீங்கள் உள்ளே நுழைந்ததும் உங்களை அழைத்த அவன் கேட்ட முதல் கேள்வி உனக்கென்ன என் கிரீடமா வேண்டும். நீங்கள் மறுத்ததும் அவனுக்கு அளவற்ற சந்தோஷம்.''

''அற்புதமாய் பேசுகிறாய் உபதளபதி. உன்னைப் போன்ற தீர்மானமான ஆட்கள் நம்மிடையே இருப்பதால்தான் நம் முடைய படைசிறந்து விளங்குகிறது. சரி. பிளவு நம்மிடையே இருக்கிறதா.'' அரையன் ராஜராஜன் உபதளபதியை கூர்மை யாக பார்த்தபடி கேட்டார். உணவு தொடர்ந்து உள்ளுக்குள் போய்க் கொண்டிருந்தது.

''இருக்கிறது.''

''அதை சரி செய்ய முடியாதா.''

''இடங்கை, வலங்கை வீரர்களின் பிரச்சனை ஜாதி பிரச் சனையை போல. அவர்கள் ஒருநாளும் சேர மாட்டார்கள். கொடுக்கல், வாங்கல் இராது. அவர்கள் ஒன்றுசேர இன்னும் ஆயிரம் வருடங்கள் ஆகும். ஆனால், இடங்கை வீரர்கள் வெற்றி களிப்பில் இருப்பதாலேயே வலங்கை வீரர்கள் அமைதி யாக இருக்கிறார்கள்.''

''அப்படியா. என்னவிதமான அமைதி.''

''அடுத்த போரில் உயிரோடு இருப்போமா, இல்லையா என்ற அமைதி.''

''இடங்கை வீரர்கள் என்ன செய்கிறார்கள்.''

''காணக்கிடைக்காதது கிடைத்தது போல பெண்டு களோடு ஆட்டமும், மதுவில் மூழ்கியும் காமக் களியாட்டங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.''

''இதிலிருந்து என்ன தெரிகிறது?''

''வலங்கை வீரர்கள் இப்படி ஆட ஒரு சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களை இன்னும் நெருக்கி அணைத்துக் கொண்டு உயிர் தியாகங்கள் செய்து தங்க ளுடைய இனத்தை இன்னும் அதிகமாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆவலாக இருக்கிறார்கள்.''

''அற்புதம். மிகத் தெளிவான பேச்சு. உபதளபதி, உனக்கு இன்னொரு கேள்வி. தெளிவாக பயமின்றி பதில் சொல். நிர்வாகத்தில் சிறந்தவர் இராஜராஜரா, இராஜேந்திரரா?''

''இராஜராஜர் என்று சொன்னால் என்னுடைய உப தளபதி பதவியும் போய்விடும். எனவே, இராஜேந்திரர் என்று தான் நான் சொல்வேன். சொல்ல வேண்டும்.'' சிரித்தபடி கூறி னான். வாய்விட்டு அரையன் ராஜராஜனும் சிரித்தார்.

''எடை போட்டு பார்ப்பது நம்முடைய வேலை. உண்மையை அறிவது. இராஜராஜர் மிருதுவானவர். மென்மை யானவர். அன்பானவர். இராஜேந்திர சோழர் முரடர். முன்கோபி. எடுத்து எறிந்து பேசும் ஒரு இரக்கம் இல்லாதவர். இப்படித் தானே சோழ தேசத்தில் ஒரு பெயர் நிலவிக் கொண்டிருக் கிறது.''

''ஆமாம்.''

''இது ஒரு பெரிய தவறு. இதை எப்படி களைவது என்று பார்க்க வேண்டும். இராஜராஜர் அன்பானவர். வந்து கன்னம் தடவி, நன்றாக இருக்கிறதா என்று உன் பெயரைச் சொல்லி, உன் மனைவியின் பெயரைச் சொல்லி விசாரித்து பேசுவார். நீ திகைத்துப் போவாய். ஆனால் உபதளபதியான உன்னை தளபதியாக்குவது பற்றி அவர் சிந்திக்க மாட்டார். சிந்திக்க தெரி யாது. ஆனால் இராஜேந்திரர் இந்நேரம் உன்னை தளபதியாக்கி இருப்பார்.''

''அப்படியா தண்டநாயக்கரே.''

''மாதண்ட நாயக்கரே.'' எதிரே உள்ள சமையற்காரன் உரத்த குரலில் சொன்னான்.

''என்ன, மாதண்ட நாயக்கரா.''

''ஆமாம். ஒட்டதேசத்தை ஜெயித்ததால் இன்று காலை ஓலை வந்தது. என்னை மாதண்ட நாயக்கராக்கியிருக்கிறார்.''

''வெறும் மாதண்டநாயக்கர் அல்ல. அவருக்கு அரசருக்கு இணையான பொறுப்பும், கையில் தண்டம் வைத்துக் கொள்ளும் உரிமையும், எல்லா உத்தரவுகளை இடவும், நீக்கவும் அவருக்கு சகல உரிமைகளையும் செய்து கொடுத்திருக்கிறது. அரசர் இல்லாத நேரத்தில் அரையன் ராஜராஜன் மாதண்ட நாயக்கராக அதாவது அரசராக செயல்படுவார்'' என்று கட்டியம் போல் சொல்ல, ''போதும், விலகு'' என்று அரையன் ராஜராஜன் சமையற்காரனை கை காட்டினார். சமையற்காரன் குனிந்து வணங்கிவிட்டு பின்னடைந்தான்.

''இவன் இராஜேந்திர சோழரின் ஒற்றன். எனவே, இவன் இருக்கும் பொழுது ஜாக்கிரதையாகப் பேசு'' என்று காதோடு வாயில் மாமிசம் வைத்து கொண்டே அரையன் ராஜராஜன் உப தளபதியிடம் பேசினார். உபதளபதி திகைத்தான்.

ஒரு அரசாங்க கட்டிடத்திற்குள் என்ன கூத்தெல்லாம் நடக்கிறது என்று வியந்தான்.

''சொல். இன்னும் இராஜராஜருக்கும், இராஜேந்திர சோழருக்கும் உண்டான வித்தியாசத்தை சொல்.''

''நீங்கள் சொல்லி விட்டீர்கள். எனக்கும் சொல்ல இருக்கிறது.''

''என்ன?''

''இராஜேந்திரசோழருடைய போர் அணுகுமுறை வேறு, அது இப்படித்தான் இருக்கும். இராஜராஜரைப் போல ஒரு மிருதுவான அணுகுமுறையாக இருக்காது. நம்முடைய வீரன் ஒருவன் இறந்தால்கூட இராஜேந்திர சோழர் கோபப்படுவார். பழிக்கு பழிவாங்க எண்ணுவார். யுத்தத்தில் பலர் இறப்பது

இயல்பு தானே என்று இராஜராஜர் சற்று அமைதியாக இருப்பார். அடுத்து அடுத்து அடுத்து என்று இடையறாது தாக்க வேண்டும் என்பது இராஜேந்திர சோழருடைய இயல்பு. ஒரு முறை தாக்கியதும் அடுத்த ஆள் அடிபணிய இராஜராஜர் இடம் கொடுப்பார். அடுத்த ஆள் சிந்திக்கவே இராஜேந்திரசோழர் இடம் கொடுக்க மாட்டார். தொடர்ந்து அடித்துக் கொண்டிருப்பார். அவர் கொடுக்கும் தண்டனையில் அடுத்த ஊர் நடுங்கும். அவர் செய்கின்ற சிரத்சேதத்தில் அடுத்தபடை கலங்கும். எனவே, அவருடைய முரட்டு போர் முறையை அற்புதமாக நிகழ்த்திவிட்டு அடுத்த அரசுக்கு அதுபற்றிய தகவலும் தெரிவித்து விடுவார். எனவே ஒரு அரசின் பலவீனத்தை அதிகரிக்கச் செய்து, தாக்குதலில் வேகத்தையும் அதிகரிப்பார். இதனால்தான் இவ்வளவு வேகமாக இங்கு வர முடிந்தது.''

''அற்புதம் உபதளபதி. உம்மை தளபதியாக்க உத்தரவிடுகிறேன். வளை எறிகின்ற ஒரு படைக்கு நீர் தலைவராக இருக்க வேண்டும். உமக்கென்று நூறு வீரர்களும், நாற்பது பணியாளர்களும் தருகிறேன். என் அடுத்த உத்தரவுக்கு காத்திரு.''

''விடை பெறுகிறேன்.''

''இன்னும் ஒரு கேள்வி.''

''சொல்லுங்கள்''

''வலங்கை, இடங்கை வீரர்களின் பிரச்சனையை தீர்க்கவே முடியாதா.''

''முடியும்.''

''எப்படி தளபதி''

அந்த அழைப்பை அந்த வீரன் புரிந்து கொண்டான். நெஞ்சில் கை வைத்து 'சோழம்' என்றான். குனிந்து வணங்கினான். அவர் பாதம் தொட்டு சிரசில் வைத்துக் கொண்டான்.

''உங்கள் அன்பு பிடித்திருக்கிறது. நான் ஒரே ஒரு இரகசியம் சொல்வேன். இவர்களை சேர்த்து வைக்கும்பொழுது அருகருகே இருக்கும்பொழுது இவர்கள் அடித்துக் கொள்வார்கள். பிரித்துப் போடுங்கள்.''

''பிரித்துப் போடுவது என்றால்.''

''இவர்களை ஒரு தேரில் ஒரு கயிற்றில் அடுத்தடுத்து இடங்கை வலங்கை, இடங்கை வலங்கை என்று வைத்தீர்கள் என்றால் தேர் ஒரு அடிகூட நகராது.''

''ஆமாம்.''

''வலதுபக்க கயிற்றை வலங்கை வீரர்களும், இடதுபக்க கயிற்றை இடங்கை வீரர்களும் இழுத்து வர வேண்டும் என்று உத்தரவிட்டீர்கள் என்றால் எப்படி இழுக்கிறேன் பார் என்று வலங்கை வீரர்களும், அதைவிட வேகமாக இழுக்கிறேன் பார் என்று இடங்கை வீரர்களும் போட்டியிட தேர் தடதடத்து கிடக்கும்.''

''சபாஷ். நன்றாக இருக்கிறது. மேற்கொண்டு பேசு.''

''வலங்கை வீரர்களை அடுத்த படையெடுப்பில் தவிர்த்து விடுங்கள்.''

''தவிர்த்து விட்டு .

''இடங்கை வீரர்களை மட்டும் முன்னேறி போகச் சொல்லுங்கள். வலங்கை வீரர்களை கைப்பற்றிய இடத்தை காப்பாற்றச் சொல்லுங்கள். இரண்டு படைகளும் ஒன்றாக முன்னேற வேண்டாம்.''

''புரிகிறது தளபதி. உங்கள் ஆலோசனைக்கு நன்றி. விருதுகளெல்லாம் மிகச் சரியானபடி இன்று மாலைக்குள் உங்களை வந்து சேரும். வேறு தளபதி உங்களை நேரே அழைத்து தளபதி என்ற கேயூரத்தையும், கழலையும் தருவார். உங்கள் படையினருக்கு முன் உங்களை தளபதி என்று அறிமுகப்படுத்துவார். உங்களுக்கான வீரர்கள் நாளை மறுநாள் உங்களிடம் வந்து சேருவார்கள்.''

''மிக்க நன்றி. மாதண்டநாயக்கரே.'' அவன் குனிந்து வணங்கிவிட்டு குதிரை ஏறினான்.

அவர் ஜன்னலுக்கு அருகே போய் மறுபடியும் வாய் கொப்பளித்தார். மாமிச துண்டங்களை பல் இடுக்கிலிருந்து ஒரு குச்சியால் வழித்தெடுத்தார். துப்பினார்.

ஆமாம். ஒருவனை வலதுபக்கம். ஒருவனை இடதுபக்கம் என்று அமைக்க வேண்டும். அருண்மொழியை கூப்பிட வேண்டும். அருண்மொழி வலங்கை படையினருக்கு தலைவன். அருண்மொழி நீ என்னோடு வர வேண்டாம் என்று சொல்ல வேண்டும். அருண்மொழியும் கிட்டத்தட்ட அதே மனோநிலைமையில்தான் இருந்தான். அதற்கு காரணங் கள்தான் வேறாக இருந்தன.

மறுநாள் காலை அந்த சமையற்காரன் மூலம் இராஜேந்திர சோழருக்கு அரையன் ராஜராஜனின் பேச்சுக்களும், திட்டங் களும் சொல்லப்பட்டது. இராஜேந்திரர் பதில் சொல்லாது 'சரி' என்று திருப்பி அனுப்பிவிட்டார். ஆனால் ஆழ்ந்த யோசனை யில் அடிக்கடி மூழ்கியிருந்தார்.

கோதாவரிக்கரையிலிருந்து வேங்கி கோட்டைக்குள் அடைந்து கொண்டார். நதிப் பிரயாணம் மூக்கு ஒழுகச் செய் தது. தலையில் கனம் ஏறியது. அதற்கு வைத்தியம் பார்த்து ஆழ்ந்து உறங்கினார்.

அரையன் ராஜராஜன் இம்மாதிரியான நிலைமை தனக்கு வரக்கூடாது என்று முன்னேற்பாடாக சில குளிகைகள் விழுங் கினார். தினமும் எலுமிச்சை ரசம் குடிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

★ ★ ★

அத்யாயம்

70

இடங்கை வீரர்கள் குதித்து கும்மாளமிடுகிறார்கள். குடித்துவிட்டு புரளுகிறார்கள். வலங்கை வீரர்கள் குடிக்கிறார்கள். ஆனால் ஒன்றாகக் குழுமி பேசிக் கொள்கிறார்கள். பலபேர் மரணம் பற்றியும், அடுத்த யுத்தம் பற்றியும் பேசுகிறார்கள் என்ற செய்தி அருண்மொழிபட்டனுக்கும் வந்தது.

படைவீரர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று அடிக்கடி இரகசிய செய்தியை கேட்காத தலைவன் படைவீரர்களின் நம்பிக்கையை இழப்பான். படைவீரர்கள் விரும்புவதற்கு முன் படைவீரர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுப்பவன் தான் மிகச் சிறந்த தலைவனாக இருக்க முடியும்.

வலங்கை வீரர்களிடம் இடங்கை வீரர்கள் நெருங்கியதில்லை. இந்த பிரிவு யானை வீரர்களிடமோ, தேர் வீரர்களிடமோ, குதிரை வீரர்களிடமோ இருப்பதில்லை. இடங்கை, வலங்கை என்ற பிரிவு காலாட்படையில் இருக்கிறது. தெரிஞ்ச கைக்கோளப் படையில் இருக்கிறது. ஈட்டி, குறுவாள், நீண்ட வாள், சங்கிலி கவசம், தோள் கவசம், இடுப்பு கவசம், கேடயம் என்று எடுத்துக் கொண்டு அடித்துக் கொல்கின்ற லட்சம் பேர் கொண்ட கும்பல் அது. ஒரு ஊரின் உண்மையான பேரழிவு இந்த படைகள் தாக்குகிறபோது ஏற்படும். போரில் இவர்களை வைத்துக் கொண்டு வீரர்களை பின்னடையச் செய்யலாம். யானையை மிரட்டி கோட்டைக் கதவுகளை மூடச் சொல்லலாம். குதிரை வீரர்களை வேகமாக ஒரு இடத்திற்கு போய் அந்த இடத்தை தாக்குவதற்கோ அல்லது சுற்றி நிற்பதற்கோ செய்யலாம். ஆனால் வீடு வீடாக இறங்கி, அங்குலம் அங்குலமாக நுழைந்து ஒரு கோட்டையை ஒரு ஊரை முற்றிலும் சாய்ப்பதற்கு இவர்களே முக்கியம்.

அரையன் ராஜராஜன் மாதண்ட நாயகராக உயர்த்தப் பட்டிருக்கிறார். தனக்கு அந்த மாதிரி எதுவும் வரவில்லை. வருமா என்று தெரியவில்லை. இராஜேந்திர சோழருக்கு அருண் மொழி பற்றி நினைவே இருக்காதோ என்றுகூட தோன்றுகிறது. ஒரு சின்ன சலனம் கூட இல்லை. இதற்காக அருண்மொழிப் பட்டன் எதையும் குறைத்துவிடப் போவதில்லை. மாதண்ட நாயக ராக அரையன் ராஜராஜன், பதவி ஏற்றது சிறப்பு. போய் வாழ்த்தி விட்டு வந்தாயிற்று. முதல் கேள்வி உனக்கு ஏன் ஒன்றும் தரவில்லை என்றுதான் அவரிடமிருந்து வந்தது. அதுவே ஆறுதலாக இருந்தது. அடுத்த படையெடுப்பின்போது வரும். அடுத்த வெற்றியின்போது நிச்சயம் கிடைக்கும் என்று உரத்து சொல்லி, அருண்மொழிபட்டன் சிரிக்க, அரையன் ராஜராஜ னும் சிரித்தார். சம்பிரதாயமாக பேசிக் கொண்டு பிரிந்தபொழுது கொஞ்சம் வலிக்கத்தான் செய்தது. திறமையுள்ளவர்தான். ஆனால் இது அதிகம் அல்லவா. இன்னும் பல பட்டப் பெயர் கள் இவருக்கு வாரி வழங்கிவிடுவார்கள். வழங்கட்டும். அதில் எனக்கொன்றும் பாதிப்பில்லை. ஆனால் வலங்கை வீரர்களை பாதிக்கும். ஏன் உங்களுக்கு எதுவும் வழங்கவில்லை என்று துளைத்து விடுவார்கள். நம்மை இராஜேந்திரர் இளக் காரமாக நினைக்கிறாரா என்று பேசத் துவங்கி விடுவார்கள். அதற்குள் ஏதேனும் செய்தாக வேண்டும்.

இடங்கை வீரர்களை முன்னால் அனுப்பி, பிறகு, தேர், யானைகள் என்று அனுப்பி அதற்கு பிறகு நல்ல இடம் விட்டு வலங்கை வீரர்களை அனுப்பினால் என்ன என்று யோசித் தான். அதுமட்டும் போதாது. அதுவும் யுத்த தொடர்புகளை ஏற்படுத்தும். ஒரு இடம் தாக்கி அழித்தபோது அங்கு இடங்கை வீரர்கள் இருப்பார்கள். அப்பொழுது வலங்கை வீரர்களை நோக்கி, வெட்டி அழித்தோமடா என்று கொக்கரிப்பான். வலங்கை வீரர்கள் அப்படியா என்று கேட்டு விட்டு போக வேண்டியதுதான். எரியூட்டப்பெற்ற இடத்தை சுற்றி வர வேண்டியதுதான். எனவே, வலங்கை வீரர்கள் போகாத இட மாக, இடங்கை வீரர்கள் இல்லாத யுத்தமாக இருக்க வேண்டும். வலங்கை வீரர்கள் தனியாக யுத்தம் செய்ய வேண்டும். எப்படி அது. சட்டென்று அருண்மொழிக்கு ஒன்று தோன்றியது.

வலங்கை வீரர்களை பிரித்து வேறு பக்கம் அழைத்துப் போனால் என்ன, போகலாம். எந்த பக்கம். அவன் மறுபடியும் யோசித்தான்.

எல்லா வலங்கை வீரர்களையும் கடல் நோக்கி அழைத்துப் போய் நாவாய்கள் வாங்கி, நாவாய்களை பறித்து, அங்கிருந்து நாவாய்களை ஏற்றிப் போனால் என்ன. இத்தனை வீரர்களுக்கும் நாவாய்கள் இருக்குமா. இருக்காது. பிறகு, நாவாய்களில் சில வீரர்களை ஏற்றி மற்றவர்களை கடற்கரை ஓரமாக வரச் செய்து எங்கெல்லாம் நாவாய்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் கொள்ளையடிக்க வைத்துக் கொண்டு வந்தால் என்ன. மிகச் சிறந்த ஒரு படையை நாம் இப்பொழுதே தயாரித்தால் என்ன. அவன் தீவிரமாக யோசித்தான்.

அரையன் ராஜராஜனிடமிருந்து அருண்மொழி பட்டனுக்கு அழைப்பு வந்தது.

''நான் இராஜேந்திரருக்கு ஒரு ஓலை அனுப்பினேன். பதிலுக்கு ஒரு ஓலை வந்தது.''

''என்ன?''

''அருண்மொழிப்பட்டன் என்று எழுதி கேள்விக்குறி போட்டு ஓலை அனுப்பினேன். அவர் வேறு ஓலை அனுப்பியிருந்தார்.''

''என்ன ஓலை.''

''பாரும்.'' அந்த ஓலையை எடுத்து நீட்டினார். அவன் தடவி படித்துப் பார்த்தான். ஓலையை கீழே வைத்தான்.

''எதற்கு இதை செய்கிறீர்கள். எனக்கு கொடுக்காதது தவறு போல் அல்லவா ஆகிவிட்டது. இராஜேந்திர சோழரை ஏன் உரசி பார்க்கிறீர்கள். ஒருவேளை நான் அழுது ஆர்ப்பாட்டம் செய்தேன். அதனால் அரையன் ராஜராஜன், அருண்மொழி பட்டனுக்கும் ஏதாவது கொடுத்துவிடுங்கள் என்று கேட்கிறார் என்று நினைக்கலாம் அல்லவா. நீங்கள் இப்படி செய்தது நல்லது இல்லை. பிசகு. எனக்கு வலிக்கிறது.''

அருண்மொழிப்பட்டன் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு பேசினான். அரையன் ராஜராஜன் கேட்டுக் கொண்டிருந்தார். மெல்ல அருகே வந்து அவன் கையை பற்றிக் கொண்டார்.

''தவறு எனில் மன்னித்துவிடும். ஆனால் எனக்கு மட்டும் மாதண்ட நாயகர் என்று சொல்லிவிட்டு உன்னை இன்னும் தளபதியாக பார்ப்பது எனக்கு சரியாகப் படவில்லை. ஏதோ ஒரு காரணத்திற்காக அப்படி செய்திருக்கலாம். அல்லது மறந்திருக் கலாம். ஆனால் எனக்கு இதில் ஒரு சுமை இருக்கிறது. எனக்கு இதில் ஒரு வேதனை இருக்கிறது என்பதை இராஜேந்திர சோழர் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''ஆக, உங்களை காப்பாற்றிக் கொள்ள ஓலை அனுப்பி னீரா.''

''அப்படியும் வைத்துக் கொள்ளலாம். அதே நேரம் என் னுடைய மனசாட்சியின்படி உனக்கு ஏதாவது செய்யாமல் இருக்கப் போகிறாரே என்ற பயத்திலும் நான் இதை செய்திருக் கலாம். நீ என் தோழன். உனக்கு வேண்டும்.''

''இல்லை. உங்களுக்கு ஒரு விஷயம் புரியவில்லை. இப்படி கேட்டு வாங்குவது எனக்கு பிடித்தமே இல்லை. நான் செய்கையில் முன்னேற விரும்புகின்றேன். இம்மாதிரியான பட்டங்களில் அல்ல. இவைகள் வெகு எளிதில் நம்மை வந்து சேர்ந்துவிடும், ஆனால் நம் செயல்கள். அருண்மொழிப்பட்டன் கங்கையை கடந்தான் என்பதுதான் நான் செய்கின்ற நல்ல வேலையாக இருக்கும். என் பட்டப் பெயர் வராது.

அரையன் ராஜராஜன் அவர்களே, உங்கள் அன்பு எனக்கு புரிகிறது. என்னைப் பற்றி நெல்முனை அளவும் கவலைப்படா மல் அடுத்த வேலைக்கு நாம் பயணப்படுவோம்.''

''அதற்காக தான் அழைத்தேன்.''

''சொல்லுங்கள்.''

''தாக்குதல்கள் அங்கிருந்து வரும் என்று சொல்கிறார்கள். அதாவது..

அருண்மொழிபட்டன் அவர் பேச்சை கூர்ந்து கவனித்து விட்டு தொடர்ந்து பேசினான்.

''அதாவது அங்கிருந்து வீரர்கள் கங்கே யாதவ்வின் தலைமையில் நம்மை தாக்குவார்கள் என்று நினைக்கிறீர்களா.''

''ஆமாம்.''

''மழை பற்றி தகவல்கள் ஏதேனும் சொன்னார்களா.''

''வரும் என்று சொன்னார்கள்.''

''இல்லை. கடுமையாக வரும். மிக மோசமான மழையாக இருக்கும் என்று இங்குள்ள வான சாஸ்திரிகளும், அந்தணர்களும் பேசுகிறார்கள். தெற்கிலிருந்து வடகிழக்காக ஒரு புயல் நகர்ந்து வங்கத்தை தாக்கி, வங்கத்தில் சுழன்று அங்கிருந்து அப்படியே வேகமாக உத்திரலாடம், தட்சிணலாடம், கலிங்க தேசம் என்று வரும். அந்த மழைதான் சோழ தேசம் வரை போகும். பாண்டிய தேசம் வரை நீளும். அந்த இடத்தில் மழை மெல்லியதாகிவிடும். இங்கே கனத்த மழையாக இருக்கும். தட்சிணலாடம் தாண்டி உத்திரலாடம் போகும்பொழுது மலைக் குன்றுகளின் ஊடாக போக வேண்டியிருக்கும். புல்வெளிகளில் நிற்க வேண்டியிருக்கும். கடும் மழையில் புல் அடிப் பக்கம் எல்லாம் சேறாக இருக்கும். குதிரைகள் விழும். யானைகள் தள்ளாடும். போர்வீரர்கள் சரிவில் இறங்கும்பொழுது விழுந்து அடிபடுவார்கள். அல்லது இறந்து போவார்கள். எனவே, இந்த மலையை நோக்கி நம்மால் போக முடியாது என்ற கணிப்பிலே அவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு மழை பழக்கம் என்று சொல்கிறார்கள். அவர்களால் மழையில் நடக்கத் தெரியும் என்கிறார்கள். நம்முடைய குதிரைகளை விட அவர்களுடைய குதிரைகள் கனமானவை. அவைகள் ஊன்றி நிற்கும் என்கிறார்கள். எனவே, என்ன செய்வது.''

''வரட்டும் என்று சொல்வது. அவர்கள் தேசத்தில் அவர்களை வெற்றி கொள்வதை விட இந்த இடத்திற்கு வந்து அதாவது ஒட்ட தேசத்தின் நடு இடத்திற்கு வரும்வரை காத்திருப்பது. வந்தால் இந்திரதத்தனோடு பின்னடைவது, பின்னடைந்த பிறகு மறுபடி மூர்க்கமாகத் தாக்குவது.''

''பின்னடைவது என்பது எவ்வளவு தூரம்.''

''கலிங்கத்தின் விளிம்பு வரை. கோதாவரி வரை.''

''அப்படியானால் மன்னர் வருவாரே.''

''அதுவும் ஒரு ஆசைதான். மன்னரை பார்க்கலாம். முழு வேகமாக தாக்கலாம்.''

''இல்லை. அவ்வளவு தொலைவு நாம் பின்னடைய வேண்டியது இல்லை. அது கலிங்கத்தில் உள்ளவர்களுக்கும் கொண்டாட்டமாகி விடும். கலிங்கம் இரண்டாக பிரிந்திருக் கிறது. நிர்வாகத்தில், படைவீரர்களில், பல குழப்பங்கள் இருக் கின்றன.

அப்படி ஒருவேளை கங்கே யாதவ் ரணசூரனோடு உள்ளே நுழைந்தால் அவர்களுக்கு மிகப் பெரிய மரியாதை கோவில் அந்தணர்கள் கொடுத்து விடுவார்கள். மக்களும் கொடுப்பார்கள். அது அவ்வளவு சிறப்பல்ல. இங்கு கங்கே யாதவ் தங்குவதற்கு உறுதியாக நிற்பதற்கு அது வாய்ப்பு செய்து விடும். எனவே, அவர்கள் இங்கு வரட்டும். இந்த இடத் தி லேயே அவர்களை தாக்குவோம்.

அதுமட்டுமல்லாது எனக்குள் ஒரு எண்ணம் இருக்கிறது.''

''என்ன?''

''மறுபடியும் சுற்றி வளைத்து தாக்குவது.''

''எப்படி?''

''நான் வலங்கை வீரர்களோடு கடற்கரை நோக்கி போகி றேன். நாவாய்கள் தேடப் போகிறேன். அந்த நாவாய்கள் எடுத்துக் கொண்டும் காற்று திசைமாறி இருப்பதால், வடக்கு நோக்கி வீசுவதால் நான் இன்னும் வடக்கே போகப் போகி றேன். அதாவது, கொஞ்சம் வீரர்கள் நாவாய்களில் வருவார் கள். மிகப் பெரிய அளவில் வீரர்கள் கடற்கரை ஓரம் வருவார் கள். அங்கும் மழை பெய்யும். காற்று வீசும். அவர்கள் அங்கிருந்து கோசல தேசம் பக்கம் திரும்புவார்கள். அப்பொழுது எங்கிருக் கிறார்கள் இவர்கள் என்று தெரிந்துவிடும். அவர்களுக்கு பின் னால் நான் நிற்பேன். முன்னும் பின்னுமாக, இரண்டு பேரும் இருந்து அவர்களை தாக்கி இந்த இடத்திலேயே அழிப்போம்.''

''அதாவது மீண்டும் கிடுக்கி சாதனை.''

''ஆமாம். இது ஒரு நல்ல விஷயம். நான் பிரிந்து போவேன் என்று சொல்லுவதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது.''

''தெரியும். என்ன காரணமென்று தெரியும்.'' மாதண்ட நாயக்கரான அரையன் ராஜராஜன் தலைகுனிந்து பேசினார்.

''இடங்கை, வலங்கை வீரர்களை பிரித்து வைப்பது நல்லது. இந்த குழப்பத்தை வேறு எப்படியேனும் தீர்க்க வேண்டும். ஆனால் அதற்கு இது நேரமல்ல. இராஜேந்திரரை வைத்துக் கொண்டு தீர்க்க வேண்டும்.''

''சரி. தீர்க்கலாம். நீங்கள் சொல்வதுபோல சுற்றி நின்று இவர்களை தாக்கினால் உங்களுக்கு மேலேயிருந்து வங்க தேசத்து அரசன் வந்தால் நீங்கள் மாட்டிக் கொள்வீர்கள்.

தெற்கே கங்கே யாதவ், வடக்கே வங்க தேசத்து அரசன் மஹிபாலன். மஹிபாலன் படையெடுத்து வந்தால் உங்கள் நிலைமை என்ன?''

''மஹிபாலன் படையெடுத்து வர மாட்டான்.''

''எதனால் அப்படி சொல்கிறீர்கள்.''

''மஹிபாலன் தேசத்து மழை மிக மோசமான மழை. வங்க தேசத்து மழை சூறை காற்றுடன் இருக்கும். படை நகரவே நகராது என்றுதான் உறுதியாகச் சொல்கிறார்கள். இந்த இடத்தில் மழை பலமாக விட்டு விட்டு பெய்யும். வங்க தேசத்தில் இடையறாது மழையும், சூறைக்காற்றும் இருக்கும். யானைகளாலும், குதிரைகளாலும் நடக்கவே முடியாதபடி இருக்கும். காலாட்படை மட்டும்தான் நகரும். அதுவும் மிகவும் வேதனைப் படும். எனவே, மஹிபூலன் வருவதற்கு வாய்ப்பே இல்லை. மஹிபாலன் வருவதற்குள் நாம் இவர்களை சாய்த்துவிடலாம். ஆனால் இந்தப் போர் மிக மோசமானதாக இருக்கும்.''

அவர் முடிக்கும் முன்பு அருண்மொழிப்பட்டன் சொன்னான்.

''பல வீரர்கள் கொல்லப்படுவார்கள். மிகப் பெரிய நஷ்டம் ஏற்படும். குதிரைகள் உருண்டு விழும். விற்பொறிகள் எல்லாம் பயன்படாது. இடங்கை வீரர்கள், வலங்கை வீரர்கள், தெரிஞ்ச கைக்கோளப்படைதான் நம்மை காப்பாற்றும். வாள் எடுத்து தரையில் நின்று சண்டை போடுகிறவன்தான் இதற்கு வெற்றி வாய்ப்பிற்கான காரணமாக இருப்பான்.

அப்படிப்பட்ட படைகள் நம்மிடம் இரண்டாக பிரிந்திருக்கின்றன. இதுதான் வருத்தம்.''

"ஒன்றாக்கி உள்ளே தாக்கினால்?"

"இல்லை. தாக்கி விடுவார்கள். உள்ளுக்குள்ளே மறுபடியும் ஏதாவது போட்டிகள் வெடிக்கும். அது வரவே கூடாது. ஒட்ட தேசத்தில் நிர்வாகத்தில், யுத்த களத்தில் போட்டி இருப்பதை நான் பார்த்தேன். அந்த அவஸ்தை நமக்கு வந்துவிடவே கூடாது. எனவே, நான் வலங்கை வீரர்களோடு கடற்கரை ஓரம்போய் நாவாய்களை பிடிப்பதிலும் அங்கிருந்து கோசல தேசம் திரும்புவதில் கண்ணாக இருப்பேன்."

"எத்தனை நாள் ஆகும்?"

"பதினோறாவது நாள் நான் ரணசூரனுக்கு பின்னால் இருப்பேன். உங்களுக்கு இரகசிய தகவல்கள் வந்து சேரும். அந்தணராக, வியாபாரியாக, ஆடு ஒட்டுபவராக வீரர்கள் வந்து சொல்வார்கள். சில சமயம் நான் பெண்களிடமும் செய்திகள் அனுப்பலாம்."

"ஆமாம். கலிங்க தேசத்தில் போர் பயிற்சி பெற்ற பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை கைது செய்து நகரத்தின் வெளியே வைத்திருக்கிறோம். அதேசமயம் மிக மரியாதையாக நடத்துகிறோம். எப்படி பயிற்சி, என்னவெல்லாம் என்று கேட்ட போது அவர்கள் விவரித்தார்கள். அவர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் தோற்றதற்கு காரணம் அவர்கள் பிரிவு அல்ல. அவர்களுடைய அரசன் காரணமல்ல. ரணசூரன் என்று சொல்கிறார்கள்.

ரணசூரன், கங்கே யாதவோடு கைகோர்த்துக் கொண்டு தவறான முடிவு எடுத்துவிட்டான். அவனால்தான் இந்த விஷயம் பெரிதாகிவிட்டது. இங்கு சோழர்கள் எதிர்த்திருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். எதிர்ப்பதற்கு ரணசூரன் தயாராக இருப்பதால் அதற்கு இந்திரதத்தனும் ஈடுபட வேண்டியதாயிற்று. இந்திரதத்தின் வழிவிட்டான். ரணசூரன் தாக்கினான் என்ற இழிசொல் வரக்கூடாது என்பதற்காகவே இந்திரதத்தன் படை எடுத்து வந்தான். ஆனால் மிகச் சரியான நேரத்தில் விலகி விட்டான்.

நீங்கள் இங்கு அரசாளப் போவதில்லை. இங்கு வந்து உங்கள் கொடி பறக்காது என்று தெரிந்த பிறகு எதற்காக உங்களோடு

சண்டை என்று மிகத் தெளிவாக இருக்கிறார்கள். அவர்களை பெருத்த காசு கொடுத்து நான் உபயோகித்துக் கொள்ளப் போகிறேன். காசு கொடுக்கவும் செய்திருக்கிறேன். விளக்கவும் செய்திருக்கிறேன். இரகசிய தகவல்களை ஒட்டதேசம் ஊடறுத்துப் போய் நீங்கள் சொல்ல வேண்டும் என்று சொன்னபோது அவர்களுக்கு எல்லா வழியும் தெரிந்திருந்தது. அவர்கள் அப்படி செய்வதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நேரம் அவர்கள் என் படைவீரர்களோடு நன்கு கலந்து பேசியிருப்பார்கள். என் படை வீரர்களை, மிக மரியாதையாக நடத்த வேண்டும் என்றும், ஒருபொழுதும் எந்தவிதமான பாலியல் தொந்தரவும் தரக்கூடாது என்றும் கட்டளையிட்டிருக்கிறேன்.

என்னுடைய வீரர்கள் குதிரை வீரர்கள். அவர்களோடு அவர்கள் சந்தோஷமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் குதிரை கொடுத்திருக்கிறேன்."

அந்த சபை செய்தியைக் கேட்டதும் திகைத்துப் போய் கிடந்தது. மழை வரக்கூடிய கருமேகங்கள் ஒன்று திரண்டால் எப்படி ஒரு இடம் இருண்டு போகுமோ அப்படி உள்ளே இறங்கத் துவங்கியிருந்தது.

என்ன செய்வது, எப்படி தடுப்பது என்ற கேள்விகளெல்லாம் மிக வேகமாக எழுந்தன. வீராவேசமான ஆர்ப்பரிப்புகள். இந்த நேரம் எழுந்திருக்க வேண்டும். வந்துவிட்டானா பகைவன். எடு வாளை. தொடு போரை என்றெல்லாம் வீரவசனம் பேசியிருக்க வேண்டும். ஆனால் ரணசூரனுடைய சபை அங்கே திடுக்கிட்டு கிடந்தது.

கீழைச் சாளுக்கியத்துக்கு மேலே ஒட்ட தேசம். ஒட்ட தேசத்திற்கு மேலே தண்டபுக்தி. தண்டபுக்திக்கு மேலே தட்சிண லாடம். எல்லாமே ஒட்ட தேசம்தான். ஆனால் ஆதிநகரை தலைநகராகக் கொண்டு அந்தணர்கள் அரசாங்கம் அமைத்துக் கொண்டபடியால் மகாநதிக் கரையில் தன்னுடைய ராஜ்ஜியத்தை நிலைநிறுத்திக் கொண்டபடியால் வடக்கே ஒட்ட தேசத்து மறவர்கள் ஒன்றுகூடி யோசித்து ஒட்டதேசத்தின் வடபகுதியை தண்டபுக்தி, தட்சிணலாடம் என்று பிரித்துக் கொண்டார்கள்.

மகாநதியின் கிளை நதிகள் அந்த தேசங்களை செழிப்புற வைத்திருந்தன. மழை தப்பாது பெய்தது. மிக அடர்த்தியான காடுகள் அதற்கு உதவி செய்தன. அந்த சபையில் தண்டபுக்தி யின் அரசனான தர்மபாலனும், தட்சிணலாடத்து அரசனான ரணசூரனும், மேலை சாளுக்கியத்து அரசாங்கத்தை நிர்வகிக் கும் கங்கே யாதவும் அமர்ந்திருந்தார்கள். கங்கே யாதவின் சேனாதிபதிகள் உட்கார்ந்திருந்தார்கள்.

''சற்று தொலைவே இருக்கின்ற இந்திரதத்தன் இராஜேந்திர சோழனிடம் சரணடைந்து விட்டான். சோழ தேசத்திலிருந்து வந்த அந்த மிக மூர்க்கமான அரசனிடம் தோற்றுவிட்டான். முதல் இரண்டு நாள் நல்லபடி யுத்தம் செய்து பிறகு எதனாலோ பயந்துவிட்டான். கங்கைக்கு போக நான் வழி செய்கிறேன் என்று சமாதானம் செய்து கொண்டான். அதற்கு காரணம் இந்திரதத்தனா, வேறு ஏதாவதா என்று தெரியவில்லை. ஆனால், இராஜேந்திர சோழன் வரவில்லை. அரையன் ராஜராஜன் என்ற தளபதியை அனுப்பியிருக்கிறான். அருண்மொழிப்பட்டன் என்கிற அந்தண தளபதியும் வந்திருக்கிறான். இவர்கள் இரண்டு பேரும் மிகுந்த கெட்டிக்காரர்கள். திறமையானவர்கள். நேரம் தெரிந்து, சூழ்நிலை தெரிந்து, உளவு தெரிந்து படை எடுக் கிறவர்கள். அவர்களுடைய உளவுகள் நாலாபக்கமும் இருந் தன. ஜனங்களுக்கு இடையே ஆட்டு இடையர்கள் போலவும், அந்தணர்கள் போலும், சில சமயம் யவனர்கள் போலும் வேட மிட்டு அவர்கள் வருகிறார்கள். ஒட்ட மொழியில் சில வார்த் தைகள் தெரிந்து கொண்டு இங்குள்ள மறவர்களைப் போலவே உடை தரித்துக்கொண்டு கோட்டைக் காவல் வரையில் வந்து விடுகிறார்கள். நேற்று கூட ஒற்றன் என்று ஒரு சோழ வீரனை கோட்டைக்கு வெளியே கைது செய்தார்கள். காலையில் கொண்டு வந்து நிறுத்தும்படி வேண்ட ஒரே இரவுக்குள் அவன் இடுப்பு அரைஞாண் கயிறிலிருந்து ஒரு சிறிய பை அளவு தங்கம் எடுத்து காவல் தலைவனிடம் கொடுத்து அவன் குதிரையிலேயே ஏறி தப்பிவிட்டான். சோழ தேசத்து கழஞ்சுகளும் காவல் தலைவனும் கைது செய்யப்பட்டு விசா ரணை நடந்து கொண்டிருக்கிறது.''

''விசாரணை எதற்கு வெட்டி வீழ்த்த வேண்டியதுதானே.'' கங்கே யாதவ் உரக்க கத்த, ''இல்லை. வந்த சோழ தேசத்தவன் என்ன விசாரித்தான், என்ன தெரிந்து கொண்டான் என்பதை தெரிந்து கொள்ளாமல் வெட்டி வீழ்த்த முடியாது'' என்று ரணசூரன் பதில் சொல்லி அடக்கிவிட்டான்.

அங்குள்ள எல்லோரையும் விட ரணசூரன் அமைதியாக வும், தெளிவாகவும் இருந்தான். அவனுக்கு துணையாக விக்கிரம வீரா என்ற வயதான தளபதியும் இருந்தார்.

தண்டபுக்தியை சார்ந்த தர்மபாலனுக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. சுகபோகியாகவும், உல்லாசத்திலேயே மனம் நிலைத்தவனாகவும் இருந்த அந்த சத்திரிய வீரனுக்கு முடிவுகள் எடுக்கத் தெரியவில்லை.

கிழக்கேயிருந்து யவனப் படைகள் வருகின்றன என்று பயமுறுத்துகிறார்கள். அதை நினைத்து கவலைப்படும்போது தெற்கேயிருந்து மிகப்பெரிய படை வந்துவிட்டது. படையான படை. லட்சோப லட்சம் வீரர்கள். உள்ளே நுழைந்து விட்டார் கள் என்று சொல்லப்படுகிறது. அந்தப் தண்டபுக்திக்குள் நுழைந்தால் தண்டபுக்தி ஒன்றுமில்லாமல் போகும். தண்டபுக்தி என்பது கோட்டை கொத்தளம் இல்லை. எல்லாம் மூங்கில் வீடு கள். அரசாங்க இடங்கள் கூட மூங்கல் கூரை உள்ள வீடுகள். பெரிய மூங்கில் கூரை, சிறிய மூங்கில் கூரை என்ற வித்தியாசம் தான் இருக்கும். ஒரே இரவில் அவைகளை சோழப்படை பொசுக்கிவிடும் என்று சொன்னதால் அவன் தன்னுடைய படைகளோடு வடக்கு நோக்கி நகர்ந்தான். அவன் தேசம் கீழே எவ்வித பாதுகாப்பும் இன்றி இருக்கிறது. ஜனங்கள் பயந்து பரிதவித்து கிடக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் இராஜேந்திரர் வேங்கியில் அமர்ந்து கொண்டும், அரையன் ராஜராஜன் ஆதிநகரில் அமர்ந்து கொண்டும், அருண்மொழிப்பட்டன் கடற்கரை ஓரம் நகர்ந்து கொண்டும் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. எப்பொழுது போர் வரும் என்று தெரியவில்லை. ஆனால் இந்திரதத்தன் சரண் அடைந்தது ஒட்ட தேசத்தின் மிகப் பெரிய அவமானம் என்று கருதப்பட்டது.

எதிர்த்துத்தான் ஆக வேண்டும் என்பது ரணசூரனின் நோக்கமாக இருந்தது. காலில் விழுந்துவிடலாம் என்பது தர்மபாலனின் எண்ணமாக இருந்தது. விக்கிரம வீரா, இன்னும் யாரெல்லாம் சேர்ந்து கொள்வார்கள் என்ற எண்ணத்தில் இருந்தான். வங்க தேசத்து அரசனான மஹிபாலனை என்ன பிணக்கு இருந்தாலும் அழைத்து வந்து பேச வேண்டும் என்பது அவரின் கருத்தாக இருந்தது. கோசல தேசத்து கோவிந்த சந்திரனுக்கு ஆள் அனுப்பியிருந்தது. பெரிய விரிவான ஓலை யும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் கோவிந்த சந்திரனிடமிருந்து எந்த தகவலும் இதுவரை வரவில்லை. இந்திரதத்தன் இறங்கி ஒரு தளபதிக்கு தாள் பணிந்து அவனுக்கு இணையாக அமர்ந்திருக்கிறான் என்று கேட்கும்பொழுதுதான் வேதனை நெஞ்சை பிசைந்தன.

''இந்திரதத்தன் மயங்கிப் போனான். காரணம் என்னவாக இருக்கும்.'' ரணசூரன் சிங்காசனத்தில் சாய்ந்து கொண்டு கேட்டான்.

''அந்தணன். அதுதான் காரணம். எடுத்த காரியத்தை முடிக்க முடியாதவன். வாள் ஏந்தி போர் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டு விட்டானே தவிர அவனுக்கு வாள் ஏந்தவும் தெரி யாது. போர் செய்யவும் தெரியாது. போர் என்பது மூர்க்கம் நிறைந் தது. விளையாட்டானது அல்ல. புத்திசாலித்தனமானதல்ல. புத்திசாலித்தனத்தை கழற்றி எறிந்துவிட்டு மிருகம் போல தாக்க வேண்டும். அதுதான் போரினுடைய அடிப்படை விதி. இந்த மிருக குணம் இல்லையென்றால் நீ அரசாங்கத்திற்கு லாயக்கில்லாதவன். அரசு செய்ய வக்கில்லாதவன்.'' கங்கே யாதவ் உரத்த குரலில் கத்தினான்.

''வெறும் கெட்டிக்காரத்தனம் மட்டும் போர் ஆகாது. அந்த கெட்டிக்காரத்தனத்தை செயல்படுத்துகிற மிக மூர்க்கமான மனிதர்கள் தேவை. எந்த கேள்வியும் இல்லாமல் மரணத்தை நோக்கி ஓடி மரணத்தை ஏற்படுத்துகிறவர்களுடைய பலம் தேவை. அந்தணர்கள் அலுங்காமல் வெற்றி வேண்டும் என்று நினைக்கிறார்கள். கழுத்துக்கு மாலை, இடுப்புக்கு வாள் என்று அதையும் ஒரு அலங்காரப் பொருளாக மாற்றி விட் டார்கள். பட்டையாக நெற்றியில் விபூதி தரித்துக் கொண்டு

ருத்ராட்சம் ஏற்றி, இடுப்பில் வாள் தரித்து, கையில் கங்கணம் அணிவித்து மிக அழகாக காட்சியளிக்கிறார்கள். யுத்தம் என்பது வெறும் கோவணத்துடன் நெஞ்சில் வெறியுடன் பல் கடித்து, சினத்தோடு கள் மயக்கத்தில் எகிறி எகிறி அடிக்கின்ற வித்தை.

மாட்டின் கறி தின்னாது போனால் யுத்தம் வராது. செய்ய முடியாது.

இங்கே யானை, அங்கே குதிரை, நடுவே காலாட் படைகள் என்ற சதுரங்க ஆட்டமெல்லாம் சரிதான். ஆனால் யானையும், குதிரையும் எவ்வளவு வேகத்தில் தாக்கும் என்பது உட்கார்ந்து கொண்டு ஆடுகிறவனுக்கு தெரியாது. உள்ளே இறங்கி ஓடுகிறவனுக்குத்தான் தெரியும்.'' மறுபடியும் கங்கே யாதவ் பேச, சபை அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

''அதைத் தவிர, இந்த ஒட்ட தேசத்தில் ஏகப்பட்ட குழப்பங்கள், மறவர்கள் ஆள வேண்டிய பூமி அந்தணர்கள் கையில் எப்படி போயிற்று என்பது எனக்கு இதுவரை புரியவேயில்லை. எந்த இடத்தில் அந்தணர்கள் மறவர்களை பின்னோக்கி அனுப்பினார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என் எதிரே நின்று என்னை அச்சுறுத்தி பேசினால் அவரை நான் பிரம்பால் அடிப்பேன். கூசாமல் சிரச்சேதம் செய்வேன். இந்து மதத்தின் தத்துவம் என்ன சொல்லியிருந்தாலும் சரி, ஒரு அரசனுக்கு எதிரே எவனும் வாய் திறக்கக் கூடாது. திறக்க விட மாட்டேன்.'' சீறிச் சீறி கங்கே யாதவ் பேச, ரணசூரன் முகம் தடவிக் கொண்டான்.

ஒரு மிகப் பெரிய நியதியைக் கொண்டிருக்கின்ற ஒட்ட தேசத்தை பற்றி அவன் இழிவாக பேசுவது ரணசூரனுக்கு பிடிக்கவில்லை.

போர் என்பது முரட்டும், மோதலும் மட்டும் அல்ல. திட்டமிட்ட செயல். அதில் தெளிவான அணுகுமுறை இருந்தாலொழிய வெறும் வேகத்தினால் நல்ல விளைவுகள் ஏற்படாது. சரியான நிர்வாகம்தான் சரியாக போர் செய்யும். சரியான நிர்வாகம்தான் சரியான அரசாட்சியை கொடுக்கும். ஜனங்களின் ஆதரவை பெற்றுத் தரும். ஜனங்களின் ஆதரவு இல்லாது எந்த

போரும் சரியாக நடைபெறாது. ஜனங்களின் ஆதரவு என்பது பல்வேறு விதமான ஜாதியினருடைய உழைப்பு. உழவருடைய உழைப்பும், வணிகருடைய உழைப்பும், குயவர்களுடைய உழைப்பும், கம்மாளர்களுடைய உழைப்பும் பலதும் ஒன்று சேர்ந்ததுதான் போர். கள் குடித்துவிட்டு, கறியை கடித்து தின்பவர் மட்டுமே போரினுடைய திறனாக இருக்க முடியாது. அவர் போரின் ஆரம்பத்தில் இருக்கிறார். ஆனால் அவருக்கு பின்னே பக்கபலமாக நல்ல ஆயுதங்கள் தேவை. நல்ல மரச் சாதனங்கள் தேவை, நல்ல கலைஞர்கள் தேவை. நல்ல வணிகர்கள் தேவை. நல்ல கணக்கர்கள் தேவை. நல்ல உதவி யாட்கள் தேவை. நல்ல மருத்துவர்கள் தேவை. இவை அத்தனையும் இராஜேந்திர சோழர் படையில் நிச்சயம் இருக் கிறது. அதை உளவாளிகளும் உறுதிபடுத்தினார்கள்.

நூறு பேருக்கு ஒரு மருத்துவர் என்று இருக்கிறார்களாம். அவர்கள் மருத்துவம் செய்ய மருந்துகள் வருகின்றனவாம். வணிகர்களெல்லாம் மருந்துகளை கற்றுக் கொள்கிறார்களாம். இளம் ஆடுகளை மட்டுமே சாப்பிடுகிறார்களாம். கிராமங்களை சூறையாடுகிறார்களாம். அவர்களிடம் தேர்கள் பலநூறு இருக் கின்றனவாம். அவைகளை செம்மை செய்து கொண்டே இருக் கின்றார்களாம். குதிரைகளுக்கு உடம்பு தடவி, சேணத்தை மாற்றி மல்லாக்க தள்ளி லாடம் அடித்து என்று பல்வேறு உதவிகள் செய்ய ஆட்கள் இருக்கின்றார்களாம். அந்த பஞ்சமர் களுக்கு மிகப் பெரிய மரியாதை இருக்கிறதாம். அந்த பஞ்சமர் கள் அற்புதமான பாடல்கள் இயற்றுபவர்களாம். அவர்களை பாடச் சொல்லி மறவர்கள் உட்கார்ந்து கேட்பார்களாம். அவர் களுக்கு தட்டு நிறைய உணவு கொடுப்பார்களாம். அவர்கள் உணவை பகிர்ந்து கொள்வார்களாம். தொடாதே என்கிற ஒட்ட தேசத்து அந்தணர் கூச்சலெல்லாம் அங்கு இல்லையாம். பஞ்சமர் கள் தோளில் கை பிடித்து நோயுற்றால், அடிபட்டால் அவர்கள் மீது சாய்ந்து கொண்டு ஆதூரச் சாலைக்கு போகிறார்களாம். அவர்கள் உண்ண கொடுக்கின்ற கஞ்சியையும், அவர்கள் வாயில் ஊற்றுகின்ற மருந்துகளையும் எந்தவித சங்கடமும் இல்லாமல் எடுத்துக் கொள்கிறார்களாம்.

சோழ தேசத்தில் பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. சனாதன தர்மம் சொல்லியிருக்கின்ற பிரிவுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. எல்லோரும் மனிதர்கள்தான் என்கிற அடிப் படை கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கலப்புகள் இல்லை. வெறுப்புகளும் இல்லை. நான்காம் வர்ணத்து கம்மாளர்களுக்கு மிகப்பெரிய மரியாதை கொடுத் தார்களாம். அந்தணர்கள் போல கம்மாளர்களும் பூணூல் அணிந்து கொள்கின்ற உரிமையை இராஜேந்திர சோழர் வழங்கினாராம். ‘முப்புரி நூல்தானே, அந்தணர்கள் மறுத்தால் கழுதைக்கு மாட்டப்படும் என்று சொல்’, என்று இராஜேந்திர சோழர் கர்ஜித்தாராம். அந்தணர்கள் அடங்கிப் போனார்களாம். அதேசமயம் அந்தணர்களை மிகவும் மதிக்கிறானாம். அவர்களை காசிக்கு அனுப்பியிருக்கிறான். அவர்கள் இந்த வழியாகத்தான் போயிருக்கிறார்கள். அவர்கள்தான் பல்வேறு விஷயங்களை இராஜேந்திரருடைய படைத்தளபதிகளுக்கு சொல்லியிருக் கிறார்கள். கங்க தேசத்தில் நுழைந்து இமயமலை சாரலுக்கு போய்விட்டார்கள் என்று தெள்ளத் தெளிவாக சொல்லப் படுகிறது. ஒட்ட தேசத்தில் இரண்டு அந்தணர்கள். கோவில் அந்தணர்கள். நிர்வாக அந்தணர்கள். பிளவு அங்கே வந்து விட்டது. அரசாட்சி செய்ய வேண்டுமென்று சில அந்தணர்கள் மறவர்களை பின்னே நிறுத்த, மறவர்கள் விலகி வர, அந்த விலகி வந்ததே தண்ட புக்தி, தட்சிணலாடம் என்று ஆயிற்று.

வங்க தேசத்து அரசர்கள் வேறு விதம். தட்சிண லாடமும், தண்ட புக்தியும் ஒரே விதம். இவர்கள் எல்லோரும் ஒன்று கூடி யிருக்கிறார்கள். மேலை சாளுக்கியத்து கங்கே யாதவ் மோதியே ஆக வேண்டும் என்ற வெறியோடு இங்கு வந்திருக்கிறான். அங்கே அடிபட்டு இழந்து, ஊரை இழந்து இங்கே ஓடி வந்து போர் என்கிறான். பின்னடைவதில் நாட்டமுள்ளவராக இருக் கிறான். அதேசமயம் மற்றவர்களை தூண்டிவிடுகிறான். கெட்டிக் காரத்தனமாக பரம வைரியான பராமரர்களையும் கூட்டிக் கொண்டு வந்துவிட்டான். பராமரர்களும் வெகு விரைவில் இங்கு வந்து சேருவார்கள். ஆக, பராமரர்களும், மேலைச்சாளுக் கியமும், தண்டபுக்தியும், தட்சிணலாடமும் ஒன்று சேர்ந்து

இராஜேந்திர சோழரை விரைவில் எதிர்க்க வேண்டும். போய் எதிர்ப்பதா. நின்று தடுப்பதா என்பதுதான் கேள்வி.

இதையெல்லாவற்றையும் விட மனதை வேதனைப் படுத்துவது இந்திரதத்தன் சரணடைந்துவிட்டான். ஒட்ட அரசன் தலைகுனிந்து விட்டான் என்பதுதான். ஆனால் கோசல தேசத்து கோவிந்த சந்திரன் இந்த கூட்டணியில் சேர மறுத்து விட்டான். இராஜேந்திர சோழருக்கு வழிவிடு என்று சொல் கிறான். வழிவிடுவது கம்பீரமா, தலைகுனிவா என்றும் யோசிக் கப்பட வேண்டும். ஆனால் வழிவிடக்கூடாது என்று கங்கே யாதவ் தூண்டி விடுகிறான். மேலை சாளுக்கியம் அரசர்கள் அதையே சொல்கிறார்கள். ஜெயசிம்மன் தினத்திற்கு ஒரு ஓலை அனுப்பிக் கொண்டிருக்கிறான். கங்கே யாதவிற்கு பொன் மூட்டைகளை அனுப்பியிருக்கிறான். கங்கே யாதவ் அந்த பொன் மூட்டைகளை அவிழ்த்து வீரர்களிடமும், தட்சிண லாடத்து வீரர்களிடமும் இறைக்கிறான். அவனுக்கு பெரிய மரியாதை இந்த ஊரில் கிடைத்துவிட்டது. அரசனுக்கு இணை யான மரியாதையாகக்கூட அது சமயம் இருக்கிறது. கங்கே யாதவை பார்ப்பதற்கு முண்டியடித்துக் கொண்டு வீரர்கள் வருகிறார்கள். இந்த கொடுமையை எப்படி நிறுத்துவது என்றும் தெரியவில்லை. ரணசூரன் மிகத் துயரோடு உட்கார்ந்து கொண்டிருக்கும்பொழுது இன்னொரு செய்தி வந்தது.

இந்திரதத்தன்தான் சரணடைந்துவிட்டான். இந்திர தத்தனின் மகன் சிவகுப்தன் சரணடையவில்லை. அவன் தண்டபுக்தியின் காடுகளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று சொல்லப்பட்டது. அவனோடு ஆறாயிரம் வீரர்கள் இருக் கிறார்கள் என்று விவரிக்கப்பட்டது. தந்தையிடமிருந்து பிணக் குற்று அவர் சரணடைந்தது பிடிக்காமல் பின்வாங்கி தனி யாக ஒரு படையை திரட்டிக் கொண்டிருக்கிறான் என்றும் பேசப்பட்டது.

“அடேயப்பா. இதல்லவா செய்தி. எதற்கு இடிந்து போகி றீர்கள். இதோ வெளிச்சம் வந்துவிட்டது. நான் போகிறேன். நான் போய் சிவகுப்தனை பார்க்கிறேன். அவனை தூண்டி விடுகிறேன். அவனை முதுகில் அடிக்கச் சொல்கிறேன். அவன் அடித்து, பிறகு நாம் இறங்குவோம். ஆறாயிரம் வீரர்களுடன்

ஒன்றரை லட்சம் வீரர்கள் சண்டை போட்டால் என்ன ஆகும். ஆறாயிரம் வீரர்கள் காலையிலா சண்டைக்குப் போவார்கள். இல்லை நட்ட நடுநிசியில் சண்டைக்கு போவார்கள். ஊரை எரிப்பார்கள். தன்னுடைய ஊரை மிகத் தெளிவாக தெரிந்து வைத்திருப்பவன் சிவகுப்தன். அவன் அரையன் ராஜராஜன் தங்கியிருக்கும் இடத்திற்கு போய் அரையன் ராஜராஜனை யும், அருண்மொழிப்பட்டனையும் கொன்றுவிட்டு வருவான். படைத் தளபதிகளை இழந்த படை வீரர்களை மிக எளிதில் நாம் தாக்கலாம்.''

''குறுக்கு புத்தி தான் உம்முடைய செயலேவா. அதுதான் உம்முடைய அடிப்படை புத்தியா.'' சீறலாக விக்கிரமவீரா கேட்டபோது கங்கே யாதவ் அவரை கோபமாக முறைத்துப் பார்த்தான்.

''அடி வாங்கி, மண்டியிட்டு அழுவதை விட இது உத்தமம். ஒட்ட தேசத்து வீரர்களை விட நான் சிறந்தவன்'' என்று சொல்ல, பல்வேறு கத்திகள் உருவப்பட்டன.

ரணசூரன் கை தூக்கினான்.

''இது நமக்குள் சண்டையிடும் நேரமல்ல. கங்கே யாதவ் சொல்வது ஒரு நல்ல விஷயம். இரவு நேர தாக்குதலில் ஒரு படை கலகலத்து இருக்கும்பொழுது நாம் உள்ளே நுழைய லாம். ஆனால் அந்த இரவு நேர தாக்குதல் எப்படி நடைபெறும் என்பதுதான் முக்கியமான விஷயம்.''

''என்ன செய்ய வேண்டும் என்று அந்த இளைஞனுக்கு நான் சொல்லிவிட்டு வருகிறேன். அவனுக்கு பதினேழு வயது தான் ஆகிறது. ஆனால் அவனுக்கு பின்னே நல்ல தளபதிகள் இருக்கிறார்கள். அவனுக்கு வேண்டியது பொருளுதவியும், உற்சாகமும். பொருளுதவியை நான் செய்கிறேன். உற்சாகத் தைக் கொடுப்பதற்கு என்னோடு யாரேனும் வருகிறீர்களா. அல்லது நான் மட்டுமே போகட்டுமா.''

தண்டபுக்தியை சார்ந்த தர்மபாலன் தான் வருவதாக கைதூக்கினான்.

எல்லாவற்றிலும் சிறுபிள்ளைத்தனமாக இருக்கின்ற இவனை வைத்துக் கொண்டு என்ன செய்வது. அலட்சியமாக அவனை கங்கே யாதவ் பார்த்தான்.

''வாரும். கொஞ்சம் பொருளும் எடுத்துக் கொண்டு வாரும்'' என்று சொன்னான்.

''தங்க நாணயம். அது முக்கியம்'' என்று உரத்து சொன்னான். சபை கங்கே யாதவிற்கு விடை கொடுத்தது.

நாலு கோல் நீளத்திற்கு அகழி. இரண்டு கோல் நீளத்திற்கு நீர். அகழியில் முதலைகள். அகழியைத் தாண்டி கோட்டை. வெளியே போவதற்கும், கோட்டைக்கும் நடுவே உறுதியான மரப்பாலம். மரப்பாலத்தின் மீது சோழ உபதளபதிகள் நின்றிருந்தார்கள். கோட்டைக்குள் நகரம் இருந்தது. நகரத்திற்கு நடுவே கோவில் இருந்தது.

கோவிலுக்கு போக வேண்டும் என்று சொன்னால் அனுமதிக்க வேண்டும் என்று இந்திரதத்தனின் வேண்டுகோள் இருந்தது. இந்திரதத்தன் சரணடைந்தது மட்டுமில்லாமல் தன்னுடைய வீரர்களை அமைதியாகவும், ஒழுக்கமாகவும் நடக்க வேண்டுமென்றும், சோழ வீரர்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும் திட்டவட்டமாக உத்தரவிட்டிருந்தான். ஒட்ட வீரர்கள் சம்மதித்து அவ்விதமே நடந்து கொண்டார்கள். நடக்க முடியாது முரண்டு செய்த வீரர்களை சமாதானப் படுத்தினார்கள். வெளியேறி விடு என்று சொன்னார்கள். கோட்டை விட்டு முரட்டு வீரர்கள் வெளியேறி விட்டார்கள். வேறு எங்கோ போய் மறுபடி படையெடுக்க திட்டமிடுகிறார்கள் என்ற செய்தியும் வந்தது. ஆனால் சோழப்படை வீரர்கள் அதைப்பற்றி கவலைப்படவேயில்லை. கோட்டையை மிகத் தீவிரமாக கண்காணித்து வந்தார்கள். உள்ளே எல்லோரையும் அனுமதித்தார்கள். ஆனால் மடக்கி கேள்வி கேட்டார்கள்.

அது என்ன. கறுப்பு நிற மனிதனை சோழ தேசத்து வீரன் நிறுத்தினான். கறுப்பு நிற மனிதனிடம் பெரிய கூடை இருந்தது. அந்த கூடை கனமாக இருந்தது. அவன் வைத்திருந்த விதத்தில் அதில் பல பொருட்கள் இருக்கின்றன என்று தோன்றியது.

''அது என்னுடைய கூடை அய்யா.''

''என்னுடைய கேள்வியை புரிந்து கொள். அது என்ன?''

''இதற்கு பெயர் கூடை அய்யா. இது என்னுடைய கூடை.''

''இந்த கூடைக்குள் என்ன?''

''இந்த கூடைக்குள் என்னுடைய பொருட்கள் இருக்கின்றன அய்யா?''

''என்ன பொருள்?''

''என்னுடைய தொழிலுக்கான பொருள்கள்.''

''உன்னுடைய தொழில் என்ன?''

''நான் பாம்பாட்டி, மாசுனி தேசத்தை சார்ந்தவன். நாக வம்சத்தை சார்ந்தவன்.''

''கூடைக்குள் மகுடி வைத்திருக்கிறாயா. கடப்பாறைகள், வில், வேல், வாள், சுருள் கத்தி என்று ஏதேனும் உண்டா.''

''இல்லை அய்யா. அம்மாதிரியான ஆயுதங்கள் ஏதும் இல்லை. மகுடி கூட இல்லை. நான் மகுடி வைத்து பிடிப்பவன் அல்ல.''

''பிறகு?''

''பாம்புகளை வைத்து வசியம் செய்பவன். அவைகளை போலவே சப்தமிட்டு அழைப்பவன்.''

''அட, பாம்புகளை நாயை கூப்பிடுவது போலத் த்தோ த்தோ த்தோ என்று சொல்லி கூப்பிடுவாயா.''

''நாய்களை எப்படி கூப்பிடுவது என்று எனக்குத் தெரியாது. நீங்கள் சொல்லும்போதுதான் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் பாம்பு மூச்சுவிடுகிறது அல்லவா. அதேபோல நானும் மூச்சு விடுவேன்.''

''விடு.''

அவன் மெல்ல பாம்பு போல சீறினான். அது அப்படியே பாம்பின் சப்தமாகவே இருந்தது.

''வேறு என்ன இந்த பாம்பு சொல்கிறது.'' வேறு ஒரு வீரன் கேட்டான்.

''வா. வா என்று அழைக்கிறது.''

''அட. பாம்பிற்கு மொழி வேறு உண்டா.''

''ஆமாம் அய்யா. இல்லையெனில் பாம்பு எப்படி வரும்.''

"பாம்பை போ போ என்று எப்படி சொல்வாய்."

"பாம்பை போ போ என்று ஏன் சொல்ல வேண்டும். பாம்பு வருவதுதானே முக்கியம். ஆகவே எங்களுடைய மொழியில் போ போ என்ற வார்த்தை கிடையாது. வா வா என்ற வார்த்தை தான் உண்டு."

"பிறகு வேறு என்னதான் கூப்பிடுவாய்."

"உன்னை பிடிக்கிறது என்று கூப்பிடுவேன்."

"யாரை? என்னையா?"

"இல்லை, உள்ளே மறைந்திருக்கிற பாம்பை உன்னை பிடித்திருக்கிறது, வெளியே வா என்று கூப்பிடுவேன்."

"கூப்பிடு." அவன் வேறு சில சைகைகள் செய்தான். மூச்சு விடுவதில் வித்தியாசம் காட்டினான். உள்ளுக்குள் கூடை நெளிந்தது.

"என்னடா அது?" வீரர்கள் இடுப்பில் கத்தியின் மீது கை வைத்தார்கள். அவன் மெல்ல பின்வாங்கினான்.

"ஒரே ஒரு பாம்பு இருக்கிறதய்யா."

"இவ்வளவு கனமா, ஒரு பாம்பு."

"ஆமாம் அய்யா. ராஜநாகம்."

"ராஜ நாகமா." வீரர்கள் ஆவலானார்கள். குறுங்கத்தியை எடுத்துக் கொண்டார்கள்.

"எடு. ராஜநாகத்தை பார்க்க வேண்டும்."

"தப்பித்து விட்டால் கஷ்டமய்யா."

"ஏன் தப்பிக்க போகிறது. ஒரே அடி. உன் நாகம் செத்து விடும்" என்று சொல்ல,

"அடிக்காதீர்கள் அய்யா. அது மிக நல்ல பாம்பு, மிக வயதான பாம்பு."

"அதனுடைய வயது உனக்கு எப்படி தெரியும்?"

"என் தகப்பனாருக்கு தகப்பனார் வளர்த்தது."

"உன் தாத்தா வளர்த்த பாம்பா?"

''ஆமாம். அறுபது வருடமாக எங்களோடு இருக்கிறது. அதற்கு வயது எண்பது இருக்கும்.''

''அடேய், முட்டாள். பாம்புக்கு ஜாதகமா கணித்து வைத்திருக்கிறாய். எடுத்து வெளியே காண்பி.''

''அய்யா, பாம்பு என்று சொல்லிவிட்டேனே.''

''பாம்பு என்று சொல்லி எதையாவது எடுத்துக் கொண்டு போகலாம் என்று பார்க்கிறாயா. அந்த கூடையை கீழே இறக்க வேண்டும். திறக்க வேண்டும்.''

''அய்யா, சீறினால் கஷ்டம்.''

''யாருக்கு, உனக்கு, பாம்புக்கு கஷ்டம். எங்களுக்கு எந்த கஷ்டமும் இல்லை.'' அவர்கள் வாள் உருவிக் கொண்டார்கள். வேலை தயாராக வைத்துக் கொண்டிருந்தார்கள். குறுங் கத்தியை எடுத்துக் கொண்டார்கள். சுற்றி ஆறேழு வீரர்கள் தயாராக இருந்தார்கள். மேலே கோட்டை மேலிருந்து இந்த பேச்சை கேட்டு வில்லில் நாண் தொடுத்து இன்னொருவன் தயாராக இருந்தான்.

ஏழு ஆயுதங்கள் உள்ளே இருக்கின்ற நாகத்தை உசுப் பேற்றியிருக்க வேண்டும். அது மேலும் துடித்தது. மெல்ல கூடையை கீழே வைத்து கூடையின் மூலையில் உள்ள கயிறு களை அவிழ்ந்து நிதானமாக, மெல்ல கால் அளவு மூடியை திறந்து வைத்தான். சட்டென்று வெளியே ஒரு பெரிய பாம்பு தவழ்ந்து வந்தது. அவன் மூச்சை விதம் விதமாக விட அது நிமிர்ந்து நின்றது. இன்னும் மூச்சுவிட இன்னும் உயர ஆரம் பித்தது. வட்டமாக ஒரு அளவு தன்னை தரையில் வைத்துக் கொண்டு மிச்ச உடம்பை உயர்த்திக் கொண்டு அகலமாக படையெடுத்து கண்களும், மூக்கும் துடிதுடிக்க, நாக்கு வெளியே தெரிய அற்புதமாக பாம்பு படம் எடுத்தது.

''இது என்ன நாகம்?''

''ராஜநாகம்.''

''ஏன் ராஜ நாகம்.''

''இதற்கு வயதாகிவிட்டதய்யா. இது இறக்கும் முன்பு மாணிக்கம் கக்கும்.''

''அடேய், முட்டாள். மாணிக்கம் கக்கும் வேலையெல் லாம் வேறு இடத்தில் வைத்துக் கொள். ஒட்ட தேசத்து அறிவிலி யிடம் சொல். எந்த நாகமும் மாணிக்கம் கக்காது.''

''இதற்கு எண்பது வயது அய்யா. மிஞ்சி மிஞ்சி இருந் தால் பத்து வருடம் இருக்கும். பெரிய ஜாதி பாம்பு. நன்கு கொழுத்தது.''

''இதற்கு எண்பது வயது என்று ஜாதகமெல்லாம் பேசாதே.''

''அய்யா. இது மாணிக்கம் கக்கப் போகிறது.''

''எதிலிருந்து கக்கும்?''

''தலையிலிருந்து மாணிக்கம் வாங்கிக் கொண்டு கக்கும்.''

''எங்கே பார்க்கலாம்.'' அவன் அருகே போக பாம்பு சீறிற்று. அவன் கை வாளால் வேகமாக வீசினான். பாம்பு இரண்டு துண்டாயிற்று. நடுந்தலையில் தட்டினான்.

''எங்கே மாணிக்கம்'' என்று சொல்ல, அவன் திகைத்துப் போனான். குத்திட்டு உட்கார்ந்தான். தேம்பி அழுதான்.

''எங்கடா மாணிக்கம். யாரை ஏமாற்றுகிறாய்.'' அவர் பாம்பை குத்தி கூடையில் போட்டார். பாம்பினுடைய உடல் கூடையில் இருந்தது.

''எடுத்துக் கொண்டு வெளியே போ.'' கத்தியின் பட்டை பக்கத்தால் அவன் முதுகில் அடித்தார். அவன் துடித்தபடி எழுந் திருந்தான். கூடையை எடுத்துக் கொண்டான்.

''பாம்பு மாணிக்கம் கக்குமய்யா.''

''போடா. எனக்கு தெரியும் என்ன கக்கும் என்று'' என்று சொல்ல, அவன்,

''என்னிடம் பாம்பு கக்கிய மாணிக்கம் ஒன்று இருக்கிறது'' என்று சொல்ல, சட்டென்று வீரர்களால் அவன் மடக்கப்பட் டான்.

''எடு. பாம்பு கக்கிய மாணிக்கத்தை எடு.'' அவன் இடுப் பிலிருந்து நோண்டத் துவங்கினான். சட்டென்று அவனை

இரண்டு, மூன்று பேர் அழுத்தி அவன் உடையை உருவினார்கள். ஒரு கல் தட்டுப்பட்டது. எடுத்து இழுத்து பார்த்தார்கள். கிட்டத்தட்ட எலுமிச்சை பழம் அளவுக்கு கோணங்கள் சரியில்லாத ஒரு கல் வெளியே வந்தது.

''அற்புதமான மாணிக்கம். பட்டை தீட்டினால் மிகப் பெரிய ஆபரணம் செய்ய முடியும்.'' சூரிய ஒளியில் பிரகாசித்தது. பார்ப்பவர் முகத்தில் செம்மை ஏறிற்று.

''இது, பூமியில் கிடைக்கும் கல், பாம்பிலிருந்து வரும் கல் அல்ல. எந்த பாம்பும் இவ்வளவு பெரிய சுமையை தன்னுள் வைத்திருக்காது. இது பூமியில் மண்ணோடு மண்ணாக கிடந்ததை எடுத்து வைத்துக் கொண்டு, நாகத்தை வைத்துக் கொண்டு இவன் திருட்டுத்தனம் செய்கிறான். போ. இந்த மாணிக்கத்தை கொடுத்துவிட்டு போ. சோழர்கள் பறித்துக் கொண்டார்கள் என்று சொல்.''

''அய்யா, கொடுத்து விடுங்கள்.''

''கொடுக்க முடியாது போடா.'' அவர் மாணிக்க கல்லை தன்னுடைய இடுப்பிலே பத்திரமாக சொருகிக் கொண்டார். அவனை கழுத்து பிடித்து தள்ளினார். எட்டி உதைத்தார். அவன் ஆக்ரோஷமானான். அவர் இடுப்புக்குள் இருந்த மாணிக்க கல்லை நோக்கி பாய்ந்தான். அவர் இடுப்பில் இருந்த மாணிக்க கல்லை அழுந்தப் பற்றினான். தன் பக்கம் இழுத்தான். அவர் அவன் முதுகில் அடித்தார். தலையில் அடித்தார். முழங்காலால் முகத்தில் இடித்தார். வெகு வேகமாக புரட்டிப் போட்டார். எழுந்து நிற்கும்போது ''போய்விடு'' என்று கத்தினார். அவன் மறுபடியும் பாய்ந்து வந்தான். கால் இடறினார். மண்டியிட்டு நிமிர்ந்தவன் கழுத்தை நோக்கி வேகமாக வாளை வீசினார். அவன் தலை அறுந்து தரையில் விழுந்தது. குபீர் என்று ரத்தம் கொப்பளித்தது. அவன் நிலத்தில் தடேரென்று விழுந்தான். அவன் தலை ஓடிப் போய் மர இடுக்குகளில் நின்றது. கூடையில் இருந்த பாம்பை தூக்கி அகழியில் போட்டார்கள். அவன் உடம்பை இழுத்து அகழியில் தள்ளினார்கள். தலையை ஈட்டியால் குத்தி இன்னும் தொலைவாக வீசினார்கள்.

''இந்த இடத்தை கழுவி விடுங்களடா'' என்று சொல்ல, அந்த மாசுனி தேசத்து நாகவீரனுடைய வாழ்வு அங்கு முடிந்து போயிற்று.

சோழ வீரர்கள் தங்களுடைய கடமைகளை மறுபடியும் ஆரம்பித்தார்கள். அடுத்த ஆளை சோதனை செய்தார்கள்.

''பார்த்தீரா. பாம்பை உள்ளே எடுத்துக் கொண்டு போய் இவன் என்ன செய்யப் போகிறான். மகுடி கூட இல்லையே. அப்பொழுது எதற்கு பாம்பு உள்ளே போகிறது. பாம்பு மாணிக்கம் கக்குமாம். இவன் ரத்தம் கக்கிவிட்டான்.

நல்ல மாணிக்கமய்யா. இதை இராஜேந்திரரிடம் கொடுக்கப் போகிறேன். அவர் சந்தோஷமாகச் சொன்னார்.

''பாம்பு மாணிக்கம் கக்குமென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அது பொய் கதை. மாணிக்கம் கல்லால் ஆனது. பூமியை சார்ந்தது. பாம்பு ஒருபொழுதும் அதை உற்பத்தி செய்யாது. பாம்பு படம் எடுக்கும். விஷம் கக்கும். அவ்வளவே. மாணிக்கம் கக்காது. வீரம் மட்டும் இருந்தால் போதாது நண்பனே. விவேகம் வேண்டும். தெளிவு வேண்டும். எது எங்கிருந்து வரும் என்ற புத்தி வேண்டும்.

ஒட்ட தேசத்து வீரர்களுக்கு விவேகம் இருக்கிறது. ஆனால் வீரம் இல்லை. இந்த மாசுனி தேசத்து வீரனுக்கு வேகம் இருக்கிறது. ஆனால் விவேகம் இல்லை. பெண்டிர்களை, அப்பாவிகளை ஏமாற்றுவது போல சோழப்படையோடு பேச வந்துவிட்டான். அவனுக்கு இதுதான் சரியான தண்டனை.''

''மாசுனி தேசத்தில் பாம்புகள் அதிகம் இருக்குமாமே.''

''யாருக்கு தெரியும். இராஜேந்திர சோழர் வருகிறார் என்றதும், மாசுனி தேசம் காணாமல் போயிற்று. எப்பொழுது வேண்டுமானாலும் உள்ளே வரலாம் என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆனால் உள்ளே போக வேண்டிய அவசியம் இல்லாமல் அவர்களாகவே பல்வேறு பரிசல்கள் கொண்டு வைத்து வைத்தார்கள். அந்த பரிசல்கள் கோதாவரி கரை நோக்கி போய்விட்டன. இராஜேந்திர சோழரிடம் இந்நேரம் போயிருக்கும்.''

''எனக்கென்னவோ அந்த படமெடுத்த பாம்பே கண்ணில் நிற்கிறது.''

''எதைக் கண்டு பயப்படுகிறோமோ அதுவே மனதில் நிற்கும். மரணம் பற்றி பயந்தால் மரணமே முன்னால் நிற்கும். எதைப் பற்றியும் பயப்பட வேண்டாம். அப்பொழுது எல்லா விஷயங்களும் தள்ளிப். போய்விடும். நீங்கள் மட்டுமே இருப்பீர்கள்.'' ஒரு மிகப் பெரிய உண்மையை அந்த உபதளபதி சாதாரணமாக பேசினான்.

''இராஜேந்திர சோழரை நேரே சந்திக்க வேண்டும்'' என்று ஒரு ஒட்டவீரன் வேஙகி அரண்மனை வாசலில் நின்றான். அவனை சோதனையிடப்பட்டது. அவனிடம் ஏதுமில்லை.

''எதற்காக பார்க்க வேண்டும்?''

''மிக இரகசிய செய்தி.''

''யார் கொடுத்தனுப்பிய செய்தி.''

''அதையும் சொல்ல முடியாது.''

''அப்பொழுது அவரை பார்க்க முடியாது.''

''இராஜேந்திர சோழரின் உடன் இருக்கும் வீரனிடம் சொல்கிறேன். மற்றபடிக்கு அந்த செய்தியை நான் இராஜேந்திர சோழரிடம் மட்டுமே சொல்வேன்.''

மாணிக்க வாசகம் முன்னே வந்தான்.

''ஒட்ட தேசத்திலிருந்து வருகிறீர்களா. எந்த இடம். என்ன பெயர். எந்த தகுதி. இப்பொழுது சொல்லுங்கள். யாரிடமிருந்து வருகிறீர்கள்.''

''இந்திரதத்தனுடைய மனைவியிடமிருந்து வருகிறேன்.''

''இந்திரதத்தனுடைய மனைவியிடமிருந்தா. என்ன பெயர்.''

''துர்கா.''

''ஆமாம். கேள்விப்பட்டிருக்கிறேன். என்ன செய்தி.''

''உங்களிடம் சொல்வதற்கில்லை.''

''சரி. நான் அழைத்துப் போகிறேன்.''

அவன் அரண்மனைக்குள் அழைத்துப் போகப்பட்டான். அரண்மனை அதிகாரி அவனை உற்று நோக்கினான். மெல்ல மாணிக்கவாசகம் காதில் பேசினான். சட்டென்று அவன் பின் கையை இழுத்து கயிறு கட்டினார்கள்.

"ஏன்?"

"நீ கைதி, உன்னை விடுவிப்பது இராஜேந்திர சோழருடைய கையில் இருக்கிறது. வந்த விஷயத்தை சொல். அங்கு வந்து நீ ஆடி ஏதேனும் அட்டகாசம் செய்துவிடக் கூடாதல்லவா. அதற்குத்தான் கட்டு" என்று அவனை நகர்த்திக் கொண்டு போனார்கள். அவன் அங்கு போய் நின்றான்.

இராஜேந்திர சோழர் அவனை உள்ளே வரச் சொன்னார். படியில் ஏறி அந்தப்புரத்தின் விளிம்பில் உள்ள மிகப் பெரிய அறையில் அவன் நிறுத்தி வைக்கப்பட்டான். இராஜேந்திர சோழர் உள்ளே நுழைந்தார். அங்கே ஆசனங்கள் இருந்தன. அவனுக்கு அருகே வந்தார்.

"சொல். என்ன விஷயம்?"

"இந்திரதத்தனின் மனைவி துர்கா தேவியார் உங்களுக்கு ஒரு செய்தி சொல்லியிருக்கிறார்கள்."

"என்ன செய்தி?"

"இந்திரதத்தனையும், துர்கா தேவியாரையும், அவரை சேர்ந்த சில உறவினர்களையும் உடனடியாக ஒட்ட தேசத்திலிருந்து அப்புறப்படுத்தி வேங்கிக்கோ, அல்லது சோழ தேசத்திற்கோ அழைத்துப் போகும்படி கேட்டிருக்கிறார்கள்."

"ஏன்?" இராஜேந்திரசோழர் வியந்தார்.

"அவர்கள் அங்கிருப்பது ஆபத்து என்று நினைக்கிறார்கள்."

"யாரால் ஆபத்து?"

"தெற்கே இருக்கின்ற தண்டபுக்தி அரசனாலோ தட்சிண லாடத்து அரசனாலோ ஆபத்து ஏற்படலாம். அதைத் தவிர இந்திரதத்தனுடைய மகன் தனியாக பிரிந்து போய்விட்டான். அவனாலும் தொந்தரவு ஏற்படலாம் என்று எண்ணுகிறார்கள்.

அவனையும் கைது செய்து அழைத்துப் போக வேண்டும் என்று விரும்புகிறார்கள்.''

''இன்னும் தெளிவாகச் சொல்.''

''சரணடைந்து விட்டோம். பிறகு எதிர்ப்பதில் எந்த லாபமும் இல்லை. சரணடைந்துவிட்டோம் என்று தெரிந்து இந்திரதத்தனை சார்ந்த ஒரு குழு பெரிய போருக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. அதை தண்டபுக்தி அரசனும், தட்சிண லாடத்து அரசனும் தூண்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரியான இரகசிய விஷயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னொரு படையெடுப்பு நடைபெறுவதற்கு தயாராக இருக்கிறது. இந்திர தத்தன் மிகத் தெளிவான, உறுதியான சமாதானத்திற்கு வந்திருக்கிறார். அவரை கொன்று போட அவர்கள் துடிக்கிறார்கள்'' என்று சொன்னான்.

''புரிகிறது, நான் ஓலை தருகிறேன். நீ எடுத்துப் போ. அதே நேரம் என்னுடைய ஆட்கள் உன்னை விட வேகமாகப் போய் இந்த விஷயத்தில் தங்களுடைய திறமையை காட்டுவார்கள். கவலை வேண்டாம். அரையன் ராஜராஜனுக்கு என் உத்தரவு ஒட்ட நாடு போய் சேர்ந்துவிடும்'' என்று உறுதி சொன்னார்.

அவர் சொல்லுகின்ற நேரத்தில் அரையன் ராஜராஜன் நகர்வலம் வருவதாக குதிரை ஏறி கிளம்பினார். அருண்மொழிப் பட்டன் பின் தொடர்ந்தான். அரையன் ராஜராஜனுக்கும், அருண்மொழிப்பட்டனுக்கும் இடையே பதினைந்து குதிரைகள் தூரம் இருந்தன.

இரண்டு தளபதிகளையும் ஆபத்துதவி படைகள் மிக நெருக்கமாக அழைத்துப் போயின. ஆனாலும் அந்த ஊர்வலம் தாக்குதலாக இருக்குமோ என்ற சந்தேகம் எல்லோருக்கும் இருந்தது. அந்த ஊர்வலத்தில் இருந்த சோழ வீரர்கள் இரண்டு பக்கமும் பார்த்துக் கொண்டு போனார்கள். வீட்டிற்கு வெளியே வந்து அங்கங்கே பிரச்சனைகள் ஏற்படலாம் என்ற எண்ணம் தெளிவாக சோழ வீரர்களுக்கு இருந்தது. தங்கள் உபதளபதியிடம் தெரிவித்து உபதளபதி தளபதியிடம் தெரிவித்து அரையன் ராஜராஜனுக்கும், அருண்மொழிபட்டனுக்கும் போய்ச் சேர்ந்தது.

''அப்படித்தான் இருக்கும். நாம் ஜெயித்த தேசம். எல்லோரையும் ஜெயித்து விட்டோம் என்ற எண்ணம் நமக்கு வரக்கூடாது. நாம் எப்பொழுதுமே எதிரியினுடைய வீட்டில் இருக்கும்பொழுது கவனமாக இருக்க வேண்டும்'' என்று பதில் வந்தது.

சோழ வீரர்கள் இரவிலே தூங்கும்பொழுது முற்றிலும் தூங்காமல் இரண்டு பகுதியாக பிரிந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை இடப்பட்டது. சோழ வீரர்கள் தலை சொறிந்தார்கள்.

''இன்னுமா போர்'' என்றார்கள்.

''தேவரடியார்கள் இடங்களுக்கு போகும்பொழுது மிகவும் கவனமாக போக வேண்டும். குடிப்பது குறைவாக குடிக்க வேண்டும். தேவரடியார்களிடம் கூட ஒரு படை போல கவனமாக கண்காணிக்க வேண்டும். எல்லா நடமாட்டங்களிலும் சோழ வீரர்கள் படை இருக்க வேண்டும். இரவு நேரம் தனியாக யாராவது வெளியே போனால் மடக்கி உட்கார வைத்து விடியலுக்குப் பிறகு அனுப்பலாம். அதேசமயம் அத்துமீற வேண்டாம்'' என்றும் சொல்லப்பட்டது.

ஆதிநகரம் மிக கவனமாக பார்க்கப்பட்டது. கவனமாக பார்க்கப்பட்ட ஆறாம் நாள் சிவகுப்தன் ஆதிநகரின் கோட்டைக்குள் அவனுக்கு தெரிந்த இரகசிய வழியாக உள்ளே நுழைந்தான். அவனை தொடர்ந்து பல்வேறு விதமாக நாலாயிரம் வீரர்கள் வந்தார்கள்.

திடீரென்று இரவுநேரம் நடமாட்டம் அதிகமாகியிருப்பதை சோழ வீரர்கள் கவனித்தார்கள். அதே நேரம் சோதனையிட்டு பார்த்தபோது எல்லாம் சரியாக இருக்கிறது என்பதை புரிந்துகொண்டார்கள். ஊர் அமைதியாயிற்று. விளக்குகள் அமர்த்தப்பட்டன. பந்தங்கள் குறைக்கப்பட்டன. உள்ளுக்குள் இனிமேல் போகக்கூடாது என்று பொதுமகளிர் மாளிகை கதவுகள் சாத்தப்பட்டன. அங்கே காவல் வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டார்கள். குளிர்காற்று வீசத் துவங்கியது. வெகுசீக்கிரம் மழை வரும் என்பதற்கு உத்தேசமாக அது இருந்தது. கோபமாக, அருவருப்பாக, கொஞ்சம் முறைப்பாக பார்க்கிறவர்களை

சட்டென்று இழுத்துக் கொண்டு பின்னே அனுப்பினார்கள். வீட்டிற்குள் நுழைந்து பார்த்தார்கள். அது ஒரு சுத்தப்படுத்தும் விதமாகத்தான் இருந்தது. அந்த ஊர்வலத்தின் அடிப்படை விஷயமே உள்ளுக்குள் யாரேனும் ஒளிந்திருக்கிறார்களா என்று பார்க்கும் எண்ணமாக இருந்தது. பல கைதிகளின் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. பல பேருக்கு பிரம்படி கள் விழுந்தன. பெண்கள் அலறினார்கள். அதட்டி நிறுத்தி வைக்கப்பட்டார்கள். ஆண்களை மண்டி இடச்சொல்லி பெயர் கேட்டு விஷயம் சரியாக இருந்தால் விடுவிக்கப்பட்டார்கள். இல்லையெனில் 'சந்தேகமாக இருக்கிறது வா விசாரிப்போம்' என்று இழுத்துப் போனார்கள்.

கேடயங்களும், ஈட்டிகளும் இருப்பது பார்த்து பயந்தார் கள். வீட்டிலுள்ள பெண்டுகள் அத்தனை பேரையும் கண்ணை கட்டி, கையை கட்டி பின்புறமாக இழுத்துக் கொண்டு போனார் கள். வீட்டின் முன்பக்கமும், பின்பக்கமும் சோழ வீரர்களால் பூட்டு போடப்பட்டு காவல் வைக்கப்பட்டது.

நகரம் முழுதாக வசப்படவில்லை. சிலசமயம் தூறல் போட் டது. மண் ஈரமாக இருந்தது. காற்று குளுமையாக இருந்தது. ஊர் அருமையாக தூங்கிற்று. நாய்கள் மட்டும் உலவின.

வீரர்கள் பெரிய தணலில் கோழியை சுட்டு உப்பிட்டு கடித்து உண்டார்கள். சாறு உறிஞ்சினார்கள். இன்னும் கால் நாழிகையில் விடிந்துவிடும் என்ற எண்ணத்தில் ஓய்வெடுத் தார்கள். உட்கார்ந்து மெல்லப் பாட்டு பாடிக் கொண்டிருந் தார்கள். வெகு தூரத்தில் எக்காளம் ஊதும் சத்தம் கேட்டது.

''யாரேனும் வருகிறார்களா?''

நெருப்பு எரியவிட்டு காவல் இருந்த வீரர்கள் மெல்ல கண்விழித்தார்கள்.

''யாரப்பா அது?'' உறங்கிக் கொண்டிருந்த வீரர்கள் மெல்ல சோம்பல் முறித்தார்கள். எக்காளம் ஊதுவது நின்று விட்டது. வீரர்கள் கவனித்தார்கள். மெல்ல தூங்கினார்கள்.

எக்காளம் ஊதிய சிறிது நேரத்தில் மனிதர்கள் நடமாட்டம் சட்டென்று ஏற்பட்டது. குதிரைகள் தடதடத்து வந்தன.

''என்ன? என்ன'' விழிப்பதற்குள் அந்த வீரர்கள் மீது ஈட்டி சொருகப்பட்டது. தலை துண்டாடப்பட்டது. அரையன் ராஜராஜன் மாளிகை நோக்கி ஓடினார்கள். அருண்மொழி பட்டன் இருக்கும் இடம் நோக்கி ஓடினார்கள். அரையன் ராஜ ராஜன் மாளிகை காலியாக இருந்தது. மாளிகையில் சுண்ணம் அடிப்பதற்காக உபகரணங்கள் போடப்பட்டிருந்தன. எங்கே என்று தேடினார்கள். அதற்குள் சோழ வீரர்கள் சுதாரித்துக் கொண்டார்கள். மிகக் கடுமையான போர் நடந்தது. தெருவில் அடித்துக் கொண்டார்கள். குதிரையில் பாய்ந்து குத்திக் கொன் றார்கள். எங்கிருந்தோ ஒருவன் யானையை விரட்டி சோழ வீரர்களுக்கு நடுவே அனுப்பினான். சோழ வீரர்கள் யானைக்கு பயந்து மாளிகைக்குள் ஏறிக் கொண்டார்கள். அங்கிருந்து சரமாரியாக அம்பு தொடுத்தார்கள். திடீரென்று இரண்டு, மூன்று மாளிகையிலிருந்து உயரே அம்புகள் எழுந்தன. தெரு வில் வந்து விழுந்தன. வீரர்கள் சட்டென்று சுவரோரமும், மாளிகைக்குள்ளும் பதுங்கிக் கொள்ள, நடுவே நின்ற கலவரக் காரர்கள் மீது சரமாரியாக அம்பு தொடுத்தார்கள். கலவரக்காரர்கள் பின்னடைந்தார்கள்.

ஒரு இளைஞன் அதிகம் அலட்டிக் கொள்வது தெரிந்தது. ஒரு உபதளபதி சுவரோரமாகவே ஓடினான். அந்த இளை ஞனை தாண்டினான். அந்த இளைஞன் ஒரு இடத்திற்கு வந்து ஒரு குழியில் இறங்க முற்பட்டபோது சட்டென்று கொத்தாக அவன் முடியை பிடித்தான். மேலே தூக்கினான். முதுகை வளைத்து முகத்தில் அடித்தான். குத்தினான். அவனை காப் பாற்ற ஆறேழு வீரர்கள் வர, அந்த உபதளபதி அந்த ஆறேழு வீரர்களையும் அடித்து நொறுக்கினான். அந்த பையன் வேக மாக ஓட கால் இடறினான். அந்த பையன் கத்தியை வீச அதை தடுத்து நிறுத்திவிட்டு அந்த பையன்மீது சரக்கென்று வாளை சொருகினான்.

அந்த இளைஞன் ஒட்ட தேசத்து தளபதியின் மகன் என்று சுட்டிக்காட்டினார்கள்.

★ ★ ★

அத்யாயம்

71

வீசுகின்ற காற்றில் குளிர் கனத்து மிதந்து வந்தது. போர்த்திக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. கணப்பின் எதிரே உட்கார்ந்து கைகளை சூடுபடுத்திக் கொள்ளாமல் அமைதி வரவில்லை. கணப்புக்கு எதிரே உட்கார்ந்து நெஞ்சை சூடுபடுத்திக் கொண்டால் பின் பக்கம் குளிர்ந்தது. பின்பக்கம் காட்டி உட்கார்ந்தால் நெஞ்சு சிலீரென்று மாறியது.

''என்னப்பா இது. இப்படி குளிர்கிறதே.'' சோழவீரர்கள் தடுமாறினார்கள்.

மார்கழி தை மாதத்திலும் சோழ தேசத்தில் குளிர் மிதமாகத் தான் இருக்கும். விடியற்காலை இரண்டு பனை உயரத்திற்கு சூரியன் வந்த பிறகு சூடு ஆரம்பித்துவிடும். இரவு நேரம் சற்று நேரம் கழித்துதான் குளிர் தாக்கத் துவங்கும்.ஆனால் இங்கு பகலிலும் குளிருகிறது. இரவில் மிக மிக அதிகமாக குளிர்கிறது. சோழ வீரர்கள் தடுமாறுவதை பார்த்து ஒட்ட வீரர்கள் சிரித்தார்கள்.

''இது என்ன குளிர். இது ஐப்பசி மாதம் தானே. மார்கழி தை மாதம் வரவேண்டும். மாசி மாசம் வரை இப்படித் தான் குளிர்ந்து உயிரை எடுக்கும். இமயமலை அருகே இருக்கிறதல்லவா. அதன் உச்சியில் பனி இருக்கிறதல்லவா. வடகிழக்கு பருவக் காற்று அந்த பனித்துகளை வாரிக் கொண்டு காற்றில் நிரப்பிக் கொண்டு இங்கு வரும் போது பனித்துகள் குறைய, வெறும் குளிராக நம் மீது வந்து கவ்வுகிறது.

மனிதர்கள் மட்டுமல்ல. மாடுகளும் இந்த குளிரில் தவிக்கும், பச்சை பசேல் என்று இருந்த வயல்களெல்லாம் கருகி காணாமல் போகும். மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந்து விடும். குளிர் தாங்காது பறவைகள் தெற்கு பக்கம் போய்விடும். வடக்கிலிருந்து பெரிய பெரிய வாத்துக்கள், உம்முடைய இடுப்பு

உயரம் இருக்கும். இவ்வளவு அகலம். அசைந்து அசைந்து வரும். அரிவாள் போல மூக்கு இருக்கும். நீருக்குள் தலையை வைத்து அப்படியே வேகமாக நீந்திப் போய் கீழே இருக்கின்ற அலகுப்பை மீன்களை விழச் செய்யும். அப்படிப்பட்ட விதமாக வேட்டையாடும். பிறகு மிதந்து தலையை தூக்கி அப்படியே தொண்டைக்குள் செலுத்திக் கொள்ளும். மீன்கள் துடிதுடித்து உள்ளே இறங்குவதை அதன் தொண்டை பகுதியிலும் பார்க் கலாம்.

இப்படி வினோதமான பறவைகளெல்லாம் தெற்கு நோக்கி போய்விட, மிருகங்களும், மனிதர்களும் மட்டுமே தவிப்பார் கள். குளிருக்கு செடி, கொடிகள் ஒப்பு கொடுத்து விடும்.''

''என்ன விதமான பறவைகள்?'' ஏதோ கேட்க வேண்டு மென்று சோழ வீரன் கேட்டான்.

''கரண்டிவாய் கொக்கு, அந்தணர் கொக்கு, நொள்ளை மடையான், செங்கால் நாரை இன்னும் பல இந்த பக்கத்தி லிருந்து தெற்கு பக்கம் போகும். பல ஆயிரக்கணக்கான கல் தொலைவு அவைகள் பயணப்பட்டு வருவதாக வேடுவர்கள் சொல்வார்கள்.

கோழி, வாத்து போல இந்த கொக்குகளின் கறி அவ்வளவு ருசியாக இருக்காதாம். கொஞ்சம் கடினமாக இருக்க வேண்டு மாம். ஒருமுறை சாப்பிட்டாலே அபானவாயு தொந்தரவு வந்து விடுமாம். அதனால் இந்த பறவைகளை நாங்கள் ஒன்றும் செய்வதில்லை. குளத்தில் மீன்பிடிக்க குத்தகை எடுத்தவர்கள் அவைகளை அங்கு தங்கவிடாது கவண்கல்லை எடுத்து அடிப் பார்கள். மிரட்டுவார்கள். பதிலுக்கு அந்த பறவைகள் கவண் கல்லை வீசியவனை நோக்கி ஒரு குழுவாக வரும். அடித்தவன் குப்புற படுத்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் கொத்தி கிழித்துவிடும். ஒரு ஆயிரம் பறவைகள் குளத்திலிருந்து குப் பென்று மேலேறுவது அற்புதமான காட்சி. இந்த பறவைகளை சோழ தேசத்தில் கண்டிருக்கிறீர்களா?''

''பார்த்திருக்கிறோம். சோழ வீரர்கள் ஒற்றை வரியில் பதில் சொன்னார்கள்.

ஒட்டதேசத்து வீரர்கள் அரட்டைகள். ஒரு கேள்வி கேட்டால் நூறு வார்த்தையில் பதில் சொல்கிறவர்கள். சுருக்கமாக பேசத் தெரியாதவர்கள். அலட்டுகிறவர்கள். ஒட்டதேசத்து சாயல் கொஞ்சம் கீழை சாளுக்கியத்திலும் இருக்கிறது. தெலுங்கு பேசுகிறவர்களும் அதிகம் பேசுகிறார்கள். ஆனால் இது ஓயாத பேச்சு. நிற்காத பேச்சு. சோழவீரர்கள் அமைதியாக இருந்தால் என்ன கோபமா. யுத்தம்தான் முடிந்துவிட்டதே என்று கேட்கிறார்கள்.

'எங்களுக்கென்ன கோபம். எப்படா ஊர் திரும்புவோம் என்று இருக்கிறது. அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்ற கவலை வருகிறது. எப்பொழுது ஊருக்கு போய் மனைவியை குழந்தைகளை பார்ப்போம் என்று ஆசை வருகிறது. இங்கு என்னென்னவோ மொழி பேசுகிறீர்கள். எங்கள் ஊருக்கு போய் அந்த ஓசையை கேட்க வேண்டும். அங்கு சந்தைக்குள் நுழைய வேண்டும் என்று ஆசை வருகிறது. நீங்கள் ஆடுகின்ற நாட்டியமும் புரியவில்லை. பாட்டும் தெரியவில்லை. வெறுமே இடுப்பை அசைத்து, அசைத்து இடதும், வலதுமாய் பெண்கள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். 'தத்தோம், தத்தோம்' என்று துள்ளி குதித்து வர வேண்டாமா. உடம்பு சூடு ஏற வேண்டாமா. ஒட்ட தேசத்து பெண்கள் வளமாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் உதடில் ஏதோ தவறு. கண்கள் சிறியவை. உடம்பின் அகலத்திற்கு மண்டையின் ஓடு சிறியதாகத் தான் இருக்கிறது. ஆனால் சரியான கட்டைகள். சந்தன மரத்தில் இழைத்தது போல நிறம். வெட்கம் குறைவு. தேவரடியார்கள் வெகுசீக்கிரம் உடைகளை களைந்து விடுகிறார்கள். நாகை கடற்கரையில் தேவரடியார்களிடம் பேசி சிரிப்பது போன்ற சுகம் வருவதேயில்லை. நாகை தேவரடியார்களிடம் ஆபாசமான செய்கை இருக்காது. ரகசியமான அழைப்புகள் இருக்கும். நுணுக்கமான பேச்சுக்கள் இருக்கும். 'சரியாக கை பிடித்து சதுரங்கம் ஆடு, ஏணி மீது ஏறு. பாம்பு வாய் இறங்கு ஏறு. இறங்கு. ஏறு இறங்கு. ஏறு இறங்கு. பாய்ச்சிகையை பிடித்து இறுக்கிப் போடு. ஏறினால் ஒரு முத்தம். இறங்கினால் ஒரு குட்டு. ஏறு, இறங்கு'. அது பரமபத பாடலே அல்ல. வேறு விஷயம். கூடலுக்கு அழைக்கும் தந்திரம். சுற்றி நின்றவர்களும் குதூகலமாக கலந்து கொள்வார்கள். 'ஏறிட்டான்' என்பார்கள். 'இறங்கிட்டான்' என்று

கூவுவார்கள். கீழை சாளுக்கியத்திலிருந்து வந்த அந்த பரமபத படம் அனேகமாய் எல்லா தேவரடியார் வீட்டிலும் இருக்கும். இரண்டு பொன் கழஞ்சுகள் கொடுத்தால்தான் ஆட்டத்திலேயே சேர்த்துக் கொள்வார்கள். பிறகு பந்தய பணமாக பல பொன் கழஞ்சுகள் வைக்க வேண்டும். நடுநிசியில் ஆட்டம் முடிந்த பிறகு தேவரடியார் விரும்பினால் அவரோடு போகலாம். அல்லது பொதுமகளிர் இருக்கும் இடத்திற்கு நகரலாம்.

நாகை கடற்கரையில் குளித்தவருக்கு எந்த கேடும் வராது. நாகை ஒரு உல்லாச பூமி. போர்கலன்கள் நிறைந்த பகுதி என்பதால் உழைப்பாளிகள் அதிகம். உழைப்பாளிகள் இருக்கும் இடத்தில் குடியும், சூதும், பெண்போகமும் நிச்சயம் இருக்கும். அங்கே மார்கழி, தையில் குளிராது. கூதற்காற்று அடிக்கும். போர்வை போதும். கணப்பு தேவைப்படாது. ஆனால் இங்கோ ஒரு சிதை எரியும் அளவிற்கு கணப்பு தேவைப்படு கிறது.

தொலைவில் ஒற்றை ஆந்தை வேகமாக கூவிற்று. எங்கிருந்து வருகிறது என்று யோசிக்க, மதில் சுவருக்கு அப்பா லிருந்து அந்த தோப்பிலிருந்து வருவதை வீரர்கள் கண்டு கொண்டார்கள். சிலர் எழுந்து நின்று போர்வை இறுக்கி குரல் வந்த திசை நோக்கி போனார்கள். ஒரு எறிஅம்பு சீறி வந்து விழுந்தது.

''அடேய், அம்பு வந்திருக்கிறதடா.'' தேடிக்கொண்டு ஓடினார்கள். ஒற்றை தீப்பந்தத்தில் எறி அம்பை தேடினார்கள். பின்பக்கம் ஓலை சுருட்டி இறுக்கப்பட்டிருந்தது. எதிரிகள் இருநூற்றி ஐம்பது பேர். குதிரைகள் ஆறு. காலாட்படை இரு நூற்றி சொச்சம். வில்லும் வேலுமே ஆயுதங்கள். எதிரிகள் நுழைகிறார்கள். பரபரவென்று ரகசியங்கள் பரிமாறிக்கொள்ளப் பட்டது. ஓலை எடுத்துக் கொண்டு அரையன் ராஜராஜன் அரண்மனைக்கு ஒரு வீரன் ஓடினான், ஒட்ட தேசத்து வீரர் களை அதுவரை சந்தோஷமாக சம்பாஷித்துக் கொண்டிருந்த வீரர்கள் சந்தேகத்துடன் பார்த்தார்கள். யாரிடம் ஆயுதம் இருக் கிறது என்று அவர்களை வேகமாக தடவிப் பார்த்தார்கள். அவர்கள் ஆயுதங்களை பறிமுதல் செய்து அவர்களை குதிரை

லாயத்திற்குள் நிற்க வைத்தார்கள். தங்களுடைய ஆயுதங்களை தயார் செய்து கொண்டார்கள். எந்த இடத்தில் நுழைவு இருக்கும் என்று தேடினார்கள். இரண்டாக பிரிந்து ஒரு பகுதி தூங்கவும், ஒரு பகுதி காவல் காக்கவும் இருந்த நிலை மாறி சகலரும் துடிப்பாக இருந்தார்கள். தீப்பந்தங்கள் எண்ணெய் ஊற்றி எரியாது வெறும் துணியோடு வைக்கப்பட்டிருந்தன.

''எரிய வைக்கலாமா?''

''வேண்டாம். வெளிச்சம் விழும். எதிரிகள் உள்ளே வரட்டும்.'' ஒரு உபதளபதி வேகமாக தலைமை ஏற்று விரைவாக சகலரையும் அகலப்படுத்தினான். கோட்டையை நோக்கி அவர்களெல்லாம் குத்திட்டு உட்கார்ந்திருந்தார்கள். கதவுக்கு அப்பால் கோட்டையினுடைய மூலையில் கற்கள் நகர்ந்து ஒரு சந்து ஏற்பட்டது. ஒன்று இரண்டாய், பல நூறாய் ஆட்கள் வந்தார்கள். தரை இறங்கி சுவரோரம் நகர்ந்து கொண்டார்கள். யாரோ ஒருவன் இறங்க மட்டும் இரண்டு மூன்று பேர் கை கொடுத்தார்கள். அவன் தளபதியாக இருக்க வேண்டும்.

சோழப்படை அமைதியாக அந்த தாக்குதலை எதிர்நோக்கி காத்திருந்தது.

உள்ளே நுழைந்த படையில் தடுமாற்றம் தெரிந்தது. தாக்குதல் நடக்குமோ என்ற பயம் இருந்தது. தீப்பந்தங்கள் இருட்டில் மெல்ல மெல்ல பரிமாறப்பட்டன. சட்டென்று தீப்பந்தங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் எரியத் துவங்கின. எதிர்பக்கம் தள்ளாடினார்கள்.

தளபதி போன்ற ஒருவன். மெல்லிய உருவத்தினன் வாளை உருவி ஒட்ட தேசத்து மொழியில் ஓங்கி கத்தினான். அவர்கள் மடமடவென்று கோட்டை சுவர் பக்கத்திலிருந்து சரிவில் இறங்கி, தரைக்கு ஓடி வந்தார்கள். தீப்பந்தங்கள் அத்தனையும் எழுந்து நின்றன.

சோழ வீரர்கள் அம்புகளால் வந்தவர்களை துளைத்தார்கள். மரண ஓலம் எங்கும் நிரம்பியது. இன்னொரு எறி அம்பு கோட்டைக்கு வெளியிலிருந்து வந்தது. மீதியிருந்த இருபது பேர் சிதறி விட்டார்கள் என்று எழுதப்பட்டிருந்தது. ஆக, இனி

தொடர்ந்து வரப் போவதில்லை. அப்படி உள்ளே நுழைந்தால் நான்கு வீரர்கள் அங்கு மண்டியிட்டு அம்பு எய்ய தயாராக இருந்தார்கள். பதினைந்து கஜ தூரத்திற்கு அம்பு போய், தலை தெரிந்தவுடனே துளைக்கும். உள்ளே நுழைந்த வீரர்கள் வெட்டப்பட்டார்கள்.

''ஒட்டர்களய்யா. ஒட்டர்கள்.'' என்று கூச்சல் எழுந்தது.

தீப்பந்தத்தால் முகம் பார்த்து, அந்த தீப்பந்தத்தாலேயே முகத்தில் அடித்து துடிக்க வைத்தார்கள்.

''சொல். யார் தளபதி சொல். எங்கிருந்து வருகிறாய் சொல்.'' சரமாரியாக நாலைந்து பேர் அடித்தார்கள். அடிதாங்காமல் அவன் அலறினான்.

''யார் தலைவன் சொல்.'' கையை முறுக்கினார்கள். விரலுக்கு நடுவே குச்சி கொடுத்து அழுத்தினார்கள். உயிர் போகிற வலியில் அவன் வாய்விட்டு அலறினான். எளிதாக அவன் தளபதியை காட்டிக் கொடுத்தான். நோஞ்சலான அந்த இளைஞன் மீது சோழப்படை பாய்ந்தது. அவன் தாக்குதலை அலட்சியமாக எதிர்கொண்டது. அவனுக்கு வாள் வீசத் தெரியவில்லையென்று எளிதில் தெரிந்து கொண்டது. இன்னொரு வாள் நீட்டப்படும் போது தன் வாளால் அதை ஓங்கி அடித்து இரண்டாக உடைத்தான். சட்டென்று அவன் நெஞ்சில் வாளின் பட்டையால் அடித்தான்.

''இவனை கொல்லக் கூடாது. கூட்டிக் கொண்டு போக வேண்டும். மேலே எகிறி விழுந்தான். அடுத்தவன் போய் அமுக்கிக் கொண்டான். இன்னொருவன் கால்களை சரட்டென்று இழுத்து கட்டினான். உயரத் தூக்கினார்கள். பின் கை கட்டினார்கள். பலம் கொண்ட மட்டும் முகத்தில் அடித்தார்கள்.

அவன் அலறினான். அரைகால் நாழிகைக்குள் அந்த தாக்குதல் திட்டம் தவிடுபொடியாயிற்று.

''அவன் பெயர் என்ன?' அங்கங்கே வீரர்களை சோழ தேசத்து படைகள் வதைத்தன. நாலு பக்கமும் சூழ்ந்து கொண்டு பேசினாலும் பேசாவிட்டாலும் அடித்தன. அவன் பேசினால் 'உண்மையை பேசு' என்று அடித்தன. பேசாது போனால் 'பேசடா நாயே' என்று அடித்தன.

சோழ வீரர்கள் சித்ரவதையில் பெயர் பெற்றவர்களாக இருந்தார்கள். மெல்லிய குச்சியை விரல் இடுக்கில் கொடுத்து விட்டு கையை அழுத்தி பிடித்தார்கள். அவன் அலறியபோது 'பேசு. பேசு' என்றார்கள். அலறியவன் பேச முற்பட்டபோது ஆபாசமாக இருந்தது. மெல்லத் தளரவிட்டு மறுபடியும் பேசச் சொன்னார்கள்.

''யார் தலைவன்? எதற்கு இந்த ரகசிய படையெடுப்பு. என்ன செய்வதாக உத்தேசம்.'' என்று அங்கங்கே பல்வேறு வீரர்களை வதைக்க, எல்லோரும் ஒரு திசையை சுட்டி காட்டி னார்கள்.

''யாரது?''

''ஒட்டதேசத்து இளவரசன். இந்திரதத்தனின் மகன் சிவ குப்தன்.''

''அட நாயே. நீ இளவரசனா. இந்த நட்ட நடுநிசியில் இத்தனை வீரர்களோடு உள்ளே வருகிறாயே நீ வீரன்தானா. ஆண்மகன்தானா. இந்த அரசனுக்கு பிறந்தவன் தானா. உன் அரசன் சரணடைந்து விட்டாரே. சமாதானமாகி விட்டாரே. நீ என்ன இரவோடு இரவாக கத்தியை கிளப்பிக் கொண்டு வருகிறாய்.''

லாயத்தில் அடைக்கப்பட்ட வீரர்கள் இருவரை இழுத்து வந்தார்கள். 'யார் இது?' என்று கேட்டார்கள்.

''எங்கள் இளவரசன். இந்திரதத்தனின் ஒரே மகன்.''

''ஏன் இந்த நடுநிசி தாக்குதல் என்று கேள்.''

''நான் கேட்க வேண்டாமய்யா.''

''ஏன்?''

''இவன் ஒரு உளறுவாயன். தெளிவில்லாதவன். தன்னை பற்றி அதிகம் நினைத்துக் கொண்டிருப்பவன். வெறும் போகி. ஆயுதப் பயிற்சி இல்லாதவன்.''

''பிறகு ஏன் இந்த நடவடிக்கை.''

''யாராவது தூண்டி விட்டிருக்க வேண்டும்.'' சட்டென்று ஒட்ட தேசத்து உபதளபதி சுதாரித்துக் கொண்டான்.

''யார் சொல்லியிருப்பார்கள்.'' லாயத்தில் இருந்த வீரர்கள் மௌனமாக இருந்தார்கள்.

''நீங்கள் நல்லவர்கள். உங்களை அடிக்க மாட்டேன். நீங்கள் பதில் சொல்லாது போனால் உங்கள் இளவரசனை அடிப்பேன்.'' நாலைந்து பிரம்படிகள் விழுந்தன. இளவரசன் அலறினான்.

''வேண்டாம் அய்யா. ஆயிரம் ஆனாலும் அவர் எங்கள் இளவரசன். அவரை சித்ரவதை செய்யாதீர்கள். அவரை ஜெய சிம்மன் தூண்டியிருக்க வேண்டும். ஜெயசிம்மனும் அவரும் ஒன்றாக கோட்டையை விட்டு வெளியேறி விட்டார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டோம்.

இவரோடு பல வீரர்கள் நகர்ந்தார்கள். ஜெயசிம்மனுடைய மேலைசாளுக்கியத்து படையும் வெளியே கிராமங்களில் இருந் தது. எல்லாம் ஒன்று சேர்ந்து உள்ளே போய் ஏதேனும் கொள்ளை யடிக்கலாம் என்று வந்திருப்பார்கள்.''

''இங்கே கொள்ளையடிப்பதற்கு என்ன இருக்கிறது.''

''மிகப்பெரிய பொக்கிஷம் இருக்கிறது.''

''எங்கே?''

''எங்களுக்கு தெரியாது. ஒருவேளை இளவரசருக்கு தெரிந் திருக்கக்கூடும்.''

கணப்பில் வாளை வைத்து இளவரசன் இடுப்பில் சூடு போட்டார்கள். விரல்களை ஊசியால் குத்தினார்கள்.

''எங்கிருக்கிறது பொக்கிஷம்'' என்று கேட்டார்கள். 'பொக்கிஷமா அப்படியென்றால்' என்று ஆரம்பித்தவன் சூடு பட்டதும் சொல்லத் துவங்கினான்.

கோட்டையின் வலது பக்கம் காட்டப்பட்டது. அந்த இடத்தை அவன் சுட்டி காட்டினான். சுட்டி காட்டிவிட்டு அவன் வாய்விட்டு பெரிதாக அலறினான்.

சோழ வீரர்கள் அவனை கட்டிப் போட்டார்கள். அடிபட்டு குத்துயிராய் கிடக்கின்ற வீரர்களை பார்த்து நெஞ்சில் வாள் சொருகினார்கள். லேசான காயங்களுடன் வைத்தியம் செய்தால்

பிழைத்து விடுவான் என்று இருப்பவனை தனியே உட்காரச் சொன்னார்கள். காயம் இல்லாது இருப்பவர்களை கூட்டிக் கொண்டு போய் ஆட்டுபட்டிகையில் அடைத்தார்கள். மிக கவன மாக காவல் காத்தார்கள்.

மெல்ல கோட்டை கதவு திறந்து, தொங்கு பாலம் இறங்கி எதிர்பக்கம் தோப்புக்கு போனார்கள். தோப்பில் இருந்த சோழ வீரர்கள் இறங்கி வந்தார்கள். இது சோழ தேசத்தின் வழக்கம். சோழப்படையின் கொள்கை. கோட்டைக்குள் பத்திரமாக இருக் கிறோம் என்று தூங்க முடியாது. எனவே இரண்டாக பிரிந்து தூங்குபவர், தூங்காதவர் என்று வேலை செய்ய வேண்டும். கோட்டைக்குள் மட்டுமே வீரர்கள் இருந்து புண்ணியமில்லை. கோட்டைக்கு அப்பால் உள்ள வீடுகளில் மரத்தோப்புகளில் வயல்வெளிகளில் சோழ வீரர்கள் காவல் காக்க வேண்டும். வெளியே என்ன நடமாட்டம் என்று கவனிக்க வேண்டும் எல்லாம் சிறப்பாக சொல்லி வைத்தது போல நடந்ததால் இந்த தாக்குதல் தடுக்கப்பட்டு விட்டது.

அரையன் ராஜராஜன் எழுந்திருந்தார். சப்தங்களை கூர்ந்து கேட்டார். சேனாதிபதி அருண்மொழிபட்டன் நிதானமாக கீழ் இறங்கி வந்தான். இடுப்பில் வாள் தரித்திருந்தான். ''ஒன்றும் வாள் அவசியம் இல்லை. நமது வீரர்கள் அடக்கிவிட்டார்கள். இருநூற்றி ஐம்பது பேர் ஒட்டதேசத்து இளவரசனோடு உள்ளே நுழைந்திருக்கிறார்கள். பொக்கிஷத்தை கொள்ளை அடிக்க வேண்டும் என்ற எண்ணமாம். முட்டாள் தனமான தாக்குதல் நடத்தி அடிபட்டு கிடக்கிறான். நீர் போய் தூங்கும். எல்லாம் சரியாகி விட்டது. விடிந்த பிறகு விசாரித்துக் கொள்ளலாம்.''

''இந்திரதத்தன் அரண்மனை சுற்றி காவலை அதிகரித்து விடுங்கள்.'' அரையன் ராஜராஜன் சொல்ல, அருண்மொழி பட்டன் உத்தரவுகள் பிறப்பித்தான். இரண்டு பேரும் பிரிந்தார் கள். தங்கள் தூக்கத்தை தொடர்ந்தார்கள்.

சோழப்படையில் ஒருவருக்குக் கூட காயம் இல்லை. தீப்பந்தம் தோளில் விழுந்து ஒருவருக்கு மட்டுமே தீக்காயம் ஏற்பட்டது தைலம் தடவியாயிற்று என்ற செய்தியும் கடைசியாக வந்தது.

விடிய மிதமான வெந்நீரில் அரையன் ராஜராஜன் குளித்தார். குளிருக்கு அது சுகமாக இருந்தது. அருண்மொழிபட்டன் குளிர்ந்த நீரில் குளிக்க முற்பட்டு தாங்காது திகைத்தான். அவனுக்கு சுடுநீர் தரப்பட்டது. கொதிக்க, கொதிக்க விளாவி உடம்பு பொறுக்கும் சூட்டில் தலைக்கு ஊற்றிக்கொண்டான். துடைத்து கோமணம் மாட்டி வெளியே வந்தான். வேட்டி அணிந்து கொண்டு திருமண் இட்டு, காயத்ரி ஜபம் சொல்லிய படியே படிகளில் இறங்கி வந்தான். அரண்மனை வாசலில் உள்ள குதிரையில் ஏறி எந்தபக்கம் தாக்குதல் நடந்ததோ அந்த பக்கம் விரைவாகப் போய் இறந்து கிடந்த ஒட்டதேசத்து வீரர்களையும், குற்றுயிராய் இருந்த வைத்தியம் செய்யப்பட்ட மற்ற வீரர்களையும், தூணில் கட்டப்பட்ட இளவரசனையும் பார்த்தான். பிறகு நகர்ந்து லாயத்தில் அடைக்கப்பட்ட ஒட்டதேசத்து வீரர்களை கவனித்தான். விடுவித்து விடுங்கள் என்று கட்டளையிட்டான். லாயத்தில் இருந்த அந்த வீரர்கள் வெளியே வந்தார்கள். அருண்மொழி பட்டனுக்கு நன்றி சொன்னார்கள். உபதளபதியோடு பேசினான். மறுபடியும் கதவு திறந்து பாலம் இறக்கி வெளியே போய் பார்த்தான். சுவர் இடித்து வந்த விதத்தை கவனித்தான். அந்த சுவரை ஒட்டர்களை வைத்தே சரி செய்யச் சொன்னான். கோட்டையை சுற்றி வலமாக வந்து அரையன் ராஜராஜன் அரண்மனைக்குள் புகுந்தான்.

குடிக்க நீர், கோதுமை கஞ்சி கொடுத்தார்கள். தின்பதற்கு அப்பங்கள் இருந்தன.

''இடரிக செய்திருக்கிறோம் வேண்டுமா. அல்லது சோற்றுக் கஞ்சி தரட்டுமா. மிளகு போட்டு வைத்திருக்கிறோம்'' என்று கேள்வி வந்தபோது

''அரையரை பார்த்து விட்டு வருகிறேன்.''

அரையர் அவனுக்காக காத்திருந்தார்.

''சாப்பிட்டுக் கொண்டே பேசலாமா. பசிக்கிறது.'' அருண்மொழி கேட்டான்.

இருவருக்கும் மர ஆசனங்கள் போடப்பட்டு அதில் வெஞ்சினங்களோடு கூடிய சோற்றுக் கஞ்சியும் இடரிகவும் பரிமாறப்பட்டன. சூடான பால் வாசனை அங்கு சுற்றி இருந்தது.

''இந்த சோறே வேறு விதமாக இருக்கிறதல்லவா.''

''இடரிக நம்மூர் அரிசி. இந்த குழைந்த சோறு இவர்கள் தானியம் போல.'' வெஞ்சினங்கள் பரிமாற தொட்டுக் கொண்டு சாப்பிட்டார்கள். தட்டுகளில் கை கழுவினார்கள். பால் வர தேன் விட்டு குடித்தார்கள். பசும்பால் வாசனை, சுவை சிறப்பாக இருந்தது.

''இப்போது என்ன செய்ய?''

''இந்திரதத்தனை வரவழைக்க வேண்டும். அவன் பிள்ளையை முன்னிறுத்த வேண்டும். சரணடைந்த பிறகு ஏன் இப்படி இன்னும் வேறு என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்க வேண்டும். இந்திரதத்தனுக்கு இதில் சம்மதம் இருக்குமா.'' அரையர் கேட்க, இருக்காது என்று அருண்மொழி பட்டன் தலையசைத்தான்.

''இது ஜெயசிம்மனின் வேலை. மிகக் குறைந்த படை களுடன் ஒட்ட தேசத்து படை வீரர்களை குளிப்பாட்டி பேசி கோபமடையச் செய்து இங்கே அனுப்பியிருக்கிறான். அது நரி. அப்படித்தான் கால் தூக்கி சோற்றில் மூத்திரம் போகும். விஷயம் முன்கூட்டியே தெரிந்திருந்தால் தொடர்ந்து போய் தாக்கியிருக் கலாம். இப்பொழுது வெகுதூரம் போயிருப்பான்.''

''இளவரசனை என்ன செய்ய?''

''கொன்று விடலாம்.''

''இந்திரதத்தனுடைய மகன் அல்லவா. அவர் துடிப்பாரே.'' அவனை என்ன செய்வது. சிறையில் அடைப்பதா. எத்தனை நாள்.''

''இது ஒட்டதேசம். தப்பித்து போக வசதிகள் இருக்கும். எனவே ஒட்ட தேசத்திலிருந்து அவன் வெளியேறாமல் இருக்க ஒன்று வேங்கி தேசத்திற்கு அனுப்பிவிட வேண்டும். அல்லது இங்கேயே வெட்டி கோட்டை வாசலில் தலை சொருக வேண்டும்.''

''ஏன் அப்படி?''

''மீதமுள்ள ஒட்ட வீரர்களுக்கு பயம் இருக்கும். இந்திர தத்தனையே இது கலங்கடிக்க வேண்டும். இது தவறுதானே

என்று அவர் ஒப்புக்கொண்ட பிறகு மரணதண்டனை அறிவிக்க வேண்டும்.''

''மரண தண்டனையை நான் சற்று தள்ளி நடத்தப் போகிறேன். உடனடியாக செய்யப் போவதில்லை. நாளை செயல்படுத்தப் போவதில்லை. இதை இராஜேந்திரருக்கு தெரிவித்த பிறகு இராஜேந்திரர் கட்டளை என்னவோ அப்படி செய்யலாம் என்பது என் எண்ணம்.''

''மிகச் சரி. ஆனால் இந்திரதத்தன் மகனை மிகக் கடுமையாக காவல் காக்க வேண்டும். மறுபடியும் ஒரு தாக்குதல் நிகழும் போது என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க வேண்டும்.''

''மறுபடி தாக்குதல் வரும் என்று எனக்கு தோன்றவில்லை அருண்மொழி. முற்றிலுமாக தோல்வியுற்ற ஜெயசிம்மன் நகர்ந்திருப்பான். ஒட்டர்கள் இனி உதவமாட்டார்கள் என்று வேறு பக்கம் திரும்பியிருப்பான்.''

''எந்த பக்கம்?''

''வங்கம்.''

''அவ்வளவு தொலைவு போய் விடுவானா. மேலை சாளுக்கியத்திற்கல்லவா திரும்பியிருப்பான்.''

''இல்லை. அவன் எப்படியாவது, எந்த விதத்திலாவது பழி தீர்த்துக் கொள்வான். சோழர்களைப் பற்றி எனக்குத் தெரியும். அவர்கள் படைகளை நான் அறிவேன். அவர்களின் தாக்குதல் திட்டங்கள் எனக்கு அத்துப்படி. நான் உதவுகிறேன் என்று வாய் கிழிய பேசுவான்.

வங்க தேசம் பல மன்னர்களை கொண்டது. துண்டு துண்டானது. அவைகளை ஒன்று சேர்க்க முயற்சிப்பான். தன் பேச்சுத் திறமையால் ஒன்றாக சேர்த்தாலும் சேர்ப்பான். அவன் நரி. மேலை சாளுக்கியத்திற்கு போயிருக்க மாட்டான். நம்மை நசுக்குவதே அவன் வேலை.''

''இதில் வங்க தேசத்திற்கு என்ன லாபம். நம்முடன் சமாதானமாக போனால் என்ன?''

''போய்விடக் கூடாது என்பதுதான் ஜெயசிம்மனின் தந்திரம். இந்த புனித பூமியில் சோழன் கால் வைப்பதா என்று பேச

ஆரம்பிக்கலாம். இந்த வங்கதேசத்தை மீறி சோழ தேசத்து வல்லூறுகள் கூட பறக்கக் கூடாது. இந்த மத யானைகள் உள்ளே நுழையும் என்றால் நாம் எல்லாம் பேடிகளா என்று பெரிதாகப் பேசுவான்.''

''நேரே கேட்டது போல பேசுகிறீர்களே.''

''தந்திரக்காரர்கள் பேசுவதை நான் அறிவேன். சிலசமயம் நானே தந்திரமாகவும் பேசியிருக்கிறேன்.''

அரையன் ராஜராஜன் வாய்விட்டு சிரித்தார். அந்த சிரிப்பில் அருண்மொழியும் கலந்து கொண்டான்.

போர் பற்றி எந்த கவலையும் இல்லாமல் அந்த தலைமைப் பதவியிலிருந்த சோழ பெரு வீரர்கள் இரண்டு பேரும் குதூகலமாய் இருந்தார்கள். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தார்கள். அதே நேரம் இரண்டு, மூன்று உபதளபதிகள் வீரர்கள் துணையோடு கோட்டைக்குள்ளே ரகசியமாக இருக்கும் பொக்கிஷ அறை நோக்கி நகர்ந்தார்கள்.

விசாரணைக்கு பிறகும், ஆராய்ச்சிக்குப் பிறகும் மிக அற்புதமாக கட்டப்பட்டிருந்த அந்த பொக்கிஷ அறையின் கதவை தொட்டார்கள். சாவிகளை கேட்டார்கள்.

''நான் சத்தியத்திற்கு கட்டுப்பட்டிருக்கிறேன். உங்களிடம் சாவியை கொடுக்க எங்களுக்கு உத்தரவு இல்லை. எதிரியிடம் சாவியை கொடுத்துவிட்டால் நான் அரசனுக்கு துரோகம் செய்தவனாகி விடுவேன். என்னால் ஒட்ட அரசருக்கு துரோகம் செய்ய முடியாது. தயவுசெய்து ஒட்ட அரசரை கேட்டு சாவியை பெற்றுக் கொள்ளவும்.'' சட்டென்று அந்த வீரர் ஓரமாக நிறுத்தப்பட்டான்.

''பத்து என்று எண்ணுவதற்குள் உங்கள் திறவுகோல் என்னிடம் வரவேண்டும். எண்ணிக்கை எப்படி இருக்கும் தெரியுமா. வெறும் சொல்லாக இருக்காது. செயலாக இருக்கும். புரியவில்லையா. பத்து முறை பிரம்பினால் அடிப்போம். பத்தாவது முறையும் சொல்லாவிட்டால் நெஞ்சுக்குள் கத்தியை சொருகுவோம். பிறகு எப்படி, யாரிடம் பொக்கிஷ அறை சாவி வாங்குவது என்று தெரியும்.''

அந்த வீரன் சிரித்தான்.

''அவ்வளவுதானே. அடிப்பீர்கள். கொல்வீர்கள். இதை விட அசிங்கமானது அசத்தியமாக இருப்பது. மன்னனுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றாமல் இருப்பது. நீங்கள் என்ன செய்தாலும் பொக்கிஷ அறையின் சாவி உங்களுக்கு கிடைக் காது.''

'சொடேர் சொடேர்' என்று அவன் அடிக்கப்பட்டான். பத்து எண்ணிக்கை வரை சோழவீரர்கள் காத்திருந்தார்கள். அவன் அசையவே இல்லை. வலி தாங்காமல் அரற்றினான்.

''திறவுகோல் தருவீரா. மாட்டீரா.''

''தருவதற்கில்லை.''

சரக்கென்று ஒரு குத்துவாள் அவன் நெஞ்சை துளைத் தது. எலும்பை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தது. பின் பக்கம் வெளியே வந்தது. அவன் சரிந்து விழுந்தான்.

மற்ற ஒட்ட வீரர்களும், காரியஸ்தர்களும் கதறினார்கள்.

''அடுத்தது யார்?'' என்று கேட்க, ஒரு பெட்டியிலிருந்து பெரிய திறவுகோல் உபதளபதியிடம் தரப்பட்டது. ஒன்றன் பின் ஒன்றாக திறவு கோல்கள் போட்டு கதவு திறந்தார்கள். உள்ளுக்குள்ளே தொங்கியிருந்த இன்னொரு திறவுகோல் எடுத்து அடுத்த கதவு திறந்தார்கள். மெல்லிய வெளிச்சம் பலகணி யிலிருந்து வந்தது. தீப்பந்தங்கள் ஏற்றி பார்த்தார்கள். மூச்சு முட்டியது.

கொள்ளையடித்த நகைகளும், பாத்திரங்களும், பண்டங் களும், பொற் காசுகளும், பொற் பாளங்களும், வெள்ளிக் கட்டி களும், தாமிர பட்டைகளும், மணிமுடிகளும், ஆரங்களும், கேயூரங்களும் குவிக்கப்பட்டிருந்தன. தலைமுறை தலைமுறை யாக ஒட்ட தேசத்து வீரர்களுடைய வலிமையை அது காட்டியது.

பரத கண்டத்தின் மத்திய பகுதியிலும், கிழக்கு பகுதி யிலும், வடகிழக்கு பகுதியிலும் கொள்ளை அடித்த பல்வேறு விஷயங்கள் இருந்தன. வங்க தேசத்து பொக்கிஷங்கள் அதிகம் இருந்தன. நாலு வீரர்களை தேர்ந்தெடுத்து காவல் வைத்தார் கள். ஒரு உபதளபதி அங்குள்ள ஒரு ஆசனத்தில் அமர்ந்து

கொண்டான். காலை உணவுக்கு உத்தரவிட்டான். மற்ற இரண்டு உபதளபதிகளும் அரையரை நோக்கி ஓடினார்கள்.

இந்திரதத்தனுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது போலும். அவர் குனிந்த தலையோடு அரையன் ராஜராஜன் அரண மனைக்குள் நுழைந்து உட்கார்ந்து கொண்டார். அது அவ ருடைய அரண்மனை. அவர் வசித்த இடம். அங்கு அவருக்கு விருந்தாளி போல நாற்காலி போடப்பட்டது. நின்று வணக்கம் சொல்லி நிதானமாக அமர்ந்தார்.

அருண்மொழிப் பட்டனும், அரையன் ராஜனும் பதிலுக்கு வணக்கம் சொல்லாது மௌனமாக இருந்தார்கள்.

''உணவு கொண்டு வரட்டுமா.'' ஒரு சோழ வீரன் கேட் டான்.

''ஆயிற்று. தேவையில்லை.''

''குடிநீர் தேவையா.''

''ஒரு குவளையில் இங்கு வைத்து விட்டு போங்கள். வேண்டும் என்கிறபோது குடித்துக் கொள்கிறேன்.'' இந்திரதத்தன் இறைஞ்சலாகப் பேசினார்.

அரையன் ராஜன் அருண்மொழிப்பட்டனிடம் கண் வழியே பேசினார். 'ஆரம்பிக்கட்டுமா' என்று கேள்வி கேட்டார். 'சரி' என்று தலையை கூட அசைக்காது கண்களை அசைத்து அருண்மொழிபட்டன் ஆமோதித்தான்.

''இந்திரதத்தருக்கு காலை வணக்கம். மிக வேதனையான நிலையிலிருந்து நான் பேசுகிறேன். என்னவென்று உங்களுக்கு புரிந்திருக்கும். எனக்கு ஒட்ட தேசத்தினுடைய அடிப்படை புரியவில்லை. குழம்பியிருக்கிறேன். நீங்கள் சற்று தெளிவுபடுத்த வேண்டும்.

நீங்கள் அறிஞர். தெளிவானவர். வீரர். இது உங்கள் எல்லா செயல்களின் மூலம் எனக்கு தெரிய வந்துவிட்டன. இந்திர தத்தரே, இந்த ஒட்ட தேசம் வைணவ தேசம் தானே, சிவன் கோயில்கள் இருப்பினும் வைணவம் தானே பிரதானம். பாண்டு ரங்கன் தானே உங்களுக்கு அடிப்படை அவன்தானே நீங்கள் நம்புகின்ற கடவுள். அங்கிருந்தே ஆரம்பிக்கிறேன்.

கஜேந்திர மோட்சம் கதையை நீங்கள் அறிவீரா.''

இந்திரதத்தன் நிமிர்ந்து பார்த்து ''அறிவேன்'' என்றார்.

''மடுவில் யானை வந்து இறங்கியது. முதலை கவ்வியது. வந்த யானை முதலையோடு சமரசம் பேசவில்லை. தினமும் மாட்டிறைச்சி கொண்டு வந்து தருகிறேன். என்னை விட்டு விடு என்று பேரம் பேசவில்லை. முதலை சூழ்ச்சித் திறன் மிக்கது. எவ்வளவு மாடுகள் கொடுத்தாலும் தன்னையும் உண்ணும் என்று தெளிவாக அறிந்தது. எனவே, எங்கு சரணடைய வேண்டுமோ அங்கே சரணடைந்தது. தன்னுடைய துதிக்கையை உயர்த்தி தாமரையை பறித்து உயரே வானத்தை நோக்கி ஹே நாராயணா, என்று கூவியது. கூவிய க்ஷணத்தில் அங்கு நாராயணர் கருட வாகனத்தில் தோன்றினார். என்னை இந்த துன்பத்திலிருந்து விடுதலை செய் என்று கதறியது. நாராயணர் சக்கரத்தை ஏவி சூழ்ச்சித்திறன் மிக்க, அழுக்கான, அசிங்கமான அந்த முதலையை இரண்டு கூறாக்கினார். யானையை விடுவித்தார். கஜேந்திரனுக்கு மோட்சப் பதவி கிடைத்தது.

காலாகாலத்துக்கும் அவன் பெயர் சொல்கின்ற ஒரு உன்னத நிலை வந்தது. இங்கு யானை யார் தெரியுமா. ஒட்ட தேசத்து தலைவர் இந்திரதத்தர். முதலை யார் தெரியுமா. மேலை சாளுக்கியத்து கேவலன் ஜெயசிம்மன். அவன் தூண்டுதல் தானே, அவன் உங்களை வளைத்து பிடித்ததால்தானே உங்களுக்கு வேதனை.

ஒட்டதேசம் பலமுறை மேலை சாளுக்கியத்தோடும் சண்டையிட்டிருக்கிறதல்லவா. அது சமாதான தேசம் அல்லவே, சோழன் வருகிறான் நான் உதவி செய்கிறேன் என்று அவன் வந்த பிறகு அவனை நம்பச் சொல்லி அவன் உங்களை கவ்வி பிடித்துக் கொண்டான். அல்லவா. முதலை இருக்கிறது என்று தெரிந்தும் மடுவில் கால் வைத்தது முட்டாள்தனம் அல்லவா.

ஆனால் அந்த யானை முதலையிடம் பேரம் பேசவில்லை. தாமரையை பறித்து சோழ தேசத்து இராஜேந்திரனை நோக்கி, நாராயணா என்று கதறியது.''

அருண்மொழிபட்டன் திகைத்துப் போனான்.

'அடே, அடே இது என்ன உபன்யாசம். என்ன அற்புத மான பேச்சு. எவ்வளவு சாமர்த்தியமான ஒரு ஒப்புமை.'

''கஜேந்திரன் நல்ல யானை. சரணடைந்த பிறகு அதற்கு உயர்ந்த இடம் கிடைத்துவிட்டது. இந்துமத வரலாற்றிலே அது உன்னதமாக நிற்கிறது.

ஆனால் இந்த ஒட்டதேசத்து யானை, இந்திரதத்தன் என்னும் யானை ஏன் குழம்பிவிட்டது. ஏன் மறுபடியும் முதலையை துணைக்கு அழைத்தது. என்ன ஆயிற்று. இது தெரியாமல் செய்ததா. அல்லது தெரிந்த துரோகமா. நட்பாக பேசிவிட்டு, நன்றாக பழகிவிட்டு பின்பக்கமாய் கத்தியில் குத்திவிட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறீரோ.

ஒட்டதேசத்து வீரர்களை நான் அறிவேன். கனமானவர் கள். திறனானவர்கள். வேகமானவர்கள். நல்ல உல்லாசிகள். அதே நேரம் உண்மையானவர்கள் என்று கேள்விப்பட்டிருக் கிறேன். கீழை சாளுக்கியத்தை நான் அப்படி நம்புகிறேன். அவர் களை நேசிக்கிறேன். கிழக்கு கடற்கரை ஓரம் உள்ள எல்லா இடங்களும் ஒரு உண்மைக்கு கட்டுப்பட்டிருப்பதும், மேற்கே உள்ள எல்லாம் சற்று பிழறி இருப்பதும் எனக்குத் தெரிகிறது. சேரர்கள் தந்திரமானவர்கள். சற்று மேலேறி வந்தால் கங்கர் களும், மேலை சாளுக்கியமும் சந்தேகம் வரும்படி நடந்து கொள்பவர்கள். உண்மையை பேசாதவர்கள். இன்னும் மேலே பராமரர்களை நோக்கி வந்தால் அங்கேயும் குழப்பமான நிலை கள் தான் இருக்கின்றன. துவாரகையைப் பற்றி எங்களுக்கு தெரியாது. தெரிந்து கொள்ளும் விருப்பமும் எங்களுக்கு இல்லை. ஆனால் அதற்கு மேலே எல்லாம் யவனர்கள் தேசம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

கிழக்கே சரித்திரத்தில், புராணத்தில் எந்தவிதமான குறை களும் இல்லை. ஒட்டதேசத்து அரசரே, போர் முடிந்து சமாதானம் ஆனபிறகு இப்படிப்பட்ட ரகசியமான தாக்குதல் நல்லதல்ல. உங்கள் மகனை அழைத்து வரச் சொல்லப் போகிறோம். தயவு செய்து விசாரியுங்கள். ஏன் என்று கேளுங்கள்.''

"இல்லை." இந்திரதத்தன் வாய் திறந்தார்.

"நீங்கள்தான் இங்கு தலைவர். இராஜேந்திர சோழர்தான் இதன் உரிமையாளர்.

எனவே, அரையன் ராஜராஜரே மேற் கொண்டு என்னை சொல்லால் துன்புறுத்தாதீர்கள். இந்த யானை சத்தியத்திற்கு கட்டுப்பட்டு துவண்டு நிற்கிறது."

முகம் பொத்திக் கொண்டு அழுதார்.

அருண்மொழி பட்டன் நகர்ந்து இடக்கை நீட்டி அவர் தோள் தொட்டு சமாதானப் படுத்தினான். அரையன் ராஜராஜன் கண் அசைக்க, உள்ளுக்குள்ளே இளவரசன் வந்தான். எல் லோரும் இந்திரதத்தனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்திரதத்தன் நிமிரவே இல்லை.

"உங்கள் மகன்தானே இது?" பார்க்கும்படி கட்டளையாக அதேசமயம் வேண்டுகோளாக அரையன் ராஜராஜன் பேசினார்.

'அற்புதம்' மறுபடியும் அருண்மொழிப்பட்டன் உள்ளுக் குள் வியந்தான்.

தலைநிமிர்ந்து இந்திரதத்தன் மகனை பார்த்து விட்டு 'தூ' என்று இழிவாகத் துப்பினார். அவன் வேகமாக முன்னேறி னான். அவர் எதிரே இருந்த மூன்று கால் ஆசனத்தை எட்டி உதைத்தான். அது பறந்து அவருக்கு அருகே வர, சோழவீரன் வில்லால் அது தடுத்து திருப்பினான். கயிறு கட்டி இறுக்கி பிடித்துக் கொண்டிருந்த வீரர்களை உபதளபதிகள் சீறத் தொடங்கினார்கள்.

"முட்டாள்கள்" என்று சீறினார்கள். அவன் இறுக்க பிடிக் கப்பட்டான். நகர ஒட்டாது அழுத்தி பிடிக்கப்பட்டான். அப்பனும், பிள்ளையும் ஒருவரை ஒருவர் கொன்று போடுவது போல பார்த்தார்கள்.

"மன்னனா நீ, எங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாய். உன்னுடைய மூன்றாவது மந்திரி உட்கார்ந்து கொண்டிருக்கிற இடத்திலே நீ அமர்ந்து உன் சிங்காசனத்திலே அரையன் ராஜ ராஜரை உட்கார வைத்திருக்கிறாயே சோழரை ஆள விட்டிருக் கிறாயே வெட்கமாக இல்லை. உன்னிடம் கத்தி இல்லையா. கழுத்தை அறுத்துக் கொள்ளக் கூடாதா. நீ ஏன் உயிர் வாழ்கிறாய்.

நீ எதற்கு இங்கு பிறந்திருக்கிறாய். இப்படி அந்நியனுக்கு கூட்டி கொடுக்கவா.

அம்மா உன்னுடன் இருக்கிறாளா அல்லது அரையன் ராஜ ராஜனுக்கு தொண்டு செய்ய அனுப்பி விட்டாயா.'' இந்த முறை வேகமாக திரும்பினான்.

எழுந்திருக்கலாம் என்ற வேகத்தில் இந்திரதத்தன் முனைய, மறுபடியும் அருண்மொழிப்பட்டன் அவர் தோளை தொட்டு நிறுத்தினான்.

''பேசட்டும் விடுங்கள்.'' மெல்லச் சொன்னான்.

''என்னை எப்பொழுதும் இளப்பமாகத்தானே பார்ப்பாய். நான் வீரன் இல்லை என்றுதானே சொல்வாய். பெண் போகி என்று தானே சொல்வாய். பெண் போகி என்று தானே என் பின்னால் பேசினாய். இதோ நான் படை எடுத்து வந்து என் தேசத்தை காப்பாற்ற இரவோடு இரவாக உள்ளே குதித்தேன். கைது செய்யப்பட்டேன். ஆனாலும் நான் இந்த அரண்மனை யிலே ஆண்மகனாக நிற்கிறேன். நீ பேடியாக உட்கார்ந்திருக் கிறாய். நீ உட்கார்ந்திருந்தாலும் பேடி. நான் கட்டப்பட்டு நின்றி ருந்தாலும் ஆண்மகன்.

ஒட்டதேசம் மறுபடியும் போருக்கு வரும். பெரும் படை திரட்டிக் கொண்டு இந்த ஒட்டதேசத்து அரண்மனையை தாக்கி சோழர்களை பின்னடையச் செய்யும். கீழை சாளுக்கியம் வரை துரத்திக்கொண்டு போகும். வெட்டிக் கொல்லும். அந்த நாளுக்கு எல்லா ஏற்பாடும் செய்தாகி விட்டது.

பெரும்படை வங்கம் நோக்கி போயிருக்கிறது. வங்கம் வெகு சீக்கிரம் முன் வந்து தாக்கும். இதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வங்கத்தேசத்தோடு ஒட்டப்படை உள்ளே நுழைந்து தன் கொடியை பறக்க விடும். இதையும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தயவுசெய்து அதற்கு முன்னால் செத்துப் போய் விடுங்கள். நீங்கள் உயிரோடு இருப்பது ஒட்ட தேசத்திற்கு அவமானம்.''

''போதும் நிறுத்து'' வடமொழியில் தெளிவாகப் பேசிய அந்த இளைஞன் குரலை அரையன் ராஜராஜன் அடக்கினார்.

''எதற்காக வந்தாய்?''

''சொல்வதற்கில்லை.''

''அடிபடுவாய்.''

''கொன்றுபோடுங்கள். கவலை இல்லை.''

''பொக்கிஷ அறையை கொள்ளையடிப்பதற்காக திட்ட மிட்டாயாமே. ஜெயசிம்மன் சொல்லி கொடுத்தானாமே. உன் பொக்கிஷ அறையில் இருக்கின்ற நாணயங்கள் இவைதானா. இவை ஒட்ட தேசத்து நாணயமா.'' அவன் முன் நீட்டினார். அவன் திடுக்கிட்டு திமிறினான்.

''மொத்தமும் கைப்பற்றி விட்டோம். காட்டிக் கொடுத்தது உன்னுடைய வீரர்களே. பொக்கிஷ அறை எங்கிருக்கிறது என்று எங்களுக்கென்ன தெரியும். மிக சூட்சமமாக கட்டப் பட்ட அந்த இடத்தை உன்னுடைய நெருக்கமான வீரர்களே அடிதாங்காது சொல்லிக் கொடுத்தார்கள். அங்கு உன்னை விட சொரணை உள்ள ஒரு வீரன் கடைசி வரை சாவியை கொடுக்க மாட்டேன் என்று குத்துப்பட்டு இறந்து போனான். மற்ற ஒட்டர்கள் சாவியை நீட்டினார்கள். பொக்கிஷம் வச மாயிற்று. உன்னுடைய படையெடுப்புக்கு நான் நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். இல்லையெனில் இப்படி ஒரு பொக் கிஷம் இருப்பது தெரியாமலேயே நான் நகர்ந்திருப்பேன்.

உன்னுடைய படை எங்கு போனாலும், எவரோடு சேர்ந்து கொண்டாலும் சோழ தேசத்தின் எதிர்ப்பை அதனால் தாங்க முடியாது. உன்னுடைய போர் முறை நடுநிசியில் தாக்குவது. சோழ வீரர்கள் கால் அகட்டி தூங்கிக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்தாயா. உன் வருகையை தெரிந்து நாங்கள் உனக்காக காத்துக் கொண்டிருந்தோம். ஒரு சோழவீரனுக்குக் கூட காயம் இல்லை. உன்னுடைய வீரர்கள் எழுபத்தொன்பது பேர் இறந்து போனார்கள்.

உன்னால்தான் இந்த ஒட்டதேசம் கேவலப்பட்டது. மிகச் சரியாக போரிட்டு, மிகச் சரியாக சரணடைந்தார் உன்னுடைய தந்தையார். அது வீரருக்கு அடையாளம். நீ திருட்டுத்தனம் செய்கிறாய். என்ன ஒரு இழிமகனாக இருந்தால் உன் தாயை

என்னிடம் அனுப்பி விட்டீரா என்று உன் தந்தையை கேட்பாய். தந்தையும், தாயும் தெய்வங்கள் என்று இந்துமதம் சொல்கிறது. உனக்கு குடித்து, உருண்டு கூத்திகளோடு சல்லாபிக்கத் தான் தெரியும். தினசரி தாயையும், தந்தையையும் வணங்கத் தெரியாது. இராஜராஜ சோழர் இருந்தவரை இராஜேந்திர சோழர் அவரை சந்திக்கும் போதெல்லாம் நீண்ட நெடுஞ்சாண் கிடையாக தரையில் விழுந்து வணங்குவார். மாதண்ட நாயகர். இளவரசர். இராஜராஜ சோழரை விட படை நடத்துவதில் திறமை உள்ளவர். இராஜராஜ சோழரே இதை ஏற்றுக் கொண்டுள்ளார். இவர் என் தந்தை. இவர் என் தாய் என்று தினசரி வணங்குவார். இது சோழ தேசத்து நாகரீகம். இது சனாதன தர்மத்தின் பண்பாடு. பாரத தேசத்தின் பண்பாடு, அது உனக்கு இல்லை. நீ பண்பாடு இல்லாத ஜெயசிம்மன் என்ற அசிங்கம் பிடித்தவனோடு சேர்ந்து கொண்ட அருவருப்பான ஒட்டதேசத்து பிரஜை.

உன்னை என்ன செய்வது என்று பிற்பாடு சொல்கிறேன்.

இந்திரதத்தரே, இந்த வேதனையான நேரத்திற்கு நான் வருந்துகின்றேன். ஒட்டதேசத்து மன்னனும், அவருடைய மகனும் அவர்கள் கட்டி வளர்த்த இந்த சபையிலேயே சண்டை இட்டுக் கொண்டார்கள் என்பது கொடுமையான நேரம். பரம்பரை பரம்பரையாக இது பேசப்படும்,

இந்திரதத்தரே, நீங்கள் இங்கிருந்தால் உங்கள் மகனாலோ அல்லது மற்ற ஒட்ட வீரர்களாலோ உங்கள் உயிருக்கு, உங்கள் மனைவியின் உயிருக்கு மற்ற பெண்டிரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். உங்களை மிக பாதுகாப்பாக வேங்கி தேசத்திற்கு அனுப்பி வைக்கப் போகிறேன். இந்த தேசத்தில் வந்து சிறை செய்ய இந்திரதத்தன் இல்லையென்று ஜெயசிம்மனுக்கு தெரிய வேண்டும். நீங்கள் உங்கள் துணைவியாரோடு தேர் ஏறி, யானைகள் சகிதம், மாட்டு வண்டிகள் சகிதம், குதிரைகள் சகிதம் சோழ வீரர்கள் ஆயிரம் பேர் பாதுகாப்பாக வர வேங்கியை போய் சேருங்கள். அங்கு இராஜேந்திர சோழர் மிகப் பெரிய வரவேற்பை கொடுப்பார். அவர் மேற்கொண்டு நீங்கள் என்ன செய்வது என்று உத்தரவு இடுவார்.

இந்த இடத்திலே முறையாக உத்தரவு பிறப்பிக்க வேண்டுபவர் இராஜேந்திரசோழர் என்பதாலேயே நான் உங்களை வேங்கிக்கு அனுப்புகிறேன். நீங்கள் சிறை இடப்பட வில்லை, சுதந்திரமானவர். அதே நேரம் நீங்கள் வேங்கிக்கு போய் இராஜேந்திரரை சந்திக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். நாளை காலை நீங்கள் பயணத் திற்கு தயாராகி விடுங்கள்.'' அரையன் ராஜராஜன் உத்தரவிட் டார். சோழ கட்டியங்காரன் அதை ஆமோதித்தான். அது தீர்ப்பு போலும் சொல்லப்பட்டது. வேல் கம்பின் அடிப்பாகத்தால் தரையை ஊன்றி அடித்தால் தீர்ப்பு என்பது பொருள். தீர்ப்பளிக்கப் பட்டது.

இந்திரதத்தன் எழுந்தார். அரையன் ராஜனை நோக்கி கைகூப்பினார். அருண்மொழி பட்டனை நோக்கி வணங்கினார்.

''நீங்கள் சொல்வது போலவே செய்கிறேன். ஒட்ட தேசத்தை விட்டு பிரிய எனக்கு மனமில்லை. ஆயினும் இரா ஜேந்திர சோழரை சந்திக்க ஆவலாக இருக்கிறேன். நான் விடை பெறுகிறேன்.''

படி இறங்கினார். மகனை இடப்புறமாக சுற்றிக் கொண்டு நகர்ந்தார். நகருகின்ற இந்திரதத்தனை திமிறிக் கொண்டு அந்த இளவரசன் அவர் மீது பாய்ந்தான். எட்டி உதைத்தான். தலையால் முட்டினான். அவரை கீழே சாய்த்தான். இந்திரதத்தன் அலங்கோலமாக கீழே விழுந்தார்.

''என்ன அபத்தம் இது'' அரையனுக்கு கோபம் வந்தது. பிரம்பு எடுத்துக் கொண்டு கீழ் இறங்கினார். அருண்மொழிப் பட்டன் அவரை தடுத்தான். மிகப்பெரிய சினத்தோடு இந்திர தத்தன் எழுந்தார்.

''திருட்டு நாயே. நீ எனக்கு மகனல்லடா. உண்மையான ஒட்டனல்லடா. நல்ல பிறவி இல்லயடா. ஏதோ தவறு நேர்ந்து விட்டது. ஏதோ தவறு நேர்ந்துவிட்டது. நீ இருப்பது தகாது.'' சட்டென்று பின்னடைந்து அங்கிருந்த சோழ வீரன் இடுப்பி லிருந்து கட்டாரியை உருவினார். அந்த வீரன் தடுக்கும்போது திமிறினார். பாய்ந்து வந்தார். மூன்று, நான்கு குத்துகள் அந்த இளவரசன் மீது இறங்கின. கழுத்தை அறுத்தார். தலை தொங்கியது.

உடம்பின் பல பாகங்களில் ரத்தம் பீய்ச்சிட்டு வந்தது. கயிற்றுக் கட்டுகளோடு ஒட்டதேசத்து இளவரசன் தரையில் விழுந்தான்.

வைத்தியர்கள் ஓடி வந்தார்கள். ஈரத்துணியால் நெஞ்சை சுற்றினார்கள். காயங்களை துடைத்தார்கள். ஆனால் அவன் விக்குவது தெரிந்தது. அவனுடைய உயிர் வாய் வழியே பிரிந்தது.

'ரத்த சேதாரத்தால் சாவு' என்று வைத்தியர் சொன்னார். இந்திரதத்தன் கையில் இருந்த கத்தி பிடுங்கப்பட்டது. அவர் விலங்கிடுமாறு கைகளை நீட்ட,

''தேவையில்லை, நான் தீர்ப்பு வழங்கவில்லை, தீர்ப்பு நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். எனவே ஒரு நீதிபதிக்கு விலங் கிடுவது என்பது சரித்திரத்தில் நடைபெறாத விஷயம். நீங்கள் போகலாம். பயணத்திற்கு தயாராகி விடுங்கள்.'' அடிக்குரலில் அரையன் ராஜன் சொன்னார்.

கால் நாழிகையில் அந்த அரண்மனை சுத்தம் செய்யப் பட்டது. தூப தீபங்கள் ஏற்றப்பட்டன. இடம் முழுவதும் ரத்த வாடை போக குங்கிலியப் புகை போடப்பட்டது. அரையன் ராஜன் திகைத்து நின்றார். அருண்மொழி பட்டன் அவருக்கு அருகே போய் நின்றான்.

''உள்ளுணர்வு சொல்லிற்று இப்படி நேரும் என்று. அவனை நான் கொல்வதை விட அவர் கொன்றதுதான் அழகு. அவருக்கு சிறப்பு. நமக்கு மரியாதை, எனவே, மனம் தளர வேண்டாம். திகைப்படைய வேண்டாம். நடந்தது நன்றாகவே நடந்திருக்கிறது.''

அரையன் ராஜனை தூக்கி எழுப்பினான். அரண்மனைக்கு போகச் சொன்னான். கோட்டை காவலை பலப்படுத்த, அவ ருடைய பயணத்திற்கு ஏற்பாடு செய்ய விதம்விதமான கட் டளைகள் பிறப்பித்தான். வலிவுமிக்க ஆயிரம் சோழ வீரர்கள் வாசலில் தங்கள் மூட்டை முடிச்சுகளோடு குதிரைகளில் ஏறி நின்றார்கள். நல்ல குதிரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒட்ட தேசத்து அரசனான இந்திரதத்தனுக்கும், அவன் மனைவிக் கும், மற்ற பெண்டுகளுக்கும் கொடுக்கப்பட்டன. வயதான பெண்டுகள் வர, யானைகளில் அம்பாரிகள் வைக்கப்பட்டன.

மாட்டுவண்டிகளில் அரசர் தேவை என்று சொன்ன பாத்திர, பண்டங்கள் ஏற்றப்பட்டன. பொக்கிஷ அறைக்கு போய் இராஜேந்திர சோழருக்கு கொடுப்பதற்கு என்று ஒரு கூடை தங்க நகையை அவர் வாரிக்கொண்டார்.

மறுநாள் காலை தன்னுடைய அருமையான தேசத்தை விட்டு, வளமையான தேசத்தை விட்டு, உண்மையான மக்களை விட்டு, மிகப்பெரிய வேதனையுடன் குதிரை ஏறி ஒட்டதேசம் விட்டு கீழை சாளுக்கியம் நோக்கி பயணமானார். மூன்று நாட்களில் கீழை சாளுக்கியம் அடைந்தார்.

★ ★ ★

அத்யாயம்

72

வேங்கியின் வட எல்லையாக கரைபுரண்டு ஓடும் கோதாவரி நதி இருந்தது. கீழைசாளுக்கியத்தை வளமாக்கியதில் பெரும் பங்கு கோதாவரிக்கு உண்டு. கோதாவரியும், கிருஷ்ணாவும் போட்டி போட்டுக் கொண்டு பெரும் வயல் வெளிகளை, தோப்புகளை கீழை சாளுக்கியத்தில் உருவாக்கின. கீழை சாளுக்கியத்தின் இந்த விளைச்சல்தான் ஒட்ட தேசத்தையும், மேலை சாளுக்கியத்தையும் அதை வென்று அடிமையாக்கிக் கொள்ள துடிக்க வைத்தது. வடக்கே இருக்கின்ற அந்த நதியை தாண்டி இராஜேந்திர சோழர் வேங்கிக்கு காவல் இருந்தார்.

வேங்கியை நோக்கி ஒட்டதேசத்து அரசன் தோல்வியுற்று வருகிறான் என்று தெரிந்ததும் பெருமிதம் கொண்டார். நடந்த விஷயங்கள் உடனுக்குடன் அவருக்கு தெரிவிக்கப்பட்டன. ஒட்டதேசம் வசப்பட்ட சந்தோஷம் வரும் முன்பே இந்திரதத்தன் தன் மகனை தன் கையாலேயே குத்தி கொன்றது ஆச்சரியமாக இருந்தது. மிக வலிமைமிக்க இந்த தேசத்தை மிக எளிதாக சோழர்கள் சூழ்ந்து ஜெயித்து விட்டார்கள். அரையன் ராஜராஜன் மிக பக்குவமாக நடந்து கொண்டிருக்கிறார். மிகத் திறமையாக போரிட்டிருக்கிறார். ஆட்களின் எண்ணிக்கையால் இந்த போர் வெல்லப்படவில்லை. மாறாக, போர் தந்திரங்களை மிகச் செவ்வனே கையாண்டு அவைகளை நன்கு முறைப்படுத்தி வெற்றியை வாங்கியிருக்கிறார். அருண்மொழிப்பட்டன் அரையன் ராஜராஜனுக்கு சரியான துணை. இன்றைய காலகட்டத்தில் தன்னுடைய இந்த வயதில் அவர்கள்

இருவரும் இணையாக இருப்பது தன்னைவிட உயர்வான விஷயம். அரையன் ராஜராஜன் நினைத்தால் அவர் ஒட்ட தேசத்திற்கும், கீழை சாளுக்கியத்திற்கும் அரசனாகி விட முடியும். ஆனால் அருண்மொழிபட்டனுக்கு அரசாளுகின்ற ஆசை வராது. அதே நேரம் அரையன் ராஜராஜனையும் அவன் அரசாள விட மாட்டான். இது இறைவன் இராஜேந்திரனுக்குத் தந்த கொடை.

இராஜேந்திரர் கரையோரம் குதிரையை செலுத்தியபடி அந்த சூழ்நிலையைப் பற்றி சிந்தித்தார். நல்ல பிள்ளைகள் என்பது மிகப் பெரிய கொடுப்பினை. நல்ல ஊழியர் என்பது அதை விடவும் பெரிய கொடுப்பினை. எனக்கு நல்ல குழந் தைகள் பிறந்திருக்கிறார்கள். அற்புதமான மனைவிகள் இருந் திருக்கிறார்கள். ஆரோக்கியமான படைத் தளபதிகள் இருந் திருக்கிறார்கள். உண்மையான ஊழியர்கள் இருந்திருக்கிறார் கள். இதெல்லாம் என் தகப்பனின் ஆசிர்வாதம். சக்ரவர்த்தி இராஜராஜசோழரின் ஆசிர்வாதம். ஒட்டதேசத்தை வென்று விட்டேன். கங்கை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன் என்று அவருக்கு தெரிவிக்கப்பட்டால் எவ்வளவு சந்தோஷம் அடை வார். இந்த இடம்தான் குறைவாக இருக்கிறது. இன்னும் இருபது வருட காலம் வாழ்ந்திருக்கலாம். எதனாலேயோ அவருக்கு ஆயுசு பலம் இல்லாமல் போய் விட்டது. தஞ்சை அரண்மனை யில் உட்கார்ந்து கொள்ளுங்கள். தினம் தோறும் தேரில் பெரு வுடையார் கோவிலுக்கு போய் வாருங்கள் என்று சௌகரியங் கள் ஏற்படுத்திவிட்டு ஆடல், பாடல்களை கேட்க விட்டு, தினசரி அரசியல் விஷயத்தை அவருக்கு தெரிவிக்கின்ற ஒரு சுகம், ஒரு சந்தோஷம் எனக்கு கிடைக்கவில்லை. ஒவ் வொரு விதமான வெற்றியின் போதும் நான் தந்தையைத்தான் நினைத்துக் கொள்கிறேன். தாத்தா சுந்தரசோழரின் ஞாபகமும் வருகிறது. இன்னும் ஒவ்வொருவராகப் போய் சோழ சாம்ராஜ் யத்தை ஸ்தாபித்த விஜயாலயச் சோழரின் திருவுருவப் படத்தை தினமும் கும்பிடத் தோன்றுகிறது. போர் நடந்த திருப்புறம்பியத்தைச் சுற்றி வர வேண்டும் என்று தோன்று கிறது.

ஒட்ட தேசத்தில் வெற்றி பெற்றது மிகப் பெரிய விஷயம். இனி கங்கைக் கரை நோக்கி நடக்கின்ற போர்கள் பெரியனவாக இருக்காது. கீழை சாளுக்கியம் ஜெயசிம்மனுக்கு அடிமைப்பட்டது போல ஒட்டதேசம் ஆகவில்லை. ஆயினும் ஜெயசிம்மனுக்கு அங்கு மரியாதை இருந்தது. ஜெயசிம்மன் நிச்சயம் இன்னும் வடக்கே வங்கம் நோக்கி நகர்ந்திருப்பான். ஆனால் வங்க மன்னர்கள் ஜெயசிம்மனை செவிமடுக்க மாட்டார்கள். ஜெயசிம்மனின் துரோகத்தை அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். மேலைசாளுக்கியம் கீழைசாளுக்கியத்தை கபளீகரம் செய்யும் அரசியலை அவர்கள் கவனித்திருக்கிறார்கள். அடுத்த தேசத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் எவருக்கு வந்தாலும் அவன் ஆபத்தானவன். ஆனால் எனக்கு ஒட்டதேசத்தை ஆளுகின்ற ஆசை இல்லை. வழிவிட்டால் கங்கை கரைவரை அமைதியாக போய் வரலாம். ஆனால் நட்பாக போய் வருவதை விட, ஒரு அரசனுக்கு வெற்றி பெற்று போய் வருவதுதான் சுகம்.

மதுரையில் ஒரு மகனை குடியமர்த்தியது போல, சோழ பாண்டியன் என்று கொண்டாடியது போல, சோழ சேரன் என்று அழைத்தது போல, சோழ ஒட்டன் என்று அழைக்க முடியாது. அந்த இடம் தேவையில்லை. ஆனால் அந்த நாகரீகம், அங்குள்ள பொருள்கள் சோழ தேசத்திற்கு வந்தால் சிறப்பாக இருக்கும். வங்கம் மட்டும் கொள்ளை அடித்து திரும்புகின்ற இடம் இல்லை. வங்கத்திலிருந்து நாவாய்களை கொண்டு வர வேண்டும். நாவாய்களை கொண்டு வரத்தான் இந்தப்போர். ஆனால் இதைச் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. நான் உள்ளே நுழைகிறேன். முடிந்தால் தடுத்துக் கொள் என்றுதான் கொக்கரிக்க வேண்டும். அரையன் ராஜ ராஜன் இதைச் சரியாக செய்கிறார். இங்கு உட்கார்ந்திருப்பது தவறோ கிளம்பிவிடலாமோ என்று தோன்றுகிறது. அது அவ்வளவு நல்லதல்ல. வங்க தேசத்தை நோக்கி நகர்ந்திருக்கின்ற ஜெயசிம்மன் நான் நகர்வது தெரிந்ததும் வெகுநிச்சயம் மேலை சாளுக்கியத்திலுள்ள வீரர்களை, கீழைசாளுக்கியம் நோக்கி வர ஏற்பாடு செய்வான். இந்த இடம் விட்டு விலகவே கூடாது. மறுபடியும் தலையெடுக்கவொட்டாது மேலை சாளுக்கியத்தை அடித்து துவைக்கும் வரை இந்த இடத்தை காபந்தாக

வைத்துக் கொள்ள வேண்டும். இந்த இடத்தை அரையன் ராஜராஜனை காவல் செய்யச் சொல்லி, நாம் போயிருக்க லாமோ, இல்லை. அரையன் ராஜராஜனுக்கு இந்த முட்டாள், குந்தவையின் மகன் இராஜநரேந்திரன் கட்டுப்பட மாட்டான். இங்கே முடிவு எடுக்க அரையன் ராஜராஜனுக்கு சிரமங்கள் அதிகம் இருக்கும். திருமண உறவு வேறு ஏற்படப் போகிறது என்பதால் இன்னும் தவிப்பாகத்தான் அவன் முடிவுகள் எடுக்கப் பட வேண்டியிருக்கும்.

வங்க தேசத்தை ஜெயித்து நாவாய்களுடன் திரும்பி விட்டால் இந்த இடத்தில் நல்ல தளபதிகளை உட்கார வைத்து விட்டு கிழக்கு நோக்கி கடல் தாண்டி படையெடுப்பு துவங் கலாம். நான் அதற்காக என்னுடைய உடல்நலத்தை பேணி காத்திருக்க வேண்டும். நானே கடல் கடந்து போக வேண்டும். நானாதேசிகள் சொல்லுகின்ற அந்த கதைகளையெல்லாம் நேரில் பார்க்க வேண்டும்.

ஒரு குடம் அளவுக்குத் தேங்காய், இடுப்பளவு உயர ஆடுகள், ஏகப்பட்ட யானைகள், அரபு தேசத்திலிருந்து வந்த குதிரைகள் சிறப்பான சீனர்களின் கைவினைகள் என்று பலதும் சொல்கிறார்கள். அதுதவிர, உலகம் என்பது சோழ தேசம் அல்ல. பாண்டிய தேசம் அல்ல. தொண்டை மண்டலம் அல்ல. ஒட்ட தேசம் அல்ல. உலகம் உருளையானது. அது தாண்டி போய்க் கொண்டே இருக்கலாம். ஒரு புள்ளியில் துவங்கி சுற்றி அதே புள்ளிக்கு வரலாம். அப்படிப்பட்ட வழிகள் இருக்கின்றன. பலநூறு தேசங்கள் இருக்கின்றன. பலநூறு நாகரீகங்கள் இருக்கின்றன. சகலமும் அறியலாம். ஒரு மனிதன் இதை தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். இதை தெரிந்து கொள்வது தான் நாகரீகம்.

சோழ தேசத்தின் அரிசி சோறும், ஆட்டுக்குட்டி வறு வலும், காவிரி நீர் மீனும், தொண்டை நாட்டின் கரும்பும், வெற்றிலையும் மட்டுமே வாழ்வாகிவிட முடியாது. மனிதர் களை சந்திக்க வேண்டும். அதிகம், அதிகம், வருடந்தோறும் புதுப்புது மனிதர்களையும், நிலங்களையும் பார்க்க வேண்டும். எல்லோரும் உடுத்தி இருப்பார்களா. அல்லது அம்மணமா என்று

பார்க்க வேண்டும். என்னவிதமான பெண்கள், என்னவித மான பசுக்கள், என்ன விதமான உணவு, எப்படிப்பட்ட மலை. பனியாக பொழியுமாமே. முழங்கால் வரை பனி இருக்குமாமே. விரல்களெல்லாம் மரத்து விடுமாமே. அப்படிப்பட்ட இடங்கள் பல கல் தூரம் இருக்கிறதாமே. அங்கு போக வேண்டும். அதை விட முக்கியம் மானசரோவர். கயிலாயம். இதை பார்க்காமல் நான் சாகக் கூடாது. அரையன் ராஜராஜன் வெற்றி பெற்ற பிறகு, வெற்றி பெற்ற இடத்தில் அரசனாக போய் உலவி வர வேண்டும். நீலப் போர்வை விரித்தது போல மானசரோவர் ஏரி இருக்குமாம். அந்த ஏரியில் விதம் விதமான அன்னங்கள் மிதக்குமாம். நட்ட நடு நிசியில் அந்த ஏரிக்குள் நட்சத்திரங் களாக தேவர்கள் இறங்கி வருவார்களாம். மிகப் பெரிய தபஸ்வி களும், அந்தணர்களும், யோகிகளும் இதை சபையில் சொல் லும்போது திகைப்பாக இருக்கும். விடியற்காலை கயிலை மலையை நோக்கி காத்திருப்பார்களாம். சூரிய வெளிச்சம் மெல்ல பரவுமாம். வெள்ளையாக இருக்கின்ற அந்த பனிச் சிகரம் சில நொடிகளுக்குள் தகதகக்கின்ற தங்கமயமாக மாறு மாம். சூரிய ஒளியால் அது ஒரு அற்புதமான நிறமாக தோன்று மாம். 'சிவனே, சிவனே' என்று அரற்றுவார்களாம். வெகு நிச்சயம். வெகு நிச்சயம் அது கடவுள் வாழும் இடம். அது சிவனா, விஷ்ணுவா, வேறு ஏதாவதா தெரியவில்லை. அந்த கயிலை மலையில் ஏதோ ஒரு இடத்தில் ஒரு அற்புதமான சக்தி குடி யிருக்கிறது என்று சொல்கிறார்கள். போய் பார்க்க வேண்டும்.

எல்லோரும் மனிதர்கள்தான். ஆனால் யவனர்கள் வேறு விதம். கருத்த முகம். சிவந்த உதடு. வெய்யிலுக்காக எப்பொழு தும் போட்டிருக்கின்ற தலை ஆடை. அதே சமயம் சீனர்கள், மெல்லிய கண்கள், மெல்லிய உதடு. ரோமம் அதிகம் இல்லாத முகம். சிறிய உருவம். ஆனால் படு சுறுசுறுப்பு. ஆழ்ந்த மன வலுவு. எப்படி வந்தது. இது என்ன நாகரீகம் என்று யோசிக்க வைக்கிறது. இவை எல்லாவற்றையும் நேரில் பார்க்காமல் என்னை இங்கே கட்டிப் போட்டிருக்கிறதே. இதுதான் ஏன் என்று புரியவில்லை. வீரமாதேவியிடம் அரற்றிவிட்டு தூங்கப் போவதே வழக்கமாகி விட்டது.

'எவ்வளவு உயர்ந்த விஷயங்களை செய்திருக்கிறீர்கள் என்று உங்களுக்கு புரியவேயில்லை. கீழை சாளுக்கியத்தி னுடைய நெல்லும், கரும்பும் நமது சோழ தேசத்தை எவ்வளவு சந்தோஷமாக்கிக் கொண்டிருக்கின்றன. அந்த எருமைகளும், எருதுகளும், பசுக்களும் நம்முடைய வாழ்க்கை தரத்தை எப்படி உயர்த்தியிருக்கின்றன. தொண்டை நாடு என்ன கம்பீரமாக இருக்கிறது. மக்கள் எவ்வளவு சுகமாக வாழ்கிறார்கள். மேலை சாளுக்கியத்திலிருந்து சோழ தேசத்திற்கு வர வேண்டிய பொருட்கள் தொண்டை நாட்டில் அனுபவித்து விட்டுத்தானே அனுப்புகிறார்கள். மொழி வளர நாகரீகம் வளருகிறது. வடமொழி யின் சிந்தனைகள் தமிழ் மொழிக்கு மாற்றப்படுகின்றன. இறை வழிபாடால் ஒன்று கூடி, அந்த இறைவழிபாட்டை இன்னும் விஸ்தரிக்கின்ற முயற்சி நடக்கிறது.

மொழி மட்டும் நாகரீகம் அல்ல. இறை வழிபாடும் நாக ரீகம்தான்.' இதை வீரமாதேவி விளக்கிச் சொன்னபோது திகைப்பாக இருந்தது. நான் சரியாகத்தான் போய்க் கொண டிருக்கிறேன் என்ற எண்ணம் வருகிறது. ஆனால் எத்தனை நாள் என்ற கேள்வியும் வந்தது. ஜோதிடர்கள் எண்பத்தாறு வயது என்று சொல்கிறார்கள். இன்னும் வெகுநாள் இருக்கிறது. அறுபதே பூர்த்தியாகவில்லை.

சற்று விலகி பாதுகாப்பான படைகள் இருக்க, ஆசனத் தில் உட்கார்ந்தபடியும், பாறைகளில் ஏறி நின்றபடியும், பசும் வயல்களை பார்த்தபடியும், தோப்புகளுக்கு நடுவே கட்டில் போட்டு படுத்தபடியும், உண்டபடியும், உலாவியபடியும் இராஜேந் திரர் அதிக நேரம் தனிமையில் இருந்தார்.

என்னால் வீர இராஜேந்திரனை குத்தி கொல்ல முடியுமா. அவன் எட்டி உதைத்தாலும் வாள் எடுத்து படுக்க வைப்பேனே தவிர, என்னால் கொல்ல முடியுமா. இந்திரதத்தன் கொன்று விட்டான். அவனை தாக்கியதா இதற்கு காரணம். இருக்காது. ஒரு பிள்ளை அடிப்பதை ஒரு தகப்பன் எளிதாக பொறுத்துக் கொள்வான். குந்தவை செய்த கூத்துக்கு அவளை தூக்கிலிட் டிருக்க வேண்டும் அல்லவா. முடியவில்லையே. முடியாதே. இந்திரதத்தன் எப்படி செய்தான். ஒட்ட தேசத்து நாகரீகத்தை

அவன் பையன் சிதறடித்து விட்டான். திருட்டுத்தனமாக தாக்கி இழிவுபடுத்தி விட்டான். நாங்கள் இப்படிப்பட்டவர்கள் அல்ல என்று சொல்லும் விதமாக இந்திரதத்தன் அவனுக்கு மரண தண்டனை கொடுத்து விட்டான்.

இரண்டு குதிரை வீரர்கள் வந்தார்கள். பாதுகாப்புக்கு வந்த படை சுறுசுறுப்பாகியது. சற்று தொலைவே மடக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு இன்னும் மூன்று வீரர்கள் அவர்களை சூழ்ந்து கொள்ள இராஜேந்திரருக்கு அருகே வரவழைக்கப்பட்டார்கள். வந்தவனில் ஒருவன் உபதளபதி என்று கேயூரம் சொல்லிற்று. படை அணி வகுப்பில் இவனை பார்த்தது நினைவுக்கு வந்தது. இவன் நடு நாட்டு இளைஞன். தொண்டை நாடு போலல்லாது, சோழ தேசம் போலல்லாது, நடு நாட்டு இளைஞர்கள் முரடர்கள். கொஞ்சம் சிந்தித்து செயல்படுபவர்கள் அல்ல. தகவல் சொல்ல இவன் தகுதியானவனா. இவனை ஏன் அரையன் ராஜராஜன் அனுப்பியிருக்கிறார். யோசனையுடன் அவனைப் பார்த்தார். அவர்கள் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள். 'எழுந்திரு' என்று சொல்லும் வரை அசையாது கிடந்தார்கள்.

இந்த மரியாதையை மாற்றியமைக்க வேண்டும். கை கூப்பி குனிந்து வணக்கம்சொன்னால் போதும் என்று கட்டளை இட வேண்டும். மறவர்கள் காலில் விழக் கூடாது. அது மூர்க்கத்தை குறைக்கும். அரசன் என்பவனிடம் விழுந்து வணங்கலாமே தவிர, மற்றவருக்கு குனிந்து வணக்கம் சொன்னால் போதும். ஆனால் சொன்னால் ஏற்கமாட்டார்கள். அது மரபல்ல என்பார்கள்.

''சொல்லுங்கள்.'' ஒரு வார்த்தையில் கட்டளை இட்டார்.

''ஒட்டதேசம் பிடிபட்டுவிட்டது. நாம் வெற்றி அடைந்தோம்.''

''தெரியும். மேற்கொண்டு.''

''ஒட்டதேசத்து அரசன் இந்திரதத்தன் தன் மகனை அரச சபையில் குத்தி கொன்றான்.''

''தெரியும். மேற்கொண்டு.''

''அரையன் ராஜராஜன் கட்டளைப்படி இந்திரதத்தன் வேங்கி நோக்கி வந்து கொண்டிருக்கிறார். உங்களை அவர் சந்திக்க வேண்டும் என்பது அவர் விருப்பமாகவும், அரையன் ராஜராஜன் விருப்பமாகவும், அருண்மொழிபட்டன் விருப்ப மாகவும் இருக்கிறது.''

''காரணம் உண்டா.''

''அவர் அங்கு இருப்பின் அவருக்கு ஆபத்து வர வாய்ப் புகள் உண்டு. அவருடைய தற்கொலைப் படையே அவர் தோல்வியுற்றதற்கு கோபப்பட்டு அவரை மறைந்திருந்தோ, அருகில் வந்தோ கொன்றுவிடலாம் என்று அரையன் ராஜராஜன் நினைக்கிறார். இந்திரதத்தனுக்கும் அந்த பயம் இருக்கிறது.''

''புரிகிறது. மேற்கொண்டு.''

''வேங்கியில் அவரை வைத்திருக்காமல், சோழ தேசத் திற்கு அனுப்பிவிடுவது உத்தமமாக இருக்கும் என்று அருண் மொழிப்பட்டர் என்னுடன் கூறினார்.''

''இது என்ன ஆலோசனையாக சொல்லப்பட்டதா அல்லது அவசியம் செய்ய வேண்டும் என்பதாக சொல்லப்பட்டதா.''

''எல்லாவற்றிக்கும் முடிவு நீங்களே. இது ஆலோசனை யாகத்தான் சொல்லப்பட்டது. ஏனெனில் வேங்கியிலும் மேலை சாளுக்கிய ஒற்றர்கள் இருக்கலாம். அவர்கள் நம் பாதுகாப்பை மீறியும் இந்திரதத்தனை கொன்றுவிடலாம். இந்திரதத்தன் கொல்லப்பட்டால் ஒட்டதேசம் மேலும் திமிறும். நமக்கு தொந் தரவு கொடுக்கும். அதுமட்டுமல்லாது வங்க தேசத்தில் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஒட்டதேசத்து இந்திரதத்தனை வரவழைத்து கொன்று போட்டார்கள் என்று வங்க தேசத்தில் மூர்க்கம் அதிகரிக்கும். இதை மேலை சாளுக்கியத்தினர் நம் முடைய ஊரிலேயே செய்து நம்மீது பழி போடுவார்கள். சித்ர வதை செய்து கொன்றதாக செய்திகள் பரப்புவார்கள்.''

''புரிகிறது. மேற்கொண்டு.''

''இந்திரதத்தன் மிக சோர்வாக இருக்கிறார். தனிமையில் அழுகிறார். அவருடைய அரசிமார்களும், உறவினர்களும்

தோப்புகளுக்கு போய் அமர்ந்து கொண்டு, சொல்லி, சொல்லி வாய் விட்டு அலறுகிறார்கள். நாங்கள் அருகே இருப்பதை விரும்பாமல் 'விலகிப் போங்கள்' என்கிறார்கள்.''

''கடவுளே. இந்திரதத்தனுக்கு இது மோசமான காலம்தான். ஆனால் என்ன அழுதாலும் மாண்டவர் வருவாரோ.''

''அதே சமயம்.'' வீரன் ஆரம்பித்தான்.

''அதே சமயம்?''

''சோழ தேசம் போக வேண்டும் என்று இந்திரதத்தனே ஆசைப்படுகிறார்.''

''எதனால்?''

''சோழ தேசத்தின் நடைமுறைகளைப் பற்றி பல்வேறு கேள்விகள் கேட்கிறார். வைணவ கோயில்களுக்கு பராமரிப்பு உண்டா என்கிறார். மிகச் சிறப்பாக பராமரிக்கிறோம் என்றால், அது எப்படி சைவமும், வைணவமும் ஒன்றாகும் என்று கேள்வி எழுப்புகிறார்.''

''நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

''நம்முள் வீரராமர் என்ற ஒரு வயசாளி இதற்கு அருமையாக பதில் சொன்னார். இறைவனை நோக்கி போகும் பாதையில் இரண்டும் அருகருகே இருப்பவை. இரண்டு பாதைகள் மட்டுமல்ல. ஆறு பாதைகள் இருக்கின்றன பரத கண்டத்தில் என்று சங்கரர் எழுதி வைத்திருக்கிறார். உவமானம் என்பதை பற்றியும் அவர் விளக்கிச் சொன்னார். இந்திரதத்தர் அதை ஏற்றுக்கொண்டார். இந்திரதத்தர் இன்னொரு விசாரணையும் செய்தார்.''

''என்ன அது?''

''இராமேஸ்வரம் நோக்கி போக வேண்டும் என்று அவருக்கு ஆசை இருக்கிறது. சோழ தேசம் போய் அங்கிருந்து பாண்டிய நாடு வழியாக இராமேஸ்வரம் போவதற்கு வழிகள் கேட்டார். இந்த அரசிகளும் ஆவல் காட்டினார்கள்.''

''எதற்கு? இறந்த மகனின் மனக்கேதம் தீர்க்கவா. நீத்தார் கடன் செய்யவா.''

''அப்படி இருக்கலாம்.''

''இன்னும் எவ்வளவு நேரத்தில் வருவார்.''

''நாளை காலை இங்கு வந்தடைந்து விடுவார்.''

''அரையன் ராஜராஜன் இந்திரதத்தனோடு பேசினாரா?''

''பலமுறை பேசினார்.''

''வங்க தேசத்தில் படையெடுப்பு எப்படி இருக்கும். வங்க தேசத்திற்கு வழி என்ன. யார் யார் தாக்குவார்கள் என்ற கேள்விகள் இந்திரதத்தனிடம் எழுப்பப்பட்டனவா?''

''அது குறித்து பல்வேறு கேள்விகள் எழுப்பப் பட்டன. ஆனால் இந்திரதத்தர் பட்டும் படாமலும் பதில் சொன்னார். 'நீங்கள் போய் பார்த்துக் கொள்ளுங்களேன்' என்று அசிரத்தையாக இருந்தார்.''

''அரையன் ராஜராஜன் வங்தேசம் பற்றி என்ன அபிப்ராயம் வைத்திருக்கிறார்.''

''கடும் போர் நிகழக்கூடும்.''

''எதனால்?''

''மேலைச் சாளுக்கியத்து படை ஒன்று அங்கு போயிருக்கிறது. சிதறி இருக்கின்ற வங்கதேசத்து அரசர்களை ஒன்று சேர்த்து ஒட்ட தேசத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்தி படுவேகமாய் தாக்க வேண்டும் என்ற திட்டங்கள் செயல் படத் துவங்கியிருக்கின்றன.''

''அதற்கு இந்திரதத்தன் ஆலோசனை சொன்னாரா?''

''சொல்லியிருக்கிறார் என்று அருண் மொழிப்பட்டன் என்னிடம் சொன்னார்.''

''என்ன திட்டம் அது என்று சொன்னாரா.''

''ஆமாம். இருமுனை தாக்குதலை நீங்கள் பெருமளவில் செயல்படுத்துகிறீர்கள். இதே போல் இருமுனை தாக்குதல் வங்க தேசத்தில் நடந்தால் அது சிறப்பாக இருக்கும் என்று சொன்னார்.''

''எப்படி. நேரடியாக கோடு கிழித்தது போலத்தானே போக வேண்டும்.''

''இல்லை. கடல் மார்க்கமாகவும் போகச் சொல்கிறார். ஒட்ட தேசத்தின் நாவாய்களில் ஏறி வங்க தேசத்தை அடைந்து முன்னே யுத்தம் நடக்கும்போது பின்னே தாக்க வேண்டும் என்றும் சொல்கிறார்''

''எத்தனை நாவாய்களில் எத்தனை பேர் ஏறி எப்படி தாக்குவது. உள்ளுக்குள் புகுந்து கலவரம் செய்யலாமே தவிர, கிடுக்கி தாக்குதல் எளிதா?''

''எளிது என்கிறார் இந்திரதத்தர். அதை அருண்மொழி பட்டர் முற்றிலுமாக புரிந்துகொண்டதாகவும் சொல்கிறார்.

ஒட்ட தேசத்தில் கடற் கொள்ளையர் நாவாய்கள் ஒளிந்து கொள்வது வழக்கம். ஒட்டதேசத்து பெண்களுக்காகவும், இறைச் சிகளுக்காகவும், காடுகளில் கிடைக்கும் பலமான மரங்களுக் காகவும் அவர்கள் வருவார்கள். வங்கதேசத்து கடற்கரை பகுதி களில் பல இடங்களில் கப்பல் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கின்றன. பழுது பார்க்கவும், புதியது வாங்கவும் அங்கு வசதி இருக்கிறது. உங்கள் அனுமதியை அருண்மொழிப் பட்டர் கோருகிறார்.

ஒட்டதேசத்திலிருந்து பிரிந்து கடல்பக்கம் போய் அரை யன் ராஜராஜனை வடக்குநோக்கி நகரச் சொல்லி தான் கிழக்கிலிருந்து கடற்கரை ஓரமாகவே நாவாயில் பயணப்பட்டு வங்கதேசத்தின் ஏதோ ஒரு தலைநகரை தாக்குவது என்பது தீர்மானமாகியிருக்கிறது. எந்த இடம் என்பதை நேரம் காலம் தெரிந்து அவர்கள் செயல்படுவார்கள்.''

கோதாவரி நோக்கி குதிரையில் வரும் இந்திரதத்தனை சுற்றி புலிக்கொடிகள் தான் அதிகம் பறந்து வந்தன. இந்திர தத்தனின் ஒரே ஒரு கொடி மட்டும் நடுவே வந்தது. அது இந்திர தத்தன் ஏற்றச் சொன்னது.

நதிக்கரையின் மேட்டிலிருந்து வயல்வெளிகளுக்கு ஊடே வரும் அந்த சிறிய படையை இராஜேந்திரர் கூர்மையாக கவனித்தார். அவரின் உத்தரவுபடி படகுகளில் சோழதேசத்து அரச குடும்பம் வந்து கொண்டிருந்தது. எதிரே வருகின்ற மன்னன் தன் பெண்டு, பிள்ளைகளோடு வருகின்றபடியால்

அவர்களை வரவேற்க தன் குடும்பத்தை இராஜேந்திரர் வரச் சொல்லி கட்டளை இட்டிருந்தார்.

கீழைசாளுக்கியத்து மக்களும், சோழ வீரர்களும் அந்த ஊர்வலத்தை எதிர்கொள்ள தயாராக இருந்தார்கள்.

மரணம் ஏற்பட்டிருக்கிறது. எனவே கலச வரவேற்பு வேண்டாம். மாலைகள் அணிவிக்கலாம். அல்லது காலில் நீர் ஊற்றி களைப்பாற இனிப்புநீர் தரலாம். பழத்தட்டுகளும், வெற்றிலை பாக்கு தட்டும், போர்த்திக் கொள்ள பெரும் சால்வையும் வரவேற்பாக கொடுக்கலாம். வேத, முழக்கங்கள் இருக்காது. மௌனமான வரவேற்பே சிறப்பு.

வெகு தொலைவில் நீல வேட்டி உடுத்தி, மேலே நீல வண்ணமான சால்வை போர்த்தி குதிரையில் அமர்ந்திருந்த இராஜேந்திரர் அவனை நோக்கி குதிரையை மெல்லியதாக விரட்டினார். இராஜேந்திரர் வருவதை தொலைவிலிருந்து பார்த்து இந்திரதத்தனுக்கு சொல்லப்பட்டது. இந்திரதத்தன் சட்டென்று குதிரையிலிருந்து இறங்கினான். கை கூப்பியபடி அந்த மண் பாதையில் நடந்து வந்தான். அவனுடைய குடும் பத்தினரும் பாதுகாவலர்களும் விலகினார்கள்.

ஒற்றை ஆளாய், கொஞ்சம் தளர்வான நடையோடு, கலைந்த கேசத்தோடு, தாடியோடு, தோளில் கேயூரங்களோடு நடந்து வருபவரை இராஜேந்திரர் உற்று பார்த்தார். உள்ளே நெகிழ்ந்தது. அவரும் குதிரையை விட்டு இறங்கினார். தற்கொலை படையினர் கீழே இறங்கினார்கள். அவரை சுற்றிக் கொண்டார்கள். அவர்களை அவர் கை அசைவில் விலக்கி னார். அவர்கள் இரண்டு கோல் தொலைவில் அவரை தொடர்ந்து வந்தார்கள்.

இராஜேந்திர சோழர் எதிரே நின்று அவரை பார்த்து, ''வருக, வருக'' என்று கைகூப்பினார். இந்திரதத்தன் கை கூப்பியபடியே எதுவும் சொல்லாது பார்வையால் அவரை வணங்கினார். விழுங்கினார். இன்னும் அருகே வந்து மெல்ல சிரம் தாழ்த்தி இராஜேந்திரரை வணங்கினார். பிறகு இன்னும் அருகே வந்து குனிந்து அவர் பாதங்களை தொட்டார். பிறகு விலகி, நெடுஞ்சாண்கிடையாக நமஸ்காரம் செய்தார்.

இராஜேந்திரர் மெல்லியதாய் பதறினார். குனிந்து தூக்கினார். நெற்றியில், தாடியில், நெஞ்சில் ஒட்டிய மண்ணை தட்டி விட்டார். தோள்களை பிடித்து உற்று பார்த்தார். ஆழ்ந்த வருத்தமும், அன்பும் அதிலிருந்து வெளிப்பட்டன. அருகே இழுத்து அணைத்துக் கொண்டார்.

''இனி நாம் நண்பர்கள். உயிர் நண்பர்கள். ஒட்டதேசத்தின் பாதுகாப்புக்கும், வளமைக்கும் என்னால் ஆன எல்லாம் செய்வேன். நான் சகலமும் கேள்விப்பட்டேன். இதோ இந்த கோதாவரி தீரம் மிக புனிதமானது. இந்த நதியில் இறங்கி உங்களுடைய மகனுக்காக நீத்தார் கடன் செய்யுங்கள். அந்தணர்களை ஏற்பாடு செய்திருக்கிறேன். உங்கள் அரசவை பெண்டிர்கள் ஆற்றில் இறங்கட்டும். நீராடி, ஈரத்துணியோடு நீத்தார் கடன் செய்யுங்கள்.'' வடமொழியில் பேசினார். இந்திரதத்தன் புரிந்து கொண்டார். மறுபடியும் விலகி கை கூப்பி 'சரி' என்று சொன்னார். தன்னுடைய குடும்பம் நோக்கி நடந்தார்.

இராஜேந்திரசோழர் குதிரை அவருக்கு அருகே கொண்டு வரப்பட்டது. அவர் தாவி ஏறினார். தன் படை வீரர்களுடன் விலகி நின்று கொண்டார். இந்திரதத்தனுடைய குடும்பமும், படையும் அவரை கடந்து போயிற்று. அரசியரும், மற்ற பெண்டிரும், வயதானோரும், மந்திரிமார்களும், அந்தணர் நான்கு பேரும் அவரை கை கூப்பியபடியே கடந்து போனார்கள். சிலர் அவர் எதிரே விழுந்து வணங்கினார்கள்.

இந்திரதத்தனுடைய பாதுகாப்பு படை வேலை உயர்த்தி பிடித்து, தரையில் குத்தி மண்டியிட்டு வணக்கம் சொல்லியது. அந்த வணக்கத்தை ஏற்றுக்கொண்டார். இந்திரதத்தனுடைய படை அவனுக்கு முன் நின்று ஆற்று சரிவில் இறங்கி ஆழம் பார்த்தது. சோழ வீரர்கள் சரியான இடம் சுட்டிக்காட்டினார்கள். அந்தணர்கள் அங்கு காத்துக் கொண்டிருந்தார்கள்.

கோதாவரி நதியில் இடுப்பளவு ஆழத்தில் அரசியரும், அவர் மனைவிமார்களும் இருக்க, சோழப்படை வீரர்கள் ஆற்றில் அவர்கள் அடித்து செல்லாத வண்ணம் வரிசையானார்கள். ஒரு அணைபோல அவர்களுக்கு அருகே நின்றார்கள். நதியை வருகின்ற திசை நோக்கி இந்திரதத்தன் கை கூப்பினார்.

நீர் எடுத்து நீரில் விட்டார். பிறகு மெல்ல குனிந்து முழுக்கு போட்டார். அரசியர்களும் முழுக்கு போட்டார்கள்.

படகுகளிலிருந்து இராஜேந்திர சோழரின் மனைவிமார்கள் கீழ் இறங்க, பரவை முன் செல்ல, வீரமாதேவி பின்தொடர, அவர்களும் ஆற்றில் இறங்கி அந்த ஒட்டதேசத்து அரசியர்களை அணைத்துக் கொண்டார்கள். பெரும் அழுகை சத்தம் அங்கு கேட்டது. இந்திரதத்தன் அழாது மனதை கல்லாக்கிக் கொண்டவர் போல் நின்றார். பல முழுக்குகள் போட்டார். அவரை நோக்கி அந்தணர்கள் வர, அவர் ஈரத்துணியோடு கரை ஏறினார். அவருக்கு மர ஆசனம் போடப்பட்டது.

எதிரே அரைவட்டமாக அந்தணர்கள் உட்கார்ந்தார்கள். மணற்பரப்பில் கோலம் இடப்பட்டு, தர்ப்பைகள் பரப்பி, இறந்தவனின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு அவனை வரவழைத்து தர்ப்பையில் ஆசனம் இட்டு, அட்சதை தெளித்து, நீர் ஊற்றி வந்த சூட்சமமான ஆவியை உபசரித்தார்கள்.

அந்தணருக்கு அருகே வர, ஐந்தாம் நாள் தர்ப்பணமாக சோற்று உருண்டை எள்ளில் கலந்து உருட்டினார்கள். எள்ளில் ஜலம் கொடுத்து நீர் வார்த்தார்கள். தோள் பக்கம் பட்டமகிஷியார் தர்ப்பை பிடிக்க, மற்ற அரசிகள் பட்டமகிஷிகள் தொட்டுக் கொள்ள, சாதமும், நீரும் அந்த தர்ப்பையில் போடப்பட்டன.

தந்தை, தந்தைக்கு தந்தை, மனைவியின் தந்தை, மனைவியின் தந்தைக்கு தந்தை, மூத்தோர் என்றெல்லாம் பிண்டங்கள் ஊற்றப்பட்டன. மிகப்பெரிய பிண்டம் ஒன்று எள் தரித்து இந்திரதத்தனின் மகனுக்காக வைக்கப்பட்டது. எல்லா அரசிகளும் அழுதபடியே அதில் நீர் வார்த்தார்கள். அவரை எழச் சொல்லி, 'உங்களை உங்கள் முன்னோர்கள் ஆசிர்வதிக்கிறார்கள். உங்கள் குலத்தை பெருக்கும்படி உங்களை வேண்டிக் கொள்கிறார்கள். அவர்களை நீங்கள் வணங்குங்கள்' என்று சொல்லப்பட்டது.

அந்த நதிக்கரையில் அரசிகளோடு இந்திரதத்தன் வணங்கினார்.

'என்ன தலையெழுத்து இது.' இராஜேந்திரசோழர் மூச்சு திணறினார். 'என் வருகையால் இந்த குடும்பம் சிதைபட்டு

விட்டது. அந்த ஒட்டதேசத்து அரசிகளின் முகங்கள் களை யாக இருந்தன. நல்ல நேரங்களில் அவர்கள் பேரழகிகளாகவே இருப்பார்கள். சோழ தேசத்து பெண்களை விட அவர்கள் கூடுதல் வெளுப்பாக இருந்தார்கள். இன்னும் பருமனாக இருந் தார்கள். இராஜேந்திர சோழர் முகம் திருப்பிக் கொண்டார்.

மேலே வந்தவர்களுக்கு சோழ தேசத்து அரசிகள் கொண்டு வந்த உணவுகள் பரிமாறப்பட்டன. மலை வாழைப் பழங்கள் உரித்து தரப்பட்டன. சாதத்தில் பால் கலந்தும் உண் டார்கள். கதம்ப கறியோடு சாதத்தை கலந்து சாப்பிட்டரர்கள். நீர் குடித்தார்கள். பிறகு படகுகளில் ஏறி வேங்கிக்குள் நுழை கின்ற கரைகளுக்கு போனார்கள். இராஜேந்திர சோழர் பின் தொடர்ந்தார். அரண்மனை நோக்கி அந்த ஊர்வலம் போயிற்று.

''ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்.'' வீரமாதேவியிடம் தெரிவிக்க, இதை வீரமாதேவி, இந்திரதத்தனிடம் விண்ணப் பிக்க, ''என் பெண்டுகள் போவார்கள். நான் இராஜேந்திர ரோடு பேச விரும்புகின்றேன்.'' என்று தெரிவித்தார். பெண்கள் கூட்டமாக அரண்மனை நோக்கி நகர்ந்தார்கள்.

இராஜேந்திர சோழரும், இந்திரதத்தனும் தனியே ஒரு ஆலமரத்தடியில் ஆசனம் போட்டு அமர்ந்து கொண்டார்கள். பின்பக்கம் விசிறுவதற்கு ஆட்கள் ஏற்பாடாயிற்று. இராஜேந் திர சோழர் அங்கேயே உணவெடுத்துக் கொண்டார். தாம்பூலம் தரித்தார். இந்திரதத்தன் தாம்பூலம் தரிக்க மறுத்து விட்டார். அது சம்பிரதாயம் என்று சொன்னார். அவர்கள் அமைதியாக இருந் தார்கள்.

''தொடர்ந்து நான் வங்க தேசம் போக விரும்புகின்றேன். என் உத்தரவுக்காக அரையன் ராஜராஜன் காத்திருக்கிறார். வங்க தேசத்தை வெற்றி கொள்வது எப்படி. இராஜேந்திர சோழர் கேட்டார்.

''இது விரிவாகச் சொல்லித் தருகிறேன். அதற்கு முன் எனக்கு ஒரு விண்ணப்பம்.''

''சொல்லுங்கள்.''

''நான் வேங்கியில் தங்கியிருக்க விரும்பவில்லை. என் அளவில் இந்த இடமும் ஆபத்தானது.''

''ஆமாம். மேலை சாளுக்கியர் இங்கே நுழைவதற்கு வாய்ப்பு உண்டு. என்னை மீறி எதுவும் நடந்து விடாது. இருந் தாலும் இது அவ்வளவு பாதுகாப்பானதல்ல.''

''நான் தொண்டைதேசம் வழியாக நடு நாடு தாண்டி, சோழ தேசத்திற்கு போக விரும்புகின்றேன். அங்கு ஒரு மாதம் தங்கிவிட்டு, பிறகு பாண்டிய நாட்டு வழியாக சேது சமுத்திர கரைக்கு போக விரும்புகின்றேன். மூன்றாவது மாதம் என் னுடைய மகனின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு அங்கு தான தர்மங்கள் செய்ய விரும்புகின்றேன். அதற்கான பொக் கிஷங்கள் எடுத்து வந்திருக்கிறேன். அந்த பொக்கிஷத்தில் ஒரு பகுதியை உங்களுக்கு கொடுக்க விரும்புகின்றேன்.'' அவர் திரும்பி பார்க்க, ஒரு வீரன் கையில் இருந்த மூட்டை கொண்டு வந்து இராஜேந்திர சோழரின் காலடியில் வைக்கப்பட்டது.

இராஜேந்திர சோழர் திரும்பி பார்க்க, அவருடைய பாது காப்பு படைவீரர் சட்டென்று அந்த மூட்டையை குனிந்து அவிழ்த்தார். உள்ளே தங்க ஆரங்களும், கிண்ணங்களும், சொம்பும், கேயூரங்களும், பெண்கள் அணிந்து கொள்ளும் நகைகளும் இருந்தன.

''என்னுடைய கிரீடத்தை அரையன் ராஜராஜன் வைத்துக் கொண்டிருக்கிறார். இவைகள் என் அன்பளிப்பு.'' இந்திரதத்தன் கைகூப்ப, இராஜேந்திர சோழர் பதில் வணக்கம் சொன்னார்.

''மிக்க நன்றி. இராமேஸ்வரம் போவதற்கு ஏற்பாடு செய்யப்படும். சேதுக்கரையில் நீங்கள் தங்குவதற்கு மாளிகை கள் ஒதுக்கி தரப்படும். வழி நெடுக உங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்.

பதினைந்தாம் நாளைக்கு பிறகு நீங்கள் இங்கிருந்து கிளம்புங்கள். அப்பொழுதுதான் எல்லா தலங்களையும் தரி சித்துக் கொண்டு போக முடியும். திருமலை திருப்பதிக்கு போக வேண்டுமென்றாலும் அதற்கும் ஏற்பாடு செய்கிறேன். முன் கூட்டியே உங்கள் பயண வழியை வகுத்துக் கொள்ளுங்கள். அது எங்களுக்கு உதவி செய்ய ஏதுவாக இருக்கும். உங்க ளுடைய இந்த பணிவு, இந்த அன்பு, இந்த நட்பு என்னை சந்தோஷப்படுத்துகிறது.

ஒட்ட தேசத்தை தாக்க நான் வரவே இல்லை, உங்களின் அரசாட்சியை பறிக்கின்ற எண்ணமும் இல்லை. என்னை அனு மதிக்க வேண்டும் என்று தான் நான் விரும்பினேன். ஆனால் நான் வந்த உடனேயே நீங்கள் போருக்கு தயாராகி விட்டீர்கள். கங்கை கரைக்கு போக வேண்டும் என்பதுதான் என் விருப்பம். ஆனால் தடுக்கப்படுவோம் என்பது தெரியும்.''

''இல்லை ஒரு தவறு நேர்ந்துவிட்டது. கங்கை கரைக்கு போகவேண்டும் என்று சொல்லியிருந்தால் நான் உங்களை வரவேற்றிருப்பேன். ஆனால் மூன்று லட்சம் 'படைவீரர் களோடு வருகிறவரை எப்படி எதிர்கொள்வது என்பதுதான் கேள்வியாக இருந்தது. ஒரு தூதுவரோ, ஒரு ஓலையோ வரவே யில்லை.''

''ஆமாம், தூதுவரையோ, ஓலையோ நான் தரவில்லை. உண்மைதான். ஒரு தேசத்தை நான் தாண்டிச் செல்லும் போது, படைகளோடு போகும்போது அங்கே பேராதரவு கேட்டுக் கொண்டு கடக்க முடியாது. வழி விடு என்றுதான் அதட்ட முடியும். அந்த வழிவிடு என்ற அதட்டல்தான் போர் ஆயிற்று, உங்கள் பிள்ளைக்கு மரணமாயிற்று. உங்கள் தோல்வி யாயிற்று.

இதுதான் வங்க தேசத்திலும் நடைபெறப் போகிறது. நான் வங்கத்திலும் கங்கைக்கு போக வேண்டும் என்றுதான் போகிறேன். ஆனால் அதற்கு முன்பே வம்பு போய் விட்டது. ஜெயசிம்மன் அங்கு படைகளோடு போய்விட்டான். வெகு நிச்சயமாக வங்க தேசத்து மன்னர்களை ஒன்று சேர்த்து என்னை எதிர்ப்பான்.''

''வாய்ப்பிருக்கிறது.''

''ஏன் வாய்ப்பிருக்கிறது என்று சொல்கிறீர்கள். திட்ட வட்டமாக யுத்தம் அங்கு நடைபெறத்தானே வேண்டும்.''

''ஆமாம். இதை நீங்கள் தூதுவனை அனுப்பியோ, ஓலை அனுப்பியோ யுத்தம் இல்லாமல் செய்து பார்க்கலாமே.

''பலிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா.''

''தெரியவில்லை. ஆனால் ஒருவேளை சமாதானம் பேச வங்கத்து அரசர்கள் யாரேனும் முயன்றால் அது நன்றாக

இருக்கும் அல்லவா. அவரை வைத்து மற்ற அரசர்களை நாம் அமைதிபடுத்தலாம் அல்லவா. இப்படி ஒரு எண்ணம் எனக்கு இருக்கிறது என்று நீங்கள் தெரிவிக்கலாம் அல்லவா.''

''இல்லை, நீங்கள் ஜெயசிம்மனை புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள். அப்படி ஒரு ஓலை அனுப்பினால் நான் பயந்து விட்டேன் என்று கொக்கரிப்பான். அவர்களையும் கொக்கரிக்க வைப்பான். அங்கே அமைதி ஏற்படுத்த ஒரு நாளும் அனுமதிக்க மாட்டான். படையெடுத்து வருகிறேன். படையெடுத்து வருகிறேன் என்றே பதற வைப்பான். எனவே, இந்த ஓலை விஷயம் எனக்கு உவப்பானதாக இல்லை.''

''ஆனால் முயற்சிக்க வேண்டும் என்பது என் எண்ணம். பல உயிர் பலிகளை தடுக்கலாமே என்பது என் எண்ணம்.''

''சரி, முயற்சித்து பார்க்கிறேன். வங்கதேசத்து மன்னர்கள் ஒன்றாகி விடுவார்களா.''

''இல்லை. மேம்போக்காக ஒப்புமை இருக்கும். மற்றபடிக்கு அங்கு எப்போதுமே ரகளைதான்.''

''தாயாதிகளா?''

''தாயாதிகளாகவும் இருக்கிறார்கள். தனித்து கிளர்ந்தெழுந்து நாட்டை கைப்பற்றி மூன்று தலைமுறைகளாக ஆட்சி செய்பவர்களாகவும் இருக்கிறார்கள்.''

''வங்க தேசத்தின் பலம் என்ன?''

''கங்கை. கங்கையால் செழிப்படையும் கோதுமை வயல்கள்.''

''பிறகு?''

''கங்கையும், கடலும் கலக்கின்ற முகத்துவாரத்தில் விளையும் சணல். அதை உலர வைத்து, ஊறவைத்து திரிக்கப்படுகின்ற கயிறு, சணல் நூலில் நெய்யப்பட்ட கெட்டியான பாய்மரத் துணிகள். கெட்டியான மூங்கில்கள் நாணல்கள். மெல்லிய பிரம்புகள். இவை அனைத்தும் மரக்கலத் தொழிலோடு சம்பந்தப்பட்டவை. மரக்கலங்களோடு நெருங்கிய உறவு உள்ளவை.

மரக்கலங்களுக்குள்ளே உறுதியான வீடுகள் அமைத்துக் கொள்ள இந்த மூங்கில்கள் உதவும். ஒருவேளை மரக்கலன்கள் கவிழ்ந்து போனால் இவைகளை படகாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். கூரையில் மெல்லிய பிரம்புகளாலும், பாய் களாலும் வேய்ந்து சுவராக உருளையான மூங்கில்களை பயன்படுத்தி மூங்கில் ஆசனங்களும், தொங்கு கூடைகளும், தூளிகளும் செய்து கொள்வார்கள். சணல் நூலினால் செய்யப் பட்ட தூளிகள் உறுதியாக இருக்கும். பல நாட்கள் தாங்கும்.

அங்குள்ள பெரிய தேவதாரு மரங்கள் அறுத்து மரக்கலன் களின் அடிபாகங்கள் செய்ய பயன்படுகின்றன. ஒரு சில பிசின் களால் இடுக்குகள் மூடப்படுகின்றன. எனவே, சீன தேசத்து நாவாய்கள் அங்கு அதிகம் வருகின்றன. சீனர்கள் காசை வாரி இறைக்கிறார்கள். அந்த வியாபாரம் அரசாங்கத்தை நடத்த பெரிதும் உதவுகிறது.

சணல் வேலை தெரிந்த ஜனங்கள், மூங்கில் வேலை தெரிந்த ஜனங்கள் என்று அவர்கள் இரண்டாக பிரிந்திருக் கிறார்கள். அந்த இரண்டு பேரையும் ஒவ்வொரு வங்க தேசமும் தன்னுள் சிறப்பாகக் கொண்டிருக்கிறது. கங்கையை முழுவதுமாக அனுபவிக்கிறது.

பனிக்காலங்கள் தான் அங்கு கடினமே தவிர, மற்ற நேரங் கள் சுகமாக இருக்கும். வெளியே தலை காட்டாதபடி குளிர் இருக்கும் என்பதால் பனி காலத்திற்கான உணவுகளை, தானி யங்களை அவர்கள் சேகரித்து வைத்துக் கொள்வார்கள். அவர் களுடைய பெரும் சொத்து இந்த தானியங்கள்தான். இந்த தானியங்கள் கொள்ளையடிக்கப்பட்டு விட்டால் அந்த தேசம் நிலைகுலைந்து விடும். அவர்கள் பரஸ்பரம் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டது இந்த தானியங்களுக்காக இந்த தானியங்களை கொள்ளையடித்து மற்ற தேசத்தை வாட விடு வதற்காக, இதுதான் வங்கம்.

வங்கதேசத்து மக்கள் சுகவாசிகள். சோம்பேறிகள். வங்க தேசத்தில் பெண்கள்தான் அதிகம் வேலை செய்வார்கள். உழுது பயிரிடுவது தவிர, மூங்கில் வேலை செய்வதும், சணல் வேலை செய்வதும், பாய்மரத்துணி நெய்வதும் அவர்களே.

அங்குள்ள தறிகள் காலால் இயக்கப்படாது கைகளாலேயே இயக்கப்படுகின்றன. மிக நெருக்கமான துணிகள் தயாராகின் றன. ஒட்ட தேசத்திலிருந்து தான் துணிகள் அங்கு போகும். அங்குள்ள கோதுமையும், பிரம்புகளும் இங்கு வரும். மூங்கில் கள் அதிகம் இருப்பதால், பிரம்புகள் இருப்பதால் வில்லும், அம்புமே அங்கு முக்கியமான ஆயுதங்களாக இருக்கிறது. ஆனால் அதை அவர்கள் சரிவர பயன்படுத்துவதில்லை.

சேர தேசத்து நம்பூதிரிகள் போல மிகத் துல்லியமான அம்பு எய்தல் இல்லை. பல வங்க தேசத்து அரசர்கள் சேர நம்பூதிரிகளை வரவழைத்து பயிற்சி கொடுத்தும் சுமாரான அளவில்தான் அந்த படைகள் இருக்கின்றன.

எதிர்ப்பு என்பது மறைந்திருந்து தாக்குவதாகவே அங்கு இருக்கும். வேறு என்ன கேள்வி.''

இந்திரதத்தன் வினவினார்.

''நான் கிடுக்கி தாக்குதல் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன்.''

''கிடுக்கி தாக்குதலா. இன்னும் மேற்கே போய் வளைந்து வந்து தாக்குவீர்களா. தேவையற்ற வேலை. ஒரே கோடு கிழித் தது போல போய் விடலாம்.''

''இல்லை. மேற்கிருந்து தாக்கப் போவதில்லை. கிழக் கிலிருந்து.''

''கிழக்கே கடல் இருக்கிறதே.''

''ஆமாம். அந்த கடல் பக்கத்திலிருந்து.''

''கடல் பக்கம் போவதற்கு உங்களிடம் நாவாய்கள் இல்லையே.''

''சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.''

''எங்கிருந்து?''

''ஒட்ட தேசத்திலிருந்து.''

''இந்த இடங்களில் நாவாய்கள் கிடைக்கும். ஆனால் எத்தனை வீரர்களை ஏற்றிக்கொண்டு போக முடியும்.

அதிகபட்சம் அடைத்துக் கொண்டு போனால் ஒரு நாவாயில் நூறு பேர் போகலாம். அந்த மாதிரி நாவாய்கள்தான் ஒட்டதேசத்தில் அதிகம்.''

''சீன வணிகர்கள் வருவதாகச் சொல்கிறீர்களே.''

''ஆமாம்.''

''கடற்கொள்ளைக்காரர்கள் இருப்பதாக கேள்விப்படு கிறனே.''

''உண்டு.''

''ஒட்ட தேசத்து நாவாய்களை விலைக்கு வாங்கி அவை களின் மூலம் கடற்கொள்ளையர்களின் நாவாய்களையும், சீன தேசத்து நாவாய்களையும் கைப்பற்றி ஒரு பெரிய படையோடு வங்கதேசத்தில் போய் இறங்க முடியாதா.''

விழி விரிய இந்திரதத்தன் பார்த்தார்.

''இப்படி ஒரு எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது. நீங்கள் அறிவாளி என்பதை அறிவேன். மிகப்பெரிய வீரர் என்பது தெரியும். ஆனால் எனக்கு இதுவரை தோன்றியதே இல்லையே. வங்க தேசத்திலிருந்து தொந்தரவு வந்த போதெல்லாம் நான் வளைத்து தாக்கியதேயில்லையே. நேரடியாக அல்லவா முரண் டிருக்கிறேன். இது அருமையான யோசனையாக இருக்கிறது.'' இந்திரதத்தன் யோசித்தார்.

''ஆனால் இதில் ஒரு பிழை இருக்கிறது.''

''என்ன பிழை?''

''இராஜேந்திரரே சீன தேசத்து நாவாய் ஒன்றை கொள்ளை யடித்து விட்டால் போதும். அந்த தகவல் சீன தேசத்திற்கு தெரிந்துவிட்டால் போதும். சீனர்கள் சோழர்களுக்கு எதிராகச் செயல்படுவார்கள். உங்களோடு நல்ல உறவு இருக்கிறதென் றும், மிகப் பெரிய வாணிபம் ஸ்ரீ விஜயத்தில் நடக்கிறதென்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அதெல்லாம் பழம் கதை.''

''ஏன்? சீனர்களோடு பகையா. நல்ல வியாபாரிகளா யிற்றே.''

‘‘இல்லை ஸ்ரீ விஜயத்தினுடைய புத்த பிட்சுகள் சில்மிஷம் செய்கிறார்கள்.’’

‘‘அடடா. அந்த தொந்தரவு சோழ தேசத்திற்கும் வந்து விட்டதா.’’ இந்திரதத்தர் திகைப்போடு கேட்டார். இராஜேந்திரர் ‘ஆம்’ என்று தலையசைத்தார்.

தொலைவிலே சோழக் கொடியோடு மூன்று வீரர்கள் வருவது தெரிந்தது. இராஜேந்திர சோழர் எழுந்தார். அவர் எழ, ஒட்டதேசத்து அரசர் இந்திரதத்தனும் எழுந்தார். இராஜேந்திர சோழர் இந்திரதத்தனை அணைத்துக் கொண்டார்.

★ ★ ★

அத்யாயம்

73

''எங்கே மாணிக்க வாசகம்?'' கொஞ்சம் பரபரப்புடனும், கோபத்துடனும் இராஜேந்திர சோழர் வினவினார். சலசலத்துக் கொண்டிருந்த அரண்மனை சட்டென்று அமைதியாயிற்று.

ஓலை நாயகம் போன்ற அதிகாரிகள் சபையில் நிறைந் திருந்தார்கள். ஓலைநாயகம் நிதானமாக எழுந்து, ''தெரிய வில்லை மன்னா'' என்று ஆரம்பித்தார்.

''அற்புதம். இந்த பதிலுக்காகத்தான் காத்துக் கொண டிருந்தேன். இந்த பதிலைத்தான் நீங்கள் சொல்வீர்கள் என்று தெரிந்திருந்தேன். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே குரலாய் இதே பதிலை சொல்லுங்கள். 'தெரியவில்லை மன்னா' சொல்லுங்கள்.''

மிகப் பெரிய கடுப்பில் இருக்கிறார் என்று தெரிந்தது. சபை அச்சம் கொண்டது.

''மன்னா,'' தொலைவிலிருந்து உபதளபதி எழுந்தார்.

''அவர் கடல் மீது போயிருக்கிறார்.''

''யாரை கேட்டுக் கொண்டு.''

''அவர் யாரிடமும் எந்த உத்தரவும் பெறுவதேயில்லை மன்னா. அவர் சுயேச்சையாக திரிகிறார். என்ன பயணம் என்று கேட்டால் 'ம் பயணம்' என்கிறார். அவரை அடக்க எங்களால் இயலவில்லை.''

''ஆக, நல்ல ஒரு ஊழியனை குறைசொல்ல உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.''

''அப்படியில்லை மன்னா. ஒவ்வொரு அசைவும் எங்க ளுக்கு தெரியவேண்டும் என்று நான் அவரிடம் சொன்னபோது,

'இந்த விதி எனக்கு உட்படாது, வேறு எவருக்கேனும் இருக்கும். என்னை உன் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளாதே' என்று தீர்மானமாக சொல்லிவிட்டார்.''

''இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை. சோழ தேசத்து படையில் உள்ளவர்கள் சோழ மன்னருக்கு தெரியாது, அதிகாரிகளுக்கு தெரியாது எப்படி இயங்க முடியும். அப்படியானால் நமது நிர்வாகம் எவ்வளவு பலமாக இருக்கிறது அல்லது இல்லை.'' யாரோ அறை வாங்கப் போகிறார்கள் என்று தெளிவாகத் தெரிந்து விட்டது. சூடு ஏறிக் கொண்டே இருந்தது.

''மன்னரே, உங்களிடம் அவர் நெருக்கமாக இருக்கிறார்.''

''வெகு அற்புதம். வெகு அற்புதம். சோழ தேசத்தில் சோழ மன்னரின் மனைவியை கூட ஒற்றறிவதும் அவர் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்று தெரிந்து கொள்வதும் சோழ தேசத்தின் இயல்பு, இதை என்னுடைய ஆட்சியிலும், முந்தைய ஆட்சியிலும், அதற்கு முந்தைய ஆட்சியிலும் அற்புதமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த கீழைச் சாளுக்கியம் வந்த பிறகு உங்களுக்கெல்லாம் மதமதப்பு வந்துவிட்டது. கொழுத்த பெண்களலல்லவா. இரவு மங்கத் தொடங்கிய உடனே, உங்களுக்கு பாட்டும், ஆட்டமும், போகமும் தேவைப்படுகிறது. பொது மகளிர் அதிகம் இருக்கும் தேசமல்லவா. பொழுதுபோக்க ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கின்றன.

என்னவெல்லாம் தெரியவில்லை. யாரெல்லாம் எங்கு போயிருக்கிறார்கள் என்று அறியமுடியவில்லை, என்று ஒரு பட்டியல் தருகிறீர்களா.''

''இல்லை மன்னரே, எல்லாவித போர்வீரர்களுடைய அசைவையும் நாங்கள் அறிவோம். ஆனால் மாணிக்கவாசகத்தை எங்களால் அடக்க முடியவில்லை. சிறிது கைகலப்பு கூட ஏற்பட்டது. உடன் வருவதற்கு படகில் ஏறியபோது அந்த சோழ வீரர்களை அவர் முறைத்து பார்த்தார். 'நீங்கள் எங்கே போகிறீர்களோ அங்கு வருகிறோம்' என்று அவர்கள் சிரித்தபடி சொன்னார்கள். அவர்கள் அருகே போய் படகு நல்ல ஆழத்திற்கு போன பிறகு இரண்டு பேரையும் முகத்தில் குத்தி தூக்கி வீசிப் போட்டார். அந்த வீரர்கள் தத்தளித்து வந்து சேர்ந்தார்கள்.

ஆனால் மறுபடி வந்து, 'நான் போகும் இடமெல்லாம் உங்களை அழைத்து போக முடியாது. இன்னொரு முறை இப்படி கேட்கா தீர்கள்.' என்று சொன்னார். அந்த வீரர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அதனால் இது உங்கள் வரை வரவில்லை.''

''இராஜராஜ நரேந்திரா, நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய். கடற்கரைப் பக்கம் நீ எப்பொழுதாவது போயிருக்கிறாயா. அல்லது வேங்கி தேசத்தின் உள்ளுக்குள்ளேயே வட்டமடித்துக் கொண்டிருக்கிறாயா. வேங்கியில் சோழ வீரர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று உனக்கு தெரியுமா. அல்லது கீழைசாளுக்கியத்து வீரர்களை மட்டும் கவனித்து வருகிறாயா. சோழ வீரர்கள் உன்னுடைய வீரர்கள். அவர்களைப் பற்றி அறி கின்ற உரிமை உனக்கு உண்டு. மாணிக்கவாசகம் என்பவன் ஒரு சோழவீரன். நமக்கு கட்டுப்பட்டவன். உடனடியாகப் போய் அவன் எங்கிருந்தாலும் அழைத்து வர வேண்டியது உன் பொறுப்பு. அவன் கடலுக்கு போனானா, நீயும் போ. போய் தேடு. பரந்த கடலில் எங்கிருக்கிறான் என்று போய் தேடி உடனே இழுத்து வா. நான் மிகுந்த கோபத்தில் இருக்கிறேன் என்று சொல். ஒரு உபதளபதியை, ஒரு சேனாதிபதியை அனுப்பினால் அவன் எகிறினாலும் எகிறுவான். இராஜநரேந் திரா நீ இந்த தேசத்தினுடைய மன்னன். நீ இங்கு முடிசூடப் பட வேண்டியவன். எனவே, உன்னை மீறி இங்கு ஒரு விஷ யமும் நடக்கக்கூடாது. எவ்வளவு விரைவில் அவன் வர வேண்டுமோ வர வேண்டும். மீறினால் மாணிக்க வாசகத்தை கைது செய். கசையால் அடி. நம்மோடு நட்பாக இல்லாதவன், நமக்கு எதிரியானவன். எதிரியை அருகில் வைத்துக் கொள்ள முடியாது.''

''மன்னா. பிரச்சனை என்ன?'' ஓலைநாயகம் கேட்டார். மன்னர் பதில் சொல்லாது அரண்மனை வாசலையே பார்த்துக் கொண்டார்.

''பிரச்சனை என்ன?'' இராஜேந்திர சோழரும் உரத்த குரலில் கேட்டார்.

''அடுத்த பிரச்சனை வங்கத்தை நோக்கி நகருவது. இதை நான் பறையறிவிக்க வேண்டுமா. உங்களுக்கு தெரியாதா.

அடுத்த பிரச்சனை வங்கத்தை நோக்கி நகருவது என்றால் எப்பொழுது நகருவது. எத்தனைபேர் நகருவது. உங்களில் யார் சிந்தித்திருக்கிறீர்கள். அல்லது மன்னர் சிந்திக்கட்டும் என்று மல்லாந்து விட்டீர்களா.''

''இல்லை மன்னா. நாங்கள் உள்ளுக்குள் பேசி சில திட்டங்கள் வைத்திருக்கிறோம்.'' இன்னொரு உபதளபதி எழுந்தார்.

''ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல். நேற்று இரவு மது அருந்தினாயா உல்லாசமாய் இருந்தாயா.'' அந்த உபதளபதி தடுமாறினான்.

''ஆமாம்.''

''அப்படியானால் உன்னால் உண்மையான பதில் சொல்ல முடியாது. மன்னர் எதிரே சமாளிக்க வேண்டும் என்பதற்காக, ஏதோ ஒரு பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக கூடிப் பேசியது போல் நடித்திருப்பீர்கள். உண்மையான ஊக்கம் இருந்தால் அது வெளிப்பட்டிருக்கும். இப்படி ஒரு திட்டம் இருக்கிறது என்று என்னிடம் சொல்லியிருப்பீர்கள். இதை அருண்மொழிபட்டனோ, அரையன் ராஜராஜனோ, மற்றுமுள்ள இறந்துபோன தளபதிகளோ மிகச் செம்மையாய் செய்திருப்பார்கள். உங்களுக்கு போதவில்லை.'' உபதளபதிகள் அசையாது இருந்தார்கள். ''வடக்கே படையெடுப்பது பற்றி யாரிடம் ஆலோசிப்பது. யோசித்திருக்கிறீர்களா.'' சபை மௌனமாக இருந்தது.

''பதில் சொல்லுங்களய்யா. யோசித்திருக்கிறீர்களா.''

''நான் ஒட்ட தேசத்து சேனாதிபதிகளோடு பேசினேன்.''

''அடேய் யாரது'' பேசிய இன்னொரு உபதளபதி முன் வந்தான். விழுந்து வணங்கினான்.

''இந்த பேச்சு எனக்கு பிடித்திருக்கிறது. என்ன பேசினாய் ஒட்டதேசத்து சேனாதிபதிகளிடம்.''

''வங்கம் போயிருக்கிறாயா. வங்கம் எப்படி இருக்கும் என்று கேள்வி கேட்டேன். அவன் போயிருப்பதாகவும், அடர்ந்த கானகங்கள் தாண்ட வேண்டும் என்றும், மழை நாள் வருகிறது என்றும், மழை நாளில் காட்டு வழி சேறாக இருக்கும்

என்றும், இடையிடையே சிற்றாறுகள் பெரு வெள்ளத்துடன் குறுக்கிடும் என்றும், குதிரையும், தேரும் இறங்க முடியாது என்றும், யானையின் மீதும், பாலம் அமைத்து காலாட்படை களும் நடக்க முடியும் என்றும் சொன்னார்.''

''நல்ல விஷயம், அப்பொழுது படையெடுப்பு எப்படி இருக்க வேண்டும். எப்போதிருக்க வேண்டும்.''

''இப்பொழுதே இன்றோ, நாளையோ.''

''என்ன முட்டாள்தனமான பதில். இன்றோ, நாளையோ படையெடுப்பு இருக்க வேண்டும் என்று நினைத்த உபதளபதி ஓரமாக உட்கார்ந்திருக்கிறார். கேள்வி கேட்டவுடன் இந்த பதிலை சொல்கிறார். உன்னை உபதளபதி பதவியிலிருந்து நீக்கி தெருவில் காவல் காப்பவனாக வைக்கப் போகிறேன்.''

உபதளபதி வாய் பொத்திக் கொண்டான். பிறகு தலை குனிந்து கொண்டான்.

''இது அரைவேக்காட்டுத்தனம். இப்படி ஒரு எண்ணம் வந்தவுடன் இதைப் பற்றி ஒட்டு மொத்தமாக பேசி என்னிடம் வந்திருக்க வேண்டும். கீழைச் சாளுக்கியம் உல்லாசத்திற்கான தேசம் என்று நீங்கள் தீர்மானித்து விட்டீர்கள்.

இப்பொழுது சொல்லுங்கள். ஒட்டதேசத்து தளபதியை தவிர, வேறு யாரை நாம் ஆலோசித்து கேள்வி கேட்டு வழி யறிய வேண்டும்.''

''கடலோடிகளை கேட்கலாம்.'' ஒருவர் பதில் சொன்னார்.

''எப்பொழுது கேட்பீர்கள். நான் உத்தரவிட்ட பிறகா.'' சபை மௌனமாக இருந்தது.

''வங்க தேசம் போகாமல் திரும்பி விடலாமா என்று பார்க்கிறேன். எல்லோருக்கும் சோழ தேசத்து வீடுகள் ஞாபகம் வந்துவிட்டது. மீன் சுருட்டியை தாண்டி ஊருக்கு போய் அவ ரவர்க்கு என்ன வீடு என்று பார்க்கின்ற ஆசை வந்துவிட்டது. குடந்தையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் குடிபெயர்ந்து எப்பொழுது கோட்டைக்குள் வரலாம் என்ற ஏக்கம் வந்து விட்டது. எனக்கு உங்கள் பதில், நடவடிக்கை திருப்தி அளிக்க

வில்லை. வலுவற்ற ஒரு படையை நான் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறேனோ என்று பயமாக இருக்கிறது.''

என்ன பேசினாலும் இராஜேந்திரர் கடிப்பார் என்பது உறுதி யாகிவிட்டது.

''இல்லை மன்னா. அப்படியில்லை. நான் ஒரு பூசாரி யையும் விசாரித்தேன்.''

''பூசாரியை எதற்கு விசாரிப்பது?''

''வங்க தேசத்தில் படையெடுப்பதற்கு.''

''அடேய். குறி பார்த்தீரா. சோழி உருட்டி... ஆத்தா பதில் சொல் ஆத்தா'' என்று சபை சிரித்தது.

''இல்லை. அந்த பூசாரிக்கு பருவ நிலைகள் பற்றி தெரிந் திருக்கின்றன.''

''நன்று. அழகாக இருக்கிறது பேச்சு.''

''அவன் எறும்புகள் போவதை வைத்துக்கொண்டு, பூக்கள் மலர்வதை வைத்துக் கொண்டு, பறவைகள் அசை வதை கண்டு, மிருகங்கள் நகர்வதை கொண்டு மழை எப்பொழுது வரும், எப்படி இருக்கும் என்று தெரிந்தவனாம்.

இதை எனக்கு ஒட்ட தேசத்து அந்தணர் சொன்னார். அவரே அந்த காளி கோயில் பூசாரியை அந்தணர் அல்லாத ஒரு பூசகரைச் சொன்னார். நான் அவரை அழைத்துக் கொண்டு போனேன். அவர் இந்த முறை மழை தள்ளி வரும் என்று சொன்னார்.''

''எந்த மழை?''

''வடகிழக்கு மழை. மன்னா. வடக்கிழக்கு மழை தென் மேற்கு மழையை விட குரூரமானது. மிக வேகமாக தாக்கக் கூடியது. காடுகளில், மலைச்சரிவுகளில் மிக வேகமாக மழை பெய்ய ஆரம்பித்தால் படை முன்னேற முடியாது. எனவே, வேகமாக முடிக்கவேண்டும். முன்னேறுவதற்கு உண்டான ஆயத்தங்கள் செய்ய வேண்டும்.''

''என்ன மாதிரி ஆயத்தங்கள்.'' மன்னர் வினவினார்.

''மரப்பலகைகள்.''

''புரியவில்லை.''

''காடுகளில் சேறு இருக்கும்போது அதை கடந்துபோக நான்கு மரப்பலகைகள் கொண்ட ஒரு பாதையை அமைக்க வேண்டும். எங்கெல்லாம் சேறு இருக்கிறதோ, எங்கெல்லாம் சறுக்கல் இருக்கிறதோ அங்கெல்லாம் மரத்தின் மீது கால் வைத்து தேரும், குதிரையும், யானையும் போக வேண்டும். ஆனால், மழை தாமதமாக வரும்.''

''எப்பொழுது?''

''இன்னும் ஐப்பசியே ஆரம்பிக்கவில்லை. புரட்டாசியின் பிற்பகுதியில் இருக்கிறோம். லேசாக குளிர் வந்துவிட்டது. போர்த்திக் கொண்டுதான் இரவு அலைய வேண்டியிருக் கிறது. போர்வையை தாண்டியும் காற்று ஊடுருவுகிறது. இந்த குளிர் குறைந்தால்தான் கொஞ்சம் வெப்பம் ஏற்பட்டால்தான் மழை வரும். குளிர் அதிகரித்துக் கொண்டே போகிறதே தவிர வெப்பம் வரவில்லை. எந்த நேரமும் வானம் மந்தகாசமாக இருக்கிறது. எந்த நேரமும் பறவைகள் பாடிக்கொண்டே இருக்கின்றன. நூல் பிடித்து அவர் காட்டிய போது தென்மேற்கு பருவகாற்றுதான் நூலை அசைத்துக் கொண்டிருந்ததே தவிர, வடக்கிலிருந்து காற்று வரவில்லை. தென்மேற்கு காற்றே முடியவில்லையே. பிறகு சற்று வெளிற வேண்டும். அதற்குப் பிறகுதான் வடகிழக்கு காற்று மெல்ல மெல்ல ஆரம்பிக்கும். புரட்டாசி இறுதிவரை தென்மேற்கு காற்று இருந்தால் எப்படி மழை வரும் என்று கேட்டார்.''

''பிறகு?''

''அது தவிர, நட்சத்திரங்களை கவனித்தபோது அவை கள் பிரகாசமாக இருக்கின்றன. வடக்கே உள்ள நட்சத்திரங் களில் மாற்றம் தெரியவில்லை. புரட்டாசி வந்த பிறகும் சந்திரனில் கோட்டை கட்டவில்லை. மாலைநேரம் மேக மூட்டமாக இருந்தாலும் பிற்பகலில் தானியங்கள் உலர்த்திக் கொள்ளும் அளவிற்கு வெய்யில் இருக்கிறது. இந்த வெய்யில் போதாது. வயல்களில் உள்ள மண் வெடிக்கும் அளவுக்கு வெய்யில் இருப்பின் மேகங்கள் சீறி வரும். வெப்பம் மிகுந்த இடத்தில்தான் காற்று மேகங்களை கொண்டு வந்து சேர்க்கும்.

ஈரப்பதம் உள்ள காற்று இருக்கும் வரை மேகங்கள் அருகே வராது.

காலையில் தாழம்பூவிலும், கற்றாழையிலும் கடும் நீர் பொழிவு இருக்கிறது. முத்துக்கள் கோர்த்துக் கொண்டிருக் கின்றன. எனவே, மழை வராது என்று சொல்கிறார்.''

''எனக்கு இந்த செய்தி பிடித்திருக்கிறது. மழை தாமதம் என்பதால் நாமும் தாமதித்து போகலாம். மரப்பலகை விஷயம் புரிகிறது. ஆனால், தர்மபாலனை தாக்க, தண்டபுத்தியை தாக்க இந்த யோசனைகள் போதுமா.''

''உளவு சொல்ல ஆட்களை அனுப்பியிருக்கிறோம். அவர்கள் திரும்பவில்லை.''

''ஏன்?''

''அங்கு யுத்தங்கள் பற்றி தகவல்கள் சேகரிக்காமல் போய் இருக்கலாம். கட்டுகாவல் பலமாக இருக்கலாம். வழியில் முன்னேற முடியாமல் போயிருக்கலாம். அதற்கு காரணம் இருக்கிறது.''

''என்ன?''

ஜெயசிம்மன் வடக்கே போகவில்லை. மேற்கே அவன் சாளுக்கிய தேசம் திரும்பிவிட்டான். அவன் உத்தரவின் பேரில் அவன் தளபதி கங்கே யாதவ் வடக்கே நகர்ந்து விட்டான். இப்போது கங்கே யாதவ் தர்மபாலன் இடத்தில் உட்கார்ந்திருக் கிறான். எனவே கங்கே யாதவின் ஆட்கள் தண்டபுத்தி தர்ம பாலனின் ஆட்களை தூண்டி நகருக்கு வெளியே ஒட்ட தேசத் திற்கு ஊடுருவி வரும் காடுகளுக்கிடையே அமர்ந்து காவல் காத்துக் கொண்டிருப்பார்கள்.

ஒற்றர்கள் வராததற்கு இதுதான் காரணம். வெறும் கையோடு அவர்கள் வருவதற்கு விரும்புவதில்லை.''

''இதுவும் புரிகிறது. ஒட்டதேசம் தாண்டி கங்கை கரை வரை நமது அந்தணர்கள் போய் விட்டதாக அறிகிறோமே. அவர்களிடமிருந்து எந்த செய்தியும் வரவில்லையா.''

''அவர்கள் புரட்டாசி முடிய இரண்டுபேர் வருவார்கள் என்று சொல்லிவிட்டு போனார்கள். குறிப்பிட்ட நாளில்

அவர்கள் வருவார்கள். அவர்கள் வருவதற்கு இன்னும் ஏழெட்டு நாட்கள் இருக்கின்றன.''

''போதவில்லை. எனக்கு போதவில்லை. வெகு மெத்தன மாக இருக்கிறோம் என்று எனக்கு படுகிறது. அடிபடப் போகி றோம் என்ற அச்சம் வருகிறது. வேறு ஏதாவது செய்தாக வேண்டும். ஓய் ஓலைநாயகம் பேசுமய்யா.''

''பேச்சுக்கு மன்னித்து விடுங்கள். நாம் ஒட்ட தேசத்து அரசன் இந்திரதத்தனை வேங்கியிலிருந்து தெற்கு நோக்கி அனுப்பியிருப்பது தவறோ என்று தோன்றுகிறது.''

''ஏன்?''

''அவரிடம் இன்னும் பேசி, இந்த படையெடுப்பில் அவரை யும் கலந்து கொள்ளச் செய்யலாமோ என்ற எண்ணம் எனக்கு இருந்தது.''

''அவர் சரணாகதியாக வந்தவர். அவரை போருக்கு அழைத்துப் போவது என்பது கழுவேற்றுவதற்கு சமமானது. சரணடைந்தவனை கழுவேற்றுதல் சோழ மரபு அல்ல. வேங்கி தேசத்தில் உள்ள மேலை சாளுக்கிய ஒற்றர்களே அவரை தீர்த்து கட்டி விடுவார்கள். அதுவும் தவிர அவர் போராடும் மனநிலை யில் இல்லை. மன்னனாக இருப்பதே தவறு என்ற எண்ணத் தில் இருக்கிறார். அவர் அரசிகள் நொய்ந்து விட்டார்கள். அந்த கூட்டத்தை தொண்டை நாட்டை நோக்கி அனுப்பியதுதான் சரி. தொண்டை நாட்டு புலவர்களும், மக்களும் அவரை ஆசு வாசப்படுத்துவார்கள். அந்த தேசத்தின் செழுமையும், கோயில் களும் அவரை குதூகலப்படுத்தும். தொண்டை தேசத்தி லிருந்து நடுநாடும், நடுநாட்டிலிருந்து சோழதேசம் வரை போகும்போது அவர் தன்னையே மறந்து சந்தோஷிப்பார். வெறும் காடுகளாகவே இருந்த இந்த ஒட்டதேசத்தை தாண்டி வயல்வெளிகளாக இருக்கின்ற நம்முடைய தேசத்தை பார்க்க பார்க்க ஆனந்தம் கொள்வார்.

நான் அழைக்க விரும்பவில்லை. வேறு ஏதாவது பேசும்.''

''மன்னர் மன்னரே, இந்திரதத்தனின் படைவீரர்களில் இரண்டு உபதளபதிகள் உட்பட ஆறு பேரை நான் கைது செய்து வைத்திருக்கிறேன்.'' ஒரு தளபதி பேசினான்.

''என்ன காரணம்?''

''குடிபோதையில் அவர்கள் அதிகம் பேசினார்கள்.''

''பேசிவிட்டு போகட்டுமே.''

''இல்லை, சோழ தேசத்திடம் தோற்றதின் காரணமாக வங்க தேசத்திற்கு ஆதரவாக பேசினார்கள். உங்கள் ஆட்டங்களெல்லாம் வங்க தேசத்தில் செல்லுபடியாகாது என்கிறான்.''

''ஏனாம்.''

''வங்க தேசத்து அரசர்கள் பிரிந்திருந்தார்களாம்.''

''தெரிந்த கதைதானே.''

''அவர்கள் ஒன்றாக சேர ஆரம்பித்துவிட்டார்களாம். வங்க தேசத்து படையெடுப்பு என்பது தண்டபுத்தியிலேயே தடுத்து நிறுத்தப்படுமாம். வடக்கே இருக்கின்ற தட்சிணலாடமும், அதற்கு அப்பால் இருக்கின்ற உத்ரலாடமும் ஒன்று சேர்ந்து ஒட்டதேசத்தின் ஊடே பாய்ந்து வரும் என்று சொன்னான்.''

''அவனுக்கு எப்படி தெரிந்தது.''

''குழுமியிருந்த கங்கே யாதவின் வீரர்கள், நீங்கள் தோற்றுப் போனால் என்ன முடிந்து விடுமா. சோழனை சோழ தேசத்திற்கு விரட்டி அடிக்க கங்கே யாதவ் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார் என்று இதை சொன்னார்களாம். அப்பொழுது ஒட்டதேசத்து வீரர்கள் சந்தோஷமானார்களாம். பொதுமக்கள் ஆதரித்தார்களாம்.''

''புரிகிறது. அந்த வங்கதேசம் ஒற்றுமையாகிவிடுமா. தண்டபுத்தி தர்மபாலன். அதற்கு பிறகு உள்ள ரணசூரன், அதைத் தாண்டி உள்ள கோவிந்த சந்திரன் இவர்கள் எல்லோர் மீதும் ஆதிக்கம் செலுத்தி தன்னை சக்ரவர்த்தி என்று அழைத்துக் கொள்கின்ற மஹிபாலன் நால்வரும் ஒன்று சேர்ந்து விடுவார்களா. அவர்கள் தாயாதிகளல்லவா. பகை மறந்து சோழ தேசத்தை எதிர்க்கின்ற வாய்ப்பிருக்கிறதா.''

''இப்போதைக்கு இல்லை. ஆனால் அந்த வாய்ப்பை கங்கே யாதவ் செய்வான் என்று அந்த உபதளபதிகள் சொல்கிறார்கள். அப்படி ஒரு விஷயம் நடந்தால் சோழப்படை மிகுந்த

சேதத்திற்கு உள்ளாகும் என்று சொன்னார்கள். கோட்டை வரை இந்திரதத்தனுடன் சென்றவர்களை மடக்கி சிறைச்சாலையில் வைத்திருக்கிறேன். நீங்கள் சொன்னால் அழைத்து வருகிறேன்.''

''தேவையில்லை. நீயே விசாரித்துக்கொள். அவசியமான தகவலை தெரிவி. தங்களுக்குள் மிக வேகமாக சண்டை யிட்டுக் கொண்ட தாயாதிகள் இவர்கள். பெண் கொடுத்து பெண் வாங்குவது கூட இல்லை, கடும் வெறுப்பு பரஸ்பரம் இருக்கிறது. எல்லை தாண்டி சண்டையிடுவது என்பது வருடந் தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவர்கள் எல்லோ ரையும் விட வலுவானவனாக மஹிபாலன் இருக்கிறான். அவன் இவர்களை அதட்டி மிரட்டி வைத்திருக்கிறான். அவன் மிரட் டலை எதிர்க்க முடியாமல் இவர்களுக்குள் பரஸ்பரம் அடித்துக் கொள்கிறார்கள். இவர்கள் ஒன்று சேர்ந்தால் மஹிபாலனைத் தான் தாக்குவார்களே தவிர, ஒட்டதேசத்திற்கு வர மாட்டார் கள். இது என் கணிப்பு சரியா.'' மன்னரின் கேள்வியை தளபதி மறுத்தார்.

''தவறு மஹிபாலன் கீழிறங்கி வந்துவிட்டால் ஒன்று சேர்ந்து விடுவார்கள். மஹிபாலன் செய்ததற்கெல்லாம் மன்னிப்பு கேட்டுக் கொண்டால் இவர்கள் ஒற்றுமையாவதற்கு வாய்ப்பிருக்கிறது. மஹிபாலனை மன்னிக்க மாட்டோம் என்று சொன்னால் கங்கே யாதவ் வேறு ஏதாவது செய்து அவர்கள் மனதை மாற்றுவான்.

''வேறு ஏதாவது செய்து என்னது அது வேறு ஏதாவது.'' மன்னர் விரல்களை ஆட்டி பேசினார்.

கூட்டம் அமைதியாய் யோசித்தது. இராஜேந்திர சோழ ருக்கு சந்தோஷமாக இருந்தது.

இது அறிவார்ந்த கூட்டம். கொஞ்சம் சோம்பியிருக்கிறார் கள். வேலையின் பளுவை எடுத்துக் காட்டியதும் மடமட வென்று பேசுகிறார்கள். பல முயற்சிகளை செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் இவர்களை பாராட்டி விடக் கூடாது. மெத்தனம் மறுபடியும் வந்துவிடும்.

''என்னவிதமான சண்டை அவர்களுக்குள், நான் பெரிய வனா நீ பெரியவனா என்பதா, அல்லது எந்த காரணமும் இல்

லாமல் கோபப்படுகின்ற தாயாதி ஆத்திரமா, அல்லது வேறு ஏதாவதா.''

''வணிகம். இதுதான் அந்த நால்வரையும் ஆட்டி படைக்கிறது.''

''என்ன வணிகம்.''

''கடல் வணிகம்.''

''கடல் வணிகத்திற்கு சண்டையிடுவது எதற்கு''

''என் துறைமுகத்திற்கு வா, என் துறைமுகத்திற்கு வா என்று கடற்கரைக்கு ஒட்டியுள்ள இந்த நான்கு தேசங்களும் அலட்டிக் கொள்கின்றன. தட்சிணலாடத்து ரணசூரனின் இடத்திற்கு நாவாய்கள் வருவதே இல்லை என்பது பெரிய வருத்தம். கடலுக்கு உள்ளே போய் அந்த நாவாய்களை வழிகாட்டுவதாக தன்பக்கம் இழுத்துக் கொள்கிறான் உத்ரலாட்த்து தேசத்து மன்னன் என்பதும் வருத்தம்.

கடலுக்குள் தங்கியிருக்க இயற்கையாகவே மஹிபாலனின் உத்ரலாடம் மிக வசதியாக இருக்கிறது. மற்ற துறைமுகங்களும் பெரிதுதான் என்றாலும் கடலில் தொலைதூரம் நிறுத்தி படகுகளில் விஷயங்களை ஏற்றி இங்கு வர வேண்டும். உத்ரலாடத்தில் கடல்தாண்டி உள்ளுக்குள்ளே கங்கையின் கிளை நதிகளில் நுழைந்து விடலாம். அசையாது நிற்கலாம். கரையில் ஏணிபோட்டு இறங்கலாம். இவ்விதமாகச் செய்ய தண்டபுத்தியில் வழியே இல்லை. தட்சிணலாடத்திலும் இயலாது. ஆனாலும் அங்கே வலிவு மிகுந்த படகுகளால் பண்டமாற்றம் நடைபெறுகிறது. மஹிபாலனுடைய அரசுதான் வணிகத்தில் செழிக்கிறது.

''யாரால்''

''சீனர்களால். நேபாளம், லங்காசோகம், கடாரம் போன்ற கிழக்கே இருக்கின்ற இடங்களால் மஹிபாலனின் தட்சிணலாடம் செழித்துக் கொண்டிருக்கிறது. வந்தவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வார்கள்.''

''எப்பொழுது அந்த வணிகம் நடக்கும்.''

‘‘தென்மேற்கு பருவ காலங்களில் அந்த பக்கம் நாவாய் கள் எளிதாக போய்விடும்.

தென்மேற்கு பருவ காற்று, அதாவது தெற்கே சேர தேசத் திலிருந்து கிளம்பி மேலே நகர்ந்து மேலைசாளுக்கியம் தாக்கி, சிறிது கீழைச் சாளுக்கியம் தாக்கி பிறகு இன்னும் வடக்கே நகர்ந்து பராமரர்களுடைய ராஜ்ஜியத்தையும் இன்னும் நகர்ந்து கோசல தேசத்தை இன்னும் நகர்ந்து வங்க தேசத்தையும் கடந்து அந்த காற்று மேகங்கள் நகருகின்றன. மழையும் இருக்கும். காற்றும் வீசும். சில சமயம் காற்று வெகுவேகமாக் வீசும். கடாரத்திலிருந்து மூன்று நாள் பயணத்தில் தட்சிண லாடம் அடைய முடியும்.’’

‘‘அடே. நன்றாக இருக்கிறது. நீர் பேசுவது. நிறைய தெரிந்து வைத்திருக்கிறீர்.

‘‘அதனால்’’

‘‘அதனால் நமக்கு என்ன’’

‘‘வணிகம் இப்பொழுதுதான் நிறைவு பெற்று இருக்கும். வடகிழக்கு பருவகாற்று ஆரம்பித்தவுடன் காத்திருந்து நாவாய் கள் தெற்கு நோக்கி நகரும்.’’

‘‘புரிகிறது.’’

‘‘அந்த நாவாய்கள் நகருகிறபொழுது வங்கப் படைகள் தெற்கு நோக்கி வரும். ஏனெனில் இறக்குமதி செய்ய நாவாய் கள் இல்லை. வேறு வேலை இல்லை. வடகிழக்கு பருவ மழை யின்போது தட்சிணலாட மன்னன் தண்டபுத்தி வரை வரு வான். வழியே ரணசூரனையும், கோவிந்த மன்னனையும் தலை யில் அடிப்பான். மிரட்டுவான்.’’

ஓலைநாயகம் பேச்சு நிறுத்தினான்.

‘‘அப்படி வடகிழக்கு பருவ மழை ஆரம்பித்தபோது தட்சிணலாடத்திலிருந்து தண்டபுத்தி வரை மஹிபாலனால் வர முடியும் என்றால் உங்களால் வடகிழக்கு பருவ மழையில் உள்ளே நகர முடியாதா.’’

“அவர்களுக்கு பழக்கம். அதுவும் தவிர, வடக்கிலிருந்து தெற்கே சரிவு அதிகம். நாம் அதிகம் மேலேற வேண்டும். சேறுகள் இருக்கும்பொழுது குதிரை வீரர்கள் சேற்றுப் பாதை யில் வராமல் மரங்களை தறித்துக் கொண்டு ஒற்றையடிப் பாதையை ஏற்படுத்தி தண்டபுத்திக்கு வருகிறார்கள் என்று சொல்லப்பட்டது.”

“அதை நாம் செய்தால்.”

“யானைகள் போக முடியாது. யானைகள் இல்லாத படைகள் அவர்களுக்கு மிரட்சி தராது.”

“புரிகிறது, புரிகிறது. கைகொட்டினார். இராஜேந்திர சோழர் தன் இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

“தட்சிணலாடத்திலிருந்து தெற்கு நோக்கி தண்டபுத் திக்கு வந்த பொதுமகளிர் சிலரை சந்தித்தேன். சபையில் பேச லாமா என்று தெரியவில்லை.”

வலதுபக்கம் இருந்த ஒரு உபதளபதி எழுந்திருந்தார். அரசவை லேசாக சிரித்தது.

“வெகுநாள் தங்கி இருந்தீரோ.” இராஜேந்திர சோழர் சிரிப்போடு கேட்டார்.

“ஆமாம். இரண்டு வாரங்கள் இருந்தேன்.”

“அடே. பெரிய விளையாட்டு போலிருக்கிறது.”

“இல்லை. விளையாட்டு தாண்டி அவர்கள் பேசிய சில விஷயங்கள் எனக்கு ஆர்வத்தை கொடுத்தன.”

“என்ன விஷயங்கள்.”

“தட்சிணலாடத்தில் சாக்த உபாஸகம் அதிகமாம்.”

“இதற்கும், போருக்கும் என்ன சம்பந்தம்.”

“அந்த சாக்த உபாஸனைதான் அவர்களை வெறி கொள்ளச் செய்கிறதாம். அந்த மந்திரங்கள் தான் அவர்களுக்கு வெற்றி வாகை தருகிறதாம். ஆடு, மாடு பலியோடு நரபலியும் நடத்துகிறார்களாம். அதனால் ஒருமுறை கூட தோல்வி ஏற்பட வில்லையாம்.

ஒரு பனை உயரத்திற்கு தீ எரியுமாம். பல்வேறு விஷயங் களை ஆகுதி ஆக்கி அந்தணர்களை வலம் வந்து வணங்கி, நல்லநாள் கேட்டு குறித்துக் கொண்டு நல்ல திசையில் படை வீரர்கள் அசைவார்களாம்.''

''இதை நாம் குறித்துக்கொள்ள வேண்டுமா.'' இராஜேந் திரர் கேட்க, 'ஆம்' என்றும் இல்லை என்றும் சிலர் சொன்னார் கள்.

''நமக்கு நம்பிக்கை இருக்கிறதே. நாமும் செய்கிறோமே. அப்படியானால் அவர்கள் நம்பிக்கை தவறு என்று எப்படி சொல்வது.''

''நான் வழிபாட்டை தவறு என்று சொல்லவில்லை. அதுவா வெற்றியை கொடுக்கும் என்று சொல்கிறேன்.''

''பிறகு எதற்கு வழிபாடு செய்வது. ஓலைநாயகம் தைரியமாக கேட்டார். இராஜேந்திரருக்கு சொல்ல பதில் இல்லை. அமைதியாக இருந்தார்.

''அவர்கள் ஏன் தண்டபுத்தியை நோக்கி வந்தார்கள் தெரியுமா அரசே.'' பேசிய உபதளபதி மறுபடியும் பேசினான்.

''சொல். கேட்டுக்கொள்கிறேன்.''

''அந்த ஹோமத்தில் ஆண்களை சிரம் கொய்து தீயில் போடுவார்களாம்.''

''இது அங்கங்கே நடக்கத்தானே செய்கிறது. இது ஒரு முட்டாள்தனம். எனக்கு பிடிக்கவில்லை.''

''பலநூறு எருமைகள் பலி கொடுப்பார்களாம். ஒரே நாளில் இருநூறு ஆடுகள் அறுத்து எரிவார்களாம்.''

''சரி, சரி, என்ன இதற்கு.''

''இன்னொரு கோரமான விஷயத்தை அந்த பெண்மணி சொன்னார்.''

''என்ன?''

''பொதுமகளிர் யாரேனும் ஒருவரை கணவனாக கொண் டிருந்தால் அவர்களை பற்றி அறிந்து தேர்ந்தெடுத்து ஹோம குண்டத்தின் வாசலில் குழிவெட்டி ஒன்றாக புதைத்து மண்

தள்ளி விடுவார்களாம். உயிரோடு புதைப்பார்களாம் இதற்கு உடன்பள்ளி கொள்ளுதல் என்று பெயராம். அந்த ஹோமத்தை அந்த தம்பதிகள் காவல் காப்பார்களாம்.''

''வேதனை, வேதனை, வேதனை, இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறாய்.''

''இதனாலேயே அந்த ஹோமத்தில் மிகப் பெரிய சக்தி ஏற்பட்டு விடுகிறது. சில சமயம் சிலருக்கு தெய்வ தரிசனம் கிடைத்து விடுகிறது. மது குடித்து, மாமிசம் உண்டு வெறி யோடு அந்த ஹோமத்தை மறவர்கள் சுற்றி வருவார்களாம். அங்கு பலியிட்ட ரத்தத்தை நெற்றியில் இட்டுக் கொள்வார் களாம். முகத்திலும், மார்பிலும் பூசிக் கொள்வார்களாம். குறைந்த ஆடைகளோடும், சிலசமயம் நிர்வாணமாகவும் வெறி ஆட்டம் ஆடுவார்களாம். அந்த வேகத்தோடே கீழிறங்கி வருவார்களாம். தெற்கு நோக்கி நடப்பார்களாம். படையெடுப்பு என்றால் அது சூறையாடுதலாகத்தான் இருக்கும். போர்வீரர்களோடு போர் வீரர்கள் என்று இருக்காது. காடுகளுடே தனித்தனியாக வந்து சட்டென்று கிராமங்களில் பாய்ந்து விடியல் நேரத்தில் தீக்கிறை யாக்கி ஒரு தேசத்தின் மக்களை கடுமையாக அச்சுறுத்துவார் களாம். தட்சிணலாடத்து ரணசூரன் வீரர்களுக்கும் மஹிபாலன் வீரர்களை கண்டால் பெரிய அச்சமாம். தண்டபுத்தியும் நடுங் குமாம்.''

''அப்படியா. அப்பொழுது அடித்து நொறுக்க வேண்டியது தான். என்ன இது. கேவலம். உடன் பள்ளி கொள்ளுதல். ஹா உங்கள் உதவிக்கு நன்றி. மிகச் சரியாக செயல்பட்டிருக்கிறீர் கள். ஆனால் இது போதாது. பாதி கிணறு தாண்டியிருக்கிறோம். இன்னும் முற்றிலுமாக விவரம் வேண்டும். அதை மாணிக்க வாசகம் தர முடியும். எப்பாடுபட்டாவது அவனை இழுத்து வாருங்கள். என்னிடம் சொல்லாமல் எந்த விஷயமும் இனி இந்த கீழைச் சாளுக்கியத்தில் நடக்கக்கூடாது. சோழ வீரர்கள் அத்தனை பேருக்கும் சொல்லி விடு.

நோய், நொடி, பசி, துக்கம், வழிபாடு எவை இந்த ஒட்ட தேசத்தில் இருந்தாலும் அவை எனக்கு சொல்லப்பட வேண் டும். இன்னொன்று புரிந்து கொள்ளுங்கள். தென்மேற்கு பருவ

மழையோ, வடகிழக்கு பருவ மழையோ இதுபற்றி எனக்கு அக்கறையில்லை. என்ன ஆனாலும் படையெடுப்பு நடந்தே தீரும். போயே ஆகவேண்டும்.

உடனே அரையன் ராஜராஜனுக்கு இன்றைய விஷயமாக தூதுவனை அனுப்பி சொல்லிவிடு. அருண்மொழிபட்டன் என்ன யோசிக்கிறான் என்பது எனக்கு ஐந்து அல்லது ஆறு நாட்களுக்குள் தெரிவிக்கப்பட வேண்டும்.

இந்திரதத்தனை இழந்த ஒட்ட தேசத்து மக்களோடு இனிமையாக பழகுங்கள். அவர்கள் யாரும் நமக்கு துரோகியாகி விடக்கூடாது. நம்மை உளவு பார்த்து கங்கே யாதவுக்கு சொல்லிவிடக் கூடாது. திசை எல்லை தாண்டி அந்தணர் போனாலும் நிறுத்தி வையுங்கள். அந்தணரானாலும் விசாரியுங்கள். வடக்கே போன அந்தணர்களிடமிருந்து செய்தி வர வேண்டும். அங்கும் ஆள் அனுப்பி நம்மை நோக்கி வரும்படி செய்யுங்கள். துடிப்பு குறையக் கூடாது. யுத்தம் தொடரும். இது நிச்சயம்.'' எழுந்து இராஜேந்திர சோழர் வெளியேற, சபை எழுந்து நின்றது.

அரசவையின் பின்பக்கமிருந்து வீரமாதேவி சகலத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அருகே பரவையும் இருந்தாள்.

''உங்களை நினைத்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.'' பேசிக்கொண்டு அவரோடு நடந்தாள்.

''என்ன ஆச்சரியம்.''

''எப்படி கொக்கி போட்டு இழுக்கிறீர்கள்.''

''இது பரம்பரை புத்தி. என் தகப்பன் போடாத கொக்கியா. அவரிடமிருந்து வந்த புத்தி. அதற்கு முன் இருந்த உத்தம சோழன் முட்டாள். சுந்தர சோழர் மகாஞானி. ஆனால் அரசியல் சதுரங்கத்தில் அற்புதமாக விளையாடியவர் என் தகப்பன் ராஜ ராஜசோழன்.''

''என்னுடைய அபிப்ராயத்தில்''

''என்ன?''

''நீங்கள் அவரையும் மிஞ்சி விட்டீர்கள்.''

''எனக்கு இது பிடிக்கவில்லை. இது பாராட்டு இல்லை.''

''உண்மையை எப்படி மறுக்க முடியும்.''

''சரி, தெரிந்தால் உள்ளே வைத்துக்கொள். வெளியே சொல்லாதே.''

''ஏன்?''

''இராஜராஜரை எந்தவிதத்திலும் இழிவுபடுத்துவது எனக்கு பிடிக்காது. சோழ தேசத்தில் மிகப் பெரிய மாறுதல் செய்தவர். அவர் இல்லாவிட்டால் சோழ தேசம் இவ்வளவு தொலைவு வந்திருக்குமா.

வடக்கே போக வேண்டும். வடக்கே உள்ள மன்னர்களின் கொட்டத்தை அடக்க வேண்டும். கீழை சாளுக்கியத்தை நம் வசம் வைத்திருக்க வேண்டும். கீழை சாளுக்கியம் மட்டுமல்லாது அது தாண்டியும் போக வேண்டும். அது கீழை சாளுக்கியத்திற்கு உதவியாகவும் இருக்க வேண்டும் என்று எத்தனை திட்டங்கள் தீட்டினார். அது இன்று செயல்பாடு ஆகியிருக்கிறதென்றால் அது அவர் கொடுத்த ஊக்கம். அவருடைய திட்டம். அவர் மனது. அவர் போட்ட கட்டங்கள்.

இராஜராஜ சோழர் சாதாரணமானவர் அல்ல வீரமாதேவி. இவ்வளவு சௌகரியமாக இங்கே உட்கார்ந்து உன்னோடு சல்லாபித்துக் கொண்டிருக்கிறேன். இராஜராஜர் அதை செய்ய மாட்டார். எனக்கு அது ஞாபகம் இருக்கிறது.

கரை புரண்டு ஓடும் ஆற்றின் எதிர்க்கரையில் மேலை சாளுக்கிய வீரர்கள் லட்சம் லட்சமாக குவிந்து கொண்டிருந்தார்கள். சோழதேசப் படை நடுங்கிற்று. பாதி ஆறு தாண்டும் பொழுதே ஆயிரம் அம்புகள் வந்து விழுந்தன. நடு ஆற்றில் மரணம் என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்தது. ஆறும் இழுப்பாக இருந்தது. உள்ளே போக பயப்பட்டார்கள். இங்கேயே இருப்போமே என்று நினைத்தார்கள். குதிரை எடுத்து கரையின் உயரத்திலிருந்து கீழே இறங்கி குதிரையில் அந்த ஆறு தாண்டி வாள் உயர்த்தி பிடித்து முதல் ஆளாக இராஜராஜ சோழர் போகும்பொழுது நாங்கள் வெறி பிடித்தவர்களானோம்.

என் மன்னன் முன்னே போகிறான். நாங்கள் பின்னே போவதா என்று வெறி பிடித்தது போல இறங்கினோம். நாம்

இறங்குவோம் என்று நினைக்காத அந்த படை கலகலத்து போனது. மேலை சாளுக்கியம் பின்னடைந்தது. ஆற்றில் இறந் தவர் சில பேர். ஆனால் அம்புகள் மேலே படாது கவசத்தை வைத்துக் கொண்டு கரை ஏறி குறைவான நீரில் நின்று பிறகு ஒன்று கூடி, வேகமாக மேலேறி, என்ன கடுமையாக சண்டை இட்டார். எத்தனை சிரங்கள் விழுந்தன. எத்தனை பேர் கைகளை வெட்டினார். எத்தனை குதிரைகளை வீழ்த்தினார். எத்தனை யானைகள் மீது வேல் பாய்ச்சினார்.

ஆஹா, ஆஹா, இப்பொழுதும் நினைவில் இருக்கிறது. சண்டை என்பது மரணத்திற்கு துணிந்த விஷயம் வீரமாதேவி. எந்த நோடியும் தனக்கு மரணம் நேரும் என்று தெரிந்தவன் முழு வேகத்தோடு போரிடுவான். என் தந்தை ஊடறுத்து போனார். பின்னே பெரும் படை போயிற்று. இப்படி ஒரு மன்னன் ஊடறுத்து வருவான் என்று மேலை சாளுக்கியத்து மன்னன் நினைக்கவேயில்லை. படு தோல்வி.

நம்முடைய சோழ வீரர்களை விஷமிட்டு கொன்றதால் முன்னூற்று சொச்சம் பேரை கொன்றதால் ஆத்திரமடைந்து நான் வெறி பிடித்தது போல தாக்கினேன். குழந்தைகளை விட்டு விஷம் கலக்கச் செய்தார்கள். சோழ வீரர்கள் இறந் தார்கள். அந்த கோபம் இன்னும் என்னுள் இருக்கிறது. மேலை சாளுக்கியத்தை நிர்மூலம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுது வந்தது. அந்த நேரம் நான் செய்த வெறியாட்டம் என் தகப்பனால் பாராட்டப்பட்டது.

வீடுகளை எரிப்பதில்லை. ஆனால் நான் வீடுகளை எரித்தேன். அவர் கிழவர்களை தொடுவதில்லை. நான் பிரம் பால் விளாசினேன். பெண்களை அடித்து துரத்தினேன். தவிர மற்ற எல்லா மாளிகைகளையும் இடித்தேன். தூணில் கயிறு கட்டி, யானை விட்டு இழுத்து மொத்த வீட்டையும் மாளிகை யையும் சரிந்தேன். தீயிட்டேன். மேலை சாளுக்கியம் புகை காடாய் மாறியது. வயல்களை அழித்து பேய் கடுகு விதைத் தேன். இனி அங்கு நல்ல தானியங்கள் விளையக்கூடாது என்று தீர்மானம் செய்தேன்.

இந்திரதத்தன் கோழை, கீழை சாளுக்கியத்தில் தகுதியான தலைமை இல்லாததால் உள்ளே புக முயற்சித்தான். கங்கே யாதவை துரத்தி விட்டு கீழை சாளுக்கியத்தை தன்வசம் கொண்டுவர வேண்டும் என்று முயற்சித்தான். தொந்தரவு செய்தான். இப்பொழுது அடி வாங்கி சோழதேசத்தை நோக்கி அனாதையாக போய்க் கொண்டிருக்கிறான்.

ஒட்டதேசத்தை ஊடறுத்த தர்ம பாலன் இந்த தண்டபுத்தி தர்மபாலன் கீழை சாளுக்கியம் வரவேண்டும் என்று ஆசைப் பட்டிருக்கிறான். அதை செய்தும் இருக்கிறான். நமக்கு தாக்கு பிடிக்காத மேலைசாளுக்கியம் இப்போது அவர்களை ஒன்று சேர்த்துக் கொண்டு நம்மை குலைத்துவிடலாம் என்ற நினைத்துக் கொண்டிருக்கிறது. நம்மிடம் இருப்பது வீரமல்ல வீரமாதேவி. வெறி வெறி மிகப்பெரிய வெறி. மேலை சாளுக் கியத்தை எல்லாவிதமாகவும் உடைக்க வேண்டும் என்ற வெறி. வழியே கோசல தேசம் வரப்போகிறது. நான் அதிகம் தொந்தரவு செய்யப் போவதில்லை. கொஞ்சம் திரும்பி மேற்கே போனால் பராமரர்கள் இருக்கிறார்கள். நான் அங்கு தாக்கப் போவதில்லை. கங்கையை அடைந்து வங்கதேசத்து மஹி பாலன் தலையில் அடித்து இழுத்து வரப்போகிறேன். இனி கீழை சாளுக்கியத்திற்கு, ஒட்ட தேசத்திலிருந்தோ அதை தாண்டி உள்ள தண்டபுத்தியிலிருந்தோ அதை தாண்டியுள்ள தட்சிணலாடத்து ரணசூரன் தேசத்திலிருந்தோ அதற்கு அப்பால் உள்ள கோவிந்த சேனனின் கோசலத்திலிருந்தோ அல்லது அதற்கு அப்பால் இருக்கின்ற வங்க தேசத்திலிருந்தோ எந்த தொந்தரவும் வரக்கூடாது. எனது மருமகன் அருமையாக ஆட்சி செய்ய வேண்டும்.

கங்கை நீரை கொண்டு வந்து ஜெயங்கொண்டத்தில் நான் கட்டிய சிவன் கோவிலுக்கு அபிஷேகம் செய்ய வேண் டும். சோழருடைய வலிமையை பரதகண்டம் தெரிந்துகொள்ள வேண்டும். அது தவிர என் மண்டையில் எந்த யோசனையும் இல்லை.

இந்த திருமணம், இராஜநரேந்திரனுக்கு பட்டம் தருவது எல்லாமே கீழை சாளுக்கியத்தை பலமாக வைப்பது. இந்த

இராஜநரேந்திரன் இல்லையென்றால் இன்னொரு குப்பை வந்து உட்கார்ந்து கொள்ளலாம். அது நான் வைத்த குப்பை யாக இருக்க வேண்டும். எனக்கு கட்டுப்பட்ட குப்பையாக இருக்க வேண்டும்.

தொண்டை நாட்டிற்குள் இனி மேலைசாளுக்கியம் கால் வைக்கக் கூடாது. ஏனெனில் தொண்டை நாடு சோழ தேசத் தில் ஒரு அங்கம். இடது கை, வலது கை போல ஒரு அங்கம். என் கைகள் வெட்டப்படுவதை நான் வெறுமே பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்.''

''இப்படி ஓங்காரமாக சொல்ல வேண்டுமா. அமைதியாக யோசிக்கக் கூடாதா.''

''அமைதியாக யோசிப்பது புலவன் வேலை. நான் மறவன்.''

''அதெல்லாம் இல்லை. உங்களுக்கு வங்க தேசம் போக முடியவில்லையே என்ற ஆற்றாமை. அரையன் ராஜராஜன் ஜெயித்து ஜெயித்து அங்கிருந்து தகவல் அனுப்புகிறானே என்று பெரிய கோபம். நீங்களும் ஓடவேண்டும் என்ற ஆசை. ஆனால் இங்கே இந்த இடத்தை விட்டு போகவும் பயம். நான் ஒன்று சொல்லட்டுமா. கீழை சாளுக்கியத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போங்கள். வடக்கே போங்கள். உங்கள் கோபத்தை தீர்த்துக் கொள்ளுங்கள்.''

''இல்லை வீரமாதேவி. இராஜநரேந்திரனை நான் நம்ப மாட்டேன். இந்த இடம் விட்டு நான் அகன்றால் மேலை சாளுக்கியத்திலிருந்து வேறு சிலர் இங்கு நுழைவார்கள். மேலை சாளுக்கியத்து தந்திரத்தை சமாளிக்க உனக்குத் தெரி யாது. நம் பகைவர்களான சேரர்களின் துணையோடு பாண்டிய தேசத்திலிருந்து தப்பித்து வந்த பாண்டிய வீரர்களோடு மேலை சாளுக்கியம் தொண்டை நாடு நோக்கி வரும். மயிலை, திருவல்லிக்கேணியை பிடித்துக் கொள்ளும். ஒரு பொக்கிஷ மான இடம் அல்லவா. நல்ல தானியங்கள் விளையும் இட மல்லவா. நல்ல வாணிபமான இடம் அல்லவா. அதை இழக்க முடியுமா. எனவே, அவர்கள் தொண்டை நாடு போகாது இருக்க, கீழை சாளுக்கியம் வராது இருக்க அல்லது கீழை

சாளுக்கியத்தை மீறி தொண்டை நாடு போகாது இருக்க நான் கீழை சாளுக்கியத்தில் இருக்க வேண்டும்.

ஒரு நாள் ஓட்டத்தில் நான் தொண்டை நாட்டை தொட்டு விடுவேன் என்ற பயம் மேலை சாளுக்கியத்திற்கு இருக்க வேண்டும். நீ எதற்கு வீரமாதேவி. அரையன்ராஜராஜனை யும், அருண்மொழிபட்டனையும் இங்கே வைத்துவிட்டு நான் போயிருக்க மாட்டேனா. போக முடியாதிருக்க வேறு காரண மும் இருக்கிறது.''

''எனக்கு தெரியும்''

உரக்க வீரமாதேவி பேசினாள். பரவை நாச்சியார் அவர்கள் இரண்டு பேரின் விவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''என்ன தெரியும்''

''உங்களுக்கு முடியவில்லை. உங்கள் உடம்பில் வலு வில்லை. உங்கள் முதுகில் திமிர் இல்லை. உங்கள் கைகளும், கால்களும் நடுங்க ஆரம்பித்து விட்டன. அறுபதின் எல்லை யில் இருப்பது முகத்தில் தெரிகிறது. படிகள் ஏறும்போது நிதான மாகி விடுகிறீர்கள். முதுமை வரத்தான் செய்யும். அவ்வளவு தொலைவு போனால் முடியாது என்ற திரும்பி விடலாம். அப்படி திரும்பினால் சோழப்படை கல்வரம் அடையும். எதிரி களுக்கு கொண்டாட்டமாகி விடும். எனவே, தீர்மானமாக, திட்டமிட்டபடி அடித்து நொறுக்க அவர்களே சிறந்தவர்கள் என்று நீங்கள் நினைத்து விட்டீர்கள்.''

இராஜேந்திரர் மௌனமாக இருந்தார். நீண்ட ஆசனத்தில் சாய்ந்து கொண்டார். பரவை அவருடைய தலைக்கு தலை யணை கொடுத்தாள்.

''ஆமாம் வீரமாதேவி. நான் தளர்ந்து விட்டேன். வயிற்று உப்புசமோ, அல்லது வேறு ஏதேனும் பித்தக் கோளாறோ. நடு மார்பில் வலிக்கிறது. இடப்புறமோ, பின்புறமோ வலித்தாலும் பரவாயில்லை. நெஞ்சு குழிக்கு அருகே வலிப்பது நல்ல விஷயமல்ல என்று வைத்தியர்கள் சொல்கிறார்கள். இருதயம் முழுவேலை செய்யவில்லை என்கிறார்கள். அதிகம் ஓய்வு தேவை என்கிறார்கள். எனவே, இங்கு உட்கார்ந்து தண்டச்

சோறு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். என் மனம் முழுவதும் வங்க தேசத்தின் மீதே இருக்கிறது. அரையன் ராஜராஜன் அருகிலேயே இருக்கிறது. செயற்கரிய காரியத்தை செய்து முடித்துவிட்டான் என்ற சந்தோஷம் இருப்பினும் போக முடிய வில்லையே என்ற வருத்தம் இருக்கிறது.

அரையன் ராஜராஜன் வெற்றி பெற்றது நான் வெற்றி பெற்றது போல் ஆகுமா என்று நான் அடிக்கடி கேள்வி கேட்டுக் கொள்கிறேன். ஆமாம் என்றும் தோன்றுகிறது. இல்லை என்றும் தோன்றுகிறது. நீ என்ன சொல்கிறாய்.''

அரசனாக இருக்கின்ற ஒரு கம்பீரமான தனி மனிதனின் உளைச்சலை அவனுக்கு பிரியமான மனைவியான வீரமா தேவி கேட்டுக் கொண்டிருந்தாள். பரவையும் கேட்டுக் கொண் டிருந்தாள். ஆனால் இதற்கு என்ன பதில் சொல்வது என்று அவளுக்கு தெரியவில்லை. வெறுமே கட்டி அணைத்து கொஞ்ச வேண்டும் என்றுதான் ஆசை எழுந்தது.

இதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீ இப்பொழுது நன்றாக தூங்கு. நன்றாக உணவருந்தி தூங்கு என்று அருகே நின்று அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந் தது. படுக்கையில் ஆட்டம் போட வேண்டுமென்ற ஆசை இருந்தது. அது தன் கணவனை மாமன்னனை சந்தோஷப் படுத்தும் என்று தோன்றியது. ஆனால் வீரமாதேவி சுறுசுறுப் பாக இருந்தாள்.

''ஒரு கேள்வி. பதில் சொல்ல முடியுமா.''

''சொல்.''

''சோழதேசம் முக்கியமா. சக்ரவர்த்தி இராஜேந்திர சோழர் முக்கியமா.''

''இது என்ன கேள்வி வீரமாதேவி.''

''ஓ. இரண்டும் ஒன்று என்று சொல்கிறீர்களோ.''

''அப்படி சொல்வதற்கில்லை.''

''இராஜராஜர் அப்படி நினைத்திருப்பாரா. நானே முக்கியம். என்னுடைய செயல்களே முக்கியம். என்னுடைய கட்டளை

களே பிரதானம் என்று இராஜராஜ சோழர் என்றேனும் நினைத் திருப்பாரா. தனக்காக போரா. சோழ தேசத்திற்காக போரா. என்றாவது அவர் யோசித்திருக்கமாட்டாரா. தனக்காக என்று அவர் ஒருநாளும் யோசித்திருக்க மாட்டார். உதாரணம் சொல் லட்டுமா.''

''சொல் வீரமாதேவி. நீ பேசுவது பிடித்திருக்கிறது.''

''எப்பேர்பட்ட உயரத்திற்கு ஒரு கோவிலை எழுப்பி, கருங்கல்லால் அமைத்து நான் கட்டிய கோவில் அது என்று சொல்லாது நான் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத் தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் என்று கல்லிலே எழுதிய மன்னன் இந்த பரத கண்டத்திலே எங்கேனும் இருக்கிறானா. இரண்டு விளக்குத் தூண் நட்டு விட்டு தன் பெயர் போட்டுக் கொண்ட பேராசைக்காரர்கள்தானே இருக்கிறார்கள். எப்பேர்பட்ட கட்டிடம். என்ன அழகான கோவில். வேறு எந்த கோவிலில் இது இராஜ ராஜன் கட்டியது என்று எழுதியிருக்கிறார்.

ஏனெனில் அவருக்கு தன்னை விட சோழதேசம் முக்கியம். சோழதேசத்து நாகரீகம் முக்கியம். சோழ தேசத்து மக்கள் முக்கியம். அந்த செழிப்பு முக்கியம். இதை இடைஞ்சல் செய்த பாண்டிய தேசத்தை அடித்து நிறுத்தினார். சோழ தேசத்தை அலட்சியமாக நடத்திய சேர தேசத்தை அறைந்து உட்கார வைத்தார். தொந்தரவு செய்த மேலை சாளுக்கியத் தின் முட்டியை பெயர்த்தார். தனக்கு எந்நேரமும் ஆதரவாக இருந்த கீழை சாளுக்கியத்தை கண்ணென காப்பாற்றினார். இவையெல்லாம் அவருக்காக செய்ததல்ல. சோழ தேசத்தின் நன்மை பொருட்டு செய்தது. தொண்டை நாடும், நடுநாடும் இவ்வளவு செழிப்பாக இருக்க காரணம் இராஜராஜ சோழர். அது நடுநாடின் மீதும், தொண்டை நாடின் மீதான அன்பல்ல. சோழ தேசத்திற்கு அவை உதவி என்று தெரிந்த பண்பு.''

''இதை எங்கே முடிக்கிறாய் என்று தெரியவில்லையே.''

''ஆக, சோழ தேசம் முக்கியம் என்று சொன்னால் இந்த நேரம், இந்த இடத்தில் இந்த சூழ்நிலையில் மாமன்னராகிய இராஜேந்திரசோழர் இந்த வேங்கியைவிட்டு நகரக்கூடாது. நீங்கள் தான் முக்கியம் என்றால் தாராளமாக போகலாம். யார் உங்களை தடுக்க முடியும். ஜெயித்தாலும் ஜெயிக்கலாம் தோற்

றாலும் தோற்கலாம். ஆனால் நீங்கள் நகர்ந்தால் கீழை சாளுக்கியம் மேலை சாளுக்கியத்தால் தாக்கப்படும். ஒருவேளை இராஜநரேந்திரன் கொலை செய்யப்படலாம். இங்கே குடியிருக்கின்ற நம் பெண்களை அவர்கள் சூறையாடலாம். ஏன் நம்மை விட்டு விட்டு நீங்கள் சொன்னது போல தொண்டை தேசத்திற்கு போய் மயிலையை பிடித்துக் கொள்ளலாம். உங்களை வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் தாக்கலாம். இதை செய்திருக்கிறார்களே. நடந்திருக்கிறதே. தொண்டை நாட்டினுடைய மயிலை, திருவல்லிக் கேணியிலிருந்து உள்ளுக்குள் கடற்கரையோரமாக புகுந்து திருவான்மியூரையும், மாமல்லபுரத்தையும் தாண்டி அப்படியே மேற்கு பக்கம் திரும்பி சோழ தேசம் நோக்கி எசாலம், பிரம்மதேசம், மீன்சுருட்டி வழியாக வந்துவிடலாமே. சிதம்பரத்தை சிறை பிடிக்கலாமே.''

''அதற்கும் வாய்ப்பிருக்கிறது.''

''ஆகவே, சோழதேசம் காப்பாற்றப்பட நீங்கள் நகரலாகாது. ஏனெனில் நீங்கள் முக்கியமில்லை. சோழதேசம் முக்கியம். இன்னொரு அருமையான கேள்வி கேட்டீர்கள். நான் வெற்றி பெற்றேனா. அரையன் ராஜராஜன் வெற்றி பெற்றானா. உண்மையை மறக்க முடியுமா. அரையன் ராஜன் வந்த பிறகு இது நீ பெற்ற வெற்றியல்ல. நான் பெற்ற வெற்றி என்று உங்களை நீங்கள் முக்கியமாக நடத்திக்கொள்வீர்களா. அரையன் ராஜனை பாராட்டமாட்டீர்களா. உங்களுக்காக உயிர் துறந்த அந்த சோழ வீரர்களை, அந்த தளபதிகளை கலி தண்டியில் இறந்து போனார்களே அந்த கிழவர்களை மறந்து விட முடியுமா. நான் ஜெயித்தேன் என்று அவர்களை மறந்து விட்டு பேசுவீர்களா. நீங்கள்தான் ஜெயித்தீர்கள். உங்கள் உத்தரவுதான் ஜெயித்தது. ஆனால் அரையன் ராஜராஜனையோ, அருண்மொழிபட்டனையோ, ராஜராஜ பிரம்மராயரையோ நாம் மறக்கலாகாது. மிகப்பெரிய சிறப்போடு எண்பது வயது வரை வாழ்வான் என்று நினைத்த அந்த ராஜராஜ பிரம்மராயன் இருட்டிலே குத்தப்பட்டு இறந்தானே. எவ்வளவு வேதனை. அந்த மூன்று பேர் இறந்ததை நினைத்தால் எனக்கு வயிறு கலங்குகிறது. வெறி வருகிறது.

அப்பொழுது இந்த விஷயம் ஜெயித்தாக வேண்டும். இந்த மேலை சாளுக்கியம் அடித்து நொறுக்கப்பட வேண்டும்.

இந்த கங்கே யாதவை நீங்கள் சிறைபிடித்து நெருப்பு தணலால் எரிய வைக்க வேண்டும். கங்கே யாதவ் சாக வேண்டும். துடிதுடித்து சாக வேண்டும். அதைச் செய்ய திட்டம் போட்டால் அரையன் ராஜராஜனும், அருண்மொழி பட்டனும் வடக்கே போனதும், நீங்கள் இங்கே ஊன்றி நிற்பதும் மிகச் சரியான விஷயம் என்று ஆகும். இதில் உங்களுக்கு ஊசலாட்டம் தேவையில்லை.

அரையன் ராஜராஜனும், அருண்மொழிபட்டனும் இங்கே இருந்து விட்டு நீங்கள் போனால் நான் அதிகம் பயப்படுவேன். ஏனெனில் அவ்வளவு தொலைவு அந்த மழை காலத்தில் உங்களால் போக முடியாது. காடுகள் அதிகம் உள்ள இடத்தில் யானைகளை வைத்துக் கொண்டு போக முடியாது. குதிரையின் குதியல் உங்கள் உடம்பிற்கு ஆகாது. நீங்கள் கிழவர் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். இதில் தவறு ஒன்றும் இல்லை. எல்லா இடங்களுக்கும் ஒரு மன்னன் போக வேண்டும் என்று அவசியம் இல்லை.

உங்கள் மிகச்சிறந்த இளமை காலத்தில் மேலைசாளுக்கியம் தாக்கியதை, கீழை சாளுக்கியத்தை கவர்ந்ததை, சேர தேசத்தை உதைத்ததை, பாண்டியனை அடிபணிய வைத்ததை, ஏன் இலங்கைக்கு போய் அங்கு மணிமுடியையும், ஆரத்தையும் கொண்டு வந்து நம்முடைய தேசத்தை அலங்கரித்ததை செய்து முடித்துவிட்டீர்கள்.

அப்பொழுதெல்லாம் நீங்கள் மன்னனாக இல்லை. மாதண்ட நாயகராக, சோழதேசத்தின் சேனாதிபதியாக இருந்தீர்கள். மாதண்டநாயகர் தான். இளவரசர்கூட அல்ல. இராஜராஜர் அயர்ந்த பிறகே உங்களை இளவரசர் ஆக்கினார். உங்கள் பட்ட மகிஷியார் எப்படி துடித்தார் தெரியுமா. ஒவ்வொரு போருக்கு போகும்போதும் இளவரசராகவே இருந்துவிடுவாரோ, இறந்துவிடுவாரோ என்று பயந்தார் தெரியுமா.

அதனால் நீங்கள் சிந்திப்பது மிகச் சரியான விஷயம். ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து பார்க்கின்ற உங்கள் தன்மை வேறு எவருக்கும் வராது. சிலசமயம் உண்மைகளை அழகாக ஏற்றுக்கொள்வது நல்லது.

வடக்கே போக அருண்மொழிபட்டனும், அரையன் ராஜராஜனும்தான் சரி, உங்களுக்கு இது தேவையில்லை. ஆயினும்

கங்கையிலிருந்து தண்ணீர் வந்து ஜெயங்கொண்டத்தில் அபிஷேகம் செய்யும் பொழுது நான் வாயார உங்களை கங்கை கொண்ட சோழர் வாழ்க என்று கூவுவேன். அந்த கங்கையை கொண்டு வந்த நீங்கள்தான். இராஜேந்திரர்தான். அதில் சந்தேகமேயில்லை. வேறு யார் பெயரும் அப்பொழுது சொல்ல முடியாது.

ஆகவே, கங்கை கரைக்கு போகவில்லை என்ற ஆதங்கத்தை தயவுசெய்து விட்டு விடுங்கள். என்ன நடப்போ அதை அமைதியாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் ஜாதகத்தை ஜோதிடர்களிடம் காண்பித்தேன். எண்பத்தியிரண்டு வயதாம். பேச்சும், சிரிப்பும் இருக்குமாம். ஆனால் உடம்பு தள்ளாடுமாம். செவ்வாயின் ஆதிக்கத்தால் நெஞ்சுசளி ஏற்படுமாம். சனியினுடைய ஆதிக்கத்தால் கடும் கால்வலி ஏற்படுமாம். இடுப்பில் வலு இருக்காதாம். கண்பார்வை மங்கலாகுமாம். சக்ரவர்த்தியாகவே இருப்பீர்களாம். வடகிழக்கு முழுவதும் வென்று மேலை சாளுக்கியத்தை மறுபடியும் அடித்து நொறுக்கி, கங்கேயாதவின் சிரம் வெட்டி, மறுபடியும் நீங்கள் சோழ தேசத்தில், ஜெயங்கொண்டத்தில் நீங்கள் அற்புதமாக கட்டிக் கொண்டிருக்கின்ற அந்த கோட்டையில் கொலு வீற்றிருக்க வேண்டும். தினசரி அரசவை கூடி எங்கெங்கு என்னென்ன செய்தி என்று கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதை நாங்கள் பார்த்து ரசிக்க வேண்டும்.

நான்கு புதல்வர்கள். அற்புதமானவர்கள். அடே அடே யாருக்கு கிடைக்கும் இந்த பேறு. நல்ல மனைவியர். மிகச் சிறந்த பிள்ளைகள். கண் முன்னே பிள்ளை இறந்து போன போதும் வேகப்படாது ஏற்றுக்கொண்டு தொடர்ந்து நடக்கிறீர்கள். சரியான மறவர் குலம். சோழ தேசத்து உடையார். எல்லாம் உடையார். அவருக்கு எந்த குறையும் இல்லை. எனவே உடல் கொதிப்பு குறைத்துக் கொண்டு அமைதியாக இருங்கள். ஆடல், பாடல் கேளுங்கள்.

நான் சொல்வது சரிதானே.''

''சொற்பொழிவே ஆற்றிவிட்டாய். எனக்கு இவ்வளவு பெரிய வகுப்பு எடுக்க வேறு எவருக்கும் துணிவு இருக்காது. உனக்கு மட்டும்தான் அந்த புத்தி வரும். உன்னைதான் என்னால்

புரிந்துகொள்ள முடியும். பரவைக்கு என்ன அபிப்ராயம் என்று கேள்.'' கேலியாக பரவையை பார்த்தார்.

அவர் சிரிப்பை பார்த்து வீரமாதேவி வாய்விட்டு சிரித்தாள்.

ஆக, பேச்சு திசை திரும்பிவிட்டது. கொஞ்சம் பரவையை சீண்டுகின்ற குணம் வந்துவிட்டது. அவளை அழவைத்து பிறகு அணைத்து இறுக்கிக் கொள்ள ஆசை வந்துவிட்டது. நடக்கட்டும் என்று எழுந்தாள்.

''நீ என்ன நினைக்கிறாய் பரவை.'' மிகக் கூர்மையாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க,

''கத்தரிக்காய் துவையல் இருக்கிறது. கோதாவரி நதிக் கரை மீன் வறுத்தும், வேக வைத்தும் இருக்கிறது.

வெள்ளையாய் சிரிக்கின்ற அரிசி சோறு இருக்கிறது. என்ன சாப்பிடுகிறீர்கள்.''

''நான் முதலில் உன்னை சாப்பிடப் போகிறேன்.'' அவளை இழுத்து மடியில் வைத்துக்கொண்டார். பரவை அவருக்கு சித்தமானாள். தன் முகத்தை அவள் முகத்தோடு வைத்து இழைத்தார். வீரமாதேவி மெல்ல எழுந்து குனிந்து வணங்கி அந்த அறையை விட்டு நகர்ந்தாள். அவளுக்கு கவலை அதிகரித்தது. இந்த கூடல் இந்த பகல் பொழுதில் வேண்டாம் என்று சொன்னால் கேட்பாரா. அறுபது அருகே இருக்கிறாரே, இந்த ஆட்டம் தேவையா. பரவைக்கு சொன்னால் ஏதோ தண்டித்து விட்டது போல வருத்தமாவாள். மன்னருக்கு சொன்னால் பிடிக்காது போனாலும் போகலாம்.

''கடவுளே, பெரிய கோவில் பெருவுடையாரே, நிசும்ப சூதனி, என் கணவனை காப்பாற்றம்மா. எனக்கு தீர்க்க சுமங்கலியாய் இருக்கும் வரம் கொடும்மா. மனதுக்குள் வேண்டிக் கொண்டே அந்தப்புரத்தை விட்டு நீங்கி மறவர்கள் இருக்கும் குடியிருப்பை நோக்கி நகர்ந்தாள்.

★ ★ ★

அத்யாயம் 74

“உங்கள் பெயர் என்ன?”

“கோமதி சங்கரபட்டர்”

“சோழ தேசத்தில் எந்த பகுதி.”

“நான் சோழ தேசம் அல்ல. பாண்டிய தேசம்.”

“அடடே, அதெப்படி சோழர்கள் உங்களை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். பாண்டிய தேசத்தில் எந்த பகுதி. மதுரையா.”

“இல்லை.”

“பிறகு?”

“திருநெல்வேலி”

“அது என்ன இடம்.”

“நெல் மழையில் நனையாமல் வேலியிட்டு இறைவன் காத்த இடம்.”

“என்ன கதை புதிதாக இருக்கிறதே. கேள்விப்பட்டதில்லையே.”

“திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் பட்டராக இருந்த ஒருவர் தினசரி அமுதுக்காக நெல் உலர்த்தி குத்தி பிறகு அரிசியாக்கி சோறு வடித்து இறைவனுக்கு படைப்பது வழக்கம். பகல் முழுவதும் நன்கு நெல் உலர்ந்தால் அவை இடிக்க ஏதுவாகும். உமி நன்கு வெளியே வரும். பிறகு அரிசியை புடைத்து எடுத்து மறுநாள் காலையில் சாதம் நிவேதனம் செய்வார்கள்.”

“இங்கும் அது வழக்கம்தான்”

"அப்படி ஒருநாள் அந்த பட்டர் நெல் உலர்த்தும் போது சுளீர் என்று வெய்யில் அடித்தது. நன்கு உலரட்டும் என்று முற்றத்தில் நெல்லை காயவைத்து விட்டு வீட்டை பூட்டிக் கொண்டு திருநெல்வேலியில் ஊடறுத்துப் போகும் தாமிர பரணி நதிக்கரைக்கு வந்தார்."

"தாமிரபரணியா."

"ஆமாம்."

"தாமிரம் நிறைந்திருக்குமா."

"அப்படித்தான் சொல்கிறார்கள்."

"நல்லது."

"அது ஜீவநதி. எப்போதும் இருக்கும் நதி."

"புரிகிறது. சொல்லுங்கள்."

அந்த நேரத்தில் குளித்துக் கொண்டிருக்கும்போது வானத் தில் கருமேகங்கள் தோன்றின. மேகங்கள் தரை இறங்கின. சடசடவென்று மழை பெய்தது. பலமாயிற்று. ஜனங்கள் கரை யேறினார்கள். குளித்துக் கொண்டிருந்த சிவாச்சாரியார் பயந்து போனார். முற்றத்தில் நெல் உலர்த்தியிருக்கிறோமே வீட்டில் யாரும் இல்லையே. பிள்ளை பேறுக்கு மனைவி ஊருக்கு போக, இன்னொரு பிள்ளை வெளியே இன்னொரு கோவி லுக்கு போக, வீடு பூட்டியிருக்கிறதே என்ன செய்ய, என்று தவித்தார். ஓடோடி வந்தார்.

"நெல்லையப்பா, நெல்லையப்பா உனக்காக நெல் உலர்த்தியிருக்கிறேன். அவைகள் ஈரமாகி விட்டால் நெல் இடிக்க முடியாது. பிறகு சமைக்க முடியாது. நாளை காலை நீ உணவின்றி வருந்த வேண்டியிருக்குமே. நெல்லையப்பா. நெல்லையப்பா காப்பாற்று" என்று ஓடி வந்தார்.

"நெல்லையப்பர் காப்பாற்றி விட்டாரா."

"ஆமாம்."

"மழை நின்றுவிட்டதா."

"இல்லை. மழை தொடர்ந்து பெய்தது. ஆனால் அவர் வீட்டை சுற்றி மழை இல்லை. நெல் காய்ந்தே கிடந்தது. வாரி

எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் பத்திரமாக வைத்து மறுபடியும் முற்றத்திற்கு வந்தார். மழை முற்றத்தில் அடித்து பெய்தது.

நெல்லை வேலியிட்டு காத்ததால் அது திருநெல்வேலி. நெல் விரும்பியதால் அவர் நெல்லையப்பர்.''

''அற்புதம். திராவிட தேசத்து கதைகளும், சிவ வழிபாடு களும் மிக நன்றாக இருக்கின்றன. மேலைசாளுக்கியமும் சிவ வழிபாட்டில் ஈடுபட்டதுதான். இங்கும் சிவ லீலைகள் அதிகம் உண்டு. ஆனாலும் உங்கள் கதைகள் ஆச்சரியமாக இருக்கின்றன. நெல்லையப்பர். திருநெல்வேலி. தாமிரபரணி. கோமதி சங்கர பட்டர். ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேனா.''

''சரியாக ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்''

''நீங்கள் சோழதேசம் ஆனாலும், சோழருக்கு கட்டுப்பட் டவரானாலும் நீங்கள் மிகச் சிறந்த ஜோசியர் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''அப்படி சொல்வதுண்டு.''

''எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்.'' கங்கே யாதவ் கோமதி சங்கர பட்டரை நோக்கி கைகூப்பினான்.

ஒல்லியான கருத்த தேகம். வெள்ளையான தாடி. அடர்த்தி யான குடுமி. அகலமான நெற்றி, பட்டை பட்டையாய் திருநீறு. கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி. கயிறில் கோர்த்த ஒற்றை முக ருத்ராட்சம். வலது கையிலும், இடது கை புஜத்திலும் பிஞ்சு ருத்ராட்சங்கள். வலக்கையில் காப்பு, இடுப்பில் வெள்ளி அரை ஞாண், சுத்தமான கரைபோட்ட காழகம். விரல்களில் வெள்ளி யும், தங்கமுமாய் மோதிரங்கள். காதில் பச்சை கடுக்கண். முகத்தில் ஒரு அமைதியும், கூர்மையும் இருந்தது. அதிகம் சிரிக்க மாட்டார் என்று தெரிந்தது. கலகலப்பான பேச்சுக்கு தலை கொடுக்க மாட்டார் என்று தெரிந்தது. தன் ஊர்பற்றி கேட் டதால் கொஞ்சம் நெகிழ்ந்து அதிகம் பேசியிருக்கிறாரே தவிர, இவரிடமிருந்து விஷயங்கள் வாங்குவது கடினம்.

''நான் உங்களை சோழ தேசம் பற்றி அல்லது சோழப்படை கள் பற்றி அல்லது இராஜேந்திர சோழர் பற்றி தெரிந்து கொள்ள அழைக்கவில்லை. நான் ஒரு பெருமுயற்சியில் ஈடுபட்டிருக்

கிறேன். வங்க தேசத்து மன்னர்களை ஒன்று சேர்க்க நான் முயற்சித்திருக்கிறேன். என் முயற்சியை நாளையோ, நாளை மறுநாளோ துவக்கப் போகிறேன். என்று துவக்குவது என்றுகூட நான் உங்களை கேட்கப் போவதில்லை. அது ஜோசியத் திற்கு அப்பாற்பட்டது. சிலசமயம் உடனடியாக அது நிறை வேற்றப்பட வேண்டியிருக்கும். என்னுடைய ஒரே கேள்வி. வடகிழக்கு பருவமழை எப்போது வரும். உங்களால் கணிக்க முடியுமா. நட்சத்திரங்களை வைத்து, கிரகங்களை பார்த்து மழை வருவதை நீங்கள் துல்லியமாக சொல்வீர்கள் என்று எனக்கு செய்தி வந்தது.

வடகிழக்கு பருவமழை எப்போது துவங்கும். அவன் கேட்க, அவர் கண்மூடினார். ஆழ்ந்து யோசித்தார்.

இவன் இந்த பகுதியின் மன்னருக்கு வேண்டியவன். மன்னரை காட்டிலும் வலுவுமிக்கவன். சொல்ல முடியாது என்றால் சரட்டென்று நெஞ்சை கீறி விடுவான். வாளால் கன்னத் தில் அடிப்பான். இவன் அடியை என்னால் தாங்க முடியாது. அதே சமயம் இவன் கேட்கிற கேள்வி தவறான கேள்வி அல்ல. பருவமழை எப்படி துவங்கும் என்று யார் கேட்டாலும் சொல்ல லாம். இது சோழ தேசத்திற்கோ, இராஜேந்திரருக்கோ எப்படி இடைஞ்சலாகும். அவன் இராஜேந்திர சோழரை பற்றி கேள்வி கேட்டால் மறுக்கலாம். அவன் படைபலம் பற்றி கேட்டால் தெரியாது என்று உண்மையை சொல்லலாம். ஆனால் வட கிழக்கு பருவமழை எப்பொழுது ஆரம்பிக்கும் என்று கேட்டால் சொல்லித்தானே ஆகவேண்டும். சொல்வோம். தீர்மானித்தார். தீர்மானித்த பிறகும் அமைதியாக உட்கார்ந்தார். அது அவ ருடைய வழக்கம். சந்தோஷமோ, துக்கமோ அவர் உடனடியாக வெளிப்படுத்துவது இல்லை. அரைக்கால் நாழிகை அமைதி யாக இருந்து விட்டு பிறகுதான் சந்தோஷத்தை தெரிவிப் பார். அரைக்கால் நாழிகை அமைதியாக இருந்துவிட்டு அதற்கு பிறகுதான் துக்கத்தை வெளிப்படுத்துவார். அதுவரை அந்த சந்தோஷத்தை அல்லது துக்கத்தை அவரே மனதுக்குள் ஆராய்வார். இவனிடம் வடகிழக்கு பருவமழை பற்றி சொல்ல லாமா. சொல்லலாம். சொல்லலாம் என்பது சரியா. யோசித்தார். அவன் காத்திருந்தான்.

இந்த தண்டபுத்தியின் கிரகபாலர் யார். புதன், இப்பொழுது என்ன திசை நடக்கிறது. செவ்வாய். இதற்கு பிறகு என்ன தசை வரும். அவர் கணக்கு போட்டார். கட்டங்கள் எழுதினார். ஆசனத்தை விட்டு எழும்பி உலாவினார். ஜன்னல் வழியே வானம் பார்த்தார். வானம் துல்லியமாக இருந்தது. காற்றை கவனித்தார். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. சுழல்கிறதா என்று நூல் பிடித்து பார்த்தார். லேசாக சுழன்றது. கையை நீட்டி காற்றின் ஈரப்பதம் கவனித்தார். புறங்கை சில்லென்று இருந்தது. மரங்களில் குருவிகள் ஏகமாய் கத்திக்கொண்டு இருந்தன. லாயத்தில் உள்ள குதிரைகள் வெறுமே வால்வீசிக் கொண்டிருந்தன. மழை வரும் என்றால் குதிரை கால் மாற்றி நிற்கும். ஒரு குளம்பை தூக்கி நுனியில் நிறுத்திக்கொள்ளும். ஆனால் குதிரைகள் நான்கு கால்களும் பூமியில் பட நின்றிருந்தன. குதிரைகள் சிலும்பும். ஈக்களை விரட்டுவது தவிர வேறு எந்த செயலும் இல்லை. எனவே, மழை இப்போதைக்கு இல்லை. எப்போது வரும். இதுதான் கேள்வி.

புரட்டாசி கடைசியில் இருக்கிறோம். ஐப்பசி அடைமழை. எங்கு. தமிழகத்தில், ஐப்பசி அடைமழை. தமிழகத்தில் வருவதற்கு ஐந்து நாட்கள் ஆகும். இன்னும் தெற்கத்தி காற்று அடிக்கிற பொழுது ஐப்பசி அடைமழை எப்பொழுது துவங்கும். அவர் யோசித்தார்.

''வடகிழக்கு பருவமழை தாமதமாகும். ஐப்பசி இறுதியில் தான் வரும். ஆனால் மோசமாக மிக மோசமாக இருக்கும். கடும் மழை இருக்கும். வானம் மூடி மூன்று நாட்கள், நான்கு நாட்கள் இடையறாது மின்னல் வரும். இடி தாக்கும். மழை பொழியும். நதிகள் வெள்ள சீற்றம் ஏற்படும். கடல் பொங்கி உள்ளே வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது'' அவர் கங்கே யாத விடம் விவரித்தார்.

''துல்லியமாக தேதி சொல்ல முடியுமா.''

''ஐப்பசி இருபத்தைந்து இருபத்தாறு தேதிகளில் மழை வரும்.''

''அப்போது மார்கழியிலா மழை.''

''ஆமாம். கடும் குளிர். கொல்லும் மழை.''

''இது க்ஷீணமாயிற்றே.''

''ஆமாம். பசுக்களுக்கு வியாதி. குதிரைகளுக்கு கேடு யானைகள் தடுமாறும். பயிர்கள் நாசமாகும், மக்கள் வீடுகளை இழந்து தவிப்பார்கள். மரங்கள் முறிந்து விழும். லேசான இயற்கை உற்பாதம் நடக்கும். ஆனால் தண்டபுத்தி தாங்காது.''

''இது நிச்சயமா.''

''மிக நிச்சியம்.''

''இது சத்தியமா.''

''என்னுடைய குலதெய்வமான நெல்லையப்பர், காந்திமதி மீது சத்தியம்.''

''காந்திமதி யார்.''

''பார்வதி. நெல்லையப்பரின் துணைவி.''

''பெயர் அழகாக இருக்கிறது. காந்திமதி. என்ன காந்தம் அது.''

''பேரழகு. கண்கள் காந்தம். அந்த கருவறையின் காந்தம். காந்திமதிதான் திருநெல்வேலியை செழிப்பாக்கிக் கொண் டிருக்கிறாள்.

திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரிவரை நாஞ்சில் நாடு முழுக்க அவள் ஆளுமைதான்.''

''சோழர்கள் கொண்டாடுவார்களோ.''

''சோழர்கள் கொண்டாட பல்வேறு கோவில்கள் இருக் கின்றன. ஆனாலும் நெல்லையப்பர் காந்திமதி மீது அவர் களுக்கு ஈர்ப்பு உண்டு. அந்த பக்கம் வந்தால் உள்ளே வராமல் போக மாட்டார்கள். பல கொடைகள் கொடுத்திருக்கிறார்கள்.''

''சரி. உங்களுக்கு என் சன்மானம்.'' அவன் திரும்பினான். ஒரு சிறிய பையில் முப்பது கழஞ்சுகள் வைத்து அவரிடம் நீட்டினான். அவர் கையேந்த அதில் போட்டான்.

''எங்கள் பக்கம் தட்டில் வைத்து வெற்றிலையோடு தருவதுதான் வழக்கம்.''

''ஹா. சோழதேசத்து வழக்கம். நாங்கள் அதை விரும்புவ தில்லை. மன்னர்கள் மற்ற எவருக்கு கொடுக்கும்பொழுதும்

தானமாக, பிரியமாக தூக்கி தான் கொடுப்போம். நீங்கள் அந்தணர் என்பதால் உயரே தூக்கி உள்ளங்கையில் வைத்தேன். இது மறவர், வணிகர் என்றால் வீசி காலின் கீழ் எறியப்படும். இது எங்கள் வழக்கம்.

நீங்கள் விடைபெறலாம். அவன் அலட்சியமாக கால் அகட்டி நின்றான். அவர் எழுந்தார்.

''உங்கள் நட்சத்திரம் என்ன?'' திரும்பி கேட்டார்.

''ஆஷாடம்.''

''எந்த மாதம்?''

''சித்திரை.''

''மிக்க நன்றி. நமஸ்காரம். நான் வருகிறேன்.'' அந்த அந்தணர் தண்டபுத்தி தருமபாலன் இடம்விட்டு கீழ் இறங்கிய போது வீரர்கள் அருகே வந்தார்கள். சிரித்தார்கள்.

''ஏதேனும் கொடுங்களய்யா.'' என்று கெஞ்சினார்கள்.

பையில் கை விட்டு ஆளுக்கு ஒரு பொற்கழஞ்சு கொடுத் ததும் காலைதொட்டு வணங்கினார்கள். ஊழல் நிறைந்த அரசாங்கம் என்று அது சொல்லியது. இங்கே கங்கே யாதவின் எல்லா செயல்களும் எடுபடும் என்று தெரிந்தது. சோழ மன்ன ருக்கு இந்த பேச்சு பற்றி ஒரு ஓலை அனுப்ப வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

''கடல்வழியாக ஒரு தாக்குதல் இருக்குமோ இராஜேந்திர சோழர் கிடுக்கி தாக்குதலில் பெயர் பெற்றவராயிற்றே.'' தண்ட புத்தி தர்மபாலன் கேட்டான்.

''இருக்க வழியில்லை.'' என்று கங்கே யாதவ் பதில் சொன் னான்.

''அவ்வளவு நாவாய்கள் இராஜேந்திர சோழனிடம் இல்லை. அதுதவிர வடகிழக்கு பருவமழை ஆரம்பித்துவிட்டால் அதை மீறிக்கொண்டு நாவாய் உள்ளே வராது. பின்னே தள்ளப்படும். கடல் சீற்றம் இருக்கும், மழை அதிகம் இருக்கும் என்றால் மரக்கலன்கள் கடலில் தத்தளிக்குமே தவிர, நாவாய்கள் மண லில் சொருகிக் கொள்ளுமே தவிர, தட்சிணலாடம் நோக்கியோ, தண்டபுத்தி நோக்கியோ வராது.

ரணசூரனின் தேசம் தட்சிணலாடதேசம். கோசல தேசத்திற்கு கடற்கரை இல்லை. கோவிந்த சந்திரன் இது பற்றி எந்த ஞானமும் இல்லாதவன். எனவே, இராஜேந்திரசோழன் வருவதாய் இருந்தால் ஒற்றை கோடாய் வருவான். ஒருவேளை திரும்பி கோசல தேசத்திற்கு போய் பிறகு உள்ளுக்குள்ளே தட்சிணலாட தேசத்தை நோக்கித்தான் வருவான். தண்டபுத்தியிலேயே தடுத்து நிறுத்திவிட்டால் கோசல தேசம் பிழைத்துவிடும். தண்டபுத்தியிலேயே தடுத்த நிறுத்த உதவி செய் என்றுதான் கோவிந்த சந்திரனை கேட்க வேண்டும். ரணசூரனிடம் கேட்க வேண்டும். இந்த இடத்தில் மஹிபாலனை எவ்வளவு நம்புவது என்று தெரியவில்லை. அவன் எவனையும் நம்பாதவன். தன்னை மட்டுமே நம்புபவன். பேச வேண்டும் என்று மூன்று முறை ஓலை அனுப்பியதும் அதையெல்லாம் என் தாயாதிகளிடம் வைத்துக்கொள். இங்கு வராதே. கொல்லப்படுவாய் என்று பதில் அனுப்பினான். மிகப் பெரிய முட்டாளாக இருக்கிறானே என்ற ஏக்கம் வந்தது.''

''அவன் பின்னே இருக்க நாம் சோழ தேசத்திடம் அடிபட்டால் அவனுக்கு என்னை வெல்லுவது எளிதல்லவா.'' ரணசூரன் கேட்கும் போது பதில் சொல்லவில்லை.

மஹிபாலனை மடக்கியே ஆகவேண்டும். என்ன செய்வது. மழை தள்ளி வருமாம். ஐப்பசி இருபத்தைந்து தேதிக்கு வருமாம். அதற்குள் பல்வேறு விஷயங்கள் நடத்திவிடலாமே. தீவிரமாக யோசித்தான். கங்கே யாதவுக்கு போர் பற்றி யோசிக்கத் தெரியும்.

கரை இறங்கிய மாணிக்கவாசகத்தை சோழ வீரர்கள் சுற்றி வளைத்து பிடித்துக் கொண்டார்கள். உப தளபதிகள் அதை கேட்டு ஓடி வந்தார்கள்.

''அறிவு இருக்கிறதா உனக்கு'' என்று ஆரம்பித்தார்கள்.

''உன் பாண்டிய தேசத்து புத்தியை காட்டிவிட்டாயே.'' என்று சீறினார்கள். கடுமையாக வசை மாரி பொழிந்தார்கள். மாணிக்க வாசகம் ஆடிப் போனான்.

''என்ன தவறு செய்து விட்டேன்.'' கேட்டான்.

''யாரையும் கேட்காமல் நடுக்கடலுக்கு ஏன் போனாய்.''

''பல்வேறு வேலைகள் இருக்கிறதய்யா. இராஜேந்திர சோழருக்காகத்தான் போனேன்.''

''சொல்லிவிட்டு போய் தொலைய வேண்டியது தானே.''

''எதற்கு சொல்வது. என்னவென்று சொல்வது. ஒரு நாளில் போய் திரும்பிவிடலாம் என்று நினைத்தேன். போகப் போக வேலைகள் அதிகமாகிவிட்டன.''

''என்ன வேலைகள்.''

''உங்களுக்கு சொன்னால் புரியாது.''

''திமிர் பிடித்து அலைகிறாய். அரசருக்கு உடன் இருக்கிறாய் என்பதால் அமைதியாக இருக்கிறோம். இல்லையென்றால் பல்லை பெயர்த்து விடுவோம்.''

''வாடா வா. உனக்காயிற்று. எனக்காயிற்று.'' மாணிக்கவாசகம் வாள் உருவிக் கொண்டான். வந்தவர்கள் பாய்ந்து வாளை பிடுங்கி போட்டார்கள்.

''அமைதியாக இரு. அரசர் எவ்வளவு கடுமையாக உன்னை கோபித்துக் கொண்டார் என்று உனக்கு தெரியவில்லை. அரண்மனைக்கு வா. வந்து கசையடி வாங்கிக் கொள்.''

''ஒரு தவறும் செய்யவில்லையே, இராஜேந்திரருக்கு விசுவாசமாகத்தானே இருந்தேன்.''

''கூப்பிட்டபோது இல்லையென்றால், உன்னை காணோம் என்றால், யாருக்கும் உன் இருப்பு தெரியவில்லையென்றால் அது சந்தேகம் எழுப்பாதா. என்ன இவ்வளவு மதியிலானாக இருக்கிறாய். தலை வழுக்கை. உள்ளுமா ஒன்றும் இல்லாமல் போய்விட்டது.''

''அதிகம் பேசுகிறீர்கள்.''

''நாங்கள் பேசவில்லை. போய் செருப்படி வாங்கிக் கொள். போ.'' மாணிக்கவாசகம் கலவரமானான். போய் நல்ல நீரில் குளித்தான். சுடச்சுட சோறு உண்டான். நெற்றியில் திருநீறு பூசிக்கொண்டான். அரண்மனை நோக்கி நடந்தான். சோழ

வீரர்கள் இடைவெளி விட்டுப் பின்தொடர்ந்தார்கள். அரண்மனை வாசலில் நின்று நூல் எடுத்து காற்று திசை பார்த்தான்.

இடுப்பிலிருந்து காந்த ஊசி எடுத்து அகல் விளக்கு எண்ணெயில் போட்டு பார்த்தான். காந்தம் வடதிசை காட்டியது. காற்று தெற்கிலிருந்து வடக்காக போயிற்று.

ஒரு வீரனிடம் வளையெறி கேட்டு வாசலில் நின்று வீசி எறிந்தான். வளையெறி சீறி மேலே போயிற்று. திரும்பி வர, இரண்டு வினாடிகள் ஆயின. உச்சியில் ஒரு தயக்கம் தெரிந்தது. திசைக்கு அல்லாடுவது புரிந்தது. பிறகு புவி ஈர்ப்பின் காரணமாக தரைக்கு வந்து 'தடேர்' என்று விழுந்தது. வளையெறியை தடவி பார்த்தான். ஈரம் இருந்தது. பிறகு மெல்ல நடந்து அரண்மனை வாசலை அடைந்தான்.

சபை கூடி இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் அவன் வருகை இருந்தது. அங்கங்கே எல்லோரும் ஒருமாதிரி பாவமாக அவனை பார்த்தார்கள். அவனுக்கு கலவரம் அதிகமாயிற்று.

ஓலைநாயகம் எதிர்கொண்டார்.

''ஒரு நல்ல நிலைக்கு வந்தாய். உன்னை அருமையாக பாராட்டினார். இப்படி குப்புற விழுந்து விட்டாயே. உன்னால் நான் பிரம்படி வாங்கியிருப்பேன். இதைக்கூட கவனிக்காமல் நீ என்ன ஓலைநாயகம் என்று என்னையும், உபதளபதிகளையும் வெட்கக் கேடான வார்த்தைகளில் மாமன்னர் கேட்டார். பதில் சொல்ல முடியவில்லை.

நீ சோழப்படைக்கு உதவியா என்று பலத்த சந்தேகம் எழுகிறது. ஏதாவது ஒற்றறிய போனாயோ என்ற கேள்வி வருகிறது. ஏன் சொல்லாது போனாய்.''

''அய்யா. உங்களுக்கெல்லாம் எப்படி புரிய வைப்பதென்றே தெரியவில்லை. காலையில் போய் கடல் பார்த்து விட்டு மாலையில் திரும்பத்தான் எண்ணம். கடலில் சில சுழல்கள் இருந்தபிறகு நான் தொடர்ந்து அறிந்துகொள்ள உள்ளே போனேன். திரும்பி வர இரண்டு நாளாயிற்று, இதில் என்ன கொலை பாதகம் செய்துவிட்டேன் என்று தெரியவில்லை. இதில் எங்கே துரோகம் இருக்கிறது என்று புரியவில்லை.''

''சொல்லாமல் போனது பிசகு.''

''போங்களய்யா. உங்களோடு என்னால் பேச முடிய வில்லை.''

''இப்படித்தான் அவர் கேட்கப் போகிறார். அப்பொழுது பேசித்தானே ஆகவேண்டும்.''

''பேசிக் கொள்கிறேன். வழிவிடும்.'' அவன் அரண்மனைக் குள் ஏறினான். உபதளபதிகள் தலையில் அடித்துக் கொண் டார்கள். எல்லோர் பாவனையும் பார்த்து அவனுக்கு லேசாய் உதறல் எடுத்தது.

''உட்கார்ந்து கொள். குடிக்க ஏதேனும் வேண்டுமா.'' அவனை உபசரித்தார்கள். குடிக்க மோரும், சுட்ட மீனும் கொடுத்தார்கள். அவன் வயிற்றில் அமிலம் அதிகம் சுரந்ததால் பசியோடு உண்டான். ஏப்பம் விட்டான். காத்திருந்தான்.

''இன்னும் அரை நாழிகை ஆகும். அவர் உன் மீது கோப மாக இருக்கிறார். உன் பெயரை சொன்னதும், எங்கு போய் தொலைந்தான் என்றுதான் கத்தினார். கோபம் குறைந்து வருவார். சரியாக, நிதானமாக, மரியாதையாக பேசு.'' அச்சுறுத் தினார்கள். அவன் காத்திருந்தான்.

இன்னும் ஒருமுறை ஒருகுவளை நீர்கேட்டு குடித்தான். அரச சபை வேகமாக கூடியது. அரசர் வருகைக்காக காத்திருந் தார்கள். எல்லோரும் மௌனமாக இருந்தார்கள். உபதளபதி கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அரசர் வந்தார். மேடை ஏறினார். சிங்காசனத்தில் அமர்ந்து கொண்டார். கைகூப்பினார்.

''என்ன இன்று விசேஷம்'' என்று கேட்டார்.

''மாணிக்கவாசகம்.''

''அடாடா. பெரியவர் வந்துவிட்டாரா, வர வேண்டும், வரவேண்டும், சோழ தேசத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இந்த மகாவீரரை நான் போற்றுகின்றேன். வர வேண்டும். அவருக்கு எனக்கருகே ஆசனம் போடுங்கள்.'' ஒரு ஆசனத்தை எடுத்து மேடைக்கு கீழே போட்டார்கள்.

மாணிக்கவாசகம் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான். மறுபடியும் அருகே போனான். வணங்கினான். கை கூப்பினான். அவன் கண்களில் நீர் கோர்த்தது.

இராஜேந்திர சோழருக்கு அவனை மன்னிக்க அது போதுமானதாக இருந்தது.

"துரோகி என்று திட்டியிருப்பார்களே."

"ஆமாம் மன்னா."

"நீ துரோகி இல்லையென்று எனக்குத் தெரியும். ஆனால் உன்னை முட்டாள் என்றுதான் கருதுகிறேன். அரசவையில் முக்கியமான நேரத்தில் உன் இருப்பு பற்றி தெரியாவிட்டால் அது பெரும் பிரச்சனையை கிளப்பும். சரி, நீ எங்கு போயிருந் தாய். நீ எது செய்திருந்தாலும் காரணமாகத்தான் செய்வாய் என்று நான் புரிந்து கொள்கிறேன். எனக்கு பிரச்சனைகள் நெருக்குகின்றன. உன்னுடைய உதவி தேவைப்படுகிறது. அதனால் கேட்கிறேன். எங்கு போயிருந்தாய்."

"உங்களுக்கு உதவி செய்யத்தான் மன்னா."

"அடடா, அடடா, என்ன ஒரு பண்பாடு, பாண்டிய தேசத்து பண்பாடு. மன்னனுக்கு உதவி செய்யவே பிறந்திருக் கின்ற வீரனல்லவா. எங்கு போயிருந்தாய்."

"கடலுக்குள் போயிருந்தேன்."

"ஏன் போயிருந்தாய்."

"காற்று திசை மாறவேயில்லை. புரட்டாசி முடியப் போகிறது. வடகிழக்கு பருவகாற்று வரவேண்டும். வரவே இல்லை. பின்திசை நோக்கியே நாவாய்கள் போய்க் கொண் டிருக்கின்றன. கடாரத்து நாவாய்களும், மாபாளத்து நாவாய் களும், சீன நாவாய்களும் பெருமளவு நடமாடிக் கொண் டிருக்கின்றன. என்ன இத்தனை நாவாய்கள் என்று யோசித்து பார்த்தேன். இன்னும் தொடர்ந்து அருகே போனேன். அவர்கள் மீன் தடம் காட்டினார்கள்."

"மீன்தடம். அப்படியென்றால்."

''நீர்தடம் இருக்கின்ற இடம், மீன்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகர்ந்து போகும். அப்பொழுது நீருக் குள்ளேயே ஒரு பாதை போல வளைந்து வளைந்து ஒரு நீரோட்டம் போகும். அதில் மரக்கலன்களை செலுத்தினால் பத்து நாட்களில் போக வேண்டிய தூரத்தை மூன்றுநாள். நான்கு நாட்களில் கடந்து விடலாம். மரக்கலம் உறுதியாக இருந்தால், பாய்மரம் பெரிதாக இருந்தால் இன்னும் வேக மாகப் போகும். படகில் ஏறி அந்த நாவாய் மீது அடித்தால் படகு சுக்குநூறாய் போகும் அளவிற்கு வேகம் இருக்கும்.

வணிகர்கள் மிக ஆனந்தமாக பாய்மரங்களை திசை மாற்றி நகர்ந்து கொண்டிருந்தார்கள். அது தவிர, இன்னொரு விஷயம் தெரிந்தது.''

''என்ன அது?''

''இலங்கையிலிருந்து ஆமைகள் வங்கம் நோக்கி போகின்றன.''

''ஆமைகள் போகின்றன. அப்படியென்றால்.''

''ஆமைகள் தன்னுடைய தாய்நாடான இலங்கைக்கு போய் அங்கு முட்டை இட்டுவிட்டு திரும்பி வரும்.''

''அடடே. அவ்வளவு தொலைவா.''

''ஆமாம். ஆமைகள் இந்த நீரோட்டத்தில் கலக்கும்.''

''நீரோட்டம் அவைகளுக்கு எப்படி தெரியும்.''

''அது கடவுள் கொடுத்த வரம். அந்த நீரோட்டத்தை அறிந்து கொள்ளும். இந்த நேரம் இந்த நீரோட்டம் இருக்கும் என்பதையும் அவை தெரிந்து கொள்ளும். அந்த நீரோட்டத்தில் அவைகள் கலந்தால் மூன்று நாளில் வங்கத்திலிருந்து இலங்கை யாழ்ப்பாணத்தை அடையும்.''

''அடேயப்பா. மூன்று நாளா.''

''ஆமாம். அம்மாதிரி ஆயிரக்கணக்கான ஆமைகள் தெற்கேயிருந்து வடக்கே போகின்றன.''

''ஆமைகள் ஏன் வடக்கே போக வேண்டும்.''

''கங்கை நதி முகத்துவாரத்தில் தாவரங்கள் இருக்கின்றன. வெகு தொலைவிலிருந்து தாவரங்கள் அடித்து வரப்படுகின்றன. கோதுமை பூக்கள், நாணல்கள், கள்ளிச் செடிகள் அடித்து வரப்படுகின்றன. நல்ல வண்டல் மண் படிகிறது, அது குளுமையை கொடுக்கிறது. கங்கையில் உள்ள இந்த உணவுகளை உண்ணவும், இனப்பெருக்கம் செய்யவும் அந்த இடத்திலே வருகின்றன. வண்டல் மண்ணில் அழுந்த உட்கார்ந்து கூடி களிக்கின்றன. இன்னும் உள்ளே புகுந்து தாவரங்களை தேடுகின்றன. இறந்து போன கொழுத்த மீன்களும் அவைகளுக்கு உணவாகின்றன. எனவே, கூடுகின்ற இடம் வங்கமாகவும், குழந்தை பெறும் இடம் யாழ்ப்பாணமாகவும் இருக்கிறது.''

''அடேயப்பா. அடேயப்பா. என்ன அற்புதமான விவரம் பார்த்தீர்களா.'' சபை நோக்கி நகர, சபையில் உள்ளோர் எழுந்து நின்று மாணிக்க வாசகத்தை சூழ்ந்து கொண்டார்கள்.

''இது நமக்கு நல்லது.''

''எவ்வகையில்''

''இந்த ஆமைகள் போகின்ற நீரோட்டம் மீன்களை விட வேகமானவை. மீன்கள் போகும் நீரோட்டத்தை விட ஆமைகள் போகும் நீரோட்டம் வேகமானவை. கிட்டத்தட்ட ஆமைகள் இயங்காமல் நீரோட்டத்தில் மிதந்தபடியே இருக்கும். அந்த நீரோட்டம் இழுத்துக்கொண்டு போய் வங்கத்தில் சேர்ந்து விடும்.

இப்படி ஆமைகள் போவது போல நம்முடைய நாவாய்கள் போனால் ஒரு நாளில் வங்கத்தை அடைந்து விடலாம்.''

''அடேயப்பா. அற்புதமான தகவல், இந்த நீரோட்டம் எவ்வளவு நாள் இருக்கும்.'' ஒரு உபதளபதி வினவினார்.

''ஆமாம். எவ்வளவு நாள் இருக்கும் சொல்.''

''இதற்கு கணக்கு ஒன்றும் கிடையாது. இதை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் வெகுநாள் இருக்கும். சில சமயம் நீரோட்டம் நிதானமாகும். சிலசமயம் பேய் வேகத்தில் போகும். இதன் காரணம் அறிய முடியவில்லை. நாம் ஆமை

களைத் தான் நம்பி இருக்கிறோம். அவற்றை நம்பித்தான் இறங்க வேண்டும்.''

''இந்த நீரோட்டம் அல்லாது துடுப்பு போட்டு அல்லது பாய்மரம் விரித்து வங்கம் போக வேண்டுமென்றால்.''

''மூன்று நாட்கள் ஆகும். வடகிழக்கு பருவ மழை வந்து விட்டால் நகரவே முடியாது. தத்தளித்து பின்னடைய வேண்டி யிருக்கும். அல்லது எங்கேனும் தண்டபுத்தியில் சொருகி நிற்க வேண்டும்.''

''வடகிழக்கு பருவமழை எப்பொழுது துவங்கும்.''

''வழக்கமாக ஐப்பசி ஆரம்பத்தில், ஆனால் இன்னும் தென்திசையில் இருந்துதான் காற்று அடிக்கிறது.

நடு நாட்டிலிருந்தும், தொண்டை நாட்டிலிருந்தும், கீழை சாளுக்கியத்திலிருந்தும் மழை பெய்ததற்கான தூசுகள் தெரிகின்றன.''

''அதென்ன தூசுகள்.''

''நீர் தூசுகள் தெரியும். எவ்வளவு வேகமாக வருகிறது. எத்தனை கனமாக வருகிறது என்று. இது கடலில் நன்றாகத் தெரியும்.''

''ஆக என்னுடைய கேள்வி இதுதான் மாணிக்க வாசகம். எப்பொழுது வங்கம் நோக்கி அரையன் ராஜராஜன் படை யெடுக்கலாம். எப்பொழுது நாம் வங்கம் நோக்கி நகரலாம். நம் நாவாய்களில் வங்கம் போய் அங்கிருந்து பின்புறமாக தாக்க லாம். எப்பொழுது போகக்கூடாது. எந்தவித துன்பம் வரும். எப்படி போனால் சரியாக இருக்கும். இந்த கேள்விகளுக்காகத் தான் உன்னை தேடி அலைந்தேன்.''

''மன்னா, விவரமாகச் சொல்கிறேன்.'' மாணிக்கவாசகம் மிகப்பெரிய சொற்பொழிவு நடத்தினான். இராஜேந்திரரும், மற்ற உபதளபதிகளும் ஆரவாரம் செய்தார்கள். மாணிக்கவாசகத் தின் தோளை தட்டி கொடுத்தார்கள்.

''பாண்டியநாட்டு இளைஞனே, மாணிக்கவாசகனே, உன்னை தளபதி பதவிக்கு உயர்த்தி 'தண்டநாயகன்' என்று

அழைக்க வைக்கிறேன். உன்னுடைய தகவல்கள் உற்சாகத்தை அளிக்கின்றன. இவைகள் மிகச் சரியாக வந்துவிட்டால் பாண்டிய வீரனே சோழதேசத்தில் நீ மாதண்டநாயகனாக மாற்றப்படுவாய். உனக்கு அரையன் என்ற பட்டமும் கிடைக்கும். சோழதேசத்தில் மிகப்பெரிய மாளிகையும், நல்ல இடமும் கிடைக்கும். நீ விரும்பினால் பாண்டிய தேசத்தில் உன்னுடைய குடித்தனத்தை வைத்துக்கொள்ள முடியும்.

நீ நன்றி உள்ளவன் என்பதை உணர்கிறேன். இன்று என்னோடு பகல் உணவு அருந்து.''

கூட்டம் திகைத்தது, யாரையும் இப்படி மன்னர் அழைத்ததேயில்லை. மிகச் சிலரையே மன்னர் இப்படி கூப்பிட்டு இருக்கிறார். பாண்டிய தேசத்து வீரன் மாணிக்கவாசகம் எழுந்தான். மேடையில் ஏறினான். அவர் கால்களை பிடித்துக் கொண்டான். முத்தமிட்டான். எழுந்து கண்ணீரால் அவர் முழங்கால்களை கழுவினான். அவர் கைகளை பிடித்துக்கொண்டான்.

''என் தாய், தந்தை சத்தியமாக, சொக்கநாதர் சத்தியமாக, என்பிள்ளைகள் சத்தியமாக உமக்கு உறுதுணையாக உயிருள்ளவரை இருப்பேன். உங்கள் பதவிகளை விட, என்னை உணவருந்த அழைத்தீர்களே அந்த அன்பு என்னை கொன்று போட்டிருக்கிறது. அந்த உணவை உண்ட எவனும் உங்களுக்கு துரோகம் செய்ய மாட்டான். நான் என்ன பேறு செய்தேன் என்று தெரியவில்லை. என் வீட்டிற்கு போய் இதை சொல்ல வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. நான் சொல்வேன்.

நாம் எல்லோரும் போய் ஜெயித்து, வெற்றி பெற்று வீடுகளுக்கு போய் நல்ல செய்தி நிச்சயம் சொல்வோம்.'' அவன் மறுபடியும் வணங்கினான்.

அந்த கூட்டம் அவனை ஆரவாரித்து வாழ்த்து சொல்லிற்று.

''மாணிக்கவாசகம் எனக்கு ஆமை ஓட்டத்தை பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆயிரக்கணக்கில் ஆமைகள் போகும் என்று சொல்கிறாயே, அதை கவனிக்க வேண்டும் போல் இருக்கிறது.''

''ஆயிரக்கணக்கில் இல்லை மன்னா. லட்சக்கணக்கில் போகும்.''

''அப்படியா.''

''கரும்பலகையாக அப்படியே மிதந்து செல்லும். வெறும் தலை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். அருகே போய் உற்று பார்த்தால் திருட்டு முழி முழிக்கும். அவைகளை பார்ப்பதே ஒரு சுகம், நாளை புறப்படலாமா.''

''நிச்சயம் போகலாம்.'' ஆனால் அன்று இரவு இராஜேந்திர சோழருக்கு கடும் இருமல் ஏற்பட்டது. ஜுரம் வந்தது. சளி துப்பினார். நெஞ்சில் மருந்து தடவினார்கள். முகர்ந்து பார்க்க புகை போட்டார்கள். மருந்து திரியில் இணைத்து மூச்சிழுக்கச் சொன்னார்கள். உள்ளுக்குள் குளிகை கொடுத்தார்கள். மறுநாள் காலை உச்சிநேரம் வரை இராஜேந்திரசோழர் அயர்ந்து தூங்கினார். மாணிக்கவாசகம் காத்திருந்து தன்னுடைய இடத்திற்கு போனான். இன்னும் சில நாட்களுக்கு படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டாம் என்று வைத்தியர்கள் பணிவாகச் சொன்னார்கள்.

தலைகுனிந்து மிகக் கவலையோடு இராஜேந்திர சோழர் அமர்ந்திருந்தார். வீரமாதேவி அருகில் வந்தாள். ''எதற்கு இவ்வளவு கஷ்டப்படுத்திக் கொள்கிறீர்கள். உங்கள் உடல் நலத்தை நீங்கள் பேண மறுக்கிறீர்கள். உங்கள் உடல் நலத்தின் கேடிற்கு காரணம் நீங்கள் தீவிர சிந்தனையில் இருப்பது, பதறுவது. உங்கள் இரத்த கொதிப்பு அதிகமாக இருக்கிறது என்று வைத்தியர் சொல்கிறார். இரத்த கொதிப்புக்கு மருந்து கொடுத்தால் அயர்ந்து தூங்குகிறீர்கள்.''

''அதுதான் எண்பத்திரண்டு வயது வரை உயிரோடு இருப்பேன் என்று ஜோசியர் சொல்லி விட்டாரே.''

''ஆமாம். உயிரோடு இருப்பீர்கள். சிற்சில உபாதைகளோடு.''

''இப்படியே என்னை பயமுறுத்திக் கொண்டிரு.''

''நான் பயமுறுத்தவில்லை. உங்கள் நிலையை நீங்கள் சரியாக சீர்தூக்கி பார்க்கவில்லை. இரத்தக் கொதிப்புக் கூடாது

என்பது புரியவில்லை. நான் இனிமேல் மாமிச உணவு தரப் போவதில்லை. உப்பு குறைக்கப் போகிறேன். கஞ்சியும், பாலு மாய், பழங்களுாய் நீங்கள் இரண்டொரு நாள் இருக்க வேண் டும். உங்கள் உடல் பருமன் குறைய வேண்டும். இன்னொரு விஷயம் சொல்கிறேன், கோபித்துக் கொள்ளாதீர்கள்.''

''என்ன?''

''கூடல் வேண்டாம்.''

''உனக்கு பொறாமையா. பரவையோடு பக்கத்தில் படுத்துக் கொண்டால் உனக்கு நவத்துவாரமும் எரிகிறது.''

''இல்லவே இல்லை. நான் சொன்னால் இப்படி எனக்கு கெட்ட பெயர்தான் வருகிறது. இதை பரவையிடம் போய் சொல் வீர்கள். பரவை என்னை பார்த்து முகம் தூக்குவார். கை நொடிப் பார். எல்லோரிடமும் போய் வீரமாதேவி என்னை பார்த்து பொறாமைப்படுகிறாள் என்று சொல்வார்.''

''அட, இது நன்றாய் இருக்கிறதே. பரவையிடம் இதை சொல்லிவிடலாமே.''

''உங்களுக்கு உதவி என்று வருகிறேன் பாருங்கள். என்னை சாட்டையால் அடிக்க வேண்டும்.'' பரவையை உடனே வரச்சொல்லி, 'பரவையை வரச் சொல்', ஒரு தாதியை ஏவினார். தாதி ஓடினாள்.

''வேண்டாம் இந்த விஷப்பரிட்சை. குடும்பத்திற்குள் ஏன் குழப்பத்தை ஏற்படுத்துகிறீர்.''

''நீங்கள் இரண்டு பேரும் சண்டை போட்டால் எனக்கு சந்தோஷமாக இருக்கும். நான் ஆனந்தமாக பார்ப்பேன். அப் பொழுது என் இரத்தக் கொதிப்பு குறையும்.''

''அப்படியானால் சரி, உங்களுக்காக நான் என்ன வேண்டு மானாலும் செய்கிறேன். எழுந்து நின்று வீரமாதேவியை அணைத்துக் கொண்டார். தூக்கி நிறுத்தி இறுக்கிக்கொண்டார். உதடுகளை அழுத்த பதிந்து முத்தமிட்டார். முதுகு தடவினார். இறுக்கி பிருஷ்டத்தை பிடித்தார்.

''இப்பொழுது சொல். நான் செய்வது காதலா, காமமா.''

''சாகடிக்காதீர்கள் மன்னா.''

''இப்பொழுது சொல். நான் உன்னை இப்போது கட்டித் தழுவிக் கொண்டிருப்பது காதலா, காமமா.''

''எனக்கு தெரியாது.''

''இது பாராட்டு. என்மீது நீ கொண்டிருக்கும் அக்கறைக்கு என்னுடைய நன்றி. என் மனைவி மிக மிக விருப்பமானவள் என்கிற கொண்டாட்டம். வீரமாதேவி என்று ஒருவள் இல்லாம லிருந்தால் நான் என்ன கதியாகியிருப்பேன் என்று தெரியாது, வீரமாதேவியை வாழ்க என்றா நான் சொல்வது. வளைத்து பிடித்து முத்தம்தான் இடவேண்டும். சொல் இது காதலா, காமமா.'' அவர் கைகள் புகுந்து விளையாடின. அவள் அமைதி யாக இருந்தாள். கண்களின் ஓரம் நீர் கோர்த்தது.

''காதல்தான். ஆனால் காமத்தில் ஈடுபட நான் அனுமதிக்க மாட்டேன். என்னை அடித்தாலும் நான் உங்களை இழுக்க மாட்டேன். பரவைக்கு அது தெரியவில்லை. நீங்கள் தொட் டால் போதும் இளகி விடுகிறாள். முகம் சிவந்து முலை பருத்து பெரிய வேட்டைக்கு தயாராகி விடுகிறாள்.

எனக்கு சந்தோஷம்தான். ஆனால் இப்படி இருமுகிறீர் களே. இது நல்லதா. இரவெல்லாம் தலைகுனிந்து உட்கார்ந்துக் கொண்டிருக்கிறீர்களே. இது ஒரு மன்னருக்கு அழகா. இவ்வ ளவு தொலைவு வந்து விட்டோம். இன்னும் போக வேண்டும். இந்த நடு இடத்தில் தவித்துக் கொண்டிருக்கிறோமே. இது சரியா.'' அவள் நிதானமாகவும், அழகாகவும் பேசினாள். மெல்ல அவரை விலக்கினாள். அவர் விலகி நின்றார்.

சாளரம் நோக்கி நடந்தார். நூல் எடுத்து காற்றின் திசை பார்த்தார்.

''பைத்தியம் பிடித்துவிட்டது உங்களுக்கு. எல்லோரும் நூல் எடுத்து பார்க்க ஆரம்பித்து விட்டீர்கள். வடகிழக்கு பருவ மழை என்பது எப்பொழுது வேண்டுமானாலும் வரும். வரட் டும், இன்ன தேதிக்கு மழை வரும் என்று யார் சொல்ல முடியும். மழை வருவது பற்றி துல்லியமாக கணிக்க மனிதனால் முடி யாது. அது கடவுளின் செயல்.''

''அடுத்த கட்ட போர் கடினமானது. அவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டால் நமக்கு ஆபத்தானது. நாம் பின்னடைய நேரலாம். எனவே, அப்படி பின்னடைந்தால் இராஜேந்திர சோழர் முன்னே போக வேண்டும். ஒட்டதேசத்தின் பாதையை அவர்கள் தாக்கிவிட்டால் நாம் பெரும் படையோடு ஒட்ட தேசத்தின் தலைநகருக்குள் போக வேண்டும். அதற்கு தயாராக இருக்க வேண்டும்.''

''பின்னடைவெல்லாம் வராது.''

''நல்லது. வராமல் இருப்பது நல்லது. வந்தால் என்ற கேள்வியும் உள்ளுக்குள் இருக்க வேண்டும். நான் வேறு ஒரு காரியம் செய்யப் போகிறேன். நீ அதை எதிர்க்கப் போகிறாய் வீரமாதேவி.''

''என்ன?''

''நான் கடற்பயணம் மேற்கொள்ளப் போகிறேன். வடக்கே நகர்ந்து மாணிக்க வாசகத்துடன் கங்கை துறைமுகத்தில் இறங்கி அங்கிருந்து பெரும் படைகளோடு கிடுக்கித் தாக்குதல் நடத்தப் போகிறேன்.''

''அப்படியா. வணக்கம். 'ஜெய விஜயீபவ' உங்கள் வெற்றி பெரும் வெற்றியாக மாறட்டும். அதற்கு என் வாழ்த் துக்கள். இன்றிலிருந்து ஒருவேளை மட்டும் உணவருந்தி உபவாசம் இருந்து பெருவுடையாரை வேண்டிக் கொள்கிறேன். எங்கு வேண்டுமானாலும் போங்கள்.''

அவள் மேல் துணியை உதறி சுற்றிக் கொண்டு அந்த இடம் விட்டு வேகமாகப் போனாள். இந்த நேரத்தில் தன் கடற் பயணத்தை யாரும் ஆதரிக்க மாட்டார்கள் என்று இராஜேந்திரர் புரிந்து வைத்திருந்தார்.

வீரமாதேவி போதாது. வைத்தியர்கள் போதாது. அரசவை அதிகாரிகள், சேனாதிபதிகள் போதாது. உள்ளே இருக்கின்ற மனதை பரிமாறிக் கொள்ள வேறு யாரோ வேண்டும். வழி நடத்த ஒரு குரு வேண்டும். தந்தைக்கு கருவூர்தேவர் இருந் தார். அவரை காணோம். இருக்கிறாரா. இல்லையா என்று தெரிய வில்லை. தந்தை குருவிற்கு ஏங்கினார் அதனால் கருவூர்தேவர்

வந்தார் என்று உறவினர்கள் சொல்வார்கள். நான் குருவிற்கு ஏங்கவில்லையா. என்னை ஏன் வழிநடத்த ஒரு குரு இல்லை. எனக்கு ஏன் நல்லது. கெட்டது செய்ய ஒரு குரு இல்லை. இந்த தவிப்பை குறைக்க ஏன் குரு இல்லை.

அவர் அறையில் வலதும், இடதும் அலைந்தார்.

குரு வேண்டாம். எனக்கு நானே குருவாவேன். என்னை நானே குருவாக மாற்றுவேன். இன்னொருவரை ஏன் கேள்வி கேட்க வேண்டும். என்னையே கேள்வி கேட்கிறேன். இன்னும் தெளிவாக உற்றுப் பார்க்கிறேன். இன்னும் அமைதியாக இருக்கிறேன். தெளிவாக அமைதியாக, பேசாது இருக்க கடல்வழி சிறந்தது. கடல் பயணம் சிறந்தது. இந்த நோயை மருந்துகள் மூலம் கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு வைத்தியரை அழைத்துக் கொண்டு கடற்பயணம் நோக்கி போக வேண்டும். இது சரியா, யோசிக்க வேண்டும்.

கண்மூடி யோசனையில் ஆழ்ந்தார். ஆழ்ந்த யோசனைக்கு பெயர்தான் தியானம்.

இந்திரதத்தன் குடும்பம் வியந்துபோனது. கீழை சாளுக்கியத்தின் செழுமை தெரியும். ஆனால் தெற்கே போகப் போக மாமரங்கள் பழுத்து கிடப்பதும், நல்ல ஓடைகளால் நிலம் செழிப்பாகி விளைச்சல் அமோகமாக இருப்பதும், கோவில்களில் சிற்பங்கள் அற்புதமாக இருப்பதும், கிராமங்களில் செல்வம் நிறைந்திருப்பதும் கண்டார்கள். பஞ்சமர்கள் இடங்கள் கூட மிக சுத்தமாக இருந்தன. அவர்கள் புலமை மிக்கவர்களாகவும் இருந்தார்கள். இரவு நேரம் ஒற்றை தந்தி வீணை மீட்டி அவர்கள் பாடும் பாட்டு அற்புதமாய் இருந்தது. மொழி தெரியவில்லை. ஆனாலும் வைணவர்கள் நிறைந்த ஒரு சேரி பகுதியில், 'பாண்டுரங்கா பாண்டுரங்கா பாண்டுரங்கா' என்று பாடினார்கள்.

எங்கோ மேலை சாளுக்கியத்தில் இருக்கின்ற பராமரர்களால் பராமரிக்கப்படுகின்ற அந்த கோவிலின் தெய்வத்தை பற்றி படம் வரைந்து கொண்டு வேகமாக பாடினார்கள். அந்த பாண்டுரங்கன் இடுப்பில் கைவைத்து ருக்மணியோடு செங்கல் மீது நின்று கொண்டிருந்தான். சிவ ஸ்துதி செய்தார்கள். 'சிவ

சிவாய நமஹ; சிவாய நம ஓம். என்று திரும்ப திரும்ப பாடும் பாட்டில், விதம் விதமான குரலில் மன அழுக்கு துடைத்தார்கள். எல்லோரையும் பாட வைத்தார்கள்.

இந்திரதத்தனை எழுப்பி நிற்க வைத்து ஆடுங்கள். மனம் சலிப்புற ஆடுங்கள். முழு வேகத்துடன் ஆடுங்கள். இறைவனிடம் எல்லாம் ஒப்படைத்துவிட்டு ஆடுங்கள் என்றார்கள். கண்ணீர் பெருக இந்திரதத்தன் ஆடினார்.

உணவு மிக அருமையாக இருந்தது. கோழி உணவும், மீன் உணவும், காரக்குழம்பும், கோவைக்காய் கறியும், கீரை வகைகளும் எல்லா நேரமும் உணவுக்கு முன்னும், பின்னும் இனிப்புகள் பரிமாறப்பட்டன. விருந்து மாதிரியே எல்லா நாளும் இருந்தன.

எருதுகள் உயரமாகவும், பெரும் கொம்புகளுடனும் இருந்தன. பசுக்கள் மடி நிறைந்து அலைந்தன. எருமைப்பால்தான் அதிகம் உபயோகப்படுத்தப்பட்டது. எருமை வெண்ணையை மேலே பூசிக் கொள்ள கொடுத்தார்கள். அவர்களே தேய்த்து விட்டார்கள். கால்களை சுடுநீரில் வைத்து உருவி விட்டார்கள். நல்லெண்ணையை உச்சி தலையிலும், பிடரியிலும், அடி வயிற்றிலும், உள்ளங்காலிலும் தடவினார்கள். சூடு குறையும் என்கிறார்கள். தொண்டை நாடு கிறுகிறுக்க வைத்தது.

மயிலாப்பூர் என்ற கிராமத்தில் கடற்கரை ஓரம் பெரிய கோவில் இருந்தது. கோவில் சுற்றி கோட்டை இருந்தது. அந்த கோட்டைக்கு வெளியே பெரிய மணல்வெளி இருந்தது. சில சமயம் அலைகள் பொங்கி கோட்டை சுவரில் அடித்தன. உள்ளுக்குள்ளே கபாலீஸ்வரர் அமைதியாக இருந்தார்.

கபாலிகர்கள் மயிலாப்பூரை ஆட்சி செய்தார்களாம். சிவனைத் தவிர வேறு எவரையும் தொழுகிலோம் என்று உறுதியாக இருந்தார்களாம். சைவம் சாக்தத்தை விட தந்திரங்கள் நிறைந்தது. மூலமந்திரங்கள் உடையது. குழுவாக உட்கார்ந்து ஹோமம் செய்கிறபொழுதும், சிவனுக்கு அபிஷேகம் செய்கிற போதும் கூடுதலான சக்தி ஏற்படுகிறது. வேண்டுவன கிடைக்கிறது. பெண் போகத்தின் போதும் சிவனை உச்சரிப்பது மூலாதாரத்தை எழும்பச் செய்யும் என்றும், துறவு நிலைக்கு அழைத்துப்

போகும் என்றும், துறவு நிலைக்கு அழைத்துப் போகும் என்றும் அவர்கள் சொல்வார்களாம். போகத்தை முழுமையாக அனுபவிக்க சிவன் நாமம் உதவி செய்யுமாம் பிறகு வேண்டாம் என்ற எண்ணம் தோன்றுமாம். அனுபவித்து அறுத்து விடுதல் என்பது இதற்கு பெயராம். உயிர் நினைப்போடு இல்லாது, உடம்பு நினைப்போடு கூடலில் ஈடுபட்டால் மறுபடியும் மறுபடியும் முடியாத பிறகும் இவ்விதம் ஏற்படுமாம். மனம் காம வசப்பட்டே இருக்குமாம். அப்பா இது போதும். இந்த ஜென்மத்திற்கு போதும் என்ற கூடலில் ஈடுபடுவது ஒரு கலையாம். அதனால்தான் பெண்களை மனைவியராக ஏற்காது, வெறுமே கூடலுக்கான விஷயமாக காபாலிகர்கள் கொள்வார்களாம். பொது மகளிர் போதுமே என்பார்களாம். பொதுமகளிரை சந்தோஷப்படுத்தி அவளுக்கு நோய் தீர்த்து வித்தைகள் கற்றுக் கொடுத்து, ஆடச்சொல்லி, பாடச்சொல்லி அன்பால் அரவணைத்து பிறகு கூடலில் ஈடுபடுவார்களாம். பகலில் கூடுவதை வழக்கமாக கொண்டிருப்பார்களாம். இரவில் சுடுகாட்டில் வாசம் செய்வார்களாம். மண்டை ஓட்டை கையில் வைத்து இருப்பார்களாம். தடவி தடவி பார்ப்பார்களாம். இது உயிரோடு இருந்தது. இன்று இல்லை, நானும் இன்று உயிரோடு இருக்கிறேன். நாளை இல்லை என்பார்களாம். பிறகு எழுந்து நன்கு உணவு உண்டு பிற்பகல். நேரம் கூடலில் ஈடுபடுவார்களாம். மறுபடியும் எரியும் பிணத்திற்கு அருகே உட்கார்ந்து ஜபம் செய்வார்களாம். சுடுகாட்டு சாம்பலை உடம்பில் பூசிக் கொள்வார்களாம். சடைமுடியோடு இருப்பார்களாம். இங்கேயே மயிலாப்பூரிலேயே தங்கிவிடலாமா. இந்திரதத்தன் யோசித்தார்.

அருண்மொழிபட்டனும், அரையன் ராஜராஜனும் ஜகந்நாதர் கோவில் படிகளில் ஏறினார்கள். தொலைதூரம் வந்ததால் களைப்பாக இருந்தது. குளிக்க வேண்டும் போல் இருந்தது. கோவிலுக்குள்ளேயே ஸ்நான அறை இருந்தது. வெந்நீர் ஏற்பாடு செய்ய சுகமாக குளித்தார்கள். உடம்பில் நெய் பூசிக் கொண்டார்கள். உணவருந்தினார்கள். ‘இப்போது பிற்பகல் கோவில் மூடும் நேரம். எனவே, தயவுசெய்து காத்திருக்க வேண்டும்.’ பிராம்மண பூசாரிகள் வேண்டுகோளாய் சொன்னார்கள். கோவிலில் காற்று வரும் இடத்தில் அரையன் ராஜராஜனும், அருண்

மொழியும் உட்கார்ந்து கொண்டார்கள். அதை தாண்டியும் அவர்களுக்கு விசிறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. குடிப் பதற்கு பானகம் போன்ற ஒரு இனிப்புச்சாறு வழங்கப்பட்டது.

''கடல் பற்றி எதுவும் தெரியாது கடல்பயணம் செய் கிறேன் என்று சொல்கிறீர்களே, இது தேவைதானா.'' அரையன் ராஜராஜன் அருண்மொழிபட்டனை விசாரித்தார்.

''வேறு வழியே இல்லை.''

''இராஜேந்திரரை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா. மன்னர் சரி என்று சொன்ன பிறகு போங்களேன்.''

''மன்னர் கூடாது என்று சொல்லிவிட்டால், அவருக்கு இதுபற்றி சரியான அறிவுரைகள் சொல்லாது, இதுபற்றி தெரி யாது என்னை காபந்து செய்ய வேண்டும் என்ற எண்ணத் தில் என்னை வேண்டாம் என்று சொல்லி விட்டால். அது சரியாக வராது.''

''நீங்களாக போனால் மீறிப் போனது போல் ஆகாதா. அதற்கும் கோபிக்க மாட்டாரா.''

''கோபிக்கட்டும். அதை திசை மாற்றுவேன். இந்த விஷயம் தோல்வியில் முடிந்தால்தான் அவர் என்னை கோபிக்க போகிறார். மாறாக வெற்றியடைந்தால், மேலே இருந்து கிடுக்கி தாக்குதல் நடந்தால், அப்படி இருக்காது அல்லவா, தோல்வியுறுவது என்பது என்ன.''

''கடலில் மரணமடைவது.''

''ஆகவே அரசர் திட்டுவது பற்றி எனக்கு எந்த அக்கறை யும் இல்லை. ஜெயித்தால் கட்டிக் கொள்வார். அது பெரும் பேறு. எனவே வெகு நிச்சயமாக நான் கடல் பயணம் செய்யப் போகிறேன். வெகுதூரம் இல்லாது அலைகள் அதிகம் இல்லாத மூன்று கல் தொலைவில் இருக்கப் போகிறேன். ஒரு கல் தொலைவில் உள்ளே வந்தால் கரை தெரிந்து விடும். சில சமயம் மலைகள் கூட மூன்று கல் தொலைவில் தெரிகின்றவனவாம்.

நான் இருபத்தைந்தாயிரம் வீரர்களை அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்.''

''எப்படி, இருபத்தைந்தாயிரம் வீரர்கள் எப்படி?''

''நாவாய்கள் மூலம்தான்.''

''நாவாய் இருக்கின்றனவா?''

''இல்லை. நாவாய்கள் சம்பாதிக்க வேண்டும்.''

''எங்கே?''

''ஒட்ட தேசத்து கடற்கரையில்.

''பிறகு?''

''பிறகு அந்த நாவாய்களை வைத்துக் கொண்டு வடக்கே வரும் நாவாய்களை கொள்ளை அடிக்க வேண்டும். கடற் கொள்ளையர்களை அடித்து துரத்த வேண்டும்.''

''கடலிலேயே பிறந்து, கடலிலேயே வாழ்ந்த கடற் கொள்ளையர்களை, பத்து நாள் முன்பு நாவாய் ஏறிய உங்க ளால் அழித்து ஒழிக்க முடியுமா. எதிரியின் பலம் அறியாது இருக்கிறீர்களே.''

''இல்லை. கடற்பயணத்தில் தாக்குதலுக்கு மிக மிக சரியான விஷயம் எரி அம்புகள். எதிரியின் பாய்மரத்தை கொளுத்துவதால் எதிரி சின்னாபின்னமாவார். நான் ஒட்ட தேசத்திலிருந்து கற்பூர தைலம் சேகரித்து வைத்திருக்கிறேன். பல ஜாடிகளில் கற்பூர தைலம் இருக்கும். துணி நூல் சுற்றிய அம்புகளில் கற்பூர தைலம் தோய்க்கப்பட்டு எரிக்கப்பட்டு மரக் கலன்களுக்கு அருகே போய் அவைகளை தாக்குவதாக திட்டம். பிறகு மோதி இடிப்பதாக திட்டம். மோதும் போது நமது படகு உடைந்து விட்டால் பின்னே வரும் படகு வெகு விரை வாக அருகே வந்து நம்மை காப்பாற்றும். அப்படி ஒரு வியூகம் கடலிலே அமைக்க முடியும்.''

''கொந்தளிப்போ, சூறாவளியோ வந்தால்.''

''வேறு வழியில்லை. எதிர்பார்க்க வேண்டியதுதான்.''

''தரை நோக்கி வரமாட்டீர்களா.''

''உங்களுக்கு புரியவில்லை அரையன் ராஜராஜரே, தரை நோக்கி போவதில்தான் மிகுந்த சிரமங்கள் இருக்கின்றன.

அடர்ந்த காடுகள். ஏகப்பட்ட காட்டு யானைகள். சிங்க கூட்டங்கள். விஷப் பூச்சிகள். கரு வண்டுகள். தரைமார்க்கமாக போகின்ற வீரர்கள் தவிக்கப் போகிறார்கள்.''

''இல்லை. இங்கும் தீப்பந்தம் உதவும். உடம்பு முழுவதும் போர்த்திக் கொள்கின்ற உடுப்புகள் தயாராகிக் கொண்டிருக்கிறது. சேறுகளை கடக்க மரப்பலகைகளை அறுத்துக் கொண்டிருக்கிறார்கள். கயிறு பாலங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. எனவே, மெல்ல, மெல்ல தண்டபுத்திக்குள் நுழைந்து விட முடியும். தர்மபாலனின் தண்டபுத்தியை நாம் வசப்படுத்திவிட்டால் ரணசூரனின் தட்சிணலாட தேசத்தை, பிறகு கோசலத்தை நாம் ஜெயித்துவிடலாம். கோசலத்தை கோவிந்த சந்திரன் ஆட்சி செய்கிறான். அதட்டினால் அழுதுவிடுவான் என்று சொல்கிறார்கள்.

கோசலம் வளம் மிக்க நாடு, அங்கு நமக்கு தானியங்கள் கிடைக்கும். பிறகு உத்ரலாட தேசம்.

பெரிய குதிரைப்படைகளை முன்னே அனுப்பி, பிறகு யானைகளை தொடர்ந்து விரட்டி அதற்குப் பிறகே காலாட்படைகளை அனுப்பப் போகிறேன். அதற்கு பிறகே தேர்கள் வரும்.''

கருவறைக் கதவு திறந்தது. ஜகந்நாதரை அந்தத் தளபதிகள் தரிசித்தார்கள். மனம் போரிலேயே இருந்தது.

★ ★ ★

அத்யாயம்

75

ஒட்டதேசத்தின் மகாநதி, வங்காள விரிகுடா கடலில் கலந்த இடத்தில் அரையன் ராஜராஜனும், அருண்மொழிபட்டனும் பாடி அமைத்து போரை பற்றி விவாதித்து கொண்டிருந்தார்கள்.

ஒட்டதேசத்தின் நடுவிலும், தென்கிழக்கிலும் படைகள் நிறுவப்பட்டிருந்தன. மகாநதி மிகப் பெரிய நதியாகத்தான் இருந்தது. ஒட்டதேசத்தின் மலைகளிலிருந்து சிற்றாறு பொங்கி பெருகி, ஒன்று சேர்ந்து பெரும் வயல்வெளிகளை ஏற்படுத்தி இருந்தது. மீன்கள் முழங்கை நீளமுள்ளனவாய் மிக ருசியாய் இருந்தன. அவைகளை கரையோரம் மடக்கி வலைகளில் பிடித்து சோழ வீரர்கள் விதம் விதமாக சமைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். போர் பற்றிய மும்முரம் எவர் மனதிலும் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அரையன் ராஜராஜனும், அருண் மொழிபட்டனும் படகுகளில் போய் வந்தார்கள். மூன்று கல்தூரம் போனார்கள். அங்கிருந்து உற்று பார்த்தால் மலைகள் மெல்லிய கோடாக தெரிந்தது. சில சமயம் கரையே தெரியவில்லை. தென்மேற்கு பருவக் காற்றும், வடகிழக்கு பருவகாற்றும் அந்த கடலின் உட்புறம் சடேர் சடேர் என்று மோதிக் கொண்டன. அப்படி மோதியதால் அலைகளின் வேகம் அதிகம் இருந்தது. வடக்கிலிருந்து ஒரு அலை சுருளும், தெற்கிலிருந்து ஒரு அலை சுருளும் ஒன்றாக மோதி ஒரு உயரத்தை ஏற்படுத்தின. படகு பெரும் தள்ளாட்டமாகவே இருந்தது. இரண்டு பாய் மரங்கள் கொண்ட படகு அது. நடுவே சிறிய வீடு போன்ற அமைப்பும் இருந்தது. உணவு சமைக்க படகின் முன் பாகத்தின் அருகில் கருங்கல்லால் அடுப்பு இருந்தது.

அரையன் ராஜராஜன் வயிறு புரட்டி வாந்தி எடுத்தார். அவருக்கு எலுமிச்சை சாறு கொடுத்தார்கள். சூடான கஞ்சி கொடுத்தார்கள். சூடாகவே குடிக்கும்படி செய்தார்கள். இரைப் பையின் அலையல் ஓய்ந்தது. இரைப்பையில் சுரக்கும் அமிலங் கள் முன்னும், பின்னும் அலைவதால் அவை அந்த பகுதியில் எரிச்சல் ஏற்படுத்தி வாய்வழியே, இருக்கின்ற உணவை கக்க வைத்தன. அருண்மொழிபட்டன் கடல் வழியே வங்கம் நோக்கி போவது என்பது அரையன் ராஜராஜனுக்கு அறவே பிடிக்கவில்லை. ஆனால் அதை எப்படி மறுக்கலாம் என்பதும் புரியவில்லை.

அவர்கள் மூன்றாம் நாளாக தொடர்ந்து பேசும்போது இராஜேந்திரர் மாணிக்க வாசகத்தோடு, பல உபதளபதிகளோடு, மகன் வீர இராஜேந்திரனோடு உரத்த குரலில் பேசிக் கொண் டிருந்தார். ஒட்ட தேசத்து தளபதிகள் அவ்வப்போது அவர் பேச்சுக்கு உதவி செய்தார்கள். பெரிய மரப்பலகையில் ஒட்ட தேசத்தின் வழியாக தண்டபுத்தி போகும் பாதை தண்டபுத்தி வழியாக தட்சிணலாடம் என்கிற ரணசூரனின் தேசம் அதற்குப் பிறகு கோசலம் அதற்குப் பிறகு உத்திரலாடம் என்கிற வங்கம் இருந்தது. வங்கம் ஒன்றாக இருந்த தேசம்தான். தாயாதி சண்டைகளால் பிளவுபட்டது. இரண்டு பேரும் அடித்துக் கொள்ளக் கூடாது என்று போர் ஏற்படக் கூடாது என்று கோசல தேசத்தில் கோவிந்த சந்திரன் என்பவன் ஆண்டு வந்தான். கோசல தேசத்தில் பெரும்பான்மையாக அந்தணர்களே இருந் தார்கள். மறவர்களை இங்கு தங்க வேண்டாம் என்று வேண்டிக் கொண்டார்கள், தட்சிணலாடத்திலும், உத்திரலாடத்திலும் மறவர்கள் கம்பீரமாக ஆட்சி செய்து வந்தார்கள். அரசர்களுக் கும், மந்திரி பிரதானிகளுக்கும் பெரிய மதிப்பு இருந்தது. இவை யெல்லாம் ஒட்டதேசத்து தளபதிகள் சொல்ல, போகும் பாதையை தேர்ந்தெடுப்பது பற்றி இராஜேந்திரர் மும்முரமாக இருந்தார்.

அங்கு இந்த மலை, இந்த பகுதி சேறு, இது கடற்கரை, இந்த பக்கம் ஒரு பாதை இருக்கிறது என்றெல்லாம் ஒட்ட தேசத்து தளபதிகள் அவருக்கு ஆலோசனை சொன்னார்கள். ஒட்டதேசத்து வணிகர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஒட்ட

தேசத்து வீரர்கள் போனபிறகு வணிகர்களிடம் அதே கேள்வி கள் கேட்கப்பட்டு ஒட்டதேசத்து தளபதிகள் சொன்னது சரி தானா என்றும் சரிபார்க்கப்பட்டது. வணிகர்கள் அந்த இடம் பற்றி இன்னும் தெளிவாக இருந்தார்கள்.

'காடு முள்ளு காடு, செருப்பில்லாமல் போகவே கூடாது. யாராக இருந்தாலும் செருப்பு தேவை, குதிரைக்கு லாடம் அடிப்பது என்பதை நாங்கள் முன்பே கற்றிருக்கிறோம். இது ஒன்றும் எங்களுக்கு புதிதல்ல. ஏனெனில் இதை ஊடறுத்து போவது என்பது கடினம். யானைகள் மட்டுமே செய்யும். அவை களுக்கு தலையில் இருக்கின்ற காய்ந்த முள்ளை பார்ப் பதற்கு தெரியும். துதிக்கையால் தன் பாதங்கள் பதியும் இடத்தை ஊதிக்கொண்டே யானைகள் செல்லும். என்று அவர்கள் சொல்ல, இராஜேந்திரரும் சோழ தளபதிகளும் வியந்தார்கள்.

''அப்பொழுது இந்த மலை ஏறுவது எப்படி?''

''யானைகள் மலை ஏறும். அவ்வப்போது நின்று கொள் ளும். அப்போது விரட்டக்கூடாது. சரிவுதான் யானைக்கு பயம். ஏறுவது எளிது.''

''ஆமாம், ஆமாம். இதை நாங்களும் கேள்விப்பட்டிருக் கிறோம். சரிவை பார்த்தவுடன் யானை பிளிறும். அவை என்ன சொன்னாலும் அடங்காது, வரும் எதிரிக்கு மலை உச்சி யில் யானை பிளிறல் கேட்டால் உடனே தயாராகிவிடுவார் கள். மலைச் சரிவில் இறங்கும்போது யானையின் மீது ஆள் இல்லாமல் அதன் மார்புக்கு குறுக்கே கயிறு கட்டி பக்கத்திற்கு மூன்று வீரர்களாக பிடித்துக் கொண்டு போவார்கள். கொஞ்சம் நேரடியாக சறுக்காமல் வலதுபுறம், இடதுபுறம் என்று திரும்பி, திரும்பி இறங்குவார்கள்.

இந்த இடம் சமவெளி... யானைகள் உல்லாசமாகச் செல்லும். உங்கள் வீரர்கள் இப்படித்தான் போயிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து இப்படித் தான் போவார்கள்.'' என்றும் வணிகர் கள் விளக்கினார்கள்.

அவர்களுக்கு உண்டான மரியாதை செய்து முதுகை தட்டி அணைத்து இராஜேந்திரர் விடை கொடுத்தார். இராஜேந்திரர்

அவ்விதம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்பொழுது, காஞ்சிபுரம் கோவிலை தரிசனம் செய்ய வந்த இந்திரதத்தனை ஐந்து அந்தணர்கள் சந்தித்தார்கள். திருநீறும், திலகமும் இட்டார்கள்.

''இன்றிரவு உங்களுடன் ரகசியமாக பேச ஒரு மனிதர் விரும்புகின்றார். நீங்கள் சம்மதிக்க முடியுமா.'' என்று பேச்சுக்கு நடுவே குசுகுசுப்பாய் ஒரு அர்ச்சகர் கேட்டார். 'இதென்ன வம்பு.' இந்திரதத்தன் திகைத்தார்.

''ரகசியமாக என்றால் எதற்கு. பட்டப் பகலில் வந்து பேசலாமே.''

''இல்லை. பேச விரும்புபவர் பகலில் நடமாட முடியாது.''

''ஏன்?''

''சோழர்கள் அவரை விரும்புவதில்லை.''

''எதனால்''

''சோழர்களுக்கு எதிர்ப்பாக இருப்பதால்''

''சோழர்களுக்கு எதிர்ப்பாக இருக்கிற ஒரு நபரை, சோழரால் கைது செய்யப்பட்ட நான் எப்படி சந்திக்க முடியும். சரண் என்று அடைந்து விட்டேனே. பிறகு சோழர்களின் எதிரியை நான் ஏன் சந்திக்க வேண்டும். என்னுடைய நோக்கம் சேதுவை அடைவதே தவிர, வேறு எதுவும் இல்லை. வழிநெடுக சிவாயலங்களை தரிசிப்பதே தவிர, சோழ நாகரீகத்தை அறிந்து கொள்வதே தவிர, வேறு எதுவும் இல்லை. உங்கள் அரசியல் வேலைகளில் என்னை ஈடுபடுத்தி விடாதீர்கள். அந்தணர்களாக இருந்து நீங்கள் இவ்விதம் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது.''

''நாங்கள் அந்தணர்கள் இல்லை, மறவர்கள்''

''நினைத்தேன், சமஸ்கிருதம் தடுமாறிற்று. இந்தப் பக்கம் உச்சரிப்போ என்று நினைத்தேன். ஓம், ஓம் புவஹ: ஓம் சுபஹ: இதைகூட சரியாக உச்சரிக்க தெரியவில்லை. சுபஹ என்பதை சுபக என்று தமிழாக உச்சரிக்கிறீர்கள். என்னை இவ்விதம் சந்திப்பதில் எனக்கு விருப்பமில்லை.''

''வந்தவர் யார் என்று தெரிந்தால் ஒருவேளை நீங்கள் பேசுவீர்கள்.''

''யாராய் இருந்தால் என்ன. சோழருக்கு எதிரி, எனக்கும் எதிரி. சோழருடைய நண்பர் எனக்கும் நண்பர். நீங்கள் விரைவாக அகலாவிட்டால் நான் சோழப் படைவீரர்களை கூப்பிடுவேன்.''

''ஏன் அலட்டிக்கொள்கிறீர்கள். உங்கள் நன்மைக்காக.''

''எனக்கு எது நன்மை என்று தெரியும்.''

''அல்லது எங்கள் நன்மைக்காக என்று வைத்துக் கொள்ளுங்களேன்.''

''உங்கள் நன்மை என்ன? நான் ஏன் உங்களுக்கு நன்மை செய்ய வேண்டும்.''

''உங்கள் பிள்ளையை குத்தி கொல்லும்படி செய்துவிட்டார்களே.''

''இல்லை. நானே கொன்றேன். விருப்பப்பட்டு செய்தேன்.''

''உங்கள் தேசத்தை சூறையாடி இருப்பார்களே.''

''நீங்கள் யார்?''

''பாண்டிய தேசம்.''

''யார் என்னை சந்திக்க விரும்பியது.''

''சுந்தர பாண்டியன்.''

''எதற்காக.''

''உங்களோடு சேர்ந்து பாண்டிய நாட்டிலிருந்து சோழ தேசம் நோக்கி படையெடுத்து நடந்து சோழ தேசத்தின் எல்லையில் கலவரம் செய்ய வேண்டும். சோழர்களை நிம்மதி இல்லாமல் செய்ய வேண்டும். பாண்டிய தேசத்தில் கலவரம் துவங்கி விட்டது என்று இராஜேந்திர சோழருக்கு தெரிய வேண்டும். இராஜேந்திர சோழர் நிம்மதியாக இருக்கக் கூடாது. வீர இராஜேந்திரனையோ, இராஜாதிராஜனையோ அவர் இங்கே அனுப்ப வேண்டும். அப்படி படையை பிரித்து அனுப்பினால் தொடர்ந்து போவதில் அவருக்கு சிக்கல் இருக்கும். அப்பொழுது ஒட்ட தேசத்தை வெல்வது போல, தண்டபுத்தி

தர்மபாலனையும், தட்சிணலாட ரணசூரனையும், உத்திர லாட மஹிபாலனையும் ஜெயிக்க முடியாது. தோல்வி ஏற்படும். இதை விரும்பியே சுந்தரபாண்டியன் உங்களோடு பேச விரும்பு கின்றார்.''

''சுந்தர பாண்டியன் ஒரு இழிவான மனிதர் என்று எனக்கு தெரிகிறது. பாண்டிய தேசத்தில் சுந்தர சோழ பாண்டியன் என்று ஒருவர் ஆட்சி செய்கிறபோது அந்த தேசத்தின் முழு நிர்வாகமும் சோழ தேசத்திற்கு அடங்கியிருக்கும் போது, காடு களில் திரிந்து, இந்த பக்கம் வேடம் பூண்டு வந்து இந்த காஞ்சி புரத்தில் சோழர்கள் விரும்புகின்ற இந்த நகரத்தில் என்னை சந்திக்க வேண்டும் என்பது மிகப் பெரிய அபத்தம். சோழப் படைகளுக்கு இது தெரிந்தால் மிக அசிங்கமாகப் போகும்.

அரையன் ராஜராஜன் நன்மைக்காகவே, அதாவது சோழ தேசத்தின் நன்மைக்காகவே நான் என் பிள்ளையை கொன் றேன். இதற்கு சம்மதிப்பேன் என்றா நினைக்கிறீர்கள். ஒரு காலும் சம்மதியேன். உண்மையில் நான் வாள் தரிக்கவில்லை. எங்கும் ஆயுதம் மறைத்து வைக்கவில்லை தொடையில் கட் டாரியை வைத்துக் கொண்டு போகவில்லை, என் பாதுகாப்பை என் வீரர்களும், சோழதேசப்படையும் மேற்கொண்டிருக்கிறது. அழுது புலம்பி வரும் என் மனைவிகள் இந்த காஞ்சிபுரத்திற்கு வந்து பல கோவில்களை தரிசித்த பிறகு மிகுந்த நிம்மதி அடை கிறார்கள்.

இங்குள்ள அரிசி உணவும், காரமும், உப்பிட்ட துவை யலும், இடரிகவும், கதம்ப குழம்பும் எங்களுக்கு பிடித்திருக் கின்றன. என்னுடைய அரச வாழ்க்கை முடிந்து போயிற்று. சுந்தர பாண்டியனிடம் இதைச் சொல். இன்று இரவு முழுவதும் நான் அமைதியாக இருப்பேன். நாளை காலை சோழப்படையை அழைத்து சுந்தரபாண்டியன் என்னை தொடர்பு கொள்ள விரும்புகிறான் என்று சொல்லி விடுவேன். சுந்தர பாண்டி யனை சோழப் படையினர் தேடுவார்கள். அவர்கள் தேடி பிடித்து கைது செய்வதற்கு முன்பு ஓடிப் போய்விடுங்கள். வாழ்க சோழம்.'' கை கூப்பினார்.

வந்தவர்கள் வெறித்து பார்த்தார்கள்.

''ஒரே சொருகு. உங்களை இங்கேயே குத்தி கொல்ல வேண்டும் போல் தோன்றுகிறது.''

''அதை தாராளமாக உங்களால் செய்ய முடியும். நான் தடுக்க மாட்டேன். அதனால் உங்களுக்கு லாபம் ஏதும் உண்டா. உங்களை கடுமையாக சோழதேசம் தண்டிக்கும். அதற்கு நான் ஆளாக விரும்பவில்லை. தயவுசெய்து போய் விடுங்கள். வேறு ஏதேனும் ஒரு வழியை பின்பற்றி சோழ தேசத்தில் கலவரம் செய்யுங்கள். மறுபடியும் சொல்கிறேன். என்னை நீங்களோ, சுந்தர பாண்டியனோ சந்திக்க வேண் டாம். நீங்கள் போகலாம்.''

சிறிதளவும் அரச கம்பீரம் குறையாது, ஆயுதம் இல்லாது, பட்டுத்துணி போர்த்தி, நெற்றியில் திருநீறு பளபளக்க, குண் டலங்கள் அசைய, கேசங்கள் பின்னே முடித்து வைத்திருக்க, மார்பில் ருத்ராட்ச மாலைகளும், தங்கச் சங்கிலிகளும், கையில் கங்கணமும், மோதிரங்களும் மினுக்க முகத்தில் அடர்த்தியான தாடி சுருண்டு கிடக்க, ஒரு சிவநெறிச் செல்வன் போல இந்திர தத்தன் விளங்கினார்.

அவர்கள் எழுந்தார்கள். பின்னடைந்தார்கள். கை கூப்பி னார்கள்.

''உங்கள் மனம் எங்களுக்கு புரிந்தது. ஆனால் தயவு செய்து எங்களை காட்டிக் கொடுக்காதீர்கள். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை அடிமை செய்யும்போது அந்த தேசத் தின் சொந்தக்காரர்கள் வெறுமே இருக்க மாட்டார்கள் என்று உங்களுக்கு தெரியும். உங்கள் மகனும் ஒட்டதேசத்தில் அவ் விதமே எழுந்து வந்தான். எதனாலேயோ நீங்கள் அவரை கொன்று விட்டீர்கள். நாங்கள் விடை பெறுகிறோம்.''

ஓட்டமும், நடையுமாக அவர்கள் வாசலை அடைந்தார் கள். மிகுந்த வேதனையோடு இந்திரதத்தன் கண்களை மூடிக் கொண்டார். ஏதோ ஒரு கோவிலுக்கு போக வேண்டும் போல் தோன்றியது.

''காஞ்சியின் மத்தியிலிருந்து சற்று தள்ளி கைலாசநாதர் கோவில் இருக்கிறது. அது ஒரு பல்லவ அரசனுடைய கற்றளி.

அதன் மீது சாந்து பூசப்பட்டு மிக தத்ரூபமாக சிலைகள் இருக்கின்றன. காலையில் கிளம்பினால் அரசியரோடும், மற்ற உற்றாரோடும் அங்கு போய் சேரலாம். வெய்யில் நன்கு ஏறிய பிறகு அங்கு அருகே இருக்கின்ற வீட்டிலேயே உங்களுக்கு தங்க இடமும், உண்ண உணவும் ஏற்பாடு செய்யப்படும். நன்கு இளைப்பாறிய பிறகு மாலையிலும் நீங்கள் அந்த கோவிலை காணலாம். அவர்கள் சொல்ல, அப்பொழுதே கிளம்ப வேண்டும் என்று அவருக்கு தோன்றியது.

''நான் மட்டும் வருகிறேன். அரசியரை நாளை கூட்டிக் கொண்டு போகலாம்.'' அவர் சோழ வீரர்களுக்கு தெரிவித்து குதிரை ஏறினார்.

மூன்று உபதளபதிகள் அவருக்கு அருகே சென்றார்கள். நூற்றைம்பது குதிரை வீரர்கள் பின்தொடர்ந்தார்கள். தொலைவிலிருந்து மாலை வெய்யிலில் கைலாசநாதர் கோவில் மிக அற்புதமாக காட்சி அளித்தது.

''இருட்டிவிடுமே. எல்லாம் சிற்பங்களையும் நின்று பார்க்க முடியாதே.''

''இல்லை. இன்று நான் சிற்பங்களை பார்ப்பதற்கு வரவில்லை. நாளை காலை பார்த்துக்கொள்கிறேன். மனம் சற்று அமைதியற்று இருக்கிறது. அதனால் கைலாசநாதரை தரிசிக்க வந்தேன். கைலாசநாதர் பற்றி என்ன சிறப்பு.''

''கற்றளி மிக அழகு. உள்ளே இருப்பவர் மிக பிரசித்தி பெற்றவர். வரங்களை வாரி கொடுப்பவர். அதிலும் குறிப்பாக அவர் கொடுக்கின்ற வரம் மறுபிறவி இல்லாமல் செய்வது. உதாரணமாக உங்களுக்கு பிரம்மன் தலையில் நூறு பிறவி என்று எழுதி இருந்தால் கைலாசநாதரை நீங்கள் வலம்வர ஒரு பிறவி ஒழிந்தது. முப்பது முறை நீங்கள் கைலாச நாதரை வலம் வந்தால் முப்பது பிறவி ஒழிந்தது. இப்படி பிறவி ஒழிய அவரை வலம் வருவார்கள்.''

''அட, இவ்வளவு எளிதா பிறவி ஒழிப்பது.''

''எளிதல்ல.''

''பிறகு?''

''அந்த சுற்று சற்று சிரமமானது.''

''ஏன்?''

''ஒரு குறுகிய சந்தில் நுழைந்து, மேற்கே போய் வடக்கே திரும்பி, வடக்கிலிருந்து கிழக்கே வந்து.''

''எல்லோரும் செய்கின்ற பிரதட்சிணம் தானேப்பா.''

''இல்லை, இங்கேதான் இருக்கிறது ஒரு சோதனை.''

''சொல்.'' ஆவலானார்.

''ஒரு குறுகிய இடத்தில் நீங்கள் தவழ்ந்தபடி வளைந்து, வலப்பக்கம் வளைந்து, திரும்பி, அங்கும் நகர்ந்து மேலெழுந்து நிற்க வேண்டும்.''

''அடடா, தவழ்ந்து, கிழக்கு நகர்ந்து, தெறகு திரும்பி நிற்க வேண்டுமா.''

''ஆமாம்.''

''தவழ்ந்தபடியே நகர வேண்டுமா.''

''ஆமாம். கனமானவர்களுக்கு கொஞ்சம் கஷ்டம். நீங்கள் கனமாகத்தான் இருக்கிறீர்கள்.''

''செய்ய முடியாது என்றா சொல்கிறாய்.''

''செய்ய முடியும். அப்படி செய்ய முடியாவிட்டால் வேறொரு உபாயம் செய்து வெளியே எடுத்து விடுவார்கள். நடுவிலே சிக்கிக் கொண்டால் அழகாக வெளியே கொண்டு வந்துவிடுவார்கள்.''

''அப்படியா.''

''ஆமாம். ஒருமுறை முயற்சித்து பாருங்கள். முடியாவிட்டால் விட்டு விடுங்கள்.''

''அடே, பிறவிப்பலன் போக வேண்டுமென்றால் கொஞ்சம் கஷ்டப்படக்கூடாதா.''

''இது கொஞ்சம் கஷ்டம் அல்ல. இப்படி நகர்ந்து வருவது மூச்சிறைக்க வைக்கும். மூச்சு திணற வைக்கும்.''

''எதனால் இப்படி ஒரு வழி.''

''இது தாயின் கருவறையிலிருந்து வெளிவந்து சற்று திரும்பி வெளியே வருவது. நேராக இருக்கின்ற தாயின் கரு விலிருந்து குழந்தையானது நகரும். பிறகு மேலேறி வெளியே வரும். ஒரு வளைவு இருக்கிறது தாயின் வயிற்றில். அதை கடக் கின்ற பெரிய அவஸ்தை அந்த உயிர் படும். அந்த அவஸ்தை தான் இது என்பதால் தாயின் கருவில் குடியிருந்து வெளியே வந்த ஒரு பிறவி, என்று சொல்கிறார்கள்.''

''ஆச்சரியமய்யா. ஆச்சரியம். வரும் வழியில் உள்ள சிற்பங்கள் எல்லாமே என்னை அயர வைத்தன. ஒட்டதேசமும் சிற்பங்களில் பெயர் போனது, மர சிற்பங்களை மிக அழகாகச் செய்யும். ஏன் கற்சிற்பங்கள் நிறைய இருக்கின்றன.''

''ஆம். பார்த்திருக்கிறோம்.'' சோழ வீரர்கள் சொன்னார்கள்.

''அதைவிட நுட்பமாக இங்கு சோழர்களின் சிற்ப வேலை கள், கட்டிட வேலைகள் இருக்கின்றன. சோழ தேசத்தில் சிற்பங் கள் உண்டே தவிர, கோவில்கள் மிக பிரம்மாண்டமானதாய் இல்லை. உயர்ந்த கற்றளிகள் இல்லை. உங்கள் பக்கம் கற்றளி கள் இருக்கிறது. சூரிய கோவில் ஒன்று ஒட்ட தேசத்தில் உண்டு. அது நன்கு உயரமானது. அழகிய தூண்கள் கொண் டது. சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்தது. ஆனால் தொண்டை நாட்டில் வரும் வழியில் கண்டது போல கற்றளிகள் அத்தனை இல்லை. மயிலையில் ஆரம்பித்து திருவான்மியூர், மாமல்ல புரம் என்று எங்கு நகர்ந்தாலும் சிற்ப களஞ்சியமாகவே இருக் கிறது. திருவல்லிக்கேணி பெருமாள் கோவிலும், மயிலாப்பூர் சிவன் கோவிலும் என்னை குழைய வைத்தன. பார்த்தசாரதியை பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அங்கு வாழ்பவர்கள் புண்ணியசாலிகள். மயிலையில் கடல் வந்து மோதுகின்ற இடத்தில் கோட்டை கட்டி, உள்ளே கோவில் அமைத்திருக்கிற காபாலிகர்களை எப்படி பாராட்டுவது. தனிமையில் உட்கார்ந்திருக்க, ஸ்வாமி தரிசனம் முடித்துவிட்டு கடல் பார்த்து உட்கார்ந்திருக்க மிக அற்புதமான இடம் இது. கோவிலுக்குள்ளேயும் ஒரு நிறைவு. கோவிலுக்கு வெளியே யும் ஒரு நிறைவு.''

கைலாசநாதர் கோவிலுக்கு உள்ளே போனார், அங்கு அவருக்கு பூக்கள் தரப்பட்டன. மடியில் இருக்கும் சுருக்கு பையிலிருந்து பத்து பொற்கழஞ்சுகள் எடுத்து அர்ச்சகர் தட்டில் வைத்து தீப தரிசனம் செய்யச் சொன்னார். காலம் கடந்து அமைதியாக இருக்கின்ற மூர்த்தியை பார்த்து உள்ளுக்குள்ளே விம்மினார்.

''போதுமய்யா. யுத்தம் போதும். மறுபடியும் இந்த சேற்றில் என்னை அழுத்தி விடாதீர்கள். பல பிறவிகள் எடுத்து என்னை தவிக்க விடாதீர்கள். நான் உம்மை பிரதட்சிணம் செய்கிறேன். என் பிறவி பிணியை அறும். எனது அரசு கர்வத்தை அறும். நான் சாதாரண மனிதனாக, அதிகாரியாக எங்காவது வாழ்ந்து விட்டு போகிறேன். எனக்கு யுத்தம் தேவையில்லை. சமஸ்கிருதத்தை இன்னும்ஆழமாக படிக்க விரும்புகின்றேன். அதற்குண்டான ஆச்சாரியர்களை தாரும். சோழ தேசத்தின் ஏதேனும் ஒரு மூலையில் நான் உயிர் வாழ்வேன். அங்கேயே உயிர் துறப்பேன்.'' அவர் மனமார கும்பிட்டார்.

படியேறினார். இரண்டு படி இறங்கினார். ஒற்றை தீப்பந்த ஒளியில் இருட்டான அந்த கற்சுவர்கள் நிரம்பிய சந்தில் நுழைந்து வலப்பக்கம் திரும்பி மறுபடியும் கிழக்கு நோக்கி வந்து கீழே படுத்துக் கொண்டார். மெல்ல சந்திற்குள் நுழைந்தார். தாயின் கருவிலிருந்து குழந்தை வருவது போல முன்னேறினார். வலப்பக்கம் திரும்பினார். இடுப்பு வலித்தது. எங்கோ சிக்கிக் கொண்டது போல் இருந்தது. வீரர்கள், 'நகருங்கள். நிற்க வேண்டாம். நகருங்கள்' என்று கூச்சலிட்டார்கள். உள்ளே அழுத்தி கைகளை வைத்து தவழ்ந்து, தவழ்ந்து முன்னேறினார். இன்னும் நாலடி போன பிறகு தலைதூக்கினார். உடம்பை வெளியே கொண்டு வந்தார். தலை நிமிர்த்தி நின்றார். மூச்சு வாங்கியது. லேசாக தலை சுற்றியது.

'அடேய். கடினம் தான்.' என்று தோன்றியது, வீரர்கள் குடிக்க நீர் கொடுத்தார்கள், முதுகு துடைத்து விட்டார்கள். நெஞ்சு நீவினார்கள்.

''ஒன்றும் பிரச்சனையில்லை. இன்னொரு சுற்று வருகிறேன்.''

''வேண்டாமய்யா.''

''அங்கே பந்தம் சொருகி வைத்திருக்கிறீர்கள் அல்லவா. எனவே, நான் மட்டும் போய் வருகிறேன். நீங்கள் வேண்டாம்.''

அவர் மட்டும் படியேறி, படிஇறங்கி உள்ளுக்குள்ளே போனார். சுற்றி வந்து சிவன் பின்புறம் நின்று சுவற்றில் தலை வைத்துக் கொண்டார்.

''பிறவி அறும். பிறவி அறும். கைலாசநாதனே. பிறவி அறும். ஒட்டதேசத்தில் இருக்கின்ற நான் கைலாயம் போக வேண்டும் என்று முயற்சிக்கவே இல்லை. இங்கேதான் கைலாயத்தில் உள்ள கைலாய நாதரை காணுகின்ற பாக்கியம் கிடைத்தது. என்னை போவதற்கு தட்சிணலாடமோ, உத்திரலாடமோ அனு மதிக்காது. அலட்டிக் கொள்ளும். ஆனால் இராஜேந்திர சோழ ரின் படை கயிலாயம் நோக்கி நடக்கப்போகிறது. எவர் சிவ னிடம் மாறாத அன்பு கொண்டிருக்கிறாரோ அவரே கயிலா யத்தில் அவரை தரிசிக்க முடியும்.

என் சிவனே, இனி உன்னை கயிலாயத்தில் தரிசிக்க முடி யாது. இங்கே தரிசிக்கிறேன்.''

மறுபடியும் வெளியே வந்தார். மூச்சு திணற தவழ்ந்தார். திரும்பினார். வெளியே வந்து கண்மூடி நின்றார். சுவரில் சாய்ந்து கொண்டார்.

ஒரு மனிதன், ஒரு அரசன் மிகுந்த சோகத்திற்குள் ளானவன் இப்படி சரிந்து கிடப்பதை பார்த்து சோழ வீரர்கள் வருத்தப்பட்டார்கள். மெல்ல மறுபடியும் நீரால் முகம் துடைத் தார்கள்.

''வீரனே, ஒரு உதவி செய். உள்ளே போய் அந்த தீப்பந் தத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்து விடு.''

''ஏன் எப்படி நகர்வீர்கள்.''

''தாயின் வயிற்றில் இருக்கும்போது யார் ஒளி விளக்கு காட்டுகிறார்கள். இருட்டுதானே அது. இருட்டில் தடுமாறித் தானே குழந்தை வெளியே வருகிறது. நான் மட்டும் எப்படி ஒளிவிளக்கோடு வரமுடியும். தயவு செய்து எடுத்துவிடுங்கள்.''

வடமொழியில் கட்டளையிட்டார். உபதளபதிகள் புரிந்து கொண்டார்கள். தீப்பந்தம் வெளியே வந்தது. அவர் ஏறினார். இறங்கினார். சுவரில் கை வைத்து தடுமாறி முன்னேறினார். ஒளி இல்லாதபோது மூச்சு அதிகம் வாங்கியது. இனம் புரியாது ஒரு பயம் கவ்விக் கொண்டது. கண்கள் திறந்திருந்தும் குருட னாக இருக்கின்றேன். காற்று அசையவே இல்லை. சுவாசிப்பது கூட இழுத்து சுவாசிக்க வேண்டியுள்ளது. அவர் வலம் நுழைந்து மறுபடியும் வலம் திரும்பி உள்ளுக்குள்ளே தவழ்ந்தார். அதிகம் வியர்த்திருந்தது. தலை முற்றிலும் நனைந்து போயிற்று. இரண்டு முறை செய்ததை விட, மூன்றாம் முறை கடினமாக இருந்தது. அவர் தவழ்ந்து நேரே போனார். இடப்பக்கம் திரும் பினார். ஆனால் முன்னேற முடியவில்லை. மறுபடியும் பின் னடைந்தார். பிறகு வேகமாக முன்னேறினார். நச்சென்று முட்டிக் கொண்டார். பிறகு பின்னடைந்து வலப்பக்கம் திரும் பினார். இடுப்பு கடுமையாக வலித்தது.

''வந்துவிடுங்கள் அரசே, வந்து விடுங்கள்.'' சோழ தளபதி கள் கத்தினார்கள்.

''அடேய் ஏறு மேலே'' யாரையோ உத்தரவிட்டார்கள். அவர் தவழ்ந்து தடுமாறி முழங்கை தேய முன்னேறினார். ஆனால் மூச்சு முட்டியது. அப்படியே கிடக்க வேண்டும் போல் தோன்றியது. 'அவசரப்படாதே இரு' என்று சொல்ல வாயெடுத்தார். ஆனால் பேச முடியவில்லை. பெருமூச்சு இழுத்தது.

''அடேய் கல் தூக்கு.'' என்று கட்டளை இட்டார்கள். ஒரு கல் தலைக்கு மேலே தூக்கப்பட்டது. அந்த சுற்றை அவர் முழுவதும் முடிக்கவில்லை. அந்த கல் நகர அங்கிருந்தே தலையை தூக்க முடிந்தது. எழுந்து நிற்க முடிந்தது. நடந்தே அந்த தென்திசையான பாதையை அவர் கடந்தார். வெளியே வந்து தடுமாறினார். அவரை சட்டென்று தாங்கி பிடித்துக் கொண்டார்கள். தோளை ஒருவர் தூக்கிக் கொள்ள, காலை ஒருவர் தூக்க நடுவே ஒருவர் மூங்கில் கழியை கொடுக்க வேகமாக வெளியே கொண்டு வந்தார்கள். திண்ணையில் உட்கார வைத்தார்கள். முகத்தில் நீர் அடித்தார்கள். வேகமாக

துடைத்தார்கள். குடிக்க ஜலம் கொடுத்தார்கள். 'இழுத்து மூச்சு விடுங்கள். என்று சொன்னார்கள். அவர் அவர்கள் சொன்ன படியே செய்தார். வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது.

''இரண்டு பிறவிதானே அறுந்தது. மூன்றாவது பிறவி அறவில்லையே. ஈஸ்வரா என்ன சோதனை இது. சற்று நேரத் திற்குப் பிறகு முயற்சிக்கலாமா.''

''இல்லை, நீங்கள் முயற்சிக்கக்கூடாது. நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஒருவேளை சங்கடம் நேர்ந்தால் இராஜேந்திர சோழர் பிய்த்து எறிந்துவிடுவார். உங்களை கண்ணும், கருத்துமாக பார்த்துக் கொள்ள கட்டளை'' என்று அவர்கள் தீர்மானமாகச் சொன்னார்கள்.

சற்று நேரம் இளைப்பாறிய பிறகு ஒரு வீட்டிலிருந்து அவருக்கு பணியாரங்கள் வந்தன. லேசான இனிப்பு இருந்தன. அவற்றை உண்ட பிறகு தெம்பு வந்தது. பான்கம் கொடுத்த பிறகு இன்னும் சுறுசுறுப்பாயிற்று. அவர் குதிரை ஏறி காஞ்சி யின் மத்திம இடத்திற்கு நகர்ந்தார். வீட்டிற்கு போய் பெண் களிடம் இதை பேச வேண்டும் என்று எண்ணினார்.

இந்திரதத்தன் மறுத்து விட்டானா. எதனால் என்ன மனோ நிலை.'' பாண்டிய வீரர்கள் அவனுக்கு பதில் சொன்னார்கள். அந்தண கோலத்திலேயே இருந்தார்கள்.

சுந்தர பாண்டியன் முன் வழுக்கை உடையவனாக, தலை யின் உச்சியிலிருந்து அடர்ந்த முடி பின்னிறங்கி குடுமி தரித் தவனாக, தங்கச் சங்கலியும், துளசி மாலையும் கொண்ட வனாக, மூன்று திருமண் இட்டவனாக, கையில் துளசியால் ஆன வளையல்கள் அணிந்தவனாக, இடுப்பிலே தர்ப்பை புல்லால் செய்யப்பட்ட கச்சையை அணிந்தவனாக, சுத்த மான வேட்டியை கட்டியவனாக இருந்தான். உட்கார்ந்து கால் நீட்டி பேசியபோது கால்களில் வீரக்கழல் இருந்ததற்கான தழும்புகள் இருந்தன. கேயூரங்கள் இல்லை. ஆனால் கேயூர தடம் இருந்தது. நல்ல உயரமும், திடமான தேகமும் கொண் டவனாக இருந்தான்.

''நாஞ்சில் நாட்டில் ஒரு பாண்டியன் இருக்கிறானாம். கடற்கரை ஓரம் துறைமுகத்திற்கு அருகே ஒரு பாண்டியன்

இருக்கிறானாம். வறண்ட நிலத்தில் இராமேஸ்வரம் போகும் இடத்தில் ஒரு பாண்டியன் இருக்கிறானாம். இன்னும் மலை பக்கத்தில் வேறொரு பாண்டியன் இருக்கிறானாம். ஐந்து பாண்டியர்களுக்கு பாண்டிய நாடு சொந்தம் என்று சோழர்கள் கேலியாக சிரிக்கிறார்கள். உங்களையெல்லாம் ஒரு அரசனால் சமாளிக்க முடியாதய்யா என்று கேலி செய்கிறார்கள்.

சோழ தேசத்தில் இருப்பது போல இடங்கை, வலங்கை பிரிவு பாண்டிய தேசத்திலும் இருக்கிறது. சோழ தேசத்தில் அது அமைதியாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யுத்தத்தில் தோற்ற பிறகோ பரஸ்பரம் தங்களுக்குள்ளேயே அடித்துக் கொள்ள இடங்கை, வலங்கை வீரர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். ஐந்து பாண்டியர்களாக பிரிந்தது மட்டுமல்லாமல், படை இரண்டாக பிரிந்ததும் பாண்டிய தேசத்தின் பலவீனம்.

நீங்கள் யாருக்கு தலைமை வகிக்கப் போகிறீர்கள். இடங்கைக்கா, வலங்கைக்கா. இதை தெளிவாக சொல்லிவிடுங்கள். எனக்கு இரண்டு பேரும் வேண்டும் என்றால் அது நடைமுறைக்கு ஒவ்வாது. நான் எதிரியோடு போராடிக் கொண்டிருந்தால் வலங்கை வீரனான என்னை இடங்கை வீரன் இதுதான் சமயம் என்று முதுகில் குத்துவான். அப்படி குத்திய சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

பாண்டிய தேசம் சபிக்கப்பட்டது என்று சோழ வீரர்கள் சொல்கிறார்கள். உண்மையோ என்று தோன்றுகிறது. இன்றைய சோழதேசம், தொண்டைநாடும், நடுநாடும் உள்ளடக்கியது. திருமுனைப்பாடியும், கங்கநாடும் மிகப் பணிவாக இருக்கின்றன. வரி செலுத்துகின்றன. சோழ மன்னனுக்காக விழாக்கள் எடுக்கின்றன. மொத்த மேலை சாளுக்கியமும் அவன் காலின் கீழ் இருக்கிறது.

ஆனால் நாம் ஐந்து பாண்டியர்களாக இருக்கிறோம். என்ன தலைகுனிவு இது. எங்கு போய் சொல்வது. ஒரு நல்ல வாய்ப்பு நம்மை நோக்கி வருகிறது என்று இந்திரதத்தனிடம் சொன்னால் கத்தியை கீழே போட்டு விட்டு கை கூப்புகிறான். இராஜேந்திர சோழனுக்கு அவன் ஜாதக கட்டத்தில் உச்ச இடம் போலும்,

நமக்கு நாயாய் அலைய வேண்டும் என்ற விதி போலும். சொல்லுங்கள் என்ன செய்வது.''

''எங்கிருந்தோ வந்து அழுது கொண்டு போகிறவனை ஏன் நீங்கள் தேர்ந்தெடுத்தீர்கள் என்று தெரியவில்லை.''

''பிறகு யாரை நோக்கி போக வேண்டும்.''

''நம்முள் ஒற்றுமை ஏற்படுத்தினால் என்ன.''

''ஐந்து பாண்டியர்களை ஒன்றாக சேர்ப்பதா. ஒருவரை ஒருவர் பார்த்தது கூட இல்லையய்யா.'' சுந்தர பாண்டியன் வெளிற சிரித்தான்.

''இதில் என்ன கூத்து தெரியுமா. ஐவருக்கும் மீன் கொடி தான் சொந்த கொடி, நிறம் மட்டும்தான் வித்தியாசம். என்னுடையது வெள்ளை. ஒருவன் சிகப்பு. ஒருவன் பச்சை ஒருவன் மஞ்சள். ஒருவன் நீலம். கொடியே வித்தியாசப்பட்டால் ஒற்றுமை எப்படி ஏற்படும். ஒரு கொடிக்குள் திரள்வது என்பது எப்படி ஏற்படும்.

''கொடி மாறியே இருக்கட்டும். எல்லோரும் மீன் வைத்து இருப்பது உண்மைதானே. அது ஒற்றுமைதானே. அவன் வேறு ஒரு சின்னத்தை எடுத்துக் கொள்ளவில்லையே.''

''வேறு ஒரு சின்னத்தை எடுத்துக் கொண்டால் பாண்டியன் இல்லை என்று ஆகிவிடுவான். அதனால் பாண்டியன் என்று சொல்லிக் கொள்ள மீனை தூக்கி தலையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.''

''சொல்.''

''நீங்கள் பாண்டிய தேசம் முழுவதும் பயணப்படுங்கள்.''

''செய்து.''

''பார்த்ததேயில்லை என்று அலுத்துக் கொள்கிறீர்கள் அல்லவா. போய் பாருங்கள். உங்களுக்குத்தானே அந்த தாபம் இருக்கிறது. சோழ தேசத்தை தாக்க வேண்டும் என்ற வெறி இருக்கிறது மற்றவருக்கு அந்த வெறி ஊட்டுங்கள். எதனால் எங்கோ பதுங்கி வாழ்கிறாய் என்று கேளுங்கள்.

பாண்டிய எல்லையை விட்டு சேரதேசம் போகின்ற வழியில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலை காடுகளில் ஒன்றுகூடி பயிற்சி எடுத்துக் கொண்டு வருவோம். நிச்சயம் சேர தேசத்திலிருந்து ஒரு கூட்டம் நம் பக்கம் வரும். நம்முடைய மக்களுக்காவது சோழ தேசத்து மக்களை பிடித்துவிட்டது. சேரர்களுக்கு சோழர்களை பிடிக்கவே இல்லை. அவனுக்கு ஒன்றுமே தெரியாது. கிரகக் கோளாறு தோற்றுவிட்டோம் என்கிறார்கள்.''

''கங்கர்கள் உதவுவார்களா.''

''மாட்டார்கள்.''

''நடு நாடு. தொண்டை நாடு.''

''காட்டி கொடுத்து விடுவார்கள். இந்த காஞ்சிபுரத்தில் நீங்கள் உட்கார்ந்து கொண்டிருப்பதே மிகப் பெரிய தவறு. எனவே, இரவோடு இரவாக நாம் போய் விடலாம்.''

''எப்படி போவது.''

''குமரியிலிருந்து ஆரம்பிப்போம். நாளை காலை நமது சந்திப்பை ஒட்ட தேசத்து அரசனான இந்திரதத்தன் சோழப் படை உபதளபதிகளிடம் சொல்லி விடுவான். சோழப் படை நம்மை தேடத் துவங்கும். எனவே நாம் உடனடியாக கிளம்ப வேண்டும்.''

''பின் தொடர்ந்து சோழப்படை வராதா.''

''வரும்.''

''என்ன செய்வது.'' சுந்தர பாண்டியன் கேட்டான்.

''விரைவாக போக வேண்டியதுதான்.''

''சரி''

''விரைவாக போக வேண்டாம். நிதானமாகவே போவோம்.''

''மாட்டிக் கொள்வோமே.''

''காஞ்சிபுரத்திலிருந்து கடற்கரை நோக்கி போய்விடுவோம். கடற்கரையிலிருந்து நாவாய் எடுத்துக் கொண்டு, வாங்கிக் கொண்டு அல்லது கொள்ளையடித்துக் கொண்டு வடகிழக்கு பருவகாற்று சாதகமாக இருப்பதால் தொண்டி துறை

முகம் போய் விடுவோம். அங்கிருந்து உள்ளே குதிரைகள் சம்பாதித்துக் கொண்டு நடப்போம்.''

''நீங்கள் சொல்வது நன்றாக இருக்கிறது. ஆனால் வட கிழக்கு பருவ மழை இன்னும் தொடங்கவில்லையே.''

''நாம் போய் சேருவதற்குள் தொடங்கி விடும். தென்திசை காற்று சிறுத்து விட்டது. எனவே போவது கடினமாக இராது. நாம் கிளம்பலாம். அவர்கள் வெகுவேகமாக சகலத்தையும் வாரி சுருட்டிக்கொண்டு போனார்கள். அந்த வீட்டின் வெள்ளை சுவரில் ஒருவன் கரித்துண்டால் மீன்கொடி வரைந்தான். வெள்ளையில் கருப்பு மீன் மின்னிற்று. மீனின் உதடுகள் சிரித்தன. கண்கள் கள்ளம் காட்டின.

★ ★ ★

அத்யாயம் 76

"அருண்மொழிபட்டரே, ஏன் நாவாய் சாய்ந்தவாறு இருக்கிறது."

"நாவாயின் அடிபாகம் கூர்மையாக இருக்கிறதல்லவா. ஒரு வேல் போல தலைகீழாக சொருகியது போல் இருக்கிறதல்லவா. அதனால் கரை தட்டும்போது சாய்ந்திருக்கும்."

"அருண்மொழிபட்டரே, படகு பிரயாணமே தாங்கவில்லையே, நாவாய் கஷ்டம் அல்லவா."

"நாவாயில் அவ்வளவு ஆட்டம் இருக்காது ஆனால் கடலில் சீற்றம் கொஞ்சம் அதிகம் இருப்பதால் நாவாயிலும் ஆட்டம் இருக்கத்தான் செய்யும். முன்னும் போகாது பின்னும் போகாது தத்தளிக்கும். துடுப்பு போட்டு நகர வேண்டும். பயணம் சிரமமாகத்தான் இருக்கும்."

"இருபத்தைந்தாயிரம் சோழ வீரர்கள் போதுமா."

"போதாது."

"என்ன செய்ய வேண்டும்."

"உடனடியாக நாவாய்கள் வாங்குவதும், கொள்ளை அடிப்பதும் நடக்க வேண்டும். நீங்கள் எனக்காக ஒட்ட தேசத்து நாவாய்களை உபதளபதிகள் விட்டு வாங்கச் சொல்லுங்கள். கடற்கரையில் பல நாவாய்கள் அலைவதை பார்க்கிறேன். மிகப் பெரிய மீன்பிடி படகுகள் அல்லது வங்கம் நோக்கி போகின்ற நாவாய்களாகத்தான் இருக்கின்றன.

நான் சற்று உள்ளே போய் எந்த நாவாய் கண்ணில் பட்டாலும் அதை மடக்கி அங்குள்ளவர்களை அடித்து வீழ்த்தி இந்த கரைக்கு மகாநதி முனைக்கு வந்து விடுகிறேன்.

இன்னொரு இருபத்தைந்தாயிரம் இருந்தால் நன்றாக இருக்கும். ஐம்பதாயிரம் வீரர்கள். ஒரு நாவாயில் மூன்று குதிரைகள். ஒரு யானை என்று வைத்துக் கொள்ளலாம். அப்படி யானை ஏற்றுவது கடினமாக இருந்தால் விட்டுவிடலாம். வங்கத்தில் இறங்கி கோவேறு கழுதைகளை அல்லது பழக்கப் பட்ட யானைகளை அங்கு வாங்கிக் கொள்கிறேன். எல்லா வீரர்களுக்கும் குதிரை வாங்கி, அல்லது கொள்ளை அடித்து சேர்க்கிறேன்."

"வங்கத்தில் எங்கு போவீர்கள்."

"கங்கை வங்க கடலோடு கலக்கின்ற இடத்திற்கு போய் அந்த கங்கைநதியோடு பிரம்மபுத்திரா நதி கலக்கின்ற இடம் போய், அந்த இடத்திலிருந்து முன்னேறி எப்பொழுதும் மழை பெய்து கொண்டிருக்கின்ற ஒரு தேசத்தை அடைந்து அங்கே காமாக்யா என்ற சக்தி கோவிலுக்கு போய் விழுந்து வணங்கி, உணவுப் பண்டங்களும், கூரிய அம்புகளும் வாங்கி மறுபடியும் பிரம்ம புத்திரா வழியாக கங்கசாகரம் என்ற இடத்திற்கு வந்து கங்கைக்குள் திரும்பி கங்கையில் ஒரு சரியான இடம் பார்த்து இறங்கி அங்கிருந்து படைகளை நான் தெற்கு நோக்கி நடத் துவேன்.

இரண்டு அந்தணர்களை அழைத்துப் போகிறேன். அந்த அந்தணர்கள் உங்களை நோக்கி வருவார்கள்."

"நமது வீரர்களுக்கே அந்தணர் வேடம் போட்டுவிட லாமே."

"வழிமறித்து கேட்டு விட்டால், விவரம் தெரிந்துவிடடால் வடக்குப்பக்கம் சுறுசுறுப்பாகி விடுவார்கள். எனக்கு அந்தணர் கள் தான் வேண்டும்."

"யாரையாவது தேர்ந்தெடுத்திருக்கிறீர்களா."

"இருக்கிறேன்."

"யாரது."

"குட்டன் கணவதி, சிவஸ்வாமி என்ற அந்தணர்கள். அவர்கள் இருவரும் தொண்டை நாட்டை சேர்ந்தவர்கள். இரண்டு பேருமே திருவான்மியூரை ஊராக கொண்டவர்கள்.

கடல் கடந்து அந்தணர்கள் போகக்கூடாது என்று நியதி இருக் கிறதல்லவா. இவர்கள் இரண்டு பேரும் போயிருக்கிறார்கள்.

குட்டன் கணவதிக்கு கடற்பயணம் என்றால் மிகப் பெரிய ஆசை. யாரும் அழைக்காமலே அவன் நமது படையோடு கலந்து விட்டான்.

"குட்டன் என்றால்"

"ஆமாம். குள்ளமான உருவம். தடித்த உருவம். ஏதோ சாபம் போலும். அவர் குடும்பத்தில் ஒருவர் இப்படி இருப் பாராம். இப்படி இவர் இருப்பது இது ஏழாவது முறையாம். இவருக்கு பிறகு அப்படிப்பட்ட சாபம் தொடராதாம். அது இவரால் தீருமாம்."

"எப்படி?"

"இவர் வங்கம் வந்த பிறகு தனியாகவோ அல்லது கூட இருக்கும் அந்தணரோடு கயிலை நோக்கி போகப்போகிறா ராம். இவர்தான் எனக்கு காமாக்யா என்ற சக்தி வடிவத்தை பற்றி சொல்லியது."

"அம்பாள் சிலையா."

"சிலையல்ல."

"பிறகு"

"வெறும் குழி. நீர் குழி. சிவபெருமான் பார்வதியை வெட்டி எறிந்தபோது கோபத்தால் துண்டாடியபோது அம்பா ளின் யோனி விழுந்த இடம் காமாக்யா. தினசரி பலிகள் நடை பெறுவது உண்டு. எனவே, கணபதியை அழைத்துக் கொண்டு நான் குறிப்பிட்ட வீரர்களை சேர்த்துக் கொண்டு கடலுக் குள்ளே போய் மறுபடியும் வருவேன். அதற்குள் இராஜேந்திர சோழரிடம் இதை நீங்கள் தெரிவித்து விடுங்கள்.

"உங்கள் வீரர்கள் போய் வருகிறார்களே."

"அவசியமானால்தான் அனுப்புகிறேன். ஏன் கவலை அரையரே உங்களுக்கு எதிராக ஒரு செயலும் செய்ய மாட்டேன்."

"நான் அப்படி கேட்கவில்லை உண்மையில் என்ன செய்தி கொண்டுபோகிறார்கள், என்ன கொண்டு வருகிறார்கள் என்பது

எனக்கும் தெரிய வேண்டும் அல்லவா. சொல்லாமல் இருப்பதும் ஒருவகை...''

''ஒரு வகை''

''துரோகம் தானே.''

''எவ்வளவு பெரிய வார்த்தையை அலட்சியமாக பேசுகிறீர்கள் அரையன் ராஜராஜரே. அவசரக்காரராக இருக்கிறீர்கள். துரோகம் செய்பவனா நான். ஒரு விஷயத்தை நீங்கள் சொல்லும்போது அதை முன்கூட்டி தெரிந்து வைத்திருக்க அல்லது நீங்கள் சொல்லும் விஷயம் என் வீரன் சொல்லும் விஷயம் ஒன்றா என்று சோதித்து பார்க்க, இது உதவுமே தவிர, உண்மையில் உங்களுடைய ஆட்கள் மீது சந்தேகமே தவிர, வேறெதுவும் இல்லை. இரண்டு பக்கமும் இயங்கினால் நிர்வாகம் சரியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.''

''கோபித்துக் கொள்ளாதீர்கள். விளையாட்டாகச் சொன்னேன்.''

''இனி விளையாட்டாகக் கூட இப்படி சொல்ல வேண்டாம்.'' அருண்மொழி படபடத்தான். அரையன் ராஜராஜன் அவன் தோளை கட்டிக்கொண்டார்.

அவர்கள் கடற்கரையில் நின்றபடி கடலை பார்த்தார்கள்.

''என்று கிளம்ப போகிறீர்கள்.''

''நாளை விடியலில்''

''ஏன் விடியல்.''

''அலைகள் சற்று மட்டாக இருக்கும். பௌர்ணமி தாண்டி விட்டதல்லவா. தேய்பிறை அல்லவா. அலைகள் சுருளாகி இருக்குமே தவிர எகிறி அடிக்காது. மகாநதி முகத்துவாரத்திலிருந்து கடலுக்குள் நுழைந்து இடதுபுறம் திரும்பி கடற்கரை ஓரமாகவே போய்விடுவேன். அங்கிருந்து வலம் திரும்பி அங்கிருந்து மரக்கலன்கள் ஏதேனும் தென்பட்டால் அருகில் போய் பேரம் பேசுவேன். படியாவிட்டால் என் வீரர்களை வெளியே வரச்செய்து உள்ளுக்குள்ளே குதிக்கச் செய்து உள்ளிருக்கும் வீரர்களை குத்தி கொல்வேன்.''

''எத்தனை பேரை கூட்டிக்கொண்டு போகிறீர்கள்.''

''ஆயிரம் பேரை''

''ஒரு நாவாய் தாங்குமா.''

''தாங்காது. நான் வணிகரை போல வேடம் அணிந்திருப்பேன். நாவாய் மூழ்கி இருப்பதை பார்த்து நன்கு ஆழ்ந்து இருப்பதை பார்த்து பெருங் செல்வத்தோடு வருகிறது என்று கடற்கொள்ளையர்கள் நிற்கலாம். அப்படி கடற்கொள்ளையர்கள் என் நாவாய்க்கு வரவேண்டும் என்பதுதான் ஆசை. ஆனால் வணிக நாவாய்கள் வந்தாலும் என்னிடம் அடிபடும்.

கிட்டத்தட்ட நாற்பது, ஐம்பது மரக்கலன்களாக நமக்கு தேவை. எனவே நாளை காலை ஒரு சுற்று போய் வந்துவிடுகிறேன். பிறகு எவ்வளவு நாவாய்கள் இருக்கிறதோ அவ்வளவுக்கேற்ப வீரர்களை தயார் செய்து நான் வடக்கு நோக்கி போகிறேன். உங்கள் திட்டம் என்ன.''

''நேர்க்கோடு போட்டது போல கடற்கரை ஓரமாகவே இருக்கின்ற கிராமங்களை தாண்டி போக வேண்டியது. அப்படி போவதற்கு உண்டான பாதைகள் இருக்கிறது என்று அந்தணர்கள் சொல்கிறார்கள். உள்பக்கம் போனால் கோசலதேசம் பக்கம் போனால் அங்கு மலைகள் இருக்கின்றன. யானைகளுக்கு சிரமமாக இருக்கும். ஆனால் கடற்கரை பக்கமாகவே போனால் சமதளமாகவே இருக்கும். ஆனால் மழை பெய்தால் சேறாகிவிடும் என்று சொல்கிறார்கள். மழை இப்போதைக்கு வராது என்றும் பேசுகிறார்கள்.

எனவே, நீர் கிளம்பி இரண்டு நாளைக்கு பிறகு மீண்டு வந்த பிறகு, உங்களை மறுபடி அனுப்பிய பிறகு நான் விரைவாக குதிரை வீரர்களை கடற்கரை ஓரமாக அனுப்புவேன்.

இந்த முறையும் நாம் வெற்றி பெறுவோம்.''

''இன்னொரு வேலையும் செய்ய வேண்டும் என்று இருக்கிறேன் அரையரே.''

''சொல்லுங்கள் அருண்மொழி. பல திட்டங்கள் எப்போதும் உங்களிடம் இருக்குமே.''

“இது எந்த திட்டமும் அல்ல. இராஜேந்திர சோழருக்கு நம் வெற்றியை சொல்ல ஏதேனும் காணிக்கை தர வேண்டாமா. அது மறந்து போய் விட்டதே. இந்திரதத்தனை காணிக்கை என்றா கொடுத்தோம். அவராக அல்லவா அங்கு போகலாம் என்றார். அவர் விருப்பப்பட்டார். ஒட்ட தேசத்தை வெற்றி பெற்று அதன் நினைவாக அவருக்கு ஒன்றுமே அனுப்பவில்லையே.”

“இல்லையே. இந்திரதத்தனோடு இரகசியமாக பொக்கிஷ சாலையை திறந்து தங்க காசுகள் போயிருக்கிறதே.”

“அட, அந்த தங்க காசுகள் இப்போது இராஜேந்திரருக்கு சொந்தம். இப்போது ஒட்டதேசத்து கோட்டைக்குள் இருக்கின்ற நகைகளும், தங்க பாலங்களும் இராஜேந்திரருக்கு சொந்தம். அவருக்குண்டான பொருளை அவருக்கு அனுப்புவதற்கு பெயர் பரிசா.”

“என்ன சொல்கிறாய் அருண்மொழி. தெளிவாகவே பேச மாட்டாயா.”

“இரண்டு மூன்று கோவில்களுக்கு போனேன். துர்க்கை சிலைகளை பார்த்தேன். அற்புதமாக இருந்தது. அழகு வழிந்தது. கண்களில் சினம். உதடுகளில் புன்னகை காலில் அழுத்தம். கைகளில் லாவகம். தலை முடியை இறுக்க பிடித்திருக்கிறாள். இன்னொரு கை அறைய சித்தமாக உள்ளது. அந்த அறை மட்டும் அந்த கன்னங்களில் விழுந்தால் அவன் அங்கேயே இறந்து போவான். கொற்றவை உருவம் அற்புதமாக இருக்கிறது. மகிஷனை போன்றும், அரக்கனை போன்றும் உருவங்கள் கீழே இருக்கின்றன.

ஒட்டதேசம் முழுவதும் கொற்றவை வழிபாடு அதிகமாக இருக்கிறது. கிராம மக்கள் கொற்றவையைத்தான் முதன்மையாக பூஜிக்கிறார்கள். மறவர்களுக்கும் கொற்றவைதான் தேவதையாக இருக்கிறது.”

“கோவிலை இடிக்கப் போகிறீரா.”

“சிலையை பெயர்க்கப் போகிறேன்.”

''இது சரியா அருண்மொழி. ஒரு அந்தணர் இவ்விதம் செய்யலாமா.''

''சிலையை பார்த்தால் ஆச்சரியப்பட்டு போவீர்கள். அவ்வளவு அழகு. உங்களைவிட ஒரு கை உயரம் இருக்கின்ற ஒரு சிலையை இராஜேந்திர சோழருக்கு பரிசாக அனுப்பினால் அவர் என்ன செய்வார் என்று நினைக்கிறீர்கள்.''

''குதூகலிப்பார்.''

''அதுதான் எனக்கும் பட்டது. இரண்டு, மூன்று கோவில்கள் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறேன். வெகு நிச்சயமாக அவைகள் அவருக்கு பிடிக்கும்.''

''இவைகளை எப்படி அனுப்புவது. காட்டு வழியில் குலுங்கல் ஏற்பட்டு பின்னமாகி விட்டால்.''

''காட்டு வழியில் அனுப்பக்கூடாது.''

''என்ன.''

''நான் கைப்பற்றி வரும் நாவாயில் ஒன்றில் அந்த சிலைகள் போட்டு கடல் வழியாகவே வட்கிழக்கு பருவ மழையின் போது தெற்கு நோக்கி நடத்தி, வேங்கியில் இறங்கி இராஜேந்திர சோழருக்கு அவைகளை காட்டி விட்டு அப்படியே தொடர்ந்து போய் நாகையில் இறங்கி, அல்லது மாமல்லபுரத்தில் இறங்கி, ஜெயங்கொண்டம் நோக்கி போய் விட வேண்டும். எது வசதி என்று அந்த மீகாமன் தீர்மானிக்கட்டும்.

அதிகம் அடிபடாமல் போவதற்கு கடல் ஒரு சிறந்த இடம். பிறகு இறக்கி சோழ தேசத்திற்கு போய்விட்டால் பாதைகள் மிகச் சரியாக இருக்கும். என் திட்டம் சரியா?''

''மகா கெட்டிக்காரர். யாரிடம் என்ன பேச வேண்டும். எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்த உயர்வானவனை உன்னைவிட யாரையும் நான் பார்த்ததில்லை. நீ நண்பனாக இருப்பது சந்தோஷமாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது.''

''இருக்கட்டும். என் மனமும் அதே நிலையில் தான் இருக்கிறது என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். காலை விடை பெறட்டுமா.'' அவன் எழுந்தான். அரையன் ராஜராஜன்

அருண்மொழியை தழுவிக் கொண்டார். கன்னங்களில் முத்த மிட்டார். அந்த அரண்மனையிலிருந்து வெளியே வந்து குதிரை ஏறிக் கொண்டார்.

அவன் கையசைத்து விடை கொடுத்தான்.

குட்டன் கணவதியும், சிவ ஸ்வாமியும் திண்ணையிலிருந்து எழுந்து அருண்மொழிபட்டனுக்கு கை கூப்பினார்கள். சராசரி மனிதனின் இடுப்பு உயரமே குட்டன் கணவதி இருந்தான். சிவஸ்வாமி கருப்பாக, மெல்லியதாக கூரிய மூக்குடனும், கண் களுடனும், மெல்லிய தடுமாற்றத்துடனும் தென்பட்டான்.

அருண்மொழிபட்டன் அவர்களை உணவு உட்கொள்ளு மாறு உள்ளுக்குள் அழைத்தான்.

''உட்காருங்கள்.''

அருண்மொழிபட்டன் ஒரு நீண்ட இருக்கையில் நன்கு சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, ஒரு காலை உள்மடித்து, ஒரு காலை தொங்க விட்டுக் கொண்டு, குட்டன் கணவதியையும், சிவ ஸ்வாமியையும் எதிரே உள்ள ஆசனங்களை காட்டி அமரச் சொன்னான்.

குட்டன் கணபதி மறுத்துவிட்டு அவன் காலின் கீழ் உட் கார்ந்து கொண்டான்.

''தேவையில்லை அய்யா. நாம் பேசத்தானே போகிறோம். உட்கார்.''

''இது சௌகரியமாக இருக்கிறது.'' குட்டன் கணபதி தன் மஞ்சள் பல் தெரிய சிரித்தான். அவன் மேல் பல் வரிசைகள் ஒழுங்கீனமாக இருந்தன. சிவஸ்வாமி அமைதியாக இருந்தான்.

''நீர் உட்காரக் கூடாதா.'' அருண்மொழிபட்டன் அவனை பார்த்து கேட்க, அவன் மெல்ல நகர்ந்து ஆசனத்திற்கு அருகே போய் நின்று கொண்டான். பிறகு தயங்கி அமர்ந்து கொண் டான்.

'என்ன' என்பதுபோல குட்டன் கணவதி சிவ ஸ்வாமியை முறைக்க,

''அவர் உணவு எடுத்துக் கொள்ளப் போகிறார். அங்கு உட்கார்ந்தால் எப்படி உணவு எடுத்துக் கொள்ள முடியும்.''

குட்டன் கணவதி துள்ளி எழுந்தான். தன் ஆசனத்திற்கு அருகே போனான். எகிறி அதில் உட்கார்ந்தான். சிவ ஸ்வாமியும் உட்கார, அவர்களுக்கு எதிரே மெல்லிய நாலு கால் ஆசனம் போடப்பட்டது. அதன்மீது வெள்ளி தட்டுகள் வைக்கப் பட்டன.

''அவர் தட்டில் சாப்பிடுவாரோ இல்லையோ. இலை போடுங்கள்.'' அருண்மொழிபட்டன் குட்டன் கணவதியை பார்த்து சொல்ல, குட்டன் கணவதி வாய்விட்டு சிரித்தான்.

''என்னை என்ன தலைவர், அசமஞ்சமான பிராமணர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாரா, நான் அப்படி இல்லை, நான் கடல் தாண்டியவன். ஒரு கோபத்தால் எங்கள் சமூகமான அந்தண சமூகத்தை புறக்கணித்தவன்.''

''என்ன கோபம்'' ஆச்சரியமாக அருண்மொழிபட்டன் கேட்டான்.

கணவதி 'உச்' என்று அலுத்துக் கொண்டான்.

''எல்லாம் இறைவன் செய்த பழிதான். இப்படி படைத்து விட்ட காரணம்தான். மனிதர்களை உடம்பாக பார்ப்பது அழகாக பார்ப்பது என்பதே வழக்கமாக இருக்கிறது. உடம்புக்கு உள்ளே இருக்கின்ற ஆவலை, அறிவை, ஞானத்தை தெரிந்து கொள்ள முடியவில்லை. 'குள்ளா குள்ளா' என்றே எல்லோரும் என்னை அழைத்தார்கள். அப்படித்தான் அறிவார்கள். எங்கள் இல்லத்தில் குள்ளா என்று சொல்லாது குட்டன் என்று சொல் வார்கள். ஆனாலும் குள்ளமாக இருப்பதை பெற்ற தாயும் கேலி செய்வாள். எனவே, நான் இங்கு கற்க வேண்டியதை முழுதும் கற்று என் சமூகத்தை புறக்கணித்தேன். இறந்து போய் விடலாமா என்றுதான் தாமிரபரணி பக்கத்தில் இருக் கின்ற கொற்கை துறைமுகத்திற்கு போனேன். நெடுநேரம் கடலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். நீந்தி ஈழத் திற்கு போகலாமா என்ற எண்ணமும் இருந்தது. தாமிரபரணி கரையோர பரதவர்கள் மிகவும் நல்லவர்கள், தொண்டை நாட்டை விட, நடு நாட்டை விட, சோழநாடு, பாண்டிய நாட்டை விட இந்த திருநெல்வேலி பக்கத்து மக்கள் மிக உண்மையானவர்கள். உரத்து செய்வார்கள். ஆனால் அடுத்த

வரை இழிவுபடுத்த மாட்டார்கள். எல்லோராலேயும் உபயோகம் உண்டு என்று நினைக்கிறவர்கள். உல்லாசிகள். நன்றாக உண்பவர்கள். ஆனால் அடுத்தவர் சொத்தை பறிக்க மாட்டார்கள்.

உங்களுக்கு தெரியுமா, பாண்டிய தேசத்தின் அந்த கடைகோடி பக்கம் போனவுடன் யார் வீட்டிற்கு போனாலும், 'சாப்பிட்டீர்களா, இல்லையா, போய் சாப்பிடுங்கள்' என்றுதான் சொல்லுவார்கள். சோழ தேசத்தில் இதற்கு நேர் எதிர் மாறு. சொல்லட்டுமா.'' தயங்கினான்.

''சகலமும் பேசு. கணவதி, நான் இனிமேல் உன்னை குட்டன் என்று அழைக்கப் போவதில்லை கணவதி என்றுதான் அழைக்கப் போகிறேன்.''

கணவதி கை கூப்பினான்.

''சோழ தேசத்தில் வந்தவுடன் சாப்பிட்டீர்களா என்று கேட்டார்கள். நாம் பதில் சொல்வதற்குள் 'சாப்பிட்டுத்தான் வந்திருப்பீர்கள். உட்காரும். என்று உட்கார வைப்பார்கள். தண்ணீர் கேட்டால் தான் தருவார்கள். சோழ தேசம் உபசரிப்புக்கு பெயர் போனதல்ல. தொண்டை நாட்டிலும், நடு நாட்டிலும் பசிக்கிறது என்று சொல்லிவிட்டால் போதும், உடனே உணவு கிடைக்கும். ஆனால் பசி இருக்கிறதா, இல்லையா என்று தெரியாது வருக, என்று சொல்லி, சாப்பிட்டீர்களா என்று கேட்டு சாப்பிட்டு போங்கள் என்கிற பாங்கு அந்த பாண்டிய தேசத்தின் கடைசி பக்கத்தில் இருக்கின்ற நெல்வேலியில்தான் இருக்கிறது. தாமிரபரணியின் செழிப்பு அவர்களை அப்படி பேச வைத்திருக்கிறது.''

''உங்களுக்கு உதவியர் யார்.''

''பரதவர்கள். தாமிரபரணி கரை பரதவர்கள். கொற்கை துறைமுகம் மிக பலமாக கட்டப்பட்டிருந்தது. கடலுக்குள்ளே கருங்கல் சுவர் அழுத்தி வைத்து எழுப்பி, அலைகளை அடக்கி, நாவாய்களை உள்ளே கொண்டு வருவார்கள். அது தவிர தாமிரபரணிக்குள்ளே நாவாய்கள் வந்து நிற்கும்.

நாவாய்களிலிருந்து மூட்டைகள் இறக்கி தாமிரபரணிக்குள் வந்து அங்கு குறுக்கே பாலம் அமைத்து அங்கு தெற்கும், வடக்குமாக பிரித்து எடுத்துப் போவார்கள்.''

''பிறகு என்ன நடந்தது.''

''மழை வருவது பற்றியும், மழை வருவதை கண்டு பிடிப்பது பற்றியும், புயல் எப்பொழுது வரும் என்றும், அதை எப்படி உணர வேண்டும் என்றும் நான் அவர்களுக்கு சொன்னேன்.

கடலையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே. கடலுக்கு வருவீர்களா என்று கேட்டார்கள். அதற்குத்தான் காத்திருக்கிறேன் என்று அவர்களிடம் பேசினேன். மிக சந்தோஷமாக கூட்டிக் கொண்டு போனார்கள். என்னிடம் வைத்தியம் கற்றார்கள். கடவுள் பற்றி தத்துவம் பேசினார்கள். திருமணம் ஆகவில்லையா. அதனால் என்ன எங்கள் ஊர் பெண்ணை திருமணம் செய்து கொள்கிறாயா என்று கேட்டார்கள். நான் மறுத்து விட்டேன்.''

''ஏன்?''

''என் தந்தைக்கு தாத்தா, என் கொள்ளு தாத்தா அவரும் குள்ளர். ஒரு தலைமுறைக்கு எங்கள் குடும்பத்தில் ஒரு குள்ளர் உண்டு. இது சாபம் என்று பேசப்படுவது உண்டு. பெரும் பணம் கொடுத்து அவர் அழகிய பெண்களை திருமணம் செய்து கொண்டார். திருமணமான மூன்றாம் நாள் அந்த பெண் பாழும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டு விட்டார். அவர் மனமுடைந்து துறவியாக போனார். இது சாபம். இதை தீர்க்க முயல்கிறேன் என்று வடக்கு நோக்கி போனதாக கேள்வி. வரவேயில்லை. சாபமும் தீரவில்லை.

என்னுடைய தாத்தாவிற்கும், என்னுடைய தகப்பனாருக்கும் இப்படி ஒரு குள்ளப் பிள்ளை உண்டு. என் சித்தப்பா திருமணம் செய்து கொள்ளாது கட்டை பிரம்மச்சாரியாய் இருந்தார். பிறகு சாக்த உபாஸசம் கற்றுக் கொண்டு பில்லி, சூனியம், பேய்களை விரட்டுவதில் வல்லவராக இருந்தார். ஏவல் தெரிந்தவராக இருந்தார். அவரை கண்டு ஊர் நடுங்கிற்று. அந்த நடுக்கம் அவருக்கு போதுமானதாக இருந்தது. என்னையும் என் தந்தை அப்படி கற்றுக்கொள்ளச் சொன்னார். நான் மறுத்து விட்டேன்.

எனக்கு என் இனத்தை பழிவாங்க வேண்டும். இது ஒரு குடும்ப சாபம். இதில் கேலி என்ன இருக்கிறது என்று எனக்கு ஆத்திரம் வந்தது. எல்லா அந்தணர்களும் என்னை கேலியாக வும், இழிவாகவும் தான் பார்த்தார்கள். ஆனால் பரதவர்கள் ஒருவர்கூட அப்படி பார்க்கவில்லை. அந்த மீனவர்கள் மிகப் பிரியமானவர்களாக இருந்தார்கள். உடம்பின் இச்சையை தீர்த்துக் கொள்ள அங்கு சில மீனவப் பெண்களை நான் நேசித்து உறவு கொண்டேன். பிறகு போதும் என்று அங்கிருந்து நாவாய் ஏறி சதிரா பட்டிணம் (சதுரங்க பட்டிணம்) வந்தடைந்தேன், பிறகு மாமல்லபுரத்தில் இருந்தேன். பெரிய பேரழிவு ஒன்று ஏற்பட்டது. கடல் வெகுதூரம் முன்னேறி பிறகு வெகுதூரம் பின்னடைந் தது. பனைமரத்திலேயே இரண்டு நாள் உட்கார்ந்து அந்த பாளையை கீறி ரசம் குடித்து பிறகு கடல் பின்னடைந்ததும் போனேன்.

மாமல்லபுரத்தில் இரண்டு கோவில்கள் தெரியும். அதில் ஒரு கோவிலுக்குள் அடிக்கடி நீர் வரும். அப்போது நான்கு கோவில்கள் தெரிந்தன. ஏழு கோவில்கள் இருப்பதாகவும், பெரிய துறைமுக கட்டிடங்கள் இருப்பதாகவும் அங்கு உள்ள மக்கள் சொன்னார்கள். பிறகு தாண்டி மயிலை வந்தேன். மயிலை யில் உள்ள பரதவர்களும் என்னை ஏற்றுக் கொண்டார்கள். அந்தணன் மாதிரி இருக்கிறதே என்று மயிலை அந்தணர்கள் கேட்டார்கள். நான் இல்லை என்று சொல்லிவிட்டேன். அநாதை என்று சொன்னேன். மயிலையில்தான் சிவஸ்வாமி அறிமுக மானான். அவனும், நானும் பல விஷயங்கள் பேசுவோம்.

சிவஸ்வாமி திருமணம் செய்து கொள்ள விரும்பாதவர். சிவபக்தி உடையவர் எனினும் அவனை சமண வழிபாடு பெரிதும் கவர்ந்தது. சித்திர வழிபாடுகள் பிடித்திருந்தது. பெய ருக்கு சிவ பூஜை செய்வானே தவிர பல நேரங்களில் நீண்ட தியானத்தில் இருப்பான். ஒருசமயம் அவன் ஆறு நாட்கள் உணவு உட்கொள்ளாது, உறக்கம் இல்லாது ஒரு சுவர் மீது சாய்ந்தபடியே இருந்தான். நான் வயிற்றில் தயிர் சோற்றுப்பசை தடவி உள்ளுக்கும் ரசம் ஊற்றி உற்சாகம் ஊட்டி எழுப்பினேன். சிறிது சிறிதாக சோறு கொடுத்தேன். அப்படி சோறு கொடுக்கும்

பொழுதே அவன் உடம்பில் ரத்த ஓட்டம் சீராக இருக்க வேண்டும் என்றும், அப்பொழுதுதான் அவன் மூளைக்குள் இருக்கின்ற சக்தியை நெஞ்சுக்குள் செலுத்த முடியும் என்று சொல்லி மருந்துகள் கொடுத்தேன். அவன் அதிகம் மாறிப் போனான். என்மீது மிகுந்த விசுவாசமுள்ளவனாக இருந்தான். அவனுக்கு கயிலை போக வேண்டும் என்று ஆசை, அங்குள்ள ரிஷிகளை காண வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. கயிலை யில் ஆஞ்சனேயர் இருக்கிறார் என்று நம்புகிறான். அவரை காண வேண்டும் என்று விருப்பப்படுகிறான்.

எனவே, நான் சோழப்படையோடு நகர்ந்தபோது என் னோடு அவனும் சேர்ந்து கொண்டான். சோழப்படைக்கு நான் வந்தது மயிலையில் உள்ள தொண்டை நாட்டு வீரர்களுக்கு தெரியும். குறிப்பாய் இராஜேந்திரருக்கு பிரியமான, உங்க ளுக்கும் நட்பான மயிலை வேளாள சமூகத்தை சேர்ந்தவ னான சீராளனை நான் நன்கு அறிவேன். எல்லா மனிதர் களிடமும் பிரியமுள்ளவன். அவன் மனைவியை இறந்து போகும்படி சாளுக்கியர்கள் செய்தார்கள். அந்த வருத்தத்தி லிருந்து சீராளனை மீட்டு அவனிடம் அடையாள ஓலை பெற்று உங்களை பின்தொடர்ந்து வந்தேன்.''

''வந்து இத்தனை நாள் ஏன் என்னோடு பேசவில்லை.''

''உங்கள் திட்டம் என்ன என்று தெரியவில்லை. என் னுடைய திட்டம் உங்கள் திட்டத்திற்கு அருகே இருக்குமா என்று புரியவில்லை. அதனால் அமைதியாக இருந்தேன்.''

''உன் திட்டம் என்ன. கயிலை போவதா.''

''அது சிவஸ்வாமியின் ஆசை.'' அருண்மொழிபட்டன் சிவ ஸ்வாமியை நோக்க, அவன் கைகூப்பி, அனுமதிக்க வேண்டும் என்பதுபோல் கண்களால் வேண்டினான்.

''நிச்சயம் போகலாம்'' அருண்மொழிப்பட்டன் சொன்ன வுடன் முத்துப்பல் தெரிய சிரித்தான். கருத்த மேனியில் முத்துப் பற்கள் பளிச்சிட்டன. அவன் சிரிப்பு மிக அழகாக இருந்தது. ஒரு தெய்வீகம் அதில் தென்பட்டது.

''உம்முடைய திட்டம் என்ன.''

''நான் சீனத்துக்கு போக விரும்புகின்றேன். கங்கை கரையை தாண்டி காமாக்யாவை தரிசித்து அங்கிருந்து மலைகள் ஏறி இறங்கி சீனத்திற்கு போக வேண்டும். அப்படி ஒரு பாதை உண்டு. பட்டு நூல் வியாபாரிகள் அந்த பாதை வழியாக போய் இருக்கிறார்கள். ஒட்டதேசத்தை சேர்ந்தவர்களுக்கு அப்படி போகும்படி தெரிந்திருக்கிறது. குதிரைகளை விட உயரமான கோவேறு கழுதைகளில் மூட்டைகளை ஏற்றி போவார்கள்.''

''கிராம்பு தைலம், வாசனை திரவியம், சந்தனம், அகிற் கட்டைகள், சாம்பிராணிகள், முத்து மாலைகள், பித்தளை பாத்திரங்கள் என்று எடுத்து போவார்கள். ஒரே நேரத்தில் நூறு பேர் ஆயிரம் கழுதைகளோடு வெய்யில் காலத்தில் அந்த வழியாக நடந்து போவார்கள். அந்த வழியை பற்றி மிக வியப்பாக பேசுவார்கள். அது எனக்கு மிக ஆவலை கொடுத்தது.''

''இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்.''

''நீங்கள் எங்கு போனாலும் வருகிறேன். ஏதேனும் ஒரு சமயத்தில் உங்களிடமிருந்து பிரிந்து கொள்கிறேன்.''

''சீனம் போக வேண்டும் என்ற ஆசை உறுதியானதா.''

''மிக மிக உறுதியானது.''

''அப்படியானால் சீனத்திற்கு இமயமலை ஏறி இறங்காமல் இப்படி சுற்றி ஸ்ரீ விஜயத்தின் வழியாக போகலாமா.''

''வெகு தொலைவாயிற்றே. பல மாதங்கள் ஆகுமே. இவை தயங்கி தயங்கி போனாலும் நாற்பது நாட்களில் போய் விடலாம். பருவநிலை சீராக இருந்தால் ஒரு மாதத்திற்குள் சென்றுவிடலாம்.''

''நீங்கள் அப்பொழுதும் சீனதேசத்தின் தென் பகுதியைத்தான் அடைவீர்களே தவிர நாகரீகத்தில் சிறந்த நடுப் பகுதிக்கு போகமாட்டீர்கள்.

என்னோடு இருங்கள். இந்த கங்கை படை எடுப்பு முடிந்து சோழ தேசம் போனபிறகு நாகையிலிருந்து மரக்கலம் ஏறி ஸ்ரீ விஜயம் போய் அங்கு ஒரு கடுமையாக யுத்தம் செய்து விட்டு அதைத் தாண்டி சீன தேசம் போகலாம்.''

''எனக்கும் அப்படி ஒரு ஆவல் இருக்கிறது.'' குள்ளமான கணவதி இறங்கி குதித்து ஓடிவந்தான். அவன் காலில் விழுந்து வணங்கினான்.

''நானே கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். நீங்களே அழைத்தது என் பேறு. இதற்கு நன்றி உரித்தவனாக இருப்பேன். உங்களுக்கு எல்லா விதத்திலும் உதவி செய் வேன். இன்னும் நான் யார் என்று உங்களுக்கு தெரியவில்லை. என்னால் சில வித்தைகள் செய்ய முடியும். ஆனால் அவை களெல்லாம் யாராலும் செய்ய முடிந்த வித்தைகள். உதாரணத் திற்கு இந்த மரப்பலகை தடவிவிட்டால் எரிந்து விடும்.

''அடேயப்பா. எப்படி அது.''

''சரி. எளிதாக இருக்க ஒன்று செய்கிறேன். உங்கள் மேல் துணியின் ஒரு பகுதியை மட்டும் வலப்புறமாக நீட்டுங்கள்.'' அருண்மொழிபட்டன் தன் மேல்துணியை வலப்புறமாக நீட்டி னான்.

மெல்லிய நெசவு வேலை. ஆனால் உறுதியாக இருந்தது. குட்டன் கணவதி கை தட்டினான். அந்த மேற் போர்வையை தொலைவில் இருந்தபடியே வருடி கொடுத்தான். அவன் கைகள் அருகே வரவேயில்லை. ஏதோ ஒரு சிலிர்ப்பு. அது துணிக்குள் ஓடுவது அருண்மொழி பட்டனுக்கு தெரிந்தது. அந்த துணி பற்றிக் கொண்டது.

சிவஸ்வாமி தனக்கு வைத்திருந்த குடுவையிலிருந்து நீர் எடுத்து அதன் மீது தெளித்தான். வட்ட வடிவமாக துணி எரிந்து போயிருந்தது. புகை வந்தது.

''எப்படி அது.''

''என் உடம்பு சூட்டை விரல்வழியாக அதன் மீது ஏற்றி னேன். இது தஞ்சையில் சில இடங்களிலும், சேர தேசத்திலும் செய்யப்படுகிறது.''

''தஞ்சையில் இதை யார் செய்கிறார்கள்.''

''பழமர்நேரி கிராமத்து அந்தணர்கள் சிலர் இப்படி செய் வார்கள். இடது கையால் அவர்கள் ஆசிர்வதிப்பார்கள். வலது

கையை தூக்க மாட்டார்கள். ஏனெனில் வலது கையால் மூன்று வேளை அக்னிக்கு சமித்துகள் சமர்ப்பிப்பதால் அவர்கள் உடம்பில் ஒரு சூடு இருந்துகொண்டே இருக்கும். ஒரு பெண்ணின் வயிறு தடவி ஆண் துணை இல்லாமல் கர்ப்பமாக்க முடியும்.''

''பழமர்நேரி அந்தணர்களா. கொஞ்சம் கர்விகள் கெட்டிக்காரர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அதிக கர்விகள். அதிக கெட்டிக்காரர்கள்.

அந்த அந்தணர்கள் ஒரு குழுவாக போயிருக்கிறார்கள். வடக்கே வெகு தொலைவில் போய் விட்டார்கள் என்ற செய்தியும் கிடைத்திருக்கிறது.''

''ஆமாம். இராஜேந்திரசோழர் கண்டிப்பாக அவர்களை போக வைத்தார்.''

''அதுதான் நல்லது. அந்தணர்களுக்கு உலகம் தெரியவில்லை. வேதம் மட்டுமே உலகம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாலாபுறமும் சுற்றி பார்த்தால்தான் வேதத்தினுடைய சாராம்சம் ஒரு மனிதனுக்கு தெரிய வரும்.''

''எப்பொழுது போகலாம். எப்படி போகலாம்.''

''நீங்கள் சொன்னது போல, அரையன் ராஜராஜனிடம் பேசியது போல நாளை காலை ஒரு சுற்றுலா போய் வருவோம். மூன்று நாட்கள் உள்ளே தங்கியிருப்போம். படகுகள் நடமாட்டத்தை கவனிப்போம்.''

''கைப்பற்ற முடியுமா என்று எனக்கு தெரியவில்லை. கொந்தளிப்பு அதிகமாக இருக்கின்ற நேரம் இது.''

''உங்களுடைய மன உறுதியும், நமது சோழ வீரர்களுடைய மன உறுதியும் பலமாக இருந்தால் இது நடக்கக் கூடும். நாம் படைக்கலன்களை ஏற்றியிராது வண்ண தலைப் பாகைகளை தலையில் கட்டிக் கொண்டு வணிகர்களை போல தோற்றமளிப்போம். நம்மை நோக்கி கடற் கொள்ளையர்கள் வரக்கூடும். அருகே வரும் வரை மூன்று, நான்கு பேர்களே இருப்பதாக முன்னும், பின்னும் பயந்து அலைவதாக செய்து அவர்கள் நெருங்கி வந்த பிறகு மொத்தமாக ஏறி அவர்களை வெட்டி எறிந்து நாவாய்களை வசப்படுத்திக் கொள்ளலாம்.

அந்த கடற்படையும் மாற்றி, அவர்கள் ஏற்றி வந்த கருப்பு கொடிகளை அறுத்து சீனக் கொடிகளை பறக்க விட்டு சீன தேசத்து உடைகளை அணிந்து கொண்டு சீனதேசத்து நாவாய் களும், ஒட்ட தேசத்து நாவாய்களும் வங்கம் நோக்கி போகின் றது போன்ற பிரமையை ஏற்படுத்தி அதை கண்டு அருகே வருகின்ற வேறு கொள்ளைக்காரர்களையும் வழிமறிக்கலாம். சீனத்து நாவாய்களுக்கு 'வங்கம்' என்று பெயர்.''

''வங்கக்கடலில் வருவதாலா.''

''இல்லை, வங்கம் என்பது சீற்றமுடையது என்பதாக அவர்கள் அர்த்தம் சொல்கிறார்கள். அந்த வங்கம் என்ற பெயரும் நம்முடைய முன்னோர்களான சோழர்களால் சூட்டப்பட்டது என்கிறார்கள். அந்த நாவாய்கள் மிகச் சிறந்தவை, பாய்மரங் கள் அதீத துல்லியத்தோடு கட்டப்பட்டவை. நடுமரங்கள் உறுதியானவை. உள்ளுக்குள் படுக்கும் அறைகளும், தங்கும் அறைகளும், குளிக்கும் அறைகளும், நன்நீர் பாண்டங்கள் நிறைக்கப்பட்ட அறைகளும் இருக்கின்றன.

நாவாய்களுக்குள்ளேயே கருங்கல் பலகையால் நீர் தொட்டி கட்டி வைத்திருக்கிறார்கள். மிகப் பெரிய தவலை களை வைத்திருப்பார்கள். உணவு சமைக்க கருங்கல் அடுப்பு உண்டு. புகை போக்கி உண்டு. இவைகளை பார்ப்பதற்கே ஆனந்தமாக இருக்கும். அம்மாதிரியான நாவாய்கள் கிடைத் தால் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். மறுத்தால் கொள்ளை யடிக்கலாம். ஒரு மூன்று நாளில் என்னவெல்லாம் முடியுமோ அதை செய்யலாம். பிறகு கிடைத்த நாவாய்களோடு வங்கம் நோக்கி போகலாம்.''

''எத்தனை நாவாய்கள் தேவைப்படும்.''

''ஒரு நாவாய்க்கு ஆயிரம் பேர் என்றால் உங்கள் கணக்குப் படி இருபத்தைந்து நாவாய்கள் வேண்டும். ஒட்டதேசத்தி லேயே இப்போது பல நாவாய்கள் இருக்கின்றன. அவைகள் அனைத்தையும் காசு கொடுத்து வாங்கிவிடுங்கள். அல்லது பறிமுதல் செய்யுங்கள்.''

''அவைகள் எங்கிருக்கின்றன.''

''எல்லாம் வடக்கே உள்ள மகாநதி கலக்கின்ற இடங்களுக்கு அப்பால் சிறுசிறு துறைமுகங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒட்ட தேசத்து நூல் ஆடைகளுக்கும், சந்தன மரங்களுக்கும் நல்ல மதிப்பு இருப்பதால் அந்தப் பகுதியிலிருந்து நாவாய்கள் வங்கம் நோக்கியோ அல்லது இன்னும் மேலாகவோ போகும்.''

''அந்த நாவாய்கள் சீனத்திற்கு போவதில்லையா.''

''இல்லை. சீன நாவாய்கள் தான் வருகின்றன ஸ்ரீ விஜயம் கூட இவர்கள் போவதில்லை. ஒட்டதேசத்திலிருந்து வங்கத்திற்கு போய் காத்திருப்பார்கள். சீன தேசத்து நாவாய்கள் வந்ததும் நாவாய்களில் இருந்தபடியே பேரம் பேசுவார்கள். குறுக்கே நூல் ஏணி கட்டி சாமான்களை மாற்றிக் கொள்வார்கள். அல்லது கரையில் ஒதுங்கி, தரையில் இறக்கி பிறகு நாவாயில் ஏற்றுவார்கள்.''

''சீன தேசத்திலிருந்து என்ன வரும்.''

''பட்டாடைகள். பீங்கான் கோப்பைகள், கண்ணாடிகள், மரகதங்கள், நல்லவிதமான உயர்ந்த ரக மது வரும்.''

''வேறு என்ன நாவாய்கள் வரும்.''

''யவனர்களின் நாவாய்கள் வரும்.''

''அவர்கள் என்ன விற்பார்கள்.''

''பாலைவனமல்லவா அது, குதிரைகள் இருக்கிறது. அருண்மொழி பட்டரே, மிக உன்னதமான குதிரைகள் இருக்கிறது. மேலைசாளுக்கியத்தில் அந்த அரபு வணிகர்களை மடக்கி நல்ல குதிரைகளை மேலை சாளுக்கியத்தில் பெற்றுக் கொள்கிறார்கள். மீதியை சேரர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். மிக மிக மட்டமானதுதான் சோழ தேசத்திற்கு வருகிறது. சோழ தேசத்திலும் அந்த குதிரைகளுக்கு லாடங்கள் அடிப்பதில்லை. இரண்டாயிரம் குதிரைகள் வாங்கினால் ஒரு வருடத்திற்குள் நூறுதான் மிஞ்சும்.

மிகப்பெரிய தொகை அரசாங்கம் குதிரைகள் வாங்க செலவழிக்கும். ஆனால் குதிரைகளை பராமரிக்க அவர்களுக்கு தெரிவதில்லை.

அந்த யவனர்கள் சோழர்களை காட்டுமிராண்டிகள் என்று ஏசுவார்கள். குதிரையை சவுக்கால் அடிக்கிறாயா. கொலை செய்து விடுவேன் என்கிறார்கள்.''

''ஏன். குதிரையை அடிக்கக்கூடாதா.''

''தடவி கொடுத்தால் குதிரை, சொல்படிகேட்க வேண்டும். அப்படி பராமரித்து வைக்க வேண்டும் என்பதுதான் அந்த யவனர்களின் எண்ணம்.''

''அற்புதம். பல விஷயங்கள் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.''

''கடற்பயணம் போயிருக்கிறீர்கள். ஆனால் கடல் தாண்டியிருக்கிறீர்களா.''

''இல்லை, நீங்கள் இப்பொழுது பேசுகின்றபோது ஸ்ரீவிஜயம் பற்றி சொன்னீர்கள். அந்த வழியாக போகலாம் என்கிறீர்கள். எனக்கும் அந்த ஆசை இருக்கிறது. நீங்கள் சொல்வதால் அது ஏற்பட்டது. ஸ்ரீ விஜயம் மட்டுமல்ல. ஸ்ரீவிஜயத்திலிருந்து மாபாளம், லங்காசோகம், கடாரம் போன்ற இடங்களுக்கும் நாம் போகலாம். அங்கும் மிகச் சிறந்த நாகரீகமுடைய மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய விஷயங்களும் நான் அறிவேன். கொஞ்சம் கொச்சையான மொழி கலந்த வடமொழியை அவர்கள் பேசுகிறார்கள்.''

''நமக்கு நாவாய்கள் கிடைக்கும் என்று சொல்கிறீர்களா.''

''வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்க போகிறது. வங்கத்தில் எல்லா நாவாய்களும் பாய் விரிக்க தயாராக இருக்கின்றன. ஒன்றன் பின் ஒன்றாக அவைகள் நிச்சயமாக வரும். அவைகள் ஸ்ரீவிஜயம் பக்கம், கடாரம் பக்கம், மாபாளம் பக்கம் போக வேண்டியிருப்பதால் இப்போதே வரத் துவங்கி இருக்கும். நடுகடலில் காற்று சாதகமான பிறகு பாய்மரத்தை வீசி விரைவே அந்தந்த இடங்களை அடையும்.''

''நல்லது. சகலத்தையும் பெருவுடையார்மீது போட்டுவிட்டு நாளை விடியலில் நம் பயணத்தை துவங்குவோம்.

உங்களுக்கு நான் என்ன சன்மானம் தரட்டும். தன்னுடைய அதிகாரியை அருண்மொழிபட்டன் நோக்கினான். அவர் இருக்கிறது என்று தலையாட்டினார்.

''அருண்மொழிபட்டரே, உங்கள் அன்புக்கு நன்றி. எங்களுக்கு சன்மானம் என்பது வேண்டாம். உங்களுடனேயே எல்லா நேரமும் வைத்துக் கொள்ளுங்கள். கடற்பயணம் போகும் போது என்னை கலந்தாலோசிக்காமல் எதுவும் செய்துவிட வேண்டாம் என தாழ்மையோடு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.''

''அதிகாரிகளாக நியமிக்கட்டுமா.''

''வேண்டாம். உங்கள் நண்பர்களாகவே நாங்கள் வருகிறோம்.'' குட்டன் கணவதி எழுந்து அவனை நமஸ்கரித்தான்.

உணவு வந்தது.

''நீர் தலைசுற்றி கீழே விழுவீர் என்று தோன்றுகிறது. அல்லது கடும் வயிற்று போக்கு ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது. எனவே அதற்குண்டான மருந்துகளை எடுத்துக் கொண்டு வாருங்கள். நானும் இங்கு பரதவர்களிடம் மருந்து சேகரித்து வைத்திருக்கிறேன். அவைகளையும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் இந்த மூன்றுநாள் பயணம் என்பதை மேற்கொள்வது நல்லது. உங்கள் உடம்பு கடலுக்கு பழக்கப் பட்டு விடும்.'' அந்த மூவரும் இரண்டாகப் பிரிந்தார்கள்.

★ ★ ★

அத்யாயம்

77

"அன்பு சகோதரர் மஹிபாலன் அவர்களே." கம்பீரமான குரலில் அரசவையில் கங்கே யாதவ் பேசினான்.

"உங்களை விட ஒரு பெரிய முட்டாள் அரசனை நான் இந்த உலகத்தில் பார்த்ததில்லை. பரதகண்டம் முழுவதும் சுற்றி விட்டேன். ஆனால் எது சொன்னாலும் காதில் ஏறாத ஒரு காட்டெருமை வாழ்க்கை நீங்கள் வாழ்ந்து கொண்டிருக் கிறீர்கள்."

அவை எகிறி நின்றது. பலபேர் வாள் உருவினார்கள்.

"என்னை வெட்டிப் போடுவது எளிது. அதற்கு பதிலுக்கு நான் ஆயுதம் எடுக்க மாட்டேன். ஆனால் உங்கள் வாழ்க் கையே கேள்விக் குறியாகப் போகிறது என்பதை புரிந்து கொள் ளாமல், தொடர்ந்து உயிர் வாழ வேண்டும் என்று ஆசைப்படா மல் சோழனுக்கு உங்கள் பெண்டுகளை கூட்டிக் கொடுத்து வாழப் போகிறீர்களே அதை நினைத்துதான் ஆத்திரப்படு கிறேன். அதனால்தான் கடுமையாக பேசுகிறேன்.

சோழதேசம் போயிருக்கிறீர்களா. என்ன ஊர் அது. வறண்ட நிலம். ஒரு ஜீவநதி கூட பாயாத இடம். மேலை சாளுக்கியர் மனம் வைத்தால் தான் காவிரியில் வெள்ளம் வரும். அந்த காவிரி நீரை வைத்துக்கொண்டு தஞ்சையை செழிப்பாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் இவ்வளவு தூரம் போர் புரிந்து வருகிறார்கள். நமது செழிப்பு புரிந்து விட்டது. இந்த வற்றாத ஜீவநதிகளை பார்க்க பார்க்க வாய் பிளக்கிறார்கள். உங்கள் கோதுமை வயல்களை பார்த்து யானைகள் ஆரவார கூச்சல்கள் போடுகின்றன. உங்களுடைய பெண்களின் மேனி அழகு. அந்த தந்த சிவப்பு மாம்பழ கன்னம், கனிந்த உதடுகள்,

பெரிய பிருஷ்டங்கள் முதிர்ந்த முலைகள், கரும் கூந்தல் இதை பார்த்ததும் பைத்தியமாகிறான் ஒவ்வொரு சோழ தேசத்து வீரன். பெண்டுகளை வாரிப் போகத்தான் வருகிறான். இங்கு உள்ள தங்க நகைகளை கொள்ளையடிக்கத்தான் வருகிறான். ஒட்டதேசம் கொள்ளையடிக்கப்பட்டது. பொக்கிஷத்தை பிரித்து சோழர்கள் வாரி வாரி போய்க்கொண்டிருக்கிறார்கள். பல யானைகளில் தங்க நகைகள் போய்விட்டன. உங்களுடை யதை யெல்லாம் பத்திரமாக பூட்டி வைத்துக் கொள்ளுங்கள். அவை அத்தனையும் சோழனுக்கு சொந்தமாக வேண்டும். மறுபடியும் பல் கடித்தார்கள். எழுந்து நின்றார்கள். 'ஆ' என்றார் கள். 'ஊ' என்றார்கள். கங்கே யாதவ் அசையவேயில்லை. அவர்கள் கொல்ல மாட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

''உங்களுக்கு தெற்கே தண்டபுத்தியில் இருப்பவன் உங்க ளுடைய பங்காளி தர்மபாலன். அவனை பகையாளியாக கரு தாதீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே இருப்பவன் கோசல தேசத்து கோவிந்த சந்திரன். அதற்கு அப்பால் இருப்பவன் தர்மபாலனுக்கு முன்னே இருப்பவன் தட்சிணலாட ரணசூரன்.

எனவே, அவன் தண்டதேச தர்ம பாலனை தாண்டி, தட்சிணலாட ரணசூரனை தாண்டி கோவிந்த சந்திரனை தாண்டி உங்களிடம் வருவான். ஏனெனில் ரணசூரன் வலிவாக இல்லை. ஒட்ட தேசத்தையே சாய்த்து விட்ட சோழனால் ரண சூரனை வெல்வது எளிது, ரணசூரன் சற்று தாக்கு பிடிப்பான். ஆனால் தண்டபுத்தி தர்மபாலனால் அதுகூட இயலாது. கோவிந்த சந்திரன் கை உயர்த்தி வழி விட்டு விடுவான். பிறகு வெகு எளிதாக உங்கள் தேசத்திற்குள் காட்டெருமை நுழைவது போல் சோழர்கள் நுழைவார்கள். வெற்றி பெறுவது அவன் நோக்கம் அல்ல. உங்கள் நகரங்களையெல்லாம் எரியூட்டுவதே இராஜேந்திர சோழன் இயல்பு.

கிழவர்களையும் கொல்ல வேண்டும். குழந்தைகளை தூக்கி கத்தி சொருக வேண்டும் என்றெல்லாம் வீரர்களுக்கு கட்டளை இட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கோரத்தை மேலைசாளுக்கியத்தில் நிகழ்த்தியிருக்கிறார்கள். அந்த நிகழ்வை கண்ணால் பார்த்துவிட்டு உங்களிடம் வந்து சொல்கிறேன்.''

கூட்டம் அமைதியாக கேட்டுக் கொண்டது.

''உங்களுக்கு நான் சொல்வதெல்லாம் சோழனை எதிர்த்து போரிடுகின்ற வலிவை ஏற்படுத்த அல்ல. அது உங்களிடம் இருக்கிறது. இந்த பகுதியின் மிகச் சிறந்த வீரர்கள் நீங்களே. ஆனால் நீங்கள் மட்டுமே சோழனை எதிர்க்க போதாது. பருவ நிலைகள் பயமுறுத்துகிறபோது நீங்கள் ஊடறுத்து கோசல தேசம் தாண்டி, ரணசூரனை தாண்டி தயவுசெய்து தண்ட புத்திக்கு போய்விடுங்கள். தண்டபுத்தியில் உள்ள தர்மபாலனை நீங்கள் ஆதரிக்க வேண்டும். மஹிபாலனுக்கும், தர்மபாலனுக்கும் சண்டை என்பதால் சோழன் சிரித்துக் கொண்டே உள்ளே வரக் கூடாது. நீங்கள் முன்னேறி போய் ரணசூரன், கோவிந்த சந்திரன், தர்மபாலன் துணையோடு ஒன்றாக கூடி தண்டபுத்தியின் எல்லையிலேயே சோழனை தடுத்து நிறுத்துங்கள். அவன் கங்கையை தொடக்கூடாது. தொடவிடக்கூடாது. கங்கை நம் தாய். என் தாயின் மீது அந்நியன் கை வைக்க ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்.''

கூட்டமும் உறுமிற்று, வாட்கள் உயர்ந்து அடங்கின.

இவ்வளவு எளிதாக உணர்ச்சி வசப்படுகிறார்களே. கங்கேயாதவ் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். ஆனால் அந்த சபையில் சில கெட்டிக்காரர்கள் இருந்தார்கள்.

நீண்ட வெள்ளை தாடியோடு, பெரும் கொண்டையோடு இருந்த ஒரு மந்திரி எழுந்தார். பல போர்களில் ஈடுபட்டவர் எனினும் இப்பொழுது ஆயுதம் தாங்குவதில்லை என்பதாக காட்சியளித்தார். கையில் பவழமாலை உருண்டு கொண்டிருந்தது. சாக்த உபாஸகம் தான் பவழமாலைக்கு ஏற்றது என்று அங்கே சொல்லப்பட்டிருந்தது. அவர் நெற்றியில் குங்கும திலகமும், கண்ணில் எழுதப்பட்ட மையும், தாம்பூலம் தரித்த வாயும், பெரிய தங்கவளையங்கள் கொண்ட காதுகளும், காரை என்று கழுத்து ஒட்டிய நகையுமாய், தோளில் பட்டும், இடுப்பில் பருத்தியுமாய் உட்கார்ந்திருந்தார்.

''கங்கே யாதவ் நீ பேசுவதில் ஒரு தவறு இருக்கிறது.''

''சொல்லுங்கள் அய்யா.'' கங்கே யாதவ் கீழிறங்கி அவருக்கு அருகே நின்று கொண்டான். அந்த முதியவருக்கு

அருகே இருந்த ஆசனத்தில் அமர்ந்தான். மஹிபாலன் நான்கு படிகள் கொண்ட மேடையில் அமர்ந்தவாறு தன் சிங்காசனத்தில் அமர்ந்தபடியே அவர்களை பார்த்துக் கொண்டிருந்தான்.

''தண்டபுத்தி தர்மபாலன் நிச்சயம் சோழனை மடக்குவான். எதிர்த்து சண்டையிடுவான். ஜெயிப்பானா, தோற்பானா என்பது வேறு விஷயம். ஆனால் சோழப்படை அங்கு தாக்கப் படும், சரியா தவறா.''

''சரி.'

''ரணசூரனும் வேகமாக தாக்குவான். சரியா தவறா.''

''தாக்கக்கூடும்.''

''கோவிந்த சந்திரனையும் நாம் உற்சாகப்படுத்தி தடுக்க வைத்தால் அப்பொழுதும் ஒரு சிரமம் சோழப்படைக்கு ஏற்படத் தானே செய்யும்.''

''ஆமாம்.''

''இதைத் தாண்டி கங்கையை தாண்டி இந்த பக்கம் உத்திரலாடம் பக்கம், மஹிபாலன் தேசம் பக்கம் வருவானா. இதற்கு முன்னரே அவன் தளர்ந்திருக்கமாட்டானா. ஒட்ட தேசத்திலேயே தளர்ந்திருப்பதாக கேள்வி. அதனால்தான் இன்னும் படையெடுப்பு நடத்தாமல் உட்கார்ந்து இருக்கிறான். அதைவிட இன்னொரு அற்புதமான விஷயம். படையெடுப்பு இராஜேந்திரசோழனால் நடைபெறவில்லை. அரையன் ராஜ ராஜன் என்கிற ஒரு அடியாளை அனுப்பியிருக்கிறான். அதற்கு அடிப்படை காரணம் இராஜேந்திர சோழனுக்கு உடல் நலம் சரியில்லை. அவன் மனைவியர் அவனை போருக்கு அனுப்ப வில்லை.''

சபை சிரித்தது.

''எனவே மனைவியின் சொற்படி குளிருக்கு கதகதப்பாக மனைவியரை கட்டிக்கொண்டு, போர்வையை போர்த்திக் கொண்டு உறங்குகிறான். பெரும் படையை அனுப்பியிருக் கிறான். இங்கேயே தோல்வி முகம் தெரிகிறது. உற்சாக இழப்பு தெரிகிறது.

தர்மபாலன் கடுமையாக தாக்கினால் தண்டபுத்தியும் பிழைத்துக் கொள்ளும், நமக்கும் ஆபத்து இருக்காது. அப்படி இருக்க, ஆபத்தை நோக்கி போ, போ என்று கத்துகிறாயே உன் புத்திக்கு என்ன கேடு என்பதுதான் என் கேள்வி''

கூட்டம் ஆரவாரித்தது. அந்த மந்திரியை ஆமோதித்தது.

''நீங்கள் வயதானவர் என்பதால் நீங்கள் செய்கின்ற இந்த இழிவை, பேச்சை நான் கேட்டுக் கொள்கிறேன். உங்களை வணங்குகிறேன். நான்கு பசுக்கள் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. ஒன்றோடொன்று கலந்து கொள்ளாமல் இந்த பக்கம் புல் எனக்கு அந்த பக்கம் புல் எனக்கு என்று பங்கு போட்டுக் கொண்டு பறித்து தின்பதிலேயே இருந்தன. புல் வெளிக்கு அப்பால் காடு இருந்தது. அந்த நீண்ட காடு தாண்டி ஒரு புலி வந்தது. என்ன வந்தது. ஒரு புலி வந்தது. அந்த சோழப்புலி காட்டின் விளிம்பிலிருந்து கொழுத்த இந்த பசுக் களை பார்த்தது. அடடா அடித்து தின்றால் ரத்தம் சுவையாக இருக்குமே என்றெல்லாம் சப்பு கொட்டியது. காட்டிலிருந்து பசுக்களை நோக்கி வந்தது. அந்த பசுக்களுக்கு முன்னே இருந்த எருமையை ஓங்கி அடித்து உண்டது. வீழ்த்தியது. எருமையை தன் தேசத்திற்கு விரட்டியது. இப்பொழுது உங்கள் பக்கம் திரும்பியுள்ளது.

இந்த நான்கு பசுக்களும் புலியின் வருகையை கண்டு ஒன்றானால் இந்த பசுக் கூட்டம் பிழைத்துக் கொள்ளும். வலிமை மிக்க கொம்புகளும், உறுதியான உடம்பும் இருக் கையில் இந்த பசுக்கள் எது பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஒரே குத்தில் சோழப் புலியை அடிவயிற்றில் கிழித்து அனுப் பலாம். மிதித்து கொல்லலாம். ஒற்றுமையாக இருந்தால் நிச்சயம் நடக்கும். இல்லையெனில் இந்திரதத்தன் என்ற காட்டெருமை அடிபட்டது போல ஒவ்வொரு பசுவாக அடி படும். புலிக்கு அந்த சாமர்த்தியம் உண்டு. நான் சொல்வது பஞ்ச தந்திர கதை. நீங்கள் எல்லோரும் கேட்ட கதை. எது புலி, எது எருமை, எது பசு என்று உங்களுக்கு புரிந்திருக்க வேண் டும். ஒற்றுமையாகப் போகிறீர்களா. இல்லையா.'' அவன் உரத்த குரலில் கேட்டான். சபை மௌனமாக இருந்தது. எல்லோரும் மகிபாலனையே பார்த்தார்கள்.

''ஒற்றுமை என்ற வார்த்தை எனக்கு பிடிக்கவில்லை. கூட்டம் உற்சாகமாக எழுந்து மஹிபாலனை வாழ்த்தியது.

''அவர்களோடு ஒற்றுமை கொள்ளக்கூடாது என்பதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. பரம்பரை பரம்பரையாக நம்மை வஞ்சித்தவர்கள் தட்சிணலாடத்தினர். அந்த சண்டைக் குள் புகுந்து சாதாரணமான ரணசூரன் தன்னை அரசனாக்கிக் கொண்டான். சண்டைக்கு போக மாட்டோம் என்று பிராமணர் கள் நிறைந்த கோசல தேசத்தை தலைமையாகக் கொண்ட கோவிந்த சந்திரனின் முன்னோர்கள் எதுவரினும் சமாதானம் பேசினார்கள். என்னிடமும் காசு பெற்று, தட்சிணதேசத்திலும் காசு பெற்று சுகமாக வாழ்ந்து கொள்வது என்பது எனக்கு புரியவேயில்லை. குதிரையில் போருக்கு போகும்போது அணில் பிள்ளையை தோளில் வைத்துக் கொண்டால் அல்லது தலை யில் வைத்துக் கொண்டால் அது நமக்கு உதவியாக இருக்குமா. நமக்கு உபத்திரவம்தான் செய்யும். கோவிந்த சந்திரன் ஒரு உபத்திரவம். அவனை நான் ஒரு மனிதனாகவே கருதவில்லை. மிகப் பெரிய அந்தணர் கூட்டம் ஒன்று அங்கிருப்பதால் ஆயுதங்களோடு இங்கு வராதே என்று அவர்கள் கெஞ்சு வதால் சனாதன தர்மத்தை அவர்கள் காப்பாற்ற வேண்டும் என்று கதறுவதால் நான் கோசல தேசத்தின்மீது படையெடுக் காமல் இருக்கிறேன்.

ரணசூரன் தந்திரன். அவனை நம்ப மாட்டேன். இவர்களை தாண்டி ஒட்டதேசத்தின் எல்லையிலேயே சோழர்களை வழி மறித்தால் எனக்கு முன்னாலும் பயம் இருக்கும். பின்னாலும் பயம் இருக்கும்.''

கூட்டம் தலை அசைத்தது. ஆமாம் என்பது போல் ஆடியது.

''ரணசூரனையும், தர்மபாலனையும் பின்னே வைத்துக் கொண்டு நான் முன்னேறிப் போவதா. சோழர்கள் பின்னடைந் தவுடன் இவர்கள் முன்னேறி என்னை கொல்லுவார்கள். தண்டபுத்தியில் உள்ள ஒவ்வொரு வீரனும் உத்திரலாடத்தை வெறுக்கிறான். உத்திரலாடத்து மக்கள் தட்சிணலாடத்து மக்களை வெறுக்கிறார்கள். இது ஒரே நாடு. இலாடதேசம் என்று பெயர் பெற்ற நாடு. இந்த இலாட தேசத்தை காலம்

துண்டு துண்டாக்கியது. இவர்களை நம்பி என்னால் இறங்க முடியாது.''

''நீங்கள் சொல்லும்படி நேராது.''

''என்ன நேராது.''

''தர்மபாலன் ஒருகாலும் உங்களுக்கு எதிராக செயல்பட மாட்டான்.''

''எந்த தர்ம, நியாயத்தை வைத்துக் கொண்டு சொல்கிறாய். எத்தனை முறை அவமானப்படுத்தி இருக்கிறான். எத்தனை சூதுகள் செய்திருக்கிறான் என்பது தெரியுமா.''

''அது பழங்கதை''

''இல்லை, இன்னும் நெஞ்சிலே முள்ளாக உறுத்திக் கொண்டிருக்கும் கதை.'' மஹிபாலன் உரக்க கத்தினான். சபை ஆவலாக கேட்டுக் கொண்டிருந்தது.

''நான் தர்மபாலனை வரவழைக்கிறேன். மூன்றுநாள் பயணத்தில் உங்கள் அரசவையில் நிற்பான். உங்கள் எதிரே கைகூப்புவான். மஹிபாலனை மதித்து மரியாதை செய்வான். ஏன் காலிலும் விழுந்து வணங்குவான். ஏனெனில் தன் தண்ட புத்தியை தன்னால் மட்டும் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை.

அதேபோல ரணசூரனையும் சொல்லச் செய்கிறேன். அவ்விதமே கோவிந்த சந்திரனையும் நான் சொல்ல வைக்கிறேன். இவர்களைத் தாண்டி உங்களை எதிர்ப்போர் இங்கு எவரும் இல்லை. இந்த மூன்று பேரும் இந்த அரசவையில் உட்கார்ந்து உங்களுக்கு மரியாதை செய்து, நீங்கள் கொடுக்கும் மரியாதையை ஏற்று உங்களுக்கு உதவியாக இருப்பார்கள்.''

''சரி. சோழனை விரட்டி விட்டோம். போரில் ஜெயித்து விட்டோம். பிறகு,''

''அவரவர் அவரவர் இடங்களுக்கு போக வேண்டியது தான். இதுதான் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய சட்டம். உங்களுக்கு தண்டபுத்தியிலோ, ரணசூரன் தேசத்திலோ எந்த வேலையும் இல்லை, கோசல தேசத்தில் சற்று இளைப்பாறி பிறகு உத்திரலாடத்திற்கு வந்துவிடுங்கள்.''

''ஆக, சோழ தேசத்தில் ஆண்ட இராஜேந்திர சோழனை நோக்கி போக வேண்டும், இல்லையா.''

''ஆமாம் மன்னா.'' கங்கே யாதவ் தலையாட்டினான்.

''அதாவது தாக்கப்பட்ட ஒட்டதேசத்தை தாண்டி வேங்கிக்கு போய் அதுவரை துரத்திக் கொண்டு போய் இராஜேந்திரனை சந்தித்து இன்னும் கீழே போ என்று சொல்ல வேண்டும் அல்லவா.''

''ஆமாம்.''

''ஒட்டதேசத்தில் யார் துணை இருக்கிறார்கள்.''

''யாரும் இல்லை, ஒட்டதேசம் உங்கள் தேசம். வேண்டுமென்றால் ஜெயித்த பிறகு நீங்கள் அதை தட்சிணலாடத்தோடு பங்கு போட்டுக் கொள்ளலாம். அப்படி ஒரு ஒப்பந்தம் வைத்துக் கொள்ளலாம். வேங்கி வரை உங்கள் தேசம். மஹிபால, தர்மபால தேசம். பாலர் வம்சத்து தேசம்.''

மறுபடியும் அரசவை கூக்குரலிட்டது. மஹிபாலன் யோசித்தான்.

இது ஒரு நல்ல வாய்ப்புதான். ஆனால் கங்கை கரை விட்டு எதற்கு அவ்வளவு தொலைவு போய் கோதாவரி கரை அரிசியை தின்பது. இந்த செழிப்பு வருமா. வேங்கி உக்கிரமான வெய்யில் உள்ள தேசம். அது அத்தனை சுகமான இடம் அல்ல. இங்கு மூன்று மாதம்தான் வெய்யில். மற்றபடிக்கு குளிர் காற்று, கடும் மழை.

இராஜேந்திரசோழன் இவ்வளவு தொலைவு வரும்போது நாம் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு ரணசூரனோடும், தர்மபாலனோடும் சம்மந்தம் ஏற்படுத்திக் கொண்டு வேங்கி போனால் என்ன. வேங்கி தாண்டி சோழ தேசம் போக வேண்டாம். வேங்கிக்கு கூட வேண்டாம். வேங்கியை எதிர்த்து விட்டு வந்தால் என்ன அதைத்தானே இராஜேந்திரன் செய்கிறான். அதை நாம் செய்தால் என்ன. யோசித்தான்.

'சரி' என்று தலையசைத்தான். தொலைவே இடிஇடித்தது. வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும் என்று கரையோரம் மீனவர்களுக்கு தோன்றியது.

அரையன் ராஜராஜன் அருண்மொழிபட்டன் கிளம்பி விட்டான் என்ற செய்தி வந்ததும் துள்ளி எழுந்து காலைக் கடன்களை முடித்து உணவு உண்டு நெஞ்சில் கவசம் தரித்து, வேட்டியை இறுக்க கட்டி கையில் வாளேந்தி, அரண்மனைக்கு வெளியே வந்தார். குதிரை ஏறினார். தளபதியை அழைத்துக் கொண்டு அந்த கோட்டையை சுற்றி வந்தார். எங்கெல்லாம், யாரெல்லாம் தங்கியிருக்கிறார்கள் என்று பட்டியல் போட் டார். யார் யார் தலைமை தாங்குகிறார்கள் என்று தெரிந்து கொண்டார்.

ஒட்ட தேசம் முழுவதும் படர்ந்து பற்பல சௌகரியங் களுக்காக சோழ வீரர்கள் பிரிந்திருந்தார்கள். இப்பொழுது அவர்கள் அனைவரும் ஒரே நேர்கோட்டில், ஒரே பாதையில் கடற்கரை ஓரமாகவே பயணிக்க வேண்டும். நடுவே பய ணிக்க முடியாது. அடர்ந்த கானகங்களும், பெரிய மலைகளும் உண்டு. சிற்றோடைகள் அதிகம் இருக்கும். யானைகள் தாங்காது. எனவே, யாத்ரீகர்கள் கங்கைக்கு போகும் வழியான கடற்கரை பாதையில்தான் போக வேண்டும். பிறகு, எங்கு நகரங்கள் இருக்கிறதோ அங்கு திரும்பி எரியூட்ட வேண்டும். வேங்கிக்கு அனுப்பி வைத்ததுபோக, ஒட்ட தேசத்தில் தங்க வைத்தது போக, அருண்மொழிபட்டன் அழைத்துக் கொண் டது போக கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் வீரர்கள் இருக் கிறார்கள். மிகப் பெரிய குதிரைப் படை இருக்கிறது. ஒட்ட தேசத்து யானைகளையும் சேர்த்தால் ஆறாயிரம் யானைகள் உள்ளே நுழைய முடியும். தேர்களுக்கு வசதி இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் தேர்களும் போகலாம் என்றுதான் ஒட்டதேசத்து வீரர்கள் சொல்கிறார்கள். தேர்களும் உள்ளே நுழைந்துவிட்டால் பற்பல பாதைகள் ஊடறுத்து போய் தண்டபுத்தியை தாக்குவது எளிது. எப்பொழுது போக லாம். அந்தணர்களை கலந்தாலோசித்தார். குறி சொல்லும் வல்லுநர்களிடம் பேசினார். அவர்கள் நாள் குறித்து கொடுத்த வுடன், அந்த நாள், அந்த நேரம் சரியாக ஓலைகளில் எழுதப் பட்டு அங்கங்கே அனுப்பப்பட்டது.

அந்த நேரத்தில் அவர்களெல்லாம் ஒட்ட தேசத்தின் வட கிழக்கு பாதைக்கு வந்துவிட வேண்டும். யாத்ரீகர்கள் பாதை

என்றால் ஒட்ட தேசத்தில் யார் வேண்டுமானாலும் வழிகாட்டு வார்கள். ஒட்ட தேசம் முழுவதும் படர்ந்திருந்த சோழப் படைகள் ஒன்றன் பின் ஒன்றாக வரவேண்டும். ஒட்டதேசத் தின் எல்லையில் வரிசைப்படுத்தப்பட வேண்டும். அவர் உத்தர விட்டார். அவர் நகருவதற்கு நான்கு நாட்கள் இருந்தன.

கருமார்கள் கடினமாக வேலை செய்தார்கள். தீ வளர்த் தார்கள். நிறைய அம்புகளை சேகரித்தார்கள். பிரம்புகளின் நுனியில் எஃகு பொருத்தினார்கள். எரியூட்டப்பட வேண்டிய அம்பை கூர்மை குறைத்து தட்டையாக்கினார்கள். அவற்றில் துணி சுற்றி கொடுத்தார்கள். வேறு ஒரு உபதளபதி, ஒட்ட தேசத்தில் உள்ள தோலாடைகளை எல்லாம் பறித்துக் கொண் டான். யாதவர்களிடம் அந்த தோலாடைகள் இருந்தன. அவை யெல்லாம் பறித்து வழங்கப்பட்டன. மழைக்கும், குளிருக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. உலர்ந்த கட்டைகள் எடுத்துப்போவதற்கு கூண்டு வண்டிகள் தயாராக இருந்தன. அந்த கூண்டு வண்டிகள் மீது பிரம்பால் செய்யப் பட்ட பாய் இறுக்கமாக வைக்கப்பட்டது. ஒரு துளி மழை ஜலம் கூட உள்ளே வராதபடிக்கு இருக்க, ஏற்பாடு செய்யப் பட்டது. ஆடுகள் வண்டிகளில் ஏற்றப்பட்டன. நீர் குடங்கள் கூட ஏற்றப்பட்டன. போகும்போது ஏற்றப்பட்ட நன்நீர் வரும் போது கங்கை ஜலமாக வரும்.

கங்கை வரை போகமுடியுமா அல்லது வழியிலேயே மடக்கப்பட்டு விடுமா. ஒற்றர்கள் முன்னும், பின்னும் அலைந் தார்கள். இரண்டு அந்தணர்கள் வந்தார்கள். அவர்கள் ஒற்றுமை யாகி விட்டார்கள் என்று சொல்லப்பட்டது. அவர்கள் எல்லா பகைமையும் மறந்து மிக மோசமான நாட்களை மறந்து மஹி பாலனும், தர்மபாலனும் இடையிலுள்ள ரணசூரனும், கோவிந்த சந்திரனும் ஒன்றாகி மிகப் பெரும் படையோடு ஒன்றாகி தெற்கு நோக்கி வருகிறார்கள். ஒட்டதேசத்தின் எல்லையிலேயே மஹிபாலன் அரையன் ராஜராஜனை தடுத்து நிறுத்துவான். கோவிந்த சந்திரனுடைய படை மஹிபாலனுடைய படைக்கும் தர்மபாலனுடைய படைக்கும் ரணசூரனுடைய படைக்கும் உணவு கொடுக்கும் பொறுப்பை, வைத்தியம் செய்யும் பொறுப்பை ஏற்றிருக்கின்றது என்று தெரிவித்தார்கள்.

மஹிபாலன் எந்த தேதியில் சோழர்கள் புறப்படுகிறார்களோ அந்த தேதியில் புறப்படுகிறான். ஏனெனில் அதுதான் நல்ல நேரம் என்று அங்கேயும் குறிக்கப்பட்டது. ஆனால் அன்று தெற்கே சூலம். அதனால் சூலம் ஆரம்பிக்கும் முன்பே விடியற்காலையிலேயே, இருட்டிலேயே தீப்பந்தங்கள் பிடித்து மஹிபாலன் நகர்ந்து விடுவான்.

அரையன் ராஜராஜன் கவலையானார்.

'இந்த நேரத்தில் அருண்மொழியையும் இழந்து நிற்கிறோமே. என்ன செய்வது.' வீர இராஜேந்திரனை நோக்கி குதிரை செலுத்தினார்.

தேர்களுக்கு தலைமை ஏற்றிருந்த வீர இராஜேந்தின் தன் வீரர்களோடு பேசிக் கொண்டிருந்தான். அரையன் வரும் கட்டியம் கேட்டு எழுந்து நின்றான். அரண்மனைக்கு வெளியே வந்து காலை தொட்டு நமஸ்கரித்து கட்டித் தழுவிக் கொண்டான்.

''சொல்லுங்கள் தலைவரே, கூப்பிட்டிருக்கக் கூடாதா. நான் வந்திருப்பேனே.''

''இல்லை. உன்னை மட்டும் பார்ப்பதல்ல என் நோக்கம். உன் படைகளையும் பார்க்க வேண்டும். எவ்வளவு தூரம் தேர் வீரர்கள் நமக்கு உதவியாக இருப்பார்கள். அல்லது தொந்தரவாக இருப்பார்கள் என்று எனக்கு தெரிய வேண்டும். ஏனெனில் மஹிபாலன் நான் கிளம்புகின்ற நாளில் கிளம்புகின்றான். அருண்மொழி கடலுக்கு போய் விட்டான். வந்து மறுபடியும் போவான்.

எனக்கு அது புரியவில்லை. வங்க தேசத்தை பின்புறமிருந்து தாக்குவது என்பது முடியுமா என்று தெரியவில்லை. அது ஒரு தற்கொலை படையாக இருக்கிறதோ என்று தோன்றுகிறது. வேங்கியில் மடிந்தது போல முக்கியமான வீரர்களை நாம் இழந்தது போல, இங்கேயும் இழந்து விடுவோமோ என்று அச்சமாக இருக்கிறது. வீரராஜேந்திரன் தொடர்ந்தான்.

அருண்மொழிபட்டரை இழந்தால் இராஜேந்திரர் உங்களை கோபிக்காமல் இருக்க மாட்டார். என்னை அடிக்காமல் இருக்க மாட்டார். அருண்மொழிபட்டர் செய்வது எனக்குக்கூட பிடிக்க

வில்லை. நம்மோடு அவர் படைகள் வருவது தான் நல்லது. நேரிடையான தாக்குதல்தான் சிறப்பு.''

அவர்கள் ஒற்றுமையாவார்களா என்பது எனக்கு சந்தேகம். அவர்கள் சண்டை என்ன என்பதை ஒட்டர்கள் பலபேரிடம் விசாரித்து விட்டேன். ஒருவரை ஒருவர் பார்த்தால் கற்களால் தாக்கிக் கொள்வார்களாம். அவ்வளவு வெறியாம். அவர்கள் உணவை இவர்கள் வெறுக்கிறார்களாம், இவர்கள் உணவை அவர்கள் ஏற்கமாட்டார்களாம். எல்லா விதத்திலும் மாறுதலாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்களாம்.

சைவச் சமயம் அல்ல. வைணவமே சிறந்தது என்று தர்ம பாலன் நினைக்கிறான். ஒட்ட தேசம் போல தன் தேசத்திலும் வைணவ கோவில்களையும், மடங்களையும் எழுப்பி வரு கிறான். இது வைணவத்தின் மீது உள்ள காதலால் அல்ல. சிவன் மீது உள்ள வெறுப்பால் அல்ல. இது தாயாதி சண்டை, அந்த வரை பிரிந்து கிடக்கிறது. எப்படி ஒற்றுமையாவார்கள். தெரியவில்லை.''

''ஏன் நாமும் பாண்டியர்களும் ஒற்றுமையாக இல்லையா.''

''அடேய். அந்த ஒற்றுமை என்றால் அது சண்டைதான்.''

''என்ன சொல்கிறீர்கள்.''

''பாண்டியன் அடங்கி கிடக்கிறான். அவ்வளவுதான். ஒற்றுமையாக இல்லை. பாண்டியனும், நாமும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்ற வார்த்தையை நான் முற்றிலுமாக மறு தலிக்கிறேன். சேரர்கள் வெறுப்போடு இருக்கிறார்கள். பாண்டிய நாட்டின் தெற்கே நாஞ்சில் நாடு கொதித்துக் கொண்டுதான் இருக்கும். குமரியிலிருந்து கொற்கை வரை அவர்கள் தங்க ளுடைய சாம்ராஜ்ஜியத்தை பலப்படுத்திக் கொள்ளத்தான் நினைப்பார்கள். அங்கிருந்து கலவரம் நிச்சயம் வரும்.

ஈழத்திலிருந்தும் வடக்கே மத்திய பாண்டிய தேசத்தி லிருந்தும் தாக்கினாலொழிய அவர்களை அடக்க முடியாது. ஒருவாறு அமைதியாக இருக்கிறதே தவிர, பாண்டிய தேசம் ஒற்றுமையாக இல்லை.

இவர்களிடமும் அந்த குறைதான். இவர்கள் மட்டும் ஒன்றானால் நாம் உள்ளுக்குள் போகவே முடியாது. கங்கையை தொட முடியாது. இவர்கள் சந்தித்துக் கொண்டதும் அடித்துக் கொண்டால் மிக சௌகரியமாக போயிற்று. நாம் எளிதில் உள்ளே நுழைந்துவிடலாம்.''

''கங்கே யாதவ் நடுவில் நிற்கிறான்.''

''கங்கே யாதவ் ஒரு கிழட்டு நரி. சொல்லி பார்ப்பான். இரண்டு பேரும் அடித்துக்கொண்டு சாகட்டும் என்று பரத கண்டத்தின் மத்தியில் இருக்கும் போசனோடு கங்கே யாதவ் தொடர்பு கொள்வான்.''

போசனுக்கு என்ன பிரச்சனைகள்.''

''போசனுக்கு பிரச்சனைகள் அதிகம். வடமேற்கிலிருந்து யவனர்கள் வரப் போகிறார்கள். பரத கண்டத்தை கைப்பற்ற போகிறார்கள். அதற்கு போசன் எதிர்ப்பாக இருக்கிறான். ஆனால் வலுவாக இல்லை. கங்கே யாதவை வரச்சொல்லி கேட்டிருக்கிறான். ஆனால் கங்கே யாதவ் என்ன திட்டம் வைத்திருக்கிறான் என்று தெரியவில்லை. உதவி பெறத்தான் கங்கே யாதவுக்கு தெரியுமே தவிர, உதவி கொடுக்கத் தெரியாது.''

''மத்திய பரதகண்டத்தில் யவனர் வருகை. நடக்குமா இது. கைப்பற்ற முடியுமா பரத கண்டத்தை.''

''தெரியவில்லை. எனக்கு இந்த பரப்பளவே புரிபட வில்லை. ஆனால் ஒட்ட தேசத்து மாலுமிகளும் இதைப் பற்றி சொல்லுகிறார்கள். மேற்கு கடற்கரையில் யவனர்கள் நட மாட்டம் அதிகமாகி விட்டது. ஐந்துவித நதிகள் பெருக்கெடுத்து ஓடுகின்ற ஒரு இடத்தில் அவர்கள் ஆளுமை செய்ய வந்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். 'சிந்து' என்று அந்த நதிக்கு பெயராம். மிகப் பெரிய நாகரீக நகரம் இருக்கிறதாம்.''

''கடல் வழியாக யவனர்கள் வந்தால் அவர்கள் பராமரர்கள் தேசத்தையும், மேலை சாளுக்கியத்து கடற்கரையையும், பிறகு சேர தேசத்து கடற்கரையையும் தாக்கி உள்ளே நுழைவார்கள். ஆனால் நிலம் வழியாக வருவது தான் சிறப்பு என்று சொல் கிறார்கள்.

நிலப்பயணம் போல கடற்பயணம் அவ்வளவு எளிதான தல்ல. ஆபத்து அதிகம் என்று சொல்கிறார்கள்.''

''இதை எங்கிருந்து கேட்டாய்.''

''வடக்கேயிருந்து இடுப்பில் கையகல துணி மட்டும் கட்டி, குளிர், மழை எல்லாவற்றையும் தாங்கியவாறு சடை தரித்த சாதுக்கள் என்னிடம் பேசினார்கள். அவர்கள் வடக்கே போர் மேகங்கள் சூழ்கிறது. அதனால் தெற்கே வந்து கீழை சாளுக்கியத்திலோ அல்லது மேலை சாளுக்கியத்திலோ குடி வரப் போகிறோம் என்கிறார்கள். பத்து, பதினைந்து பேர் கஷாயம் உடுத்தியிருந்தவர்களும் அவர்களை பின் தொடர் கிறார்கள்.

கங்கையை விட்டு பிரிந்து வருவது என் தாயை விட்டு பிரிந்து வருவது போல் இருக்கிறது என்கிறார்கள். காசி மாநகர சிறப்பை சொல்கிறார்கள். என்னையும் காசிக்கு போகச் சொல்லி வேண்டுகோள் வைத்தார்கள். நாம் வடக்கே தாக்கி வடக்கிலிருந்து வடமேற்கே நகர்ந்தால் என்ன என்றும் தோன்று கிறது.''

''நம் வீரர்கள் களைப்படைந்து விடுவார்கள் வீர இரா ஜேந்திரா.

சரி. நாம் முன்னே போவோம். நேரத்திற்குள், அதாவது ஆறு ஏழு நாட்களுக்குள் அருண்மொழிபட்டனை பார்த்து விட்டால் நலம். தினசரி காலை நேரம் என்னை சந்தித்துவிட்டு நீ இந்த இடத்திற்கு வந்துவிடலாம். நாம் இருக்கின்ற கோட்டை யிலிருந்து வெகுதொலைவில் கோட்டைகள் எதுவும் இல் லாமல் வெறும் கூடாரத்தில் தங்கியிருக்கிறாயே. பாதுகாப்பு போதாது என்ற கவலையும் எனக்கு வருகிறது.''

''இல்லை. இங்கே எனக்கு எந்த ஆபத்தும் வராது. இரவில் தூங்க சில வீரர்களும், பகலில் தூங்க சில வீரர்களும் வைத்து இருக்கிறேன். தொலை தூரத்திலும் காவல் போட்டிருக்கிறேன். காவல் இருக்கும் மரங்களில் பரண் அமைத்து, ஏணிகள் சாய்த்து வைத்து வீரர்கள் இருக்கிறார்கள். அங்கும் முறை போட்டு தூங்குகிறார்கள். இங்கிருந்து உணவு அவர்களுக்கு

போகிறது. மிகத் தெளிவாக மிக சூட்சமமாக, மிக கூர்மையாக இருக்கிறோம். என் பாதுகாப்பு பற்றி கவலையே வேண்டாம். என் தந்தையிடமிருந்து ஏதாவது செய்தி வந்ததா.''

''அருண்மொழிபட்டன் இருக்கும்போதே வந்தது. நம்மை உற்சாக மூட்டியிருக்கிறார். நாவாய்கள் சேகரித்து ஒட்ட தேசம் அனுப்ப பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக் கிறார். ஒற்றர்கள் சொல்வதை பார்த்தால் அவரும் இந்த பக்கம் நாவாய்கள் மூலம் வந்து விடுவார் என்று தோன்றுகிறது. ஆனால் இவ்வளவு கடினமான பயணம் அவருக்கு தாங்காது என்றும் சொல்கிறார்கள்.''

''இது தூதுவர் செய்தியா. ஒற்றர் செய்தியா.''

''தூதுவர் செய்தியும். ஒற்றர் செய்தியும். வேங்கி தேசம் மிகச் சிறப்பாக அமைதியாக இருக்கிறதாம். ஆடல், பாடல் நடந்து கொண்டிருக்கிறதாம். இந்திரதத்தனுக்கு தெற்கே தொண்டை நாட்டில் மிகப் பெரிய மரியாதையாம்.''

''மேலை சாளுக்கியம் பற்றி விசாரித்தீர்களா.''

''துவண்டு போயிருக்கிறது. சரியான அடி. இராஜேந்திர சோழர் பேரை கேட்டவுடன் நடுங்குகிறார்களாம். நம்மை சபிக்கப்படும் பாடல்களை அங்கு இரவு நேரம் பாடுகிறார் களாம். எங்களை கொலை செய்தானே, என் பெண்டுகளை கற்பழித்தானே, என் குழந்தைகளை வாள் குத்தி கொன்றானே என்று பாடுகிறார்களாம். ஹொட்டூர் அருகே நடந்த அந்த போரை அவர்கள் மறக்கவே இல்லையாம். மறைமுகமான சாபத்தாலோ என்னவோ இராஜேந்திரர் அடிக்கடி துவண்டு விடுகிறார் என்று தோன்றுகிறது.''

''என்ன பேசுகிறீர்கள். அறுபது வயதானால் உங்களுக்கும் கை, கால் ஆடத்தான் செய்யும். எத்தனை சாதனை செய் திருக்கிறார். எத்தனை போர் செய்திருக்கிறார். அத்தனை என்னால் செய்ய முடியுமா. எனக்கு தெரியவில்லை. நீங்கள் கூட பல போர்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அவர் வேகம் நமக்கு வருமா.''

''இல்லை, அவர் வயதுக்கு அவர் செய்த சாதனைகள்

அதிகம். ஆனாலும் அவர் மீது சுமத்தப்பட்ட பழிகளும் அதிகம். அவர் வேகத்தை இந்த பரத கண்டம் தாங்காது.''

''யவனர்கள் மத்திய பரத கண்டத்தில் காசி தேசம் நோக்கி, போசராஜன் நோக்கி வருகிறான் என்று தெரிந்தால் இராஜேந்திரர் கிளம்பி விடுவார் என்று தோன்றுகிறது. அவருக்கு யவன வணிகர்களே பிடிக்காது. உள்ளே படையெடுத்து வருவதை எப்படி தாங்குவார்.''

''அதுபற்றியும் அவருக்கு செய்தி அனுப்பியிருக்கிறேன். ஏனோ அவர் பதில் சொல்லவேயில்லை. வேறு ஏதேனும் தகவல் சேகரித்திருப்பார்.''

''நல்லது. நாள் குறித்துக் கொண்டாயல்லவா. உன்னுடைய தேர்ப்படையோடு அங்கு வந்து விடு. அரையன் ராஜன் உத்தரவு இட, இராஜேந்திர சோழரின் புதல்வனான வீர இராஜேந்திரன் தலைகுனிந்து வணங்கினான்.

அரசனின் மகனாக இருந்தாலும் அரையன் இராஜராஜன் தான் இந்த படைக்கு தலைவர், இராஜேந்திர சோழரின் செல்லப் பிள்ளையாக இருந்தாலும் அரையன் ராஜராஜனின் உத்தரவு இன்றி இங்கு ஒரு அணுவும் அசையக்கூடாது. வீர இராஜேந்திரன் உட்பட நகரக் கூடாது. அவன் பணிவாக அவரை ஏற்றுக் கொண்டான்.

இராஜேந்திர சோழரின் வாரிசு செம்மையாக இருக்கிறது என்று சந்தோஷப்பட்டுக் கொண்டே அரையன் ராஜராஜன் குதிரை ஏறினார். கோட்டை நோக்கி போனார்.

வலக்கையை நீட்டி தொப்புள் உயரத்திற்கு வைத்தால் என்ன சாய்மானம் இருக்குமோ அந்த சாய்மானத்தில் நாவாய் மிதந்து வந்தது. இடப்புறம் தூக்கியும், வலப்புறம் சாய்ந்தும் ஆட்டத்தோடு நகர்ந்து கொண்டிருந்தது. தெற்கத்தி காற்றால் பாய்மரங்கள் உப்பின. சட்டென்று நின்றன. லேசாக வடக்கு பக்கம் வளைந்தன. பிறகு திடீரென்று தெற்கு பக்கம் உப்பின. மரக்கலம் தள்ளாடியது. குதிரைகள் திரும்ப திரும்ப கனைத்துக் கொண்டிருந்தன. பல வீரர்கள் அங்கங்கே மேல் தளத்தில் குத்திட்டு வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார்கள். சிலருக்கு

வயிற்றுப்போக்கும் ஏற்பட்டது. மரக்கலத்திற்கு வெளியே ஒரு கை தூரத்தில் நீண்ட மரப்பலகை இட்டு அதில் வட்டமாக ஒரு இடம் ஏற்படுத்தினார்கள். அதை சுற்றி வரும்போது பிடித்துக் கொள்ள கைப்பிடி வைத்திருந்தார்கள். மரக்கலத்தின் விளிம்பிலிருந்து அந்த பலகையின் மீது நடந்து அந்த கைப் பிடியை பிடித்துக் கொண்டு அந்த ஓட்டையை நோக்கி குத்திட்டு உட்கார வேண்டும். மலம் கழிக்க வேண்டும். பிறகு எழுந்து நின்று வாளி ஜலத்தை கடலில் இறக்கி கடல் நீரை மொண்டு கழுவிக் கொள்ள வேண்டும். பிறகு உள்ளே வந்து மறுபடியும் வாளியில் நீர் எடுத்து கை, கால்களை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இது கிட்டத்தட்ட ஒரு களறி பயிற்சி போல் இருந்தது. மலம் கழித்து விட்டு வருவதற்குள் வியர்த்து கொட்டியது. பயத்தாலோ அல்லது மரக்கலத்தின் ஆட்டத்தாலோ பற்கள் கிட்டித்துப் போயிருந்தன.

'என்னடா இது பெரிய அவஸ்தை' என்று ஒரு மத்திம வாலிபன் வாய்விட்டு அலறினான். 'தரையில் இந்த தொந்தரவு இல்லவே இல்லையல்லவா' என்று பரஸ்பரம் பேசிக் கொண் டார்கள். 'காடுகளாய் இருந்தாலும் புகுந்து புறப்படலாம். இப்படி கயிற்றில் தொங்கிக் கொண்டே எத்தனை தூரம் பயணப்படு வது.' அவர்கள் கவலையானார்கள்.

மரக்கலத்தின் நுனியில் குட்டன் கணவதி நின்றிருந்தான். அவனுக்கு கடல் சாய்மானம் பெரிதாக தொந்தரவு செய்ய வில்லை. மலையில் ஏறுவது போல் ஏறி அடுத்த பக்கம் குதித்து கடலின் அடிபாகத்தை பார்த்தான். சுக்கானை ஒரு நல்ல ஒட்டதேசத்து மாலுமி இயக்க குட்டன் கணவதி பாய் மரங்களை மாற்றச் சொல்லி உத்தரவிட்டுக் கொண்டிருந் தான். அருண்மொழிக்கு இந்த அவஸ்தை பட்டுத்தான் ஆக வேண்டும் என்று தெரிந்திருந்ததால் அவன் மௌனமாக ஏற்றுக்கொண்டான். வயிறு பிரட்டாமல் இருக்க வேண்டுமே என்று வேண்டிக் கொண்டான்.

அருண்மொழி மரக்கலத்தின் உள்பக்கம் போய் துடுப்பு போடுவதை பார்த்தான். இடுப்பில் கோமணம் மட்டும் கட்டி, கொஞ்சம் இருட்டான அடிப்பகுதியில் இரண்டு இரண்டு

வீரர்கள் ஒரு பெரும் துடுப்பில் கை வைத்தபடி இருந்தார்கள். ''வலது பக்கம் துடுப்பு போட்டால் இடது பக்கம் சாயாதா. உயர்ந் தது தாழாதா'' என்று கேட்டான்.

செய்து பார்க்கலாம். வலப்பக்கம் உள்ளவர்கள் ஒட்ட தேசத்து பாட்டு ஒன்று பாடி கடல்நீரை துழாவினார்கள். சிறிது இடப்பக்கம் இறங்கியது. கணவதி இது சரியில்லையே என்று எண்ணினான். இப்பொழுது சட்டென்று மரக்கலம் இடப் பக்கம் தாழ்ந்து வலப்பக்கம் உயர்ந்தது. நாலுபக்கமும் முட்டிக் கொண்ட அருண்மொழி தூணை உறுதியாக பிடித்துக் கொண்டு 'இடதுபக்கம் துழாவுங்கள்' என்றான். 'தம் தம்' என்று முரசு ஒலிக்க ஒரே சீரில் துடுப்பு துழாவினார்கள். இப்பொழுது மரக்கலம் வலப்பக்கம் சரிந்து நேராயிற்று. வேகமாக இரண்டு பக்கமும் போடச் சொன்னான். மரக்கலம் முன்னேற துவங்கியது. மேலே கணவதியை பார்த்து,

''கணவதி, பாய்மரத்தை இறக்கிவிடலாமா'' என்று கேட் டான். அவன், உத்தரவு சொல் என்பது போல கணவதியை கேட்டது கணவதிக்கு பிடித்திருந்தது.

மரக்கலத்தின் நுனியிலிருந்து சுக்கானை அப்படியே விட்டு விட்டு படிக்கட்டுகளில் உள்ள கைப்பிடியை பிடித்து சறுக்கியபடி கீழிறங்கி வந்தான். வெகுநாள் மரக்கலத்தோடு பழகியவனுக்குத்தான் அந்த ஆட்டத்தில் அப்படி இறங்க முடியும்.

''ஒரு விஷயம் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன், உங்கள் மனதில் என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை நான் சொன்னது பிடிக்காவிட் டால் மறந்து விடுங்கள்.''

''எதற்கு இவ்வளவு முகாந்திரம். மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அதை பேசு.''

''வேங்கிக்கு போகலாமா.''

''என்ன''

''இரண்டு நாள். ஒட்டதேசத்திலிருந்து வேங்கிக்கு இரண்டே நாளில் போய்விடலாமா.''

''ஏன் வேங்கிக்கு போக வேண்டும்.''

''உங்களுக்கு ஒருவேளை இராஜேந்திரரை பார்க்க வேண்டும் என்ற ஆசை இருப்பின், என்ன நடந்தது ஒட்ட தேசத்தில் என்று சொல்லுவதற்கு விஷயம் இருப்பின் என்ன செய்யப் போகிறோம் என்று விவரிப்பதற்கு திட்டங்கள் இருப்பின் அதை இராஜேந்திரரிடம் சொல்லி விடலாம். இரண்டே நாள். இராஜேந்திரரை அடைந்து விட முடியும்.''

''பிறகு வங்கத்திற்கு போக?''

''அப்போது காற்று மாறும். மிக அற்புதமான ஒரு சூழலில் இருக்கிறோம். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காற்று போய்க் கொண்டு இருக்கிறது.''

''இது பிரளும்.''

''இது பிரளுவதற்கு இன்னும் மூன்று நாட்கள் நான்கு நாட்கள் ஆகும். ஒருநாள் வேங்கிக்கு உள்ளே போய் அவரை பார்த்துவிட்டு வந்துவிடலாமா.''

''உனக்கு மாமன்னர் இராஜேந்திரரை பார்க்க வேண்டுமா.'' அருண்மொழிபட்டன் கூர்மையாக கேட்டான். அதில் கேலியும், கோபமும் தெரிந்தன.

''தெரியும். இப்படி ஒரு கேள்வி வரும் என்று தெரியும். சுக்கான் பிடித்த நேரத்திலிருந்து இதைத்தான் யோசித்திருந்தேன். இதைச் சொன்னால் என்ன ஆகும் என்ற கவலையில் இருந்தேன். கவலையை ஒழித்துவிட்டு கீழ் இறங்கினேன். மேலே ஏறி சுக்கான் பிடித்து பாருங்கள். மரக்கலம் வடக்கே போக தத்தளிக்கிறது. துடுப்பு போடுபவர்களை துன்புறுத்த வேண்டுமோ என்று தோன்றுகிறது. அவர்கள் அடிமைகள் அல்ல. வீரர்கள். இது மிகுந்த கடினமான வேலை. இவ்வளவு பெரிய சுமையை அவர்கள் தலையில் சுமத்துவானேன் என்ற எண்ணமும் இருக்கிறது.

அவர்களை நினைத்தும், ஒருவேளை மாமன்னர் இராஜேந்திரரை நீங்கள் சந்தித்தால் கங்கை படையெடுப்பு மிகச் சிறப்பாக அமையுமோ என்ற எண்ணத்திலும் இதை பேசினேன்.

முடிவு நீங்கள் செய்து கொள்ளுங்கள்.'' அவன் படியில் தாவிப் போனான்.

அருண்மொழி கைதட்டி அவனை திரும்ப அழைத்தான். அறைக்குள் அழைத்துப் போனான்.

''என்ன சொல்கிறாய் முட்டாளே.'' இன்னும் கோபம் குறையாமல் கேட்டான்.

''கடல் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். கடல் பற்றி எனக்கு அதிகம் தெரியும் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த இடத்தில் நீங்கள் என்னை நம்பித்தான் இருக்கிறீர்கள். ஆனால் ஊறு செய்யும் எண்ணத்தில் நான் இல்லை. உங்களுக்கோ, சோழ தேசத்திற்கோ, இராஜேந்திரருக்கோ நான் எதிராக இருப்பவன் அல்ல. மாறாக உங்கள் உதவியோடு என்னுடைய சில விஷ யங்களை முடித்துக் கொள்ள நான் பெரிதும் விரும்புகிறேன்.

என் சீனதேசத்து பயணம் உங்களால் நிறைவேறும் என்று நான் நினைக்கிறேன். என் கயிலை யாத்திரைக்கு நீங்கள் உதவி செய்வீர்கள் என்று நினைக்கிறேன். இதுவும் நான் உங்க ளுக்கு உதவக் காரணம். அது தவிர, குள்ளன், குள்ளன், குள்ளன் என்று என்னுடைய அந்தண இனமும், என் ஊர் மக்களும் என்னை கேலி செய்தார்கள். நான் அரையன் ராஜ ராஜனுக்கு அருகிலும், அருண்மொழிபட்டனுக்கு அருகிலும் இராஜேந்திர சோழருக்கு அருகிலும் கேயூரம் தரித்து, குறு வாள் தரித்து, உப சேனாதிபதியாகவோ, ஒரு சேனாதிபதி யாகவோ நிற்பதை பார்த்து என் ஊர் மக்கள் நடுங்குவார்கள். நான் குதிரை ஏறி என் ஊரை வலம் வரும்போது மண்டியிட்டு வணங்குவார்கள். ஊர் பெரியவர்கள் பூரண கும்பத்துடன் வர வேற்பார்கள். அந்த பூரண கும்பத்தை காலால் எத்த வேண்டும் என்பதே என் ஆசை.''

''அத்தனை கோபமா கணவதி.''

''ஆமாம். எவ்வளவு அழகாக கணவதி என்று நீங்கள் கூப்பிடுகிறீர்கள். குட்டன் என்று நீங்கள் சொல்லவில்லையே. இது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. என்னை கணவதி

என்று கூப்பிடுபவர்களுக்கு நான் நன்றி உள்ளவனாக இருப்பேன்.

மிகத் தெளிவாக மறுபடியும் சொல்கிறேன். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீசிய காற்றும், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வீசிய காற்றும் ஒன்றை ஒன்று சந்திக்கிற வேளை, ஒன்றை ஒன்று மிஞ்சுகிற வேளை இது. இந்த வேளையில் அனேகமாக நாவாயை வெளியே எடுக்க மாட்டார்கள். தெற்கு நோக்கி போவது ஓயட்டும். வடக்கு நோக்கி வருவது பலப்படட்டும் என்று கரைகளில் கள் குடித்துவிட்டு காத்திருப்பார்கள். அடிக்கடி நூல் எடுத்து காற்று திசை பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

தொலைதூரத்தில் பயணத்தை மேற்கொண்டு சீனாவிலிருந்தோ, ஸ்ரீவிஜயத்திலிருந்தோ, கடாரத்திலிருந்தோ, மாபாளத்திலிருந்தோ கிளம்பிவிட்ட நாவாய்கள் இந்த பக்கம் வந்துதான் ஆகும். இந்த கஷ்டத்தை தாண்டிதான் ஆகும்.

எனவே, இந்த நேரத்தில் என்ன செய்வது என்று தீர்மானித்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீசும் காற்று சாதகமாக இருக்கிற பொழுது கடலுக்கு ஊடே போய் நீரோட்டம் கண்டுபிடித்து அந்த நீரோட்டத்தில் நாவாயை மிதக்க விட்டு பாய்களை விரித்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி போகும் காற்றை உபயோகப்படுத்திக் கொண்டு இரண்டு நாட்களில் நாம் வேங்கியை அடைய முடியும். இராஜேந்திரரை பார்க்க முடியும். மேற்கொண்டு திட்டங்களை நீங்கள் பேச முடியும்.

இன்னும் ஒன்று சொல்கிறேன். ஒட்ட தேசத்து நாவாய்களை விட, கீழை சாளுக்கியத்து நாவாய்கள் மிகச் சிறந்தவை. கடலை ஒட்ட தேசத்தினர் அதிகம் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஒட்ட தேசத்தை விட தண்டபுத்தியும், வங்க தேசமும் கடலை அதிகம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அமைதியான கோசலம் நோக்கி வணிகர்கள் வருவது உண்டு. கோவிந்த சந்திரனுக்கு போரைவிட வணிகம்தான் முக்கியம்.

நாம் வேங்கிதேசம் போய் விட்டால் அங்கே உள்ள நாவாய்களை தேர்ந்தெடுத்து இன்னும் வீரர்களோடு நாம்

கங்கையில் இறங்கலாம். இருபத்தைந்தாயிரம் வீரர்கள் என்பது குறைவு. நாற்பதாயிரம் வீரர்கள் என்பது மறுபடியும் நீங்கள் ஒட்ட தேசத்திற்கு போய் எடுப்பதற்கு நேரம் இல்லை. எனவே வேங்கிதேசம் போய் நாவாய்கள் எடுத்து அங்கிருந்து இன்னொரு இருபத்தைந்தாயிரம் வீரர்களை எடுத்தால் ஐம்பதாயிரம் வீரர்களோடு வரலாம்.

அதுமட்டுமல்ல. ஒரு நாவாய் நிறைய தேர்களை ஏற்றி விடலாம். குதிரைகளை ஏற்றி விடலாம். மூன்று நான்கு வீரர்கள் போதும். அவைகளை கங்கை கரையில் இறக்கி குதிரைகளில் பூட்டி வேகமாக தெற்கு நோக்கி போவதற்கு உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.''

''கணவதி அவ்வளவு தெரிந்தவனா நீ.''

''யோசித்தால் எதுவும் தெரியும். உண்மையாக யோசித்தால் சகலமும் புரியும். நான் சோழ தேசத்திற்கு உண்மையாக இருக்கிறேன். என்ன செய்தால் வெற்றி என்று யோசிக்கிறேன். ஒரு தாகத்தோடு இருக்கிறேன். நான் குள்ளன் என்பதால்தான் நீங்கள் என்னை கேலியோடு புறக்கணிக்கிறீர்கள்.''

''இல்லை கணவதி. ஒருகாலும் அப்படி இல்லை. மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது என்று எனக்கு தெரியும். உன்னை நான் அவ்விதமே பார்க்கிறேன்.''

''நன்றி அருண்மொழிபட்டரே. மிக்க நன்றி.'' அவன் குனிந்து முழங்காலை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''இன்னொரு கேள்வி இருக்கிறது கணவதி.''

''சொல்லுங்கள்.''

''வடக்கிலிருந்து தெற்கு அதாவது ஒட்ட தேசத்திலிருந்து கீழைசாளுக்கியத்தின் தலைநகரான வேங்கிக்கு நாம் போயாகி விட்டது. வேங்கியின் அடுத்த கரையில் இறங்கி விட்டோம். அந்த வேங்கியின் அடுத்த கரையில் இராஜேந்திரரை நாம் பார்க்கிறோம். அல்லது இராஜேந்திரர் நம்மை பார்க்கிறார். இப்போது அந்த வேங்கியிலிருந்து வங்கம் வர வேண்டுமென்றால் எப்படி வருவது. எத்தனை நாள் ஆகும்.''

''மறுபடியும் சொல்கிறேன். இது காற்று திசை மாறும் வேளை. இரண்டு நாளில் நாம் வேங்கியை அடைவோம். ஒருநாள் அங்கு இருப்போம். அந்த நாள் கடல் குழப்பமாக இருக்கும். பிறகு தெற்கிலிருந்து காற்று வடக்கு நோக்கி வீசும். அதாவது அதுதான் இந்த பருவத்தின் கடைசி காற்று. வடக்கிலிருந்து சீறி உள்ளே வந்தவுடன் தெற்கத்தி காற்று ஒட்டுமொத்தமாய் திரண்டு வேகமாக வடக்கு நோக்கி நகரும்.

அதுமட்டுமல்ல தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஆமைகள் நகரும் காலம். ஆமைகள் நகருகின்ற நீரோட்டத்தில் கலந்து விட்டால் மூன்று நாளில் வங்கத்தை அடைந்துவிட முடியும். சரியானபடி பாய்மரம் விரித்தால், துடுப்புகள் போட்டால் மின்னலென சீறிக் கொண்டு நாவாய்கள் கங்கை துறை முகத்தை அடையும்.''

''இவையெல்லாம் சாதகமாக இருக்க வேண்டும்.''

''இந்த பருவம் அப்படித்தான். சாதகமாக இருக்கும்.''

''இது தவறாக போவதற்கு வாய்ப்பிருக்கிறதா?''

''ஒரு சதவீதம் வாய்ப்பிருக்கிறது. நூற்றில் ஒன்றுக்கு வாய்ப்பிருக்கிறது. நாள் தாமதமாகுமே தவிர, போய் சேரவே முடியாது என்ற இடத்திற்கு வராது. ஒரிரு நாள் கடலில் தத்தளிப்போமே தவிர, வெகு நிச்சயமாக காற்று திசை திரும்பும்.''

''பிறகு.''

''பிறகு தெற்கத்தி காற்று முழு பலத்தையும் இழந்து வடக்கத்திய காற்றுக்கு வரவேற்பு கொடுக்கும். அப்போது வடக்கத்திய காற்று முழு வேகமாக வரும். காற்று மட்டும் வராது.''

''பிறகு.''

''கடும் மழை வரும். அதற்குள் கங்கை கரையில் நாம் இறங்கிவிட வேண்டும். இந்த முறை மழை தாமதமாக வருகிறது என்று பஞ்சாங்கம் சொல்கிறது. செவ்வாய் மழைக்கு அதிபதி. மழை இருக்கும். தள்ளி பெய்யும்.''

''இதையெல்லாம் நம்பியா ஒருவன் படையெடுப்பு நடத்த வேண்டும்.''

''ஏன். நம்பமுடியாமல் போவதற்கு இது என்ன மோசமான விஷயமா. இது சாஸ்திரமய்யா. காலம் காலமாக நம்பியிருக்கிறார்கள். நீங்கள் வந்து இப்படி முகத்தை தூக்குகிறீர்கள். சரியா சரியா என்று எந்த ஆதாரத்தை வைத்து கேட்கிறீர்கள்.''

''சரியா என்று யார் வேண்டுமானாலும் கேட்கலாம்.''

''சரியாகிவிட்டால் என்ன செய்வீர்கள்.''

''கணவதிக்கு ஐநூறு பொற்காசுகள்.''

''தேவையில்லை அருண்மொழிபட்டரே. எனக்கு கேயூரமும், குதிரையும், உபதளபதி பட்டமும் கொடுத்தால் போதும்.''

''இல்லை. உபதளபதி பட்டம் கொடுக்க இயலாது.'' சட்டென்று கணவதி முகம் மாறினான். அவன் உடம்பு தொய்ந்தது.

''ஏனய்யா?'' ஏக்கமாக கேட்டான்.

''சேனாதிபதியாக்குகிறேன் கணவதி. உன்னையும் சேனாதிபதி ஆக்குகிறேன். உன் சினேகிதன் சிவ ஸ்வாமியையும் சேனாதிபதியாக்குகிறேன். பாதுகாப்புக்கு வீரர்களும், சோழக் கொடியை பிடித்துக் கொண்டு வருகின்ற உரிமையும், இறங்கி நின்றால் அதிகாரம் செய்கிற உரிமையும், செருப்பு அணிந்து கொண்டு நடக்கின்ற உரிமையும், அரசிடமிருந்து நூறு பொன் அவசரத்திற்கு பெற்றுக் கொள்ளும் உரிமையும், உங்களுக்கு கட்டியம் கூறும் உரிமையும் நிச்சயம் கிடைக்கும். உபசேனாதிபதிக்கு இவை கிடைக்காது. சேனாதிபதிக்கு இவை கிடைக்கும். வங்கத்திற்கு போய் நீ சொல்கிறபடி இறங்கி விட்டால் மிகச் சிறப்பாக இருக்கும். வங்கத்தில் நிலைமை என்ன என்று தெரியவில்லை. அது நம் தலையெழுத்து. ஆனால் வங்கத்தில் இறங்க வேண்டும் என்பது அரையன் ராஜராஜன் கட்டளை. அரையர் கட்டளை இராஜேந்திர சோழர் கட்டளை. ஆனால் இது சொல்வதற்கு நடுவே எனக்கு ஒரு கலவரம் இருக்கிறது.''

''என்ன''

''அரையன் ராஜராஜனை கேட்கவில்லை.''

''ஆமாம்.''

''அவர் உத்தரவு பெறவில்லை.''

''ஆமாம்.''

''நாமாகச் செய்யப் போகிறோம்.''

''ஆமாம். இனி கேட்க முடியாதே. நடுக்கடலில் இருக் கிறோமே. இப்படி சொன்னால் என்ன.''

''கோபப்படுவார். சீறுவார். என்னிடம் சொல்லாமல் போய் விட்டாயா என்பார். இந்த குள்ளன் காரணமா என்று உன் மீது பார்வை செலுத்துவார்.''

''என்ன ஆகும்.''

''சிறையில் அடைப்பார்.''

''நீங்கள் அப்போது என்ன செய்வீர்கள்.''

''வேண்டாம் என்று தடுத்து பார்ப்பேன். நான்தான் காரணம். கணவதியல்ல என்று சொல்வேன். இல்லை. உனக்கு கடல் தெரியாது. இவருக்கு கடல் தெரியும் என்று என்னை விட்டு உன்மீதும், சிவ ஸ்வாமியின் மீதும் பாயலாம். சோழ தேசத்திற்கு உதவியாக இருந்ததால் உங்கள் சிரத்தை சீவாமல் சிறையிலே காலம்காலமாய் வாழும்படி செய்து விடலாம். அல்லது...

''அல்லது.''

''நாடு கடத்தி விடலாம்.''

''எங்கே''

''எங்கே வேண்டுமானாலும்.''

''நல்லது. தயவுசெய்து அதை கேட்டு வாங்கித் தாருங்கள். ஒரு படகு. ஒரு பாய்மரம். ஒரு துடுப்பு போதும். நான் சீனத் திற்கு போய் சேர்ந்து விடுவேன்.''

''அடேயப்பா. கணவதி. உன்னுடைய ஆத்திரம் எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. உன்னுடைய நம்பிக்கை எனக்கு இப்பொழுது புரிகிறது. ஒருவேளை நாம் ஜெயிக்க கூடும். இப்போது இறையிடம், பெருவுடையார் சன்னதியில் இந்த விஷயத்தை வைத்து விட்டு நம் வழி போவோம்.''

''எது நம் வழி.''

''வேங்கி. கணவதி எழுந்து நின்று அருண்மொழி பட்டனை அணைத்துக் கொண்டான். சிவ ஸ்வாமி எழுந்து நின்று கைகூப்பினான். கணவதி வெளியே ஓடி படிகளில் ஏறி சுக்கானை பிடித்துக் கொண்டான். பாய்மரங்களை பார்த்தான். வானத்தை பார்த்தான். குனிந்து கடலை பார்த்தான். மரக்கலம் வட்டமடிக்க துவங்கியது. பாய்மரங்களை மாற்ற கட்டளை இட்டான்.

ஒவ்வொரு பாய்மரமும் ஒவ்வொரு கோணத்தில் இருந்தது. ஒவ்வொரு பாய்மரத்தையும் இரண்டு இரண்டு வீரர்கள் கவனமாக பார்த்தபடி இருந்தார்கள். கயிறுகளை கைகளில் இறுக்கி வைத்திருந்தார்கள். மரக்கலன் பெரும் வட்டமடித்து திரும்பியது. சோழவீரர்கள் திகைத்தார்கள். அவர்களுக்கு நடுவே அருண்மொழிபட்டன் பேசினான். மூன்று மரக்கலன்கள் வேகமாகப் போயின. கடலையே பார்த்துக் கொண்டிருந்த கணவதி ஒரு குறிப்பிட்ட இடத்தை நோக்கி, சக்கரம் சுழற்றி நகர்ந்தான். எல்லா வீரர்களும் ஆவலாக பார்த்தார்கள்.

''அதுதான் நீரோட்டம். கவனித்துக் கொள்ளுங்கள். கடலின் நிறம் மாறி கருப்பாக ஒரு நதி போல போகிறது தெரிகிறதா. தெரியவில்லையெனில் பாய்மரத்தின் உச்சியில் ஏறி நின்று பாருங்கள்.'' பல வீரர்கள் மேலேறினார்கள். உச்சியில் நின்று நீரோட்டம் பார்த்தார்கள். இறங்கினார்கள். மறுபடியும் மற்றவர்கள் ஏறினார்கள். அந்த நீரோட்டத்தில் தடதடத்து மரக்கலம் இறங்கியது. முன்னும், பின்னும் ஆடியது. இடதும், வலதும் ஆடியது. கொஞ்சம் கோணலாக நின்றது. துடுப்புகள் மாறி மாறி போடப்பட்டன. பாய்மரங்கள் மிகச் சரியாக அசைக்கப்பட்டன. அந்த நீரோட்டத்தில் அந்த மரக்கலன்கள் மிகச் சரியாக சிக்கிக் கொண்டன. துடுப்புகள் வேகமாக போடப்பட்டன. பாய் மரங்களின் உப்பல் பெரிதாக இருந்தது. ஒரு கடும் புலியின் மான் வேட்டைக்கு உண்டான வேகம் அந்த நாவாயில் இருந்தது. பலருக்கு வயிறு பிரட்டியது.

நாவாயின் ஆட்டம் தாங்கவில்லை. அவர்கள் ஓரமாக உட்கார்ந்தார்கள். மரக்கலத்தின் மேல் தண்ணீர் ஊற்றி கழுவப் பட்டது.

மரக்கலத்தை கணவதி செலுத்துவதையே மிகக் கூர்மையாக அருண்மொழிபட்டன் பார்த்துக் கொண்டு வந்தான். ஒருவேளை கணவதி இல்லையென்றால் நாம் ஓட்டி வர வேண்டுமில்லையா. அதனால் கணவதியின் அவஸ்தைகளை கவனித்தபடி வந்தான்.

கணவதி அந்த இடத்தை விட்டு இறங்கவேயில்லை. சிறுநீர் கழித்ததும் பிறகு கை அலம்பி உணவு உண்டதும் அங்கேயே நடந்தது. ஒன்றரை நாளில் மரக்கலம் வேங்கிக் கரையை பார்த்தது. வீரர்கள் வெறிபிடித்தது போல் கத்தினார்கள். அருண்மொழிபட்டன் படியேறி குனிந்து கணவதியை தழுவிக் கொண்டான். கணவதி துள்ளி அவன் இடுப்பில் ஏறிக்கொண்டான். வீரர்கள் ஆரவாரம் செய்தார்கள்.

★ ★ ★

அத்யாயம்

78

கடல் உள் வாங்கிய இடத்தில் கோதாவரி கடலில் கலக்கும் இடத்தில் கோதவரி இரண்டாக பிரிந்து நடுவே ஒரு தீவு ஏற்படுத்தி கிழக்கு பக்கம் கடலால் நிரம்பி ஒரு தீவு போல் இருந்த இடத்தில் அவர் இருந்தார். நாவாய்கள் செப்பனிடப் பட்டுக் கொண்டிருந்தன. புதிதாய் ஒரு நாவாயை அவர்கள் வரைபடம் வரைந்திருந்தார்கள். சகலரும் பார்த்துக் கொண்டிருக்க, மூன்று மரக்கலன்கள் வேங்கி நோக்கி வருவதாக, அடையாளம் தெரியவில்லை என்பதாக ஒரு செய்தி வந்தது. அவர் துள்ளி குதித்தார். கோதாவரியை தாண்டினார். குதிரையில் ஏறினார். மிக வேகமாக கோதாவரி கலக்கும் இடம் நோக்கி குதிரையை செலுத்தினார். பெரும்படை ஒன்று அவரை பின்தொடர்ந்தது.

வில் வீரர்கள் வரிசையாக வளைத்து நின்றார்கள். இரண்டு சிறிய படகுகள் நகர்ந்தன. பாய்மரம் விரிக்கப்பட்டது. வீரர்கள் போகலாமா என்று எண்ணியபோது 'வேண்டாம்' என்று வீரர்கள் தடுத்துவிட்டார்கள். பரதவர்கள் மிக வேகமாக துடுப்பு போட்டு கடலுக்குள் நுழைந்தார்கள். அந்த மரக்கலன்கள் இப்போது தெளிவாக தெரிந்தன. ஆனாலும் அடையாளம் காணப்படவில்லை. படகுகள் அருகே போயின. நெருங்கின. சட்டென்று மரக்கலத்திலிருந்து புலிக்கொடி அசைந்தது. அதற்கு நண்பர்கள் என்று அர்த்தம். 'யார் நண்பர்கள்' கேள்வி எழுந்தது. இராஜேந்திர சோழர் கால் மாற்றி தவித்தார்.

மூன்று நாவாய்களிலும் புலிக்கொடி பறந்தது. ''யாரது. யாரது'' உள்ளே சென்ற படகு ஒன்று திரும்ப வந்தது. கடுமையாக துடுப்பு போட்டு அவர்கள் கரை நோக்கி வந்தார்கள். அலைகளுக்கு நடுவே எகிறி எகிறி வந்த படகு மணலில்

முட்ட மூன்று பேரும் கீழே குதித்து அவரை நோக்கி ஓடி வந்தார்கள். குதிரையில் அமர்ந்தவர் எதிரே விழுந்து வணங்கினார்கள்.

''அருண்மொழிபட்டர்'' மூன்று பேரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

''அடேயப்பா. அருண்மொழியா. அருண்மொழியா. அடே, மரக்கலன்களை நகர்த்துங்களடா.'' சோழ வீரர்கள் துடிப்பானார்கள். வந்த படகில் உத்தரவிட்டு உணவுப் பொருட்களை ஏற்றினார்கள். அவற்றை நகர்த்தினார்கள். ஒரு மத்திம வடிவமுடைய, வேகமாக போகக்கூடிய ஒரு மரக்கலனும் நெருங்கி வந்தது. இரண்டு மரக்கலன்களும் அருகே சந்தித்துக் கொண்டன. அருண்மொழிபட்டன் உச்சியில் நிற்பது தெரிந்தது. சோழ வீரர்கள் வாட்களை ஏந்தி கொடிகளை உயர்த்தி இராஜேந்திரரை நோக்கி, 'மாமன்னர், மாமன்னர் மாமன்னர்' என்று சொல்லி, 'வாழ்க வாழ்க' என்று சொன்னார்கள். 'சோழம் சோழம்' என்று கேடயத்தில் அடித்துக் கொண்டார்கள். 'திரு மன்னி வளர.... என்று கட்டியம் கூறினார்கள். அந்த மரக்கலம் இராஜேந்திரர் மரக்கலத்தை விட பெரிதாக இருந்தது. நூல் ஏணிகள் தொங்கவிடப்பட்டன. இராஜேந்திர சோழர் அருகே போய் நூல் ஏணியை பிடித்து வேகமாக மேலேறினார். கடல் கொஞ்சம் கொந்தளிப்பாக இருந்தது. முன்னும் பின்னும் ஆடியது. அவர் உள்ளே வர வீரர்கள் உதவி செய்தார்கள். அவர் காலை தொட்டார்கள். அவர் நகர்ந்து போய் இரண்டு கைகளையும் விரித்து ''அருண்மொழிப்பட்டா'' என உரக்க கத்தினார். ''அரசே, என் அரசே. என் பெம்மானே சோழ தேசத்தின் காவல் தெய்வமே'' அவன் கதறிக் கொண்டு ஓடிவந்தான். சடேரென்று ஈரத்தரையில் காலில் விழுந்தான். அவர் அவனை தூக்கி நிறுத்தினார். இறுக்க தழுவிக் கொண்டார். முன்னும், பின்னும் ஆடினார். கன்னங்களில் முத்தமிட்டார். தலைமுடியை வருடி விட்டார். கொத்தாக பிடித்தார். கன்னத்தை வருடினார். புஜங்களை பிடித்து அவனை பார்த்தார்.

''உன்னை பார்க்கும்பொழுது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா. பெரும் பிரிவுக்கு பிறகு காதலியை

பார்க்கின்ற காதல் வெறியனைப் போல் இருக்கின்றேன். நீ பெண்ணாக இருந்தால் தொலைந்தாய். ஆணாக இருப்பதால் ஒரே ஒரு முத்தம் கொடுக்கிறேன்.'' அவர் அவன் கன்னத்தில் முத்தமிட்டார். வீரர்கள் ஜெயகோஷம் செய்தார்கள். ''சோழம் சோழம்'' என்று கத்தினார்கள்.

அவர்கள் இரண்டு பேரும் ஆடுகின்ற மரக்கலத்தில் கை பிடித்துக் கொண்டு போனார்கள். கடக்கின்ற ஒவ்வொரு வீரனையும் இராஜேந்திர சோழர் தொட்டு தடவினார். ஒருவன் மீசையை பிடித்து இழுத்தார். ஒருவனை மார்பில் அடித்தார். ஒருவன் நெஞ்சில் குத்தினார்.

''அடேய் சோழ தேசத்து எருமைகளே நன்றாக இருக் கிறீர்களா'' என்று கேட்டார். எல்லோரும் இருக்கிறோம் என்று பதில் சொன்னார்கள். பெரும் குதூகலம் அங்கு பரவியது.

இராஜேந்திரரும், அருண்மொழிபட்டனும் அறைக்குள் நுழைந்தார்கள். தண்ணீர் குடித்தார்கள். எலுமிச்சை பழ ரசம் குடித்தார்கள். காய்கறியை கொதிக்க வைத்த நீரை குடித்தார்கள்.

''மாமிசமும் இருக்கிறது.'' அருண்மொழிபட்டன் உபசரித் தான்.

''வேண்டாம். நீ சாப்பிட மாட்டாய் அல்லவா. அதனால் பிறகு பார்த்துக் கொள்ளலாம். என்ன செய்தி, எப்படி இருக்கிறது அந்த ஒட்ட தேசம். எப்படி இருந்தது அந்த யுத்தம்.''

''வெகு எளிதாக இருந்தது, நம்மில் நூற்றிப் பதினைந்து வீரர்கள் மரணமடைந்தார்கள்.''

''இது அதிகமல்லவா''

''இல்லை. அந்த படைகள் எதிர்த்து வந்ததை பார்த்த போது இது மிக மிக குறைவு. இந்த வீரர்களுடைய மரணம் தவிர்க்க முடியாதது. ஆரம்ப வரிசையில் இந்த வீரர்கள் தொலை தூரத்திலிருந்த வந்த அம்பை தடுக்க முடியாது தோளிலோ, உச்சி மண்டையிலோ, முதுகிலோ வாங்கிக் கொண்டு இறந்து போனார்கள். யானைகள் சிலரை சிதைத்து போட்டன. யானை களை நெருங்கிய பிறகு நம்முடைய அம்பு தாக்குதல் நடை பெற்றது. யானைகள் கதறின. தேர்கள் ஊடறுத்து போயின.

அந்த தேர்கள் ஊடறுத்து போகும்போதுதான் அவர்கள் கலவர மானார்கள். அப்போது தெரிஞ்ச கைக்கோளப் படையினர் தேர் களுக்கு பின்னால் ஓடி அந்த படையிலுள்ள குதிரைகளை ஓங்கி அடித்தார்கள். ஒரே அடியில் குதிரைகளுடைய விலாக் கள் உடைந்தன. அதிகம் குதிரைகளை சேதப்படுத்த வேண் டாம் என்று நான் சொல்லியிருந்தும் குதிரைகளின் வேகத்தை குறைப்பதற்கு குதிரையில் உள்ள வீரர்களையும், குதிரை களையும் அடித்தார்கள். அந்த அடி தாங்காமல் குதிரைகள் தவித்தன. பல குதிரைகள் அங்கேயே சுருண்டு விழுந்தன. குதிரை கால் தூக்கி இருக்கும்போது அதன் காலை எட்டி உதைத்து காலை உடைத்த வீரனும் உண்டு.''

''அடேயப்பா. குதிரை காலை எட்டி உதைத்து உடைக்க முடியுமா. எவ்வளவு வலிவு உடையது அது.''

''உடைத்தானே. கண் எதிரே பார்த்தேன்.''

''நல்லது. பரிசளிப்போம். மேற்கொண்டு.''

''நேற்று முன்தினம் அரையன் ராஜராஜன் வடக்கு நோக்கி ஒரே பாதையில் இரண்டு லட்சம் வீரர்களோடு உள்ளே நுழைகிறார். நான் இருபத்தைந்தாயிரம் வீரர்களோடு கங்கை கரைக்கு போய் அங்கிருந்து உள்வழியாக தாக்குவதாக ஏற்பாடு. குதிரைகள் மூன்று தான் இருக்கின்றன. அதனால் குதிரைகளை கங்கை கரையில் சம்பாதித்துக் கொள்ள வேண் டும்.

''அதெப்படி. இருபத்தைந்தாயிரம் வீரர்களோடு மஹி பாலனை சந்திப்பாய்.''

''இல்லை. ஒரு நன்மை இருக்கிறது. கங்கே யாதவ் மஹிபாலனோடு பேசி, மஹிபாலன் தண்டபுத்தி தர்மபால னோடும், தட்சிணலாட ரணசூரனோடும், கோசல தேசத்து கோவிந்த சந்திரனோடும் ஒரு ஒப்பந்தம் பெற்றுக் கொண்டு அவனே தலைமை ஏற்று ஒட்டதேசத்தின் எல்லையில் நம்மை சந்திப்பதாக தீர்மானம் செய்து, உத்திரலாடத்திலிருந்து அதாவது வங்க தேசத்திலிருந்து உள்ளுக்குள்ளே நுழைந்து விட்டான்.

கங்கையினுடைய வடகரைதான் உத்திரலாடம், அங்கு பெரும் படைகள் வேகமாக தென்கரையை அடைந்து தென் கரையிலிருந்து கோவிந்த சந்திரனின் தேசத்திற்குள் நுழைந்து விட்டது. அங்கு நல்ல வரவேற்பு என்றும் தூதுவர்கள் கடைசி யாக சொன்னார்கள். நான் கிடுக்கி தாக்குதல் நடத்துவதற்குத் தான் போனேன். அப்போது என் நாவாயினுடைய மாலுமி சோழ தேசத்தை சேர்ந்தவர் குட்டன் என்று அழைக்கப்பட்ட கணவதி எனக்கு அறிமுகமானார். நாவாய் செலுத்துவது பற்றி மிகச் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்.''

''அந்தணருக்கு எப்படி நாவாய் செலுத்த வந்தது.''

''அவர் ஊர் அவருக்கு பிடிக்கவில்லை. அவருடைய அந்தண சமூகம் அவருக்கு பிடிக்கவில்லை. அவரை குள்ளன் என்று அழைத்ததால்.''

''ஏன் அழைத்தது.''

''அவர் குள்ளமாக இருப்பதால் அப்படி அழைத்தது.''

''எங்கே அவன்.'' குட்டன் கணவதியை கயிறு கட்டி மேலே தூக்கினார்கள். ஏணிகளுக்கு நடுவே கால் வைக்க அவனுக்கு முடியாமல் போயிற்று. வலையில் அவனை படுக்க வைத்து அப்படியே வேகமாக தூக்கி உள்ளிருந்து இழுத்து நிற்க வைத்தார்கள். அவன் நூல் ஏணியிலிருந்து வரும் சிவஸ்வாமிக்காக காத்திருந்தான். வெளியே இராஜேந்திரர் கூப்பிடுவார் என்று காத்திருந்தான்.

அருண்மொழிபட்டன் வெளியே வந்து கணவதியை தேடினான். அவனை பார்த்து 'உள்ளே வா' என்று அழைத் தான். கணவதியும், சிவஸ்வாமியும் நகர்ந்தார்கள். சிவஸ்வாமி தயங்கினான். அருண்மொழி அவனையும் சுட்டி காட்டி 'வா' என்று சொன்னான். அவர்கள் இருவரும் இராஜேந்திரர் முன்பு நிறுத்தப்பட்டார்கள்.

இராஜேந்திர சோழர் கணவதியை உற்று பார்த்தார். சில கணங்கள் சிவஸ்வாமியை நோக்கினார். கணவதியை நோக்கி மெல்ல சிரித்தார்.

''வாரும் அந்தணரே. வாரும். வந்து இந்த ஆசனத்தில் அமரும்'' என்று சொன்னார். கணவதி கண்களில் பளிச்சென்று நீர் கோர்த்தது. அவனை அந்தணர் என்று யாரும் அழைத்த தில்லை. அந்தணர் கூட அவனை அந்தணர் என்று சொன்ன தில்லை. அவன் ஹோமத்திற்கும், மற்ற பூஜைகளுக்கும் லாயக் கில்லாதவன். அங்கஹீனர்கள், நோய்பட்டவர்கள் இங்கு வர லாகாது. எனவே இவன் அங்கஹீனன். இவனுக்கு பூஜை உரிமையோ, ஹோம உரிமையோ இல்லை என்று அவர்கள் மறுத்தார்கள். ஆனால், சோழதேச சக்ரவர்த்தி மாமன்னர் இராஜேந்திரர் அவனை வாய் நிறைய அந்தணர் என்று அழைத்து ஆசனம் கொடுக்கிறார். அவன் மறுபடியும் அவரை நோக்கி விழுந்து வணங்கினான். அந்த ஆசனத்திற்கு அருகே போய் நின்று கொண்டான். பிறகு, சிவஸ்வாமி வணங்கினான்.

''அதிகம் பேசாதவரோ.'' மாமன்னர் கேட்டார். அருண் மொழி வியந்தான்.

''எப்படி தெரியும்.''

''உதடு மெல்லியதாக இருக்கிறது. அதிகம் சிந்திக்கிறார் என்பது கண்களின் ஓரம் இருக்கின்ற ரேகைகள் காட்டுகின்றன. மூக்கு கூராக இருக்கிறது. ஒல்லியாகவும், மெலிந்தும், வயிறு குனிந்தும் இருக்கிறார். குறைவாக சாப்பிடுவார். குறைவாக தூங் குவார். உதடு இறுக்கம் பார்த்தபோது குறைவாக பேசுவார் என்பது புரிந்து விட்டது. செயல் வீரர் அல்லவா. அப்படித்தான் இருப்பார்.''

''சிவஸ்வாமி. அமர்'' இரண்டுபேரும் ஆசனத்திற்கு அருகே நின்று கொண்டார்கள். மறுபடியும் கை காட்ட நுனி யில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''உங்கள் உதவிக்கு சோழதேசம் கடமைப்பட்டிருக்கிறது. யுத்தம் முடிந்து நாம் மறுபடியம் ஜெயங்கொண்டம் போகும் போது உங்களுக்கு உண்டான மரியாதைகளை மக்கள் முன்பு அறிவிப்பேன்.

அந்தணர்கள் உங்களை இழிவுபடுத்தினார்கள் என்பதால் நீங்கள் பரதவரோடு கலந்து விட்டீர்கள். கடற்பயணம் மேற்

கொண்டீர்கள். அல்லவா. அருண்மொழி சொன்னான். நல்லது. இனி அந்த கவலை வேண்டாம். உங்கள் ஊர் மதிக்கிறதோ இல்லையோ அந்தணர்கள் மரியாதை தருகிறார்களோ இல்லையோ சோழ தேசத்து மறவர்கள், சோழ தேசத்து கடற்படை உங்களுக்கு மரியாதை செய்வார்கள்.

சொல் அருண்மொழி.''

''கணவதியின் சொல்படிதான் நான் இங்கு வந்தேன். அவருடைய திட்டம்தான் இது. வங்கம் நோக்கி போயிருக்க வேண்டியவன். இரண்டு நாளில் வேங்கியை அடைந்து விடலாம். நீரோட்டம் பிடித்து விடலாம் என்று இவர் சொன்னதால் நான் திரும்பினேன்.

உங்களை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் மட்டுமல்ல. என்னென்ன செய்யபோகிறோம் என்ற திட்டங்கள் உங்களுக்கு மிகத் தெளிவாக தெரிய வேண்டும். நேரடியாக நீங்கள் தகவல்களை அடைய வேண்டும் என்பதுதான் முக்கியம்.''

''சொல்''

''ஒட்ட தேசத்தினுடைய செழிப்பு அபாரமாக இருக்கிறது. ஆனால் அங்கு காடுகள் அதிகம். விளைநிலங்கள் குறைவு. அந்த காட்டை ஒட்ட தேசத்தினர் முழுக்க பயன்படுத்திக் கொள்கின்றனர். அங்கு அந்தணர்களுக்கு மிகச் சிறப்பான மரியாதை இருக்கிறது. ஆனால் அவர்கள் வெறும் பூசாரிகளாக, மறவர்களையும், மற்றவர்களையும் ஆட்சி செய்பவர்களாக கிட்டத்தட்ட ஒட்டதேசத்தின் அரசர்களாக இருக்கிறார்கள். அதனாலேயே படையெடுப்பு சரியாக அவர்களால் நடத்த முடியவில்லை. நம்மை தாங்க முடியவில்லை. வெகு எளிதில் சோர்வடைந்தார்கள்.

ஒட்டதேசத்தின் மன்னன் இந்திரதத்தன் அவன் மகனை கொன்றான். இது என் கண் எதிரே நடந்தது. இது உங்களுக்கு தெரிந்திருக்கும். அவன் மகனை தூண்டிவிட்டது கங்கே யாதவ். இப்பொழுது கங்கே யாதவ் வடக்கே இருக்கிறான். மற்ற மன்னர்களை தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறான். கங்கே யாதவிற்கு பின்னால் இருபதாயிரம் வீரர்கள் கொண்ட குதிரைப்படை இருக்கிறது.

கங்கே யாதவ் அவர்களை ஒற்றுமை சேர்ப்பதில் வெற்றி அடைந்துவிட்டான் என்று தெரிகிறபோது நாம் பின்பக்க மிருந்து தாக்குவது தான் மிகச் சிறப்பான விஷயம். ஆனால் இருபத்தைந்தாயிரம் வீரர்கள்தான் எனக்கு கிடைத்தார்கள். ஒரு நாவாயில் அடைத்துக் கொண்டு இயற்கை உபாதைகளுக்குக் கூட வசதி இல்லாமல் தவிக்கிறார்கள். வீரர்களாகவே தெரிய வில்லை. ஆட்டு மந்தைகளாக இருக்கிறார்கள். வேதனை யாக இருக்கிறது. குதிரைகளை எப்படி சம்பாதிப்பது என்று கவலையாக இருக்கிறது. மாமன்னர் என்ன உதவி செய்ய முடியும் என்பதும் என் கேள்வி. அப்படி உதவி செய்ய முடியா விட்டால் பரவாயில்லை. இப்பொழுது காற்று இரண்டு நாட் களில் திசைமாறும் என்றும். அப்பொழுது வேகமாக வங்கம் நோக்கி போய்விட முடியும் என்றும் கணவதி கூறுகிறார். கணவதி சொல்வதிலிருந்து வெகுநிச்சயமாக வங்க தேசத் திற்கு இன்றிலிருந்து நான்கு நாட்களுக்குள் போய்விடமுடியும் என்று தெரிகிறது.

உங்களை சந்தித்த பிறகு நான் காற்று திசைக்காக காத்திருப்பேன். காற்று திசை மாறியவுடன் நிச்சயம் நகர்ந்து விடுவேன். எதற்கும் காத்திருக்க மாட்டேன். ஏனெனில் நான் அரையன் ராஜராஜனுக்கு தெரிவிக்கவில்லை. வெகுநிச்சயம் அவர் சீறுவார். உங்களை சந்தித்தது தெரிந்தால் மிகவும் கோபப்படுவார். துரோகி என்று சொன்னாலும் சொல்லலாம்.''

''கவலையை விடு. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ செய்தது மிகச் சரியான விஷயம். இது கணவதியின் யோசனை என்றால் நான் கணவதியை மனமார பாராட்டு கிறேன். கணவதிக்கு தகுந்த மரியாதைகள் நடத்தப்படும்.

நீ இங்கு வந்ததற்கு என்னை சந்தித்தது மட்டுமல்ல. இங்கு நல்ல நாவாய்கள் இருக்கின்றன. நீ வழியில் கொள்ளை யடித்துக்கொண்டு போவது என்பது பல உயிரிழப்புகளுக்கு காரணமாகும். கங்கை கரையில் குறைவாக ஆட்கள் இறங்கு வார்கள். இப்போது அப்படியில்லை. மற்ற நாவாய்கள் பற்றி கவலைப்படாதே. இங்கிருந்து நான் பத்து அல்லது பதினோரு நாவாய்கள் தருகிறேன். உன்னுடைய நாவாய்கள் சேர்த்து

பதினாறு நாவாய்கள் போகட்டும். இன்னும் இருபத்தைந்து பெரும் படகுகள் தருகிறேன். எல்லா படகுகளிலும் வீரர்கள் ஏறிக்கொள்ளட்டும். அப்பொழுது அடைசல் அதிகம் இருக்காது.''

''இதைத் தவிர இன்னொரு உதவியும் செய்ய வேண்டும்.''

''என்ன உதவி. கேள்வி கேட்ட கணவதியை நோக்கி அவர் வேகமாக திரும்பினார்.

''பதினாறு நாவாய்கள் தவிர, இன்னொரு நாவாய் வேண்டும்.''

''என்ன''

''அவைகளில் முழுவதும் தேர்களும், குதிரைகளும் ஏற்றப் பட்டிருக்க வேண்டும். மூன்று பரதவர்கள் இருந்தால் போதும்.''

''தேர்களா. நாவாய்களில் ஏற்ற முடியுமா.''

''மேல் தளத்தில் ஒன்றன் மீது ஒன்று அடுக்கி கயிறு போட்டு கட்டி விட வேண்டும். கீழ் தளத்தில் குதிரைகள் இருக்க வேண்டும். அவைகளுக்கு தீனியும், நீரும் வைத்திருக்க வேண்டும். இவைகள் செய்ய முடியும். செய்திருக்கிறார்கள். யவனர்களிடமிருந்து நாவாய் கரை தட்டி நிற்கும். அங்கு மேல்தளத்திற்கு குதிரைகள் கொண்டுவரப்பட்டு பலகைகள் இறக்கப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன். கீழ்தளம் முழுவதும் கொட்டிலாக மாற்றியிருக்கிறார்கள்.

பத்து நாட்களுக்கு வேண்டிய நீரையும், குதிரைக்கு வேண்டிய உணவுகளும் அதற்கும் கீழ் தளத்தில் வைத்திருக்கிறார்கள். கீழ் தளத்தில் குதிரைகளுக்கான உணவு, அதற்கு மேல் தளத்தில் குதிரைகள். அதற்கும் மேல் தளத்தில் இரண்டு அறைகள். அதற்குள் தூளிகள் அந்த தூளிகளில் படைவீரர்கள் தூங்கலாம். முறைபோட்டுக் கொண்டு மாறி மாறி தூங்கலாம். சமைப்பதற்கு சுக்கான் இருக்கும் இடத்திற்கு கீழே கற்பலகைகள் போட்டிருக்கும். எனவே ஒருவேளை உணவு வயிறாரவும் மற்ற நேரங்களில் திரவ உணவும் சாப்பிட முடியும். கடற்காற்று சரியாக இருந்தால் வெகு நிச்சயம் மூன்று நாளில் சேர்ந்து விட முடியும்.''

''குதிரைகள் இருக்கின்றன. எப்படி ஏற்றுவது.''

''சவுக்கு நுனியில் அடித்துதான் ஏற்ற வேண்டும். இழுத்து தான் உள்ளே போட வேண்டும். குதிரைகள் உள்ளே போய் விட்டால் பிறகு அமைதியாகி விடும்.

குதிரைகள் ஏற்றிய பிறகு மேல் தளத்தில் ஒன்றன் மீது ஒன்றாக மூன்று தேர்களை ஏற்றி விடலாம். கிட்டத்தட்ட ஒரே நாவாயில் ஆயிரம் அல்லது அதற்கு குறைவாக ஏற்றி விட லாம்.''

இராஜேந்திரர் கணவதியை உற்று பார்த்தார்.

''இதை எங்கே பார்த்தாய்.''

''ஸ்ரீ விஜயத்திலிருந்து வருகின்ற நாவாயில் இது மாதிரி பார்த்திருக்கிறேன்.''

''என்ன காரணம்.''

''ஸ்ரீ விஜயத்திற்குள் சண்டை நடக்கும். அவர்கள் இதை எடுத்துக் கொண்டு பாண்டிய தேசத்தின் எல்லைக்குள் வரு வார்கள். அங்கே அரேபியர்கள் விட்டுப் போன குதிரைகளை விலைக்கு வாங்குவார்கள். அந்த குதிரைகளில் தேர்களை ஓட்டி கொற்கை துறைமுகத்தில் பழகுவார்கள். உள்ளே வராது குதிரைகளையும், தேர்களையும் ஏற்றிக் கொண்டு கிழக்கு நோக்கி போய் ஸ்ரீ விஜயத்தின் மறுபக்கத்தை கிழக்கிலிருந்து தாக்குவார்கள். அதே நேரம் மேற்கிலிருந்தும் தாக்குதல் நடத்தப் படும். இடைபட்ட சமுத்திரத்திலிருந்தும் தாக்குதல் நடை பெறும். அதனுடைய தென்பகுதியான ஸ்ரீ விஜயத்தை வட பகுதியான ஸ்ரீ விஜயம் கடுமையாக தண்டிக்கும். அதாவது புத்த மதம் இந்து மதத்தை தண்டிக்கும். மூன்று முறை தண்டித் திருக்கிறார்கள்.

இப்படி தண்டிக்கும் போதெல்லாம் அவர்கள் இவ்வளவு தொலைவு வந்து, குதிரைகளை வாங்கி, தேர்களை பூட்டி பழகி பிறகு அதை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.''

''இது தலையை சுற்றி மூக்கை தொடுவது போல் அல்லவா இருக்கிறது.''

''காலாட்படை ஸ்ரீ விஜயத்தில் ஊடுருவுவதை விட, தேர்கள் ஊடுருவுவது நல்லது என்று தெரிந்து வைத்திருக் கிறார்கள். அந்த இடத்திற்கு சீன குதிரைகள் வருகின்றன. அவை குள்ள மானவை. அரபு குதிரைகள் வேண்டுமெனில் அவர்கள் இந்த வங்கக் கடலோரம் வந்தே ஆகவேண்டும். இலங்கையில் குதிரைகள் வாங்குவதில்லை. தூரதேசம் போவது கடினம். பிறகு பாண்டிய தேசத்தில் குறிப்பாக கொற்கை யில் குதிரைகள் இறக்கப்படும் என்று தெரிந்து வைத்திருக் கிறார்கள்.

ஒருமுறை அவர்கள் மாமல்லபுரத்திற்கு அருகே உள்ள சதுரங்கபட்டிணம் என்ற துறைமுகத்திலும் குதிரைகளை கொள்முதல் செய்தார்கள். ஒரு குதிரைக்கு சோழதேசம் ஐந்து பொன் கொடுக்கும் என்றால் அவர்கள் பத்து பொன் கொடுப் பார்கள். வெள்ளி கட்டிகள் கொடுத்தார்கள். இரவோடு இரவாக குதிரைகள் ஏற்றப்பட்டன.''

''நமக்கு தெரியாமல் போயிற்றே.''

''கடற்கரையில் தங்கி இருக்கின்ற அரபு வீரர்கள், அரபு வணிகர்கள் இதை செய்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிது காசு. யார் யாருக்காக, எதற்காக குதிரைகள் வாங்குகிறார்கள். யாரிடமிருந்து வாங்குகிறார்கள் என்பது தெரியவில்லை. ஐந்து பொன் கொடுத்து வாங்கிய குதிரையை ஆறு பொன் கொடுத்து வாங்கி அதை பத்து பொன்னிற்கு விற்கும் சாமர்த் தியம் அவர்களிடையே இருக்கிறது.''

''புரிகிறது. இதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சதுரங்கபட்டிணம் வரை அவர்கள் வருகிறார்கள் என்பது பெரிய செய்தி. கவனத்தில் கொள்ள வேண்டும்.

''இப்பொழுது என்ன செய்வோம்.''

''அருண்மொழி, என்னுடைய நாவாயில் ஏறு. அங் கிருந்து குதிரைகளையும், வீரர்களையும் தேர்ந்தெடு. கணவதி, நீ இந்த நாவாயை பார்த்துக் கொள். சிவ ஸ்வாமி நீ கண வதிக்கு துணையாய் இரு. நாங்கள் இருவரும் மாறுகிறோம்.''

அவர்கள் மரக்கலம் மாறினார்கள். கயிறு பிடித்து ஊச லாடி அடுத்த தளத்திற்கு தாவினார்கள். அவர்களை வீரர்கள் அணைத்து இறக்கிக் கொண்டார்கள். மரக்கலம் துடுப்பு போட்டு கரை நோக்கி போயிற்று. கரையில் அவர்கள் இறங் குவது தெரிந்தது. இடுப்பளவு ஜலத்தில் இறங்கி கரை நோக்கி போனார்கள். உடை மாற்றுவதும் தெரிந்தது. அங்கிருந்து குதிரை ஏறினார்கள். மறைந்தார்கள்.

''அருண்மொழி, கணவதியை நம்பலாமா.''

''நம்பலாம்.''

''அந்த சிவஸ்வாமி அழுத்தமாக இருக்கிறானே.''

''ஆபத்தில்லாதவன்.''

''ஆயினும் ஒரு காவல் வீரனை கண்காணிக்கச் சொல்.''

''நான்கு காவல் வீரர்களை தலைக்கு ஒன்றாக நியமித் திருக்கிறேன். எட்டு பேர்கள் இரவும், பகலுமாக அவர்கள் நட மாட்டத்தை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த சந்தேக மும் எழவில்லை.''

''அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள் என்று அவர்களுக்கு தெரிந்திருக்குமோ.''

''தெரிந்திருக்கும். கணவதி கெட்டிக்காரர்.''

''கணவதிக்கு எந்த ஊர்.''

''இப்போது இருப்பது மயிலை.''

''தொண்டை நாடு.''

''ஆனால் அவருடைய தாயும் தந்தையும் அவரை புறக் கணித்து விட்டு சோழ தேசத்தில் வாழ்கிறார்கள்.''

''சோழ தேசத்தில் எந்த இடம்.''

''குடந்தையில் உள்ள திருநாகேஸ்வரம் கோவில். அதை சுற்றி உள்ள அக்ரஹாரங்களில் அவருடைய தாயும், தந்தை யும் முன்னோர்களும், சுற்றத்தார்களும் வசிக்கிறார்கள்.''

''ஓ. சிவாச்சாரியார் இல்லையோ.''

''இல்லை, வேதம் சொல்பவர். யாகம் செய்பவர். இவர் களெல்லாம் கொஞ்சம் முரட்டுத்தனமாகத்தான் இருக்கிறார்கள். சிவாச்சாரியர்களிடம் இருக்கும் இளகல் கூட இவர்களிடம் இல்லை. அருண்மொழி நெக்குருகி பேசினான். தொடர்ந்தான்.

இவ்வளவு கெட்டிக்கார பிள்ளையை உதறி தள்ளி யிருக்கக் கூடாது.''

''ஏன்''

''நமக்கு எவ்வளவு லாபம். கணவதிக்கு என்ன பரிசு வேண்டும் தெரியுமா. பொற்கிழி அல்ல.''

''என்ன''

''அவன் கயிலையை பார்க்க வேண்டும். பிறகு சிவ ஸ்வாமியோடு சீன தேசத்திற்கு போக வேண்டும்.''

''ஏன்.''

''சீன தேசத்து நாகரீகம் தெரிந்திருக்கிறது.''

''அது தவிர.''

''அது தவிர, அவன் படைவீரர்களிடம் பேசியதாக கேள்விப்பட்டேன்.''

''என்ன அது.''

''போதி தர்மர் என்ற ஒருவர் காஞ்சியிலிருந்து சீன தேசத் திற்கு முன்னொரு காலம் போயிருக்கிறாராம். அந்த போதி தர்மனின் வம்சாவளி அங்கு இருக்கிறதாம். அந்த போதி தர்ம னின் பள்ளி இருக்கிறதாம். பல்வேறு விஷயங்களை அவர்கள் கற்றுக் கொடுக்கிறார்களாம். குறிப்பாக.''

''என்ன''

''காற்றை உருவாக்குவது. சுழலை உருவாக்குவது. நீரில் நெருப்பை எரிப்பது. எரியும் நெருப்பை பார்வையில் அணைப் பது. மிருகங்களை பின்னடையச் செய்வது என்றெல்லாம் மனம் அடக்கும் வேலை இருக்கிறதாம். மிகப் பெரிய அளவில் இதை கற்றுக்கொடுக்கிறார்களாம். அதைத்தவிர தற்காப்புக்கு உண்டான வித்தைகள் இருக்கின்றனவாம். போதி தர்மரின்

அமைதியான இடத்தை தரிசிக்க வேண்டும் என்று சொல் கிறான். அப்படி சொல்லும்பொழுது அழுகிறான்.''

''நீ கேள்விப்பட்டிருக்கிறாயா இதை நான் கேள்விப்பட் டிருக்கிறேன். போதி தர்மர் புத்த மதத்தை சார்ந்தவர். இலங்கை துறவிகளிடம் படித்தவர்.''

''இல்லை. இல்லை. அவர் படித்தது ஸ்ரீவிஜயத்து துறவி களிடம். அந்த ஸ்ரீ விஜயத்து துறவிகள் சீனத்திலிருந்து வந்தார் கள்.

காஞ்சிபுரத்தில் மிகப்பெரிய மடம் அவர்களுக்கு இன்ன மும் இருக்கிறது. அதை போதி தர்மர் கட்டி காத்தார். அதிக விஷ யங்களை அங்கு கற்றுக் கொண்டார். பௌத்தராக இருந்தாலும் அவர் வித்தை கற்றுக் கொண்டது காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் என்று சொல்வதுண்டு. கைலாசநாதர் கோவிலி லும் அமர்ந்திருப்பார் என்று சொல்வதுண்டு. ஆனால் சிவபக்தர் அல்ல.''

இராஜேந்திரரும், அருண்மொழிபட்டரும் அமைதியாக இருந்தார்கள். சோழ வீரர்கள் கூட்டம் சேர்ந்ததும் வேகமாக உத்தரவுகள் இடப்பட்டன. இருபத்தைந்தாயிரம் வீரர்களும், அவர்களுக்குண்டான உணவுகளும் ஒரு நாவாய் முழுவதும் தேர்களும், குதிரைகளும் ஏற்றப்பட்டன. ஒரு நாள் முழுவதும் பல்லாயிரக் கணக்கானவர் இதில் ஈடுபட்டு வேலையை முடித்தார்கள்.

அருண்மொழிபட்டன் தலையில் அந்தணர்கள் மாவிலை யால் நீர் தெளித்தார்கள். வெற்றியோடு வரவேண்டும் என்று துர்க்கையை வேண்டிக் கொண்டார்கள். கீழை சாளுக்கியத்து தேவரடியார்கள் அவன் எதிரே வளைந்து, நெளிந்து நடனமாடி னார்கள். கழுத்தில் சந்தனம் தடவினார்கள். காலில் பூக்களை சொரிந்தார்கள். உச்சி தலையில் அட்சதை வைத்தார்கள். நெற்றி யில் திலகமிட்டார்கள்.

மிக வளப்பமான அந்த பெண்கள் சோழர்களுக்கு கிளர்ச்சி யூட்டினார்கள். அருண்மொழிபட்டன் அமைதியாக இருந்தான். ஜெயித்த பிறகு மீண்டும் கீழை சாளுக்கியம் வரவேண்டும்

என்று நினைத்துக் கொண்டான். அருண்மொழியை பார்த்த வாறு அவனுக்கு அருகே இராஜேந்திரர் நின்று கொண்டார். எதிரே இருபத்தைந்தாயிரம் பேர் கொண்ட ஒரு படை தயாராக இருந்தது.

போர்வையும், மாற்று ஆடையும் சுருட்டி முதுகில் கட்டிக் கொண்டு, அதற்கு மேல் கேடயம் வைத்து கையில் வாள் தரித்து, வேல் தரித்து, மஞ்சள் தலைப்பாகையோடும், நெற்றி யில் திருநீறோடும் அவர்கள் பொலிவாக காட்சியளித்தார்கள். கடற்பயணம் பற்றி அவர்களுக்கு இரவு முழுவதும் சொல்லப் பட்டிருந்தது.

முகத்துவாரத்திற்கு உள்ளே இருந்த ஒரு நாவாயில் தேர்கள் ஏற்றப்பட்டன. ஆறு தச்சர்கள், பத்து வீரர்கள் அந்த நாவாயில் இருந்தார்கள். குதிரைகள் ஏற்றுவதை விடியற்காலை யில் ஆரம்பித்தார்கள். இன்னும் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். குதிரைகளை ஏற்றுவதுதான் பெரும்பாடாக இருந்தது. பல குதிரைகள் சவுக்கடிகள் வாங்கின. அடிதாங்காமல் மேலேறின. தளத்திற்குள் ஏறியதும் உள்ளுக்குள் அழைத்து செல்லப்பட் டன. கடல் குதிரைகளுக்கு மிரட்சியை கொடுத்தது. ஆனாலும் அடக்கி உள்ளுக்குள்ளே கொண்டுபோய் நிறுத்தப்பட்டது. குதிரைகளுக்கு நடுவே அரிசியும், உலர்ந்த மீனும், தேன் குடுவைகளும், காய்கறிகளும், வெண்ணைப் பானையும், கோதுமை மாவும் ஏற்றப்பட்டன. அவைகள் குதிரை தீவனங் களுக்கு நடுவே பாதுகாப்பாக வைக்கப்பட்டன. கோதுமை அடை செய்து அதை துணியில் சுற்றி ஓலை கூடைக்குள் வைத்து அடுக்கி எடுத்துப் போனார்கள். அரிசியில் செய்த சாராயமும், கரும்பிலிருந்து எடுக்கப்பட்ட மதுவும் பெரும் குடுவைக்குள் எடுத்துக் கொண்டு போய் கவனமாய் அடுக்கப் பட்டன. அவைகளை நிறுத்துவதற்கென்றே நாவாயில் மரச் சட்டங்கள் இருந்தன.

வாழைப்பூ போல மேல்பக்கம் விரிந்து கீழ்பக்கம் கூம்பி எங்கேனும் சட்டத்திற்குள் மாட்டி நிறுத்தவேண்டும் என்கிற மாதிரி பானைகள் போயின. உணவுச்சட்டி, வாய் குறுகலான பெரிய பானைகள், நன்னீர் பூச்சிகள் வராமல் காக்கின்ற மூலிகை முடிச்சுகள் எல்லாம் போயின.

தீப்பந்தத்திற்கு வேண்டிய எண்ணையும், கசடுகளும் தரப்பட்டன. அம்புகள் நுனியில் துணி சுற்றி தயாராக இருந்தன. கஸ்தூரிதைலம் அரசருக்கு காண்பித்து உள்ளே கொண்டு போகப் பட்டது. 'கவனம் கவனம்' என்று இராஜேந்திரர் சொன்னார். எண்ணெய் கசடும், இரண்டு சொட்டு கஸ்தூரி தைலமும் (கற்பூர தைலம்) துணியில் நனைத்து எரியூட்டி அம்பெய்தால் அதுபோய் அடுத்த பாய்மரத்தை குத்தி பாய்மரம் மொத்தமும் எரியும்வரை அந்த துணியும் எரிந்து கொண்டிருக்கும். கஸ்தூரிதைலம் எரிந்தால் சட்டென்று அணையாது. அதே நேரம் காற்றில் கரைந்து போகும். அவை திருகு மூடியோடு கூடிய பாத்திரங்களில் வைக்கப்பட்டு துணி சுற்றி இறுக்கப் பட்டிருந்தன. படுக்க ஓலைப்பாய்கள் தரப்பட்டன.

''பெண்டிர் எவரையேனும் நாவாயில் ஏற்ற வேண்டுமா.''

''வேண்டாம். அது நடவடிக்கைகளை குலைக்கும். போர் வீரர்களுக்கு நடுவே போட்டியும், ஏக்கமும் வரும். வேண்டாம்.''

பெரிய பாத்திரங்களில் அதிரசங்கள் ஏற்றபட்டன. கனிந்த பலாப்பழங்கள் நாவாய்க்குள் ஏற்றப்பட்டன. நாவாய்க்கு ஒன்றாக வைத்தியர்கள் ஏறினார்கள். மரத்தச்சர்கள் தேர் நிரம்பிய நாவாயில் ஏறிக்கொண்டார்கள். அவர்கள் முகத்தில் கவலை தெரிந்தது. சோழ வீரர்கள் அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். பொது மக்கள் பெரிய கும்பலாய் இந்த ஏற்றுமதியை பார்க்க குழுமியிருந்தார்கள். ஒவ்வொரு குதிரை ஏறும்போதும் ஆரவாரம் செய்தார்கள். தரையில் உள்ள சோழ வீரர்கள் போகிறவர்களை பார்த்து பொறாமைப்பட்டார்கள். ஏறிவிட்ட சோழ வீரர்கள் கீழே இருப்பவர்களை பார்த்து 'உயிரோடு வரவேண்டுமடா' என்று நினைத்துக் கொண்டார்கள். எங்கும் ஒரு பதட்டமும், பரவசமும் மிகுந்திருந்தது.

அருண்மொழிபட்டன் ஏறுகின்ற நேரத்தில் இராஜேந்திர சோழரை மண்டியிட்டு வணங்கினான். இராஜேந்திர சோழர் அவனை எழுப்பி இறுக்கிக் கொண்டார்.

''சோழ தேசம் மகத்தான சாதனைகள் புரிவதற்கு இங்கே வந்திருக்கிறது. எனக்கு மிகுந்த சந்தோஷம். அருண்மொழி பட்டா, எனக்கு விருப்பமான விஷயத்தை உன்னிடம் பாதுகாப்பாக

வைத்திருக்கும்படி வேண்டுதலோடு தரப்போகிறேன்.'' அருண் மொழிபட்டன் திகைத்தான்.

தொலைவிலிருந்த திரையிட்ட தேர் சட்டென்று முன் னேறி வந்தது. வீரமாதேவி அதிலிருந்து குதித்தாள். மார்பில் கவசமும், இறுக்கி கட்டிய கீழ் ஆடையும், தோளில் சால்வை யும், முடிந்த கொண்டையும், கொண்டை சுற்றி பட்டையாய் ஒரு துணியும், தோளில் வில்லும், அம்பாரத்துணியும், இடுப் பில் வாளும் தரித்து அரசருக்கு அருகே வந்தாள். மண்டியிட்டு முழங்காலில் முத்தமிட்டாள். கால்களை வருடி கொடுத்தாள். அவர் கை பிடித்து எழுந்து நின்றாள். புருஷனை அணைத்து ஆசைதீர அவர் உதடோடு உதடு முத்தமிட்டாள். விலகினாள். 'சோழம் சோழம் சோழம்' என்று கத்தியால் கவசத்தில் அடித்துக் கொண்டாள். உலோகக் கவசம் கத்திபட்டு நெருப்பு தெரிந்தது.

அருண்மொழிபட்டன் திகைத்தவாறு இருந்தான்.

''எதற்கு, எதற்கு, மாமன்னா, இவர்கள் எதற்கு. இது பெரும் சுமை என்பது போல தவித்தான்.

''ஒரு காரணமாக.''

''என்ன காரணம் என்னை வேவு பார்க்க வேண்டுமா.'' கோபமானான்.

''இல்லவே இல்லை. நான் கங்கை கரைக்கு போகாத குறையை எவ்விதமாவது தீர்க்க வேண்டும். ஆயிரம் இருந்தாலும் நீ இரண்டுபடி கீழான என் தளபதிதானே. அரையன் போனாலும் அவன் சேனாதிபதிதானே. நீங்கள் போவது எங்கள் சந்தோ ஷமே. ஆனாலும் நானே போவது போல் ஆகுமா. நானே போவது போல் எது ஆகும். வீரமாதேவி வந்தால் ஆகும்.

கடற்பயணம் கடற்பயணம் என்று குதித்துக் கொண்டு இலங்கைவரை போய் வந்தாள் அல்லவா. அவளுக்கு ஒரு தண்டனையாக இருக்கட்டும் என்று உன்னோடு அனுப்பு கிறேன். கொஞ்சம் கோபமாக கட்டளையிட்டுத்தான் அனுப்பி யிருக்கிறேன். இப்பொழுது கொஞ்சம் கவலையாகவும், ஏனடா இப்படி செய்து விட்டோம் என்று வருத்தமாகவும் இருக்கிறது''

''இதில் பிரச்சனைகள் உண்டு மாமன்னா.''

''பெண் என்று பார்க்கிறாயா. அவள் உங்களை அனு சரித்து நடந்து கொள்வாள். உங்களிடமிருந்து எப்பொழுது தள்ளி இருக்க வேண்டும். எப்பொழுது அருகே இருக்க வேண் டும் என்று அவளுக்கு தெரியும்.

அருண்மொழிபட்டா, வீரமாதேவியை நீ தாயைப் போல நேசிக்கிறாய் என்பதை நான் அறிவேன். சோழ வீரர்கள் அவள் மீது மிகப்பெரிய மரியாதை வைத்திருக்கிறார்கள். இது தவிர, நான் ஸ்ரீ விஜயம் நோக்கி போகும்போது வெகு நிச்சயமாக என்னோடு வீரமாதேவி வரவேண்டும். அதற்கு இது அவ ளுக்கு உதவியாக இருக்கும்.

இன்னும் ஐம்பதாயிரம் வீரர்கள், தேர்கள், குதிரைகள் அங்கு போய் சம்பாதித்துக் கொள்வாய். ஆளில்லாத மஹிபாலன் நாட்டை சூறையாடி உள்ளுக்குள் வந்து கங்கையை கடந்து தென்கரை ஏறி உள்ளே வருவாய். அரையன் ராஜராஜன் வேகமாக இருப்பார். நான் உங்கள் வெற்றிச் செய்தியை கேட்க ஆவலாக இருப்பேன்.

இத்தனை ஆவலாக இருக்கிறவன் நான் வரலாமே. இல்லை. நான் வேங்கியை விட்டு நகர்ந்தால் மேலை சாளுக் கிய படை ஜெயசிம்மன் தலைமையில் உள்ளே நுழையும். ஜெயசிம்மன் காத்திருக்கிறான். வடக்கே கங்கே யாதவை அனுப்பிவிட்டு ஜெயசிம்மன் தன்னுடைய சேனாதிபதிகளோடு காத்திருக்கிறான்.

அவனுக்கு கங்கே யாதவ்மீது நம்பிக்கை இல்லை. அதே சமயம் நம்பாலும் இருக்க முடியவில்லை. கங்கே யாதவ் புகழ் பெற்று மன்னனாகி விடுவானோ. தளபதி பேச்சை தான் கேட்க வேண்டி இருக்குமோ என்ற பயத்தில் தானே சாகசம் செய்ய துணிகிறான். அப்படி திட்டமிட்டிருக்கிறான். அப்படி பேசியிருக்கிறான். அந்த செய்தி வந்திருக்கிறது. எனவே, நான் நகர்ந்தால் கீழை சாளுக்கியம் சூறையாடப்படும். மேலை சாளுக் கியம் இங்கு நிலை கொள்ளும்.

எந்த பலமும் இல்லாத விமலாதித்தனின் மகன் அடித்து விரட்டப்படுவான். அல்லது கொலை செய்யப்படுவான். இது தவிர, இந்த இடத்தில் நம் அரசவை பெண்டிர்கள் இருக்க

அவர்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லாது நான் நகர முடியாது. அப்படி வரமுடியாதது எனக்கு பெரிய வருத்தம். என் வருத்தத்தை கொஞ்சம் குறைக்க வீரமாதேவியை அனுப்பி வைக்கிறேன்.

உன்னை வேவு பார்த்து எனக்கு என்ன ஆக வேண்டும். நீ யார் என்று தெரியாதவனா. அரையனை பற்றி தெரியாதா. நான் உங்களுக்கெல்லாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். இந்த சோழ தேசம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. எப்பேர்பட்ட அரிய வாய்ப்பை நான் இழக்கிறேன் என்று எனக்கு தெரியும். அதை நினைக்கும்போது இரவு தூக்கம் வருவதில்லை. திடுக் திடுக்கென்று எழுந்து விடுகிறேன். குதிரை ஏறி கிளம்பி விடுவோமா என்று கீழே வரை இறங்கி பிறகு நிதானமாக மேலேறுகிறேன். பைத்தியம் போல் இருக்கிறேனடா. பைத்தியம் போல் இருக்கிறேன்.'' இதை சொல்லும்போது அவர் குரல் கம்மியது. அருண்மொழிபட்டன் அருகே வந்து அவரை அணைத்துக் கொண்டான். கன்னத்தோடு கன்னம் வைத்தான். நெஞ்சை நீவினான்.

''அருண்மொழிபட்டா, ஒரு விதத்தில் நான் கோழை''

''இல்லை மன்னா. அப்படியெல்லாம் பேசாதீர்கள்.''

''போடா. என் பெண்டுகள் பற்றியும், என் மகள் பற்றியும், என் மருமகன்கள் பற்றியும், அவர்கள் திருமணம் பற்றியும், பட்டாபிஷேகம் பற்றியும் யோசித்துக் கொண்டு நான் இங்கே இருக்க வேண்டியிருக்கிறது. நான் சபிக்கப்பட்டு விட்டேன். என் வாள் முனையில் நம் படை நகர்ந்திருக்க வேண்டும். அந்த மரியாதை எனக்கில்லாது போய் விட்டது.

கீழைசாளுக்கியம் தாக்கப்பட்டால் உடனடியாக மூன்றே நாளில் தொண்டைநாடு, அடுத்த இரண்டு நாளில் நடுநாடு அதற்குப் பிறகு சோழ தேசத்திற்குள் மேலைசாளுக்கிய படை நுழைந்து விடும். தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது எனினும், பாண்டியப் படைகள் சோழ தேசத்திற்குள் நிற்க வைக்கப்பட்டிருக்கிறது எனினும், சுந்தர சோழன் பார்த்துக் கொள்வான் எனினும் எனக்கு இதுமட்டும் போதாது என்று தோன்றுகிறது.

பாண்டிய தேசத்தில் கலவரங்கள் துவங்கி விட்டன. நாஞ்சில் நாட்டில் ஒருவன் தன்னை பாண்டிய மன்னன் என்று புதிதாய் ஒரு மரசிங்காசனம் ஏற்படுத்தி உட்கார்ந்திருக்கிறான். அவர்கள் மீன் கொடியை பல வர்ணங்களாக பிரித்து வைத்திருக்கிறார்கள். வெள்ளை மீன் கொடி அலைந்து கொண்டிருக்கிறது. நீல மீன் கொடி நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. பாண்டியர்கள் வெறுமே இருக்கப் போவதில்லை. ஆனால் சேரர்கள் வெறுமே இருக்கிறார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை.

சோழ கேரளனின் வார்த்தைக்கு மதிப்பளித்து, அவன் இறப்புக்கு மதிப்பளித்து அங்குள்ள தளபதியும், அரசரும் அமைதியாய் இருக்கிறார்கள். சோழ கேரளனை என் அன்பு மகனை இழந்தது போல, சுந்தர சோழனையும், என் மருமகனையும் இழக்க விரும்பவில்லை. எனவே, இங்குதான் இருக்க வேண்டும். இது விதி.

எனவே, என் சார்பாக வீரமாதேவி வருகிறாள். உடன் இருந்து பாதுகாப்பாக அழைத்துப் போ. 'விஷயங்கள் சொல்லிக் கொடு. நேரடியாக போரில் ஈடுபடுத்து. பின் வரிசையில் நிற்க வைக்காதே. வீரமாதேவி உன் கட்டளைக்கு கீழ்பட்டவள்.

வீரமாதேவி உனக்கு தலைவன் அருண்மொழிபட்டன், அவனே முதன்மை. நீ அடுத்தது. நினைவில் கொள். இது என் கட்டளை.''

அவர் மறுபடியும் அருண்மொழிபட்டனை தழுவிக் கொள்ள, வீரமாதேவியை தழுவிக்கொள்ள தொலைதூரம் நிற்க வைக்கப் பட்டிருந்த கணவதி நாவாயிலிருந்து கூச்சல் மெல்லியதாய் கேட்டது. அங்கிருந்து புகையோடு கூடிய எரி அம்புகள் விடப் பட்டன.

''என்ன செய்கிறார். அந்த புகையை பாருங்கள்.'' அந்த புகை வடக்கு நோக்கி நகர்ந்தது.

''அடேய், காற்று திசை மாறி விட்டன.'' அருண்மொழி பட்டன் கூவினான். நாவாய்கள் நகர்ந்தன. அருண்மொழி பட்டன், வீரமாதேவியோடு ஒரு நாவாயில் ஏறிக்கொண்டான். நூல் ஏணியில் வெகு விரைவாக வீரமாதேவி ஏறினாள்.

எல்லோரும் நாவாயில் வரிசையானார்கள். கேடயத்தை முன்னே வைத்துக் கொண்டார்கள். வீரமாதேவி வாளை உருவினாள். உயரத் தூக்கினாள். கவசத்தை தன் வாளால் தட்டினாள்.

'சோழம் சோழம் சோழம்' என்று கத்தினார்கள்.

ஒரு மேடையில் வெள்ளை துணியை விசிறியபடி இராஜேந்திரர் நின்றிருந்தார். அவர் கண்ணிலிருந்து நீர் வழிந்தது. நாவாய்கள் வெகு அழகாக வடக்கு நோக்கி நகர்ந்தன. காற்று மிகச் சாதகமாக இருப்பது பாய்மரத்தின் உப்பலிலிருந்து தெரிந்தது. மிகச் சிறிய நாவாயிலிருந்து மிகப்பெரிய நாவாயான வங்கம் என்று அழைக்கப்படுகின்ற அந்த பெரிய மரக்கலத்திற்குள் அருண்மொழிபட்டனும், வீரமாதேவியும் ஏறினார்கள்.

அருண்மொழிபட்டன் ஏறியபிறகு வீரமாதேவிக்கு கை கொடுத்தான். வீரமாதேவி அவன் தோளை பிடித்துக்கொண்டு உள்ளே குதித்தாள். கணவதியும், சிவஸ்வாமியும் அறிமுகப் படுத்தப்பட்டார்கள். மற்ற உபதளபதிகளும் அறிமுகப்படுத்தப் பட்டார்கள். ஒவ்வொரு வீரனின் பெயரையும் அவள் கேட்டு தெரிந்து கொண்டாள்.

என்ன உணவிருக்கிறது என்று கேட்டாள். வீரர்கள் பரபரத்தார்கள். கோதுமை அடையும், குழம்பும் முள் எடுத்த வதக்கிய மீனும் கொடுத்தார்கள். ஆவலாக வீரமாதேவி உண்டாள். மரக்கலன்கள் வடக்கு நோக்கி வரிசையாக நகர்ந்தன.

கணவதி சுக்கானை பிடித்தபடி 'எங்கே எங்கே எங்கே' என்று தேடிக் கொண்டிருந்தான்.

"என்ன தேடுகிறாய் கணவதி. நீரோட்டம் இருக்கிறது போல் தெரிகிறதே."

"இந்த நீரோட்டம் போதாது. இன்னும் வேகமான நீரோட்டம் வேண்டும். ஆமைகள் வேண்டும்."

"ஆமைகளா?"

"ஆமாம். ஆமைகள் போகின்ற நீரோட்டம்."

"ஆமைகள் ஒரு நீரோட்டம் அமைக்குமா."

''அமைக்காது. கண்டுபிடிக்கும். நீரோட்டத்தில் போய் கலந்து கொள்ளும்.''

''இவ்வளவு பெரிய கடலில் ஆமைகளை போய் எங்கே தேடுவாய்.''

''ஆமைகள் என்றால் ஒன்றிரண்டா, பலநூறா, ஆயிரமா. லட்சக்கணக்கில் வரும்.''

''என்னது''

''இலங்கையில் அமைதியான கடற்கரையில் முட்டை இட்டுவிட்டு சங்கை முகத்துவாரத்தில் இருக்கின்ற செடி களை, கொடிகளை, ஆற்றுநீரை குடிப்பதற்கும், இங்கே சல்லா பிப்பதற்கும் வரும். மிக வேகமாக வரும். அதற்கென்று தனி நீரோட்டம் அவைகள் கண்டுபிடிக்கும்.''

அன்று பகல் முழுவதும் அவன் தேடினான். அந்தி நெருங்கிக் கொண்டிருந்தது. அதிகம் உண்ணவில்லை. அடிக்கடி நீரை மட்டும் அருந்தினான். மற்றவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு குடுவை நீர் என்றால் கணவதிக்கு இரண்டு குடுவை நீர் என்று கொடுக்கப்பட்டிருந்தது. நீரோட்டம் தேடும் போது நீர் அருந்துவதுதான் நல்லது. உணவு உண்டால் தூக்கம் வரும். தூக்கம் வந்தால் கடலை கவனிக்க முடியாது. கடல் நீரோட்டம் கண்டுபிடித்துவிட்டால் அதற்குப் பிறகு மாலுமி களிடம் கொடுத்துவிட்டு படுத்துக் கொள்ளலாம். அதுவரை அல்லாடிக் கொண்டிருக்க வேண்டியதுதான். அந்தி சரியும் போது தொலைதூரத்தில் பளபளப்பு தெரிந்தது.

''அதோ, அதோ அந்த பக்கம் திரும்பலாம். அந்த பக்கம் திரும்பலாம். பின்னாலேயே அவர்களை வரச் சொல்லுங்கள். சைகை செய்யுங்கள்.'' என்று சொல்ல, வீரர்கள், பின்னால் வரும் மரக்கலன்களுக்கு சைகை செய்தார்கள். மரக்கலன்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன.

''அவைகள் மீன்கள் போன்று தோன்றுகிறதே.''

''இல்லையடா. மீன்கள் துள்ளும். நீர் தெறிக்கும், இவை வெறும் பளபளப்பாக போவதைப் பார். பளபளப்பு கருப்பாக இருக்கிறது.''

"ஆமாம். ஆமாம்" மற்ற வீரர்கள் ஆமோதித்தார்கள். அந்த இடத்திற்கு போவதற்கு ஒரு நாழிகை ஆனது. அந்த இடத் திற்கு வந்தவுடன் உற்றுப் பார்த்தான்.

"ஆமைகள். லட்சக்கணக்கில் ஆமைகள். சரியான இடத் திற்கு வந்து விட்டோம். கண்டுபிடித்து விட்டோம். அருண்மொழி பட்டரே, அருண்மொழி பட்டரே." அவன் துள்ளி குதித்தான்.

வீரமாதேவியும், அருண்மொழிபட்டனும் அவன் இருக் கும் இடத்திற்கு வந்து கெட்டியாக பிடித்துக் கொண்டார்கள். நாவாய் முன்னும், பின்னும் ஆடியது. ஆறு முழங்கை கீழ் இறங்கியது. ஆறு முழங்கை மேலேறியது. லேசாக இடதும், வலதும் ஆடியது. கீழ் இறங்கும்போது கடல் ஜலம் முகத்தில் அடித்தது. இறுக்க கட்டி பாய்மரங்களை திசை மாற்றினான்.

இப்பொழுது அருண்மொழிபட்டனுக்கும், வீரமாதேவிக் கும் ஆமைகள் தெரிந்தன. எரிகின்ற பந்தத்தை கீழ் இறக்கி னார்கள். ஆமைகளின் பளபளத்த தலைகளும், ஓடுகளும் தெரிந்தன. நாவாய்கள் அதில் சேர்ந்து கொண்டன. ஆமைகள் நாவாயை சூழ்ந்து கொண்டன. வங்கம் என்ற அந்த மிகப் பெரிய மரக்கலனும், மற்றும் உள்ள மரக்கலன்களும் அந்த நீரோட்டத்தில் இறங்கின. கொஞ்சம் இடதும், வலதும் ஆடின. 'டம் டம்' என்ற சத்தம் மரக்கலத்தின் மீது ஆமைகளின் ஓடுகள் மோதும் சத்தம் கேட்டது. சில ஆமைகள் ஒரு கால் மிதித்து நின்றால் எவ்வளவு பெரிய வட்டம் வரைய முடியுமோ அந்த அளவுக்கு இருந்தன.

"அடேயப்பா. எவ்வளவு பெரிய ஆமைகள், இரண்டு பேர் கால் அகட்டி நிற்கும் அளவுக்கு மிகப்பெரிய ஆமை ஒன்று போகிறதே." அதையும் அவர்கள் பார்த்தார்கள்.

"இந்த ஆமைகள் மீது கால் வைத்து நிற்க முடியுமா." ஒரு சோழ வீரன் கேட்டான்.

"நான் இதுவரை அந்த முயற்சி செய்ததில்லை. நீ முயன்று பாரேன்." கணவதி அவனை உற்சாகப்படுத்தினான். கயிறு கட்டி அவனை இறக்கினார்கள். அவன் மிதப்பதற்காக ஒரு மூங்கில் கூடை முதுகில் கட்டிக் கொண்டிருந்தான். ஒரு ஆமை

யின் முதுகில் கால் வைத்தான். அது உள்ளே போயிற்று. இன்னொரு ஆமையை தொட்டான். அதுவும் உள்ளே போயிற்று. மிகப் பெரிய ஆமை வரும்வரை காத்திருந்தார்கள். அவன் அந்த ஆமையின் மீது உட்கார்ந்து கொண்டு சரட்டென்று கயிறை அவிழ்த்து விட்டான். அந்த ஆமை மிதந்தபடியே போயிற்று. பிறகு அதுவும் மெல்ல அமிழ்ந்தது. இடுப்பளவு ஆழத்தில் அவன் நின்றிருந்தான். காலுக்கு கீழ் ஆமை இருக்கிறது என்று கத்திச் சொன்னான். ஆனால் அந்த ஆமை மறுபடியும் மேலே வந்து அவனை புரட்டிப் போட்டது. அவன் ஆமைகளுக்கு நடுவே மிதந்தான். ஆமைகள் சூழ்ந்து கொண்டன. தன்னுடைய ஓடுகளின் விளிம்பால் அவன் முதுகை தேய்த்தன. கடித்தன. அருகில் வந்து தலையை சொருகிக்கொண்டு தன்னுடைய ஓட்டால் முட்டின. அவன் அங்கங்கே ரத்த காயங்கள் ஏற்பட அலறினான். அவனுக்கு கயிறு போடப்பட்டது. தூக்கினார்கள். பிறகு கொக்கியில் மாட்டினார்கள். அவனை விரைவாக மேலேற்றினார்கள். ஆமைகள் நிதானமாக மிதந்து போயின.

அவனை இறக்கி பார்த்தபோது பல இடங்களில் கடித்த காயங்களும், கீறல்களும், வீக்கங்களும் இருந்தன.

''ஆமைகள் நமக்கு சவாரிக்கு உதவாது. ஆமைகளை அணைத்து கொண்டு போவதுதான் நல்லது.'' அருண்மொழி பட்டன் சிரித்தபடி சொன்னான். அந்த வீரனுக்கு மருந்துகள் போடப்பட்டது.

''ஆனால் இந்த முயற்சி நல்ல முயற்சி. துணிச்சலாக இறங்கினாய். இந்தா வைத்துக் கொள்.'' அருண்மொழிபட்டன் அந்த வீரனுக்கு பத்து கழஞ்சுகள் கொடுத்தான். அந்த வீரன் சந்தோஷமானான்.

இரவு கணவதி அயர்ந்து தூங்கினான். மரக்கலத்தின் சுக்கானை சிவஸ்வாமி பார்த்துக் கொண்டான். மந்திரங்கள் முணுமுணுத்தபடி நின்றிருந்தான். அருண்மொழி பட்டனும், வீரமாதேவியும் அறைக்குள் இருந்த தூளியில் தூங்கினார்கள். வீரமாதேவி உடம்பு முழுவதும் போர்த்திக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தாள். அவர்களை கடந்து போக வேண்டிய

அவசியம் இல்லாது அருண்மொழிபட்டன் வாசற்பக்கம் இருந்தான்.

காலையில் வெளிச்சம் வந்ததும் கொம்பூதப்பட்டது. இரவு விழித்திருந்தவர்கள் தூங்கிப்போனார்கள். தூங்கியவர்கள் எழுந்தார்கள். அருண்மொழிபட்டன் வெளியே வந்தான். நன்நீரில் முகம் கழுவினான். வாய் கொப்பளித்தான். அரிசி கஞ்சி குடித்தான். வெண்ணை விழுங்கினான். அவித்த கோதுமை அடையை கரும்பு சாற்றில் தோய்த்து நாலைந்து துண்டுகள் விழுங்கினான். நாவாயின் ஓரத்திற்கு போய் அங்கு நீள வாட்டில் வைக்கப்பட்டிருந்த வளையத்தில் அமர்ந்து வயிறை எளிதாக்கிக் கொண்டான்.

'அடேய், வீரமாதேவி என்ன செய்வார்.' அவன் உடனடியாக வீரர்களை அழைத்தான். ஆலோசித்தான். ஒரு தச்சர், ''நான் பிரம்பினால் மறைப்பு அடைத்து விடுகிறேன்'' என்றார். மடமடவென்று நீள பிரம்புகளை முடக்கி பாயைப் போல கைகளால் முடைந்தார். ஒரு ஆள் உயரத்திற்கு அந்த வட்டத்தை சுற்றி மறைப்பு அமைக்கப்பட்டது. வட்டத்திற்குள் நுழைகின்ற பலகையின் மீது மறைப்பு கட்டப்பட்டது. தளத்திற்கு வந்தால்தான் வருவது தெரியும். மற்றபடிக்கு அது பாதுகாப்பான விஷயம். வீரமாதேவி உள்ளே போனபிறகு அங்கு வீரர்கள் காவல் இருந்தார்கள். வீரமாதேவி தன் உடம்பை சுத்தப்படுத்திக் கொண்ட பிறகு தரை தளத்திற்கு வந்தாள். ''எங்கு இருக்கிறோம்'' என்றாள்.

''வெகுதூரம் தாண்டி விட்டோம். நல்ல வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறோம்.'' ஒரு தக்கையை கயிறு கட்டி கணவதி எறியச் சொன்னான். பலமான ஒரு வீரன் தொலைதூரம் அந்த தக்கையை எறிய அந்த தக்கை நீரில் மிதந்தபடி நாவாயோடு வந்தது. அந்த தக்கையின் நகர்வை ஒரு புள்ளியிலிருந்து இந்த புள்ளி என்று மனதுக்குள் வைத்தபோது நாவாய் நல்ல வேகத்தில் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. கயிறு உதறி தனியே நிற்க வைத்துவிட்ட பிறகு தக்கை ஓர் இடத்தில் நின்றது. நாவாய் அதை கடக்கின்ற வேகத்தை வைத்துக் கொண்டு நாவாயின் வேகம் கணக்கிடப்பட்டது. எண்ணெய்

கிண்ணத்தில் காந்த ஊசியை மெல்லிய பட்டையை மிதக்க விட்டான். கணவதி எல்லோரையும் அழைத்து அந்த காந்த ஊசியை பார்க்கச் சொன்னான்.

''நாம் நல்ல வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறோம். நல்ல திசையில் போய்க் கொண்டிருக்கிறோம். நேரே வடக்கே போகாமல் இப்போது வடமேற்காக திரும்ப வேண்டும். வடக்கு என்று இதை காண்பிக்கிறது காந்த ஊசி. வடமேற்காக நகர வேண்டுமென்றால் இப்போது நகர வேண்டும். நீரோட்டமும் நகருகிறது பாருங்கள். ஆமைகள் முன்னே போய்க் கொண் டிருக்கின்றன பாருங்கள். ஆமைகள் வங்கத்திற்கு அதாவது உத்திரலாடத்திற்கு கங்கை கரைக்கு போய்க் கொண்டிருக் கிறோம். நாம் சரியான திசையில் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''எத்தனை நாள் ஆகும்.''

''இன்று உச்சி வேளையில் ஒருநாள் முடியும். அடுத்த ஒரு உச்சி வேளை இரண்டு நாள் ஆகும். அடுத்து ஒரு உச்சி வேளை கங்கை கரையை அடைந்து விடுவோம். காற்று திசை மாறாமல் இருக்க வேண்டும். வடக்கத்தி காற்று வராமல் இருக்க வேண்டும்.''

''தெற்கத்தி காற்று மூன்று நாட்கள் தொடருமா.''

''ஐந்து நாட்கள் தொடரும். இது கடைசி காற்று என்பதால் விரைவாக தன் முழு பலம் செலுத்தி வடக்கு நோக்கி நகரும். அது தாக்குகிற வரை வடக்கு பக்கம் காற்று இருக்கும். வடக் கத்திய காற்று அந்த தாக்குதலை சுழற்றி ஏற்றுக் கொண்டு சந்திரன் திசை மாறுவதால், பூமி திசை மாறுவதால் தட்சிணா யணம் நோக்கி நாம் நகர்ந்து விட்டதால் அங்கு ஒரு சுழலை ஏற்படுத்தி அங்கிருந்து வேகமாக வரும். மழைக்கு முன்பு கங்கையை அடைந்துவிட்டால் நலம். இல்லையெனில் குதிரை களை இறக்குவது கடினமாகும்.''

வீரமாதேவி அறைக்குள் போய் ஈரத்துணியால் உடம்பை துடைத்துக் கொண்டாள். திலகமிட்டாள். தலைவாரிக் கொண் டாள். தலையை சுற்றி துணியால் மூடிக் கொண்டாள். மறுபடியும்

வாள், கவசம் தரித்து இடுப்பில் துணி இறுக்கி வெளியே வந்தாள். அதற்குள் மரக்குவளை நீரில் அருண்மொழிபட்டன் குளித்து முடித்திருந்தான். திருமண் இட்டுக் கொண்டான். துளசி மாலையை உருட்டி ஜபம் செய்தான். அரிசி சோறும், கதம்ப குழம்பும் சாப்பிட்டான். மோரில் தேன் கலந்து சாப்பிட்டான். மேல்தளத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் உடம்பை கிடத்தினான். வீரமாதேவி அவனுக்கு அருகே வந்து ஒரு முக்காலியில் அமர்ந்து கொண்டாள். அவன் விரைவாக எழுந்த போது அவன் கையை தொட்டு சமாதானப்படுத்தினாள்.

‘‘ஒட்ட தேசத்து பெண்கள் எப்படி இருக்கிறார்கள். ஒட்ட தேசத்து ஆண்கள் எப்படி இருக்கிறார்கள். காடுகள் நிறைந்த இடம் என்று சொன்னீர்களே. அங்கு மக்கள் வாழும் இடம் எப்படி இருக்கிறது. ஒட்ட தேசத்தில் யானைகள் அதிகமாமே. அதில் அவர்கள் பவனி வருவார்களாமே. தேவரடியார் வீட்டு பெண்கள் பருவமடைந்ததும் அந்தணர்களுக்கு சமர்ப்பணம் செய்விப்பார்களாமே. ஒருமாத காலம் அந்தணருடன் இருந்து விட்டு பிறகுதான் தன் வீட்டிற்கு வரமுடியுமாம். இப்பொழுது அவள் அந்தணருடைய பிரசாதமாம். அயோக்கியத்தனமாய் இல்லை.’’

‘‘அவர்கள் வேறுவிதமாகச் சொல்கிறார்கள். தேவடியார் என்ற இடத்திற்கு பூஜை செய்வதற்குண்டான தகுதியை அவர்கள் அங்கு கற்றுக் கொள்கிறார்கள் என்றும், அதற்கு பிராயச்சித்தமாக தன் உடம்பை கொடுக்கிறார்கள் என்றும் சொல்லப்படுவது உண்டு. மந்திர உபதேசங்கள் அங்கு நடைபெறுகின்றனவாம். ஆனால் இது சரியா, தவறா என்று கேள்வி கேட்பதற்கு நான் முயற்சிக்கவில்லை. அது அவர்கள் பண்பாடு.’’

‘‘அங்கு பூரி ஜெகன்னாதர் கோவிலுக்கு போனீர்களா.’’

‘‘போனேன்.’’

‘‘எப்படி இருந்தது வரவேற்பு.’’

‘‘மிரட்டல்தான். அதற்குத்தான் அவர்கள் பயப்படுகிறார்கள். மூன்றுவித மரக்கட்டைகள் தான் ஜெகன்னாதர். அந்த

மரக்கட்டைகளுக்கு வெள்ளியால் முகம் வரைந்து, சேலை கட்டியும் வேட்டி உடுத்தியும் வைத்திருக்கிறார்கள். ராமர், லட்சுமணன், சீதை என்பதுபோல அதை அவர்கள் வணங்கு கிறார்கள்.''

''ஏன் மரம்.''

''அது மிகப்பெரிய செய்தி. வடகிழக்கிலிருந்து கங்கை யில் கிருஷ்ணர் கடைசியாக தங்கி இருந்த மரம் அடித்து வரப் பட்டது. கிருஷ்ணரின் சாந்நித்யம் அதில் இருக்கிறது என்று அந்த விஷயத்தை புரிந்து கொண்டு ஸ்வப்னமாகி இந்திர தத்தனின் பாட்டனுக்குப் பாட்டன் தட்சிணாலாடத்திற்கு போய் அரசனை சந்தித்து இந்த மரங்களை வாங்கி வந்ததாக வும், இதற்கு பெரும் பொருளும், குதிரைகளும் கொடுத்த தாகவும் தெரிகிறது. இது வெகுகாலம் முன்பு நடந்தது.

இந்த மரக்கட்டைகள் ஒட்ட தேசத்திற்கு வந்த பிறகு ஒட்ட தேசம் செழிப்பாயிற்று. இயற்கையினுடைய சீற்றங்கள் ஒட்டதேசத்தில் ஏற்படவில்லை. மிகச் சிறப்பாக பூஜைகள் நடக்கின்றன. அவைகளை மரக்கட்டைகள் என்று நாம் தான் சொல்லுகிறோம். 'ஜகன்னாதா, ஜகன்னாதா' என்று பரவச மாக கத்துகிறார்கள். பெரும் தேர்கள் செய்து வைத்திருக் கிறார்கள். காடு உள்ள தேசமா. மரத்திற்கு குறைவில்லை. அந்த தேர் சக்கரத்தின் காலடியில் போதும் நான் வாழ்ந்தது என்று கிழவர்களும், கிழவிகளும் தங்கள் உடம்பை கொடுத்து நசுக்கிக் கொள்கிறார்கள்.''

''கடவுளே. சொக்கநாதா'' அவள் கத்தினாள். காது களை பொத்திக் கொண்டாள்.

''இது ஒரு சம்பிரதாயம். எதையும் கேள்வி கேட்க வில்லை. கேள்விபட்டேன். பார்க்கவில்லை. தெரு முழுவதும் ரத்த சகதியாக இருக்குமாம். அதை வலம் வந்து கும்பிட்டு விட்டு போவார்களாம். அங்கு விளக்கேற்றுவார்களாம். எத்தனை விளக்குகள் என்று கணக்கு இருக்குமாம். போன வருடம் அறுபத்தியேழு விளக்குகள், இந்த வருடம் நூறு விளக்குகள் என்று பெருமிதப்படுவார்களாம்.''

"கேடு கெட்ட தேசமடா."

"அப்படி சொல்வதற்கில்லை. அது ஒரு சம்பிரதாயம்."

"முரடர்களோ."

"அதிகம் முரடர்கள்."

"இப்படி அந்தணர்கள் தங்களை பலி கொடுத்துக் கொள் வார்களா."

"ஒரு காலும் இல்லை. பைத்தியமா அவர்களுக்கு"

"அதுதானே பார்த்தேன். அந்தணர் ஆட்சி என்றால் என்ன."

"நிர்வாகம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. என்ன செய்ய வேண்டும் என்று இந்திரதத்தனுக்கு அவர்கள் கட்டளை இடு கிறார்கள். பணபெருக்கத்தை பற்றி கவனித்துக் கொள்கிறார் கள். படை பயிற்சியை பற்றி மேற்பார்வையிடுகிறார்கள். வரவு, செலவு கணக்குளை துல்லியமாக வைத்திருக்கிறார்கள். ஒரு கிராமத்திற்கு என்ன விதமான உதவியெல்லாம் செய்ய வேண்டும் என்று அவர்கள் கலந்து பேசி, இன்னின்ன கிராமங் களுக்கு இன்னின்ன விதமான உதவிகள் என்று எழுதி கொண்டு போய் அதை அரசாங்க ஊழியர்கள் நிறைவேற்றும் படி செய்திருக்கிறார்கள்.

கோவிலுக்கு ஒரு பகுதி என்றும், அரசனுக்கு ஒரு பகுதி என்றும், உழவனுக்கு ஒரு பகுதி என்றும் சொல்லப்படுகிறது. உழவர்கள் அறுபது விழுக்காடு எடுத்துக் கொள்கிறார்கள். இருபது விழுக்காடு அரசனுக்கு இருபது விழுக்காடு கோவி லுக்கு பொன்னாகவும், அரிசி நெல்லாகவும், கோதுமை யாகவும் சில சமயம் சந்தன கட்டைகளாகவும் கொடுக்கப்படு கின்றன.

அவர்கள் வெளிதேசத்து வாணிபத்தையும் கவனித்துக் கொள்கிறார்கள். கஸ்தூரிதைலம் என்கிற கற்பூர தைலமும், தேனும், சந்தன கட்டையும், நாவாய்கள் செய்கின்ற செம்மர கட்டையும், மெல்லிய மரங்களும், வாகை மரங்களும் கடற் கரைக்கு கொண்டு போகிறார்கள். நாவாய்கள் செய்கின்ற தச்சர்கள் மரக்கலன்களில் வந்து பெருமளவில் வாங்கிக் கொள்

கிறார்கள். பன்னீர் போன்றவைகளும் அவர்கள் ஏற்றுமதி செய் கிறார்கள். முழங்கை நீளமுள்ள கூஜாக்களில் மூடி போட்டு பன்னீர் சீனத்திற்கு அனுப்புகிறார்கள். அங்கு நெசவு நன்றாக இருக்கிறது. கிராமங்களில் எல்லோரும் நெசவு வைத்திருக் கிறார்கள். ஒட்டதேசத்து காழகம் (வேட்டி) மிக உறுதியாக இருக்கிறது. பெருமளவில் பருத்தி உற்பத்தி செய்கிறார்கள். அது தவிர, அவர்களுடைய முக்கியமான வியாபாரம் பாய்மரம்.''

''என்ன.''

''பாய்மரம், பாய்மர துணி, ஒரு தாழை போன்ற செடி யிலிருந்து நார் எடுத்து பின்னி உறுதியான கயிறாக்கி, அந்த உறுதியான கயிறுகளை கைகளால் நெசவு செய்து, பெரிய துணி ஆக்கி அந்த பெரும் துணியை ஒட்டு போட்டு பெரிய பாய்மர துணியாக்கி சுருட்டி வைத்திருக்கிறார்கள்.

நன்கு நடந்தால் இருபது தப்படி தொலைவில் அந்த பாய்மரம் படுத்திருக்கும். மிக கனமான உறுதியான பாய்மர துணி. பத்து பேர் சேர்த்துதான் தூக்க முடியும். அவைகளை சீனப் படகுகளில் வைத்து இழுத்துக் கொண்டு போய் மரக் கலன்களுக்கு அருகே போய் அங்கேயே நின்று பேரம் பேசு கிறார்கள். அங்கேயே பொருள்கள் பரிமாறுகின்றன. கட்டுப்படி யாகாது என்று திரும்ப வருகிறார்கள். மரக்கலன்கள் காத்திருக் கின்றன. மறுபடியும் போகிறார்கள். முன்பு சொன்னதை விட அதிகம் விலை சொல்லுகிறார்கள். அந்த விலைக்கு மரக் கலன்களில் அவை ஏற்றப்படுகின்றன. விரித்து பார்க்கப்படு கின்றன. இது பெரும் லாபம் கொடுக்கின்ற தொழிலாக இருக் கின்றது.

அரசாங்கமே விவசாயிகளை இந்த பயிர் செய்விக்கவும், பிரித்து நார் எடுக்கவும், அதை துணியாக நெய்யவும் பல்வேறு இடங்களில் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கரும் பிலிருந்து எடுக்கப்பட்ட ஒருவகை சாராயம் நல்ல விலைக்கு போகிறது. ஒட்டதேசம் செழிப்பாக இருக்கிறது.

அங்கு பல கோவில்கள் இருக்கின்றன. சாக்த வழிபாடு அதிகம் இருக்கிறது. அற்புதமான சிலைகள் இருக்கின்றன. நம் நித்த விநோத பெருந்தச்சன் இரவி அங்கு அலட்டிக் கொள் கிறானே. கிட்டத்தட்ட இரவியினுடைய சிலைகளுக்கு ஒப்பாய்

அழகான பெண் சிலைகளை வடித்திருக்கிறார்கள். தோரண வாயில்களை வைத்திருக்கிறார்கள். ஜன்னல் கதவுகள் கூட கல்லில் செய்து பெரிய வேலைகள் செய்திருக்கிறார்கள். கல் லிலான ஆசனங்கள் வழவழப்பாய் மிக சுகமாய் இருக்கின்றன. ஒரு முதுகு எப்படி சாயும் என்று தெரிந்து கொண்டு அந்த கோணத்தில் கல் ஆசனங்கள் அமைத்திருக்கிறார்கள். அதில் ஏகப்பட்ட சித்திர வேலைப்பாடுகள். ஒரு கோவில் முழுவதும் ராமாயணம் செதுக்கப்பட்டிருந்தது. இன்னொரு கோவிலில் வரையப்பட்டிருந்தது. கோவிலை சுற்றி அந்தணர் வசிக்கும் இடங்கள் நல்ல மாளிகைகளாக இருக்கின்றன. அரண்மனை கள் உறுதியாக இருக்கின்றன. நல்ல நீர் வழிப்பாதை இருக் கிறது. மகாநதி பல கிளைகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பப்படுகிறது. நீருக்கு குறைவே இல்லை. மழைக் காலங்களில் சற்று அவஸ்தைப் படுகிறார்கள்.''

''இத்தனை தெரிந்துவிட்டதா.''

''தகவல் சேகரித்தேன். நேரில் பார்த்து அனுபவிக்க வில்லை. நல்ல எருமைகள் இருக்கின்றன. பால் கொடுக்கின் றன. பால் இனிப்பு இல்லாத உணவே இல்லை.

அரையன் ராஜராஜன் அங்குள்ள காளி சிலைகளை பெயர்த்து இராஜேந்திரருக்கு பரிசாக கொடுக்க எண்ணியிருக் கிறார். உத்தரவு பிறப்பித்து விட்டார். காளி சிலைகள் தூக்கப் பட்டு விட்டன.''

''அடேய், அந்த ஜனங்கள் கதறுவார்களே. ஒரு கோவிலை உடைத்து கர்ப்பக்கிரக சிலைகளை எடுப்பதென் றால் வேதனையாக இருக்குமே.''

''ஆமாம். மிகப் பெரிய வேதனைதான். ஜனங்கள் தள் ளாடுகிறார்கள். வேண்டாம். வேண்டாம் என்று ஒவ்வொரு உபதளபதியாக வந்து மன்றாடுகிறார்கள். ஆனால் அரையன் ராஜராஜன் கட்டளையிட்டு விட்டு வடக்கே நகர்ந்துவிட்டார். இந்நேரம் அந்த சிலைகள் தெற்கு நோக்கி, வேங்கி நோக்கி நகர்ந்திருக்கும்.''

★★★

அத்யாயம்

79

எத்தனை பத்திரமாக எடுத்துப் போனாலும் சிதிலமாகி விடும் என்று உபதளபதிகளுக்கு தெரிந்தது. அவர்களிடம் இந்த வேலை கொடுக்கப்பட்டிருந்தது. மரப்பலகையில் கிடத்தப் பட்டிருந்த காளி சிலைகளை சுற்றி ஊர் ஜனங்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்கள். 'அம்மா, சாப்பிடு, சாப்பிடு' என்று அவள் வாயில் சாதம் ஊட்டினார்கள். பழங்கள் கொடுத் தார்கள். 'உன்னை உள்ளிருந்தபோது தொடவிடவில்லை. நான் தொழுவதற்காக வெளியே வந்து படுத்திருக்கிறாயா. போகப் போகிறாயே, என்னால் தாங்க முடியவில்லையே. நானும் உன்னோடு வந்து விடுகிறேன் அம்மா.' என்று பல பெண்கள் கதறி அழுதார்கள். அவர்களில் பலர் தேவரடியார் களாக இருந்தார்கள். பெரிய வட்டமாக குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொண்டு, கழுத்தில் தங்க நகைகள் மின்ன கச்சை இல்லாது வெறும் மேலே போர்த்திக் கொண்டு மார்பகம் தெரிவது பற்றி கவலை இல்லாது நடமாடினார்கள். கிராமத்தில் உள்ள சிலை எடுக்கப்பட்டது. இந்த கிராமத்தில் உள்ள சிலை எடுக்கப் பட்டது என்று சொல்ல, சொல்ல அங்கங்கே ஓடி அழுதார்கள்.

ஒரு தளபதி கடுமையாக யோசித்து ஒரு முடிவிற்கு வந்தான்.

''இவைகளை கடற்கரை ஓரம் அழைத்துப் போய் விடு வோம். ஆதி நகரிலிருந்து பூரி ஜெகன்னாதர் ஆலயம் நோக்கி நகர்ந்து அங்கிருந்து கடற்கரைக்கு போய் அங்கிருக்கும் மரக் கலம் ஒன்றை வாடகைக்கு எடுத்து அந்த மரக்கலத்தில் கனத்த தூளிகள் கட்டி வீரர்கள் தூங்குவதற்கு பதிலாக இந்த சிலை கள் தூங்கட்டும். அவைகள் ஆடிக் கொண்டு வரட்டும். பத்திர

மாக கீழே இறக்கி பிறகு நாகையிலிருந்தோ, பூம்புகாரிலி லிருந்தோ அவர்கள் வண்டி கட்டி ஜெயங்கொண்டம் நோக்கி போகட்டும்."

"கடற்கரை வரை எப்படி எடுத்துப் போவது."

"பல்லக்கு கட்டுவோம், பல்லக்கில் உயரமாக மூங்கில் கள் நடுவோம். அந்த மூங்கில்களுக்கு நடுவே தூளி கட்டு வோம். அந்த தூளிகளுக்கு நடுவே இந்த சிலைகளை வைத்து விடுவோம், தரையில் படாமல் பல்லக்கில், கீழே அடிபடாமல் தூளியில் இந்தச் சிலைகள் வரும். ஒரு உற்சவ ஊர்வலம் போல் இருக்கும்." அதையும் ஆமோதித்தார்கள்.

சோழ வீரர்கள் சுறுசுறுப்பாய் இருந்தார்கள். ஒட்ட வீரர்கள் உதவி செய்தார்கள். ஒட்ட மக்கள் துணிகளை ஒன்று சேர்த்து தைத்தார்கள். தங்கள் தாய் பயணப்பட அவர்களும் உதவினார் கள். அந்த சிலைகள் நகர்ந்து போனபோது கடற்கரை நோக்கி அழுது கொண்டே அந்த பெண்மணிகளும், ஊர்மக்களும் வந்தார்கள். எல்லோருக்கும் உணவளிக்க உபதளபதிகள் அங்கங்கே ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கு அந்த ஊர் மக்கள் நன்றி சொன்னார்கள்.

கடற்கரையில் நிற்க வைத்து அந்த சிலைகள் கழுத்தளவு ஜலத்தில் நகர்த்தப்பட்டு, பிறகு படகில் ஏற்றப்பட்டு படகி லிருந்து கயிறு கட்டி கவனமாக மரக்கலத்திற்கு ஏற்றப்பட் டது. பதினாறு சிலைகள் ஏற்றப்பட்டன. ஜனங்கள் விழுந்து, புரண்டு காளி சிலைகளுக்கு விடை கொடுத்தார்கள். மரக் கலன்கள் நகர்ந்தவுடன் தங்கள் ஊர் நோக்கி நடந்தார்கள். 'இன்னொரு சிலை எங்களுக்கு செய்யத் தெரியாதா. இதை விட பெரிதாக ஒன்று நிறுவ மாட்டோமா. எங்கள் உயிரை கொடுத்து அவளை சிறப்பிக்க மாட்டோமா', என்று அங்க லாய்த்த வண்ணம் ஆவேசமாக திரும்பினார்கள்.

சிலைகள் அழகாக, அமைதியாக வடக்கிலிருந்து காற்று வீசி வர, நகர்ந்தன. நீரோட்டம் பார்த்தன. வேங்கிக்கு அருகே நிற்காது அது இன்னும் வடக்கே சோழ தேசம் நோக்கி பயணப் பட்டன. எட்டு நாட்களில் சோழ தேசத்தில், கடற்கரையில் ஒதுங்கின.

''எங்கு இறங்குவது, கிருஷ்ணன் பூபாலன் துறையா, அல்லது தரங்கம்பாடியா. காவிரியின் கிளை நதிகள் அங்கு வந்து சேருகின்றன. எப்பொழுது நீர் இருக்கும். கீழே தட்டாது மரக்கலன் போகுமா.'' அவர்கள் கிருஷ்ணன் பூபாலன் துறையே சிறந்தது என்று நினைத்தார்கள்.

உள்ளிருந்து நதி நீர் கடலில் வேகமாக கலந்து கொண்டிருந்தது. மரக்கலன்கள் உள்ளே நுழைந்தன. ஓரமாய் நின்றன. மரக்கலனிலிருந்து சிலைகள் கப்பிகள் கொண்ட கயிறுகள் மூலம் நிதானமாக இழுக்கப்பட்டன. ஊர்மக்கள் உதவி செய்தார்கள்.

குலசேகரப்பட்டிணம், நாகப்பட்டிணம் போன்ற எல்லா இடங்களிலும் ஆற்று செழிப்பு நன்றாக இருக்கிறது என்று கேள்விப்பட்டார்கள். காவிரியில் இறங்கி படகுகளில் சிலைகள் ஏற்றி, எதிர்த்து கொண்டு துடுப்பு போட்டு உள்ளே போனார்கள். கொள்ளிடத்தில் பிரிந்தார்கள். கொள்ளிடத்திலும் வேகமாக நீர் இருந்தது. அங்கே நகர்ந்தார்கள். தெற்கத்தி பருவ காற்றால் குடகு பக்கமும், மேலை சாளுக்கியம் பக்கமும் நல்ல மழை பெய்து காவிரியில் வெள்ளம் புரண்டு ஓடியது என்றும், இப்பொழுதுதான் மட்டுப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். அந்த கொள்ளிட்த்திலிருந்து ஜெயங்கொண்ட சோழபுரம் அருகே வந்தார்கள். இறங்கினார்கள். மறுபடியும் பல்லக்கு அமைத்தார்கள். அதில் தூளி கட்டி சிலைகள் எடுத்துக் கொண்டார்கள். ஜெயங்கொண்டம் சோழன் வாசலுக்கு வந்தார்கள்.

'அப்பாடா' என்று மூச்சிரைத்தார்கள். சந்தோஷப்பட்டார்கள். ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள்.

'ஒரு சிலை கூட ஒரு சிறிய பின்னம் கூட ஆகவில்லை. இது கடவுள் அருள். இந்த தேவியர் சோழ தேசத்தை பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு அவர்களே சுமூகமாக வந்து விட்டார்கள். இது தெய்வ குற்றம் இல்லை என்று இப்பொழுதே தெரிந்துவிட்டது. இதனாலேயே புரிந்துவிட்டது.'

சிலைகள் வந்திருப்பது தெரிந்து சுற்றிலுமுள்ள ஊர்மக்கள் ஓடி வந்தார்கள். ஜெயங்கொண்டம் கோட்டையிலிருந்து வீரர்

களும், வணிகர்களும் வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் சிலை களை தொட்டார்கள். விழுந்து வணங்கினார்கள். பஞ்சமர்களுக்கு பரவசமாக இருந்தது. உடுக்கை அடித்து வரவேற்றார்கள். வணிகர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. நிறுத்தி வைத்து பார்த்தார்கள். மறவர்களுக்கு சந்தோஷமாக இருந்தது. எடுத்து வந்த மறவர்களை கட்டி தழுவிக் கொண்டார்கள். நாங்கள் தூக்கி வைக்கிறோம். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்றார்கள்.

சகலமும் கேள்விப்பட்டு ஜெயங்கொண்ட சோழபுரத்தை நிர்மாணித்த இரவி, தலைமை சிற்பி கருங்குதிரை ஏறி ஓடி வந்தான்.

''என்ன இது'' என்று கேட்டான்.

''இராஜேந்திர சோழர் அனுப்பியிருக்கிறார்.''

''இராஜேந்திர சோழரா அனுப்பினார். அவர் வேங்கியில் இருக்கிறாரே. இவை ஒட்ட தேசத்து சிலைகள் ஆயிற்றே.''

''ஆமாம்.''

''இவைகளை இராஜேந்திர சோழர் பார்த்தாரா.''

''இல்லை.''

''அப்படி அவர் அனுப்பினார் என்று எவ்விதமாக சொல் கிறாய்.'' அவன் சீறினான். ஏன் கோபப்படுகிறான் என்று அவர் களுக்கு தெரியவில்லை.

''இராஜேந்திர சோழர் அனுப்பியதாகத்தான் சொன்னார் கள்.''

''என்ன சொல்கிறீர்கள்.''

''அரையன் இராஜராஜன் இதை இராஜேந்திர சோழருக்கு அனுப்பினார். இராஜேந்திர சோழர் இதை பார்க்க வேண்டும் என்பதற்காக, வேங்கியில் இறக்கப்படாமல் இதை ஜெயங் கொண்டத்தில் இறக்கும்படி எங்களுக்கு சொல்லப்பட்டிருக் கிறது.''

''ஆக, இராஜேந்திர சோழர் இதை தொடவும் இல்லை. இதை பார்க்கவும் இல்லை.''

''ஆனால் இப்படி செய்யப் போகிறோம் என்று அவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.''

'என்ன செய்யப்போகிறோம் என்று.''

''சிலைகளை பெயர்த்து சோழ தேசத்திற்கு அனுப்ப வேண்டும் என்று.''

''சோழ தேசத்திற்கு அனுப்புங்கள். இதை ஏன் ஜெயங்கொண்டத்திற்கு கொண்டு வருகிறீர்கள்.''

''ஜெயங்கொண்டமும் சோழ தேசம்தானே.''

''இல்லை. தஞ்சைக்கு போகட்டும். வேறு எங்கேனும் போகட்டும். ஜெயங்கொண்டத்தில் இது உள்ளே நுழையக் கூடாது.'' இரவி பிளிறினான். ஊர்மக்கள் திகைத்தார்கள். அந்தணர்கள் அதிசயித்தார்கள்.

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்.'' கோட்டை தலைமை ஏற்பவர்களெல்லாம் வினவினார்கள்.

''இந்த இடம், இந்த கோட்டை, இந்த கோட்டைக்குள் இருக்கின்ற கோவில், இந்த கோவிலைத் தாண்டி இருக்கின்ற அரண்மனை, உங்கள் குடியிருப்புகள், பொதுக் கூடங்கள், மண்டபங்கள் எல்லாம் என்னுடைய திட்டத்தில் நான் நிர்மாணித்தது. இங்குள்ள ஒவ்வொரு கல்லும் என்னுடைய வேலை. இந்த இரவியின் வேலை. இங்கு வேறு ஒருவன் செய்த சிலை உள்ளே வரக்கூடாது.''

''இவை பரிசாக வந்ததப்பா. எங்கு வைப்பது.''

''பரிசாக வந்ததென்றால் எங்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்.''

''இராஜேந்திர சோழர் கோபப்படுவாரே.''

''நான் அவரைப் பார்த்துக் கொள்கிறேன். நான் அவரோடு பேசிக் கொள்கிறேன். வாழ்வு முழுவதும் இந்த ஜெயங்கொண்டத்திற்கு பணயம் வைத்து, உயிருக்கு உயிராய் இதை நேசித்து வளர்த்துக் கொண்டிருக்கிறேன். இதில் இன்னொருவர் செய்த சிலையை கொண்டு வந்து வைப்பீர்களோ.''

''இதில் என்ன தவறு.''

''இந்த சிலைகளை பார்த்துவிட்டு, ஆஹா, மொத்த கோபுரமும், மொத்த கோவிலும், மொத்த அரண்மனையும் வங்கத்திலிருந்து இராஜேந்திர சோழர் பெயர்த்துக் கொண்டு வந்துவிட்டார். இரவி வெறுமே வெள்ளை அடித்தான் என்று நீங்கள் சொல்வீர்கள். நான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா.

பரம்பரை பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக நானும், என் குடும்பத்தாரும் இந்த கோவில் பற்றி பேசப்பட வேண்டும். இது திராவிடச் சின்னம். தமிழர் சின்னம். சோழ தேசத்து கலை அழகு. இதற்குள் இன்னொன்று கலக்க நான் விடமாட்டேன். தமிழ் மொழியில் வடமொழி கலப்பது போல இங்கு கலக்கலாம் என்று நினைக்கிறீர்களோ. இது அந்தணர் சூழ்ச்சியாக இருக்குமென்று நினைக்கிறேன். நான் விடப் போவதில்லை. தமிழ் தமிழாக இருக்கட்டும். வடமொழி வட மொழியாக இருக்கட்டும். இங்கே கலப்பதற்கு இவைகளும் ஒருகாலும் உள்ளே வரக்கூடாது.

ஒருவேளை இராஜேந்திரர் உள்ளே வர வேண்டுமென் றால் நான் வெளியேறி விடுவேன். இந்த கோட்டை வாசலில் தற்கொலை செய்து கொண்டு விடுவேன். தொலைவிலிருந்து நான் கட்டிய கோவிலையும், மாளிகையையும் பார்ப்பேன்.''

''எதற்கு இவ்வளவு சீற்றம்.''

''உங்களுக்கு ஏன் புரியவில்லை. நீங்கள் பெற்றெடுத்த மகளை, தெருவில் போகிற வருகிறவர்களுக்கு விட்டுக் கொடுப்பீர்களா. யவனர்களுக்கு தாரை வார்ப்பீர்களா. நாவாய் ஏற்றி பொதுமகளாய் இரு என்று சொல்வீர்களா. அவ்வளவு இழிவு என் வேலையை நீங்கள் அவமதிப்பது.

என்னுடைய குழந்தைய்யா இது. என்னுடைய மகள் இந்த கோவில். என்னுடைய மகன் இந்த அரண்மனை. இங்குள் அத்தனை வீடுகளும் என் குழந்தைகள். இவைகளை எங்கே வைப்பது. என்னவென்று வைப்பது. இவைகளுக்கு பூஜை செய்து, இவைகள் வரமும் அளித்துவிட்டால். அப்போது என் கோவிலும், என்னுடைய பெருவுடையாரும், என்னுடைய சேயோன் சிலையும் என்ன ஆகும். என்ன மதிப்பு இருக்கும்.''

''இவை அழகாக இருப்பதால் அஞ்சுகிறாயா.''

''அழகோ, அழகில்லையோ. இவை என்னுடைய இடத்தில் வரக்கூடாது.''

''இது இராஜேந்திரர் இடம்.''

''இல்லை. இராஜேந்திரர் இந்த கோவிலை, கோட்டையை நிர்மாணிக்கவில்லை. சோழ தேசத்து பரம்பரை சிற்பிகளின் பலம் கொண்டு இதை இரவி நிர்மாணித்திருக்கிறான். இந்த பெருந்தச்சர் நிர்வகித்திருக்கிறான். இவைகளை உள்ளே விட மாட்டேன். இவைகள் கோட்டை வாயிலிலேயே கிடக்கட்டும். நிற்க வைக்கக்கூடாது. நின்றால் பூ போட்டு விடுவீர்கள். பூஜை செய்து விடுவீர்கள். சகலத்தையும் படுக்க போடுங்கள்.''

காளி கோவில் சிலைகள் வானம் பார்த்துக் கிடந்தன. ஜனங்கள் வருத்தப்பட்டார்கள். இது தெய்வ குற்றம் ஆகிவிடுமோ என்று முணுமுணுத்தார்கள்.

''என்ன ஆகும் தெய்வ குற்றம். இவைகள் தெய்வங்களா. எத்தனை பேர் தோள் பிடித்து இறக்கினீர்கள். என்ன பூஜை நடந்தது. எந்த அந்தணர் ஸ்தாபித்தார். என்ன மந்திரம் இதற்கு. இவை வெறும் சிலைகள். கருங்கல் சிலைகள். என்னை பொறுத்த வரையில் வெறும் கருங்கற்கள்.''

''உடைத்து விடுவாயா இரவி.'' ஒரு அந்தணர் கேட்டார்.

''அந்த பாபத்தை செய்ய மாட்டேன். வேறொரு சிற்பி உயிரை கொடுத்து செய்த இந்த சிலையை நான் ஏன் உடைக்க வேண்டும். என் சிலையை யாராவது உடைத்தால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியுமா. இது அற்புதமான சிலைகள். அழகான வடிவமைப்பு. இவைகளை உடைக்க மாட்டேன். உள்ளேயும் விடமாட்டேன்.''

''சரி. இவைகளை என் கிராமத்திற்கு எடுத்துப் போகிறேன்.'' கிராமத்து தலைவர் முன்வந்தார். பலபேர் எழுந்து நின்றார்கள்.

பெருந்தச்சன் இரவி கை உயர்த்தினான்.

''தாராளமாக எடுத்துப் போங்கள். ஆனால் நிர்மாணிக்க சோழ தேச சிற்பி எவனும் வர மாட்டான். எந்த சிற்பியும் வரக் கூடாது என்று நான் கட்டளை இடுகிறேன். அப்படி மீறி அவன்

போனால் என் பிணத்தை தாண்டி அவன் போனது போல. சோழ தேசத்து சிற்பியான, பெரிய கோவிலை கட்டிய குஞ்சரமல் லரை எட்டி உதைத்து போனது போல. எந்த சிற்பியும் கோவில் கட்ட வரமாட்டான். நீங்கள் எடுத்துக் கொண்டு போங்கள்.''

ஜனங்கள் திகைத்தார்கள்.

'சரி. இது அரச காரியம். நாம் தலையிட்டு முடிக்க முடியாது. இராஜேந்திரர் வந்து ஏதேனும் வழி சொல்லுவார். அதுவரை இருக்கட்டும்' என்றார். அவரவர் கிராமங்களுக்கு திரும்பினார் கள்.

இரவு இரவி குதிரை ஏறி கோட்டை வாசலுக்கு வந்தான். கோட்டை கதவு திறக்கப்பட்டதும் நகர்ந்து கீழ் இறங்கினான். அந்த சிலைகளுக்கு அருகே போனான். உற்றுப் பார்த்தான். தடவினான். மேலே அஷ்டமத்து சந்திரன் பிரகாசித்துக் கொண் டிருந்தது. வானம் பார்த்தான். கீழே சிலைகளை பார்த்தான். ஒரு சிலையின் வயிற்றில் ஏறி நின்றான்.

''இங்கு ஏன் வந்தாய். இங்கு ஏன் வந்தாய். உன்னை யார் கூப்பிட்டார்கள். வெட்கமாக இல்லை இங்கு நீ வருவதற்கு. போ போ வெளியே'' என்று உரக்க கத்தினான்.

அந்த சிலையிலிருந்து ஏதோ ஒரு விஷயம் வெளியே நகர்ந்தது. பெருந்தச்சன் இரவி சறுக்கி விழுந்தான். முதுகில் அடிபட்டது. எழுந்து நின்றான். உதறிக் கொண்டான். குதிரையில் ஏறினான். ஏனோ ஒரு தளர்ச்சி அவனை பற்றிக் கொண்டது.

மறுநாள் கிராமத்து மக்களும், ஜெயங்கொண்டத்து மக்களும் ஒன்றுகூடி ஒரு அரண்மனை வாசலில் அவைகள் இருப்பது வேதனைக்குரியது என்று கூறி, தெற்கு பக்கம் சில கிராமங்கள் தாண்டி, ஒரு கிராமத்தின் நடுவில் அந்த சிலைகளை வரிசை யாக நிற்க வைத்தார்கள். அந்த கிராமத்து பெண்கள் அந்த சிலை களை கழுவி குங்குமம் இட்டார்கள். எலுமிச்சை பழம் மாலை சாத்தினார்கள். கிடா வெட்டி பலி கொடுத்தார்கள். பழங்களும், வெற்றிலை பாக்கும் வைத்து உபசரித்தார்கள்.

கோவில் இல்லாத, வெறும் நிலப்பரப்பில் புளிய மரத்தடி யில் அந்த சிலைகள் அமைதியாய் வீற்றிருந்தன. ஒரு யுத்தத்

தால் நல்லதும் நடக்கும். கெட்டதும் நடக்கும். இது என்ன விஷயம். நல்லதா, கெட்டதா. அந்த சோழ மக்களுக்கு புரிய வில்லை. ஆனால் அந்த சிலைகளை பார்க்கும் போதெல்லாம் ஒரு சோக உணர்வும், ஒரு பெரிய வேதனையும் வயிற்றில் புரண்டதை அவர்களால் தவிர்க்க முடியவில்லை.

சுற்றியுள்ள கிராமத்து மக்களால் இரவி புறக்கணிக்கப்பட் டான். ஜெயங்கொண்டத்து மக்கள் சிலர் வெளியேறி அந்த கிராமங்களில் குடியேறினார்கள்.

''இராஜேந்திர சோழரை விட பெரியவனா இர்வி. பெருந் தச்சன் என்றால் அரசன் என்று பொருளா. இவன் அதட்டலை கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா. உபதளபதிகளும், சேனாதிபதிகளும், கிராமத் தலைமையிடம் மரியாதையாக பேசுகிறார்கள். இவன் என்ன இப்படி எகிறி பேசுகிறான். ஏறி நின்றானாமே. எட்டி உதைத்தானாமே. ஆத்திரக்காரன். அறிவில் லாதவன். அவனால் ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு கேடு தான் வரும். அவனுக்கு பைத்தியம் பிடிக்கப் போகிறது, பாருங் கள்.'' ஒரு கிழவன் உரக்க கத்தினார். அது சன்னதம் போல இருந்தது.

உள்ளே பெருந்தச்சன் இரவி, மூன்று நாள் உணவில் லாமல் இருந்தான். நோன்பு நோற்றான். சாக்த உபாஸனை களுக்கு உண்டான மந்திரங்களை ஜபித்தான். அந்தணர்களை ஹோமம் செய்யச் சொல்லி வலம் வந்தான். தட்சிணை கொடுத் தான்.

''என்ன பயம் உனக்கு. ஏன் பேச மாட்டேன் என்கிறாய்'' என்று ஒருவர் கேட்டார். சர்வசிவ பண்டிதரின் உதவியாளராக இருந்தார். ''நான் போய் குருவிடம் விசாரித்துவிட்டு வரட் டுமா.'' அவன் 'சரி' என்று சொல்லி குதிரை கொடுத்தான்.

அவர் எசாளம் நோக்கி போனார். எசாளத்தின் அரண்மனை கள் தாண்டி, வேத பாடசாலைகள் தாண்டி குருவை சந்தித்து மொத்த விவரமும் கூறினார்.

''அடேயப்பா. பெரும் வெற்றிகளல்லவா கிடைத்திருக் கிறது, சோழ தேசத்திற்கு. ஆனால் இந்த சிலைகளை ஏன் எடுத்து வர வேண்டும். ஒரு ஊரின் மாளிகைகளை இடிக்க

லாம். கோவிலை ஏன் இடிக்க வேண்டும். தவறல்லவா. இரவி சொல்வது நியாயம்தானே. அவனுடைய இடத்தில் அது எப்படி இருக்கலாம். அதே சமயம் இவன் ஏறி நின்றது ஆத்திரம். பொய். பிசகு. அவன் அந்த தேவியின் சக்தியை விரட்டி விட்டான். இது மிகப்பெரிய பாவம். அவனால் உளி எடுத்து அடிக்க முடியாமல் போய்விடும்.''

''என்ன பரிகாரம்'' என்று கேட்டான்.

''ஒரே ஒரு பரிகாரம். தெய்வ நிந்தனைக்கு, தெய்வத்தை அவமதித்தவன் செய்ய வேண்டிய ஒரே ஒரு விஷயம், தண்ணீர் கொடுத்தல். நீர் வார்த்தல். நீர் வார்க்க வார்க்க அந்த தெய்வத்தினுடைய கோபம் தணியும். அவன் நீர் வார்க்க தண்ணீர் பந்தல் அமைத்தால் போதாது. மிகப் பெரிய தேவியை இவன் அவமதித்து விட்டான். அதனால் ஜெயங்கொண்டத்திற்கு அருகே, மிகப்பெரிய நிலப்பரப்பு, புல்வெளி இருக்கிறது. கொள்ளிடம் ஆறு அந்த பக்கம் கிளை நதிகளாக போகிறது. அந்த கிளை நதியிலிருந்து நீர் எடுத்து வந்து பெரிய ஏரியை அங்கு அமைக்கச் சொல். அந்த ஏரி அங்கு அமையட்டும். அது பொன்னேரி என்று வழங்கட்டும்.'' அவர் உத்தரவிட்டார்.

''இது இராஜேந்திரரின் உத்தரவாகச் சொல்லவா.''

''இல்லை. என் உத்தரவாக சொல். இராஜேந்திரர் இதை ஆமோதிப்பார். இது தவிர, வடக்கே இவ்வளவு பெரிய ஏரி இருப்பது நல்லது. வடமேற்கே இருந்து தான் மேலை சாளுக்கிய தாக்குதல் இருக்கும். ஏரி பெரிய பாதுகாப்பாக ஆகும். அது மட்டுமல்ல பல நன்செய் நிலங்கள் ஏற்படும்.

கிழக்கே இருந்து உடையார்குடியிலிருந்து நமக்கு வரவு இருக்கிறது. அந்த நெல் வரவு போதாது. இது பலப்படும். பல வீரர்கள் வந்து தங்குவார்கள். கோட்டையை சுற்றி கிராமங்கள் வரும். அவைகளுக்கு உணவு கொடுக்க இந்த ஏரி உதவும். எனவே, ஏரியை வெட்ட சொல். இராஜேந்திரரின் சார்பாக இந்த சர்வசிவ பண்டிதன் உத்தரவு இடுகிறேன் என்று இரவிக்குச் சொல். இது உடனடியாக நடத்தப்பட வேண்டும். அடுத்த முகூர்த்த நாளே வேலை தொடங்க வேண்டும் என்று

சொல். எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்க வேண்டும் என்று சொல்.

இராஜேந்திரன் வேங்கியில் ஊன்றியிருக்கிறான். அது மிகச் சிறப்பான விஷயம். அரையன் ராஜராஜன் தலைமையில் சோழப்படைகள் வங்கம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. அருண்மொழிபட்டன் கடல் மார்க்கமாக போயிருப்பதை கேள்விப்படுகிறேன். செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. தஞ்சையில் இருப்பவர்களுக்கும் நான் செய்திகள் அனுப்பிக் கொண்டிருக்கிறேன். தஞ்சையிலிருந்து பாண்டிய தேசத்திற்கும் இந்த செய்திகள் போகக்கூடும்.

தெற்கே பாண்டியர்கள் அலட்டிக் கொள்வதற்கு வசதிகள் இருக்கின்றன. யாருமே இல்லாத தேசத்தில் கலவரம் செய்யலாம் என்று அவர்கள் எண்ணக்கூடும். ஆனால் பாண்டிய தேசத்தை தலைமை தாங்கிய சுந்தர சோழன் பார்த்துக் கொள்வான். பாண்டிய தேசத்தை கைப்பற்றி சோழ தேசத்திற்கு கொண்டு வந்த பாண்டிய வீரர்களையெல்லாம் ஜெயங்கொண்டத்திற்கு அனுப்பச் சொல். அங்கிருந்து படையெடுத்து வந்து இங்குள்ள பாண்டிய வீரர்களுடன் கலந்து கொண்டு அவர்களின் மூலம் சோழ தேசத்தை ஜெயிக்கலாம் என்று சில பாண்டிய மன்னர்கள் திட்டமிடுகிறார்கள். சுந்தர பாண்டியன் சோழ தேசத்தில்தான் நடமாடிக் கொண்டிருக்கிறான். இராஜேந்திரனின் மகன் சுந்தர சோழன் சகலமும் பார்த்துக் கொள்வான்.

சோழ தேசத்தில் ஒரு பாண்டிய வீரனும் இருக்கக்கூடாது. ஒருவேளை கலவரம் ஏற்பட்டால் அவர்கள் உதவக்கூடாது. ஏரி வெட்ட வேண்டும் என்று எல்லா பாண்டிய வீரர்களையும் சோழ தேசத்திலிருந்து வரவழைக்கச் சொல். கிருஷ்ணன் ராமன் பிரம்மராயர் அங்கு இருக்கிறார். அவருக்கு இந்த விஷயத்தை தெரிவித்து விடு. நமது மாணாக்கனை அனுப்பு.

கோட்டை வேலைகளையெல்லாம் முடித்துவிட்டான். கோவில் கட்டுவதை முடித்துவிட்டான். கருவறையில் உடையார் லிங்கமும் ஸ்தாபித்து விட்டான். வெகு அற்புதமாக உடையாரும், பாணமும் சேர்ந்திருக்கின்றன. பெருவுடையார் கோவிலில் பட்ட துன்பங்களெல்லாம் இங்கு இல்லை. இந்த

அனுபவத்தையெல்லாம் வைத்துக் கொண்டு மிகச் சிறப்பான முறையில் இரவி செயலாற்றியிருக்கிறான்.

என்ன இருந்தாலும் பெருவுடையார் கோவிலின் கம்பீரம் இதில் ஒரு மாற்று குறைவு. பெருவுடையார் கோவில் தஞ்சையில் இருப்பது ஆண் என்றால், அதே மாதிரியான ஜெயங்கொண்டத்தில் இருக்கின்ற இந்த கோவில் பெண். நளினமாக இருக்கிறது. ஆனால் கம்பீரமாக இல்லை. இது அலட்டலால் வந்தது. உயரம் கூடாது என்று அவன் நினைத்திருக்கவும் கூடும். நகரை ஸ்தாபிக்கின்ற ஒரு பெரும் பணியும் அவனை சார்ந்துவிட்டது. அரசனுக்கு ஏற்றபடி கோட்டையையும் அவன் நிர்மாணிக்க வேண்டும். மிகச் சிறந்த வேலைகளை ஒரே ஆளாய் நின்று செய்த கர்வம் அவனை வாசலில் சிலையை போட்டு ஏறி நிற்கத் தோன்றியிருக்கிறது. கடவுள் நின்ற சிலை அல்லவா. இராஜேந்திரன் உட்கார்ந்த சிம்மாசனத்தில் இராஜேந்திரன் இல்லை என்றால் இவன் ஏறி நின்றுவிடுவானா. என்ன மடையன் இவன், நிர்மூடன். அதில் இப்பொழுது கடவுள் இல்லை என்கிறான். வெறும் சிலை என்கிறான். அறிவிலி. அவனுக்கு ஏதோ கேடு வந்திருக்கிறது. தெய்வ சாபம் மிகப் பொல்லாதது. ஏரி வெட்டுவது அவன் குறையை தீர்க்கும். நமக்கும் அது உபயோகமாகும்.

இவ்வளவு பெரிய கோட்டை, கொத்தளம் அமைத்துவிட்டு வறட்சிக் காலத்தில் ஜனங்கள் வேதனைப்படலாகாது. இந்த ஏரி மிக நிச்சயமான விஷயம். பெரும் மழை பெய்தால் மிக அழகாக நீரை தேக்கி வைத்துக் கொள்ளலாம்.

சரி. அந்த சிலைகளை மக்கள் எங்கே வைத்திக்கிறார்கள்.''

''செங்கல்மேடு என்ற கிராமத்தில் அந்த சிலைகள் வரிசையாக நிற்க வைக்கப்பட்டுள்ளது.''

''அப்படியே இருக்கட்டும். இராஜேந்திரன் முடிவு செய்யட்டும். நாம் முடிவு சொன்னால் சரியாக இருக்காது. தன்னுடைய சிற்பிகளை உதவி செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டான். சிற்பிகள் இல்லையென்றால் அங்கு கோவில் கட்ட முடியாதா. ஜனங்கள் கட்ட மாட்டார்களா.

ஆனால் அவனோடு சண்டைக்கு போக வேண்டாம். ஏரி வெட்டுவது முக்கியம். எனவே, அந்த சிலைகள் அங்கேயே இருக்கட்டும். அந்த கிராம மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

இப்படியெல்லாம் நடந்தது என்று இராஜேந்திரருக்கு தெரியாமல் இருப்பது நல்லது. ஆனால் இராஜேந்திரர் ஆட்கள் வைத்திருப்பார். நிச்சயம் தெரிவிப்பார்கள்.

என்ன செய்வது.

சோழ தேசத்தில் ஏதாவது பிரச்சனைகள் முளைத்துக் கொண்டே இருக்கின்றன. இராஜேந்திர சோழன் ஜாதகம் அப்படி. மரண பரியந்தமும் நிம்மதியாக தூங்க முடியாத ஜாதகம். ஜெயித்துவிட்டோம் என்று அமைதியாக உட்கார முடியாத ஜாதகம். அந்த ஜாதகம் சோழ தேசத்து ஜாதகம். அதனால் சோழ மக்களும் படுவார்கள். வடக்கே ஜெயித்தோம், கிழக்கே ஜெயித்தோம் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் பெரிதாக உதவப் போவதில்லை. ஏகப்பட்ட பொற்காசுகள் உள்ளே நுழைந்து, ஒரு பொற்காசுக்கு ஒரு கூடை நெல் கிடைத்த இடத்தில் மூன்று பொற்காசுக்கு ஒரு கூடை நெல் கிடைக்கப் போகிறது. பாத்திரங்களாக வந்து கொண்டு இருக்கும். துணிகள் கூட வரலாம். இப்படி மரச் சிற்பங்களும், கல் சிற்பங்களும் வரலாம். இவையெல்லாம் உணவுக்கு ஆகுமா. ஒரு கூடை நெல் மூன்று பொன் என்றால் ஜனங்கள் என்ன செய்யும். என்னடா ஆட்சி என்று கேவலமாகப் பார்க்கும்.

பார்ப்போம். வேறு ஏதேனும் கிருஷ்ணன் ராமனிடம் பேசி இந்த பொருளாதாரத்தை சரி செய்ய வேண்டும். தெற்கிலிருந்து போர் வந்தால் சோழ தேசம் திணறும்.''

''என்ன செய்வது.''

''காலம்தான் நம்மை சரியான திசையில் அழைத்துப் போக வேண்டும். இறைவன் கருணையால்தான் இந்த சோதனையிலிருந்து மீள முடியும். ஆனால் இப்படி சோதனைகளெல்லாம் இருக்கிறது என்று ஜனங்களுக்கு தெரியவே இல்லை. ஆட்டமும், பாட்டமுமாக இருக்கிறார்கள்.

இரவியை அதிகம் புகழ்ந்து அவனை முட்டாளாக்கி விட்டார்கள். ஜனங்கள் பாராட்டுக்கு காது கொடுக்காமல் இருப்பது

நல்லது. அது கிருஷ்ணன் ராமனுக்கு மட்டும்தான் தெரிந்திருக்கிறது. 'வாழ்க வாழ்க' என்று கோஷமிட்டால் நான் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் போய் வாழுங்கள் என்று நிர்தாட்சண்யமாக திருப்பி அனுப்பிவிடுகிறார். முகமுடைந்து ஜனங்கள் திரும்புவார்கள். ஆனால் அது நல்லது.

சுந்தர பாண்டியன் படையெடுப்புக்கு அலைகிறான், கலவரத்திற்கு அலைகிறான் என்று ஏற்கனவே அவருக்கு விஷயம் அனுப்பி விட்டேன். அவர் ஏதேனும் செய்திருப்பார்.''

சர்வசிவப் பண்டிதரால் அங்கே பல விஷயங்கள் நடந்தன.

ஜெய மகேந்திரபுரம் குன்றில் இருநூற்றி ஐம்பது வீரர்கள் அமர்ந்திருந்தார்கள். சோழ தேசம் சைவ சமயமாகி விட்டதால் வைஷ்ணவ கோயிலுக்கு அதிகம் ஆட்கள் வருவதில்லை. வந்தாலும் கீழே இருக்கும் பெருமாளை பார்த்துவிட்டு போங்கள். மேலே துர்தேவதைகள் இருக்கிறது என்று பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள்.

''ஜனங்களே வராது போய்விட்டால் என்ன செய்வது.''

''கவலைப்படாதே. நம்முடைய கைக்குள் இருப்பவர்கள் தானே மக்கள். வெறும் குழந்தைகள்தானே. எருமைக்கடா பலி கொடுத்தோம். எல்லா பேய்களும் ஓடிவிட்டன என்று சொல்ல வேண்டியதுதான். உள்ளே ஜனங்கள் அப்படியா என்று ஓடி வருவார்கள். ஆமாம் பேயே இல்லை என்பார்கள். பேய் இருக்கிறது, இல்லை என்பதெல்லாம் நாம் செய்யும் வித்தை. எனவே, வராஹ பெருமாளுக்கு சோறு போட்டுவிட்டு எங்களுக்கும் சரியான வெஞ்சினத்தோடு சோறு கொண்டு வாருங்கள்.'' சுந்தர பாண்டியன் பட்டர்களை ஏவினான். பட்டர்கள் நடுங்கிக் கொண்டே அவன் உத்தரவிற்குப் பணிந்தார்கள்.

''மாட்டேன் என்று சொன்னாலும் ஆபத்து. செய்தேன் என்று தெரிந்தாலும் ஆபத்து. பெருமாளே நீயே கதி'' என்று ஏங்கினார்கள்.

தஞ்சையிலிருந்து மூன்று பெண்களோடு ஒரு கூத்து குழு திருமகேந்திரபுரம் நோக்கி போயிற்று. கூத்தாடிகளெல்லாம் போர்வீரர்களாக இருந்தார்கள். ஆனால் கையில் உடுக்கையோடு

அதை ஒலித்துக் கொண்டே பாடல்கள் பாடிக்கொண்டே திருமகேந்திரபுரம் பெருமாள் கோவிலுக்கு வந்து வணங்கினார்கள். மடப்பள்ளியில் பட்டர்களை மடக்கி புலி இலச்சினை காட்டினார்கள். உண்மை என்ன என்று கேட்டார்கள். பட்டர்கள் சோழ வீரர்களுக்கு விஷயம் சொன்னார்கள்.

உடுக்கை ஒலியும், கிங்கிணி தாளமும், பெரிய ஊது கோலுமாக பெருமாள் கோவில் வாசலில் கூத்து நடந்தது. வழக்கம் போல ஜனங்களுக்கு விருப்பமான கீசக வதத்தையே அவர்கள் துவங்கினார்கள்.

கீசக வதம் ஒரு கவர்ச்சியான நாடகம். கீசகன் பேசுகின்ற காம வசனங்களுக்கு பெரிய கைதட்டல்கள் கிடைக்கும். திரௌபதி மாட்டேன் மாட்டேன் என்று சொல்வதும், இங்கும் அங்கும் ஓடுவதும் கீசகன் அவளை தாவி பிடிப்பதும், நடுவே கீசகனுடைய சகோதரி வந்து, போடி, போய் படுடி என்று ஆணையிடுவதும் பெரும் கிளர்ச்சியாக இருக்கும். பால் சொம் போடு கீசகன் அறைக்குள் திரௌபதி நுழைவதும், கீசகனின் காமப் பாட்டும் உடம்பை சூடேற்றும். திரௌபதி விழுந்து வணங்கி, ''உங்களுக்கு ஒரு விண்ணப்பம்'' என்று சொன்னாள்.

''சொல்லு கண்ணே சொல். எது வேண்டுமானாலும் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்று சொன்னான்.

''எனக்கு திருமணமாகிவிட்டது.''

''அதனால் என்ன. திருமணமாகாத பெண்தான் வேண்டுமென்று நான் சொல்லவில்லையே. உன் அழகு திருமணமான பிறகும் ஜொலிக்கிறதே.''

''இல்லை. எனக்கு ஐந்து முறை திருமணம் ஆகிவிட்டது.''

''அப்படியா. அதனால் என்ன எனக்கு. நீ அழகாக இருக்கிறாய். உனக்கு அப்பொழுது வேலை தெரியும் என்று சொல்.'' கூட்டம் குதூகலிக்கும்.

''அவர்கள் மனிதர்கள் அல்ல.''

''யார்.''

''கந்தர்வர்கள்.''

''அதனால் என்ன.''

''என்னை நீ தொட்டால் அந்த கந்தர்வர்கள் உன்னை அடித்துக் கொன்றுவிடுவார்கள். சிறிது நேரம் அவகாசம் கொடு. என் புருஷனிடம் நான் போய் இனி நான் உங்களுக்கு பயன் பட மாட்டேன் என்று சொல்லிவிட்டு உங்களை வந்து சரணடைந்து விடுகிறேன்.''

''அப்படியே செய்.'' இரவு போயிற்று. கீசகன் பொறுமை இழந்து கத்தினான். காமவெறி பிடித்தவன் போல் நடந்து கொண்டான். ஜனங்கள் பல் தெரிய பார்த்தார்கள். திடீரென்று திரௌபதி உள்ளே நுழைந்தாள். கொஞ்சம் பருமனாக இருந் தாள்.

''அடியே, வா வா. என் பேச்சை கேட்டதும் பூரித்துவிட் டாயா. என்ன இருளில் நிற்கிறாய். வா வா'' என்றான். அந்த நாடகத்தின் இறுதி காட்சி சண்டைக் காட்சியாக இருந்தது. சரசம், சல்லாபம், காமப் பேச்சு, காதல் பேச்சு, சண்டை என்று எல்லாவித பொழுதுபோக்கு விஷயங்களும் கீசகன் நாடகத்தில் இருந்தன. அதனால் ஜனங்கள் மெய்மறந்து பார்த்தார்கள்.

பாண்டிய வீரர்கள் கீழே வந்து தொலைதூரத்தில் உட் கார்ந்து கொண்டார்கள். இன்னும் நெருங்கி வந்தார்கள். கிட்டத் தட்ட எல்லா பாண்டிய வீரர்களும் கீழே வர, சுந்தர பாண்டியன் மூன்று வீரர்களோடு வானம் வெறித்து பார்த்துக் கொண்டிருந் தான். மேலே சோழப் படைவீரர்கள் ஏறினார்கள்.

சலசலப்பு கேட்டு சுந்தர பாண்டியன் திரும்பினான். எட்டி நாலாபுறமும் பார்த்தான். தன்னுடைய அத்தனை வீரர்களும் கீழே இருப்பதை பார்த்து வெகுண்டான்.

''என்ன முட்டாள்கள் இவர்கள். இங்கு இருப்பதை விட்டு எதற்கு ஜனங்களோடு போகிறார்கள். தீப்பந்த ஒளியினால் இவர்கள் முகம் தெரிந்துவிடாதா. இவர்கள் அடையாளம் தெரிந்துவிடாதா. வரச் சொல் எல்லோரையும்'' என்று சொன் னான்.

''அப்படியே ஆகட்டும் எஜமான்'' என்று குரல் கேட்டது. அது கேட்ட குரலாக இல்லை. உள்ளே நாற்பது வீரர்கள் நுழைந்தார்கள். சுந்தர பாண்டியன் திடுக்கிட்டான். வேகமாக வாள் வீசினான். தடதடவென்று படியிறங்கினான். பாண்டிய வீரர்கள் பயந்தார்கள். நேரே கீசக வதம் நடக்கின்ற இடம் நோக்கி போனான். பந்தங்களை வெட்டி வீழ்த்தினான். தரையில் போட்டு அடித்தான். ஓடிப்போய் கோவிலுக்குள் நுழைந்து பின்பக்கமாக நழுவி அங்கு நிறுத்தி வைத்திருந்த் குதிரைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு வேகமாக தெற்கு நோக்கி பறந்தான். கடற்கரை ஓரமாகவே தன் பயணத்தைத் தொடர்ந்தான். சிறிது நேரம் கழித்து நாற்பத்தைந்து வீரர்கள் அவன் பின்னே வந்தார்கள். பல வீரர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கலவரம் செய்யலாமா என்ற எண்ணம் உடைந்து போயிற்று. கடற்கரை ஓரமாகவே அந்த பாண்டிய மன்னன் தொண்டித் துறைமுகத்தை அடைந்தான். அங்கு மீன் கொடி வேறு ஒரு நிறத்தில் இருந்தது. நீல நிற மீன் கொடிகள் அவன் கண்ணை கவர்ந்தன. களைப்புற்று அவன் ஒரு சத்திரத்தில் தங்கினான். அவனை அந்த தேசத்து பாண்டிய வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஆறுதல் சொன்னார்கள்.

திரு மகேந்திரபுரத்தில் கிடைத்த பாண்டிய வீரர்களை அடித்து சித்ரவதை செய்து பேச வைத்தபோது ஐந்து பாண்டிய மன்னர்கள் ஒன்று சேர்ந்து மிகப் பெரிய படையெடுப்பை தை மாத பிறப்பின் போது மகர சங்கராந்திக்கு பிறகு நடத்துவார்கள் என்று தெரிந்தது. கிருஷ்ணன் ராமன் பாண்டியர்கள் பக்கம் கவனம் செலுத்த வேண்டியதை இராஜேந்திர சோழனின் மகனான சுந்தர சோழ பாண்டியனுக்கு சொல்லி அனுப்பினார். வடக்கே இராஜேந்திரருக்கும் செய்தி அனுப்பினார்.

வீரமாதேவி கடல் கடந்து போயிருப்பது அவருக்கு தெரிவிக்கப்பட்டது. இரவியின் சீற்றம் சொல்லப்பட்டது. சதாசிவ பண்டிதர் அவனை ஏரி வெட்டச் சொன்னதை கேட்டு அவர் சிரித்தார்.

''ஒன்று பயப்படக் கூடாது. அல்லது பயப்படும்படியான காரியம் செய்யக்கூடாது. இரவி ஒரு முட்டாள். கோழை. நல்ல

சிலைகளை பார்த்து பயந்துவிட்டான். சிலைகளை அவமானப் படுத்தியிருக்கக் கூடாது. மக்களின் வெறுப்பை எந்த கலை ஞனும் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது.''

பாண்டிய தேசத்தை காக்கும்படி சேர தேசத்து அரசனுக்கு சோழ கேரளனின் நண்பனுக்கு தகவல் அனுப்பினார். சேர தேசத்தை காப்பது மட்டுமல்லாமல் பாண்டியர்களது கலகத் திற்கு எதிராக இருக்கும்படி அன்போடு வேண்டிக்கொண்டார். அதற்கு ஆதரவாக பதில் ஓலை கிடைத்தது.

சோழ தேசத்திலுள்ள எல்லா பாண்டிய வீரர்களையும் பொறுக்கி எடுத்து ஒருவர் கூட இருக்கக்கூடாது என்று சொல்லி அவர்களை ஜெயங்கொண்டம் நோக்கி அனுப்பினார். ஜெயங் கொண்டத்தில் மிகப் பெரியதாய் ஏரி வெட்டும் வேலை தொடங்கியது. தஞ்சையிலிருந்து அவர்களுக்கு வண்டி வண்டி யாய் நெல் போயிற்று. உடையார்குடியிலிருந்து காய்கறிகள் வந்தன. ஆடுகள் வந்தன. வடக்கே நடுநாட்டிலிருந்தும் ஜெயங்கொண்டத்திற்கு வண்டிகள் வந்தன. எல்லா பாதை களும் சீரமைக்கப்பட்டன. ஒருவேளை இராஜேந்திரர் பெரும் படையோடு திரும்பும்போது பாதைகளில் எந்த தடங்கலும் இருக்கக்கூடாது என்பதில் எல்லா அதிகாரிகளும் தெளிவாக இருந்தார்கள்.

படைகள் நகருவதற்கு மஹிபாலன் உத்தரவு கொடுத் தான். ஆனால் அடிமனதில் இது சரியில்லையோ என்ற எண்ண மும் அவனுக்கு திரும்பத் திரும்ப வந்தது. கங்கே யாதவ் ஒரு ஆனந்த கூச்சலோடு மஹிபாலனைத் தழுவிக் கொண்டான். மஹிபாலன் அவனை சற்று பலவந்தமாக விடுவித்தான். விலகிப் போனான்.

தண்டபுத்தியில் இருக்கின்ற தர்மபாலனும், தட்சிணலாடத் தில் இருக்கும் ரணசூரனும், கோவிந்த சந்திரனும் இந்த படை யெடுப்புக்கு உதவி செய்வது மட்டுமல்லாமல், இதற்காக குதிரைகளும், யானைகளும், பொற்கழஞ்சுகளும் மஹிபால னுக்கு தர வேண்டும் என்று ஒப்பந்தமாயிற்று. பொற்கழஞ் சுகள் உடனடியாக வந்து சேர்ந்தன. குதிரைகள் படையெடுப் பில் கலந்து கொண்ட பிறகு அவைகள் உத்திரலாடத்திற்கு அனுப்பும்படியாக ஒப்பந்தம் ஆகியிருந்தது.

உத்திரலாடத்து போர் வீரர்கள் மிகப் பெரிய கூச்சலோடு தட்சிணலாடம் நோக்கி போவதற்கு உற்சாகமானார்கள். உத்திர லாடத்து வடக்கு பகுதியான பிரம்மபுத்ரா நதிக் கரையி லிருந்தும் அதிகம் வீரர்கள் வந்தார்கள். ஒரு லட்சம் வீரர்கள் திரட்டுவது என்றும் பத்தாயிரம் வரை உத்திரலாடத்தில் காவல் வைப்பது என்றும் தீர்மானமாயிற்று. கிழவர்களையும் சிறுவர் களையும் காவல் பணியை கவனிக்குமாறு மஹிபாலன் கட்டளை யிட்டான். பெண்களும் குதிரை ஏறி நகர்வலம் வர வேண்டும் என்று உத்தரவிட்டான்.

பிரம்மபுத்திரா நதிக் கரையில் சிறு குன்றில் காமாக்யா என்ற கோவில் அமைந்திருந்தது. பார்வதி தேவி அங்கு யோனி வடிவில் வணங்கப்படுகிறாள். அங்கே ஒரு சிறு துவாரத்தில் நீர் சுரந்து கொண்டே இருக்கிறது. குறிப்பிட்ட நாட்களில் அந்த நீர் சிகப்பாய் வரும். மாதவிலக்கான ஒரு பெண்ணை அது நினைவுபடுத்தும் என்று சொல்வார்கள். அது அந்தணர் களுடைய தந்திரம் என்று மஹிபாலன் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அந்த மலைக்குன்றும், அந்த துவாரமும் மிகப் பெரிய சக்தியை கொண்டிருந்தது. மஹிபாலன் அங்கு போய் இரண்டு எருமைகள் பலி கொடுத் தான். 'உன்னை மறுபடியும் வெற்றியோடு பார்க்க வேண்டும் தாயே' என்று வேண்டிக் கொண்டான்.

குதிரை ஏறி கடற்கரை ஓரமாக உத்திரலாடதேசம் வந்தடைந் தான். அங்குள்ள ஒரு லட்சம் படைவீரர்களையும் தட்சிண லாடத்திற்குள் நுழையச் சொன்னான். தட்சிணலாடம் அவர் களை வரவேற்றது. அங்கே அரையன் ராஜராஜன் பெரும்படை யோடு தண்டபுத்திக்குள் நுழைந்துவிட்டான் என்ற செய்தி வந்தது. படைவீரர்கள் வெறியானார்கள். அளவுக்கு மீறி அட்ட காசம் செய்தார்கள். அதிகம் குடித்தார்கள். போர் முழக்கங்களை ஏற்படுத்தினார்கள். பறைகளும், கொம்புகளும் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தன. இரவு நேரம் தூங்கும் பொழுதும் அவ்வப்போது கொம்பூதப்பட்டன. அதிகம் உறங்கக்கூடாது என்பதே ஊர்மக்களின், படைவீரர்களின் எண்ணமாக இருந் தது. விடியலில் அவர்கள் தண்டபுத்தி நோக்கி கிளம்புவதற்கு வரிசையானார்கள்.

இரண்டு நாள் பயணத்தில் உத்திரலாடத்தை விட்டு தட்சிணலாடத்திற்கு வந்தாகிவிட்டது. உண்மையில் இந்த தட்சிணலாடம் மஹிபாலன் சொத்து. பல தலைமுறைக்கு முன் னால் தாயாதிகள் சண்டையால் இவை இரண்டாக பிரிக்கப் பட்டன. பிரித்தவர்கள் தனக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டு கோசல தேசம் என்றும் ஏற்படுத்திக் கொண்டார்கள். உத்திர லாடம், கோசல தேசம், தட்சிணலாடம் எல்லாம் ஒரு குடைக் குள் வர வேண்டியவை. எதற்கும் உபயோகமில்லாத இந்த தர்மபாலனும் மஹிபாலனுடைய தாயாதி வகையை சார்ந்தவன் தான். அவன் தட்சிணலாடத்தையும், தண்டபுத்தியையும் பிரித்துக் கொள்ள அங்குதான் சண்டை ஆரம்பித்தது. அவ னுடைய தலைமுறைதான் முதலில் இந்த பிரிவினையை துவங்கியது. உத்திரலாடத்தில் உள்ளவர்களுக்கு நாகரீகம் போதவில்லை. குடிகாரர்களாக இருக்கிறார்கள். தண்டபுத்தி சிறப்பான தேசம். கலைஞர்களுடைய ராஜ்ஜியம். அறிவாளி களுடைய இடம். அந்தணர்களுக்கு முக்கியத்துவம் என்றெல் லாம் பேசி பிரிந்தார்கள். தட்சிணலாடத்தை எப்பொழுது வேண்டுமானாலும் தாக்குவோம் என்ற நிலையை ஏற்படுத் தினார்கள். மஹிபாலனை பலவீனப்படுத்த உத்தரலாடம், தட்சிணலாடம் என்று பிரித்தார்கள். இந்த கோவிந்த சந்திர னின் மூத்தோர்கள்தான் இதை செய்திருக்க வேண்டும். தர்ம பாலனின் மூத்தோர்கள்தான் முதலில் தனி ராஜ்ஜியம் கேட் டிருக்க வேண்டும். ஒட்ட தேசத்திலிருந்து கோதுமையையும், பசுக்களையும், கரும்பையும் பெற்றுக் கொண்டு தண்டபுத்தி தனியாக ஸ்தாபிதம் ஆகிவிட்டது. உணவிற்கும் குறைவில்லை. பசு வளர்ப்பும், நூல் ஆடைகளும், மிகப்பெரிய பாய்மரங்களும், நாவாய்க்கு வேண்டிய சாமான்களும் அவர்களுக்கு முக்கிய மான விஷயமாக இருந்தது. எனவே நாவாய் வகைகள் அதிகம் இருந்தன.

ஒட்ட தேசத்தை காட்டிலும் தண்டபுத்தியில் அதிகம் மரக் கலன்கள் நின்றன. தட்சிணலாடம் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் சகலத்திற்கும் தண்டபுத்தியை எதிர்பார்க்கும் மனோ பாவனையில் வளர்ந்தது. இவையெல்லாம் ஐந்து, ஆறு தலை முறைக்கு முன்னால் நடந்தவை.

தட்சிணலாடத்திற்குள் நுழைந்ததும் மிகப் பெரிய பெருமூச்சு மஹிபாலனுக்கு வந்தது. என்னுடைய தேசமல்லவா. என்னுடைய இடமல்லவா. இந்த தண்டபுத்தியும் நான் ஆள வேண்டிய இடமல்லவா. அவன் பொசுங்கினான். தண்டபுத்தி நோக்கி பயணப்பட்டான். வழியில் பல கிளை நதிகளும், மகாநதியின் கிளை நதிகளும், மலையிலிருந்து வரும் சிற்றாறுகளும் தண்டபுத்தியை செழிப்பாக்கிக் கொண்டிருந்தன.

பின்னால் குதிரை வீரர்கள் வரும் சத்தம் கேட்டது. ஒரு லட்சம் படைவீரர்களை தாண்டிக் கொண்டு உத்திரலாடத்து வீரர்கள் வந்தார்கள்.

''என்ன''

''கங்கை முகத்துவாரத்தில் சோழப்படை முற்றுகையிட்டிருக்கிறது. எந்த நேரம் வேண்டுமானாலும் நுழையும்.''

''எப்போது இது.''

''இரண்டு நாட்கள் முன்பு.'' மஹிபாலன் வெறியானான்.

''எங்கே கங்கே யாதவ். எங்கே கங்கே யாதவ்.'' அலறினான்.

கங்கே யாதவ் எப்பொழுது பிரிந்து போனான். எங்கு போனான் என்று எவருக்கும் தெரியவில்லை.

கையிலுள்ள பிரம்பால் தளபதிகளையும், சேனாதிபதிகளையும் அடித்தான். ''திரும்புங்கள், திரும்புங்கள்,'' என்றான். தர்மபாலன் ஓடி வந்து விசாரிக்க, அவனையும் புறம் தள்ளினான்.

''என்னை இங்கே வரவழைத்து என் தேசத்தை அங்கு பலியிட திட்டமிட்டிருக்கிறாயா. இதற்குத்தான் கங்கை யாதவை அனுப்பினாயா.''

''கங்கே யாதவை நான் அனுப்பவில்லை. உன்னிடமிருந்துதான் செய்தி வந்தது. நீ படையெடுத்து ஒட்டதேசத்தை தாக்க வருவதாக. ஆனால் இப்பொழுது இப்படி பேசுகிறாயே'' என்று சீறினான்.

அவர்களுக்குள் கைகலப்பு ஆகும் அளவுக்கு அங்கு ஒரு சண்டை நடந்தது. ஆனால் கோவிந்த சந்திரனின் மந்திரிகள்

தடுத்து விட்டார்கள். அவர்களும் திகைத்து போயிருந்தார்கள். நீங்கள் திரும்பி போங்கள் என்று சொல்லிவிட்டார்கள்.

''இப்படி ஒரு படையெடுப்பு நடக்குமா. இது என்ன தந்திரம். எப்படி கங்கை முகத்துவாரத்திற்கு வீரர்கள் வந்தார் கள். எத்தனை பேர் வந்தார்கள்.''

''இருபது, முப்பது நாவாய்கள் இருக்கும் என்று வந்த வர்கள் சொன்னார்கள்,'' கோவிந்த சந்திரன் அலண்டு போனான். தன்னுடைய படைகளை உத்திரலாடம் நோக்கி நகரச் சொன்னான். மஹிபாலன் படைகளுக்கு முன்பு அந்தப் படைகள் உத்திரலாடத்தை காப்பாற்றுவதற்கு போயின.

★★★

அத்யாயம்

80

கங்கை முகத்துவாரத்தை தாண்டி கங்கை நதி பிரவா கத்தை கிழித்துக் கொண்டு பாய்மரத்தின் உதவியாலும், துடுப்பு போடுபவரின் உதவியாலும் பெரும் நாவாய்கள் உத்திரலாடத் திற்குள் நுழைந்தன. பிரம்மபுத்ராவில் ஆறு நாவாய்கள் நுழைந் தன. பிரம்மபுத்ரா கரை ஓரம் நின்றன. பிரம்மபுத்ரா கரையோரம் அருண்மொழிப்பட்டன் கீழ் இறங்கினான்.

''நதியா இது. இப்படி ஒரு நதி உண்டா. எதிர்க்கரையே தெரியாத ஒரு நதி உண்டா. மிகப் பெரிய ஏரியைப் போல ஒரு நதி படர்ந்து போகுமா. என்ன இது, என்ன தேசம் இது. இமயத் திலிருந்து வருவதால் இத்தனை சிறப்பா. கங்கை நதி போல இது, உத்தமமான நதியா.'' பின்பக்கம் காமாக்யா என்ற நகரம் இருப்பதாக சொல்லப்பட்டது. அதை தவிர்த்தான்.

பிரம்மபுத்ராவின் மேற்கு கரை பக்கமாகவே நகர்ந்தான். அங்கு தரையில் இறங்கி தன் குதிரைகளை இறக்கி, தேர்களை இறக்கி அவைகளில் குதிரைகள் பூட்டி வேகமாக ஊருக்குள் நுழைந்தான்.

ஒரு மன்னன் யானையை குதிரையை வைத்து ஆக்கிர மிப்பான் என்று உத்திரலாடத்து தளபதிகள் கேள்விப்பட்டிருந் தார்கள். மக்கள் அனுபவப்பட்டிருந்தார்கள். ஆனால் இப்படி சிறு தேர்களில் ஏறி மின்னலென பாய்ந்து ஊரைத் தாண்டி வளைத்துக் கொண்டு எரியூட்டுவதும், வீரர்களின் நெஞ்சில் அம்பு தைத்து கொல்வதும், எல்லாம் சொடுக்கு நேரத்தில் நடைபெறுவதும் அவர்களுக்கு திகைப்பாக இருந்தன. அவர்கள் வாழ்க்கை நதிகளால் வளமாக இருந்தது. அந்த வளம் அவர் களுக்கு ஒரு சோம்பல் கொடுத்தது. போர் முழக்கம் கேட் டதும் மெல்ல எழுந்து நின்று உடைகளை பிரித்து உதறி

இறுக்க கட்டிக் கொண்டு, நிதானமாக நடந்து அவர்கள் அம்புகளை தேடி எடுத்து போருக்கு புறப்படுவார்கள். அவர்களுக்கு சோழப்படை வீரர்களின் வேகம் ஆச்சரியமாக இருந்தது. பாய்ந்து ஓடுகின்ற தேர்களிலிருந்து அம்பு வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. போர்வீரன் தேரை விட்டு இறங்கி கூர்வாளை ஒரு வீரனை நோக்கி வீசிவிட்டு பிறகு அந்த தேர் பின்னால் ஓடி துள்ளி உட்கார்ந்து கொள்வான் என்பதை அதிசயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெளியேறு என்று சொல்லிவிட்டு காத்திருப்பார்கள். ஆனால் சோழ வீரர்கள் அப்படி இல்லை. வெளியேறு என்று சொல்லிவிட்டு கூரைக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். அழுது கொண்டு வெளியேற வேண்டியதாயிற்று. சோழ வீரர்களுக்கு இத்தனை பெரிய மூங்கில்களை பார்க்கும்போது ஆத்திரமாக இருந்தது. மூங்கில் புதருக்கு நடுவே தீ வைத்தார்கள். வீட்டிலிருந்த துணிகளை பறித்துக் கொண்டு வந்து அந்த தீயில் சொருகினார்கள். மூங்கில் மரங்கள் எரியத் துவங்கின. எங்கும் புகை படர்ந்தது. மக்கள் மிரண்டார்கள். பசுக்கள் மிரண்டன. 'பசுக்களை எடுத்துக் கொள்ளுங்கள். எங்களை விட்டுவிடுங்கள்.' ஜனங்கள் கெஞ்சி னார்கள். சோழ வீரர்களுக்கு அந்த பசுக்கள் தேவையே இல்லை. ஜனங்கள் ஒன்று கூடக்கூடாது என்று தெளிவாக இருந்தார்கள். நாலாபுறமும் சிதறியடித்தார்கள். பெண்கள் முதுகிலும் அடி விழுந்தது, கிழவர்களை பலமாக தாக்கினார்கள். வேல் அடித்து தாக்க வந்த ஒரு பதினாறு வயது பையனை கயிறால் கழுத்தில் இறுக்கக் கட்டி தேரோடு அவனை இழுத்துக் கொண்டு போனார்கள். உடம்பெல்லாம் இரத்த விளாறாக அவன் கதறினான். 'வேண்டாம் விட்டுவிடு, வேண்டாம் விட்டுவிடு.' அவர்கள் மொழியில் கதற அதை சோழ வீரர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. ஊர்களை விட்டு மலைப் பகுதிகளுக்கு ஜனங்கள் தலைதெறிக்க ஓடினார்கள்.

வடகிழக்கிலிருந்து சோழப்படை முன்னேறி வயல்கள் தாண்டி, காடுகளை தாண்டி, தோப்புகளை தாண்டி பல ஊர்களை கபளீகரம் செய்து கொண்டு கங்கை கரைக்கு வந்து அடைந்தது. ஒரே நாளில் உத்திரலாடம் எந்த காப்புதலும் இன்றி அடிமையாயிற்று. வாள் தரித்த அத்தனை பேரும் முடமாக்கப்

பட்டார்கள். கொல்லப்பட்டார்கள். ஜனங்களின் கால்களை தாக்கினார்கள். முதுகில் அடித்தார்கள். அவர்கள் எழுந்திருக்க பல மாதங்கள் ஆகும் என்று தெரிந்தது. பெண்கள் மட்டுமே விடப்பட்டார்கள். இளம் பெண்களை அருகில் அழைத்து நிர்வாணமாக்கி ரசித்தார்கள். மறுத்தால் கன்னத்தில் அடித்தார்கள். பிரம்பால் பிருஷ்டத்தில் அடித்தார்கள். எங்கும் அலறல் சத்தம் இருந்தது. பெண்கள், மூங்கில்கள், குடிசைகள், மாளிகைகள், அரண்மனைகள் எல்லாம் அவர்களுக்கு ஒன்றாகவே இருந்தன. குழந்தைகளை கொல்ல வேண்டுமா என்ற கேள்வி இருந்தது. வேண்டாம் என்று அருண்மொழிபட்டன் வேகமாக கட்டளையிட்டான். எட்டு வயது பையன் வேல் கம்பை தூக்கிக் கொண்டு வந்தான். அவனை மடக்கி பிடித்தார்கள். கால்களில் இரும்பு சங்கிலியால் கட்டினார்கள். அதே சங்கிலியில் கோர்த்த கருங்கல்லை அவன் கையில் கொடுத்தார்கள். அவன் அசைய முடியாமல் விக்கி விக்கி நின்றான். வீரம் என்பது முளையிலேயே கிள்ளப்பட வேண்டும் என்று சோழ வீரர்கள் சொன்னார்கள். குழந்தைகளை கொன்றுவிடுவோம் என்று பயமுறுத்தினார்கள். பெண்கள் அலறி மறுக்க பிச்சை போடுவது போல அந்த குழந்தைகளை தூக்கி அவர்கள் மடியில் போட்டார்கள். மிகப் பெரிய கலவரத்தை ஏற்படுத்தினார்கள். வீரர்களுக்கு ஜெயிக்க, ஜெயிக்க கோபம் அதிகமாகியது.

''மஹிபாலனா, அவன்தான் தலைவனா, அவன் தேசமா இது. சோற்று தண்டமாக இருக்கிறீர்களடா. எவனுக்காவது சண்டை போட வருகிறதா. எவனுக்காவது பலமான உடம்பு இருக்கிறதா. எப்போதும் தாம்பூலம் மென்றுக் கொண்டிருக்கிறீர்களே. என்ன எழவு வாசனை அது.'' கத்தினார்கள். தாம்பூலம் தரித்தவர் கன்னத்தில் அடித்தார்கள். நாக்கில் சூடு போட்டார்கள். மிகப் பெரிய கலவரத்தை அந்த ஊரில் ஏற்படுத்தினார்கள். அரண்மனை மாளிகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. அரண்மனை வாயிற் கதவு பிடுங்கப்பட்டது.

தெற்கு நோக்கி அருண்மொழிபட்டன் படை நகர்ந்தது. கங்கை கரையில் இறங்கிய சேனைகளோடு கலந்து கொண்டது. கங்கையின் வடகரையில் ஓய்வெடுத்துக் கொண்டது.

ஆனால் கங்கையிலிருந்து கஷ்டப்பட்டு படகு இழுத்து இந்த பக்கம் ஒரு ஒற்றன் ஓடிவந்தான். மஹிபாலன் திரும்புவதாக சொன்னான். அப்படியானால் கங்கை கரையை தாண்டிவிட வேண்டும் என்று அருண்மொழிபட்டனுக்கு தெரிந்தது.

"அரையன் ராஜராஜன் எங்கிருக்கிறார்."

'தெரியவில்லை' என்று பதில் வந்தது. அருண்மொழி பட்டன் கவலையானான். உள்ளுக்குள் ஒரு கலவரமும் இருந் தது. கங்கையில் வெள்ளம் இருந்தது.

"என்ன செய்வது." உபதளபதிகளும், அருண்மொழிபட்டனும் படகுகளை இறக்கி போகலாம் என்று சொன்னார்கள். ஆனால் படகுகள் பிய்த்துக் கொண்டன. நதியில் வேகமாக நீர் ஓடி யதால் அந்த பக்கம் படகுகளை கட்டவே முடியவில்லை. அருண்மொழிபட்டன் யானைகளை இறக்கினான். யானைகள் ஒன்றன் பின் ஒன்றாக இறங்கின. நதி நீரில் எதிர்த்து நீந்தின. அவைகள் மிகப் பெரிய தொங்கு பாலமாக வளைந்து, நெளிந்து இருக்க, யானைகள் மீது கால் வைத்து போர்வீரர்கள் தாவித் தாவி மறுபக்கம் போனார்கள். கங்கையின் மறுகரையில் குதித் தார்கள். உத்திரலாடம், இப்படியெல்லாம் கங்கையை தாண்ட முடியுமா என்று வியந்தது. அருண்மொழிபட்டன் வரும்போது அவனை உத்திரலாடத்து மக்கள் கைகூப்பி வணங்கினார்கள். 'மகாராஜா மகாராஜா' என்று கூப்பிட்டார்கள். அருண்மொழி பட்டன் ராஜா இல்லை தளபதி என்று சொன்னபோது நம்ப மறுத்தார்கள். வியந்தார்கள்.

'அப்படியானால் ராஜா எப்படி' என்று கேட்டுக் கொண் டார்கள்.

குதிரைகளை யானைகளுக்கு முன்பாக இறக்கி நீந்தி அழைத்துக் கொண்டு போனார்கள். யானைகள் குதிரைகளை உந்தித் தள்ளின. தேர்களை யானைகள் மீது தூக்கிக் கொண்டு போனார்கள். முன்னால் இரண்டு பேர், சக்கரத்திற்கு ஒருவர் என்று அந்த தேர்கள் வேகமாக கரையை கடந்தன. ஒருநாள் முழுவதும் இந்த வேலை இருந்தது. மறுகரைக்கு போய் மறுபடி யும் ஓய்வெடுத்துக் கொண்டார்கள். ஆனால் அருண்மொழி பட்டனால் தூங்க முடியவில்லை.

கங்கையில் வெள்ளம் குறைவாக இருப்பதால் மழை வந்து வெகுநாள் ஆனபடியால் கடந்துவிட முடிந்தது. அரையன் ராஜராஜன் வரும்பொழுது வடகிழக்கு பருவ மழை ஆரம்பித்தால் அது இமயத்தில் விழுந்து அங்கிருந்து இன்னும் அதிகமாக நீர் வரும். உத்திரலாடம், தட்சிணலாடம், தண்ட புத்தி, கோசலதேசம் எல்லாம் கடும் மழையில் அவஸ்தை படும். நான் தாண்டிவிட்டேன். அவரால் தாண்ட முடியுமா. தாண்ட முடியாவிட்டால் அவர் கோபப்படுவார். எல்லோரும் உத்திரலாடம் வரை வர வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பார். வந்த வழியே மறுபடியும் போக வேண்டியிருக்கும். எது சரியாக இருக்கும் என்று திண்டாடினான்.

கோசல தேசத்திற்குள் நுழைந்தான். கோசல தேசத்தில் அந்தணர்கள் பூரண கும்பம் எடுத்து வரவேற்றார்கள்.

''இங்கு போர் வீரர்கள் இல்லை. அந்தணர்கள்தான் இருக்கிறார்கள். இங்குள்ளவர்கள் விவசாயிகள். வணிகர்கள். எங்களுக்கு போர் செய்கின்ற திறன் சுத்தமாக இல்லை'' என்று தெரிவித்தார்கள்.

''போர் என்று எதிர்க்காதவரை எந்த பிரச்சினையும் இல்லை'' என்று அருண்மொழிபட்டன் உறுதி கூறினான்.

அவர்கள் ஒதுங்கிக் கொள்ள வெகு வேகமாக குதிரைகள் தெற்கு நோக்கி போயின. தேர்கள் பின்தொடர்ந்தன. கோசல தேசத்து அந்தணர்கள் அருண்மொழிபட்டனை இவன் கல்கியின் அவதாரம் என்று சொன்னார்கள். மலர் தூவினார்கள். அருண்மொழிபட்டன் அதை புறக்கணித்தான். கோசல தேசம் தாண்டினான்.

உத்திரலாடத்தின் நடுவே மஹிபாலனும், அருண்மொழி பட்டனும் எதிர் எதிரே நின்றார்கள். மஹிபாலன் சற்று பள்ளமான இடத்தில் நிற்க, அருண்மொழிபட்டன் மேடான பகுதியில் நின்றான். இருவரும் வரிசையாக நின்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மஹிபாலன் படை பெரிதாகத்தான் இருந்தது. அவர்கள் உற்சாகமாக இருப்பதையும் கண்டு கொண்டான்.

''எங்கள் தேசத்தை தொட்டுவிட்டா வருகிறாய். வெட்டிப் போடுகிறேன் வா'' என்று வீரர்கள் முன்னேறி வாளை வீசி னார்கள். ஈட்டிகள் எறிந்தார்கள். அருண்மொழிபட்டன் அமைதி யாக இருக்கச் சொன்னான்.

தெற்கே அரையன் ராஜராஜன் எங்கே இருக்கிறார். எப் பொழுது தாக்க முடியும். எப்பொழுது தாக்கக்கூடாது. முன்னும், பின்னும் அலைந்தபடி சிந்தித்தான். உபதளபதிகளும் தவிப் போடுதான் இருந்தார்கள்.

'போரிடலாம். ஆனால் சேதம் கடுமையாக இருக்கும்' என்று சொல்ல, அவர்கள் அருண்மொழிபட்டனை பார்த்தார்கள்.

'அவர்கள் வந்தால் பின்னடைந்து விடலாமா' என்று அருண்மொழி கேட்டபோது 'கூடாது' என்றார்கள். ''இல்லை. பின்னடையத்தான் வேண்டும். சில உபதளபதிகள் சொன் னார்கள்.

''எதற்காக பின்னடைய வேண்டும்.''

''அப்பொழுது அரையன் ராஜராஜன் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த படகுகளில் தாண்டி கிழக்குப் பக்கம் சில வீரர் களை இப்போதே நாம் அனுப்பி வைத்து அரையன் ராஜராஜன் எங்கிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அரையன் ராஜராஜன் பின்னால் வந்து தாக்கும்வரை நாம் பின்னடைய வேண்டியதுதான்.''

''கங்கைக் கரையை தாண்டிப் போக வேண்டுமா.''

''ஆமாம். கங்கைக் கரையைத் தாண்டித்தான் போக வேண்டும்.''

''அது உத்திரலாடத்திற்கு சிரிப்பாக போகுமே.''

''வேறு வழியில்லை.''

மஹிபாலன் முன்னேற அருண்மொழிபட்டன் பின்னடைந் தான். சோழப்படை பின்னடைந்ததாக சரித்திரமே இல்லை. இராஜேந்திரர் என்ன சொல்வாரோ என்று பயந்தான். வீரர் களும் வேண்டா வெறுப்பாக பின்னடைந்தார்கள். கங்கை கரையின் தெற்கு கரையில் வந்து நின்றார்கள். மஹிபாலன் அன்று இரவு எங்கோ தங்கினான்.

பின்னால் இருந்து ஒரு ஒற்றன் கிழக்கு பக்கமாக சுற்றிக் கொண்டு வந்தான்.

''ஒரு நாள் தொலைவில் அரையன் ராஜராஜன் இருக்கிறார். தொடர்ந்து நகர்ந்து கொண்டு இருக்கிறார். எங்கும் தங்காமல் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. முன்னே தாக்குதல் கடுமையாக இருந்தால் பின்னே மிரட்டல்கள் அதிகமாக இருக்கும்'' என்றான்.

'சோழப்படை கொஞ்சம் பலவீனமாக இருக்கிறது' என்றும் அந்த இளைஞன் சொன்னான். அவனை கட்டித் தழுவி, முதுகில் தட்டி கொடுத்துவிட்டு, 'தாக்குதலுக்கு தயாராக இருங்கள்' என்று தன் வீரர்களுக்கு கட்டளையிட்டான்.

சோழப்படை வீரர்கள் உறங்காமல் தாக்குதலுக்கு தயாராக இருந்தனர்.

விடியல் நேரத்தில் சூரியன் உதித்ததும் நெற்றியில் திருநீறு இட்டுக்கொண்டார்கள். தலையில் தெளித்துக் கொண்டார்கள். இது குளித்தது போல் ஆகும் என்று சொல்லிக் கொண்டார்கள். குதிரைகளில் ஏறினார்கள். யானைகளில் ஏறினார்கள். முதலில் யானைகளை நடத்தி பின்னே குதிரைகள் வரும்படி செய்தான். முன்னே யானைகள் ஓடின. யானைகள் மீது இருந்த வீரர்கள் இடையறாது எதிர்பக்கம் அம்பு அடித்தார்கள்.

வீரமாதேவி அருண்மொழிபட்டனோடு வர மறுத்து விட்டாள். நான் மரக்கலத்திலேயே இருக்கிறேன் என்றாள். ஏன் என்று கேட்டதற்கு, மரக்கலங்களுக்கு பாதுகாப்பு வேண்டாமா. 'அவைகள் முக்கியமில்லையா' என்று சொன்னாள். கடல்மீது அவளுக்கு பேராசை பிறந்துவிட்டது என்பது அவள் பேச்சிலிருந்து தெரிந்துவிட்டது. ஆனால் வீரமாதேவியின் எண்ணம் வேறு மாதிரியாக இருந்தது.

கங்கையின் தெற்கிலிருந்து இந்த நேரம் இங்கு நகர்ந்திருப்பார்கள். பிறகு இந்த நேரம் இங்கு நகர்ந்திருப்பார்கள் என்று கணக்கிட்டு அவள் மூன்று நாவாய்களோடு தெற்கு பக்கம் நகர்ந்தாள். அவளோடு சிவ ஸ்வாமி நாவாயில் ஏறிக்

கொண்டான். மீதியுள்ள நாவாய்கள் கணவதியிடம் ஒப்படைக்கப் பட்டன.

மஹிபாலன் முன் இருக்க, அவனுடைய பின் பக்கத்து படைகள், மாட்டு வண்டிகள், உணவு பொருட்களை ஏற்றி வந்த கோவேறுக் கழுதைகள் மிக மூர்க்கமாக அரையன் ராஜ ராஜனால் தாக்கப்பட்டன. மடக்கப்பட்டன. தானிய மூட்டை களை கீழே இறக்கி வைத்து கழுதைகளை அடித்து விரட்டி னார்கள். கழுதைகளை தேடி பிடித்து தானியங்களை ஏற்றி போவது என்பது இனி முடியாத காரியம். மூட்டைகளை தோளில் தூக்க முடியாது. மாட்டு வண்டிகளின் அச்சாணி களை பிடுங்கிக் கொண்டார்கள். மாடுகளையும் அவிழ்த்து விரட்டினார்கள். உணவு படைகளுக்கும், மறவர் படைகளுக் கும் இடையே இடைவெளி இருந்தது. இரண்டு கிராமங்களை தாண்டினால்தான் மறவர்படையை அடைய முடியும் என்று தோன்றியது.

அரையன் ராஜராஜன் தேர்களை அழைத்தார். முன்னே அனுப்பினார். பிறகு யானைகளை விரட்டினார். வழியில் தெரியும் கிராமங்களை எரியூட்டச் சொல்லி தெரிந்த கைக்கோளப் படைகளுக்கும், மதுராந்தக சோழப் படைகளுக் கும் உத்தரவிட்டார்.

'வங்க தேசத்தை தாண்டி வந்திருக்கிறோம். ஒட்ட தேசத்து வீரர்கள் ஒன்று திரண்டு பின்னால் வந்து தாக்கலாம் அல்லவா' என்று ஒரு வீரன் கேட்டபோது, 'ஆமாம்' என்றார். பின்பக்கம் குதிரை வீரர்களை நிறுத்தினார். படைகள் ஏதேனும் வருகிறதா என்று பார்க்க ஒட்ட தேசத்தின் எல்லையில் குதிரைகளோடு கூடிய ஒற்றர்களை நியமித்தார். நாலாபக்கமும் ஆணைகள் பறந்தன. எப்படி தாக்க வேண்டும் என்பது அவர்களுக்கு மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டது.

தேர்கள் முன்னே போய் இடையறாது மஹிபாலனை நோக்கி அம்பு எய்ய வேண்டும் என்றும், யானை கூட்டம் தென்பட்டால் எரி அம்புகளை பயன்படுத்த வேண்டும் என்றும், காலாட் படைகள் தென்பட்டால் ஈட்டியாலும், கத்தி யாலும் தாக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டன.

''பாதை அகலமாக இருக்கிறது. அதனால் ஒரே நேரத்தில் ஆறு யானைகளாக உள்ளே போக வேண்டும். யானைகள் மீது அமர்ந்திருந்த மூன்று வீரர்களும் வில் அம்புகளோடு உயரே இருந்து தாக்க வேண்டும். தொலைதூரம் அம்பு செலுத்த வேண்டும். தேர் படைகள் போவதற்கு முன்பு பின்னாலிருந்து அம்புகளை தொலைதூரம் செலுத்தி எதிரிப்படையை கலவரப் படுத்த வேண்டும். காயப்பட்ட வீரர்களையும் குத்தி கொன்று விடு'' என்று அரையன் ராஜராஜன் கட்டளையிட்டார்.

''சோழப்படை இதுவரை செய்ததில்லை. இப்பொழுது செய்ய வேண்டும். மஹிபாலன் வீரர்கள் எந்த பக்கமும் சிதறாத படி பாதுகாத்து கொள்ள வேண்டும்.''

''ஒருவேளை வீரர்கள் சரணடைந்தால்,'' ஒரு உபதளபதி கேட்டான். அரையன் ராஜராஜன் யோசித்தார்.

''கைகளை பிணைத்து மரங்களில் கட்டி வை. யுத்தம் முடிந்த பிறகு அவர்களை அவிழ்த்து இழுத்து போகலாம்.''

''அவர்கள் காவலுக்கு.''

''இந்திரதத்தனின் ஒட்டப் படையை நிறுத்தி வை. ஒட்டர்களுக்கும், தண்டபுத்திக்காரர்களுக்கும் ஆகாது. பரஸ் பரம் அடித்துக் கொள்ளட்டும். நாம் முன்னேறுவோம்.''

இரண்டு லட்சம் பேர் கொண்ட அவருடைய படை, குதிரையிலும், யானையிலும், தேரிலும், தொடை தட்டி ஆர்ப் பரித்தவாறு நடந்தும் மஹிபாலனை நோக்கி முன்னேறின.

மஹிபாலன் கங்கே யாதவோடு வந்த ஒரு மேலை சாளுக் கிய வீரனை தேடி கண்டுபிடித்து வெட்டி சாய்த்தான். மாட்டிக் கொண்டோமே என்று கவலைப்பட்டான்.

''நம் தேசத்தை நோக்கி மூர்க்கமாக போ. நம்முடைய பெண்டுகளை, நம்முடைய பசுக்களை, நம்முடைய இடத்தை அன்னியன் தீண்டி விட்டான். ஆத்திரமாக இல்லை. வெறி வரவில்லை. போ. போ. எதிர்ப்பட்ட அத்தனை சோழ வீரனை யும் வெட்டி வீழ்த்து.'' அவன் அலறினான். அவன் அலறுவதற் கேற்ப அவன் தளபதிகளும் அலறினார்கள். வீரர்கள் ஆவேசம் கொண்டார்கள். எங்கும் நிற்காமல் தண்டபுத்தியிலிருந்து

தட்சிணலாடம் தாண்டி, தட்சிணலாடத்திலிருந்து கோசல தேசம் மத்தியில் அருண்மொழிப்பட்டனை மஹிபாலன் சந்தித் தான். தன்னுடைய படைகளை வரிசைப்படுத்திக் கொண் டான். சீராக்கினான். அருண்மொழிப்பட்டனும் தன் படையை வரிசைப்படுத்துவது தெரிந்து தாமதித்தான். முன்னேற, அருண் மொழிபட்டன் பின்னடைவது கண்டு சந்தோஷப்பட்டான். பயப்படுகிறான் என்று ஆவேசமானான்.

ஆனால் அவன் நினைத்ததை விட வேகமாக தெற்கி லிருந்து அரையன் ராஜராஜன் படைகள் மஹிபாலனுடைய பின்னால் இருக்கின்ற படையை தாக்கின. உணவுகள் கொள்ளை போயின. கோவேறு கழுதைகள் திருப்பி விடப் பட்டன. மாட்டு வண்டிகள் மறிக்கப்பட்டன. தாண்டி வந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறபொழுது, என்ன செய்வது என்கிறபொழுது கிழக்கு கடற்கரையிலிருந்து ஆயிரம் படை வீரர்களோடு வீரமாதேவி உள்ளே புகுந்தாள்.

''மூன்று முனை தாக்குதலா.'' மஹிபாலன் பயந்து போனான். அவை ஆயிரம் படைவீரர்கள்தான் என்பது தெரியவில்லை. இராஜேந்திர சோழரின் மனைவி வீரமாதேவி தலைமை தாங்கி வருகிறார் என்பது மட்டுமே அவனுக்கு தெரிந்தது. செய்தி கொண்டு வந்த வீரன் மிகக் குறைந்த விஷயத்தையே அவ னுக்கு தெரிவித்தான். இராஜேந்திர சோழரின் மனைவி வீரமா தேவி வருகிறாள் என்றாள் அங்கு ஒரு லட்சம் படை இருக்கும் என்று மஹிபாலன் பதட்டத்தில் தவறாக கணக்கு போட்டான்.

'என்ன செய்வது என்ன செய்வது' என்று குதிரையில் சுழன்று சுழன்று யோசித்தான். அவன் படை வீரர்களை இரண் டாக பிரித்தான். வடக்கு தாக்கவும், தெற்கு தாக்கவும் இன்னும் அவசியமானால் நடுவே வரும் படையை தாக்கவும் அவன் திட்டமிட்டிருந்தான்.

நடுவே வரும் படை வீரமாதேவி தலைமை தாங்கி வரும் படை தன்னை தாக்க வருவதற்குள் தானே இரண்டாக பிரிந்து விட வேண்டும் என்று நினைத்தான்.

வடதிசை நோக்கி அவன் நகர, தென் திசை நோக்கி ஒரு படை நகர அந்த படைகள் சோழப் படைகளுக்கு எதிரே

வலு குறைந்தவையாக, மூர்க்கமாக தாக்கும் அருண்மொழி பட்டன் குதிரை படைகளுக்கு எதிரே வலு குறைந்தவையாக இருந்தன.

வடக்கே மூன்று நாழிகை போர் நடந்தது. தெற்கே ஒரே நாழிகை போர் நடந்தது. அரையன் ராஜராஜன் முன்னேறி, படைகளை சிதைத்து விட்டு, மஹிபாலன் படைகளில் தப்பி ஓடி வந்தவர்களை மடக்கி, கன்னத்தில் அடித்து, கை, கால்கள் கட்டி, பூமியில் படுக்க வைத்து தொடர்ந்து முன்னேறினார்.

ஒருநாள் அதிகாலையில் ஆரம்பித்த அந்த போர் சூரியன் மேற்கு நோக்கி சற்றே சரிந்தபோது முடிந்து போயிற்று.

அருண்மொழிபட்டன் குதிரையும், அரையன் ராஜராஜன் குதிரையும் எதிர் எதிரே வந்தன. இருவரும் கை கோர்த்துக் கொண்டார்கள். சோழக் கொடியை உயர்த்தி 'வெற்றி வெற்றி' என்றார்கள். அவர்களை சுற்றி சோழப்படை பெரும் குதியாட்டம் போட்டது.

''இப்பொழுது என்ன செய்யலாம். அருண்மொழி'' என்று அவர் உரக்க கேட்டார்.

''வடக்கே போகலாம். நீங்கள் அங்கே பார்க்க வேண்டும்'' என்று அருண்மொழி சொன்னான். ''வடகிழக்கு வரை நீங்கள் வர வேண்டும்'' என்று தன் விருப்பத்தை தெரிவித்தான்.

''அதுவே சரி, சரியாகச் சொன்னால் என்னை இத்தோடு திரும்பி விடு என்று சொல்வாயோ என்று பயந்தேன்'' என்றார்.

''இல்லை. நீங்கள் வடக்கே கடைசி வரை கால் வைத்து விட்டு, பிரம்மபுத்ராவையும் பார்த்துவிட்டு, பிறகு கங்கையையும் பார்த்துவிட்டு பிறகு இங்கே வர வேண்டும்'' என்று அவன் சொல்ல, அவர் குதூகலமானார்.

இவருக்கு இராஜேந்திர சோழரை தான் பார்த்து வந்த செய்தியை எப்படி சொல்வது, அவர் எப்படி இதற்கு எதிரொலிப்பார் என்று பயந்தவண்ணம் அவன் அவரை பின்தொடர்ந்தான்.

சோழப்படைகள் வடக்கே பிரம்மபுத்ரா தாண்டி காமாக்யா வரை போனது. வீடுகள் எரிக்கப்பட்ட நிலையும், மூங்கில்கள் எரிக்கப்பட்ட நிலையும் அவருக்கு தெரிந்தது. அந்த இரண்டு படைகளும் ஒன்று சேர்ந்து கடக்க, அதற்கு பின்னே வீரமா தேவி சேர்ந்து கொண்டாள். வீரமாதேவி அரையன் ராஜ ராஜனை பின்தொடர்ந்தாள். அவள் வருவது தெரிந்து சோழப் படை வழிவிட்டது. அவள் பெரிய குதிரை படைகளோடு முன் னேறினாள். அருண்மொழிப் பட்டனையும், அரையன் ராஜ ராஜனையும் அவள் உத்திரலாடத்தின் எல்லையில் சந்தித்தாள்.

கோசல தேசத்தின் மாளிகைகளும், கோவில்களும், மக்களும் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தன.

அமைதியான ஒரு ஊர், போருக்கு தயாராகாத ஒரு ஊர். அப்படி ஒரு ஊர் அவள் கனவில் உண்டு. அவர்கள் வரவேற் பது பார்த்து கையசைத்தாள். ஆனால் உத்திரலாடம் முழுவதும் எரியூட்டப்பட்டதை பார்த்து பெருமூச்சு விட்டாள். அவர்கள் காமாக்யாவில் ஒன்று கூடினார்கள்.

பிரம்மபுத்ரா நதியிலிருந்து இரண்டு குடங்கள் நீர் எடுக்கப் பட்டன. ஐந்து தவலைகள் அள்ளப்பட்டன. அங்கிருந்து நகர்ந்து அவர்கள் ஊர்களை கொள்ளை அடித்தவண்ணம் கங்கை கரையை அடைந்தார்கள். கங்கை கரை கோவிலை தரிசித்தார் கள். மாட, மாளிகைகளில் இருப்பவர்களை வெளியேற்றி விட்டு தங்கினார்கள். எல்லா மாளிகைகளிலும், எல்லா அரண் மனையிலும் நிலவறைகள் திறக்கப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டன.

''வெறும் நகைகள் போதாது. பாத்திரங்கள் வேண்டும். எவ்வளவு உறுதியான, அகலமான பாத்திரங்கள் இருக்கின் றனவோ அவைகளை எடுத்துக் கொள்ளுங்கள். கோவேறு கழுதைகளை மடக்கி பிடியுங்கள். அவைகள் மீது பாத்திரங் கள் வைக்க சட்டம் அடியுங்கள். மாட்டு வண்டிகளில் ஒன்றன் மீது ஒன்றாக ஆறு பித்தளை பாத்திரங்கள் வைக்கும்படியாக பார்த்துக் கொள்ளுங்கள்.''

''எல்லாம் கங்கை ஜலமா.''

''ஆமாம், எல்லாம் கங்கை ஜலம். இதுதான் இராஜேந்திர சோழனின் ஆசை. பிரம்மபுத்ரா நம்முடைய அரையன் ராஜ ராஜன் கொடை. அவர்கள் அவ்விதமே செயல்பட்டார்கள். எல்லா மாட்டு வண்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. எல்லார் வீட்டிலிருந்தும் பாத்திரங்கள் பறிக்கப்பட்டன. கூலி ஆட் களை வளைத்து பிடித்தார்கள். கயிறுகளை வாங்கிக் கொண் டார்கள். கீழே மெத்தென்று வைக்க, இலவம் பஞ்சு படுக்கை களை பிடுங்கிக் கொண்டார்கள். எது எல்லாம் சோழ தேசத் திற்கு தேவை என்று பார்த்தார்கள்.

அரையன் ராஜராஜனுக்கு அருண்மொழிபட்டன் இரா ஜேந்திர சோழரை பார்த்துவிட்டு வந்தது தெரிந்து போயிற்று. வீரமாதேவியிடம் விசாரித்தார். வீரமாதேவி தனக்கு தெரிந்ததை சொன்னாள்.

அருண்மொழிபட்டனை கைது செய்யும்படியும், அரண் மனையில் இருக்கும் சிறையில் அடைக்கும்படியும் உத்தரவிட் டார். அருண்மொழிபட்டன் தன் வாளை கழற்றி கொடுத்து விட்டு விலங்குக்காக கைகளை நீட்டினான்.

வேண்டாம் என்று சோழ வீரர்கள் சொன்னார்கள். எதற்கய்யா இந்த சண்டை இங்கு வந்து என்று நினைத்துக் கொண்டார் கள். அங்கே அவனுக்கு கட்டிலும், ஆசனமும் போட்டார்கள். உண்ண உணவு கொடுத்தார்கள். சிறைச்சாலை கதவை பூட்டாது வெறுமே சார்த்தி வைத்தார்கள். இது ஒரு விளை யாட்டு என்பதாகத்தான் அவர்களுக்கு பட்டது. ஆனால் அரையன் ராஜராஜன் கோபமாக இருந்தார்.

மூன்று நாட்கள் அருண்மொழிபட்டனோடு அவர் பேச வில்லை. சந்திக்கவில்லை. படைகளை சரி செய்வதும், காயம் பட்டவர்களுக்கு உதவி செய்வதுமாக இருந்தார்.

இந்த இடத்தில் யாரேனும் தங்க வேண்டுமே, இந்த இடத்தை சீர்செய்ய வேண்டுமே என்று அவர் அதிகம் கவலைப் பட்டார்.

தட்சிணலாடத்தில் தெலுங்கு மொழி பேசவல்ல, சோழ தேசத்தை சார்ந்த ஒரு உபதளபதியை தளபதியாக்கினார்.

அவனுக்கு சாமந்த சேனன் என்று பெயர். சாமந்த சேனன் தனக்கு வேண்டிய வீரர்களை பொறுக்கிக் கொண்டான். இருபத்தைந்தாயிரம் வீரர்கள் அவனுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். இன்னும் வடக்கேயும் போகலாம் என்று ஆசைப் பட்டார்கள். கயிலையை பார்க்க விருப்பமுள்ளவர்கள் அதில் இருந்தார்கள்.

இரண்டு நாளைக்குப் பிறகு அருண்மொழிபட்டனை பின்னால் வரச்சொல்லி உத்தரவு கொடுத்துவிட்டு வீரமா தேவியோடு படையை நகர்த்திக் கொண்டு கங்கை கரையை தாண்டினார். தர்மபாலனும், ரணசூரனும், கோவிந்த சந்திரனும் கைது செய்யப்பட்டார்கள். அதில் கோவிந்த சந்திரன் மரியாதை யாக நடத்தப்பட, மற்றவர்கள் கைகள் பிணைக்கப்பட்டிருந்தன. அவர்கள் ஒற்றை ஆடையுடன் இருக்கும்படி செய்யப்பட்டார் கள். கோவிந்த சந்திரனுக்கு மேல் உடுப்பும், அமர்ந்துகொள்ள ஆசனமும் தரப்பட்டன. தண்டபுத்தியில் உள்ள தர்மபாலனை ஒரு மரத்தில் மிருகத்தை போல கட்டிவைத்திருந்தார்கள். மஹிபாலனைத் தேடினார்கள்.

''ஒட்ட தேசத்தை தாக்குகிறாயாமே, கீழை சாளுக்கியத் தின் மீது படையெடுத்து வந்தாயாமே. கங்கே யாதவ் எப்படி இருப்பான். அவனுக்கு எதற்கு உதவி செய்தாய். மேலை சாளுக்கியம் இப்போது உதவிக்கு வந்ததா. எங்கே கங்கே யாதவ்'' என்று சோழப்படை தர்மபாலனைத் துன்புறுத்தியது.

''எப்படி வந்தார்கள் வடக்கே,'' மஹிபாலன் அலறினான். கோசல தேசத்தின் ஒரு அரண்மனையில் மல்லாந்து கிடந்தான்.

''கடலூடே நாவாய்கள் பிடித்து கங்கை கரைக்குள் இறங்கி, நாம் கங்கையை தாண்டிய பிறகு அவர்கள் வந்திருக் கிறார்கள். பிரம்மபுத்ரா பக்கம் ஒரு கடற்படை போய் அங் கிருந்து கங்கையை நோக்கி, இடைப்பட்ட பகுதிகளை எரி யூட்டிக் கொண்டும், அறுத்துக் கொண்டும் வந்துவிட்டது.

இரண்டு படைகளும் கங்கையின் தெற்கு கரையில் ஒன்று சேர்ந்து மேலே தொடர்ந்து வந்தது.''

''தப்பித்து ஓடிவிடலாமா.''

''எங்கே ஓடுவது.''

''கோசல தேசத்தின் வழியாகத்தான். மத்திய பகுதியான போசனிடம் போக வேண்டும்.''

''போசன் நமக்கு எதிரி. கோவிந்த சந்திரனை நம்ப முடியாது. கோசல தேசத்து அந்தணர்கள் காட்டிக் கொடுப்பார் கள். இனி சண்டை போடாதே என்பார்கள். எனவே, தப்பித்து போகவே முடியாது.''

''பிறகு.''

''எதிர்த்து சண்டையிட வேண்டும்.''

''எத்தனை வீரர்கள் சோழத்தில்.''

''இரண்டு லட்சம் வீரர்கள்.''

''எப்படி கணக்கிட்டாய்.''

''மலை உச்சியில் ஏறி நின்று பார்த்தபோது, அலை அலை யாய் குன்றுகள் ஏறி, இறங்கி அவர்கள் வருவது தெரிந்தது. எந்தவித சிரமமும் இன்றி விரைவாக வருகிறார்கள்.''

''வங்க தேசம் காடாயிற்றே.''

''காடு அறுத்து பழக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இரண்டு யானைகள் போகும் அளவுக்கு காடு அறுத்து பாதைகள் போடுகிறார்கள். பாதைகளில் உள்ள பள்ளங்களில் தேர்கள் போவதற்காக சமன் செய்கிறார்கள். காடு வெட்ட பத்தாயிரம் பேர். சமன் செய்ய இருபதாயிரம் பேர். யானைகள் முதலில் வருகின்றன. யானைகளுக்குப் பிறகு தேர். தேர்களுக்கு பிறகு காலாட் படைகள். அதற்கு பிறகு குதிரைப் படைகள்.''

''ஏன் குதிரைப்படைகள் பின்னே வருகின்றன. முன்னே தானே வர வேண்டும்.''

''இல்லை. பின்னால் இருந்து தாக்கினால் அதை தடுக்க குதிரைப்படை சௌகரியமாக இருக்கும்.''

''ஓய்வெடுக்கிறார்களா.''

''கிராமங்களில் படுத்து ஓய்வெடுக்கிறார்கள். திண்ணை யில் படுத்து உறங்குகிறார்கள். முதுகில் போர்வை சுமந்து வரு கிறார்கள். தலைக்கு கல். சுற்றி போர்வை. அடித்து போட்டது போல் தூங்குகிறார்கள்.

"உணவு."

"வீரர்கள் முன்னமே போய் ஆடு அறுத்து துண்டுகளாக்கி பெரும் பானையில் போடுகிறார்கள். அரிசி தனி உலையில் களைந்து சோறாக்கி, இரண்டும் கலந்து வேறு சில விஷயங்கள் சேர்த்து உண்கிறார்கள். வாசனை மூக்கை துளைக்கிறது."

"கறி வாசனையா."

"இல்லை. பருப்பும், அரிசியும் கலந்த வாசனை."

"அத்தனை பேருக்கும் அரிசி எங்கிருந்து."

"தனியாக மாட்டு வண்டிகளில் கூடை கூடையாக வருகிறது. கூடைகளை இறுக்க தைத்து மேலே பாய் போட்டு மூடி, சொட்டு நீர் கூட உள்ளே வராமல் மாட்டு வண்டிகளில் வருகின்றன. ஆடுகளையும் மாட்டு வண்டிகளில் அடைத்து விடுகிறார்கள். வழியில் பிடுங்கிக் கொள்கிறார்கள்."

"தண்டபுத்தி எப்படி இருக்கிறது."

"சிதைந்து விட்டது."

"அப்படியென்றால்."

"கிராமங்கள் எல்லாம் எரியூட்டப்பட்டுவிட்டன. கிழவர் களையும், குழந்தைகளையும் ஓரம் வைத்துவிட்டு வலிவு மிக்க பெண்டிர்களை யானைகளில் ஏற்றி, வண்டிகளில் ஏற்றி தெற்கே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அல்லது எந்த கிராமத் தில் சூறை யாடப்பட்டதோ அங்கேயே வண்டிகளை கட்டிக் கொள்கிறார்கள்."

"ஜனங்கள் கதறவில்லையா."

"லேசாகத்தான் இருக்கிறது."

"ஏன்"

"சொந்த அரசர் கைவிட்ட பிறகு எதற்கு முரண்டு செய்வது. அது தவிர.."

"அது தவிர"

"வண்டியில் வேண்டுமானால் ஏறிக்கொள். விருப்ப மில்லையெனில் விலகிப் போ என்கிறார்கள் சோழ வீரர்கள்.

எங்கே போவது. காட்டிற்குத்தான் போக வேண்டும். காட்டில் இருக்கும் துஷ்ட மிருகங்கள் இவர்களை உலவ விடாது. வீடுகளோ கரிகுப்பைகளாகி விட்டது. எனவே, பல பெண்கள் வண்டியில் ஏறிவிட்டார்கள்.''

''கேவலமாக இருக்கிறதே.''

''கைது செய்யப்படவில்லை. கட்டாயப்படுத்தவில்லை. அதுதவிர இந்திரதத்தன் கதையை சோழ வீரர்கள் சொல்கிறார்கள்.''

''புரியவில்லையே.''

''இந்திரதத்தன் ஒட்ட தேசத்து அரசன். தன் மகனை தன் கையாலேயே கொன்றுவிட்டு சோழப்படை தலைவனுக்கு வணக்கம் செலுத்தி அவனால் கைது செய்யப்பட்டு வேங்கியை நோக்கி அனுப்பப்பட்டிருக்கிறார். வேங்கியிலிருந்து அவர் தஞ்சை நோக்கியும் நகர்ந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. மிக மரியாதையாக தன்னுடைய முன்னூறு படை வீரர்களுடனும், தன்னுடைய அரச குடும்பத்து பெண்களுடனும், புலவர்களுடனும், மந்திரிகளுடனும் அவன் தெற்கே புனித யாத்திரை போக கைகூப்பி போயிருக்கிறான்.

இராஜேந்திர சோழர் அவனை வரவேற்று கோதாவரிக் கரையில் நீத்தார் கடன் செய்யச் சொல்லி, கட்டித் தழுவி அவனை தஞ்சைக்கு அனுப்பிய கதைகள் சொல்லப்படுகின்றன. வயதானவர்கள் அதை பெண்களுக்கு சொல்ல, நாங்களும் இராமேஸ்வரம் போகிறோம் என்று கிளம்பிவிட்டார்கள்.''

''இராமேஸ்வரம் எங்கிருக்கிறது அது.''

''பாண்டிய தேசத்தில்.''

''பாண்டிய தேசம் யார் வசம் இருக்கிறது.''

''சோழர் வசம்.''

''அப்படியானால் குமரியிலிருந்து ஒட்டதேசம் வரை சோழ சாம்ராஜ்ஜியமா.''

''ஆமாம்.''

''மேற்கே.''

''மேலை சாளுக்கியத்தை அவர்கள் அடித்து நொறுக்கி யிருக்கிறார்கள். வேங்கிக்குள் கீழை சாளுக்கியத்திற்குள் நுழையக்கூடாது என்று காலை உடைத்திருக்கிறார்கள். மேலை சாளுக்கிய படை திரண்டு எழ இன்னும் பல வருடங்கள் ஆகும்.''

''ஒட்ட தேசத்தில் அதிகம் சேதமில்லையா.''

''இல்லை.''

''பொன் பொருளை எடுத்துக் கொண்டு போகவில்லையா.''

''எடுத்துக் கொண்டு போனார்களாம். நிலவறையை திறந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதாக கேள்வி.''

''அது இங்கு நடக்காது.''

''நம் தேசம் நம் வசம் இல்லையே, அங்கு அருண்மொழி பட்டனல்லவா இருக்கிறான்.''

''அருண்மொழியா. யார் அது.''

''இன்னொரு தளபதி.''

''அப்போது தெற்கில் இருப்பது.''

''அரையன் ராஜராஜன்.''

''இவ்வளவு தெரிந்திருக்கிறதே, உன்னை இதற்கு முன்பு நான் சந்தித்தது இல்லையே, கோசல தேசமா.''

''இல்லை.''

''ஒட்ட தேசமா.''

''இல்லை.''

''தண்டபுத்தி தர்மபாலனின் இடமா.''

''இல்லை அய்யா.''

''யார் நீ.''

''நான் சோழ தேசத்தின் உபதளபதி.''

''உன்னை இங்கே யார் விட்டது.'' அவன் அலறினான்.

''நான் கேட்க வேண்டும். உங்களை ஏன் இன்னும் உயிரோடு விட்டிருக்கிறார்கள் என்று. உங்களை சுற்றி சோழப்

படைகள் அமர்ந்துவிட்டன. படையெடுப்பு என்று ஒன்று தொலைவே நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு முன்பு ஐநூறு வீரர்கள் உங்களை சுற்றிக் கொண்டு விட்டோம். உங்கள் கொடியை தூக்கிக் கொண்டு உங்களை போலவே உடுப்பு அணிந்து கொண்டு உள்ளே வந்துவிட்டோம். தடுக்க ஒருவருக்கும் திராணி இல்லை. புத்தி இல்லை. எவ்வளவு அசமந்தமான படைகள் உங்களுடையது என்பதை பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. இப்படியா அந்நியரை உள்ளே விடுவது.''

''அடேய், உன்னை என்ன செய்கிறேன் பார்,'' அவன் வாள் உருவினான்.

''உங்களை நோக்கி இருபத்தைந்து அம்புகள் குறிபார்த்துக் கொண்டிருக்கின்றன. சல்லடையாய் உங்களை துளைத்து விட தயாராக இருக்கின்றன. எனவே அமைதியாக இருங்கள். உங்கள் வாளை கொடுத்துவிடுங்கள். உங்கள் மகுடத்தை கழற்றி கீழே வையுங்கள்.''

மஹிபாலன் தள்ளாடினான். இடிந்து உட்கார்ந்தான். சுற்றுப்புறம் பார்த்தான். அந்த மாலை வேளையில் அவனைச் சுற்றி பல வீரர்கள் அவன் தேசத்து உடையில் இருந்தார்கள். அவன் கைகள் நடுங்க வாளை முத்தமிட்டான். சப்தம் எழ தரையில் போட்டான். சோழ வீரர்கள் அந்த வாளை எடுத்துக் கொண்டார்கள். சிரித்தார்கள். மகுடத்தை கழற்றி தரையில் வைத்தான். அந்த உபதளபதிக்கும் மஹிபாலனுக்கும் இடையே மகுடம் இருந்தது. எதனாலேயோ அந்த மகுடம் நோக்கி மஹிபாலன் நகர, அந்த உபதளபதி அந்த மகுடத்தை எட்டி உதைத்தான். சில வங்க தேசத்து வீரர்கள் ஓங்காரமாக கத்தினார்கள். அவர்களை சோழ வீரர்கள் கடுமையாக தாக்கினார்கள். மஹிபாலன் தள்ளாடினான். முகத்தைப் பொத்திக் கொண்டான். சட்டென்று சோழ வீரர்கள் அவனை நோக்கி நகர்ந்து அவன் பின் கையை இழுத்து கயிறு போட்டு இறுக்கினார்கள். அவன் பட்டு சட்டையை இரண்டாக கிழித்தார்கள். கால்களில் இரும்பு சங்கிலியால் விலங்கிட்டார்கள். நெட்டி தள்ளிக் கொண்டு போய் உணவு பரிமாறுகின்ற பீடத்தின் மீது உட்கார வைத்தார்கள்.

எக்காளம் முழங்கிற்று. எரி அம்புகள் மேலே பறந்தன. கோசல தேசத்தின் அரண்மனைக்குள் இருந்த சோழ வீரர்கள் மற்ற எல்லா இடங்களுக்கும் பரவினார்கள். அனேகமாக கோசல தேசத்தில் எதிர்ப்புகள் ஏதும் இல்லை. பூரண கும்பம் ஏந்தி அந்தணர்கள் சோழ வீரர்களை வரவேற்றார்கள். சோழ வீரர்கள் அந்த பூரண கும்பங்களை ஏற்காது விலகி போகச் சொன்னார்கள்.

'ஒருமுறை நீரில் விஷம் குடித்து முந்நூற்றி ஐம்பது பேர் இறந்தது போதாதா. எதையும் நம்ப முடியாது. எவரையும் நம்ப முடியாது.' அவர்கள் அந்தணர்களிடமும் கடுமையாக நடந்து கொண்டார்கள். 'வீட்டிற்குள் போ' என்று உத்தரவிட்டும் உள்ளே போகாமல் பல் தெரிய நின்றிருந்த அந்தணரை இழுத்து வந்து பிரம்பால் அடித்தார்கள். முதுகு முழுவதும் விளாசி னார்கள். அந்த அலறல் சத்தத்தில் அந்த தெருவில் உள்ள அத்தனை அந்தணர்களும் வீட்டிற்குள் அடங்கினார்கள். கதவு இழுத்து வெளியே தாளிட்டார்கள். கயிறு போட்டு பூட்டினார் கள். வீட்டிற்குள்ளிருந்து எவரும் வெளியே வரக்கூடாது என்றார்கள். மீறி வந்தால் அதே இடத்தில் வெட்டிக் கொல்லப் படுவார்கள் என்று சொன்னார்கள். உப்பரிகையிலிருந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு அந்தண இளைஞன் பயத்தில் சறுக்கி தெருவில் விழுந்தான். மூன்று, நான்கு அம்புகள் அவன் நெஞ்சில் குத்தி நின்றன. அதே இடத்தில் இறந்து போனான். அந்த பிணத்தை அப்புறப்படுத்தினார்கள்.

★★★

அத்யாயம்

81

மஹிபாலன் கைது செய்யப்பட்ட அந்த இரவு முழுவதும் சோழ வீரர்கள் எவரும் தூங்கவில்லை. விடியல் நேரத்தில் சோழப்படைகள் கோசல தேசத்தில் நுழைந்தன. அரையன் ராஜ ராஜன் தன்னுடைய பழுப்பு குதிரையில் அழகாக இருபது கொடிகள் அவரை சுற்றி பறக்க பவனி வந்தார்.

''இது கோசல தேசத்தின் தலைநகரமா.''

''இல்லை. ஒரு பெரிய நகரம். அவ்வளவே.''

''இங்கே ஏன் மஹிபாலன் உட்கார்ந்திருக்கிறான்.''

''தெற்கு நோக்கி வருவதற்காக தயார் நிலையில் இருந் தான். ஆனால் நாங்கள் உள்ளே நுழைந்துவிட்டோம்.''

''உங்களுக்கு உத்திரலாடத்து உடைகளும், தலைப்பாகை யும் பொருத்தமாக இருக்கின்றன. இப்படியே சில நாட்கள் இருங்கள்'' என்று உத்தரவிட்டார்.

அந்த உச்சி நேரத்தில் அருண்மொழிபட்டன் வந்த பிறகு இராஜேந்திரரை சந்தித்ததை கேட்ட பிறகு அவனை கைது செய்தார். அருண்மொழி பட்டனுக்கு சிறையில் நல்ல ஓய்வு தரப்பட்டது. நல்ல உணவுகள் தரப்பட்டன. சிறை ஒரு நல்ல மாளிகைக்கு மாற்றப்பட்டது. அருண்மொழிபட்டன் தண் டனையை ஏற்றுக்கொண்டு அமைதியாக இருந்தான். வீரமா தேவி அருண்மொழிக்காக அரையன் ராஜராஜனிடம் வாதாடி னாள்.

''அப்படியானால் என்னையும் கைது செய்திருக்க வேண் டுமே.''

''நீங்கள் தலைமை ஏற்கவில்லை.''

''நானும் கடல் வழியாக வந்தவள்தானே.''

''ஆனால் நீங்கள் இராஜேந்திர சோழரை சந்திக்கவில்லை. இங்கு குற்றம் என்னை மீறி இராஜேந்திர சோழரை சந்தித்தது தான்.''

''ஒருவேளை நான் இராஜேந்திர சோழரை சந்தித்திருந் தால்.''

''உங்களை நான் கைது செய்ய மாட்டேன்.''

''ஏன்''

''புருஷனை அவன் மனைவி போய் சந்திப்பதை எப்படி தடுப்பது. தடுக்க எவருக்கு அதிகாரம் உண்டு.''

''உங்களுக்கு அருண்மொழிபட்டன் மீது ஏதோ ஆத்திரம்.''

''ஆமாம். என்னை விட மிகச் சிறந்த செயல்வீரர். பேரழகர். இராஜேந்திர சோழருக்கு அவன்தான் வலது கை. நான் வெறும் குப்பைமேடு. அதனால்தான் கைது செய்துவிட்டேன்.''

''ஏன் எகிறியே பேசுகிறீர்கள்.''

''என்னுடைய படைவீரர்களுக்கு இது தெரிய வந்து விட்டது. இராஜேந்திர சோழருக்கு நெருக்கமாக அருண்மொழி பட்டன் இருக்கிறான் என்றால் நான் இல்லை என்று அர்த்தம். நான் தலைமை ஏற்கவில்லை என்று அர்த்தம். சோழப்படை இரண்டு தலைவர்களிடம் இரண்டாக பிளவுபட்டு இருக்கிறது என்று அர்த்தம். என்னைத் தாண்டி எவரும் இயங்கக்கூடாது என்பது என் படை வீரனுக்கு புரிய வேண்டும். எனவே கைது செய்யப்பட்டது. அருண்மொழிபட்டனாக இருந்தாலும் கைது செய்யப்படுவான். சிறையில் அடைக்கப்படுவான். இதை சொல்லத்தான் கைது படலம்.''

''ஒரு நாடகமா.''

''இல்லை கோபமும் கூட.''

''வேறு என்ன செய்யப் போகிறீர்கள்.''

''மஹிபாலனின் மகுடத்தை எட்டி உதைத்து அவனை கைது செய்த உபதளபதிக்கு மாராயர் பட்டம் தரப்போகிறேன். அருண்மொழிக்கு அடுத்தபடி அந்த உபதளபதி இருப்பான். தளபதி ஆகாமல் சேனாதிபதி ஆகாமல் அவன் மாராயன்

பட்டம் பெறுவான். அவனுக்கு ஆயிரம் பொற்காசுகள் தரப் படும். இந்த வங்க தேசத்தின் ஒரு பகுதி அவனுக்கு அன்பு காணிக்கையாக தரப்படும்.''

''ஏற்கனவே ஒருவனுக்கு கொடுத்திருக்கிறீர்களே.''

''இன்னும் பல பேருக்கு கொடுக்கலாமே. இப்படி கொடுக்கக் கூடியவன் அரையன் ராஜராஜன் என்று தெரிய வேண்டுமே. அருண்மொழிபட்டனை கைது செய்து, மற்றவர் களுக்கு நிலமும், பொன்னும் வாரிக் கொடுக்கின்ற யோக்கி யதை எனக்கு இருக்கிறது என்று படைவீரர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமே.''

''இதை இராஜேந்திரர் ஆமோதிப்பார் என்று நினைக் கிறீர்களா.''

''எனக்கு அதுபற்றி கவலை இல்லை. தண்டித்தால் ஏற்றுக் கொள்வேன். என் பங்கு நியாயத்தை சொல்வேன்.''

''இப்பொழுது நான் உங்களுக்கு எதிரே எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்.''

''நீங்கள் அரசரின் மனைவி. அவரின் அபிமானவல்லி. உங்களை பற்றி எனக்கு எந்த கட்டளையும் இல்லை. நீங்கள் இந்த படையோடு இருப்பதென்றாலும் இருக்கலாம். தெற்கு நோக்கி போவதென்றாலும் போகலாம். இங்குள்ள பண்டக சாலையில் எது வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு நகரலாம். நீங்கள் முழு சுதந்திரத்தோடு நடமாடலாம்.''

''எனக்கு பண்டகசாலை வேண்டாம். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.''

''பிறகு.''

''நான் சில பொன் நாணயங்களோடு வடக்கு நோக்கி போகப் போகிறேன்.''

''எதற்கு வடக்கு, என்ன இருக்கிறது அங்கே.''

''கங்கை கரையோரம் நகர்ந்து பல நகரங்கள் பார்த்து வரப் போகிறேன். பரத கண்டத்தின் மத்திம பகுதிக்கு. குறிப்பாய் போசனின் ராஜ்யத்திற்கு.''

''கங்கையில் பிரவாகம் இருக்குமே.''

''எதிர்த்து போக முடியும். வடக்கத்தி காற்றை பாய்மரம் சாதகமாக திருப்பிக் கொண்டால் அதனூடே நாவாய்கள் கங்கையை ஊடறுத்து போகும். துடுப்பு போடவும் இங்கிருந்து ஆட்கள் எடுத்துப் போகப் போகிறேன்.''

''நான் மறுப்பு சொல்லவில்லை. ஆனால் இது தேவையா.''

''அதுபற்றி உங்களுக்கு எந்த அக்கறையும் வேண்டாம். நான் இப்பொழுதே கிளம்புகின்றேன். எனக்கு பொற்காசுகள் வேண்டும். மூன்று நாவாய்கள் வேண்டும். ஐநூறு வீரர்கள் வேண்டும். குதிரைகள் வேண்டும்.''

''நீங்களே சகலமும் எடுத்துக் கொள்ளலாம். உங்களுக்கு முழு உரிமையும் உண்டு. அரையன் ராஜராஜன் எழுந்து கைகூப்பி முதுகு வளைந்து வணங்கினார்.

''தயவு செய்து அருண்மொழிபட்டனை விட்டு விடுங் கள்.''

''அது முடியாது.''

''ஒருவேளை நான் அருண்மொழிபட்டனை அழைத்துக் கொண்டு போக விரும்பினால்.''

''தாராளமாக போகலாம். இப்பொழுது அந்த கைதியை விடுவித்து உங்களிடம் கைதியாக ஒப்படைப்பேன்.''

''அருண்மொழிப்பட்டன் என்கிற மாதண்ட நாயகரை, மாராயரை யார் கைது செய்வது, யார் அடிமை ஆக்குவது, விளையாடுகிறீர்களா. உங்கள் வெறுப்புக்கு ஆளாகிவிட்டார். அவர் இங்கிருந்தால் மேலும் சண்டை, சச்சரவுகள் வளர்ந்து கொண்டிருக்கும். நான் அவரை அழைத்துப் போகிறேன்.'' அவள் தெளிவாகச் சொல்ல, அடுத்த சில விநாடிகளில் அருண்மொழி பட்டன் தன் துணிமணி மூட்டைகளோடும், உடை வாளோடும், மாதண்ட நாயகன் என்ற கேயூரத்தோடும், அழகான காலணி களோடும் தன் கருப்பு குதிரை ஏறினான். அவர்கள் அந்த நகரத் திலிருந்து வடக்கே கங்கை கரையோரம் போனார்கள்.

அங்கே நிறுத்தப்பட்டிருந்த நாவாய்களில் சிறந்ததை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். வீரர்களை ஏற்றினார்கள்.

அன்று இரவு அங்கு தங்கி உணவு சமைத்தார்கள். எதுவும் பேசாமல் கை கட்டியபடி கங்கை நதியை அருண்மொழிபட்டன் பார்த்துக் கொண்டிருந்தான். அரையன் ராஜராஜன் செய்தது சரி என்று தெளிவாய் அவனுக்கு புரிந்திருந்தது. தான் அந்த இடத்தில் இருந்தால் அப்படித்தான் செய்திருப்போம் என்பதால் அதில் அவனுக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால் தன்னுடைய படைவீரர்கள் பெரும் பகுதியினர் இப்பொழுது அரையன் ராஜராஜனுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு விட்டார்கள். அரையன் ராஜராஜனுக்கு நெருக்கமாக இருக்கும் வீரர்கள் ஒருவேளை இவர்களை தொந்தரவு செய்யலாம்.

அரையன் ராஜராஜனிடம் இருப்பது இடங்கை வீரர்கள், அருண்மொழி பட்டனிடம் இருப்பது வலங்கை வீரர்கள். இது ஜென்மாந்திர சண்டை, சோழ தேசத்தின் பலவீனங்களில் ஒன்று இந்த இடங்கை, வலங்கை சண்டை. இவை ஏற்படக்கூடாது என்பதற்குத்தான் அவன் வலங்கை வீரர்களை பிரித்துக் கொண்டு வந்தான். ஆனால் இப்பொழுது வலங்கை வீரர்கள் இடங்கை வீரர்களுக்கு நெருக்கமாக இருக்க வேண்டும். இடங்கை வீரர்கள் இப்பொழுது வெற்றி பெற்றதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரையன் ராஜராஜன் வெற்றி பெற்றால் அது தங்களுடைய வெற்றி என்று கும்மாளம் அடிப்பார்கள். இதை வலங்கை வீரர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். பொறுத்துக் கொள்ளாது போனால் சோழ வீரர்களுக்குள் சண்டை ஏற்படும்.

இப்போது அவர்களை அங்கு விட்டு விட்டு வருவது நல்லதா. இது தவறல்லவா. கவலைப்பட்டான். ஆனால் தான் கைது செய்யப்பட்டதை விரும்பாது வீரமாதேவி தன்னை கங்கை பயணத்திற்கு அழைத்து வந்துவிட்டாள். காரணம் தெரியவில்லை.

''காரணம் இருக்கிறது. அருண்மொழிபட்டரே, நான் சுற்றுலாவிற்கு வரவில்லை. படை எடுத்து வந்திருக்கிறேன் என்பதை புரிந்திருக்கிறேன். வேறு ஒரு செய்தி எனக்கு கோசல தேசத்து அந்தணர்கள் மூலம் சொல்லப்பட்டது.

கங்கை கரையில் வசிக்கின்ற கோசல தேசத்து அந்தணர்கள் சில விஷயங்களை பரிமாறினார்கள். அதேநேரம் அரையன்

ராஜராஜனுடைய படை வீரர்கள் அந்தணர்கள் சிலரை அடித்தும், கொன்றும், வீடுகளை எரித்தும் மோசமான வார்த்தைகளால் மிரட்டியும் தங்களுடைய மிருக பலத்தை காட்டிக் கொண்டிருந்தார்கள். இதை தடுக்கவும் முடியாது. அதே சமயம் இதை ஆதரிக்கவும் இல்லை.

இந்த விஷயத்தை நான் அரையன் ராஜராஜனிடம் கொண்டு போனால் அவர் என்ன செய்வார் என்பதும் தெரியாது. ஆனால் நான் செய்ய வேண்டியதை செய்தாக வேண்டும் என்று தீர்மானித்தேன்.''

''என்ன அது. விவரமாக சொல்லுங்கள்.''

''வடக்கே இருந்து வடமேற்கே இருந்து கிழக்கு நோக்கி, காசி தாண்டி அதற்கு முன்னே இருக்கின்ற ஜீவ நதிகள் தாண்டி யவனர்கள் வருகிறார்கள். பெரும் படையோடு வருகிறார்கள். ஊர்களை கொள்ளையடிக்கிறார்கள். சோமநாதபுரம் என்ற ஊரில் சிவன் கோவில் யவனர்களால் முற்றிலும் சிதைக்கப் பட்டது.

கங்கை கரை வழியே நான் போசனுடைய தேசத்திற்கு போகப் போகிறேன். அங்கே படையெடுத்து வருவதாக யவனர்கள் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். போசனுடைய தேசத்தை தாக்கப் போகிறார்களாம். தாக்காமல் இருப்பதற்கு போசன் காசு கொடுக்க வேண்டுமாம். அதை கொடுத்தாலும் கிராமங்களை நாசம் செய்கிறான். பெண்களை இழுத்து போகிறான்.''

''யார் அது வருவது, அரசன் பெயர் என்ன.''

''அரசன் அல்ல, வெறும் கொள்ளை கூட்ட தலைவன். கஜினி என்ற ஊரிலிருந்து முகமது என்ற பெயர் கொண்ட ஒரு வீரன் வருகிறான். மிகக் கொடூரமானவன். கஜினி முகமது என்று அவனை அழைக்கிறார்கள். 'ஹுசூர்' என்கிறார்கள்.''

''ஹுசூர் என்றால்.''

''அரசர் என்று பொருள். ஒருவேளை அவன் அரசனாகவும் இருக்கலாம். அதுபற்றி தெரியவில்லை. ஆனால் அவர்கள் கோவில்களை இடிக்கிறார்கள்.''

"எதற்கு."

"கோவில்களில் விக்ரகங்களுக்கு அடியே வைரங்களும், வைடூரியங்களும், தங்க நகைகளும் இருக்குமென்று அவர்களுக்குசொல்லியிருக்கிறார்கள். அதனால் கருவறைக்குள் நுழைந்து லிங்கங்களை பெயர்க்கிறார்கள். விக்ரஹங்களை உடைக்கிறார்கள்."

"ஏன், நகைகளுக்காகவா."

"இல்லை. வேறொன்று விஷயம் இருக்கிறது. அவர்களுக்கு விக்ரஹ வழிபாடு இல்லை. அந்த விக்ரஹ வழிபாடு செய்வதை அவர்கள் கேலியாகவும், அசிங்கமாகவும் நினைக்கிறார்கள். எனவே விக்ரஹங்களை உடைக்கிறார்கள். சோமனாத்பூர் என்ற சிவன் கோவிலை முற்றிலும் பாழாக்கி விட்டார்கள். ஊரைச் சுற்றி பெரும் கொள்ளை நடந்திருக்கிறது. யானைகளில் விக்ரஹங்களையும், பொன்னாலான பட்டைகளையும் எடுத்துப் போயிருக்கிறார்கள்."

"எப்பொழுது போசனுடைய தேசத்திற்கு வருகிறார்கள்."

"தெரியவில்லை. ஆனால் நீங்கள் உண்மையிலேயே சிறந்த வீரனாக இருந்தால் போசனுடைய நகரத்தை நோக்கி போங்கள். கங்கை வழியாக போனால் காசிக்கு முன்னாலேயே போசன் தேசத்தை அடைந்துவிடலாம். காசி கூட அந்த கஜினி முகமதுவால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கும் என்று சொன்னார்கள்."

"காசி உத்தமமான க்ஷேத்ரம் அல்லவா."

"அது உங்களுக்கும், எனக்கும். யவனர்களுக்கு இல்லை, யவனர்கள் தங்களுடைய ஒரே ஒரு இடம் தவிர வேறு எதுவும் புனிதமானது இல்லை என்று கருதுகிறார்கள். அதுவும் தவிர."

"அதுவும் தவிர."

"மொத்த பரத கண்டத்தையும் தாங்களே ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றிவிட்டதாம். இங்கேயே தங்களுடைய சாம்ராஜ்ஜியத்தை நிலைநிறுத்தப் போகிறார்களாம்."

"போசன் சும்மாவா இருக்கிறார்."

''அடிவாங்கிக் கொண்டிருக்கிறாரே.''

''மற்ற மன்னர்கள்.''

''பிரிந்து கிடக்கிறார்கள். அவனுடைய கொடூரத்திற்கு பயந்து கிடக்கிறார்கள்.''

''அடடே, இதை அரையன் ராஜராஜனிடம் சொல்லி யிருக்க வேண்டுமே.''

''வேண்டாம். இது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. அந்தணர் பேச்சை அரையரிடம் சொன்னால் அவர் ஏற்பாரா என்று தெரியவில்லை. அதுவும் தவிர.''

''அதுவும் தவிர.''

''சோழ வீரர்கள் சோர்ந்து விட்டார்கள். அவர்கள் தெற்கே நகர்வார்களே தவிர வடக்கே இன்னும் வடமேற்கே என்றால் அவர்களால் வர முடியாது. அது நம் படைக்குள் பெரும் குழப் பத்தை ஏற்படுத்தும்.''

''நான் வேறொரு குழப்பத்தை எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறேன்.''

''தெரியும். உங்களுடைய வலங்கை படையும் அரைய னுடைய இடங்கை படையும் அடித்துக் கொள்ளும். நீங்கள் உங்களுடைய வீரர்களுடன் வந்திருக்கலாம்.''

''இப்பொழுது இருக்கும் மூவாயிரம் வீரர்கள் போதுமா.''

''நிச்சயம் போதாது, யவனர்கள் லட்சக்கணக்கில் வரு கிறார்கள். தெருவில் அலைகிற பையன்கள் கைகளிலெல்லாம் ஈட்டிகளை கொடுத்து குதிரையில் ஏற்றி வருகிறார்கள். பெரிய ஒட்டகங்களில் வருகிறார்கள். ஆனால் யானைகளை கண்டு மிரள்கிறார்கள்.''

''நாம் அரையருக்கு சொல்லி வடகிழக்கு போய் வரு வோமே.''

''இல்லை. போய் என்ன நிலைமை என்று கண்டு வரு வோம். இப்போதைக்கு போச தேசத்திற்கு ஆபத்து இல்லை. விடியற்காலையில் நாம் கிளம்பலாம்.''

அந்த சிறிய படை மூன்று நாவாய்களில் ஏறி கங்கை ஊடே பாய்மரம் விரிந்து வடக்கு திசை காற்றை வாங்கிக் கொண்டு துடுப்பு போட்டு விரைவாக நகர்ந்தது.

ஆனால் நாவாய்களை விட குதிரைகள் வேகமானவை. அவர்கள் நகர்வதை போச தேசத்து வீரர்கள் போசனிடம் சொல்ல முன்னமே விரைந்தார்கள். போசனிடம் போய் இறங்கி தகவல் சொன்னார்கள்.

போச தேசத்து மன்னன் கைகூப்பி அவர்களை வணங் கினான். பெரும் பொருள் கொடுத்தான்.

''வரட்டும், கங்கை கரையோரம் நாம் காத்திருப்போம்'' என்று சொன்னான். போச தேசத்தின் வீரர்கள் திரும்பினார்கள். போச மன்னனிடம் இந்த செய்தி தெரிந்ததும் அவன் தேசத் திற்கும் தெரிந்ததாயிற்று. போச தேசத்திலிருந்து வடமேற்கே சில வீரர்கள் பறந்தார்கள்.

நதிகள் பாய்கின்ற அருமையான கோதுமை வயல்கள் விளைகின்ற தேசத்தை நோக்கி நகர்ந்தார்கள். அங்கு கஜினி முகமது சம்மணமிட்டு உட்கார்ந்திருந்தான். அரண்மனையை அவன் வீரர்கள் காவல் காத்தார்கள். அந்த நாட்டு அழகிய பெண்கள் பலர் அந்த அரண்மனையில் அரை நிர்வாணமாக கிடந்தார்கள். எல்லா பெண்களும் எல்லோருக்கும் என்று சொல்லப்பட்டது. மிகச் சிறந்தவர்கள் கஜினி முகமதுவிற்கு என்று ஒதுக்கப்பட்டனர். இந்த போகம் தாண்டி இன்னும் வட கிழக்கே நகர, அவன் வீரர்களுக்கு விருப்பமில்லை.

பெரும்படையோடு சோழர்கள் என்பவர்கள் போசனுக்கு துணையாக வந்துவிட்டார்கள். கங்கை கரை ஓரம் நாவாய்கள் செலுத்தி வந்துவிட்டார்கள். ஆயிரக்கணக்கில் வந்துவிட்டார் கள் என்றதும் இப்போதைக்கு போர் வேண்டாம் என்று தோன் றியது. கிடைத்த பெண்களோடும், பொருட்களோடும் கஜினி முகமது வடமேற்கே பின்னடைந்தான்.

அவனுக்கொன்றும் பரத கண்டத்தை ஆளுமை செய்யும் எண்ணம் இல்லை. பொன்னும், பொருளும், பெண்ணும் கிடைத் தால் போதும் என்ற எண்ணம்தான் இருந்தது. போசனுக்கு இந்த

செய்தி தெரிய, வீரமாதேவியும், அருண்மொழிபட்டனும் இறங்குவதற்கு சரியாக இருந்தது.

அருண்மொழிபட்டன் அரசன் என்றும் வீரமாதேவி அவன் மனைவி என்றும் போசன் புரிந்து கொண்டான். அவனுக்கு தெளிவாக விளக்கிச் சொல்ல, மன்னிப்பு கேட்டான்.

''கஜினி முகமது என்பவன் பின்னடைந்து விட்டான். உங்கள் உதவிக்கு நன்றி. என்ன தரட்டும்'' என்று அவன் கேட்க, ''எதுவும் வேண்டாம்'' என்று சொல்லி, அங்குள்ள சிவ ஸ்தலங்களையும், விஷ்ணு ஸ்தலங்களையும் வணங்கி னார்கள். கங்கை கரையில் குளித்து தர்ப்பணம் செய்து தானம் வழங்கினார்கள். போச ராஜனிடம் விடைபெற்று இன்னும் வட மேற்கே நகர்ந்தார்கள். காசி தேசத்தில் இறங்கினார்கள். விஸ்வ நாதரை தரிசித்தார்கள். நீத்தார் கடன் செய்தார்கள். அவர்களை அந்தணர்களும், வணிகர்களும் சூழ்ந்து வரவேற்க, அவர்களிடம் சமஸ்கிருதத்தில் பேசினார்கள். உடைகள் வாங்கினார்கள். பித்தளை பாத்திரங்கள் வாங்கினார்கள். கங்கை ஜலத்தை நதியின் நடுவில் இருந்து எடுத்துக் கொண்டார்கள். விஸ்வ நாதரின் படம் வாங்கிக் கொண்டார்கள். சாளக்கிராமமும், சிவ லிங்கமும் கடையிலிருந்து விலை கொடுத்து வாங்கினார்கள். சோழ வீரர்கள் பை பையாய் பலவித பித்தளை பாத்திரங்கள் வாங்கினார்கள். அங்கிருந்து விடைபெற்று முதலைகள் நிறைந்த கங்கை நதியை பல்வேறு மன்னர்களின் கதைகளை கேட்ட வண்ணம் கடந்து கங்கையின் முகத்துவாரத்திற்கு வந்தார்கள்.

''இங்கு இறங்கி அரையன் ராஜனுடன் சேர்ந்து கொள்வீர் களா.'' அருண்மொழிபட்டன் மறுத்துவிட்டான்.

வீரமாதேவியோடு கங்கை முகத்துவாரம் இறங்கி வடக்கி லிருந்து வீசும் காற்றை பயன்படுத்திக் கொண்டு அரையன் ராஜ ராஜனுக்கு முன்பு வேங்கி தேசத்தை அடைய வேண்டும் என்று விரும்பினார்கள்.

உத்ரலாட தேசத்திலுள்ள பெரிய பாத்திரங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. அவைகளில் கங்கை நீர் பிடித்து அவைகளை அசையாது மரச்சட்டம் அடித்து வைத்தார்கள்.

கங்கையிலிருந்து குடம் குடமாய் நீர் எடுத்து அவைகளில் நிரப்பப்பட்டன. நானூறு தவலைகளில் கங்கை ஜலம் இருந்தது. அதற்கு மேல் மூடி போட்டு, ஈயத்தால், பித்தளையால் பற்று வைத்தார்கள். பெரிய கற்களை அசையாது அதன் மீது வைத்தார்கள். பிறகு முகத்துவாரத்திற்கு வந்தார்கள்.

வீரமாதேவி அங்கும் இறங்கி தன்னுடைய தந்தைக்கும், தாய்க்கும், முன்னோர்க்கும் ஒரு ஆணைப் போல அமர்ந்து சிரார்த்தம் செய்தாள். பிண்டம் உருட்டினாள். நூற்றுக்கணக்காக அலையும் நாய்களுக்கு வரிசையாக இலை பரப்பி சோறு இட்டாள். நாய்கள் சண்டை இடாமல் அமைதியாக உணவு உண்டன. அவளை சுற்றி சுற்றி வந்தன.

சூரிய உதயம் அந்த இடத்தில் அற்புதமாக இருந்தது. ஒரு நாவாய் முழுவதும் மூங்கில்கள் ஏற்றிக் கொண்டார்கள். பிரம்புகள் ஏற்றிக் கொண்டார்கள்.

''ஒரு அழகான செம்மை நிற கற்களால் ஆன நிற்கின்ற ஒரு காளி சிலை இருக்கிறது'' ஒரு வீரன் வந்து சொல்ல, குதிரை ஏறி அதைப் போய் பார்த்துவிட்டு வந்தான். இரவோடு இரவாக சோழ வீரர்கள் அதை பிடுங்கிக் கொண்டு வந்து அதை நாவாயில் சேர்த்தார்கள். நாவாய் ஒரு விடியற்காலையில் பாய்மரம் விரித்து வடக்கத்தி காற்றை வாங்கிக் கொண்டு போக, கோசல தேசத்தின் கரையில் காத்திருந்த சோழ தேசத்து நாவாய்கள் அவர்களை பின்தொடர்ந்தன.

குட்டன் கணவதியும், சிவ ஸ்வாமியும் ஆளுக்கு ஒரு மரக்கலன்களால் பின்தொடர, அவர்களை தொடர்ந்து மற்ற மரக்கலன்களும் வந்தன. அவற்றில் விதம் விதமான சிலைகளும், தோரணவாயிலும் ஏற்றப்பட்டிருந்தன.

வங்க தேசத்திலிருந்து தொடர்ந்து பின்னே வராதபடி ஒரு நாவாய்க்கு நாலு யானைகளும், பலநூறு சிறந்த குதிரைகளும் ஏற்றப்பட்டன.

அவர்களை தேவரடியார்கள் என்று சோழ வீரர்கள் அறிமுகப்படுத்தினார்கள். அருண்மொழிபட்டன் எந்த விருப்பமும் இல்லாமல் உங்கள் விருப்பம் என்று சொல்லிவிட்டான். அரையன் ராஜராஜன் இன்னும் உத்திரலாடத்தை விட்டு

கிளம்பவில்லை என்ற செய்தி ஒரு சிறிய படகு மூலம் வந்தது. அவர்கள் தெற்கு நோக்கி போவது அரையன் ராஜராஜனுக்கும் தெரிந்தது. அரையன் ராஜராஜன் மஹிபாலன் தலையிலும், தர்மபாலன் தலையிலும், கோவிந்த சந்திரன் தலையிலும் ஒரு சிறிய பானைகள் வைத்து அதில் கங்கை நீர் ஊற்றி 'சோழம் சோழம்' என்று சொல்லிக் கொண்டே தெற்கு நோக்கி வர வேண்டும் என்று கட்டளையிட்டான். பலகாத தூரம் அவர்கள் அவ்விதம் சொல்லிக் கொண்டே சோழ தேசம் நோக்கி பயணப் பட்டார்கள். ஊர் நோக்கி திரும்புகிறோம் என்ற குதூகலத்தில் சோழ வீரர்கள் ஆரவாரமாக வந்தார்கள். இன்னும் பொருட்களை சேர்த்துக் கொண்டார்கள். மாட்டு வண்டிகளை பறித்துக் கொண் டார்கள்.

மிகப் பெரிய கூடுதலான வீரர்களோடும், மாட்டு வண்டிகளோடும் திரும்பின வழி முழுவதும் விருந்து நடந்தது. ஒட்ட தேசத்திற்குள் நுழைந்து வேங்கிக்குள் அரையன் ராஜராஜன் செய்தி அனுப்பினார்.

வேங்கி அலங்கரிக்கப்பட்டது. இரண்டு நாள் பயணத்தில் வேங்கியில் கோதாவரி கரையின் வடக்கே வந்துவிடுவார்கள் என்று சொல்லப்பட்டது. இராஜேந்திர சோழர் தன் மனைவிகளோடு கோதாவரிக் கரையை தாண்டினார். கோதாவரிக் கரையின் உள்ளே நாவாய்கள் திரும்பின. அருண்மொழி பட்டன் முதல் நாவாயில் சோழக்கொடி பறக்க நின்றிருந்தான். அடுத்த நாவாயில் வீரமாதேவி சோழக் கொடியோடு நின்றிருந்தாள். ஒன்றன் பின் ஒன்றாக நாவாய்கள் நகர்ந்தன. மழை வரும் என்று தெரிந்தது.

''இன்னும் இரண்டு நாள் பொறு மழையே.'' இராஜேந்திர சோழர் வேண்டினார். அந்தணர்களை வேண்டச் சொன்னார். கோதாவரியின் வடகரையில் நாவாய்கள் நங்கூரம் இட்டு நின்றன. அருண்மொழிபட்டன் படகில் இறங்கி இராஜேந்திரர் இருக்கும் கரை நோக்கி வந்தான். கரை ஏறினான். மண்ணை தொட்டு வணங்கினான்.

''ஹா, வந்துவிட்டோம். உயிரோடு திரும்பி விட்டோம்'' என்று முனகினான்.

கரையின் மீது அருகில் எவரும் இல்லாது தன்னந்தனியே பாதரட்சைகளுடன், இடுப்பில் இறுக்கி கட்டிய வேட்டியுடன், மேலே சால்வையுடன், தலையில் கிரீடத்துடன், இடுப்பில் வாளோடு நிறைய மாலைகள் அணிந்து, புஜங்களில் கேயூரம் தாங்கி, கைகளில் கங்கணம் தாங்கி, காலிலே வீரகழல்கள் அணிந்து மீசையை முறுக்கி மிகப்பெரிய சிரிப்போடு, சிரிப் பில் பல் தெரிய, நெற்றி விபூதி பளிச்சிட, மிக உயர்ந்த குரலில் ''அருண்மொழி.. என்று கத்தினார்.

அருண்மொழி ஓடினான். அவருக்கு எதிரே கைகூப்பி நின்றான். காலில் விழுந்து வணங்கினான். இறுக்க காலை பிடித்துக் கொண்டான்.

''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க் கும் இறைவா போற்றி.'' அவர் பிளிறினார். வாரி அவனை அணைத்துக் கொண்டார்.

''என் சிவனே, என் சிவனே. என் குழந்தைகளை பார்த்து விட்டேன் ஐயா. என் தம்பிகளை பார்த்துவிட்டேன் ஐயா. என் படைவீரர்களை பார்த்துவிட்டேன் ஐயா. என் சேனாதிபதி களை பார்த்துவிட்டேன் ஐயா. ஊத்தை அடையாமல் என் தளபதிகள் என்னை வந்து சேர்ந்துவிட்டார்கள் அய்யா. சிவனே, என் சிவனே உன்னை கங்கை நீரால் குளிப்பாட்டுவேன். குளிரக் குளிர உன்னை நான் குளிப்பாட்டுவேன். உன்னை நான் ஒட்ட தேசத்து பொற்கிழிகளால் அலங்கரிப்பேன். ஜெயங் கொண்ட சோழபுரத்து ஈசனே, பெருவுடையாரே, இராஜ ராஜேஸ்வரா, உனக்கு என் வந்தனம். நிசும்பசூதனி உனக்கு என் வந்தனம். சோழ தேசத்தில் உள்ள அத்தனை கோவில் களுக்கும் கங்கை நீர் போகும். அதுமட்டுமல்ல பெரிய ஏரி வெட்டிக் கொண்டிருக்கிறானாம் என்னுடைய அன்பன் நித்த வினோதப் பெருந்தச்சன் இரவி. அங்கே இந்த கங்கை நீரை கலக்குவேன்.

அருண்மொழிபட்டா, நான் ஒரு தூண் எழுப்பப் போகி றேன். அருண்மொழிபட்டா சாரங்கள் கட்டி, தவலைகளில் கங்கை நீரை எடுத்துக் கொண்டு வருகிறானாம் நம்முடைய அரையன் ராஜராஜன். அதையெல்லாம் ஒன்றாக அடுக்கி ஒரே நேரத்தில் அந்த சாரங்கள் உச்சியில் இருந்து அந்த ஏரிக்

குள்ளே கங்கை நீர் பாயும். ஒரு தூண் போல நிற்கும். ஒரு ஜல ஸ்தம்பம்அங்கு நிற்கும். கங்கை நீர் அந்த ஏரி முழுவதும் பரவும். அந்த ஏரி முழுவதும் கங்கை. கோவில் முழுவதும் அலம்பப்படும். கோவில் முழுவதும் கங்கை. அது 'கங்கை கொண்ட சோழேஸ்வரம்.' 'கங்கை கொண்ட சோழேஸ்வரம்.''' அவர் கண்களில் நீர் வழிந்தது. உரக்க கத்தியதில் நிறைவு தெரிந்தது.

அருண்மொழிபட்டன் கைகூப்பி நின்றிருந்தான். அவன் கண்கள் பனித்தன.

''உங்களுடைய ஆசி இல்லாவிட்டால், உங்களுடைய வழிநடத்தல் இல்லாவிட்டால் தனியாக நாவாய்களில் நானும், வீரமாதேவியும் சுற்றி கங்கை கரைக்கும், பிரம்மபுத்ராவிற்கும் நுழையாமல் இருந்தால், வடக்கே இருந்து மஹிபாலனை தாக் காமல் இருந்தால் இந்த வெற்றி கிடைத்திருக்காது. கிடைத் திருக்கும். நிறைய சேதம் ஏற்பட்டிருக்கும். அதிக சேதம் இல்லா மல் நிறைய பேர் ஊத்தை அடையாமல் நாம் வெற்றி பெற்று விட்டோம். மஹிபாலன் கைது செய்யப்பட்டு விட்டான் என்று கேள்விப்பட் டிருக்கிறோம்.

நானும், வீரமாதேவியும் கங்கை கரை ஓரமாக சென்று போச தேசத்திற்கு போய் பிறகு அங்கிருந்து காசி தேசத்திற்கு சென்று அங்கு நீத்தார் கடன் செய்தோம். இராஜராஜருக்காக அங்கு அந்தணர்களுக்கு விருந்து வைத்தோம். காக்கைகளுக்கு சோறு இட்டோம். மீன்களுக்கு பொரி போட்டோம். இராஜராஜர் ஏற்றுக்கொண்டார் என்று உளமாற நம்புகிறேன். மன்னர் மன்னா, வீரமாதேவி தன் மாமனாருக்கு உவப்பாக இருக்க வேண்டும் என்று எங்கெல்லாம் கோவில் தெரிகிறதோ அங் கெல்லாம் இறங்கி நீத்தார் கடன் செய்தார். குறிப்பாக கங்கை யும், கடலும் சந்திக்கின்ற இடத்தில் மிகப்பெரிய விருந்து வைத்தார். நாய்களுக்கு சோறு இட்டார். அப்பா. ஆயிரக்கணக்கான நாய்கள் அமைதியாக சோறு உண்டன. அந்த இடத்தில் நான் இராஜராஜரை பார்த்தேன். இராஜராஜர் எதிரே தான் அப்படி ஒரு அமைதி இருக்கும். சோறு உண்ணும் நாய்களிடையே இருந்தது.

உங்களுக்காக வீரமாதேவியார் கங்கை நீர் எடுத்து வந்திருக்கிறார். காளி சிலை எடுத்து வந்திருக்கிறார். பொன் நகைகளும், மூங்கில்களும், பிரம்புகளும், வங்க தேசத்து மரச் சாமான்களும் நாவாயில் இருக்கின்றன.''

வீரமாதேவி படகு இறங்கி அருகே வந்தாள். புருஷனை தொலைவிலிருந்து பார்த்தாள். இராஜேந்திர சோழருக்கு இருப்பு கொள்ளவில்லை. இடமும், வலமும் அலைந்தார். தூரத்தி லிருந்து மனைவியை பார்த்தார். அங்கேயே உடைகளை சீர் குலைத்து ஆரத்தழுவிக் கொள்ள வேண்டும் என்று இருந்தது. அது அவர் கண்களில் தெரிந்தது. வீரமாதேவி புன்னகை செய்தாள். மெல்ல தலையசைத்து கூடாது என்றாள். அருகே வந்தாள். விழுந்து வணங்கினாள். அருண்மொழிபட்டனை அணைத்துக் கொண்டது போல அணைத்துக் கொள்ள தோன் றியது. ஆனால், இல்லை. உச்சியில் கை வைத்து, 'வாழ்க வீரமாதேவி. வாழ்க வாழ்க என் மனைவி', என்று சொன்னார். வீரமாதேவி அவரை வலம் வந்து மறுபடியும் காலில் விழுந்து வணங்கினாள். ''பொருட்களை இறக்குங்கள்'' என்று கட்டளை இட்டாள்.

ஓடிப்போய் அரசருக்கு சற்று தொலைவில் இருந்த அரசிகளுடன் போய் கலந்து கொண்டாள். அவர்கள் தாவி தழுவிக் கொண்டார்கள். கன்னங்களில் முத்தமிட்டார்கள். முதுகில் அடித்தார்கள். கன்னத்தை கிள்ளினார்கள். இடுப்பை கிள்ளினார்கள். பிருஷ்டத்தில் அடித்தார்கள். 'அடியே, அடியே, அடியே' என்று கொஞ்சினார்கள். எல்லோரும் கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

ஆத்திரமாகவும், பொறாமையாகவும் இராஜேந்திர சோழர் அதையே பார்த்துக் கொண்டிருந்தார். திரும்பி அருண்மொழி பட்டனை பார்த்து சிரித்தார்.

''என்ன ஆனந்தமடா, அங்கே பார். சந்தோஷம் பொங்கி வழிகிறதை பார்.'' கை காட்டினார்.

''நான் விடைபெறுகிறேன். மரக்கலனிலிருந்து சாமான் கள் இறக்க வேண்டும். இங்கா, எதிர் கரையிலா.''

''இங்கு எது முக்கியமோ அதை இறக்கு. மூங்கில்கள், மரச் சாமான்கள் என்கிறாயே, அது தெற்கு பக்கம் இறங்கட்டும்.''

ஒரு பெரிய காளி சிலை தனியாக வந்தது. அதை எல்லோரும் ஆவலோடு பார்த்தார்கள். ஒரு சிங்காசனம் வந்தது. சகலரும் தொட்டு பார்த்தார்கள். ஒரு மர மண்டபம் வந்தது. அதையும் கவனித்தார்கள். கூடை கூடையாய் பொற்காசுகள். அவைகளை அள்ளி எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டார். சோழ தேசம் செழிப்படையும் என்றார்.

நாவாய்கள் தெற்கு கரைக்கு நகர்ந்து உள்ளே உள்ள பொருள்களை இறக்கத் துவங்கின. குதிரைகள் கீழே இறங்கின. யானைகள் இறங்கின. மூங்கில் பிரம்புகள் இறங்கின. அடுத்த மூன்று நாட்கள் அந்த கரைகள் இரண்டும் பெரிய அல்லோகலப்பட்டன.

அரையன் ராஜராஜன் வேங்கியை நெருங்கி வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தி வந்தது. முரசுகள் முழங்கின. அந்தணர்கள் வரிசையானார்கள். குதிரையில் வேகமாக பயணித்து வருகிறார்கள் என்று சொல்லவே சாலைகள் சீர் செய்யப்பட்டன. வடக்கே கோதாவரிக் கரையில் உள்ள அரண்மனை பொலிவுற சுத்தமாக துடைத்து வைக்கப்பட்டது. சோழ வீரர்கள் சுற்றிலும் காவல் இருந்தார்கள். அரையன் ராஜராஜனுக்கு என்று ஒரு அரண்மனையும், அருண்மொழிபட்டனுக்கு என்று ஒரு பெரிய மாளிகையும் ஒதுக்கப்பட்டன. எல்லோரும் காத்திருக்க அரையன் ராஜராஜன் முன்னே வந்து சேர்ந்தார். ஓடி வந்து இராஜேந்திர சோழரை வணங்கினார். சோழ வீரர்கள் வாளை கேடயத்தால் ஓங்கி அடித்தார்கள். 'சோழம், சோழம், சோழம்' என்றார்கள்.

கைகள் உயர்த்தி இராஜேந்திர சோழர் அரையன் ராஜராஜனை வாரி அணைத்துக் கொண்டார். கழுத்தில் இருந்த முத்து மாலையை எடுத்து அரையன் ராஜராஜன் கழுத்தில் போட்டார். கட்டிக் கொண்டார். கன்னம் இழைத்தார். தலை மயிர் பிடித்து உலுக்கினார். ''வெற்றி பெற்றாயடா. என் கண்ணே, வெற்றி பெற்றாயடா.'' நெற்றியில் முத்தமிட்டார். அரையன் ராஜராஜன் மாணிக்க மாலை ஒன்றை அரசர் கழுத்திலே அணிவித்தார். ஒரு பெட்டியை திறந்து அதில் உள்ள வைரங்களை காட்டினார். பச்சை கற்களையும், மரகதங்

களையும் முன்னே பரப்பினார். ஒரு பாத்திரத்தில் கங்கை நீரை கொண்டு வந்து அதன் ஈயத் தகடை எடுத்து சொம்பில் மொண்டு அதை இராஜேந்திர சோழர் தலையில் ஊற்றினார். தோளில் ஊற்றினார். மார்பில் ஊற்றினார். காலை கழுவினார். அவர் கையில் கொடுத்து சிறிதளவு குடிக்கச் சொன்னார். இராஜேந் திர சோழர் குடிக்க மறுபடியும், 'சோழம், சோழம், சோழம்' என்று வீரர்கள் கத்தினார்கள்.

''அய்யா, மாமன்னரே, இராஜராஜ சோழரின் மகனான இராஜேந்திர சோழரே. நீர் கங்கையை கொண்டீர் அய்யா. கங்கையை கொண்டீர்.'' கைகூப்பி, அரையன் ராஜராஜன் சொல்லிவிட்டு குலுங்கி குலுங்கி அழுதார்.

சோழ தேசம் கண்ணீர் பெருக்கியது. ஆனந்தமாகியது. அரையன் ராஜராஜனை தொட வேண்டும் என்று எல்லா வீரர் களும் விரும்பினார்கள்.

அரையன் ராஜராஜன் இராஜேந்திரரை விட்டு கீழ் இறங்கி கைகள் விரித்து சோழ வீரர்களை அருகே அழைத்தார். சோழ வீரர்கள் சுற்றிக் கொண்டு ஒவ்வொருவராக அவர் பாதம் பணிந்து, நெஞ்சு தடவி, கைகளை கண்ணில் ஒற்றிக்கொண்டு வலம் வந்து போனார்கள். ஆயிரக்கணக்கில் சோழ வீரர்கள் வரிசையில் நின்றார்கள்.

''போதுமடா. ஓய்வெடுக்கட்டும்.'' இராஜேந்திர சோழர் சொல்ல, ''நாளை மறுபடியும் வைத்துக் கொள்வோம்'' என்று அரையன் ராஜராஜன் சம்மதம் தெரிவித்தார்.

அரையன் ராஜராஜன் ஓய்வெடுத்துக் கொள்ள அங்கே போய் குளித்து வேறு துணி மாற்றியதும், இராஜேந்திரருக்கு செய்தி தரப்பட்டது. அரசிகளோடு இராஜேந்திரர் அரையன் ராஜராஜன் இடத்திற்கு போனார்.

இது மிகப் பெரிய மரியாதை. அரசர் அழைத்துப் போவது தான் ஒரு மாதண்ட நாயகனுடைய கடமை. ஆனால் மாதண்ட நாயகரைத் தேடி அரசரே வருகிறார் என்றால் அது மிகப் பெரிய சிறப்பு. அந்த சிறப்பு செய்ய வேண்டும் என்று விருப்பப்பட்டு இராஜேந்திர சோழர் அங்கு போனார். எழுந்து

நின்று வரவேற்றார்கள். எப்படிஜெயித்தோம் என்று சொன்னார்கள்.

அன்று மாலை இரண்டு தேர்களில் மஹிபாலனும், தர்மபாலனும், ரணசூரனும், கோவிந்த சந்திரனும் வந்து இறங்கினார்கள். இராஜேந்திர சோழரை வியப்புடன் பார்த்தார்கள். அருகில் வந்து கால் தொட்டு சிரம் பதித்தார்கள்.

மஹிபாலன் அணிந்திருந்த மகுடம் இராஜேந்திர சோழர் மடியில் இடப்பட்டது. அதை இடது கையில் எடுத்து சுற்று முற்றும் பார்த்து தன் மனைவியிடம் கொடுத்தார். அவர்கள் ஒவ்வொருவராக வாங்கி வேடிக்கை பார்த்தார்கள். மஹிபாலனின் வாள் கொடுக்கப்பட்டது. அதை வாங்கி இராஜேந்திர சோழர் தன்னுடைய பாதத்தின் கீழ் போட்டு மிதித்து நின்றார். சிம்மமென கர்ஜித்தார்.

''மஹிபாலன் தலையில் குடம் ஏற்றவில்லையே. நான் பார்க்கவில்லையே'' என்றார். மூன்று குடங்கள் கங்கை நீரோடு வந்தன. அவையும் ஈய பற்று வைக்கப்பட்டிருந்தன. மூவர் தலையிலும் வைக்கப்பட்டன.

''இப்படியே இவர்களை நகர்த்தி, தெற்கு கரை நோக்கி வேங்கி தேசத்திற்குள் அழைத்துப் போங்கள். வேங்கி தேசத்து மக்கள் நம் வெற்றியை காணட்டும்.'' உத்தரவிட்டார். மஹிபாலனும், தர்மபாலனும், ரணசூரனும், கோவிந்த சந்திரனும் வேங்கிக்கு தலையில் குடத்தோடு அழைத்துப் போகப்பட்டார்கள். சோழ வீரர்கள் கர்ஜித்தார்கள். அவர்களை நோக்கி வாள் ஆட்டினார்கள். 'சோழம் சோழம்' என்று கேடயத்தால் அடித்தார்கள். அவர்களுக்கு பாதுகாப்பாக சோழ வீரர்கள் போக, வேங்கி நகர கோட்டை வாசலில் உட்கார வைக்கப்பட்டார்கள்.

அடுத்த பதினைந்து நாளில் பட்டாபிஷேகத்திற்கும், திருமணத்திற்கும் நாள் குறிக்கப்பட்டது. அந்தணர்கள் சுறுசுறுப்பானார்கள். வேங்கி தேசத்து தலைநகரம் அலங்கரிக்கப்பட்டது. அரண்மனைக்கு புதுவர்ணம் தீட்டப்பட்டது. தெருக்கள் சுத்தமாக்கப்பட்டு கோதாவரியின் மணல் பரப்பப்பட்டது. வீட்டு வாசல்களில் கோலங்களும், பந்தல்களும் அமைக்கப்பட்டன.

ஒரு பெரிய மழை திடீரென்று முழு வேகத்தில் வேங்கியை தாக்கியது. வீரர்கள் கிடைத்த வீடுகளில் ஒதுங்கிக் கொண்டார்கள். இராஜேந்திர சோழர் தன் அரண்மனையில் வீரமாதேவியை அணைத்தபடி, தன் அரசியர்களை கொஞ்சியபடி இருந்தார். விதம் விதமான உணவுகள் சமைக்கப்பட்டு பரிமாறப்பட்டன. அடித்து போட்டது போல சகல துக்கமும் இறங்கி அரையன் ராஜராஜன் தூங்கினார்.

அருண்மொழிபட்டன் தெற்கே போய்விட வேண்டுமென்று விரும்பினான். தொண்டை நாடு போக வேண்டுமென்று கேட்டான்.

''இரு, ஒரு வழக்கு இருக்கிறதல்லவா. முடித்துவிட்டு போகலாம்.'' இராஜேந்திரர் அவனை போகக்கூடாது என்று தடுத்துவிட்டார்.

வேங்கி அரண்மனை அரசசபை நிரம்பி வழிந்தது. ''அரையன் ராஜராஜரே உங்களிடம் ஒரு கேள்வி இருக்கிறது எனக்கு.''

''மன்னா, கேளுங்கள்.'' அரையன் ராஜராஜன் எழுந்து நின்றார்.

''அமர்ந்தபடியே பதில் சொல்லலாம். இராஜேந்திரர் கட்டளையிட்டார். இது இன்னும் ஒரு சிறப்பு. மன்னர் கேள்வி கேட்க, உட்கார்ந்து பதில் சொல்ல அருகதை எவருக்கும் இல்லை. அரையன் ராஜராஜன் தயங்கினார். நிற்கிறேன் என்பது போல பார்த்தார்.

''அமருங்கள்'' மாமன்னர் இராஜேந்திரர் உத்தரவிட்டார். அரையன் ராஜராஜன் ஆசனத்தின் நுனியில் அமர்ந்து கொண்டார்.

''சௌகரியமாக அமர்ந்து கொள்ளுங்கள்.'' மறுபடியும் கட்டளை இட, அந்த மரியாதை முற்றிலுமாக வாங்கி, தன்னுடைய ஆசனத்தில் சரியாக அமர்ந்து கொண்டார். அரசரை பார்த்தார்.

''எனது தளபதியும், மாதண்ட நாயகனும் மாராயர் என்ற நிலையை அடைந்தவரான அருண்மொழிபட்டனை நீங்கள் எதன் பொருட்டு கைது செய்தீர்கள்.''

''என்னை மீறி நடந்ததற்கு.''

''என்ன நடந்து கொண்டான்.''

''வடக்கே போகிறேன் என்று நாவாயில் ஏறி, எனக்கு சொல்லாமல் சுற்றி உங்களை வந்து பார்த்துவிட்டு, அங்கிருந்து வடக்கே போயிருக்கிறார். என் உத்தரவு இல்லாமல் அவர் உங்களை பார்த்தது பிசகு. எனக்கு அது இழுக்கு. நடுகடலில் திடீரென நடந்த திட்டம் அது என்று அவர் சொல்கிறார். அது பற்றி எனக்கு அக்கறை இல்லை. எப்படியேனும் எனக்கு தெரிந் திருக்க வேண்டும். அல்லது தெற்கு பக்கம் போகாது இருந் திருக்க வேண்டும். வடக்கு பக்கம் போகிறேன் என்று சொல்லி விட்டு ஒரு படை தெற்கு பக்கம் போனால் நான் என்ன தளபதியா, அல்லது வேறு ஏதாவதா.''

''போர் முனையில் சில சமயம் அப்படி நடைபெறும். இது தாங்கள் அறியாததா. மூன்று நாளில் வருகிறோம் என்று சொல்லியிருப்பார்கள். நாம் போர் துவங்கியிருப்போம். வருவ தற்கு இன்னும் கூட இரண்டு நாள் ஆகும். தவித்து போயிருப் போம். வந்தவர்களை வெட்டி சாய்ப்பதா. ஏன் தாமதம் என்று சவுக்கால் அடிப்பதா. அப்படி நடந்துவிட்டது. அப்படித்தானே இதுவும்.''

''நாவாய் ஏறுவதற்கு முன்பு இப்படி நடக்கக்கூடும் என்றா வது என்னிடம் சொல்லியிருக்க வேண்டும்.''

''அப்படி நடக்கலாம் என்று தெரியாதே.''

''அப்படியானால் அந்த நாவாயை கரைக்கு கொண்டு வந்து என்னை சந்தித்துவிட்டு அதற்குப் பிறகு தெற்கு நோக்கி போயிருக்க வேண்டும்.''

''ஒரு நாள் கடந்திருக்குமே. அருண்மொழிபட்டரே என்ன பதில் சொல்கிறீர்.''

''அவரை மீறியது பிசகு. ஆனால் திட்டமிட்ட நோக்கம் இல்லை. அவர் மீது எந்த இளக்காரமும் இல்லை. அவர் வடக்கே போக உத்தரவிட்டார். ஆனால் காற்று வடக்கே போக வாகாய் இல்லை. தெற்கு போக வாகாய் இருந்தது. இதற்கு சாட்சி கணவதி சிவஸ்வாமி.''

''ஆமாம். கேள்விப்பட்டேன்.''

சபையின் ஓரத்தில் இருந்த அவர்கள் தடுமாறியபடி இறங்கி அரசரை நோக்கி வந்தார்கள். இரண்டு முறை விழுந்து வணங்கினார்கள். குட்டன் கணவதியை பார்த்து சபை லேசாக சிரித்தது. குட்டன் கணவதி தலைகுனிந்து கொண்டான்.

''மிகச் சிறந்த மாலுமி. மிகத் தெளிவானவர். இவரின் உதவி இல்லாமல் உங்களை சந்திக்கவும் வந்திருக்க முடியாது. வடக்கே போயிருக்கவும் முடியாது.

உங்களை சந்தித்துவிட்டு வடக்கே போக எனக்கு மூன்றே நாட்கள்தான் ஆயின. ஆமைகள் போகும் நீரோட்டத்தை தேடி கண்டுபிடித்து அதில் மரக்கலன்களை செலுத்தி, பாய்மரங்களை சரியாக பிரித்து மிகத் திறமையாக நாவாயை செலுத்திக் கொண்டு வந்தார். இவர் அந்தணர். ஒரு பரதவரைப் போல் வாழ்கிறார்.''

''ஏன்.''

''இவர் உருவத்தை இவர் இனத்தார் கேலி செய்தார்கள் என்ற கோபம்.''

''முன்பே பேசினோமே அடேய், மூர்த்தி சிறியதாய் இருந்தாலும் கீர்த்தி பெரியதாய் இருக்கிறது. உருவம் என்ன உருவம். இவர் சமர்த்தர் என்பது இவர் கண்களில் உள்ள ஒளியில் தெரிகிறதே.

அருகே வாரும் கணவதி.''

மூன்று படி ஏறி நடந்து மறுபடியும் இரண்டு படியேறி சிம்மாசனத்திற்கு அருகே போய் இராஜேந்திர சோழரின் கால் தொட்டு நெற்றியில் கணவதி வைத்துக் கொண்டான்.

தங்க ருத்ராட்ச மாலையை கொண்டு வரச் சொல்லி அதை கணவதிக்கும், சிவஸ்வாமிக்கும் அணிவித்தார். கூட்டம் 'சோழம், சோழம்' என்று கத்தியது.

''இவர்களுக்கு பதவி தர விரும்புகின்றேன். உங்கள் வாயால் அதை அறிவிக்க வேண்டும்.''

''என்ன பதவி விரும்புகின்றாய்.''

‘‘அவர்கள் எந்த பதவியும் இல்லாதவர்கள். ஆனால் ‘தளபதி’ என்ற பட்டத்தை அவர்கள் பெற வேண்டும் என்று விரும்புகின்றேன்.’’

‘‘இவர்கள் இருவரையும் தளபதிகளாக்குகிறேன்.’’ வலப் பக்கம் சாய்த்து வைத்திருந்த வாளை எடுத்து அவர்களின் தோளை தொட்டார். வாள் மறுபடியும் உறைக்கு போயிற்று.

‘‘உங்களுக்கு உண்டான கேயூரங்கள் இன்று மாலைக் குள் வழங்கப்படும். இவருடைய கைக்கு சரியான அளவாக, பக்குவமாக கேயூரங்கள் செய்யப்பட வேண்டும். அவை தங்க கேயூரங்களாக இருக்க வேண்டும். அதுதவிர, இது என் பரிசு.’’ அரை முழங்கை உயரமுள்ள பையில் தங்க நாணயங்கள் இட்டு அவைகள் இருவருக்கும் வழங்கப்பட்டன. தூக்க முடியா மல் தூக்கி தடுமாறி நின்றார்கள். மறுபடி விழுந்து வணங்கி னார்கள். பின்னடைந்தார்கள்.

‘‘இந்த மாலுமியால்தான் நீங்கள் இந்த பக்கம் வந்தீர்களா.’’

‘‘ஆமாம்.’’

‘‘அப்பொழுது நாவாய் உங்கள் வசம் இல்லை.’’

‘‘இல்லை. எனக்கு நாவாயைப் பற்றி எதுவும் தெரியாது.’’

‘‘நாவாயை பற்றி தெரியாது என்றால் எந்த தைரியத்தில் ஏறி வந்தீர்கள்.’’

‘‘நல்ல மாலுமிகள் இரண்டு பேர் கிடைத்திருக்கின்றார்கள். இவர்களை நம்பலாம் என்று தோன்றியது. நான் நாவாயில் ஏறினேன். என் எண்ணம் வடக்கு பக்கம் போவதுதான். ஆனால் கணவதி தெற்கு பக்கம் போகலாம் என்று சொன்னார். எனக்கு தெற்கு பக்கம் என்றதும் உங்கள் ஞாபகம் வந்தது. வந்துவிட் டேன். மேற்கொண்டு நீங்கள் நாவாய்கள் கொடுத்ததும், வீரர்கள் கொடுத்ததும்தான் வெற்றி பெற உதவியது.’’

‘‘உங்களுடைய பதிலை நான் ஏற்கிறேன். கணவதி என்ன சொல்கிறார்.’’

கணவதி தொலைதூரத்தில் இருந்தான். அருகே குடுகுடு வென்று ஓடி வந்தான். மறுபடியும் சபை சிரித்தது.

''காற்று எப்பொழுது வாகாய் இருக்கிறதோ அப்பொழுது பயணப்படுவதுதான் எளிது. காற்று சுழன்று இருந்தது. தெற்கு பக்கம் வீசி பிறகு வடக்கு பக்கம் திரும்பியது. இது மிகச் சாதக மாக அமைந்ததால் அதை பயன்படுத்திக் கொண்டேன்.''

''தெற்கு பக்கம் போகும்படி உம்மை அருண்மொழி பட்டன் தூண்டினாரா.''

''இல்லை. நான் தூண்டினேன்.''

''சரி. நீங்கள் போகலாம்.''

அதே வேகத்தில் கணவதி பின்னடைய மறுபடியும் கூட்டத்தினர் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கணவதி இந்த சிரிப்பையெல்லாம் தாண்டியவனாக நின்றிருந்தான். கேயூரம் சுமக்கப் போகிறோம் என்பது சந்தோஷ மாக இருந்தது. பொன் மூட்டையை ஒரு மாலுமியிடம் 'எடுத்துக் கொள்' என்று கைநீட்டினான். இப்பொழுது அவனுக்கு ஆறு, ஏழு வேலைக்காரர்கள் இருந்தார்கள். சிவ ஸ்வாமியிடமும் பொன் மூட்டை வாங்கப்பட்டது. அவர்கள் சபையை கவனித் தார்கள்.

கணவதியிடமிருந்தும், சிவஸ்வாமியிடமிருந்தும் சபை யின் கவனம் இராஜேந்திரரிடம் திரும்பியது.

''அரையன் ராஜராஜன் செய்தது சரி. படையெடுப்பில் தளபதியின் அனுமதி பெறாது எவரும் நகர முடியாது. கங்கை கரை படையெடுப்பின் பாரம் முழுவதையும் அரையன் ராஜ ராஜனே சுமந்தார். இந்த வெற்றிக்கு அவரே காரணம். அவருக்கு மாதண்ட நாயகன் என்கிற மரியாதையையும் கொடுத்து அதற்கான கேயூரங்கள் நாளை வழங்கப்படும்.

மாதாண்ட நாயகர் அரையன் ராஜராஜன் வாழ்க.'' இராஜேந் திர சோழரின் குரலுக்கு சபை எதிரொலித்தது. எழுந்து நின்று தலைகுனிந்து அந்த மரியாதையை அரையன் ராஜராஜன் ஏற்றார்.

''அத்தோடு பேரரயன் என்ற பட்டமும் அரையன் ராஜராஜ னுக்கு அளிக்கிறேன்.'' மறுபடியும் கூட்டம் பிளிறிற்று.

ஆனாலும் இந்த கைது நடவடிக்கை நமது வீரர்களிடையே கசப்பையும், பிரிவையும் ஏற்படுத்தி இருக்கக்கூடும். நீ யார் பக்கம் என்று பேசி இரண்டாக பிரிந்திருக்கக்கூடும். கடவுள் அருளால் அப்படி ஏற்படவில்லை. ஒருவேளை இது பொய் யான கைது படலம் என்று சோழ வீரர்களுக்கு புரிந்துவிட்டதோ என்னவோ, சோழ வீரர்கள் கெட்டிக்காரர்கள். அனைவருமே அரசியல் அறிந்தவர்கள். இதுதான் சோழ தேசத்தின் பலம். பலவீனம்.

ஆனால் அருண்மொழிபட்டன் செய்தது தவறே இல்லை. இயற்கையின் கருணையால் அவர் என்னை நோக்கி வந்தது, பிறகு பெரும்படையோடு வடக்கே போனது மிகச் சரியாக இருந்தது.

இது இறைவன் கருணை. தஞ்சை பெருவுடையாரின் கருணை. சோழ தேசம் ஜெயிக்க வேண்டும் என்பதே அவர் ஆணை. வடக்கு காற்றும், தெற்கு காற்றும் சரியான நேரத்தில் சரியான வேகத்தில் நகர்ந்தது. நம் வெற்றியை தீர்மானித்தது.

குறைந்த படையுடன் உத்திரலாடத்தில் இறங்கி தேர் களில் பயணப்பட்டு கங்கையில் யானை பாலம் அமைந்து தெற்கே கங்கை கரையோரம் இறங்கியது மிகுந்த விவேக மான, வீரமான செயல். மாராயன் அருண்மொழிபட்டனுக்கு வீரமாதேவி எனக்கு அளித்த தங்கச் சங்கிலியாய், என் கழுத் தில் எப்போதும் இருக்கும் இந்த ஆபரணத்தை என் வெகுமதி யாக தருகிறேன். வீரமாதேவியும் இந்த பரிசை அவருக்கு தர விரும்புகிறார்.

ஜெயங்கொண்டத்தில் நாம் கட்டி வரும் கோட்டைக்கு அதிபதியாக அருண்மொழியை நியமிக்கிறேன். என் பாதுகாப் புக்கு அருண்மொழியை தலைமை ஏற்க அழைக்கிறேன்.

அதாவது எனக்கு இணையாக அரையன் ராஜராஜனும், எனக்கு துணையாக அருண்மொழிபட்டனும் இருப்பார்கள். இதோடு போர் முடிந்துவிடவில்லை. நாம் கடல் கடப்போம். நமது வணிகரை வஞ்சித்த ஸ்ரீவிஜயத்தின் சிரம் அறுப்போம். இதுவரை இல்லாத கடும்போர் நடத்துவோம். கடற் கொள்ளை யர்கள் மிகுந்து இருந்த லங்காசோகம், மாபாளம், கடாரம்

எல்லாவற்றையும் தாக்குவோம். வணிகரை சித்ரவதை செய்தது ஞாபகம் இல்லையா.

ஆயுதம் இல்லாத அப்பாவிகளை தோய்த்து துவைத்ததை மறந்து போயிற்றா. சோழ நாவாய்களை கொள்ளையடித்து தீக்கிரையாக்கியது பசுமையாக எங்கள் நினைவில் இருக்கிறது.

வம்புக்கே வராத கோசல தேசத்தை தண்டித்த ஸ்ரீவிஜயமே உன்னை விட்டு விடுவோமா. மேலைசாளுக்கியத்தை அடித்து நொறுக்கினோமே. அதைவிட கொடூரமாக ஸ்ரீவிஜயத்தை தாக்குவோம். அரசு நடத்தும் புத்த பிட்சுக்களை பிரம்பால் அடிப் போம். கண்களை குருடாக்குவோம். நாக்குகளை அறுப்போம், செவிகளை குடைவோம். ஒருவருக்கே மூன்று தண்டனையும் தருவோம்.

எனது வணிகர்களின் உள்ளங்கை தோல்களை சீவி இறுகக் கட்டி, கையை பிரிக்க முடியாமல் செய்து, சிவலிங் கத்தை கும்பிட்டுக் கொண்டே இரு என்று சொன்னாய் அல்லவா. உன்னால் புத்தம் சரணம் கேட்கவே முடியாது. சொல் லவே முடியாது. உன் புத்தரை கண்வழியே அல்ல. உன் உள் ளுக்குள்ளேயே பார்த்துக் கிட, அதுதானே உன் மனம் சொல் கிறது. அதற்கு இதுவே உதவி.'' சொல்லவிட்டு சிரித்தார். 'சபை கூட்டம் எக்களித்தது. மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி. ''ஒருவகையில் அருண்மொழிபட்டனை கைது செய்தது தவறு. கண்டித்திருக்கலாம். கன்னத்தில் அறைந்திருக்கலாம். கைது செய்தது கொலை செய்வதற்கு ஒப்பானது. ஆனால் அரையர் செய்த பேருதவியை நினைத்து மன்னித்து விடுகிறேன்.

தன் வயதிலும், பதவிலும் மூத்த அரையரின் காலில் அருண்மொழிபட்டன் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும். காரணம் ஆயிரம் இருப்பினும் காரியம் தவறானது. ஒருவேளை இந்த விஷயம் எதிர்மறையாக போயிருந்தால் இவ்வளவு சுமூக மாக பேசிக் கொண்டிருக்க இயலாது.''

அருண்மொழி எழுந்து விரைவாக வந்தான். வணங்க முற்பட்டான். அரையன் ராஜராஜன் தடுத்து கூடாது என்றார். அருண்மொழியை இறுக்க தழுவிக் கொண்டார். சபை கூட்டம் குதூகலித்தது.

"வேட்டி அவிழாமல் வேட்டி கட்டிக் கொள்ள தெரியுமா. ஒரு உபதளபதி இன்னொரு உபதளபதியிடம் பேசினான்.

"இதுதான் இராஜேந்திரரின் தந்திரம். சோழப்படையின் மிகப்பெரிய தவறு நேராகிவிட்டது பார்." வாய்விட்டு சிரித்தான். பலருக்கும் இராஜேந்திர சோழரின் தந்திரம் புரிந்தது.

குத்துவது போல் குத்தி, காட்டியது போல் காட்டி சகலமும் மறக்கடிக்க செய்துவிட்டார். பதவி உயர்வு பெரிசா. அரசருக்கு அருகாமை பெரிசா. அரையருக்கு பதவி உயர்வு. அருண்மொழிக்கு அருகாமை, சபை தெளிவாக புரிந்து கொண்டது, சிரித்தபடி விவாதித்து கலைந்தது.

கடல் கடந்த படையெடுப்பில் தனக்கு முக்கியத்துவம் கொடுத்து அரையருக்கு சோழக்காவல் கொடுத்துவிடுவார் என்பதை அருண்மொழி புரிந்து கொண்டான். மனதளவில் தயாரானான்.

★★★

அத்யாயம்

82

இனி இதுவா என் சோழ தேசம். இந்த கங்கை நதிக்கரையா என்னுடைய ஊர். புரண்டு ஓடிவரும் இந்த நதியா என் தீர்த்தம். எலும்பை குடைகின்ற இந்த காற்றா இனி என்னை தழுவும். இந்த மஞ்சள் நிற தானியமா என் உணவு. மடி பெருத்த பசுக்களின் பாலா என் தாகம் தணிக்கும். அந்த கோதுமை தானியத்தை உடைத்தாற் போல ஒரு வெளுப்பு இந்த ஊர் பெண்களுக்கு. ஒரு வயதிற்கு பின் எல்லோருமே தடிமன். கீழ் உதடு பெருத்து வளைந்திருக்கிறது. பெரிய கண்கள். ஆனால் குறுங் கழுத்து, திடமான பிருஷ்டம். மிதமிஞ்சிய முலைகள். ரோமம் இல்லாத வழித்தெடுத்தாற் போல கால்களும், கைகளும். ஒரு வித வைக்கோல் மணம் இவர்கள் எல்லோரிடமும் வருகிறது. அது தலைக்கு வைக்கும் எண்ணெயின் வாசனை. துளசி கலந்தது என்று அந்த பெண்கள் சொல்கிறார்கள். ஊர் முழுவதும் கற்றாழை அழுகிய வாசனை இருக்கிறது. அந்த செடியை அப்படியே பிடுங்கி வேரோடு ஊறவைத்து கத்தியால் குறுக்கே வெட்டி, மேல் தோல் சீவி நார் எடுத்து அதை உலர போட்டு, உலர்ந்தவைகளை கயிறு திரித்து, இரண்டாள் உயர கோபுரம் போல் சுற்றி வைத்திருக்கிறார்கள். அந்த கயிறிலிருந்து தான் வாடை வருகிறது. முதலில் நாற்றம் என்று நினைத்து, பிறகு பழகி இப்போது அந்த வாடையே சுகமாக இருக்கிறது.

சாமந்தசேனன் தட்சிணலாடத்தை சுற்றி வந்தான். அவனுடைய ஊர் சீராப்பள்ளி. காவிரி அகலமாக கர்ப்பிணி பெண்ணை போல நிதானமாக போகின்ற ஊர். செழிப்பான செழிப்பு. வான் பொய்த்து காவிரி வறண்டாலும் கிணற்று பாசனத்திற்கு குறைவில்லை. அடர்ந்த தோப்புகளுக்கும், காய்கறி தோட்டங்களுக்கும் குறைவில்லை. முகர்ந்தால் கிறுகிறுக்க

வைக்கின்ற மல்லிகையும், முல்லையும் இருவாட்சியும், நித்திய மல்லிகையும் அடங்கியிருப்பது போல இங்கு இல்லை. இங்கு உள்ள பூக்களும் மாமிச வாடை அடிக்கின்றன.

ஆனால், கங்கையின் கிளை நதிகள் ஏராளமாக இருக்கின் றன. எல்லா கிராமங்களிலும் ஊடுருவி இருக்கின்றது. குளம் நிரம்பியிருக்கிறது. குளத்திற்கு நடுவே வலை கட்டி மீன்கள் வளர்க்கிறார்கள். உண்ட மிச்சத்தை, அழுகிய மீன்களை, அந்த மாமிச துண்டங்களை அந்த மீன்களுக்கு உணவாக போடு கிறார்கள். குளத்தில் இறங்கி கைக்கு அகப்பட்ட மீனை பிடித்து துடிதுடிக்க மேலே கொண்டு வந்து பாறையில் அடித்து, பிறகு வீட்டு வாசலிலேயே அடுப்பு மூட்டி சமைக்கிறார்கள். குச்சியில் குத்தி தின்ன கொடுக்கிறார்கள். காரக் குழம்பில் மிதக்க விடு கிறார்கள். அந்த பானைக்கு நடுவே நீர் வைத்து அவிக்கிறார் கள். மேலே உப்பும், துவையலும் தடவி தருகிறார்கள். மீன் கருப் பஞ்சாறு கலந்த கெட்டித் தயிர் உண்டு உடம்பின் முன்னும், பின்னும் வேகமாக காற்று பிரிகிறது. லேசாக தொப்பை விழுந்துவிட்டது.

சோழ வீரர்கள் பொக்கிஷங்களை வாரிப் போனாலும் அரையன் ராஜராஜன் திட்டமிட்டு நாணயங்களை அவன் பக்கம் கொடுத்துவிட்டு போனார். ஆள் உயர மரக்குதிரில் நாணயங்கள் இருக்கின்றன. நாற்பது குதிர்கள் இருக்கின் றன. வணிகமும், விவசாயமும்தான் தட்சிணலாடத்தின் உயிர் நாடி. இந்த கற்றாழை கயிறுதான் பெரும் வியாபாரம்.

மரம் அறுத்து வைத்துக் கொள்கிறார்கள். காடுகளுக்கு போய் மூங்கில் அறுத்து வைத்துக் கொள்கிறார்கள். பிரம்பு களை வளைத்து கூடை முடைகிறார்கள். வீட்டுக்கு தடுக்கு வேய்கிறார்கள்.

கடற்கரை வளைவு பக்கம் நாவாய் இறக்கி, படகில் பல தேசத்து வியாபாரிகள் வந்து தடுக்குகளையும், கயிறுகளையும், மரப் பலகைகளையும், மூங்கில்களையும் வாங்கிப் போகிறார் கள். ஆனால் முன்பு போல கடற்கரையில் பெண்கள் கிடைப் பதில்லை என்று அலுத்துக் கொள்கிறார்கள். பொது மகளிராக இருந்த பெண்களில் முக்கால்வாசி பேர் சோழ தேசம் நோக்கி

யானை ஏறி விட்டார்கள். சிறு தேர்களில் உபதளபதிகளோடு அமர்ந்து தெற்கு நோக்கி பயணப்பட்டு விட்டார்கள்.

சாமந்த சேனனுக்கு திருச்சிராப்பள்ளி காவிரிக் கரை யோரம் பெரிய மாளிகை இருக்கிறது. அங்கு அவனுக்கு மனைவி யும், இரண்டு மகன்களும் இருக்கிறார்கள். ஆனால் எல்லாவற் றையும் மறந்துவிட்டு, வங்க தேசத்தின் ஒரு பகுதியான கங்கை கரை நாடான தட்சிணலாடத்தில் தங்கிவிட்டான். அரையன் ராஜராஜன் உத்தரவு காரணம் என்றாலும், கங்கையும், அந்த கங்கை நதி சுற்றி உள்ள கிராமங்களும் அவனுக்குப் பிடித்திருந் தன.

காமம் யுத்தம் போல பரபரப்பானது. ஆவல் தூண்டுவது. எதிரிகளை பார்த்தாலே உடம்பில் ஒரு வெறி ஏறுமே, அது போல கட்டழகியான பெண்களை பார்த்தால் உடம்பும், மனதும் பரபரப்பாகிறது. 'அடி வாடி' என்று கெட்ட வார்த்தைகள் சொல்லி இறுக்கிக் கொள்ள தோன்றுகிறது. சாமந்தசேனன் இங்கேயே சோழப் பிரதிநிதியாக தங்கிவிடுகிறேன் என்று சொன்னதும் அரையன் ராஜராஜன் அவனுக்கு மாராயன் என்ற பட்டம் அளித்தார். மாராயருக்கு உண்டான தலைப்பாகை அணிவித் தார். அதில் கல் நகைகளை சுற்றி தைக்கச் சொன்னார். அது கிரீடம் போல இருந்தது. கழுத்தில் நிறைய ஆரங்களும், புஜத்தில் மாராயருக்கு உண்டான கேயுரமும், விரல்களில் மோதிரமுமாய் அவன் சிங்காசனத்தில் உட்கார வைக்கப்பட்டான். ரணசூரன் அரண்மனை அவனுக்காயிற்று. ரணசூரனை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ரணசூரனின் மனைவிகள் அவன் பின்னே சோழ தேசத்திற்கு பெரிய மாட்டு வண்டிகளில் பயணம் செய் தார்கள். அவர்களை யாரும் எந்த தொந்தரவும் செய்யவில்லை. மூன்று மனைவிகள். அவர்கள் மிகவும் அழகாக இருந்தார்கள். ஆனால் சாமந்தசேனன் பொதுமகளிர் அதிகம் இருக்கின்ற கடற் கரைக்கு போய் அங்கு அழகாக இருக்கின்ற பொதுமகளிரை அழைத்து தன்னோடு இருக்கும்படி கேட்டான். பலபேர் முன் வந்தார்கள். அதில் முக்கியமான சிலரை தேர்ந்தெடுத்து யானை யில் ஏற்றி தன் தலைநகருக்கு அனுப்பினான்.

உறுதியான சுவர் எழுப்பி, மேலே கூரை வேய்ந்து அதற்கு மேல் மூங்கிலால் அழுத்தமாக கட்டி, பிறகு முடைந்த பாய்

விரித்து உறுதியான கிடங்குகள் கட்டச் சொன்னான். பல்வேறு கட்டிடங்கள் அப்படி உருவாயின. மூங்கில் மரங்கள் அங்கு அடுக்கி வைக்கப்பட்டன. இரண்டு வேலிகள் அமைத்து அந்த கிட்டங்கிகளை காவல் காத்தார்கள். குடிசையில் வசித்த அந்த பெண்கள் அரண்மனை சுகத்தை அனுபவித்தார்கள். அவனுக்கு பேராதரவாக பெரும் பொழுதுபோக்காக இருந்தார்கள்.

விடியலில் கிளம்பி, உச்சி வரை ஒவ்வொரு பக்கமாய், ஒவ்வொரு கிராமமாய் பயணம் செய்து குறைகள் கேட்டு, குறைகள் தீர்த்து, ஜனங்களோடு சல்லாபித்து உற்சாகப்படுத்தி, அவ்ர்கள் மொழியைத் தட்டுத் தடுமாறி பேசி, அவர்கள் சிரிக்கச் செய்து, தானியங்களும், பொற்காசுகளும் கொடுத்தான். ஆடுகள் வழங்கி அன்பை சம்பாதித்தான். தஞ்சை, குடந்தையில் இருப் பதை விட, காஞ்சியில் இருப்பதைவிட பொதுமகளிர் அதிகம் இங்கு இருந்தார்கள். தாசிகள் எனப்படும் தேவரடியார்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லோருமே தெற்கு நோக்கி பயணப் பட விரும்பினார்கள்.

தட்சிணலாடத்தில் சரியான பாதுகாப்பு இல்லை. மறுபடி யும் உத்திரலாடத்து மூடர்கள் வந்துவிடுவார்கள். இங்கிருந்து சீரழிவதற்கு தண்டபுத்தியோ, அல்லது ஒட்டதேசமோ, வேங்கியோ போய்விடலாம். எல்லா மன்னர்களும் சோழதேசம் போய் இருக்கும்போது நமக்கு எந்தவித பிரச்சினையும் இருக் காது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அவர்களுக்குண்டான துணிகளும், அணிகலன்களும் கோவேறு கழுதைகளில் பின்தொடர்ந்தன. பல யானைகள் பயணப்பட்டு பாதை சீராக ஆனது. காடுகளுக்கு நடுவே சோழ வீரர்கள் ஊடுருவி தாக்க வரும் சிங்கத்தையும், சிறுத்தையையும் கொன்றார்கள். தோலை அறுத்து எடுத்து பெரிய பாறைகளுக்கு கீழே அவைகளை போட்டு மிச்சம் உள்ள தீ கங்குகளில் சுட்டு எடுத்து தோலை சுண்ணாம்பு நீரில் ஊற வைத்து காய வைத்து எடுத்துக் கொண்டு போனார்கள். பெரிய மாட்டு வண்டிகளில் பெரிய உலோகப் பானைகளை ஏற்றி கங்கை நீர் அதில் ஊற்றி அந்த பானைகள் ஒன்றோடொன்று மோதாத வண்ணம் சுற்றி கயிறுகள் கட்டி வண்டியில் இறுக்க கட்டி, கயிறுகளும் எடுத்துப் போனார்கள். பாய்மர துணிகளை பானைகளை சுற்றி கட்டி

கங்கையின் குளுமையை காப்பாற்றினார்கள். பாய்மர துணிகள் பிற்பாடு உதவும் என்று தெரிந்து எடுத்துக் கொண்டு போனார் கள். பசுக்கள் கூட்டம் கூட்டமாக தெற்கே நடத்தி அனுப்பப் பட்டன. முன்பு போல கூட்டம் இல்லாது கொஞ்சம் வெறிச்சோடி இருந்தாலும் உத்திரலாடத்திலிருந்து ஒரு தொந்தரவும் வராத தாலும், தட்சிணலாடத்தில் அரசாட்சி செய்வது சாமந்தசேன னுக்கு பிரியமாக இருந்தது.

கோசல தேசத்திலிருந்து அந்தணர்களை தனக்கு நிர்வாகம் செய்ய அவன் வரவழைத்துக் கொண்டான். கங்கை கரையில் உள்ள பல கிராமங்களிலிருந்து அந்தணர்களை கூட்டம் கூட்டமாக மாட்டு வண்டிகளில் ஏற்றி அழைத்துப் போனான். மிகச் சிறந்த வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளித் தான். நிலபுலன்களும், வீடும் தருவதாக சத்தியம் செய்தான். ஆடு, மாடுகளோடு மனிதர்களும் தெற்கே குடிபெயர்ந்தார் கள். பானை பானையாய் கற்பூர தைலத்தோடும், கோவில் சிலை களும், வெண்கல சிலைகளும் தென்திசை நோக்கி பயணப் பட்டன.

வேங்கியை தாயகமாகக் கொண்டு தட்சிணலாடத்தில் குடியேறிய ஒரு தாசி தட்டுத்தடுமாறி தமிழ் பேசினாள். அவள் மீது சாமந்த சேனனுக்கு தனி பிரியம் இருந்தது. அவனுடைய மற்ற பெண்டிரும் தமிழ் கற்க ஆர்வம் காட்டினார்கள். ஆனால் எளிதில் வங்க தேசத்து மொழியை அவன் பேச கற்றுக் கொண் டான். சமஸ்கிருதத்தின் சாயல் அதிகம் கொண்டிருந்ததால் அவனுக்கு அது எளிதில் கைவந்தது. சாமந்த சேனனுக்கு கீழே பதினாலாயிரம் வீரர்கள் இருந்தார்கள். மற்ற வீரர்கள் கோசல தேசமும், உத்திரலாடமும் கூட்டம் கூட்டமாக போனார்கள். மலைகள் தாண்டி, வணிகர்களோடு சேர்ந்து சீன தேசத்திற்கு போக வேண்டும் என்றும் பலர் ஆர்வம் காட்டினார்கள்.

''அங்கேயே தங்கிவிடுவாயா.''

''இல்லை, இல்லை. மறுபடியும் என் ஊரான காஞ்சிபுரத் திற்கு பட்டுத் துணிகளோடும், பவழ மாலைகளோடும், மது ஜாடிகளோடும் போவேன். காஞ்சிபுரம்தான் என் ஊர். பத்து வருடங்களுக்கு ஊர் சுற்ற வேண்டும் என்பது என் எண்ணம்.

வந்து சோழ மக்களிடம் உலகம் பற்றி கதை கதையாய் சொல்ல வேண்டும் என்பது ஆசை.''

அவன் சொன்னது வியப்பாக இருந்தது. பை நிறைய பொற்காசுகள் கொடுத்த சாமந்த சேனன் அவனை வழி அனுப்பி வைத்தான். ஏனோ அவனுக்கு சோழ தேசம் போக பிடிக்கவில்லை. போனால் அங்கு ஆயிரக்கணக்கான தளபதி களில் ஒருவனாக இருக்க வேண்டும். கோவில்களில் சுற்று கின்ற கருப்பு பெண்களை காதலிக்க வேண்டும். அதிகம் குடிப்பவனை சோழ தேசம் விரும்புவதில்லை. இங்கு அந்த பிரச்சனை இல்லை. காவிரி பலமுறை வறண்டு போய் பார்த் திருக்கிறான். கங்கையோ அதன் கிளை நதிகளோ வறண்டு போகவே போகாது. செழிப்பான பூமி. செழிப்பான காடுகள். செழிப்பான பெண்கள். செழிப்பான வாழ்க்கை. சாமந்த சேன னுக்கு தட்சிணலாடம் பிடித்து போயிற்று. அவன் தன்னை மாதண்ட நாயகனாக அறிவித்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டான். சோழர்கள் இனி ஒருபொழுதும் தட்சிணலாடத் திற்கு படை எடுத்து வரப் போவதில்லை என்று அவனுக்கு தெள்ளத் தெளிவாக தெரிந்தது.

தண்டபுத்தியில் அரசு நிர்வாகத்தை அந்தணர்கள் ஏற்றார் கள். அரசனின் தாயாதி இளைஞன் ஒருவனை கொண்டு வந்து அவனை இளவரசனாக பிரகடனப்படுத்தினார்கள். பதிமூன்று வயது நிரம்பிய அந்த இளைஞனுக்கு குதிரை ஏறவும், யானை ஏறவும் சொல்லி கொடுத்தார்கள். இனி பத்து வருடத்திற்கு மறவர்களின் தொந்தரவு இல்லை என்பது அந்தணர்களுக்கு தெளிவாக தெரிந்தது. எனவே, அவர்கள் பட்டாடையும், தங்கச் சங்கிலியும் மேலே போர்த்திக் கொள்ள கம்பளியும், கையில் வெள்ளி கொம்பையும் வைத்துக்கொண்டு கம்பீரமாக நடந்தார்கள்.

'எனக்கு அரசாள பிடிக்கவில்லையப்பா. அது என் தொழில் அல்ல. ஆனால் இறைவன் என் தலையில் எழுதிவிட்டான்' என்று அலுத்துக் கொண்டார்கள். அலுத்தபடியே அதிகம் அதிகாரம் செய்தார்கள். வணிகர்களை நண்பர்களாக்கிக் கொண் டார்கள். மறவர்களை தள்ளி வைத்தார்கள்.

பஞ்சமர் பாடு மிக வேதனையாக இருந்தது. அவர்களுக்கு மறவர் துணையில்லாமல் காடு தாண்டி தெற்கே போகவும் பயமாக இருந்தது. இன்று போகலாம், நாளை போகலாம் என்ற குழப்பத்தில் இருந்தார்கள்.

தெற்கே ஒட்டதேசம் சிதறிக் கிடந்தது. தேசம் இரண்டாக பிளவுபட்டிருந்தது. ஜெகந்நாதர் கோவிலும், அதை சுற்றியுள்ள கிராமங்களும் அந்தணர் வசமாயின. கடற்கரை ஓரமும், ஊரின் உள்ளே இருக்கின்ற வயல்வெளிகளும் அரச குடும்பத்தின ரின் ஆதரவில் இயங்கின. வணிகர்கள் அந்த அரசர்களுக்கு ஆட்சியை பற்றி சொல்லிக் கொடுத்தார்கள். வணிகர்கள் அந்தணர்களை வெறுத்தார்கள். 'இந்த ஆட்டத்தையெல்லாம் சத்ரியர்களிடம் வைத்துக் கொள். என்னிடம் நடக்காது.' நல்ல மறவர்களுக்கு காசு கொடுத்து பாதுகாப்பாக வைத்துக் கொண்டு அவ்வப்போது ஜகன்னாதர் கோவிலுக்கு போய் மிரட்டிவிட்டு வந்தார்கள். ஜகன்னாதர் கோவிலை கைப்பற் றவும் அவர்களுக்கு தயக்கம் இருந்தது.

ஒட்ட தேசத்திற்கு நாவாய்கள் வர, என்ன செய்யலாம் என்று கலந்தாலோசித்து ஓரமுள்ள கிராமங்களையும், பட்ட ணங்களையும் பொலிவாக்கினார்கள். கரை போட்ட காழகம் நிறைய தயார் செய்து அங்கு விற்பதற்கு எடுத்துப் போனார்கள். தேனும், கற்பூர தைலமும், பசுத் தோலும், சந்தன கட்டையும் கடற்கரையில் கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்தணர் களுக்கு கடற்கரைக்கு உள்ளே வர தடை இருந்தது. பொது மகளிர் கூட்டம் அதிகம் தெற்கு நோக்கி போகவில்லை. சோழ தேசத்து வீரர்களும் வற்புறுத்தவில்லை. ஆனால் அவர்கள் அதிகம் அந்தணர்கள் குடியிருக்கும் இடத்தை நோக்கி நகர்ந் தார்கள். மறவர்களை விட அந்தணர்கள் பாதுகாப்பானவர் கள் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. ஜகன்னாதர் கோவிலை சுற்றி குடியிருப்புகள் அவர்களுக்கு அந்தணர்கள் ஏற்படுத்தி தர, கும்பல் கும்பலாய் அங்கு அடைந்து வாழ்ந்தார் கள். தானியங்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டன. ஆடுகள் குறைந்த விலைக்கு கிடைத்தன. ஒட்டதேசம் ஒருமாதிரி உயிர் வாழ்ந்து வந்தது.

ஆனால் வேங்கியில் உள்ள சந்தோஷம் வேறு எந்த தேசத்திலும் இருக்காது. வேங்கி முழுவதும் தினசரி ஒரு பண்டிகை, தினசரி ஏதேனும் ஒரு கொண்டாட்டம் என்று இருந்தது. இன்று இராஜேந்திர சோழர் பிறந்த நாள், இன்று வீரமாதேவி பிறந்த நாள், இன்று பஞ்சவன் மாதேவி பிறந்த நாள், இன்று பரவையின் பிறந்த நாள், இன்று வீர இராஜேந் திரன் பிறந்த நாள், இன்று அவரின் பண்டிகை, இன்று இவரின் பண்டிகை என்று மாதத்திற்கு மூன்று விருந்து உபசாரங்கள் நடந்தன. ஊர்மக்கள் கோவில் பக்கம் ஒன்றுகூடி கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

வடகிழக்கு பருவமழை சுழன்று சுழன்று அடித்தது. கோதாவரியில் வெள்ளம் எகிறியது. கோதாவரி கரையோரம் மதகுகள் கட்டி கருங்கற்களால் கெட்டிப்படுத்தி, பெரிய இரும்பு கதவு அமைத்து, ஊடறுத்து போகின்ற கால்வாய்களை திசை திருப்பி, அந்த மதகின் பக்கம் தேங்கவைத்து அவ்வப்போது திறந்து மிகச்சீரான பாசன வசதியை சோழ தேசத்து கல் தச்சர் களும், மரத்தச்சர்களும் செய்து கொடுத்தார்கள். அந்த வேலையை வேங்கியின் வீரர்கள் கற்றார்கள். வடக்கேயிருந்து வந்த உழுகலன்கள் வேங்கி தேசத்து விவசாயிகளுக்கு மிகவும் விருப்பமான விஷயமாக இருந்தது. பல ஏர் கொழுக்கள் இலவச மாக தரப்பட்டன. இரும்பாலான அந்த கொழுமுனைகளுக்கு மர அமைப்பு செய்து கைப்பிடி அமைத்து மாட்டுக்கு முகத்தடி மாட்டி, ஆழ உழும் வேலையை சோழ வீரர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். நீண்ட மண்பிடியால் மண் கிளறி விதைப்பது என்பது மாறி மண்ணை புரட்டிப் போடுகின்ற ஏர்முனை உழவு அவர்களுக்கு பிடித்திருந்தது. பருவ மழையாலும், கோதாவரி யின் நீர் வரத்தாலும் எல்லா வயல்களும் நீர் நிரம்பி இருந்தன. ஒரு முழங்கை இடைவெளி விட்டு நாற்று நட்டார்கள். தண்ணீர் எப்போதும் தேங்கியதால் கதிர் உயரமாக இருந்தது. பால் பிடித்தது. தானியங்கள் செழிப்பாக வாயில் போட்டால் நீர் ஊறுபவையாக இருந்தன. தோப்புகளுக்குக் கூட கால்வாய் வெட்டி அங்கும் சோழப்படையினர் நீர் பாய்ச்சினார்கள். இவைகளெல்லாம் கெட்டிக்கார தளபதிகளால் செய்யப்பட்டன. போர் நேரத்தில் போர். மற்றபடிக்கு விவசாயம்தான் ஒரு

தேசத்தின் அடிப்படையான தொழில் என்று அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள்.

அரண்மனைகள் செப்பனிடப்பட்டன. கோட்டைகள் பலப்படுத்தப்பட்டன. மேலைசாளுக்கியத்தினர் வரும் வழி என்ற இடங்களில் மூங்கில்கள் நடப்பட்டன. புதர்கள் வளர வேண்டும் என்று உரம் போட்டார்கள். குறுகிய இடைவெளியில் கிராமங்கள் நிர்ணயிக்கப்பட்டன. படையெடுப்பு என்று தெரிந்தால் ஓடிவந்து உள்ளே சொல்லவும், ஜனங்கள் தப்பித்துக் கொள்ளவும் நல்ல மண்பாதைகள் போடப்பட்டன. ஜனங்கள் பாதை போட உதவினார்கள். வடக்கே இருந்து வந்த தண்டபுத்தி, தட்சிணலாடத்து கைதிகளும் இதில் ஈடுபடுத்தப்பட்டார்கள். தோலில் பை செய்து ஓடுகின்ற கால்வாயிலிருந்து மாடுகள் மூலம் கவலை கட்டி அதன் மூலம் வயலுக்குள் நீர் இறைத்தார்கள். முன்னும், பின்னும் நூறு முறை மாடு போய் வந்தால் ஒரு பெரிய நிலப்பரப்பு சேறாகியது. மேடான பகுதிக்கும் நீர் பாய்ந்தது.

எல்லா கிராமங்களுக்கும் நீர்க் குடங்கள் தரப்பட்டன. மரக்குதிர்கள் செய்து தரப்பட்டன. மாடுகளும், ஆடுகளும் தரப்பட்டன. பெரிய வணிகர்கள் யானைகள் வாங்கினார்கள். வேங்கியின் கடற்கரை பொலிவு பெற்றது. அரிசிதான் உணவு. கரும்பும், வெற்றிலையும் அடுத்த பயிர். நாவாய்கள் கட்ட ஊக்கப்படுத்தினார்கள். கற்றாழை நூலால் நெய்த பாய்மரங்களுக்கு பதிலாக துணிகளால் செய்த பாய்மரங்களை தயாரித்தார்கள். இரண்டு துணிகளை ஒன்றின் மீது ஒன்று தைத்து, ஒரு பனை உயரத்திற்கு மரத்தூண்கள் அமைத்து அதில் முக்கோண வடிவமாகவும், மேலே அகலப்படுத்தி கீழே குறுகலாகவும், விதம் விதமான பாய்மரங்களை தயாரித்தார்கள். படகுகளுக்கான பெரும் துடுப்புகள் இரும்பு சவாகை அடித்து அங்கு தயார் செய்யப்பட்டது. வேங்கி வீரர்களை சோழ வீரர்கள் வறுத்து எடுத்தார்கள். ஓடு, ஓடு என்று துரத்தினார்கள். உடற்பயிற்சி செய்யச் சொன்னார்கள். ஒரு நாளைக்கு ஒரு வீரன் ஐம்பது முறை ஈட்டி எறிய வேண்டும் என்று சொன்னார்கள். கணுக்கணுவாக வலிக்கிறது என்று சொன்னபோது அவர்கள் உடம்பில் மருந்து தடவி, பெண்களை விட்டு மிதிக்கச் செய்து

தூங்க வைத்தார்கள். கொடி அசைவில் ஓடுவதற்கும், பிரிவ தற்கும் கற்றுக் கொடுத்தார்கள். கொம்பூத கற்றுக் கொடுத் தார்கள். பொய் தாக்குதல்கள் நடத்தினார்கள். தவறை சுட்டிக் காட்டினார்கள்.

வடக்கத்திய மழையால் வேங்கியில் மரங்கள் நனைந்து பூத்து குலுங்கின. மரப் பிஞ்சுகள் பொங்கி வழிந்தன. இந்த முறை மாமரம் நல்ல விளைச்சல் தரும் என்று விவசாயிகள் பல் தெரிய நின்றார்கள். கரும்பிலிருந்து வெல்லம் காய்ச்சுகின்ற வித்தையை அவர்கள் மிகச் செம்மையாக செய்தார்கள். அதற்கான பாத்திரங்களை வாங்கினார்கள். சோழ தேசத்து கருமார்கள் செய்து கொடுத்தார்கள். புல் தின்ற பசுக்கள் நன்கு பால் கொடுத்தன.

வேங்கியின் எல்லையில் இறந்துபோன மூன்று சோழ தளபதிகளுக்கும் இராஜராஜ நரேந்திரன் பள்ளிப்படை கோவில் எழுப்ப வேண்டும் என்று தீர்மானித்தான். தாய்மாமன் இரா ஜேந்திர சோழருக்கு நன்றியாக இதை செய்ய அவன் விரும் பினான். இராஜராஜ பிரம்மராயருக்கும், மிலாடுடையாருக்கும், சோழ கோனுக்கும் அவரவர் இறந்த இடங்களில் சிவலிங்கம் அமைத்து, கருவறை அமைத்து, விமானம் அமைத்து, முன் மண்டபம் அமைத்து, முன் மண்டபத்தில் நந்தி வைத்து சிறிய கோவில்களை அவன் கட்டினான். சிவலிங்கத்தில் கங்கை நதி ஊற்றி இறந்த மூன்று பேரின் மனக்கேதங்களை தீர்த்தான். பலருக்கு அன்று கதம்பசாதம் பிரசாதமாக கிடைத்தது. வரிசை வரிசையாக உட்கார்ந்து இலைகளில் சாதம் ஏந்தி அவர்கள் உண்டார்கள். கண்களில் நீர் வழிய இராஜேந்திர சோழர் அதை பார்த்தார். ‘கங்கே யாதவ் இன்னும் உயிரோடு இருக்கிறானே’ என்று பொருமினார்.

பட்டாபிஷேகத்திற்கு நாட்கள் குறிக்கப்பட்டன. என்று அரசியர் வருகை. என்று மணமகன் வருகை. என்று திருமணம். என்று அடுத்த நலங்கு விருந்து என்றெல்லாம் நாட்கள் குறிக்கப்பட்டன. ஆறு நாள் திருமணம் அட்டகாசமாக நடந்தது. ஏழு, எட்டு நாட்களில் ஓய்வு. ஒன்பதாம் நாள் மறுபடியும் ஒன்றுகூடி பட்டாபிஷேகம் நடந்தது.

இராஜராஜ நரேந்திரன், இராஜேந்திர சோழரின் மகளோடு கைகோர்த்து சிங்காசனத்தில் அமர்ந்தான். இரத்தினமயமாய் உள்ள கிரீடத்தை சூட்டிக் கொண்டான். செங்கோல் ஏந்தினான். பட்டத்து வாள் தரித்தான். அவன் மனைவி பேரழகியாய் அவன் அருகில் உட்கார்ந்திருந்தாள். உட்கார்ந்ததும் எழுந்து நின்று தந்தையை நோக்கி தலைகுனிந்து வணங்கினாள்.

''எனக்கு மிகவும் சந்தோஷமப்பா'' என்று அங்கிருந்து சொல்ல, இராஜேந்திர சோழர் விம்மினார்.

''சிவபெருமானே, தஞ்சை பெருவுடையாரே, நிசும்ப சூதனி தாயே, இது உன் கருணை'' என்று அரற்றினார். சரியான மருந்தால், பக்குவமான உணவால் அவர் உடம்பு நல்ல நிலையில் இருந்தது. கடற் பயணத்திற்கு அவர் தயார் என்று வைத்தியர்கள் சொன்னாலும், அப்படி சொல்லக்கூடாது என்று வீரமாதேவி கட்டளை இட்டு, 'தேவையானபோது நானே வெளிப்படுத்துவேன். இப்பொழுது பேச வேண்டாம்' என்று கட்டளை இட்டாள். ஆனால் சக்கரவர்த்தி இராஜேந்திர சோழருக்கு தான் திடமாக இருப்பதை உணர முடிந்தது. புணர்ச்சியில் வேகம் இருந்தது. தூக்கத்தில் நிம்மதி இருந்தது. குதிரை ஏறி வேகமாக ஓட்டுவதில் தெளிவு இருந்தது. இறங்கி நடந்து வீரர்களுக்கு உள்ளே போய் விசாரிப்பதில் திடம் இருந்தது.

நுரையீரல்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று மாணிக்கவாசகம் சொன்னான். ''பிரச்சனை உங்கள் மூச்சுதான். இதை சீர்செய்து கொண்டால் உடம்பில் மற்ற விஷயங்கள் நன்றாக இருக்கும். உணர்ச்சிவசப்படாமல் இருப்பதும் நல்லது'', என்று சொல்லித் தர, அவனிடம் மூச்சுப் பயிற்சிகள் கற்றார்.

அருண்மொழியும், வீரமாதேவியும் தனித்தனியான வங்கத்தில் ஏறி நாகைக்கு போக விரும்பினார்கள். வங்கம் என்ற அந்த மரக்கலம் மிகப் பெரிதாக இருந்தது. ஆயிரம் பேர் கொண்ட குழுக்களாக சோழப்படைகள் வேங்கியை விட்டு தொண்டை நாட்டை நோக்கி நகர்ந்தது.

திருவொற்றியூர் இரண்டுபட்டது. ஊரும், கோவிலும் அலங்கரிக்கப்பட்டன.

''ரசம் ஊற்றய்யா. ரசம் ஊற்று'', சோற்றில் ரசம் பிசைந்து சாப்பிட்டார்கள்.

"அப்பம் கொடு", என்று கேட்டு உண்டார்கள்.

"இந்த இடரிகைக்கு ஈடு எதுவும் இல்லை." ஒரு துவை யலோடு சேர்த்து வழித்து உண்டார்கள். கறிக்குழம்பு மிதக்க விட்டு உறிஞ்சி குடித்தார்கள்.

"இதுதானய்யா சோறு. இதை சோழ நாடுதான் உண்டாக் கியது. சோழம் சோறுடைத்தது."

மயிலை எல்லையில் அவர்களை சீராளன் வரவேற்றான். சீராளன் மனைவிக்குக் கட்டிய கோவிலை சோழ வீரர்கள் வலம் வந்தார்கள்.

கற்றளி கட்டலாமே என்றார்கள். பொற்கழஞ்சுகள் தரு கிறோம் என்று பைக்குள் கைவிட்டார்கள்.

"இல்லை. என் மனைவிக்கு அதில் விருப்பமில்லை. கூரை போதுமென்று சொல்லியிருக்கிறாள்" என்று சீராளன் சொல்ல, அவர்கள் வியப்போடு அந்த நடுகல்லை பார்த்தார் கள். தினமும் கோவிலில் உணவு கொடுங்கள் என்று காசு கொடுத்தார்கள். கோவிலுக்கு ஒரு சொம்பு கங்கை நீரும், கோவிலுக்குள் நீர் வைத்துக் கொள்ள குடங்களும், தவலை களும் தரப்பட்டன.

"சீராளன், உங்கள் உபசரிப்பு எங்களுக்கு தெரியும். உங்க ளுக்கு என்ன வேண்டும்" என்று ஒரு உபதளபதி கேட்டான்.

"எனக்கு என்ன தேவை இருக்கிறது. எல்லாம் மயிலை, திருவல்லிக்கேணியில் கிடைக்கிறதே. வியாபாரம் மிக நன்றாக நடைபெறுகிறது. பித்தளை பாத்திரங்களை வணிகர்கள் கருமார் களின் உதவியோடு மிக நன்றாக செய்கிறார்கள். சோழ தேசத் தில் நன்கு விற்பனையாகிறது. தாம்பாளத் தட்டுகள் நூற்றுக் கணக்கில் போகின்றன. இரவு பகலாக அடித்துக் கொண்டிருக் கிறார்கள்.

அவர்கள் உங்களிடம் தாமிர பட்டயங்களை, பாளங்களை எதிர்பார்க்கிறார்கள். தாமிரம் கிடைத்தால் தங்கத்தோடு கலந்து ஈயம் ஏற்றி, பித்தளை கலவையோடு கொதிக்க வைத்து சிறு சிறு கரண்டிகள் செய்வார்கள். நெய் கிண்ணம், ரசப் பாத்திரம் போன்ற உருளிகள் செய்வார்கள். கோவில்களுக்கு அவை உபயோகமாக இருக்கும்.

எல்லாவற்றுக்கும் மண் பானைதானே. இப்பொழுது இங்கேயே மண்பானை குறைந்துவிட்டது. வெண்கல உருளி களிலும், பித்தளை பாத்திரங்களிலும், ஈயம் பூசப்பட்ட செம்பு தவலைகளிலும் சமையல் செய்கிறார்கள்.

கோதாவரிக்கரை விதை நெல்லை வாங்கி வைத்திருக் கிறோம். அடுத்த முறை அதை இங்கே விதைக்கப் போகி றோம். கோதாவரிக் கரை கரும்பு துண்டுகள் கிடைத்தால் அவைகளையும் நட ஆசை. கீழை சாளுக்கியத்து வெற்றிலை கள் முரட்டுத்தனமாக இருக்கின்றன. கார நெடி அடிக்கிறது. நமக்கு அது பழக்கம் இல்லை. அதனால் மயிலாப்பூர் வெற்றி லையே மிக உசத்தியாக தஞ்சையில் கொண்டாடுகிறார்கள். எங்கள் ஊர் பூவம்பழ ருசி, வேறு எங்கேயும் கிடைக்காது. விரல் நீளமுள்ள பழங்கள் அதிகம் இனிப்புள்ளவை.'' அவன் திறம்பட பேசினான்.

தஞ்சை நோக்கி போகவேண்டிய தாமிர பட்டயங்களை விலை கொடுத்து வாங்கினான். வணிகர்களுக்கு கூடுதல் விலை வைத்து விற்றான். இடைப்பட்ட காசை கிராமத்து பொது நிதியில் சேர்த்தான்.

நீண்ட தலைமுடியோடு, காவி வேட்டியோடு, வெள்ளை மேல் துண்டோடு, நெற்றியில் திருநீறோடு, குறுந்தாடியோடு ஒரு துறவியை போல் இருந்த அவனை அவன் ஊர் நேசித்தது. வந்தவர்கள் மரியாதை செய்தார்கள். அவன் கையால் ஒரு குடம் கங்கை ஏந்தி, தலையில் வைத்து கபாலி கோவிலுக்கு படி ஏறினான். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்கு அந்தணர்கள் மூலம் அனுப்பி வைத்தான். ஒரு கிண்டி நிறைய கங்கை நீர் எடுத்து தன் மனைவியினுடைய நடுகல்லில் நிதான மாக ஊற்றினான். மஞ்சளும், சந்தனமும் அப்பினான். குங்குமம் வைத்தான். தடித்து நுனியில் வேல் போல இருந்த அந்த நடு கல் மிக அழகாக காட்சியளித்தது.

உத்திரலாடத்து கொழுத்த பசுக்கள் மயிலைக்கு திரும் பின. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்கு தானமாக கொடுக்கப்பட்டன. எப்பொழுதும் பரபரப்பாக இருக்கும் மயிலை இன்னும் சூடு பிடித்தது போல் ஆயிற்று. விடிந்த சிறிது நேரத்திலேயே வியாபாரிகள் ஒன்றுகூடி, விற்க என்ன

இருக்கிறது, வாங்க என்ன இருக்கிறது என்று பேச ஆரம்பித் தார்கள். மயிலை அந்தணர்களுடைய வேகம் அடங்கி வணிகர் களுடைய தலைமைக்கு மாறிற்று. ஆனாலும் இறுதி தீர்ப்புக் காக வேளாளனான சீராளனையே அவர்கள் நம்பியிருந்தார்கள். ''மயிலை ஒரு துறவியின் ஆட்சியில் இருக்கிறதய்யா'' என்று சந்தோஷமாக உரத்து பேசினார்கள்.

தெற்கத்தி காற்று சாதகமாக இருந்ததால் இரண்டு பாய்மரம் உள்ள படகுகளில் பாத்திரங்கள் ஏற்றி வியாபாரிகள் நாகைக்கு அனுப்பினார்கள். தெற்கத்தி காற்று இருந்ததால் கடற்கரை பாதையாக நகர்ந்து மீன்சுருட்டி நோக்கி திரும்பினார்கள். காஞ்சிபுரத்திற்கும் ஆடைகளும், பாத்திரங்களும் அனுப்பப் பட்டன. குடந்தை போக கடற்கரைசாலையை உபயோகப் படுத்துவார்கள். ஆனால் சோழப்படைகள் காஞ்சிபுரம் நோக்கி திரும்பின. அங்கு கைலாசநாதர் கோவிலுக்கு கங்காபிஷேகம் நடந்தது. எல்லா ஜனங்களும் அதை வாங்கிக் கொண்டார்கள். பெரிய பாத்திரங்களில் அந்த சொம்பு ஜலத்தை கலந்து அதை தீர்க்கமாக எடுத்துக் கொண்டு போனார்கள். உத்திரலாடத்து செப்புக் காசுகள் தரப்பட்டன. அதை வாங்கி வாங்கி வேடிக்கை பார்த்தார்கள். பசுக்களும், ஆடுகளும் விற்பனையாயின. காஞ்சி புரத்து தேவரடியார்கள் நகை வேண்டும் என்று கேட்க, அவர் களுக்கு எதிரே துணி விரித்து நகைகளை பரப்பினார்கள். பெண்கள் ஆவலாக பல நகைகளை தேர்ந்தெடுத்து பொற்காசு களை கொடுத்தார்கள். வீரர்களை இரவு தங்கச் சொன்னார்கள். எல்லா இடங்களிலும் ஏதோ விற்றுக் கொண்டும், வாங்கிக் கொண்டும் ஜனங்கள் அலைந்தார்கள்.

''என்னய்யா இது.''

''இதுவா இது தட்சிணலாடத்து அரிவாள்.''

''அது என்ன.''

''அது உத்திரலாடத்து ஏர் முனைகள். இது கோசல தேசத்து வெண்கல பானை. இது கற்பூர தைலம். சின்ன குடுவை யில் தைலம் நனைத்த துணியை வைத்து இறுக மூடிக்கொள், ஒரு நாளைக்கு ஒருமுறை முகர்ந்து பார். சளி, தும்மல் வரவே வராது. இது குங்கிலிய பொடி. வீட்டிலும், மாட்டுக் கொட்டகை யிலும் போடு. திருஷ்டி கழியும். இது வேங்கி தேசத்து தேன். அதிகம் நக்காதே. இது மருந்து. அளவாக உண். ஒரு மரக்கால்

கோதாவரிக்கரை நெல் இருக்கிறது. வாங்குகிறாயா. ஒரு மரக் கால் பதினைந்து பொன்.'' ஊர் திகைத்தது. ஆனாலும் வாங்கியது.

''அந்தணரே விற்க ஏதாவது வைத்திருக்கிறீர்களா.''

''இல்லை. ஓலைச்சுவடிகள் தான் வைத்திருக்கிறேன்.''

''ஓலைச்சுவடி வைத்து என்ன செய்வது. முதுகு சொறி வதா. ஏதாவது நல்ல விஷயமாக கொண்டுவரக் கூடாதா.''

''நான் வைத்திருப்பது நல்ல விஷயம்.''

''என்ன.''

''இது அதர்வண வேதத்து மந்திர உச்சாடனங்கள் சொல்லிக் கொடுக்கின்ற பாடம்.''

''அந்த மந்திர உச்சாடனங்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது.''

''யட்சணிகளை வசப்படுத்தலாம். ஏவல், பில்லி, சூன்யங் களை செய்யலாம்.''

''அப்படியா.'' காஞ்சிபுரத்து அந்தணர்களுக்கு செய்தி போயிற்று. அந்த அந்தணரை சூழ்ந்து கொண்டார்கள். நிறைய காசு கொடுத்து தங்கள் கிராமங்களுக்கு அழைத்து போனார் கள். அவர் மனைவி, குழந்தைகளோடு தங்குவதற்கு இடம் கொடுத்தார்கள். காலை பத்து பேர், மாலை பத்து பேர் என்று அதர்வண வேதத்து பாடங்கள் கேட்டார்கள்.

''இங்கு கோவிலில் ஸ்ரீ சக்ர ஸ்தாபனம் அல்லவா இருக் கிறது. இதுதானே சாக்த உபாஸகத்தின் ஆரம்பம். இங்கு இந்த மந்திரங்களை நன்றாகக் கற்றுக் கொள்ளலாமே.'' அவர் உற்சாகப் படுத்தினார். நன்றாக சம்பாதித்தார். எல்லோரும் விற்றார்கள். எல்லோரும் வாங்கினார்கள். ஜாதிபேதம் இல்லாமல் இது நடந்தது.

பஞ்சமர்கள் மூலிகைகள் அதிகமாக வைத்திருந்தார்கள். கெட்டியான கிழங்குகள் ஆண்மை வளர்க்கும் என்று சொன் னார்கள். மெல்லியதாக அரிந்து கொடுத்தார்கள். சந்தன பிசின் ஒரு சிறிய கட்டி இரவில் தண்ணீரில் போட்டு வைத்துவிடு. காலையில் எழுந்ததும் அந்த தண்ணீரை குடித்து பிசினை தூக்கி போட்டுவிடு. எந்த நோயும் வராது. வயிறு மிக சுத்தமாக

இருக்கும். பாத வெடிப்பா, உள்ளங்கால் வலியா, ஆடுகால் தசை முறுக்குகிறதா இந்த வேர்களை எண்ணெயில் போட்டு சுண்ட காய்ச்சி இறுக்க வைத்துக் கொள்ளுங்கள். நல்ல திடமாக ஆன பிறகு ஆற வைத்து மேலே தடவி விடுங்கள். பிறகு இதமாக வெந்நீரில் துணியை நனைத்து மேலே ஒத்தடம் கொடுங்கள். பிறகு சட்டென்று குளிர் நீரால் அந்த இடத்தில் ஒத்தடம் கொடுங்கள். பிறகு மறுபடியும் வெந்நீர் விடுங்கள். மூன்று முறை செய்தால் போதும். வலி வராது. இருந்த வலி ஓடியே போய்விடும்.''

''இது என்ன வேர்.''

''வேர் அல்ல. குச்சி. ஆலங்குச்சி. ஆலமரம் சிறிய கிளை விட்டு பூக்கும். அந்த பூப்பதற்கு முன்பாக இருந்த மெல்லிய குச்சி அழுத்தினால் நசுங்கும். நசுங்கின இடத்தில் பல் தேய்த்துக் கொள். மிளகும், உப்பும் கலந்த இந்த பொடியில் நனைத்து மறுபடியும் தேய். வாய் கொப்பளித்து விடு. பூச்சியே அண்டாது. சொத்தையே விழாது. பல் பளீரென்று இருக்கும். இந்த மிளகு காரம் எங்கும் கிடைக்காது. தட்சிணலாடத்து மலையில் ஏராள மாக பரவி கிடக்கிறது.''

''என்ன இந்த குதிரை குள்ளமாக இருக்கிறதே. சடைமுடி வேறு இருக்கிறது.''

''இது குதிரை இல்லை அய்யா. கோவேறு கழுதை.''

''அட, இவ்வளவு பெரிய கழுதையா, படி போட்டல்லவா ஏறி உட்கார வேண்டும்.''

''இதை உட்காருவதற்கு பயன்படுத்த வேண்டாம். நன்கு பொதி சுமக்கும்.'' இடுப்பு உயர கருங்கல்லை இரண்டு பக்க மும் போட்டு அந்த கழுதை வேகமாக நடப்பதை பார்த்து ஊர் வியந்தது, விலை கொடுத்து வாங்கியது.

குதிரை சேணங்கள், மாட்டு முகத்தடிகள், சக்கரங்களை மாட்ட வேண்டிய கெட்டியான கடையாணி, வண்டியின் அச்சு, ஒரு வீட்டின் வாசற்படி, கோவிலின் கலசம், மண்ணால் செய்யப்பட்ட ஜன்னல், மரத்தில் செய்த விநாயகர். மண்ணால் செய்யப்பட்டு, புல்லால் கயிறு திரிக்கப்பட்டு சுற்றிலும் அழுத்தி வைக்கப்பட்ட குடுவை. அந்த குடுவைக்குள் பல சிறிய குடுவைகள்.

''ஏன் இப்படி.

''இவைகள் மருந்து வைத்துக் கொள்ள உதவும். உங்களுக்கு உதவாது. வைத்தியர்கள் கண்டேன், கண்டேன் என்று வாங்கிக் கொள்வார்கள்.'' வைத்தியர்கள் வாங்கினார்கள்.

வணிகர்களால் வங்க தேசத்தில் விற்கப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடி பெரும் விலைக்கு போயிற்று. தங்கத்தை விட கண்ணாடிக்கு வரவேற்பு இருந்தது. யாரோ ஒரு போர் வீரன் ஒரு மூட்டை வெள்ளி மோதிரங்கள் வாங்கி வந்தான். வாங்குவதற்கு எதுவும் தோதுபடவில்லை என்றால் ஜனங்கள் வெள்ளி மோதிரங்கள் வாங்கினார்கள். கொண்டு வந்தவன் பெரும் காசு சம்பாதித்தான். சீனத்து பட்டை காஞ்சிபுரத்து பெண்கள் கட்ட, தோலாலான நீண்ட கயிறுகளை உடைய பாத ரட்சைகளை மறவர்குல இளைஞர்கள் அணிய, மார் கவசங்கள், கேடயங்கள், இடுப்பு சங்கிலிகள், பித்தளை கழல்கள், வெள்ளி அரைஞாண், தங்க ருத்ராட்ச மாலை என்று பெரிதும் பரவின.

அந்நிய தேசத்து பொருள்கள் இல்லாதவரே இல்லை என்பது போல் வியாபாரம் ஆயிற்று. "இரவும் பகலும் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொன்னை சிறுக சிறுக சேர்த்து வைத்திருந்தாய். இப்பொழுது அதை விற்று கண்ணாடி வாங்கியிருக்கிறாயே. நன்றாகவா இருக்கிறது.'' ஒரு கிழவி அலட்டிக் கொண்டாள்.

''இன்னும் கஷ்டப்பட்டு சம்பாதிப்பேனடி. ஆனால் கண்ணாடி கிடைக்குமா.'' அந்த மத்திம வயது உள்ளவள் தொடை தட்டி சிரித்தாள். அரை நாள் அந்த கண்ணாடியை உபயோகிப்பதற்கு வாடகைக்கு விட்டாள். நன்கு பித்தளையால் அலங்காரம் செய்யப்பட்டு, கைப்பிடி வைக்கப்பட்ட அந்த கண்ணாடி பல தேவரடியார்களின் கைகளில் மாறி அழகு காட்டிகாசு சம்பாதித்தது.

தடிமனான பிரம்பை வளைத்து கைத்தடியாய் அமைத்திருக்கிறார்கள். அந்த பிரம்பில் நாகம் செதுக்கியிருக்கிறார்கள். ஒரு கைத்தடி ஒரு பொன்கழஞ்சு. ஒரு கிழவர் பல் இல்லாமல் சிரித்தார். கைத்தடி அவருக்கு தேவையே இல்லை. விரைவாக நடக்க முடிந்தது. ஆனாலும் அந்த கைத்தடியை கையில் வைத்துக் கொள்ள, படுக்கும்போதும் பக்கத்தில் வைத்துக்

கொள்ள அவர் ஆசைப்பட்டார். தொண்டை நாடும், சோழ தேசத்தின் மற்ற இடங்களும் மெல்ல மெல்ல, அந்நிய தேசத்து பொருள்களால் மாறின. காசு புழக்கம் அதிகமாயிற்று.

''உண்ண ஒரு கை சோறு. உடுத்த ஒரு முழ துணி. படுக்க ஒரு திண்ணை. போதாதா. காஞ்சிபுரத்திற்கு என்ன பைத்தியமா பிடித்துவிட்டது. இப்படி அலைகிறார்களே.'' சில துறவிகள் நொந்து கொண்டார்கள். ஆனாலும் என்ன விற்கிறது, என்ன வாங்குகிறார்கள் என்பதை கூர்மையாக பார்த்துக் கொண்டார்கள்.

''இங்கிருந்து கைலாயம் பறந்து போக மருந்து வைத்திருக்கிறாயா.'' பஞ்சமர்களிடம் கேட்டார்கள்.

'ஆஹா, வைத்திருக்கிறேன். ஒரு கொட்டை இருக்கிறது. நார் உரித்து, தண்ணீர் விட்டு தரையில் உரசி அந்த விழுதை ஒருமுறை நக்கினால் போதும். உடனே போய்விடுவாய்.''

''எங்கே.''

''மேலே கைலாயத்திற்கோ, வைகுண்டத்திற்கோ, அதற்கும் மேலோ.''

''நீ சொல்வது மரணம் அல்லவா.''

''ஆமாம். கடும் விஷம் கொண்ட விதைகளை வைத்திருக்கிறேன்.''

''எதற்கு அது.''

''ஒரு ஈர்க்குச்சியில் தொட்டு அதை உமது புண்ணில் வைத்தால் போதும். உடனடியாக காயம் ஆறும். ஒரு துளி மருந்து. ஒரு விழுது விஷம்.'' ஊர் அந்த விதைகளை முகர்ந்து பார்த்து திருப்பி கொடுத்தது.

''அடடா. உலகத்தில் என்ன விஷயங்களெல்லாம் இருக்கின்றன அய்யா.'' ஒருவர் மிகப்பெரிய அதிசயத்தை வெளிக்காட்டினார். ஜனங்கள் ஆமோதித்தார்கள்.

''ஊர்விட்டு ஊர் போவது அதிசயம். அப்படி ஊர் போனவன் திரும்பி வருவது இன்னொரு அதிசயம். அப்படி திரும்பி வந்தவர் விதம் விதமான பொருள்கள் கொண்டு வருவது மிக அதிசயம். சோழ தேசம் என்ன சாதாரணமானதா. அது எவ்வளவு பெரிய வீர பூமி. வடக்கே எங்கோ வெகு தொலைவில் இமய

மலையிலிருந்து பொங்கி வழிகின்ற கங்கையை இங்கு கொண்டு வந்திருக்கிறார் என்றால் சாதாரண மனுஷனா. எத்தனை கடும் உழைப்பு. எத்தனை பேர் உழைப்பு. எத்தனை பேர் மரணம். யாரோ பகீரதன் தவம் செய்து சிவபெருமானை வேண்டி கங்கையை கொண்டு வந்தானாம். பல ஆண்டுகள் தவம் செய்தானாம். இதோ பத்தே மாதத்தில் கொண்டு வந்து விட்டார் நம்முடைய இராஜேந்திரர். அந்த பகீரதனை விட நம்முடைய இராஜேந்திர சோழர் பெரிய உயர்வல்லவா.' ஒரு தமிழ் புலவர் பேச, கூட்டம் எழுந்து நின்று 'சோழம் சோழம்' என்று கர்ஜித்தது. 'திருமன்னி வளர' என்று இராஜேந்திரர் புகழ் பாடியது. கட்டியம் கூறியது.

இந்த படையெடுப்பு நல்லதா, கெட்டதா. சாமந்தசேனன் என்று ஒரு சோழ தளபதி வடக்கே தங்கியிருக்கிறானாமே. நாமெல்லாம் எளிதாக காசிக்குப் போகலாம். சாமந்தசேனன் வரவேற்பான். அந்த பாதை செப்பனிடப்பட்டு விட்டது. யானைகளும், குதிரைகளும், வண்டிகளும் போய் போய் அந்த பாதை துல்லியமாக இருக்கிறது. ஒரு மாதத்தில் கங்கைக் கரையை அடைந்துவிடலாம்.

''போவோமா. போய் காசியை பார்த்துவிட்டு வருவோமா'' என்று சில துறவிகள் சொல்ல, பலரும் எழுந்திருந்தார்கள்.

''ஆனால் பயிற்சிகள் எடுத்துக் கொண்டு போவது நல்லது. வடக்கிலிருந்து வரும் மழை ஓயட்டும். பிறகு போவது நல்லது' என்று அறிவுறுத்தப்பட்டார்கள். அவர்கள் வடக்கே போக ஆயத்த மானார்கள்.

''இமயமலை வெகுதூரம் இல்லை. அருகேதான் கைலாயம். காணமுடியாத விஷயம் இல்லை. முயன்றால் முடவராலும் முடியும். சிவபெருமானின் அம்சமான இராஜேந்திர சோழரின் கருணை. அவர் காட்டிய வழி.'' ஊர் ஆவேசமாய் அவரை பாராட்டியது.

எசாளத்தில் குருமார்களுக்கு சிறப்பு செய்தார்கள். வேதம் படிக்கும் மாணவர்களுக்கு வேட்டிகள் கொடுத்தார்கள். பானை கள் கொடுத்தார்கள். அபிஷேகங்களுக்கு பெரிய பித்தளை பாத்திரங்கள் கொடுத்தார்கள். பெரிய குருமார்கள் படுப்பதற்கு பெரிய கட்டில்கள் கொடுத்தார்கள். அந்த மரக் கட்டில்கள்

படுக்கவும், உட்காரவும் செளகரியமாக இருந்தது. தாமிரத்தால் ஆன கமண்டலங்கள் பலதும் இறக்கப்பட்டன. எல்லா ஊர் பற்றியும் வீரர்கள் கைகட்டி அங்குள்ள மாணவர்களுக்கு விளக்கினார்கள். இளம் வயதிலேயே காசிக்கு போய்விட்டு வந்து விடுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டார்கள். வேங்கி வரை இராஜ உபசாரம். அதற்குப் பிறகு சிறிதளவு கடினம். ஒட்டதேசம் தண்டபுத்தி கடந்துவிட்டால் தட்சிணலாடத்தில் சாமந்தசேனன் வரவேற்பு. அதைத்தாண்டி கங்கை கரையில் இறங்கி நாவாய் பிடித்து காசிக்கு போய் விடலாம். அற்புதமான க்ஷேத்திரம். மிகப் பெரிய நாகரீகம். எங்கும் வேத அந்தணர்கள்தான். பரத கண்டத் தின் எல்லா பகுதியிலிருந்தும் வந்திருக்கிறார்கள். கோசல தேசம் முழுவதும் எப்பொழுதும் வகுப்புகள், விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்றெல்லாம் ஆசை கிளப்பினார் கள். நல்ல திடமாக இருந்தால் வேகமாக இருந்தால் இந்த மழை என்ன செய்யும். தாராளமாக நீங்கள் கிளம்பலாம். உங்களுக் கெல்லாம் கை பிரம்பு செய்து தருகிறோம். சோழ தேசத்து மறவர்கள் நெருப்பில் பிரம்பை வாட்டி, வளைத்து நுனி பிளக் காமல் வெள்ளிப் பூண் அடித்து கொடுத்தார்கள். மாணவர்கள் மிக ஆவலோடு வாங்கி சோழ வீரர்களை ஆசிர்வதித்தார்கள்.

சோழப்படை எண்ணாயிரம், எசாளம், பிரம்மதேசத்தை வலம் வந்து பிறகு நேர் கோடாக மீன்சுருட்டி நோக்கி போனது. ஒரு கால்வாய் முட்டி வருவதை பார்த்து இறங்கி முகம் கழுவிக் கொண்டது. அது சோழ தேசத்து எல்லை 'என்னுடைய ஊர் என்னுடைய ஊர்' என்று நெஞ்சைத் தண்ணீரால் நனைத்துக் கொண்டது. தலையில் தெளித்துக்கொண்டது. பிடரியில் தடவிக் கொண்டது. 'அடேங்கப்பா' என்று முகத்தில் வாரி வாரி அடித்துக் கொண்டது. இந்த புளியம் பிஞ்சுகள் தான் ருசி என்று மரம் ஏறி ருசித்து உண்டது. 'மாம்பழம் திகட்டும். புளி திகட்டுமா. தின்ன தின்ன கேட்கும்.' என்று பிஞ்சுகளை மடியில் கட்டிக் கொண்டார்கள். உப்பிட்டு உண்டார்கள்.

மீன்சுருட்டியில் பெரிய வரவேற்பு தரப்பட்டது. அங்கிருந்து ஜெயங்கொண்டம் போவதற்கு அரைநாள்தான் ஆகும். ஆனால் ஏதேனும் ஒரு அரச குடும்பத்தினர் வந்த பிறகு உள்ளே போகலாம் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

வீர இராஜேந்திரன் சர்வசிவ பண்டிதரை நமஸ்கரித்து விட்டு அவருக்கு மரியாதை செய்துவிட்டு தன் குதிரை படையுடன் மீன் சுருட்டி வந்தான். சோழ வீரர்கள் கர்ஜித்தார்கள். 'சோழம் சோழம்' என்று பிளிறினார்கள்.

வீர இராஜேந்திரன் அறுபது கொடிகளை ஏந்தி நிதானமாக ஜெயங்கொண்டம் நோக்கி நடக்க, மற்ற வீரர்கள் ஆரவாரத்துடன் பின் தொடர்ந்தார்கள். ஜெயங்கொண்டத்து வாசலில் முரசுகள் முழங்கின. இடையறாது எக்காளங்கள் ஊதப்பட்டன. கோட்டை வாசலில் ஆடுகள் பலி கொடுக்கப்பட்டன. கிராமத்து மக்கள் வாசலை அடைத்துக் கொண்டு நின்றார்கள். வீர இராஜேந்திரன் கை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். வீர இராஜேந்திரருக்கு நடைபாதை விரித்தார்கள். அந்தணர்கள் வாழ்த்த கலசம் ஏந்தி வர, வீர இராஜேந்திரன் கோட்டைக்குள் புகுந்தான். மலர்கள் தூவப்பட்டன. குழல் ஊதப்பட்டது. மத்தளம் வாசிக்கப்பட்து. தேவரடியார்கள் நடனமாடி வரவேற்றார்கள். குங்குமத்தை குழைத்து நெற்றியில் திலகமிட்டார்கள். நெஞ்சில் சந்தனம் பூசினார்கள்.

பல பருத்த கொங்கைகளை பார்த்த வீர இராஜேந்திரன் இடுப்பழகையும், வெள்ளை தோலையும் கண்ட வீர இராஜேந்திரன் இந்த பெண்களை பார்த்து மெல்ல சிரித்தான். பெரிய வனப்பில்லை ஆனாலும் என் மொழி என் மக்கள். பேசிச் சிரிக்கலாம் பேசாத போகம் கூவாத குயில். அரசகுமாரன் சந்தோஷமாகி விட்டதாக நினைத்து அவர்கள் இன்னும் ஒயிலாக ஆடினார்கள். மத்தளங்கள் சீராக இசைக்கப்பட்டன. அவர்கள் ஒரே விதமாக, ஒரே குழுவாக, ஒரே அசைவாக ஆடுவது சந்தோஷமாக இருந்தது. அவன் அவர்களை நீங்கள் அழகிகள் இல்லை. ஆனாலும் ஏதோ ஒரு அழகு உங்களிடம் இருக்கிறது என்று உரத்து சொன்னான். அவர்களுக்கு புரியவில்லை. 'ஆமாம் ஆமாம்' என்று வீரர்கள் ஆமோதித்தார்கள்.

முழங்கால் வரை கட்டப்பட்டிருந்த பாதரட்சை நூல்களை அவிழ்த்து விட்டு, கோவில் வாசலில் வீர இராஜேந்திரன் கீழ் இறங்கினான். அவனை நித்த வினோதப் பெருந்தச்சன் இரவி வரவேற்றான்.

''கோவில் முடிந்து விட்டதா.''

''முடிந்து விட்டது. கும்பாபிஷேகம் நடத்த வேண்டியது தான் பாக்கி. அரசருக்காக கும்பாபிஷேகம் காத்திருக்கிறது.''

''இப்போது சிவலிங்கத்தின் மீது நீர் பொழியக்கூடாதா.''

''எப்பொழுது வேண்டுமானாலும் பொழியலாம். இதில் என்ன தடை. ஆனால் கும்பாபிஷேகத்திற்கும் நீர் வைத்துக் கொள்ளுங்கள்''

''பல நூறு குடங்களில் கங்கை வருகிறது. நான் என் கையால் ஒரு குடம் கொட்ட விரும்புகிறேன்.'' அவன் உள்ளே போனான். சிவலிங்கம் பார்த்து பிரமித்தான்.

''இரவி, இவ்வளவு பெரிய சிவலிங்கத்தை எப்படி செய் தாய்.'' ஆச்சரியப்பட்டான். உள்ளுக்குள் போய் சுற்றி வந்தான். படி ஏறினான். குடத்தை கேட்டு வாங்கிக் கொண்டான். உச்சி யில் ஏறி கண்மூடினான். மெல்ல குடத்தை பிரகதீஸ்வரர் மீது பொழிந்தான். அவர் மீது நீர்பட்டு வழிந்து தரையில் இறங்கியது. மறவர்கள் சூழ்ந்திருந்து அவற்றை ஏந்திக் கொண்டார்கள்.

''மறவர்கள் தாராளமாக உள்ளே போகலாம். இன்னும் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை.'' என்று இரவி அனுமதித் தான். அந்தணர்களும் 'சரி' என்று சொன்னார்கள்.

சிவலிங்கத்தை தொட்டு தொட்டு வீர இராஜேந்திரனும், சோழ தேசத்து மறவர்களும் கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். அதன் நீரை தலையில் தெளித்துக் கொண்டார்கள். மிகப்பெரிய செயலை முடித்த சந்தோஷத்தில் இருந்தார்கள். கோவிலை சுற்றி சுற்றி பார்த்தார்கள். தங்கள் வீடுகளுக்கு ஓடினார்கள்.

★★★

அத்யாயம்

83

அடுத்த ஊர்வலம் நகர்வதற்கு ஆயத்தமாக இருந்தது. ஒரு பெரிய சோழக்கொடி யானையின் முதுகிலிருந்து அசைந் தால் போதும், ஒரு எக்காளம் ஊதினால் போதும், முரசு முழங் கினால் போதும் ட்ரம் ட்ரம் என்று பறைகள் ஒரே கதியில் இயங்கினால் போதும் ஊர்வலம் நகரத் துவங்கிவிடும். வேறு சில பக்கங்களிலிருந்தும் படைகள் நகரவேண்டும்.

ஊர்வலத்தின் ஆரம்பத்தில் முகம் முழுவதும் புள்ளிகளோடு கூடிய ஒட்டதேசத்து யானை இருந்தது. அதன் காதுகளிலும் மச்சங்கள் இருந்தன. மற்ற எல்லா யானைகளையும் விட அது உயரமாகவும், நீண்ட தந்தங்கள் உடையதாகவும் இருந்தது. அதன் முதுகில் மெத்தை போட்டு இரண்டு பக்கமும் பெரிய மரப்பெட்டிகள் இறுக கட்டப்பட்டிருந்தன. மரப்பெட்டிகள் முழு வதும் தங்க நகைகள் இருந்தன. யானை சுமையோடு இருப்பது அதன் அசைவில் தெரிந்தது. யானைக்கு சுமையோடு நிற்பது தான் கடினம். நடப்பது எளிது. எனவே யானை நகர வேண்டும் என்ற முனகலோடே இருந்தது. அந்த யானைக்கு பிறகு இருநூறு பேர் கொண்ட குதிரைகள் அணிவகுத்து நின்றன. இருபது மஞ்சள் நிற புலிக்கொடிகள் இருந்தன. அதை தொடர்ந்து தேர்கள் முன்னும் பின்னும் அலைந்தபடி இருந்தன. கிட்டத்தட்ட அறுபதாயிரம் பேர் கொண்ட அந்த ஊர்வலம் ஒரு நகரத்தின் தெற்கு வாசலில் ஆரம்பித்து வடக்கு வாசல் வரை நீண்டிருந்தது. ஊர் மக்கள் அழுது அலறி முடித்துவிட்டார்கள். பிரிவுக்கு தயாராகி விட்டார்கள். முன்னும் பின்னும் அலைந்து யாரெல்லாம் ஊர்வலத்தில் போகிறார்கள் என்று மனதில் பதிய வைத்துக் கொள்ள முயற்சி செய்தார்கள். மாட்டு வண்டிகளில்

மிகப் பெரிய அகலமான உலோகப் பானைகள் இருந்தன. அவை களில் கங்கை நீர் நிரப்பி ஈயப்பத்து வைத்திருந்தார்கள். அசை யாமல் இருக்க வைக்கோலும், கரும்பு தட்டையும் போட்டு மெத்தென்று ஏற்படுத்தி மணி கயிறுகளால் பிணைத்திருந் தார்கள். ஒன்றோடொன்று உரசாமல் இருப்பதற்கு நடுவே பாய்மர படுதாக்களை மடித்து சொருகி வைத்திருந்தார்கள். எல்லா யானைகளிலும் தங்கப் பாளங்களும் வெள்ளி பாளங் களும், விதம் விதமான ஆயுதங்களும், தாமிர கலசங்களும், பெரும் கதவுகளும் ஏற்றப்பட்டிருந்தன. கல்லால் ஆன தோரண வாயில் ஒன்று இடதும், வலதும், மேலும் பிரிக்கப்பட்டு மூன்று யானைகளில் ஏற்றப்பட்டிருந்தன. பல யானைகளில் அம்பாரி வைத்து, உள்ளே மெத்தைகள் வைத்து சுற்றி திரை போட் டிருந்தது. உள்ளிருந்து பெண்கள் கூச்சல் கேட்டது. அழுவதும், யாரையோ உரக்க அழைப்பதுமாய் அந்த பெண்கள் இருந் தார்கள். அழுகை அதிகமாக சோழ வீரர்கள் பிரம்பால் அந்த அம்பாரியை தட்டி அமைதி என்று எச்சரித்தார்கள்.

யானைகளை சுற்றி இடங்கை வீரர்களும், வலங்கை வீரர் களும் அவரவர் பக்கம் நின்று கொண்டார்கள். எல்லோரிடமும் சுருக்குபையில் நாணயங்கள் இருந்தன. முதுகில் சிறு மூட்டை களாக தங்கம், வெள்ளி நகைகளும், பாத்திரங்களும் இருந்தன. அரசருடைய பொக்கிஷங்களுக்கு போவதற்கு அப்பால் எல்லா வீரர்களிடமும் நகைகளும், பாத்திரங்களும், வினோதமான ஆயுதங்களும் இருந்தன. உயர்ந்த மூட்டைகளாய் ஏற்றப்பட் டிருந்தன. மரப்பெட்டிகளில் விதைநெல் என்று எழுதப்பட்டு பெட்டியின் சந்துக்கெல்லாம் சாணத்தால் அடைக்கப்பட் டிருந்தது. மேலே துணி போட்டு மூடப்பட்டிருந்தது. கடைசி நேரத்தில் சில பெண்கள் தாங்களும் வருவதாக சொல்ல அவர் களும் ஏணி வைத்து யானைகளில் ஏற்றினார்கள்.

‘‘உன்னை யாரும் வரச் சொல்லவில்லை. வந்தால் நல்லது. வராமல் இங்கேதான் இருப்பேன் என்றால் ஆட்சேபனை இல்லை. உன் ஊர் செத்துப் போய்விட்டது. பொது மகளிராக, நடனப் பெண்மணியாக, தேவதாஸியாக வாழ்கின்ற உங்களுக்கு யார்

அடைக்கலம். தஞ்சைக்கு வந்து விடுங்கள். செல்வம் கொழிக்கின்ற ஊர். அற்புதமான நதி பாய்கின்ற ஊர். உங்களுக்கென்று தனியாக ஒரு வேளம் அமைத்து அதில் எல்லாவித விஷயங்களும் செய்து கொடுப்பார்கள். ஒருவரும் ஒருபோதும் துன்புறுத்த மாட்டார்கள். மீறி யாரேனும் நடந்தால் அவர்களை கண்டிக்க உங்களுக்கென்று தலைவர்கள் உண்டு. எங்கள் ஊரிலேயே இருக்கின்ற நடனப் பெண்களுக்கு தலைவர்கள் வைத்து அவர்களை பாதுகாப்பாக நடத்துகிறோம். யாரும் யாரையும் எந்தவித வற்புறுத்தலும் செய்துவிட முடியாது. உனக்கு விருப்பமாயினும் தென்கோடி குமரிமுனையையும், இராமேஸ்வரத்தையும், மதுரையையும், தஞ்சை பெரிய கோவிலையம், எங்கள் அரசர் கட்டிக் கொண்டிருக்கின்ற நகரத்தையும், காஞ்சிபுரத்தையும் பார்க்க வேண்டுமெனில் வா. உன்னோடு புலவர்களையும், வாலிபர்களையும் அழைத்து வருவது எங்களுக்கு சம்மதம். ஆனால் அவர்கள் எங்களுக்கு அடிபணிந்துதான் இருக்க வேண்டும். எங்கள் கூலிகளாகத்தான் இருக்க வேண்டும்.

பதிமூன்று வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை நாங்கள் அழைத்து போக மாட்டோம். அவர்களை யாரும் கொண்டு வரக் கூடாது. உங்களில் 'ஒரு பெண்மணி தன் சாக்கு மூட்டையில் தன் ஆறு வயது பையனை போட்டுக் கொண்டு துணி மூட்டை என்று சொன்னாள். வெகு எளிதாக கண்டுபிடித்து பிரித்து விட்டோம். அனுப்பி விட்டோம். நீயும் போ என்று அனுப்பி விட்டோம். ஆனால் அவள் தன் மகனை அனுப்பி விட்டு மறுபடியும் வந்து யானையில் ஏறிக்கொண்டாள். திரும்பவும் சொல்கிறோம். விருப்பமாயின் வருக. இல்லையாயின் விலகுக.''

அவர்கள் வடமொழியில் மிக அழகாக, நிதானமாக பலமுறை இந்த விஷயத்தை சொன்னார்கள்.

பாழ்பட்ட இந்த உத்திரலாடத்தில், தட்சிணலாடத்தில் இருந்து என்ன செய்வது. கோசலத்திற்கு போகலாம். அந்தணர்கள் வீட்டு வேலை செய்யத்தான் உபயோகப்படுத்திக் கொள்

வார்கள். நடமாட விட மாட்டார்கள். நடனமாடவும் ஏற்க மாட் டார்கள். அது ஒரு ஆசார தேசம். மது அருந்த முடியாது. சிரிக்க முடியாது. விருப்பம் போல மாமிசம் உண்ண முடியாது. எனவே கோசல தேசம் போவதற்கு தெற்கே சோழ தேசம் போவது உத்தமம். உத்திரலாடம் சூறையாடப்பட்டு விட்டது. தட்சிண லாடத்தில் ஒருவாறு பிழைத்துக் கொள்ளலாம். ஆனால் ஆடல் மகளிருக்கு கடினமாகத்தான் இருக்கும். பருவமழை வேறு துவங்கி விட்டது. இங்கு இப்போதைக்கு உயிர் வாழ்வது கடினம்.

''சோழ தேசம் போய் திரும்பிவிடலாமா'' என்று ஒரு பெண் உரக்க கேட்டாள். சோழ வீரர்கள் கூடி ஆலோசித்தார் கள்.

''தாராளமாக போகலாம். ஆனால் உங்களுக்கு உதவி என்று எதுவும் கிடைக்காது. நீங்கள் மறுபடியும் ஊர் திரும்ப எங்கள் படைவராது. நீங்களாக உங்கள் ஆண்களுடன் சேர்ந்து திரும்பி விடலாம். ஆனால் ஒன்று சொல்கிறேன். உங்களுக்கு திரும்ப மனம் வராது. எனவே, உங்கள் கோவில், குளங்களை, வீடுகளை இப்பொழுதே கடைசியாக தரிசித்து கொண்டு வாருங்கள். வருபவர் பெயரும், வயதும் துணைக்கு வரும் ஆணின் பெயரும், வயதும், ஊரும் எழுதப்படும். பதித்து விட்டு யானை ஏறுங்கள்.'' எல்லா விஷயங்களும் தெளிவாக, சிறப்பாக, அமைதியாக நடைபெற்றன.

அவர்கள் அழுது புலம்பிய போது சோழ வீரர்கள் அமைதி யாக இருந்தார்கள். அதிகம் குரல் எழுப்பியபோது போதும் என்று அதட்டினார்கள். அந்த அழுகைக்கு காரணம் குழந்தை களை பிரிவதாகத்தான் இருந்தது. கைக்குழந்தைகளை அனு மதித்தார்கள். ஆனால் ஐந்திலிருந்து பதிமூன்று வயது வரை உள்ள குழந்தைகளை வரக்கூடாது என்று தடுத்து விட்டார்கள். அந்த குழந்தைகள் வரிசையாக நின்று அவரவருடைய தாய் களை, உறவுகளை பார்த்து கதறிக் கொண்டிருந்தன. பரிதாப மாகத்தான் இருந்தது. ஆனாலும் வாலிபமாகவும் இல்லாது, கைக்குழந்தைகளாகவும் இல்லாத இந்த சிறுவர்களை அவ்வ ளவு தொலைவு நடத்தி அழைத்துக் கொண்டு போக முடியாது.

எல்லோருக்கும் மாட்டு வண்டி கிடைக்காது. எனவே வராது இருப்பதே உத்தமம். தட்சிணலாடத்தில் வசிக்க ஆட்கள் வேண்டுமல்லவா. எனவே இவர்கள் வளர்ந்து ஆளாகி இந்த தேசத்தை ஆண்டு கொள்ளட்டும் என்று விடுவிக்கப்பட்டார் கள்.

புலிக்கொடி அசைந்தது. தொடர்ந்து எக்காளம் கேட்டது. ஊர்வலம் நகரத் தொடங்கியது. கதறல்கள் பெரிதாகின. ஆறு வயது, ஏழுவயது குழந்தைகள் வேட்டியை ஒர கையில் பிடித்துக் கொண்டு ஊர்வலத்தோடே ஓடி வந்தார்கள். அம்மா வின் பெயரைச் சொல்லி அழுதார்கள். அப்பாவின் பெயரை சொல்லி கதறினார்கள். சோழ தேசத்து வீரர்களின் கால்களை பிடித்து முத்தமிட்டார்கள். ஆனால் அவர்கள் பிரம்பு நுனியால் விலக்கப்பட்டார்கள்.

ஊர்வலம் வேகமாக போனது. தொடர்ந்து வரும் சிறுவர் களை வீரர்கள் பிரம்பால் அடித்தார்கள். 'போ அப்பால்' என்று அடித்தார்கள். 'அடிக்காதே அடிக்காதே' என்று யானையில் இருந்த பெண்மணி கதறினாள். நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதாள். பெரும் கலவரமான கூக்குரல்கள் அங்கு கேட்டன. தட்சிணலாடத்து மலையில் முதல் யானை ஏறியது. ஒரு நாழி கையில் கடைசி மாட்டு வண்டி தட்சிணலாடத்து எல்லையை தாண்டியது.

அந்த குழந்தைகள் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு அழுதது வேதனையாக இருந்தது. கொஞ்சம் வயது முதிர்ந்த பையன்கள் அழுகின்ற குழந்தைகளை அணைத்துக் கொண்டு தேற்றினார்கள். 'நாம் நாளை போகலாம், நாளை போகலாம்' என்று பொய்யாய் சமாதானம் சொன்னார்கள். நாளை என்பது அவர்களுக்கு மிகப்பெரிய கேள்விக் குறியாய் இருந்தது. யுத்தம் செய்யும் மிகப்பெரிய கொடுமையில் இதுவும் ஒன்று. உறவு களை பிரித்து உதறிவிடுவது. யுத்தத்தில் எங்கு, எப்போது, நடந்தாலும், எப்படி நடந்தாலும் இதுவே முடிவாக இருக்கும். இது ஒரு முடிவு என்றாலும் இது ஒரு ஆரம்பம் என்பது சில ருக்கு தெரிந்திருந்தது. இது வேறு வகையான வாழ்க்கை

என்பது அங்கிருக்கும் கிழவர்களுக்கு புரிந்திருந்தது. 'நான் இருக்கிறேன் வாடா' என்று கிழவர்கள் உரக்க கத்தினார்கள். கிழவர்களையும் சோழ தேசத்தவர்கள் பின்தொடர அனுமதிக்க வில்லை.

தச்சர்கள் மரச்சாமான்களுக்கான கருவிகளை எடுத்துக் கொண்டார்கள். உடைந்து போன இரும்புகளை சேகரித்து கழுதைகளில் ஏற்றிக் கொண்டார்கள். வைத்தியர்கள் மூலிகை பெட்டிகளையும், ரசாயன குடுவைகளையும், சாராய குப்பி களையும், பஞ்சில் பொதித்து எடுத்துக் கொண்டார்கள். ஒரு வீரன் இடுப்பு நிறைய தங்கக் கம்பியை சுற்றி இருந்தான். இன்னொருவன் வாளை திருகி எடுத்து விட்டு கைப்பிடியில் தங்கப் பட்டையை கோர்த்துக் கொண்டான். இன்னொருவன் மூங்கிலை எடுத்துக் கொண்டு நீண்ட துளைவிட்டு சூட்டுக் கோலால் உள்ளே செதுக்கி ஒரு மூங்கில் நிறைய தங்க நாணயங் களை போட்டுக் கொண்டான்.

உத்திரலாடத்தின், தட்சிணாலாடத்தின், கோசல தேசத் தின், ஒட்டதேசத்தின் செல்வங்கள் விதம் விதமான முறையில் சோழதேசம் நோக்கி நடந்தன.

''மாடு மாதிரி தங்கத்தை தூக்கிக் கொண்டு போகிறோம். அங்கே போனால் இதற்கு மரியாதையே இருக்காது பார்'' என்று வயதானவன் சொல்ல, எல்லோருக்கும் அந்த அச்சம் பற்றி கொண்டது.

வேங்கியில் இரண்டு நாள் தங்கி, பிறகு திருவொற்றியூர் அடைந்து தொண்டைநாடு தாண்டி கடற்கரை வழியாகவோ, காஞ்சிபுரம் வழியாகவோ சோழ தேசத்திற்குள் நகர்ந்துவிட வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு இருந்தது. உபதளபதி கள் அவரவர்களுக்குண்டான பெண்களை தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டார்கள். உண்ணவும், உடுக்கவும் உதவி செய்தார்கள். அந்த பெண்களும் அவரவர் உபதளபதிகளுக்கு முதுகு தேய்த்துவிட்டும், கால் தேய்த்து விட்டும் மனைவியரை போல் நடந்து கொண்டார்கள். காட்டுவழியில் உள்ள பாறை களில் சிங்கங்கள் ஏறி நின்று இந்த ஊர்வலத்தை வியப்போடு

பார்த்தன. அந்த சிங்கங்களை பெண்கள் பெரும் கூச்சலோடு வியந்து பார்த்தார்கள். பெரும் பிடரியோடு யானை நோக்கி தாவி வந்த ஒரு சிங்கத்தை வீரர்கள் அம்பினால் அடித்து கொன்றார்கள். அருகே போய் உச்சந் தலையில் பட்டென்று இரும்பு தடியால் போட்டு சாகடித்தார்கள். அதை அறுத்து பதப் படுத்தி உள்ளே வைக்கோல் அழுத்தி பொம்மை சிங்கமாக செய்ய சிலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. வேங்கியை அடை வதற்குள் அங்கு, மூங்கில்களாலும், பிரம்பு வளையங்களாலும், வைக்கோல்களாலும் அடைக்கப்பட்ட பொம்மை சிங்கம் மன்னருக்காக எடுத்துப் போகப்பட்டது. அவ்வளவு நெருக்கத் தில் சிங்கத்தை பார்த்திராதவர்கள் அதை தொட்டும், தடவியும் ஆச்சரியத்தோடும் பார்த்தார்கள். யானைகள் அந்த பொம்மை சிங்கத்தை பார்த்து மிரண்டன. அடக்கப்பட்டன.

ஒட்டதேசம் முடிந்து வேங்கியின் எல்லை ஆரம்பிக்கும் போது எல்லோருக்கும் ஆனந்த பரவசம் ஏற்பட்டது. சோழ தேசம் வந்துவிட்டது போலவே குதித்தார்கள். வேங்கி மக்கள் அவர்களை வரவேற்றார்கள். 'ஏதாவது கொடு ஏதாவது கொடு' என்று உபதளபதிகளை பார்த்து கையேந்தினார்கள். வீரர்களை பார்த்து கெஞ்சினார்கள்.

சிறு தவலையும், சொம்பும், சமையல் பாத்திரங்களும், சிலருக்கு தங்க நகைகளும் கிடைத்தன. 'இந்த சட்டையை தைத்து கொடு' ஒரு தையல் கலைஞனுக்கு தன்னுடைய சட்டையை கழற்றி கொடுத்தான். அந்த சோழ வீரனை உப சரித்து, உட்கார வைத்து வெகு விரைவில் அதை செய்து கொடுத்தார். 'என்ன வேண்டும்' என்று கேட்டதற்கு 'என்ன வேண்டுமானாலும் சரி!' என்றார். அந்த தையல் கலைஞருக்கு இரண்டு கழஞ்சு பொன் கிடைத்தது. ஒரு செப்புக்காசுக்கு செய்ய வேண்டிய வேலைக்கு அறுபது செப்பு காசுகளுக்கு உண்டான கூலி கிடைத்தது.

வேங்கி தேசத்து மக்கள் குதிரைகளை குளிப்பாட்டினார் கள். யானைகளை நீரில் இறக்கி முதுகு தேய்த்து விட்டார்கள். சோழ வீரர்களுக்கு வீட்டு திண்ணையில் படுக்கை தயாரித்

தார்கள். மெத்தை பரப்பி தூங்க வைத்தார்கள். உணவு சமைத்து கொடுத்தார்கள். தொடையும், ஆடுகால்தசையும் அழுந்த பிடித்து விட்டார்கள். இங்கு இறங்கிய ஒட்டதேசத்து பெண் களை ஆவலோடு பார்த்தார்கள்.

அரசாங்கத்திற்கென வேங்கி தேசத்து விதைநெல் கூடை களில் ஏற்றப்பட்டு தாழையினால் சுற்றப்பட்டு காபந்தாக எடுத்துப் போகப்பட்டது. வேங்கியின் தலைநகரிலிருந்து இராஜ ராஜ நரேந்திரனோடும், தன் மகள் அம்மங்காதேவியோடும், தன் மனைவி பரவையோடும், பட்ட மகிரிஷியோடும் இராஜேந் திரர் கிளம்பிவிட்டார் என்ற தகவல் தெரிந்தது.

அங்கிருந்த அரண்மனையை உபதளபதிகளும், தளபதி களும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். முட்டமுட்ட குடித்தும், விதம் விதமான மாமிசங்களை உண்டும் மூன்று நாட்கள் சோழப்படை அங்கு ஓய்வெடுத்தது. வெற்றியை கொண்டாட ஒரு போர் வீரன் குடிக்கலாம். பொது மகளிரோடு கூத்தடிக் கலாம். விதம் விதமாக உண்ணலாம். இதையெல்லாம் முடிந்த வரை அனுபவித்து விடுவது நல்லது. ஏனெனில் மறுபடியும் போருக்கு போக வேண்டி இருக்கும். அப்படி போனால் அந்த போரில் முழுதாக ஈடுபட்டு உயிரோடு திரும்புவோமா என்பது தெரியாது. எனவே, ‘இருக்கும்போதே இருப்பவற்றை இழக் காமல் அனுபவித்து விடு’ என்ற எழுதப்படாத தத்துவம் அங்கு மிதந்து கொண்டு இருந்தது.

அதிக நேரம் வேங்கியில் தங்க விருப்பம் இல்லாத சோழ வீரர்கள் ஒரு தனி குழுவாக சேர்ந்து குதிரைகளில் விரைவாக பயணப்பட முயன்றார்கள். இராஜேந்திரரை பார்க்க வேண்டும் என்று காரணம் சொன்னார்கள். ஆனால் உண்மையில் தங்க ளுடைய கிராமங்களுக்கு போக வேண்டும் என்பதுதான் அவர்கள் விரைவுக்கு காரணமாக இருந்தது. தங்கப் பட்டயங் களும், வெள்ளி பாளங்களும், நகைகளும், கோவேறு கழுதை களில் தனியாக ஏற்றப்பட்ட பாத்திரங்களும் இருந்தன. வீட்டிற்கு போய் மனைவி, மக்களுக்கு முன்னால் இதை பரப்ப வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. மாணிக்கம், மரகதம் பச்சை என்று

கற்களால் ஆன ஹாரங்கள், காது குழைகள், காரை என்ற அட்டிகை, பாகு வளையம், குரங்குச்செறி என்ற இடுப்பு நகை எல்லாம் கொடுப்பதற்காக கனக்க கனக்க எடுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் பொதுமகளிரிடம் செலவழிப்பதற்கு பதிலாக பெண்டாட்டியிடம் கொடுத்தால் இன்னும் மதிப்பாக இருக்கும் அல்லவா. வீடு மாதிரி வருமா. குழந்தைகளை தோளில் ஏந்தி, இடுப்பை அணைத்துக் கொண்டு மனைவியின் எதிரே நகைகளை பரப்புவது போல சந்தோஷம் உண்டா. இரவு அவள் வைக்கும் விருந்துக்கு எந்த தேவதாஸியால் ஈடுகொடுக்க முடியும். தந்தைக்கும், தாய்க்கும், சகோதரிக்கும் என்று நிரம்ப கொண்டு வந்திருக்கிறார்கள். அதை கொடுப்பதில் எவ்வளவு நிறைவு இருக்கும். அறுநூறு குதிரை வீரர்கள் இராஜேந்திர சோழர் படையோடு கலந்து கொண்டார்கள். அதில் அதிகம் பேர் தொண்டை நாட்டவர் களாக இருந்தார்கள்.

அவன் பரதவன். ஐந்து வயதிலிருந்து இந்த நாற்பத் தைந்து வயதுவரை அவன் கடலே கதியாக இருப்பவன். மீன் பிடி தொழில்தான் அவனுக்கு விருப்பமானதாக இருந்தது. மீன்பிடி தொழிலில் சம்பாதித்து விளைநிலங்கள், தோப்பு கள் வாங்கினாலும் மழைக்கு பாதுகாப்பாய் பரண் அமைத்த பெரிய குடிசை வாங்கினாலும் அவன் துடுப்போடு கடற் கரைக்கு நடந்து சென்று அவன் படகில் ஏறி வலை விரித்து மீன் பிடித்து திரும்ப வருகிறபோது ஏற்படுகின்ற சந்தோஷம் எதுவும் இல்லை.

நிலம் பொய்க்கும். கடல் பொய்க்காது. மீனே இல்லை என்று ஒருநாளும் சொல்ல முடியாது. குறைவாக, நிறைவாக இருக்கும். குறைவாக இருந்தால் செய்த பாவம் காரணமாகும். நிறைவாக இருந்தால் கடவுள் அருள். துடுப்பு போட்டு அலை தாண்டி திரும்புகின்ற கடலுக்குள் போய்விட்டால் எது வேண்டுமானாலும் கிடைக்கும். நீண்ட சுறாவை ஈட்டியால் குத்தி கயிறு கோர்த்து இழுத்து வந்துவிட முடியும். கூடைகளில் அள்ளி அள்ளி ஆயிரக்கணக்கான மீன்களை படகில் போட்டு

வர முடியும். விரித்த வலையில் முழங்கை நீள நெத்திலி மீன்கள் கிடைக்கும். கூடையில் மாமிசம் போட்டு வலப்பக்கம் உள்ள கயிறு வழியாக கீழே இறங்கினால் மாலைக்குள் ஒரு கூடைக்குள் பத்து நண்டுகளாவது கிடைத்துவிடும். நண்டு நல்ல விலை போகும்.

ஒருவரோடும் சண்டையில்லை. பெரிய வருத்தமும் இல்லை. விளைநிலம் குத்தகைக்கு விட்டு நெல் கிடைக் கிறது. கோதுமை கிடைக்கிறது. கரும்பு வெல்லமும், மாங்காயும், தேங்காயும் குறைவர கிடைக்கின்றன. வீடு சுற்றி மூங்கில் புதர்கள் இருக்கின்றன.

குழந்தைகளோடு அவன் அதிகம் பேசுவதில்லை. மணிக் கணக்கில் கடலில் யாரோடும் பேசாது பழகிவிட்டு அதே பழக்கம் தரையிலும் வந்தது. அவன் பேசாது போனாலும் அவன் மனைவி அவனை புரிந்து கொள்வாள். கடலிலிருந்து திரும்பி வந்தவனுக்கு என்ன தேவை என்று அந்த பெண் மணிக்கு தெரியும். மாலை ஆரம்பித்தவுடனேயே மரக்கட்டை களாலும், மூங்கில்களாலும் அடுப்பு எரிவித்து பெரிய தாமிரப் பானையை ஏற்றி அதில் வெந்நீர் கொதிக்க வைத்துவிடு வாள். அவனை உட்கார வைத்து வெந்நீரால் குளிப்பாட்டுவாள். உடம்பு முழுவதும் எண்ணெய் தடவி, பிறகு சிகைக்காய் குழைத்து தடவி, தலையிலிருந்து கால் விரல் வரை தேய்த்து குளிப்பாட்டுவாள். உள்ளே மகள் சோறு பொங்க, அவள் துவட்டிய வேகத்திலேயே உண்ண வந்துவிடுவான். விரை வாக சோறு பரிமாறுவாள். உண்ணும்போது அக்கம் பக்கத்து செய்திகளை சொல்வாள். நேற்றைய மீன்குழம்பும், இன்றைய ஆட்டுக்கறி வறுவலும், நெல்லுச்சோறும், கோதுமை அடை யும் அவன் நிதானமாக உண்பான். சிறிது நேரம் கழித்து பசுவின் பால் குடிப்பான். பழைய வலையால் கட்டையில் தொங்க விடப்பட்ட தூளியில் அமர்ந்து வெற்றிலை பாக்கு போடுவான். பிறகு அந்த தூளியிலேயே தூங்கிவிடுவான். எப்பொழுதாவது வீட்டிற்குள் நுழைந்து அவளை படுக்கைக்கு அழைப்பான்.

சிறிது நேரத்தில் மறுபடியும் வாசலுக்கு வந்து பாட்டு பாடிக் கொண்டிருப்பான். விடியும் வரை தூங்குவான்.

அவசியமிருந்தால் மறுநாள் வேலைக்கு போவான். அவன் அருகே இருக்கின்ற குளத்தில் வலைகட்டி அங்கு வளர்க்கப்படும் மீன்கள் எப்படி இருக்கிறது என்று பார்ப்பான். அவன் கொண்டுவரும் மீன்களை கரையிலேயே வாங்கு வதற்கு ஆட்கள் இருந்தார்கள். குளத்து மீன்களை உறவினர் களும், கிராமத்தாரும் வாங்கிக் கொண்டார்கள். கடல் வழியே நதி தீரத்துக்கு போய் நதியில் உள்ள மீன்களை நீர் நிறைந்த பாத்திரங்களில் போட்டு வந்து அதை குளத்தில் விட்டு வளர்ப் பான். அவை குஞ்சுகள் போட தனியே விலக்கி வேறு வலை யில் வைப்பான். அவைகளை கொழுத்து வளர்ப்பதற்காக நண்டு ஓடுகளையும், மாமிச மிச்சங்களையும் குளத்தில் போடுவான். குளத்தின் ஒரு பக்கம் மீன் வளர்க்கவும், மறுபக்கம் குளித்து துணிகள் தோய்க்கவும் உபயோகப்பட்டன. எல்லார் வீட்டிற்கும் ஒரு குளம் இருந்தது. சில சமயம் ஒரு குளத்தை இரண்டு, மூன்று வீடுகள் பங்கு போட்டுக் கொண்டன.

சுத்தமாக கரைகள் எழுப்பி, வலைகளால் தடுப்புகள் பின்னி கவனத்துடன் மீன்கள் வளர்ந்தன. அதை சோழப் படைகள் வளைத்து இழுத்துக் கொண்டன. 'இனி ஒட்டதேசத் திற்கும், உனக்கும் சம்பந்தம் இல்லை. ஏறு' என்று மரக்கலத் தில் ஏற்றிவிட்டது. அவனுடைய மனைவியும், குழந்தைகளும், கரையில் நின்று அழுதார்கள். அவனை விட்டுவிடச் சொல்லி கெஞ்சினார்கள். ''எங்களுக்கு தேவை. பிற்பாடு ஒருமுறை இந்த பக்கம் வரும் மரக்கலத்தில் அவன் வரலாம். அது ஒரு வருடமோ இரண்டு வருடமோ ஆகலாம். எங்களுக்கு ஸ்ரீ விஜயம் போவதற்கு நல்ல பரதவர்கள் தேவை. இவன் படகு செலுத்தும் விதம் அற்புதமாக இருக்கிறது. எனவே குறுக்கே விழுந்து அடிபடாதே. விலகி போ.

நீ போய் உன் மனைவியிடம் விடைபெற்று வா. எங்கும் ஓட முடியாது. நீ எங்கு ஓடினாலும் உன்னை துரத்தி வந்து சிறை செய்வோம்'' என்று சொன்னார்கள்.

இரண்டு, மூன்று நாட்கள் அவன் வீட்டை சுற்றி காவல் இருந்து பிறகு அவனை அழைத்து வந்துவிட்டார்கள். மரக் கலத்தில் ஏற்றிவிட்டார்கள்.

கணவதி என்று ஒரு குள்ளமான விசித்திரமான ஆளின் மரக்கலத்தில் அவன் ஏறிக்கொண்டான். அவன் பாய்மரம் மாற்றுகின்ற அழகை கணவதி பார்த்து வியந்து போனான். ஆறு அடுக்கு பாய்மரத்தை ஒற்றை ஆளாய் அவன் சமா ளித்தான். மடமடவென்று நடு கம்பத்தில் ஏறியும், இறங்கியும் பாய்மரங்களை துல்லியமாக திருப்பினான். நீரோட்டம் பார்த் தான். திசை அறிந்து கொண்டான். காற்றின் வேகம் கணித்து சுக்கானை கவனமாக கையாண்டான். அவன் சுக்கானை வைத்திருக்கும்பொழுது படகு அதிகம் குலுங்காமல் இருந்தது. படகு முன்னும் பின்னும் அசைந்தால் பரவாயில்லை. இடதும், வலதும் ஆடினால் உள்ளுக்குள்ளே அதிகம் அடிபடும். உள்ளுக்குள் வைத்திருக்கின்ற தவலைகளும், பெட்டிகளும் குலுங்கும். அவை மரச் சுவற்றை பாதிக்கும். சில சமயம் நாவாயே கூட உடைந்துவிடலாம்.

அவனுக்கு மனைவியை பிரிந்தது வேதனையாக இருந் தது. எப்பேர்பட்ட அருமையான மனைவி என்பது அந்த மரக் கலத்தில் தெற்கு திசை நோக்கி திரும்பும் போதுதான் தெரிந் தது. அவன் விம்மி விம்மி அழுதான். மழை பெய்ய, அவன் உள்ளே போக விருப்பம் இல்லாது மரத்தளத்தின் மீதே உட் கார்ந்து கொண்டான். அங்கும் அழுதான். கணவதி அவன் முதுகை தட்டி தேற்றினான்.

பரஸ்பரம் இரண்டு பேருக்கும் மொழி தெரியவில்லை. ஆனால் நல்ல நட்பு நிலவியது.

''ஆறு மாதம் பொறுத்துக் கொள். உன்னை திருப்பி அனுப்பி விடுகிறேன்' என்று கணவதி சொல்ல, அவன் சரி என்று தலையசைத்தான்.

'தெற்கு திசை போவது எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதா. சோழதேசம் மிகச் சிறப்பானதாமே. இது ஒரு நல்ல

சந்தர்ப்பம்தான். தனியாக படகில் மீன்பிடிக்கிற அவனுக்கு இவ்வளவு பெரிய மரக்கலத்தில் வேலை கொடுத்து நல்ல உணவு கொடுத்து தெற்கு நோக்கி அழைத்துப் போகிறார்கள். இதுவும் நல்லதுதான்.' அவன் இரண்டு, மூன்று நாட்களில் மனம் தேறினான்.

வேங்கியில் இறங்கி அந்த தேசத்தை சுற்றி வந்தான். கூச்சலிட்டு சிரிக்கும் வேசியர்களை பார்த்து வியப்பில் நின்றான். வேங்கியின் பனங்கள் தித்திப்பாக இருந்தது. குடித்த போது ஒன்றுமே இல்லையே என்று இருந்தது. ஆனால் அரை நாழிகை பொறுத்து தலைக்குள் போதை ஏறியது. தெரியாமல் போதை இல்லை என்று அதிகம் குடித்திருந்தால் பொத்தென்று தரையில் விழுந்திருக்க வேண்டியதுதான். அப்படி சோழ வீரர்கள் சிலர் விழுந்திருந்தார்கள். நல்லவேளையாக இவன் காத்திருந்ததால் போதை நிதானமாக இருந்தது. அதிகம் ஆடு அறுத்து சுட்டு தின்றதால் உடம்பில் மதமதப்பு இருந்தது. கணவதியிடம் கை நீட்டி காசு வாங்கி இளம் வயது வேசியிடம் போய் வந்தான். அவன் மனைவிக்கும் அதே வயதுதான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டான். சிறிது வேதனை யாக இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது. மனைவியை பிரிந்தது துக்கமாகவும் இருந்தது. ஆனால் இந்த வேசியோடு ஆட்டம் போட்டது சந்தோஷமாக இருந்தது.

தனியாக படகும் பாய்மரமும், துடுப்புமாக நகர்வது அலாதியான அமைதி. இப்படி நூறுபேர் கொண்ட மரக்கலத்தில் தாமிர தவலைகளோடும், கற்சிலையோடும், நகைபெட்டி களோடும் பேசி, சிரித்தபடி கூச்சலிட்டபடி போவது இன்னொரு சந்தோஷம். இப்பொழுது தெற்கு போய்விட்டு செத்தா போய் விடுவோம். மறுபடியும் பருவ காற்று மாறும்போது இந்த பக்கம் வந்துவிடலாம். சோழ தேசத்திலிருந்து மனைவிக்கு ஏதாவது வாங்கி வரலாம். அவளுக்கும் துக்கமாக இருக்கும். ஆனால் பழகிவிடும். திரும்பிவிடுவேன் என்று அவளுக்கு தெரிந் திருக்கும். குறி சொல்பவரிடம் போய் எப்போது என்று கேட்டுக் கொண்டிருப்பாள். நான் இல்லாது பரபரப்பாக இயங்காமல்,

இன்னும் அமைதியாக தூங்கி அமைதியாக எழுந்திருப்பாள். ஒருவிதத்தில் இது நல்லது. ஒருவிதத்தில் கடினம். அவன் அழுதுகொண்டே சிரித்தான். நன்றாக இருக்கிறது வாழ்க்கை என்று வானம் பார்த்து வணங்கினான்.

கணவதிக்கு அவன் சுக்கான் பிடிப்பது பார்த்து சந்தோஷ மாயிற்று. நன்கு உறங்க முடிந்தது. நம்பி அவனிடம் மரக் கலத்தை கொடுத்துவிட்டு விட்டேத்தியாக இருக்க முடிந்தது.

வேங்கியை தாண்டி தொண்டை மண்டலத்திற்குள் நுழைந்து திருவான்மியூர் கரையை அடைந்து உப்பங்கழியில் நாவாயை ஏற்றிவிட்டு தரை இறங்கி, ஊர் பார்த்து வியந்து, கோவில் பார்த்து திகைத்து வந்தான்.

குட்டன் கணவதி அவனை பரதவர் என்று சொல்லாமல் மறவன் என்று சொல்லி கோவிலுக்குள் அழைத்துப் போனான். இதுவரை அந்த பரதவன் கோவிலுக்குள் நுழைந்ததேயில்லை. சாமி சிலை பார்த்ததில்லை. அவன் கையில் உள்ள கேயூரங் களையும், மாலைகளையும், பார்த்துவிட்டு அர்ச்சகர்கள் அவனை வரவேற்று விபூதி கொடுத்தார்கள். அவன் குட்டன் கணவதியை வணக்கத்தோடு பார்த்தான். கணவதி அவனை வெளிப் பிரகாரத்தில் உட்கார வைத்து கண்மூடி உள்ளுக்குள் பார்க்கச் சொன்னான். படகில் நெடுநேரம் மௌனமாக எந்த சிந்தனையும் இல்லாது இருக்கும் அவனுக்கு இப்படி உட்காரு வது எளிதாக இருந்தது. அவன் முகம் மாறுவதை கணவதி வியப்போடு பார்த்தான். இவன் சாதாரண ஆளில்லை என்று நினைத்துக் கொண்டான்.

மறுபடி நாவாய்க்கு வரும்போது அவனை கோவில் பார்க்க நிற்க வைத்து இடையறாது 'ஐம்' என்று சொல் என்று பணித்தான். எப்படி சொல்வது என்ன இடைவெளி என்று கற்றுக் கொடுத்தான். தீண்டத்தகாதவன் என்று அழைக்கப் பட்ட அந்த பரதவனுக்கு அந்த அந்தணனால் மந்திர தீட்சை கிடைத்தது. ஸ்வாமி தரிசனம் செய்ய முடிந்தது. நெற்றி முழு வதும் விபூதியும், தங்க நகையும், மேல் சட்டையும், இடுப்பில்

இறுக்க கட்டிய காழகமும், காற்சிலம்பும், பாதரட்சையும் அணிந்து கொள்ள முடிந்தது. அவன் கையில் குட்டன் கணவதி மோதிரங்கள் மாட்டினான். குட்டன் கணவதிக்கு வாழ்வு முழுவதும் அடிமையாக இருக்கலாம் என்று அந்த பரதவனுக்கு தோன்றியது.

குட்டன் கணவதி அவனுக்கு வேறு என்ன உதவி செய்யலாம் என்று யோசித்தான். இவனை உடனடியாக ஊருக்கு அனுப்பக்கூடாது. இவன் கூட இருந்தால் மிக நல்லது. ஸ்ரீ விஜயம் வரை இவன் வந்தால் பெரிய துணை. ஸ்ரீ விஜயத்திற்கு பிறகு சீனத்திற்கு இவன் வந்தாலும் சந்தோஷம். ஆனால் இவன் வீட்டை நேசிக்கிறான். சீனத்திற்கு வர மாட்டான். ஸ்ரீவிஜயத்தில் இறங்கி இவனுக்கு தனியே மரக்கலம் கொடுத்து அனுப்பி வைத்துவிட வேண்டும். இந்த மரக்கலம் உனக்கு சொந்தம் என்று சொல்லிவிட வேண்டும். அவனை வணிகன் என்று மாற்றி விட வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

ஆனால் சோழியன் குடுமி சும்மா ஆடாது. யுத்தத்தினால் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. ஜாதிகள் சிதைந்தன. புதிய ஜாதிகள் ஏற்பட்டன. பொருளாதாரம் சீர்குலைந்தது. நிமிர்ந்தது.

இது ஒரு படையெடுப்புக்கு உற்சாகம் கொடுத்தது. புதிய ஆயுதங்களும் உழு கருவிகளும் கிடைத்தன. புதிய பெண்களின் வருகையால் ஆட்டம், பாட்டங்கள் அதிகரித்தன. பசுக்களாலும், ஆடுகளாலும் சோழ தேசம் நிறைந்து காணப்பட்டது. வேளாளர் உதவிக்கு ஆட்கள் விலைக்கு கிடைத்தார்கள். தட்சிணலாடத்து, உத்திரலாடத்து ஆண்களை மூன்று பொற்காசுகள் கொடுத்து வாங்க முடிந்தது. ஒரு அடிமையின் விலை பத்தாக உயர்ந்தது. ஆனால் விவசாயம் செய்வதற்கு அவர்கள் மிகவும் உதவினார்கள். ஒட்டர்களின் பலம் அசாத்தியமானதாக இருந்தது. கற்பாறைகள் தூக்க, கட்டிட வேலை செய்ய ஒட்டர்கள் விரும்பினார்கள். சோழ தேசத்தின் முகம்

மாறியது. புதிய கட்டிடங்கள் எழும்புவதற்கு திட்டங்கள் போடப் பட்டன. தொண்டை தேசத்தில் சீராக புதிய ஊர்கள் முளைத் தன. பழைய குடிசையில் இருப்பது என்பது அவ்வளவு உவப் பானதாக இல்லை. ஓட்டு வீடுகளுக்கு மக்கள் மாறினார்கள். அதை பெருமை என்று கொண்டாடினார்கள். மயிலை, திருவல் லிக்கேணிக்கு நடுவே பல கிராமங்கள் முளைத்தன. வெற்றிலை தோட்டங்களுக்கு நடுவே வீடுகள் கட்டப்பட்டன. வேலை செய்ய மனிதர்களும், போகம் செய்ய பெண்களும், புதிய விதை நெல்களும், உழவுக்கான எருதுகளும், பாலுக்கான பசுக்களும், உணவுக்கான ஆடுகளும் மிதமிஞ்சி இருந்தன.

தொண்டை நாட்டில், நடுநாட்டில் சோழ தேசத்தில் அந்தணர்களுக்கு மரியாதை குறைவாகி மறவர்களுக்கு அதிகம் மரியாதை வந்தது. வேளாளர்களை ஊர் அதிகம் நம்பி இருந் தது. புல்வெளிகள் விளைநிலங்களாக மாற்றப்பட்டன. நீண்ட கால்வாய்கள் வெட்டப்பட்டன. இப்பொழுது வந்திருக்கிற ஆட்களெல்லாம் சாதாரணம். இனி அறுபதாயிரம் அறுபதாயிர மாக போர்வீரர்கள் வரப்போகிறார்கள். பெண்டுகள் இறங்கப் போகிறார்கள் என்று சொன்னதும், தாங்குமா என்ற பயம் தொண்டை தேசத்தினருக்கு வந்தது.

இராஜேந்திர சோழர் பெரும் படையோடு கோதாவரி தாண்டி முன்னேறி திருவொற்றியூர் வந்தடைந்தார். கோலா கலமான வரவேற்பு அவருக்கு சீராளன் முன் வந்து கொடுத் தான். அவரின் முன்பு விழுந்து வணங்கினான். மிகுந்த மகிழ்ச் சியோடு அவனை தட்டி கொடுத்தார். இராஜேந்திரர் காதோடு அருண்மொழிபட்டன் சீராளன் செய்த உதவிகளை சொன் னான். அங்கேயே சீராளன் மயிலை திருவல்லிக்கேணியின் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். அவனுக்கு மோதிர முத்திரை யும், கேயூரமும், கங்கணமும் தரப்பட்டன. துறவியாக வாழ் கிறான் என்று தெரிந்து இராஜேந்திர சோழர் சந்தோஷப்பட் டார். வீரமாதேவியார் அவனுக்கு பட்டாடை கொடுத்தாள். அவன் மரியாதையுடன் வாங்கிக் கொண்டான். தன் மனைவி யின் கோவிலுக்கு வீரமாதேவியாரை அழைத்துப் போனான்.

அவள் நடுகல்லை காட்டினான். வீரமாதேவியார் அங்கே சுற்றி சுவர் எழுப்பவும், கோபுரம் எழுப்பவும் அருகே குளம் வெட்டிக் கொள்ளவும், செங்கழுநீர் கால்வாயிலிருந்து ஒரு சிறு கால்வாய் வெட்டி, வெற்றிலை தோட்டம் அமைக்கவும் பல பொற் கழஞ்சுகள் கொடுத்தாள். தாமிரப் பானைகளும், பித்தளை பானைகளும், அண்டாக்களும், ஏர் முனைகளும் அவனுக்கு வழங்கப்பட்டன. வீரமாதேவியின் கையால் தன் மனைவியின் நடுகல்லுக்கு சீராளன் கங்கை நீர் ஊற்றினான். ஊர் மொத்தமும் அதை கையில் ஏந்தி தலையில் தெளித்துக் கொண்டது. உள்ளுக்குள்ளே அவன் மனைவி சிரித்துக் கொண்டாள். கங்கை நீர் தன் மேல் பொழிவதை முற்றிலும் வாங்கிக் கொண் டாள். 'சிவனே சிவனே' என்று அரற்றினாள். 'இந்த ஊரை நான் காப்பேன்' என்று இன்னும் உறுதியானாள்.

கோவிலை சுற்றியுள்ள நெல் வயல்களில் பூச்சிகள் விழாது, வெற்றிலை தோட்டங்களில் புழுக்கள் ஏறாது அது மயிலையின் ஆசீர்வதிக்கப்பட்ட பகுதியாக மாறிற்று.

''சீராளா, நீ திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது யாருக்கு நல்லதோ இல்லையோ எங்களுக்கு நல்லது'' ஒரு அந்தணர் உரத்த குரலில் கூறினார். மயிலை மக்கள் அந்த அந்தணரை வியப்போடு பார்த்தார்கள்.

''இப்படி குடும்பமே இல்லாது, ஊரையே தன் குடும்ப மாக நினைக்கின்ற ஒரு தலைவன் கிடைக்க நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா.'' அவனை புகழ்ந்தார். வேளாளர்கள் மீசை முறுக்கிக் கொண்டார்கள். மயிலை இனிமேல் தங்கள் ராஜ்ஜியம் என்று தொடை தட்டினார்கள்.

அந்தணர்கள் தெருக்களில் வீரர்கள் குதிரையில் வலம் வந்தார்கள். கருமார்களுக்கும், பொற்கொல்லர்களுக்கும், தச்சர் களுக்கும், குயவர்களுக்கும் நிறைய வேலை கொடுத்தார்கள்.

''இந்த முறை ஆயிரக்கணக்கில் அகல் தயாரிக்க வேண் டும். இப்போதே ஆரம்பித்துவிடு. கார்த்திகை மயிலையில் அற்புதமாக கொண்டாடப்பட வேண்டும். காசிற்கு கவலையே

இல்லை. அத்தனை தொழிலாளர்களுக்கும், ஆடும், பொன் னும் தருகிறோம்'' என்று கிராமத்து அந்தணர்கள் சொல்ல, அவர்கள் சந்தோஷமானார்கள். மயிலை இடையறாது தீப ஒளியில் ஜொலித்தது. நெய் தீபப் புகையில் வாசனை குங்கிலி யத்தில் மணத்தது.

வடகிழக்கு பருவமழை சீராகப் பெய்ய ஏரிகளும், குளங் களும் நிரம்பின. பூக்கள் இடுப்பு வரை உயர்ந்தன. மாட்டு மந்தைகள் மேயும் அந்த புல்வெளியில் வீடுகள் கட்ட துவங் கினார்கள். இடையர்கள் குடியிருப்பாக அது மாறியது. எல்லா ஜாதியினருக்கும், எல்லா சௌகரியமும் என்பது நடைபெற்றது.

''இராஜேந்திரர் கருமார்களுக்கு பூணூல் அணிந்து கொள் வதற்கே அனுமதி கொடுத்திருக்கிறார் என்றால் அதைவிட சிறப்பு வேறு என்ன இருக்க முடியும். இங்கே வராதே, அங்கே போகாதே என்ற கூச்சலெல்லாம் இனிமேல் நடக்காது. எல்லா ஜாதியினருக்கும் எல்லா மதிப்பும் உண்டு. எல்லா சௌகரியங் களும் உண்டு. குதிரை இருப்பவர்கள் அத்தனை பேரும் எந்த இடத்திற்கும் போகலாம். வரலாம்'' என்று மயிலையில் கூட்டம் போட்டு சீராளன் தீர்மானம் நிறைவேற்றினான். அந்த தீர்மானம் மற்ற கிராமங்களுக்கும் பரவியது.

மயிலை, திருவல்லிக்கேணி இரண்டும் நாகரீகம் மிக்க, நல்ல குடியிருப்புகள் மிகுந்த சிறு நகரமாக மாறியது.

வணிகர்கள் மயிலையில் மாளிகைகள் எழுப்பத் துவங்கி னார்கள். தேவரடியார்கள் ஒன்று கூடி இராஜேந்திர சோழர் சரித்திரத்தையும், இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற நாடகங்களையும் நடத்த துவங்கினார்கள். காஞ்சியிலிருந்து வந்த ஒரு புலவர் இரண்டு, மூன்று சிவனடியார் கதைகளை நாடகமாக்கி கொடுத்தார். கண்களில் நீர்வழிய அவைகளை மக்கள் கேட்டு ரசித்தார்கள். பார்த்து பரவசமானார்கள். திருஞான சம்பந்தர் என்கிற சிவனடியாரின் வாழ்க்கை வரலாறு மனதை நெகிழ்த்தியது. பிள்ளை மயிலை வந்தாரா என்று வியந்தது.

அவருக்கு விழா எடுக்க திட்டமிடப்பட்டது. இதுபற்றி ஆடும் தேவரடியார்களுக்கு மிகப் பெரிய மரியாதை இருந்தது.

''இராவணனாக நடித்த அந்த கூத்தன் அற்புதமாக செய் தான். 'இன்று போய் நாளை வா' என்று சொன்ன பிறகு அவன் நடந்து போனது இருக்கே. அடடா, அடடா', ஒரு அந்தணர் வியக்க, மற்றவர்கள் கண்களிலிருந்து நீர்வழிய அதை ஆமோ தித்தார்கள். இதிகாச புராணங்கள் எல்லோருக்கும் போய் சேர்ந்தன. பல கோவில்களில் அந்தணர்கள் அதன் நுணுக் கத்தை ஆராய்ந்து ஜனங்களிடையே பரப்பினார்கள்.

இராஜேந்திரர் காஞ்சியில் தங்கி சிவதரிசனம் செய்து பிறகு எசாளம், எண்ணாயிரம் போனார். அங்கு போய் சர்வசிவ பண்டிதரை விழுந்து வணங்கினார். வேத பண்டிதர்களுக்கு தனித்தனியாக தானம் அளித்தார். வேளாளர் நிலங்களை வாங்கி அந்தணர்களுக்கு பரிசு அளித்தார். பாதிக்குப் பாதி என்ற கணக்கில் வேளாளர்கள் பயிர் செய்து அந்தணர்களுக்கு வழங்க வேண்டும் என்றும், அதற்கான உழு கருவிகளும், மாடுகளும், சாவா, மூவா பேராடுகளும் அவர்களுக்கு தரப்படும் என்றார்.

குடிசைகளாய் இருந்த எசாளம், எண்ணாயிரம், பிரம்ம தேசம் மிகப் பெரிய குடியிருப்புகளாக மாறின. நீர்நிலைகளை பெரிதுபடுத்த, அவைகளால் வயல்வெளிகள் செழிப்படைந் தன. அந்தணர்கள் பின்தொடர, சர்வசிவ பண்டிதர் முன்னே வர, இராஜேந்திரர் எசாளத்திலிருந்து நேர்கோடாக மீன் சுருட்டி தாண்டி, ஜெயங்கொண்டம் வாசலை அடைந்தார். குதிரையில் ஏறி நின்று வாள் உயர்த்தி பெரிதாக பிளிறினார்.

''ஓம் நமச்சிவாயா. சிவாய நமஹ'' என்று உரக்க கத்த, சோழப்படைகளும் அப்படியே கத்தினார்கள். அவர் உள்ளே நுழைய, 'சோழம், சோழம், சோழம்' என்று கவசத்தில் வாள் களால் அடித்துக் கொண்டார்கள்.

'பிடிபட்டதே... கங்கை நதி பிடிபட்டதே' என்று ஒரு தளபதி வெறியோடு அலறினான். மறவர்கள் மீது பூக்கள் சொரியப்பட்டன. கால்களில் நீர் ஊற்றப்பட்டது. தீபங்கள்

ஏற்றப்பட்டு அவருக்கு திருஷ்டி கழிக்கப்பட்டன. எருமைகளும், ஆடுகளும் வெட்டப்பட்டன.

யாரும் நவகண்டம் கொடுக்கக்கூடாது என்று கடுமையான உத்தரவு இருந்தது. ஜனங்கள் இராஜேந்திரரை பார்த்து அழுதார்கள். முகம் வழித்து நெட்டி முறித்தார்கள். மேலே போர்த்தியிருந்த சால்வையை விலக்கி தரையில் போட்டார்கள். நடைபாதை விரித்தார்கள். இராஜேந்திரர் படி ஏறி கோவிலுக்குள் நுழைந்தார். பிரம்மாண்டமாக நிறுவப்பட்ட சிவலிங்கத்தை பார்த்து சந்தோஷத்தில் பிளிறினார். உள்ளே ஓடினார். சிவலிங்கத்தை கட்டித் தழுவிக் கொண்டார். மேலே ஏறினார். ஆவுடையார் மீது ஏறி நின்று அணைத்துக் கொண்டார். ஒரு சொம்பு கங்கை நீர் வாங்கி மேலே கவிழ்த்தார். அதை எடுத்து தன்மீது பூசிக் கொண்டார். ஜனங்கள் பரவசமாக கூச்சலிட்டார்கள். இறங்கி வெளியே வந்தார். நித்த வினோத பெருந்தச்சன் இரவியை தேடினார். அருகே அழைத்தார். தலையை கீறினார். ஒரு சொம்பு கங்கை ஜலம் வாங்கி அவன் தலையில் கவிழ்த்தார். அவனை அணைத்துக் கொண்டார்.

"அற்புதம். அற்புதம். மிக அற்புதம். இவ்வளவு சிறப்பாக கோவில் வரும் என்று நான் நினைக்கவே இல்லை. என் தேசம் உனக்கு கடன்பட்டிருக்கிறது. உன்னை பற்றி வேறு சில செய்திகள் மனதை நோகடித்தன. சர்வசிவ பண்டிதர் சொன்னது போல நீ ஏரியை வெட்டத் துவங்கிவிட்டாய் என்று தெரிந்தது. என்னோடு பல வீரர்கள் வந்திருக்கிறார்கள். ஒட்டதேசத்திலிருந்தும், உத்திரலாடத்திலிருந்தும் வந்திருக்கின்றார்கள். பிரித்து விடு. பெரும் ஏரியாக வெட்டு. அது நல்லது. நமக்கு நல்லது."

மழை பெய்து பூமி தளர்ந்திருந்த சமயத்தில் முழங்கால் சேற்றில் வீரர்கள் இறங்கி கையில் கிடைத்த ஆயுதங்களால் குத்தி நோண்டி மண் எடுத்து கரை எழுப்பினார்கள். இரண்டாள் ஆழத்திற்கு ஏரி வெட்டப்பட்டது. கரை உயர்த்தி, கருங்கல் அடுக்கி களிமண் சாந்து பூசி உறுதியாக்கப்பட்டது.

அரண்மனை முழுவதும் விளக்கேற்றினார்கள். எல்லார் வீட்டு வாசல்களிலும் தீப்பந்தங்கள் எரிந்தன. விமானத்தின் உச்சியிலிருந்து ஜெயங்கொண்டத்தை பார்க்க சந்தோஷமாக இருந்தது. இப்படி ஒரு ஒளி மிகுந்த தேசம் எந்த ஊரிலும் இல்லை என்று சொல்லும்படியாக இருந்தது. கும்பாபிஷேகத் திற்கு நாள் குறிக்கப்பட்டது.

★ ★ ★

அத்யாயம்

84

காற்றின் வேகத்தில் இலைகள் தரையில் விழுந்து சல சலத்து வாசற்படிவரை வந்து தயங்கி நின்றன. உள்ளே வரலாமே என்றுதான் மாமன்னர் இராஜேந்திர சோழருக்கு தோன்றியது. அவர் விழுந்த இலைகளை பார்த்து சிரித்துவிட்டு வீரமாதேவியின் மீது சாய்ந்து கொண்டார்.

''யுத்தம் செய்தாலும் பிரச்சனை. யுத்தம் இல்லாவிட்டாலும் பிரச்சனை. போர் என்பது ஒரு தீர்வே அல்ல. இல்லையா வீர மாதேவி.''

''என்ன திடீரென்று தத்துவ ஞானம் பொழிகிறது. வீரமாதேவி சிரித்தாள்.

இல்லை. ஒரு நிம்மதியின் பொருட்டுதான் இங்கு எல்லா மனிதர்களும் காரியம் செய்கிறார்கள். நிம்மதி கிடைக்கிறதா என்பது பெரிய கேள்வி. அப்படியென்றால் யாருக்கு நிம்மதி கிடைக்கும் என்பதும் ஒரு உபகேள்வி. யார் காரியம் செய் யாமல் இருக்கிறாரோ அவருக்குதான் நிம்மதி கிடைக்கும்.''

''அட, காரியம் செய்யாமல் யாராவது இருக்க முடியுமா. கையை தூக்காமல், காலை நகர்த்தாமல் உண்ணாமல், உறங் காமல், மலஜலம் கழிக்காமல் இருக்க முடியுமா. இவையும் காரியம் தானே.''

''இல்லை. இவை காரியம் அல்ல. காரணம் ஏதேனும் இருப்பினும் அப்போது செய்வதுதான் காரியம். இவை அனிச்சை செயல்கள். இதோ, இந்த இலைகள் கீழே விழுந்து, நகர்ந்து வாசற்படிவரை வந்து உங்களை பார்த்து சிரித்தனவே. இதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா. இல்லையே. இது அனிச்சை

செயல். இந்த அனிச்சை செயல் போல, ஒரு சருகு உதிர்வது போல, காற்று நகர்வது போல நகருபவர்களுக்கு பிரச்சனை இருக்காது. கவலை இருக்காது.

அதாவது?

அதாவது, சாதுக்களுக்கு, சன்னியாசிகளுக்கு பிரச்சனை இருக்காது.''

''பிரச்சனையிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் சன்யாசமா.''

''அல்ல. பிரச்சனை வேண்டாம் என்றால் சன்யாசம். பிரச்சனைதான் சந்தோஷம் என்றால் அது இல்லறம் அல்லது போர் வாழ்க்கை.''

''பொதுவாக என்ன சொல்கிறாய்.''

''எங்கு நிற்கிறோமோ அந்த இடத்திற்கு உண்டான மரியாதையை செய்து விடுவோம். துறவறத்திலிருந்து இல்லறத் திற்கு ஏங்குவதும், இல்லறத்திலிருந்து துறவறத்தை பார்த்து பெருமூச்சு விடுவதும் அபத்தம். மிகப் பெரிய முட்டாள்தனம்.''

''இப்போது என்ன சொல்கிறாய்.''

''இப்போது உங்களை சுற்றியுள்ள பிரச்சனைகளை பெரிது படுத்தி அல்லது சிறிதுபடுத்தி சந்தோஷமாக இருங்கள்.

''அதாவது...?

என்ன கவலை இப்போது உங்களுக்கு, நன்றாகத்தானே இருக்கிறீர்கள். பெரும்போர் செய்து வெற்றி பெற்று, நிம்மதி யாக அல்லவா இருக்கிறீர்கள். சோழதேசம் நீங்கள் கொண்டு வந்த பொருள்களால் திணறிக் கொண்டிருக்கிறது. மக்கள் நாலாபுறமும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் வருமானம். எல்லோருக்கும் உணவு. எல்லோருக்கும் நல்ல தூக்கம். வடகிழக்கு பருவமழை கூட மிகச் சரி யாக பெய்து எந்தவித சேதமும் ஏற்படுத்தாமல் நல்ல விளைச்சலை கொடுத் திருக்கிறது. ஆற்றோரம் இருக்கின்ற புற்களை மேய்வதே பசுக் களின் வேலையாக இருக்கிறது. அதன் சாணங்களால் வயல்கள் வலுப்பெறுகின்றன. உழுவதற்கு பல உழுகலன்கள் இருக்கின்றன. மாடுகள் இருக்கின்றன.

அதையும் தவிர, உழுவதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். சாணம் அள்ளி வந்து வயல்களில் மலையாக கொட்டுகிறார்கள். இழுத்து பரவுகிறார்கள். நாற்றங்கால் திமிர் பிடித்து நிற்கிறது. இவைகளை பறித்து நட்டால் எவ்வளவு அற்புதமாக வளரும் என்று தோன்றுகிறது.

விதம் விதமான விதைநெல்கள், ஜெயங்கொண்டம் வானம் பார்த்த பூமி, உடையார் பாளையம் ஒரே ஒரு கால்வாய் கொண்டது. சின்ன ஏரிகள்தான் இருக்கின்றன.

எவ்வளவு பெரிய ஏரி வெட்டியிருக்கிறான், இரவி. அவனை நீங்கள் அலட்சியப்படுத்த வேண்டாம். அம்மாதிரி யான கலைஞர்களுக்கு கர்வம் இருக்கும். மிகக் கூர்ந்து பார்த் தால் அவனுடைய இடத்தில் வேறு சிலைகள் வைக்க அவன் அனுமதிக்கவில்லை என்பது நூற்றுக்கு நூறு சரியான விஷயம். அவனை நான் பலமாக ஆதரிக்கிறேன். ஆனால் அதற்கு மிஞ்சி அவன் செய்த சில செயல்கள் ஆத்திரமானவை. பொறாமை மிகுந்தவை. ஒரு சிலையின் மீது ஏறி நின்றிருக்க கூடாது. அவைகளுக்கு கோவில் கட்ட எந்த சிற்பியும் வரமாட்டான் என்று சொல்லியிருக்கக்கூடாது. அவைகளுக்கு உண்டான மரியாதையை அவன் கொடுத்திருந்தால் மிகப் பெரிய மனிதனாக அவன் போற்றப்பட்டிருப்பான். அவன் செய்த அத்தனை அற்புதங்களும் இதனால் உடைந்து போய்விட்டன. நித்த வினோத பெருந்தச்சன் இரவி மூளியாக நிற்கிறான் என்று தோன்றுகிறது.''

''அவனுடைய இந்த செயலுக்கு என்ன காரணமாக இருக்கும்.''

''கர்வம். தன் படைப்பை பற்றிய கர்வம். ஆனால் இது உங்களிடம் இல்லை. இதுதான் எனக்கு ஆச்சரியம்.

இவ்வளவு தொலைவு ஒரு படை போய் வந்திருக்கிறது. இதுபற்றி நீங்கள் பெரிதாக பேசிக் கொள்ளவில்லை. இது எந்தவிதத்தில் நல்லது, எந்தவிதத்தில் கெட்டது என்று ஆராய துவங்கி விட்டீர்கள். சோழ தேசத்தின் பொருளாதாரம் உயருமா, தாழுமா என்று அதிகாரிகளோடு பேசத் துவங்கிவிட்டீர்கள்.

இறந்தவர் குடும்பத்திற்கு அள்ளிக் கொடுக்க ஆசைப்படு கிறீர்கள்.

அத்தனை போரும் நீங்களாக நடத்தவில்லை. போருக்கு உங்களை வரவழைத்தார்கள். வேங்கியை தனதாக்கிக் கொள்ள மேலை சாளுக்கியம் ஆசைபட்டது. அதனால் உதைபட்டது. கீழை சாளுக்கியமும் மேலை சாளுக்கியமும் ஒன்றானால் தொண்டை நாட்டிற்கும், நடு நாட்டிற்கும், சோழ தேசத்திற் கும் மிகப் பெரிய கெடுதல் என்று தெரிந்து சோழ தேசத்தை வாழ வைப்பதற்காக, தற்காப்புக்காக நடத்த போர் இது. கங்கை கரை வரை நீங்கள் போனது உங்கள் மூத்தோர் புண்ணியம். உங்கள் தகப்பனார் ஆசி.

யார் செய்திருக்கிறார்கள். இந்த தெற்கு பக்கத்தில் சேர, சோழ, பாண்டிய நாட்டில் யார் போயிருக்கிறார்கள். இமய மலையில் பெயர் பொறித்தவன் என்று சேர மன்னனையும், இன்னொரு சோழ மன்னனையும் சொல்வார்கள். ஆனால் விஜயாலய சோழன் ஆரம்பித்து வைத்த இந்த சோழ வம்சத்தில் இதை சிறப்பாக செய்தது நீங்களே.

மாமன்னர் இராஜராஜர் உங்கள் தந்தை. அவரை கொண் டாடுங்கள். ஆனால் எனக்கு அவரைவிட உங்கள் வெற்றி யின் மீது மிகப் பெரிய மரியாதை வந்துவிட்டது. வேங்கியை விட்டு நகரமாட்டேன் என்று நீங்கள் அரையன் ராஜராஜனை அனுப்பியது மிகப்பெரிய விஷயம். எந்த அரசரும் அதை செய்திருக்க மாட்டார். மொத்த புகழும் படைத்தளபதிக்கு போய்விடுமோ என்ற பயம்தான் இருக்கும். ஆனால் நீங்கள் வேங்கியை விட்டு நகர்ந்திருந்தால் கீழை சாளுக்கியம் விட்டு ஒட்டதேசம் போயிருந்தால் மேலை சாளுக்கியம் கீழை சாளுக் கியத்தை தாக்கியிருக்கும். ஜெயசிம்மன் கங்கே யாதவோடு வெகுநிச்சயம் உள்ளே வந்து இராஜராஜ நரேந்திரனை வெட்டி கொன்றிருப்பான். நாங்கள் ஒட்டுமொத்தமாக கயிலாயம் போயிருப்போம். நீங்கள் உறுதியாக நின்றதால் ஜெயசிம்ம னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இன்னும் மேற்கே போய்விட்டான். காடுகளின் விளிம்பிலிருந்து படை திரட்ட ஆரம்பித்துவிட்டான்.''

‘‘அழகாக பேசுகிறாய். மிக அழகாக பேசுகிறாய். தொடர்ந்து பேசு. ஜெயசிம்மனோடு பகை முடிந்துபோயிற்றா.’’

‘‘இல்லை. மேலை சாளுக்கியத்திற்கும், சோழ தேசத் திற்கும் தீரா பகை. ஜென்மஜென்மமாய் பகை. ஜெயசிம்ம னுடைய மகன் நிச்சயம் மறுபடியும் படை எடுத்து வருவான். நம்முடைய இராஜராஜித்தனும், வீர இராஜேந்திரனும், இரண் டாம் இராஜேந்திரனும் மிக விழிப்பாக இருக்க வேண்டும். அவர்களை அழித்தோம் அல்லவா. அடித்து நொறுக்கினோம் அல்லவா. அதனால் வலிவோடு நம்மீது மறுபடியும் பாய்வார் கள். நேரடியாக தாக்குவார்களோ அல்லது கீழை சாளுக்கியம் வந்து இந்த பக்கம் திரும்புவார்களோ தெரியாது. ஆனால் கீழை சாளுக்கியத்தினுள் நுழைந்தால் அங்குள்ள நம் சேனாதிபதி கள் அடித்து நொறுக்குவார்கள்.

மற்றவர்கள் செய்த போர் முறையை விட உங்கள் போர் முறை கடுமையானது. கொடுமையானது. அடித்து நொறுக் குவது என்பது வெறும் வார்த்தையாக இல்லாது செயலாக இருந்தது. ஊர் என்று ஒன்று இருந்தால்தானே உட்கார்ந்து, உண்டு, உறங்கி, பேசி, மறுபடியும் படை திரட்டி வருகிறாய். வீடே இல்லை. ஊரே இல்லை. வெறும் தரைமட்டம் என்றால் அதை கட்டி முடிக்கவே உனக்கு பத்து வருடம் ஆகிவிடும். எனவே, போர் வெற்றி என்பது ஊரை அழிப்பது. வயல்களில் யானையை மேய விடுவது. கரும்புகளை யானைகளும், மாடு களும் உடைத்து போடுவது, மதகுகளை உடைப்பது. இப் பொழுது கால்வாய்கள் எதுவும் இல்லாமல் மதகுகள் எதுவும் இல்லாமல் காவிரி சோழதேசத்தை நோக்கி வேகமாக வரு கிறாள் அல்லவா. வருடம் முழுவதும் நீர் இருக்கும் அல்லவா. காவிரியும் பெருகி, கொள்ளிடமும் பெருகி கொள்ளிடத் திற்கு வரும் வழியில் கட்டப்படுகின்ற ஏரிக்கு திருப்பப்பட்டு, ஜெயங்கொண்ட சோழபுரம் எந்நாளும் பசுமையாக இருக் கின்ற விஷயம், இந்த யுத்தத்தால் நடந்தது.

காவிரி பொய்க்காது. ஒருவேளை தென்மேற்கில் மழை இல்லையென்றால் குடகில் பொழியவில்லையென்றால் இந்த

ஏரி நம்மை காக்கும். ஏனெனில் நாம் மாடுகளையும், மனிதர்களையும் வடக்கிலிருந்து கொண்டுவந்து விட்டோம். உயிர் வாழ நீர் தேவை. உணவு தேவை. மனிதனுடைய உயிருக்கும், பயிருக்கும் இந்த ஏரியே பெரும் பாதுகாப்பாக இருக்கப் போகிறது.''

''உண்மை வீரமாதேவி இந்த இடம்தான் என்னை மலைக்க வைக்கிறது. என்னை தாண்டி ஏதோ விஷயங்கள் நடைபெறுகின்றன. இவ்வளவு பெரிய ஏரியை வெட்ட வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. சர்வ சிவ பண்டிதர் நினைத்திருக்கிறார். அவருக்கு தோன்றியிருக்கிறது. நான் ஆட்களோடுதான் வருவேன். ஆயுதங்களோடுதான் வருவேன் என்று அவருக்கு தெரிந்திருக்கிறது. ஹா. எவ்வளவு கூர்மையான அந்தணர். எத்தனை அற்புதமான குரு.

சேனாதிபதி கிருஷ்ணன் ராமன் பிரம்மராயர் இல்லையென்றால் வடக்கே என்னால் நகர்ந்திருக்க முடியுமா. எவ்வளவு திடமாக தெற்கே காத்தார். என்மகன் சுந்தரசோழ பாண்டியன், பாண்டியதேசத்தில் தைரியமாக படைகளோடு கத்தி ஊன்றி நின்று ஒரு தொல்லையும் ஏற்படாமல் காத்தானே. இறந்துபோன என் அருமை கண்மணி சோழ கேரளன் இல்லாவிட்டால் கேரள தேசம் சேரர் கூட்டம் நம்மை நிச்சயமாக தாக்கியிருக்குமே. நானா செய்தேன். நான் மட்டுமா செய்தேன். இராஜேந்திரனுடைய வெற்றியா இது.'' அவர் திடீரென்று கண்கலங்கினார்.

''எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள். அந்த இறப்புகள் தானே பலரை வாழவைத்திருக்கின்றன. வீரசோழனும், இராஜாதிராஜனும் எவ்வளவு உதவி செய்திருக்கிறார்கள்.

நாவாய் வழியே கிடுக்கி தாக்குதல். யாருக்காவது தோன்றியிருக்குமா. இந்த அருண்மொழிக்குதானே தோன்றியது.

வீரமாதேவி, உனக்கு என்னைவிட போரில்தான் நாட்டம். சோழ தேசத்தைவிட நாவாய் ஏறி ஊர் ஊராக போவதில்தான் நாட்டம். மறக்குல பெண்மணி அல்லவா. போர்தான் முக்கியம். புருஷன் அல்ல.''

"அடடா, என்னடா இது, இத்தனை நாள் வரை கடித்து குதறிவில்லையே என்று நினைத்தேன். ஆரம்பித்துவிட்டீர்களா. உங்களுக்கு புத்தி சொல்வது போல் யார் பேசினாலும் கொஞ்சம் கூட பொறுக்காது. காத்திருந்து தலையில் வெட்டி விடுவீர்கள். நான் உங்களுக்கு புத்தி சொல்லவில்லைய்யா. நடந்ததை கோர்வையாக்கி சொன்னேன்."

"ஆமாம். ஆமாம். உன்னால் மட்டும் சோழதேசம் செழித்து விடவில்லை என்று உள்ளே சூசகமாய் சொன்னாய். புரிகிறது."

"ஆளை விடுங்களய்யா. நான் விலகிக் கொள்கிறேன்."

"அதெப்படி போக முடியும், அருகே வா." அவர் அனுபவிக்க தகுந்த மனைவி என்ற விருப்பத்தோடு இழுத்தார்.

"இது நேரமல்ல. தடுப்பதற்கு கோபம் கொள்ளாதீர்கள். வெட்டப்பட்ட புது ஏரியில் என்ன செய்யப் போகிறீர்கள்."

"ஆஹா. இது கேள்வி. இதை உன்னோடு மட்டும் பேசினால் ஆயிற்றா. வா. நாம் கூடத்திற்கு போவோம். அங்கு ஆசனங்கள் போடச் சொல். நித்த வினோத பெருந்தச்சன் இரவியை வரச் சொல்." அவர் கட்டளையிட்டார்.

வீரமாதேவி தயங்கி நின்றாள். அவர் முகத்தை பார்த்தாள்.

"அந்த இரவி செய்தது பெரும் தவறல்லவா. அதைப் பற்றி கேட்காது விட்டீர்களே. ஜெயங்கொண்டத்திற்கு, இந்த கோட்டைக்கு அனுப்பிய கற்சிலைகளை அவன் எப்படி ஒதுக்க முடியும். எப்படி அவமானப்படுத்த முடியும். எல்லாவற்றையும் எங்கோ கொண்டுபோய் போடு என்று செங்கல் மேடு கிராமத்தில் எப்படி குப்பையாய் குவிக்க முடியும். நிற்க வைக்கவும் கூடாது. படுத்து கிடக்கட்டும் என்று எப்படி கட்டளை இட முடியும்."

"தவறுதான். இப்போதைக்கு உண்டான கேள்வி அல்ல. வேலையை செய்து முடித்து விட்டு எல்லோருக்கும் பரிசு வழங்குகின்ற ஒரு நேரத்தில் இரவியை நான் தண்டிப்பேன். இரவி ஒரு அற்புதமான சிற்பி. அதை மறந்து விடக் கூடாது.

வெறும் கட்டிட கலைஞன் என்று நினைத்து விடக் கூடாது. உயிரை கொடுத்து உழைத்திருக்கிறான். தந்தையை விட தாண்டியிருக்கிறான். எனவே, இந்த இடத்தில் நான் பதட்டப் படுவதாக இல்லை.''

''ஆமாம். பதட்டப்பட, பதட்டப்பட வைக்க என்று ஒருத்தி உங்களுக்கு கிடைத்திருக்கிறாளே. அவளை மட்டும் வதைத்துக் கொண்டே இருங்கள்.''

''எனக்கு ஒரு மாறுதல் வேண்டாமா வீரமாதேவி. பரவை யையா கோபித்துக் கொள்ள முடியும். பஞ்சவன் மாதேவியையா கோபித்துக் கொள்ள முடியும். அல்லது என் பட்டமகிஷி சண்டை போட முடியுமா. எனக்கு வீட்டில் சண்டை போட உரத்து கத்த நீதான் கிடைத்திருக்கிறாய். உனக்கு வேறு வழியே இல்லை.''

வீரமாதேவி வாய்விட்டு சிரித்தாள். அவளை இழுத்து இராஜேந்திரர் அணைத்துக் கொண்டார். கட்டிலிலிருந்து புரண்டு எழுந்தார். மேல் துணியை போர்த்திக் கொண்டார். அரசர் வெளியில் வருகிறார் என்று வாசலில் காவல் காப்போருக்கு தெரிந்தது.

எக்காளம் ஊதினார்கள். முரசு அலறியது.

'வீரசோழன் மாளிகைக்கு இரவியை வரச்சொல' என்று கட்டளை பிறந்தது. அவர் அந்த மாளிகைக்கு போய் சேருவதற் குள் நித்த வினோத பெருந்தச்சன் இரவி குதிரையில் விரை வாக ஓடிவந்தான். அவரை பார்த்ததும் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான்.

''அழைத்தீர்களாமே'' என்று கேட்டான்.

''வா'' அவன் தோளில் கைபோட்ட வண்ணம் படியேறி னார். முன்பக்கம் தூண்கள் எழுப்பிய வெளியை கடந்தார். அங்கிருந்து உள்ளே நகர்ந்தார். முற்றத்திற்கு போனார். முற்றத் திற்கு அருகே இருந்த கூடத்தில் ஆசனங்கள் போடப்பட்டிருந் தன. ஆசனத்தில் அமர இரவி வந்தான். வேறு சிலருக்கும்

செய்தி போயிருந்தது. அருண்மொழிப்பட்டனும், அரையன் ராஜராஜனும் வந்து உட்கார்ந்தார்கள்.

''பிற்பகல் ஓய்வெடுக்கும் வேளையில் அழைத்துவிட்டேனா. ஒரு முக்கியமான வேலை'' என்று அவர்களை பார்த்து சொல்ல, அவர்கள் மறுத்து கைகூப்பினார்கள்.

''எங்களுக்கு எல்லா நேரமும் இராஜேந்திரர் நேரம்தான். எனவே தயங்காமல் சொல்லுங்கள். எப்பொழுது வேண்டுமானாலும் அழையுங்கள்.'' அரையன் அன்போடு பேசினார்.

''இந்த கங்கை தவலைகளை உயரே எடுத்துக்கொண்டு போய் இப்பொழுது இருக்கின்ற இந்த ஏரியில், கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த இடத்தில் ஜலமயமான ஒரு ஜல ஸ்தம்பம் ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றேன். அதாவது ஒரு நீர் தூண் சில நிமிடங்களுக்கு அங்கு இருக்க வேண்டும். ஒரு நாற்பது தவலைகள் அங்கே ஏற்றப்பட வேண்டும். சாரம் கட்டி. இரண்டு பனை உயரத்தில் மேலே தளம் அமைத்து, நடுவே இடைவெளி விட்டு அந்த இடைவெளியில் புனல்வைத்து தவலைகள் ஒட்டுமொத்தமாக சாய்க்கப்பட வேண்டும். அப்போது புனல் வழியாக ஒரு தூண் போல, ஒரு முழு நீள கை கையளவு அகலத்திற்கு ஒரு தூண் போல நீர் ஸ்தம்பம் இருக்க வேண்டும். இருநூறு வினாடிகளாவது அந்த ஸ்தம்பம் இருக்க வேண்டும். இதை செய்ய முடியுமா இரவி.''

''நிச்சயம் செய்யலாம். வெகு நிச்சயம் செய்யலாம். நல்ல அகலமான தூண் அமைத்து விடுகிறேன். சாரங்களால் கட்ட சொல்கிறேன். சாரங்களூடே இடைவெளி இருக்கும். மேலே பலகை போட்டு தவலைகள் கயிறால் இறுக்கப்பட்டு அங்கே ஒரு நல்ல அமைப்பில் வைக்கப்படும். தவலைமீது தவலை இருக்கும். தவலையில் உள்ள நீரை சாய்த்து விட்டு புனல் நிரம்பிய பிறகு அந்த புனலின் வாய்க்கு அருகே ஒரு திறப்பான் வைத்து நீரை திறக்க வேண்டும். நீர் நகர, நகர, புனலை கவனித்து அதில் இடையறாது நீர் சாய்க்க வேண்டும். தவலைதவலையாக சாய்க்க வேண்டும். சாய்த்த தவலை

களை சுருக்கிட்டு விரைவாக கீழே இறக்கிவிட வேண்டும். ஒரு அடுக்கு, இரண்டடுக்கு, மூன்றடுக்கு என்று தவலைகள் இருக்கலாம். கிட்டத்தட்ட ஐம்பது, அறுபது தவலைகளில் உள்ள நீர் அந்த ஏரியில் இறங்கும். ஏரியில் நீர் இறங்கிய பிறகு, எல்லோரும் இறங்கிய பிறகு மக்களை அனுமதிக்கலாம். மக்கள் சிறிதளவு நீர் நிரம்பிய அந்த ஏரியில், கங்கை கலந்த இடத்தில் ஓடிப் போய் கங்கையை தலையில் தெளித்துக் கொள்ளலாம்.

சோழதேசத்து ஆறும், கங்கையும் கலந்த வண்ணம் இருக்கும். மிகவும் சேறாகாமல் இருக்க மேற்கு பக்கம் இருக்கும் அந்த கால்வாயை கொள்ளிடத்திலிருந்து பிரிந்து வரும் அந்த நதிப்படுகையை நான் திறந்துவிடப் போகிறேன். இன்னும் ஆழமாக்கப் போகிறேன். மற்ற இடங்களில் அடைத்து கொள் ளிடத்திற்கு திசை திருப்பப் போகிறேன். கொள்ளிடம் முழு வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. எனவே, இங்கு நீர் நிரம்ப தடையில்லை.

நீர் அந்த இடத்தில் நிரம்பிவிட்டால் அங்கு மண் தோண் டுவது கடினம். எனவே, அந்த இடத்தை தாண்டி மற்ற இடங் களில் மண் தோண்டுவதற்கும் வாட்டமாக இன்னும் ஏரியை அகலப்படுத்த வேண்டும். இதை என்னால் மூன்று நாட் களில் கட்டி முடித்துவிட முடியும். பெரிய சவுக்கங் கொம்பு கள் என்னிடமே இருக்கின்றன. கோவில் கட்டி உபயோகப் படுத்திய சாரங்கள் இருக்கின்றன. மணிக்கயிறுகள் இருக் கின்றன. எனவே, நீங்கள் சொன்னால் இப்பொழுதே ஆரம் பித்து விடுகிறேன்.''

''இன்று நாள் எப்படி.

அந்தணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். சர்வசிவ பண்டித ருக்கும் செய்தி போயிற்று. அந்தணர்கள் உடனடியாக நேரம் குறித்தார்கள். 'இன்றல்ல, நாளை', என்று சொன்னார்கள்.

''நாளை தசமி. அதற்குப் பிறகு அமாவாசையன்று இந்த விஷயத்தை செய்யலாம்.''

''மூன்று நாட்கள் சாரம்கட்ட ஆகும். நாலாம் நாள். ஐந்தாம்

நாள் தவலைகளை ஏறி அடுக்கி, அந்த ஈய பற்றுகளை விலக்கி ஒன்றன் மீது ஒன்று கவனமாக வைத்திருக்க வேண்டும். அவர்கள் குளறுபடிகள் செய்யக் கூடாது. எனவே எப்படி, எந்த தவலையில் நீர் இறைக்க வேண்டும் என்று திட்டமிட வேண்டும். அப்படி அடுக்கப்பட வேண்டும்.

பிறகு காலியான பின் நீர் இல்லாத தவலைகளை கீழே வைக்க வேண்டும். இதுவும் முக்கியம். அப்பொழுதுதான் இடையறாது நீர் ஊற்றுவதற்கு வசதிப்படும்.'' இடைவெளி விட்டு பேச்சு நிறுத்தினான்.

''ஒரு கேள்வி, அரசே.''

''என்ன.''

''இது கும்பாபிஷேகத்திற்கு முன்பா. அல்லது பின்பா.'' அமைதியான குரலில் இரவி கேட்டான்.

''அடே, இதை யோசிக்கவேயில்லையே. இரவி, கோவில் தயாரா.''

''எப்போதோ தயாராகி விட்டது. நீங்கள் நாள் குறித்தால் எப்பொழுது வேண்டுமானாலும் அந்தணர்கள் உள்ளே நுழையலாம். அதுவரை மக்கள் பார்க்க நான் அனுமதித்திருக்கிறேன்.''

அந்தணர்கள் பரபரத்தார்கள். சர்வசிவ பண்டிதர் தேர் ஏறி வந்தார். அரசருக்கு வணக்கம் சொன்னார். பண்டிதர்களோடு பேசினார். மறவர்கள் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். இரவி அமைதியாக காத்துக் கொண்டிருந்தான்.

மாமன்னர் அவ்வப்போது பேசினாலும் மறவர்கள் அதிகம் பேசுவதில்லை. கோவில் பற்றி கொண்டாடுவது இல்லை என்பது இரவிக்கு தெளிவாக தெரிந்திருந்தது. தன் பக்கத்து நியாயத்தை விசாரிக்காமல் கோபப்படுகிறார்கள் என்ற துக்கம் இருந்தது. போதும் என்ற எண்ணம் வந்தது. அவன் முகம் மாறுதலை அவ்வப்போது மாமன்னர் இராஜேந்திரர் கூர்மையாக கவனித்துக் கொண்டிருந்தார்.

சர்வ சிவ பண்டிதரால் நாள் குறிக்கப்பட்டது.

''வரும் அமாவாசை விடியற்காலை கும்பாபிஷேகம். நாளையிலிருந்து கலச ஸ்தாபனம். யாகம். பூர்வாங்க பூஜைகள். காவிரி நீராலும், நெல்லாலும், பொன்னாலும் அபிஷேகங்கள். எல்லா மூலைகளிலும் சோற்று உருண்டை வைத்து பலிகள். உமைக்கு பூசணிக்காய் வெட்டும், உக்கிரமாய் இருக்கின்ற துர்க்கைக்கு ஆடுபலியும் நடத்தப்பட வேண்டும். நரபலி என்பது நடத்தவே கூடாது.

நாளை காலை நந்தி பூஜை ஆரம்பம். அவைகளுக்கு உண்டான விஷயங்களை நாங்கள் சேகரித்துக் கொள்கிறோம். அரசர் நிதி உதவி செய்தால் போதும்.''

ஓலைநாயகம் வரவழைக்கப்பட்டார். பண்டார அதிகாரி வரவழைக்கப்பட்டார். வேண்டுவோருக்கு வேண்டுவன கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

''நிறைய ஓலை கட்டுகள் எடுத்துக் கொள்ளுங்கள். பிள்ளையாரை நினைத்து பொட்டிடுங்கள். ஓம் நமச்சிவாயா என்று எழுதுங்கள். பிறகு கணக்கு தொடருங்கள்.'' சர்வசிவ பண்டிதர் ஓலைநாயகத்திற்கு சொல்லி கொடுத்தார். கணக்கரும் கேட்டுக் கொண்டார்.

''கோட்டையில் அத்தனை இடத்திலும் பறை அறிவித்து விடுங்கள். தஞ்சையில், குடந்தையில், உடையாளூரில், எசாளம் எண்ணாயிரத்தில் ஏன் மயிலை வரையிலும் இதை தெரிவித்து விடுங்கள். யார் வேண்டுமானாலும் வரலாம். எத்தனை பேர் வேண்டுமானாலும் வரலாம். அவர்களுக்குண்டான விருந்தோம்பல் சிறப்பாக நடைபெறட்டும்.

தெருக்களை மக்கள் அலங்கரிக்கவேண்டும். வெளியாட்கள் வருவதால் தூசு பறக்கக் கூடாது. எப்போதும் நீர் தெளித்துக் கொண்டிருக்க வேண்டும். மாவிலையாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட வேண்டும். எல்லா ஊர்களிலிருந்தும் வண்டி வைத்துக்கொண்டு தேவரடியார் வர வேண்டும். ஒவ்வொரு மூலையிலும் அவர்கள் மேடை அமைத்து விதம்விதமாக நாட்டிய நாடகங்களும், பாடல்களும்

செய்ய வேண்டும். ஓதுவார்கள் எல்லா கோவில்களிலிருந்தும் வர வேண்டும். ஒட்டுமொத்தமாக பாடி பயிற்சி செய்ய வேண்டும். ஒரே குரலில் தேவாரம் பாட வேண்டும். கோபூஜை, கஜ பூஜை, சுமங்கலி பூஜை, கன்யாபூஜை, தம்பதி பூஜை, அந்தணர்களுக்குண்டான உபசாரங்கள் எல்லாம் நடக்கப் பட வேண்டும். ஊருக்கு திரும்பி சோம்பி இருந்தாகி விட்டது. இதுபோதும். இனி மறுபடியும் சுறுசுறுப்பாக வேண்டும்.''

இராஜேந்திரர் நிதானமாக சகலமும் நினைவுபடுத்தி பேசினார். சபை கேட்டுக் கொண்டிருந்தது. அடுத்தது என்ன என்று ஆவலோடு சபை காத்துக் கொண்டிருக்கும் போது,

''சபை கலையலாம். எல்லாம் விரைவாக நடைபெற வேண்டும். ஒவ்வொன்றுக்கும் என்னை தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஓலைநாயகம் இதை முன் நின்று செய்யட்டும். சர்வசிவ பண்டிதரை அவ்வப்போது கலந்து கொள்ளுங்கள்.

சற்குரு நீங்கள் இருந்து இந்த கும்பாபிஷேகத்தையும், ஜலஸ்தம்பத்தையும் நடத்தி கொடுக்க வேண்டும்.'' மாமன்னர் கை கூப்பினார். சர்வசிவ பண்டிதர் கைதூக்கி ஆசிர்வதித்தார். பொறுப்பு முழுவதும் அவர் தோளில் வந்து உட்கார்ந்து கொண்டதை அவர் தெளிவாக உணர்ந்தார்.

ஊரே ஒன்று கூடி எந்த வகுப்பு பிரிவும் இல்லாமல் ஒருவரை ஒருவர் உரசிக் கொண்டும், உதவி செய்து கொண்டும் மக்கள் வேலை செய்தார்கள்.

''இவ்வளவு பெரிய மரத்தை எப்படி எடுத்துக் கொண்டு போவீர்கள்.'' பஞ்சமர்களை பார்த்து ஊர் வியந்தது.

''வேறு வழியில்லை. எடுத்துக் கொண்டு தான் போக வேண்டும். இது கொடிமரமாம். குழி தோண்டி நட வேண்டுமாம். சுற்றி பூண் அடிக்க வேண்டுமாம். இரவியினுடைய கட்டளை.

மரம் கோவிலின் வெளிப்புறத்தில் இருக்கிறது. உள்ளே போக நூறு நடை தேவைப்படும். போய் விடலாம்.''

"சும்மா இருங்களய்யா. உங்களால் மட்டும் முடியாது. நசுங்கி இறந்து போவீர்கள். அடேய், எல்லோரும் வாருங்கள்."

மறவர்கள் தோள் கொடுத்தார்கள். வேளாளர்கள் சேர்ந்து கொண்டார்கள். அந்த பெரிய மரத்தை நூற்றைம்பது பேர் தூக்கிக் கொண்டு, ஒருவர் தோளை ஒருவர் பிடித்துக்கொண்டு 'சோழம், சோழம்' என்று சொல்லிக் கொண்டு மதில்சுவர் தாண்டி உள்ளே நுழைந்தார்கள்.

"ஒரே மூச்சு. ஒரே வேகம். தள்ளாடுகிறவர்கள் நகர்ந்து விடுங்கள். தள்ளாடுகிறவர்களுக்கு பக்கத்திலே போய் வேறு ஒருவர் உள்ளே புகுந்து கொள்ளுங்கள். மரம் கீழே விழக் கூடாது. வேகம் தடைபடக்கூடாது." மறவர்கள் கத்தினார்கள். அந்தணர்கள் பதைபதைத்தார்கள்.

"விழுந்தால் கை, கால் நசுங்குவது மட்டுமல்ல. மரம் மூளி ஆகக் கூடாது. மிக கவனம். மிக கவனம்."

இராஜேந்திர சோழர் கோவிலின் உச்சியிலிருந்து கொடி மரம் அசைந்து வருவதை பார்த்தார்.

"எல்லோரும் ஒன்று சேர்ந்துவிட்டார்களா. இதுதான் என் விருப்பம். இதுதான் என் ஆசை. எவ்வளவு அழகாக இருக்கிறது பார்."

"கொடி மரத்தை கீழே வைக்காதே. குழியை தாண்டி போ. இப்போது கடைசி பக்கம் இருப்பவர் கைகளால் கொடியை உயரே தூக்கட்டும். அடேய் கயிறு கொண்டு வா. பரணில் பிணைந்து வை. இழு. கயிறு இழு. கீழே உட்காருங்கள். மேலே தூக்குங்கள். கயிறு இழு. கீழே உட்காருங்கள்."

கீழே உட்கார்ந்து அந்த மரத்தின் அடி பாகத்தை குழியில் நழுவவிட்டார்கள். முன்பக்கம் மேலே தூக்கினார்கள். கயிறு இழுக்கப்பட்டது. கொடி கம்பத்தை தள்ளியவாறே ஜனங்கள் முன்னேறினார்கள். கயிறு நகர்ந்தால், ஏதேனும் தவறு நேர்ந் தால் ஐம்பது, அறுபது பேர் நசுக்கப்படுவார்கள். ஆனால் மறவர் களும், பஞ்சமர்களும், வேளாளர்களும் விழுந்தால் விழட்டும் என்று மிக கவனமாக அந்த மரத்தை மேலே தூக்கினார்கள்.

மரம் நகர்ந்து தொப்பென்று உள்ளுக்குள்ளே சொருகிக் கொண்டது. 'ஓ' என்ற கூச்சல் எழுந்தது. இராஜேந்திரர் மேல் துணியை எடுத்து விசிறி பாராட்டினார். ஜனங்கள் அதற்கு எதிரொலித்தார்கள்.

இந்த கும்பாபிஷேகம் இனிதே நடைபெறும் என்பதற்கு இந்த வேலை ஒரு சாட்சியாய் இருந்தது.

ஒன்றிரண்டா, பலநூறா, ஆயிரமா, ஜனங்கள் உச்சி வெய்யிலில் பல ஊர்களிலிருந்து தாகத்தோடும், பசியோடும் வந்தார்கள். கால் கழுவ நீர் கொடுக்கப்பட்டது. நீர் தொட்டிகளில் சொம்புகள் வைக்கப்பட்டன. வந்த ஜனங்கள் நீர் குடித்தார்கள். உள்ளே வந்தார்கள். கோவிலை பார்த்து வியந்தார்கள். கோட்டையை பார்த்து வியந்தார்கள். மாளிகைக்குள்ளே எட்டி பார்த்தார்கள். பெரிய பந்தலிட்டு சோறு போடும் இடத்திற்கு வழி நடத்தப்பட்டார்கள்.

முதலில் நீர் குடி. உட்கார், உட்கார வைக்கப்பட்டார்கள். உட்கார்ந்த பிறகு மோர் தரப்பட்டது. சிறிது நேரம் பொறுத்து சாப்பிடு, என்று உபசரிக்கப்பட்டார்கள். அரை நாழிகைக்கு பிறகு எழுந்து சமையற்கூடம் போனார்கள். கதம்ப சாதமும், தயிர் சாதமும் போடப்பட்டன. உணவு முடித்து எழுந்து போகும்போது தலைக்கு ஒரு அப்பம் தரப்பட்டது. உள்ளங்கை அப்பம். உணவு முடிந்தபிறகு இனிப்பு தின்பது என்பது ஒரு சுகம். சோழதேசத்து வழக்கம். தயிர் சாதத்திற்கு பிறகு ஒரு கரண்டி பாயஸம் ஊற்றிக் கொண்டால் அது தனி சுவை.

கோட்டை திணறிற்று. இதற்கு மேல் மக்கள் வந்தால் முடியுமா என்று உதடு பிதுக்கினார்கள்.

''வேறு வழியில்லை. தினமுமா நடக்கப் போகிறது. எப்போதாவதுதானே. சமாளித்துக் கொள். உன் வீட்டில் முன் பக்கத்தில் உறங்க இடம் கொடு. பெண்டிர்க்கு உள்ளே இடம் கொடு'' என்று சொல்லப்பட்டது.

எல்லார் வீடுகளிலும் எல்லா மக்களும் புகுந்து புழங்கி னார்கள். கங்கை பானைகளை சுற்றி வந்து கண்ணில் தொட்டு ஒற்றிக்கொண்டார்கள்.

எல்லோருக்கும் கிண்டியில் ஜலம் எடுத்து உள்ளங்கை யில் ஊற்றப்பட்டது. குனிந்தால் தலையில் தெளிக்கப்பட்டது. ‘நிஜமாகவே இது கங்கை நீரா.’ ஒரு அந்தணன் கேட்டான்.

‘‘அவனை பிடித்து விலக்கி வை, இராஜேந்திரரிடம் நேரே அழைத்துப் போ. நிஜமாகவே இது கங்கை நீரா. உண்மை தானா என்று கேட்கிறான் என்று சொல்.’’

அவன் அலறினான். விடுவித்துக்கொள்ள துடித்தான். ஆனால் அழுத்தி அவனை உட்கார வைத்துவிட்டார்கள். அந்த பக்கம் அருண்மொழிபட்டன் வந்தபோது இதைச் சொன்னார்கள்.

‘‘இப்படி கேட்கலாமா, அது தவறில்லையா. அந்தணரான நீங்கள் இப்படி கேட்டால் இந்த சந்தேகம் மற்ற இனத்தவருக் கும் வந்து இப்போதே இந்த ஜலத்தை அலட்சியப்படுத்து வார்களே. இது அயோக்கியத்தனம். இப்படி கேட்கக்கூடாது. உங்களின் திருப்திக்காக சொல்கிறேன். இந்த கோவிலில் குடியிருக்கும் சிவன் சாட்சியாக, என் தந்தையின் சாட்சியாக, என் தாய்மீது ஆணையாக, என் குழந்தைகள் மீது சத்தியமாக இது கங்கை ஜலம்.’’

அருண்மொழி அமைதியாக பேசினான். அந்த அந்தண இளைஞன் அருண்மொழியின் காலில் விழுந்தான்.

‘‘ஒரு துடுக்குத்தனத்தினால் தெரியாமல் பேசிவிட்டேன். இனிமேல் அப்படி பேசமாட்டேன்.’’

‘‘நல்லது. உங்களுக்கு தண்டனை தர விரும்புகின்றேன். கோட்டை விட்டு வெளியேறி ஏரிக்கு அருகே போய் நின்று கொள்ளுங்கள். அங்கு ஜய ஸ்தம்பம் நிறுத்தப்படும். ஜல மய மான ஜயஸ்தம்பம் நிறுத்தப்படும். அதை பார்த்துவிட்டு ஊருக்கு போங்கள்.’’ அவன் அந்த கூட்டத்திலிருந்து விலக்கப் பட்டான்.

இரவும், பகலும் தேவரடியார்கள் ஆடி களைத்தார்கள். மிருதங்க முழக்கம் எங்கேயோ ஒரு பக்கம் கேட்டுக்கொண்டு இருந்தது. குழல் ஓசை வந்து கொண்டே இருந்தது. ஜனங்கள் எந்த பக்கம் ஓசை வருகிறதோ அந்த பக்கம் அலைந்தார்கள்.

ஆசையின் காரணமாக, ஜெயித்து விட்டோம் என்ற கர்வத்தின் காரணமாக கூட்டம் கொஞ்சம் அத்துமீறித்தான் இருந்தது. மறவர்கள் மிருதுவாக பேசியும், அதட்டியும் வழி நடத்தினார்கள்.

சூரியன் முற்றிலுமாய் கிழக்கு பக்கத்திலிருந்து விடு பட்டு திகிரியாய் தெரிந்தபோது இராஜேந்திர சோழர் யாகத் தின் முன்பு கை கூப்பி நின்றார். அவரிடம் பூர்ணாகுதிக்கான பட்டுத்துணி மூட்டை நீட்டப்பட்டது. அதை தொட்டு கண் ணில் ஒற்றிக் கொண்டார். அரசியர்கள் அத்தனை பேரும் கண் ணில் ஒற்றிக் கொண்டார்கள். கிருஷ்ணன் ராமனும், அருண் மொழிபட்டனும், உத்தம சோழ மிலாடுடையாரும், பாண்டியன் ஸ்ரீ வல்லபனும், அரையன் ராஜராஜனும், மற்றும் உள்ள தளபதி களும் அதை தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டார்கள்.

இது என்னுடையதில்லை. இது என்னுடையதில்லை. இது எல்லாமும் உனக்கே சொந்தம். உன்னிலிருந்து வந்ததை உமக்கே சமர்பிக்கிறேன், என்று பட்டுத்துணி மூட்டையை, மூலிகைகள் அடைந்த அந்த பையை, பொற்காசுகளும், வெள்ளியும் போடப்பட்ட அந்த பூரண மூட்டையை உயர தூக்கி, எல்லோருக்கும் காட்டி நின்ற வண்ணமே அதை அந்தணர் ஒருவர் நெருப்பில் இட்டார். சர்வ சிவ பண்டிதர் இரண்டு கையையும் தூக்கி ஆசிர்வதித்தார். நாலு பக்கமும் நெய் பெருக ஊற்றப்பட்டது. தீ கொழுந்துவிட்டு எரிந்தது. நீண்ட மரப்பட்டையை தோளில் வைத்திருக்க அந்த மரக் கட்டையின் சந்தில் நெய் ஊற்றப்பட்டது. அது யாழிபோல் இருந்த வாய் வழியாக அக்னியில் விழுந்தது. பசுநெய் வாசம் எங்கும் வீசியது. மூலிகைகள் எரிவது மூக்கை நிமிண்டியது. வெண்புகையும், கரும்புகையும் கிளறி எழுந்தன. எல்லா இடத் திலும் புகை பரவியது. அக்னி உயர எழுந்தவுடன் இராஜேந்திர

சோழரும் அவரது மனைவியும் வலம் வர, மற்ற தளபதிகளும் வலம் வந்தார்கள்.

இராஜேந்திரசோழர் கோவிலுக்கு அருகே போக அவர் தோளில் வைத்துக் கொள்ளும்படி ஒரு குடம் கொடுக்கப் பட்டது. கங்கை நீரை சுமந்து அவர் கோவில் மீது ஏறினார். பிறகு கோவில் மண்டபத்தில் உச்சியில் ஏறி நின்றார். அங்கு இருந்தே ஜனங்கள் பரவசமாவது தெரிந்தது. பிறகு விமானத் தின்மீது கட்டப்பட்ட படிகள் மீது ஏறினார். பின்னால் வந்த அருண்மொழிபட்டன் இதற்கு மேல் நீங்கள் சுமக்க வேண் டாம். என்னிடம் கொடுங்கள், என்றான். அருண்மொழிபட்ட னிடம் தவலையைக் கொடுத்தார். அவன் கைபிடித்து ஏறினார். பின்னால் அந்தணர்கள் பல தவலைகளை தூக்கிக்கொண்டு வந்தார்கள். உச்சியை அடைந்தார்கள். உறுதியாக ஒரு தளம் போடப்பட்டிருந்தது. கொம்புகளுடைய கூர்முனைகள் யாரை யும் கிழிக்காதிருக்க சகலமும் சீவி மழுமழுப்பாக இரவி வைத்திருந்தான். உச்சியிலுள்ள அந்த கலசத்திற்கு அந்தணர் துணி சுற்றினார். சந்தனம் வைத்தார். குங்குமம் இட்டார். பூமாலை சூட்டினார். பிறகு இன்னும் உயரே ஏறி அதன் உச்சி யில் கலசத்தை கவிழ்த்தார். நீர் பொங்கி வழிந்தது. கலசம் முழுவதும் நனைந்தது. இன்னும் இன்னும் இன்னும் என்று கலசம் கேட்டு வாங்கினார். கலசம் முழுவதும் நீர் நிரம்பி, தளத்தில் விழுந்து, தளத்திலிருந்து விமானத்தில் இறங்கி கீழ் வரை விரைவாகச் சென்றது. இராஜேந்திர சோழர் நீரை கையில் ஏந்தி தலையில் தெளித்துக் கொண்டார். முகம் துடைத்துக் கொண்டார். மார்பு துடைத்து சிறிதளவு குடித்தார். கீழே நிற்கும் தன்னுடைய மனைவியர்கெல்லாம் தெளித்தார். அருண்மொழி பட்டன் பொங்கி வழிகின்ற நீரில் தலை கொடுத்தான். அந்தணர்கள் தெளித்துக் கொண்டார்கள். காலி குடங்களில் பொங்கி வழிந்த நீரை பிடித்துக் கொண்டார்கள். மாவிலை யால் நாலுபக்கமும் தெளித்தார்கள். கலசத்தில் கவிழ்ந்த நீரை பிடித்த குடங்கள் கீழே இறக்கப்பட்டன. கிருஷ்ணன் ராம னுக்கு தரப்பட்டது. அரையன் ராஜனுக்கு தரப்பட்டது. மற்ற

எல்லோரும் அந்த நீரை வாங்கிக்கொண்டார்கள். ஜனங்களை நோக்கி அந்த குடங்களை வீசி நீர் தெளித்தார்கள். ஜனங்கள் முன்னே இருந்து முட்டுவதும் முன்பு கலைவதாக ஒரு அலை சுழன்று சுழன்று அடிப்பது போல ஜனக்கூட்டம் காட்சி யளித்தது.

அதேநேரம் வீரமாதேவி உள்ளே நுழைந்தாள். கிருஷ்ணன் ராமன் உள்ளே போனார். சர்வசிவ பண்டிதர் குடத்தை சுமந்து கொண்டு கருவறைக்குள் நுழைந்தார். படி ஏறினார். உள்ளுக் குள் மேடை போன்று கட்டியிருந்த இடத்தில் நன்றாக நின்று உயரதூக்கி கலசத்தை காண்பித்து 'சிவாய நமஹ' என்று சிவலிங்கத்தின் மீது ஊற்றினார். சிவலிங்கத்தின் மீது பல குடங்கள் கங்கை நீர் சரிக்கப்பட்டது. ஆவுடையாரிலிருந்து பொங்கி வழிந்த நீரையும் காலி குடங்களில் ஏற்றினார்கள்.

ஆவுடையாரை கிருஷ்ணன் ராமன் அணைத்துக் கொண் டார். சர்வசிவ பண்டிதர் கீழ் இறங்கி சகலருக்கும் அந்த நீரை பிரசாதமாக கொடுத்தார். வீரமாதேவியும் வாங்கி முகத்தில் துடைத்துக் கொண்டாள். அரசிகள் வாங்கிக் கொண்டார்கள். எல்லோரும் மாமன்னர் இராஜேந்திரரை பார்க்க வெளியே வந்தார்கள். இராஜேந்திரர் மெல்ல தள்ளாடித்தான் கீழே இறங் கினார். கீழே உள்ள ஜனங்கள் இராஜேந்திரரின் தள்ளாட் டத்தை கவனித்துக் கொண்டார்கள்.

''வாலிபம் நகர்ந்து விட்டதய்யா.'' தொலைவிலிருந்து ஒரு வேளாளன் நொந்த குரலில் பேசினான்.

''ம். வாலிபம் என்பது உடம்பிற்கா, மனதிற்கா,'' ஒரு வணிகர் பதிலுக்கு கேள்வி கேட்டார்.

''உடம்பு நன்றாக இருந்தால் தானேய்யா மனம் சரியாக இருக்கும்.''

''தவறு. மனம் துள்ளலாக இருந்தால் உடம்பு ஒத்துழைக் கும்.''

''தள்ளாடுகிறாரே.''

''எல்லாம் நன்றாக முடிய வேண்டுமே என்ற க்வலை அல்லது... வணிகர் சொல்ல, வேளாளர் வியப்போடு பார்த்தார்.''

''அல்லது?''

''அடுத்த படையெடுப்பு எப்போது என்ற சிந்தனையில் இருக்கலாம்.'' சடேரென்று வணிகரை எல்லோரும் திரும்பி பார்த்தார்கள்.

''அடுத்த படையெடுப்பா.''

''ஆமாம். இதோடு முடிந்து விட்டதா என்ன, எதற்காக இது ஆரம்பித்தது. வணிகர்களின் வேதனை தீர்க்கத்தானே. உங்களுக்கெல்லாம் மறந்து விட்டதா.''

''எங்களுக்கு மறக்கவில்லை அய்யா.'' பொருமலோடு ஒரு வணிகர் பேசினார். எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''இரண்டு உள்ளங்கைகளையும் சீவி போய் சாமி கும்பிட்டுக் கொண்டிரு. சிவலிங்கத்தை வணங்கு என்று கேலி செய்து அனுப்பினார்கள் அல்லவா அந்த பௌத்தர்கள். அதற்கு பழிக்கு பழி வாங்க வேண்டாமா. அந்த வணிகர்கள் செய்த பாவம் என்ன. அதை கேள்வி கேட்க வேண்டாமா. நம்மை நம்பி பிழைத்துக் கொண்டிருக்கிற நாடு நம்மை தண்டிப்பதா. ஸ்ரீ விஜயத்தினுடைய செல்வாக்கு நம்முடைய நாவாய்களாலே, சீனருக்கும், நமக்கும் ஏற்பட்ட பண்டமாற்றத்தாலே அல்லவா வந்தது. அவ்வளவு தொலைவு போக வேண்டாம் என்று ஸ்ரீ விஜயத்தை உபயோகப்படுத்திக் கொண்டால் அத்து மீறுகிறதே அந்த நாய்கள்.'' அவர் பேசப் பேச, அவர் குரலில் சூடு ஏறிற்று.

இன்னொரு வணிகர் அவரை திரும்பி பார்த்து, ''போதும், நல்ல நேரத்தில் நல்லது பேசுவோம். என்று நிறுத்தினார். கூட்டம் அமைதியாயிற்று. ஆனால் எல்லோருக்குள்ளும் கவலை வந்தது. அவர்கள் முன்னும், பின்னும் நடக்கும்போது தடுமாறினார்கள். மாமன்னர் இராஜேந்திர சோழரை புரிந்து கொண்டார்கள்.

அவன் தலைவன். எத்தனையோ விஷயத்தை தலையில் சுமந்து கொண்டிருக்கிற தலைவன். அவன் தள்ளாடாமல் என்ன செய்வான் என்று சமாதானம் செய்து கொண்டார்கள். கூட்டம் அலை அலையாய் ஏரியை நோக்கி போயிற்று.

★★★

அத்யாயம்

85

உறுதியான சவுக்கு கொம்புகளால் மிக உயரமாக இரவி பரண் அமைத்திருந்தான். பரணை சுற்றி ஜனங்கள் ஓடிப் போய் சாய்த்து விடக்கூடாது என்பதற்காக இரட்டை அடுக்கு வேலி அமைத்திருந்தான். இடுப்பளவு ஜலம் அந்த இடத்தில் இருந்தது. மறவர்கள் அந்த வேலியில் ஏறி நின்று காவல் காத்தார்கள்.

கோவிலுக்கு அந்தணர்கள் நீர் எடுத்துப் போனார்கள். ஆனால் இந்த இடத்திற்கு அந்தணர்கள் வரவில்லை. மாறாக தளபதிகள் குடம் தூக்கினார்கள். வேளாளர்களும், வணிகர்களும், பஞ்சமர்களும் தூக்கினார்கள். கருமார்களும், தச்சர்களும் தனியாக ஒரு வரிசையில் வந்தார்கள். சிற்பிகளுக்கு இன்னும் சிறப்பான ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. வரிசை வரிசையாய் குடங்கள் ஏரிக்குள் இறங்கின. இடுப்பளவு நீரில் நகர்ந்தன. பரண் ஏறின.

''இந்த பக்கத்தில் ஏறி நீர் கொட்டி விட்டு காலி குடத்தை கீழே இறக்கி விட்டு அந்த பக்கம் இறங்கி விடுங்கள். அப்பொழுது தான் சரியாக இருக்கும். ஒட்டுமொத்தமாக எல்லோரும் மேலே ஏறினால் பரண் தாங்குமோ, தாங்காதோ தெரியாது.'' இரவி உத்தரவிட்டான். அவர்கள் புரிந்து கொண்டார்கள். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஏறினார்கள். மேலே போனார்கள்.

பெரிய புனல் ஒன்று தாமிரத்தில் செய்யப்பட்டிருந்தது. இடுப்பு உயரத்தில் இருந்தது. தோளில் உள்ள குடத்தை

சாய்த்தால் போதும் புனலுக்கு போய்விடும். புனலுக்கு கீழே திருகு வைக்கப்பட்டிருந்தது. அந்த திருகு நீரை தேக்கி வைத்தது. பெரும் புனல் நிறைய மரை திறக்கப்படும். கிட்டத் தட்ட இருபது தவலைகளில் தான் புனல் நிரம்பியது. இன்னும் பத்து விட்டவுடன் தளும்பி நின்றது. புனல் நிரம்பிவிட்டது என்று இரவி சைகை செய்தான். இராஜேந்திர சோழர் கை உயர்த்தினார்.

இரவி எக்காளம் ஊதினான். கீழே இருந்த சிற்பி திருகை திருகி தண்ணீரை வழிய விட்டான். தண்ணீர் வெகு வேகமாக கீழே இறங்கி ஒரு தூண் போல நின்றது. மேலும் மேலும் அவர்கள் சாய்த்தார்கள். நீரை சாய்த்தவர்கள் கீழ் இறங்கினார் கள். புதிதாக வந்தவர்கள் நீரை சாய்த்தார்கள். புனல் சிறிதள வும் குறையாதபடிக்கு வேக வேகமாக நீர் ஊற்றப்பட்டது. காலி குடங்கள் வீசி எறியப்பட்டன. தண்ணீரில் விழுந்தன. அவைகளை ஜனங்கள் எடுத்துக்கொண்டு ஓரமாக வைத்தார் கள். நூறு நொடிக்கும் மேலாக ஒரு பெரிய தூண் நீர் தூண் அந்த ஏரியில் இருந்தது. அந்த கம்புகளுக்கு ஊடே நீர் நிரம் பியது தெரிந்தது. கை கூப்பியபடியே இராஜேந்திரர் இருந்தார்.

''அப்பா, அப்பா, மாமன்னா, இராஜராஜா, உனக்கு பார்க்க முடிகிறதா, உன்னால் உணர முடிகிறதா. உன்னால் இந்த நீர்த் தூணை காண முடிகிறதா. அனுபவிக்க முடிகிறதா, ஐயனே, என் அப்பனே, என் ராஜனே, இது உனக்காக நான் செய்தது. இது நான் கையில் ஊற்றாது, ஒரு புனலில் ஊற்றி உனக்கு விட்ட தர்ப்பணம் இது. திருப்தி யத திருப்தி யத திருப்தி யத. எத்தனை பேர் இறந்து போயிருக்கிறார்கள். எத்தனை களிறு கள், எருதுகள், குதிரைகள் மாண்டிருக்கின்றன. எல்லோருக் கும் இந்த நீரை என் கட்டை விரல் மறித்து ஊற்றும் நீராக அவர் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு வார்க்கிறேன். திருப்தி யத திருப்தி யத திருப்தி யத. அவர் கதறினார். ஜனங்கள் விம்மி விம்மி அழுதார்கள். இளவரசிகள் முகத்தை பொத்திக் கொண்டார்கள். மறுபடியும் பரவசமாக நீர் தூணை பார்த்

தார்கள். அரச குடும்பத்தினர் 'சிவாய நமஹ' என்று அறற்றினார் கள்.

''இந்த ஏரிக்கு பெயர் சோழ கங்கம்.'' சர்வசிவ பண்டிதர் உரக்க கத்தினார். அந்த பெயர் இராஜேந்திரருக்கு பிடித்திருந் தது.

''ஆமாம். இது சோழ கங்கம். சோழர்கள் ஏற்படுத்திய கங்கை ஆறு. கங்கை ஏரி,'' என்று உரக்க சொல்ல, எல்லோரும் அதை பரிமாறிக் கொண்டார்கள்.

'சோழ கங்கம் சோழ கங்கம் சோழ கங்கம்' என்ற பெயர் எல்லா பக்கங்களிலும் எதிரொலித்தது. நீர் சொட்டு சொட்டாக இறங்கியது.

நீர் சுமந்தவர்கள் வெளியேறிய பிறகு ஜனங்கள் பிசாசாக உள்ளே நுழைந்தார்கள். நீரில் முங்கி முங்கி குளித்தார்கள். எடுத்து தலையில் தெளித்துக் கொண்டார்கள். சொம்பில் எடுத்துக் கொண்டார்கள். துணியில் நனைத்து தோளில் போட்டுக் கொண்டார்கள். முகம் துடைத்துக் கொண்டார்கள். அவர்கள் பரணில் ஏற அனுமதிக்கப்படவில்லை. கீழே உள்ள நீரை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். எல்லோரும் வீடு களுக்கும், கோவில்களுக்கும் அந்த நீரை மொண்டுக் கொண்டார்கள். கரை ஏறினார்கள்.

இராஜேந்திரர் மெல்ல நடந்து தேர் வேண்டும் என்று கேட்டார். தேரில் ஏறி அமர்ந்து கொண்டார். அவருடைய நான்கு மனைவியரும் தேரில் அமர்ந்து கொண்டார்கள். வீர மாதேவியின் கையை இறுக பிடித்துக் கொண்டார்.

''என்னமோ ஒரு நிம்மதி. வீரமாதேவி, போதும் என்று தோன்றுகிறது. இறந்து போய்விடலாம் என்று தோன்றுகிறது. இத்தோடு என் வேலை முடிந்துவிட்டது என்று தோன்றுகிறது. வீரமாதேவி, நான் செயற்கரிய விஷயத்தை செய்ததாய் நினைக்கவில்லை. ஆனால் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்துவிட்டேன். எல்லா மனிதருக்கும் தான் செய்ய

வேண்டிய விஷயத்தை செய்து முடித்த திருப்தி வருமா. எனக்கு வந்துவிட்டது. வீட்டிற்கு போய் நீட்டி படுத்துக் கொண்டு நீ பக்கத்தில் இருந்து விசிறும்போது என் உயிர் பிரிய வேண்டும். நான் அடங்க வேண்டும். எனக்கு போதும் வீரமாதேவி.''வீரமாதேவி பதில் சொல்லவில்லை. பரவை பேச ஆரம்பிக்கும்போது வீரமாதேவி அடக்கினாள்.

''அவர் பேசட்டும் விடு. அறற்றிக் கொள்ளட்டும் விடு. பேசி தீர்த்துக் கொள்ளட்டும் விடு. அவருக்கு இப்போதைக்கு மரணம் இல்லை. திரும்ப சொல்கிறேன். எண்பத்திரண்டு வயது. அவர் கடல் கடந்து போய் ஜெயித்து வருவார். ஒன்றும் பதட்டப்படாதீர்கள். ஒரு விஷயத்தை முடித்த சந்தோஷம் துக்கமாக வெளிவருகிறது. வெண்ணெய் காய்ச்சி நெய் எடுக்கும்போது கீழே கசண்டு இருக்குமல்லவா. கொஞ்சம் உப்பாக இருக்குமல்லவா. அப்படி இருக்கிறது. மற்றப்டிக்கு அவர் சந்தோஷமாக இருக்கிறார் என்றுதான் அர்த்தம்'' என்று அவர்களிடம் சொல்ல, அவர்கள் சிரித்தார்கள். அரசரை தழுவிக் கொண்டார்கள். அரசரை தழுவியபடி அவர் மனைவி கள் போவதை ஜனங்கள் பார்த்து குதூகலித்தார்கள்.

அரண்மனைக்குள் நுழைந்து கட்டிலில் இராஜேந்திர சோழர் படுத்துக் கொண்டார். அவரை மெல்ல எழுப்பி உட்கார வைத்தாள்.

''இப்பொழுது தூங்க முடியாது. இப்படி படுப்பதும் நல்ல தல்ல. நிமிர்ந்து உட்காருங்கள். வெற்றிலை தாம்பூலம் போடுங் கள். மாலை வீரர்களுக்கு பல்வேறு பட்டங்களும், பரிசுகளும் தரப் போகிறீர்கள் அல்லவா. எனவே, கொஞ்சம் சாய்ந்தபடி ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.''

வணிகர்களும், மறவர்களும், வேளாளர்களும் மற்றும் எல்லா ஜாதியினரும் கங்கை சொம்பை எடுத்து வீட்டிற்கு போனார்கள். வீட்டில் உள்ள விக்ரஹங்களுக்கு அபிஷேகம் செய்தார்கள். வில்வ மரத்திற்கு ஊற்றினார்கள். துளசி செடிக்கு

தெளித்தார்கள். கோவிலில் உள்ள எல்லா சிலைகளின் மீதும் கங்கை நீர் பொழியப்பட்டது.

மாட்டு வண்டிகளில் தவலைகள் வைத்து அவரவர் தங்கள் ஊர்களுக்கு ஊர் கோவில்களுக்கு ஊரில் தங்கியிருக்கும் மக்களுக்கு எடுத்துப்போக அனுமதிக்கப்பட்டார்கள்.

வெய்யில் தாழ்ந்த நேரத்தில் மறுபடியும் அரசவை கூடியது.

''இந்த வெற்றியை கொண்டாடும் வண்ணம் எனக்கு பேருதவி செய்த சகலருக்கும் நான் பட்டங்களும், பரிசுகளும் அளிக்க விரும்புகிறேன். இந்த படையெடுப்புக்கு முக்கிய காரணமாக இருந்த எனக்கு மூத்தவரான, என் தந்தைக்கு பிரியமானவரான, என்னுடைய சேனாதிபதியான அமண்குடி தேசத்து கிருஷ்ணன் ராமன் பிரம்மராயருக்கு இந்த பொற்கிழியை பரிசாக அளித்து, மாதண்ட நாயகர் என்ற பட்டத்தையும் அளிக்கிறேன்.''

கிருஷ்ணன் ராமன் திடுக்கிட்டார்.

''நான் தஞ்சையை தாண்டவே இல்லையே, இப்பொழுது தானே உன்னுடைய ஊரையே பார்க்கிறேன்'', எழுந்து நின்று இராஜேந்திரரை வினவினார்.

''நீங்கள் இல்லாது இது நடந்திருக்குமா. நீங்கள் தஞ்சையில் இருக்கிறீர்கள் என்பதால் தான் நான் வடக்கே போனேன். எனக்கு முதுகெலும்பு நீங்கள். உங்களுக்குத்தான் முதல் பரிசு'', அவர் கொம்பு ஊன்றி தள்ளாடி வந்தார். இராஜேந்திர சோழர் கீழே இறங்கினார். வீரமாதேவியும் அருகே வந்தாள். இரண்டு பேரும் பொன் மூட்டையை எடுத்து அவர் கையில் கொடுத்தார்கள். அதை அவரால் சுமக்க முடியவில்லை. அந்த மூட்டையை வீரமாதேவி வாங்கிக் கொண்டாள். அவள் தன் தோளில் வைத்துக் கொண்டாள். அவர் கை பிடித்து அவரின் ஆசனத்திற்கு வந்து, அவரின் காலின் கீழ் பொன் மூட்டையை வைத்து விழுந்து நமஸ்கரித்தாள்.

''தீர்க்க சுமங்கலி பவ. உரத்த குரலில் முழு மனதுடன் கிருஷ்ணன் ராமன் ஆசீர்வதித்தார்.

''என்னுடைய கட்டளையை ஏற்று பாண்டிய தேசத்தை கண்ணும் கருத்துமாய் கவனித்த என்னுடைய மகன் சுந்தர சோழ பாண்டியனுக்கு மாதண்ட நாயகன் என்ற பட்டம் அளித்து, அவனுக்கான தனித்த கேயூரங்களையும், தனித்த முத்திரை மோதிரங்களையும் அமைத்துக்கொள்ள அனுமதிக் கிறேன்.

சுந்தர சோழ பாண்டியன் இல்லாவிட்டால் என்னால் நிம்மதியாக வடக்கே போயிருக்க முடியாது. என் மகனுக்கு என் நன்றிகள். என் மனப்பூர்வமான ஆசிகள்.''

சபை சிலிர்த்தது. கண்களில் நீர் வழிய சுந்தர சோழன் எழுந்து கைகூப்பினான். அருகே போய் அவர் முழங்காலை கட்டிக்கொண்டு முத்தமிட்டான்.

''அது மட்டுமல்லாது என் தந்தையார் உபயோகப்படுத் திய அவர் வாளை அவனுக்கு பரிசாக தருகிறேன்.'' பட்டுத் துணியில் சுற்றப்பட்ட பெரும் பிடி உள்ள நீண்ட வாள் அவ னுக்கு தரப்பட்டது.

''அரையன் ராஜராஜன்'' அவர் அழைக்க சபை ஆர வாரித்தது.

''இந்த வெற்றியின் நாயகன். கங்கை கரையிலிருந்து நீர் கொண்டு வந்ததற்கு ஒரே காரணகர்த்தா. அவருக்கு 'நால்மடி வீமன்' என்ற பட்டம் கொடுத்து, 'ஜெயசிம்ம குலகாலன்' என்ற இன்னொரு பட்டமும் அளித்து அவர் சுகமே வாழ, பெரும் நிதியும் தருகிறேன்.'' வந்து வணங்கி வாங்கிப் போனார்.

''அருண்மொழிபட்டன். நேரே போய் கங்கையை தாக்க வேண்டியதுதான் என்று நான் திட்டம் வைத்திருக்க, மிகப் பெரிய வங்கம் என்ற நாவாய்களை சம்பாதித்து அவைகள் மூலம் உத்திரலாடம் போய், பிரம்மபுத்ரா கரையிலிருந்து தலை களை சீவிக் கொண்டு, கங்கையை அடைந்து கங்கையி

னுடைய தெற்கு கரையில் ஏறி அரையனுக்கும், தனக்கும் இடையே மஹிபாலனை சிக்க வைத்த அந்த மிகச் சிறந்த யுத்த தந்திரத்திற்காக, அருண்மொழிக்கு சோழ தேசத்துக்கு தலைமை சேனாதிபதி என்று பதவி தருகிறேன். அவர் அரயன் அல்ல. பேராயன்.

கிரீடம் அணிந்து கொள்ளவும், ரத்ன ஆரம் அணிந்து கொள்ளவும், கற்கள் பதித்த கேயூரங்கள் அணிந்து கொள்ள வும் அவருக்கு உரிமை அளிக்கிறேன். தனித்த முத்திரை மோதிர மும் அருண்மொழிக்கு தரப்படும்.

அடுத்தது என் மனதுக்கு இனிய ஒருவருக்கு பட்டம் அளிக்க விரும்புகின்றேன். என்னுடைய மனைவி மறவர்குலக் கொடி வீரமாதேவிக்கு 'தளபதி' என்ற பட்டமும் தனித்த தலைப் பாகையும், கேயூரமும், நான் உபயோகப்படுத்திய சாளுக் கியத்தை துண்டாடிய என் வாளையும் பரிசாக அளிக்கிறேன். இப்போது என்னிடம் இருப்பது மஹிபாலன் வாள். அதையே என் வெற்றியின் சின்னமாக அணிகிறேன்.

வீரமாதேவி, இங்கே வா.'' கூட்டம் உரக்க கத்தியது.

வீரமாதேவி, ''எனக்கு எதற்கு இது'' என்று கைவிரித்தாள். ''ம்'' ஒரு மிரட்டல் தொனி வந்தது. அவள் முன்னேறினாள். அவள் கழுத்தில் ரத்ன ஆரம் மாட்டப்பட்டது. தலையில் கிரீடம் வைக்கப்பட்டது.

தன் தேர்படையால் எதிரிகளை கலங்கடித்த பாண்டியன் ஸ்ரீ வல்லபனுக்கு, உதய திவாகரனுக்கு, யானைகளோடு மலை ஏறிய புவனராஜனுக்கு, முதன் முதலில் கங்கையில் கால் வைத்த சோழப் பெருவீரன் என்கிற உத்தம சோழ மூவேந்த வேளானுக்கு, நீலன் வெண்காடனுக்கு, சாகசமாக நாவாய்கள் ஓட்டிய, இன்னும் பல நாவாய்களை ஓட்டப்போகிற குட்டன் கணவதிக்கு, அவரது நண்பர் சிவ ஸ்வாமிக்கு, மாணிக்க வாசகத்திற்கு, கருமாணிக்கத்திற்கு, தொண்டை மண்டலத்தில் நமது படைகள் தங்கவும், தொடர்ந்து உணவு, தானியம் அனுப்பி நம்மை வயிறு வாடாது செய்த அற்புதமான தலைவர்

மயிலை, திருவல்லிக்கேணி தலைவர் சீராளனுக்கு... பரிசு கள் தொடர்ந்து வழங்கிக் கொண்டே இருந்தார். கூட்டம் அலை மோதியது.

நூற்றுக்கணக்கான தேவரடியார்கள் கையில் கொழுந்து விட்டு எரியும் தீப்பந்தங்களோடு அந்தி சாயும் நேரத்தில் அரசவைக்குள் ஓடி வந்தார்கள். தாளங்கள் முழங்க, குழல்கள் ஊத, பறைகள் சரியாக ஒலிக்க, ஒரே தாளகதியில் அவர்கள் இராஜேந்திரருக்கும், அரசிகளுக்கும், மறவர்களுக்கும், மற்றும் உள்ள ஜனங்களுக்கும் தீப்பந்தத்தை சுழற்றி சுழற்றி மேலே கீழே இறக்கி திருஷ்டி கழித்தார்கள். அதே வேகத்தோடு வெளியே ஓடினார்கள். அரண்மனை வாசலில் வைக்கப்பட் டிருந்த பெரிய கற்பூரக் கட்டியின் மீது, அந்த தீப்பந்தத்தை எறிந்தார்கள். குபீர் என்று தீப்பந்தங்கள் ஒன்றாக எரிந்தன. நெய் ஊற்றப்பட்டது. குங்கிலியம் தூவப்பட்டது. திகுதிகு வென்று தீ இரண்டு ஆள் உயரத்திற்கு எரிந்தது.

''திருஷ்டி போயிற்று. திருஷ்டி போயிற்று. கண்ணேறு கழிந்தது. கண்ணேறு கழிந்தது'', என்று ஜனங்கள் கூவினார்கள். குலவையிட்டார்கள். தேவரடியார்கள் நாலாபக்கமும் பிரிய ஜனங்கள் அவர்களை பின்தொடர்ந்து போனார்கள்.

ஒரு இடத்தில் இராஜராஜர் சரிதம் இருந்தது. இன்னொரு இடத்தில் அடியார்களுடைய கதைகளை நாடகமாக போட் டார்கள். இன்னொரு இடத்தில் நகைச்சுவை நாடகம் நடந்தது. வெகுநாள் கழித்து வீட்டிற்கு வந்த சோழ வீரன் முட்ட முட்ட குடித்துவிட்டு, மனைவியை தேடுவதான நாடகம் அது. தூணில் துணி சுற்றியிருக்க அதை கொஞ்சிக் கொள்வதும், அதன் எதிரே வேட்டியை தளரவிட்டு நிற்பதும் ஜனங்களுக்கு பெரும் சிரிப்பை கொடுத்தன. வசனங்கள் கொஞ்சம் ஆபாச மாக இருந்தன. 'அது வெறும் தூணடா. என் மகள் அல்ல', என்று மாமியார் சொல்ல, 'இல்லை. நீதான் என் மனைவி', என்று மாமியாரை துரத்த, 'அய்யோ மாட்டிக் கொண்டேனே' என்று அவள் அலற, அவளுடைய புருஷன், 'வேண்டுமென்றே தானே போனாய். அவனிடமிருந்து தங்கச் சங்கிலி வாங்கு

வதற்காக தடுப்பது போல போனாய்', என்று புருஷன் சொல்ல, ஜனங்கள் எகிறி விழுந்து, புரண்டு சிரித்தார்கள். தங்களை தாங்களே கேலி செய்யும் நாடகம் இது.

கோட்டை வாயிலில் சடாமுடியோடு ஒரு மெல்லிய உருவம் வந்து நின்றது. வயதாகி இருந்தாலும் நடையில் உறுதி இருந்தது. பட்டினி கிடந்தது போல் தோன்றினாலும் கண்கள் பளபளத்தன.

''யாரது'' என்று வீரர்கள் மறித்து கேட்க,

''எனக்கு சோழதேசம் தானப்பா. இராஜராஜருடைய காலத்தில் அவருக்கு அருகே பணிபுரிந்திருந்தேன்.''

''அப்படியா, வாரும். வாரும். இடையிலே உங்களை காணோமே.''

''ஆமாம். என்னுடைய சொந்த ஊருக்கு போயிருந்தேன். சில மலைகளின் உச்சியில் தவம் செய்து கொண்டிருந்தேன்.''

''பெயர் சொல்லக்கூடாதா.''

''மன்னருக்கு தெரியும். வேண்டும் என்றால் நீ பெயர் கேட்டாய். நான் சொல்ல மறுத்தேன் என்று அவரிடம் சொல்கிறேன்.''

''இல்லை. உங்களை பார்த்தால் மதிப்பாக இருக்கிறது. உள்ளே போங்கள்.''

அரண்மனை வாசலில் அவர் நின்றார். கைகூப்பி தேவாரம் பாடினார். இராஜேந்திர சோழரின் மெய்க்காவலர்கள் உற்று பார்த்தார்கள். ''உங்களை பார்த்திருக்கிறேன்'', என்று ஒரு வயதானவர் சொன்னார்.

''ஆமாம். நீயும், நானும் ஒரே இடத்தில் உட்கார்ந்து உணவு உண்டிருக்கிறோம்.''

''நீங்கள்தான் எனக்கு உணவு கொடுத்தீர்கள், மிகவும் சுவையாக இருந்தது. என் உடல் நோய் தீர்ந்துவிட்டது.''

"அப்படியா. முற்றிலும் தீர்ந்துவிட்டதா."

"ஆமாம். முதுகில் வலி. அந்த வலி தலை வரை பரவும். நீங்கள் உணவு கொடுத்த பிறகு ஒரு தொந்தரவும் இல்லை. நீங்கள் கொடுத்தது இத்தனைக்கும் பாகற்காய் சோறு."

"பாகற்காய் என்றால் கேவலமா. மிகப் பெரிய மருந்தய்யா அது."

"நீங்கள் யார். தொண்டை வரை நிற்கிறது. பெயர் வர வில்லை. நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்."

"எல்லோரும் கருவிலிருந்துதானேப்பா வருகிறார்கள்."

"ஹா." அவன் பேயாய் கத்தினான்.

"நீங்கள் கருவூர்தேவர். கருவூர்தேவர்." உரக்க கத்தி னான். அவர் வாய்விட்டு சிரித்தார். அவன் உள்ளே ஓடினான். இராஜேந்திரரின் அரண்மனை கூடத்தில் நின்று,

"மாமன்னா, கருவூர்தேவர் வந்திருக்கிறார்" என்று உரக்க கத்தினான். அறைக்குள் இருந்த மன்னருக்கு கேட்டது. அவர் உடைகளை சரிசெய்து கொண்டு வேகமாக கீழ் இறங் கினார். கூடத்திற்கு வந்தார். "எங்கே" என்று கேட்டார்.

அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் அந்த உருவம் அவரை நோக்கி நகர்ந்து வந்து கைகூப்பியது. இராஜேந்திர சோழர் பாய்ந்து ஓடினார். படிகளில் இறங்கினார். நெடுஞ்சாண் கிடையாக காலில் விழுந்து அந்த கால்களை பற்றிக் கொண் டார்.

"எங்கு இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. நீங்கள் இல்லாமல் இந்த கோவில் கும்பாபிஷேகம் நடந்துவிட்டது. இருக்கும் இடம் சொல்லக்கூடாதா. கேள்விப்பட்டு வந்திருக்கக் கூடாதா. வந்த பிறகு என்னை பார்த்திருக்கக்கூடாதா."

"அடேய். நாம் எல்லாம் பார்த்தோம். கும்பாபிஷேகம் பார்த்தோம். கங்கை தூணை பார்த்தோம். உன்னை பார்த்தோம். உன் மனைவியரைப் பார்த்தோம். கோவில் விமானம் ஏறி ஒவ்வொரு கல்லாக பார்த்தோம்.

அற்புதம். அற்புதம். காலத்தால் அழியாத ஒரு ஓவியம். அற்புதமான கலை படைப்பு. நித்த வினோதப் பெருந்தச்சன் வாழ்க. இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை செய்ய வேண்டு மென்று அவனை தூண்டிய உன் புகழ் வாழ்க. உன் செல்வம் வாழ்க. உன் குலம் வாழ்க.'' அவர் உரக்க கூவினார். இராஜேந் திர சோழர் அவரின் கைகளை பிடித்துக் கொண்டார். இருவரும் படி ஏறினார்கள்.

''இப்பொழுதாவது என்னை பார்க்க வேண்டும் என்று தோன்றியதே.'' அரசியர்கள் ஓடி வந்தார்கள். அரையன் ராஜ ராஜனும், அருண்மொழிபட்டனும் ஓடிவந்தார்கள். விழுந்து வணங்கினார்கள். திருநீறு தட்டில் குவித்து வைக்கப்பட்டது. எல்லோருக்கும் அவர் திருநீறு இட்டார். நடுநாயகமாக உட் கார்ந்தார்.

''உன்னுடைய கோவிலுக்கு ''கங்கை கொண்ட சோழீஸ் வரம்'' என்று பெயர் இட்டிருக்கிறாயா. எழுதப்பட்டிருந்தது. படித்தேன். சோழீஸ்வரம். சோழர்களின் ஈஸ்வரன். என்ன கொண்டவன்? கங்கை கொண்டவன். கங்கை கொண்டவன் யார்? சிவன். சிவன் கங்கையை கொண்டு வந்தது போல, தன் சிகையில் கொண்டு வந்தது போல நீயும் கொண் டிருக்கிறாய். மன்னர்கள் தலையில் ஏற்றி இங்கு கொண்டு வந்திருக்கிறாய். நீ கங்கை கொண்டவன். உன்னுடைய ஊர் சோழம். இந்த சோழத்தின் ஈஸ்வரன். கங்கை கொண்ட இராஜேந்திரனுடைய சோழத்து ஈஸ்வரன். அடாடா. என்ன அழகான பெயர்.

அந்த ஏரி மிக அற்புதம். மிகப் பெரிய விளைச்சலை அது சோழ தேசத்திற்கு தரப் போகிறது. சோழ கங்கம். சரியான பெயர். சர்வசிவ பண்டிதர் உன்னிடம் இருக்கும்வரை உனக்கு எந்த குறையும் இல்லை.

வீரமாதேவி, அருகே வா. பல துன்பங்களை சந்தித்து விட்டாய் குழந்தாய். அத்தனையும் மீறி அவனுக்கு துணை யாக நிற்கிறாய். உனக்கு என் ஆசீர்வாதங்கள்.''

மூன்று சிட்டிகை விபூதி எடுத்து அவள் தலையில் தெளித்தார். தலைமயிர் வெளுத்தது.

"அடேய், கிழவிபோல் இருக்கிறாய். கிழவியாகும் வரை இரு", என்று மறுபடியும் அவள் தலையை தடவினார்.

வீரமாதேவி விம்மினாள். அவர் முழங்காலில் நெற்றியை வைத்து வணங்கினாள். எல்லா அரசிகளும் கண் கலங்கி னார்கள். இராஜேந்திரர் வியப்போடு அவரை பார்த்தார்.

"இங்கேயே இருந்து விடுங்களேன்."

"என்னைப்போல் ஒரு சித்தன் அல்லது பித்தன் ஒரு இடத்தில் இருக்கக்கூடாது. அது அந்த இடத்திற்கு நல்லதல்ல. எனவே, என்னை போக அனுமதி. போவதற்கு முன்பு எல்லோ ருக்கும் பரிசு கொடுத்த இராஜேந்திரனுக்கு நான் ஒரு பரிசு கொடுக்க ஆசைப்படுகிறேன்."

ஜனங்கள் ஆவலானார்கள்.

"கங்கை கொண்ட சோழீஸ்வரருக்கு முன்பு உட்கார்ந்து பதிகம் எழுதினேன். பத்து பாடல்கள் இயற்றினேன். பாடட் டுமா." அனுமதி கேட்டார்.

எழுந்து நின்று இராஜேந்திரர் வணங்கினார்.

அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையான் விரும்பி யென்மனம் புகுந்த
எளிமையை யென்றும் நான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவெனா மிருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! யமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சுரத் தானே!

உண்ணெகிழ்ந் துடலநெக்குமுக் கண்ணா!
ஓலமென் றோலமிட் டொருநாள்

மண்ணினின் றலறேன் வழிமொழி மாலை
மழலையர் சிலம்படி முடிமேல்
பண்ணிநின் றுருகேன் பணிசெயே னெனினும்
பாவியென் ஆவியுள் புகுந்தென்
கண்ணிநின் றகலா னென்கொலோ? கங்கை
கொண்டசோ ளேச்சுரத் தானே!

பாட்டு உருக்கிற்று. உனக்காக எந்த உதவியும் செய்ய வில்லை. உனக்காக நான் எந்த பணியும் செய்யவில்லை. ஆனாலும் மிகப் பெரியவனான நீ இந்த சிறியேனை மதித்து எனக்குள் புகுந்தாயே. இது எவ்விதம் நடந்தது என்று கதறு கின்ற வேதனையை அந்த் பாட்டு சொல்லியது. சிவன் என்ற பிரம்மாண்டத்திற்கு முன்பு நாங்கள் செய்தது எதுவுமே இல்லை என்று சொல்லுகிற வண்ணமாய் அந்த பாட்டு இருந்தது. அதே நேரம் இராஜேந்திரரும் கருவூரார் உதவியாக இல்லை எனினும் சகலமும் நன்கு நடந்திருக்கிறது என்பதாக வும் அர்த்தம் ஆயிற்று.

ஆனால் இராஜேந்திர சோழர், தான் ஒன்றும் செய்ய வில்லை. தன்னால் இது ஆகவில்லை என்பதை தெளிவுபட புரிந்துகொண்டார்.

கருவூர்தேவர் ஒரு சொம்பு பால் அருந்தினார். இராஜேந்திர சோழருக்கு அருகே வந்தார்.

''உடல் நலம் சரியில்லை என்று கேள்விப்பட்டேன். நீ படி இறங்கியதையும் பார்த்தேன். கழுத்து, முதுகு, இடுப்பு மூன்று இடமும் ஆடத் துவங்கிவிட்டது. குறிப்பாக குதிரை யில் அவ்வளவு தொலைவு போய் உன் இடுப்பு நெகிழ்ந்து விட்டது. அதனால் கால்களில் வலிவு குறைந்துவிட்டது. கால்கள் கொஞ்சம் சூம்பி விட்டது. அதனால்தான் தடுமாறு கிறாய். யாரையாவது பிடித்துக் கொண்டு நிற்கின்ற ஒரு பாவனை உனக்கு வந்துவிட்டது. இப்படியே விட்டால் இது சரியாக வராது. உன் இடுப்புக்கு எண்ணெய் அனுப்புகிறேன்.

உள்ளுக்குள் சாப்பிட குளிகைகள் தருகிறேன். இப்போதைக்கு நீ நன்றாக தூங்க, திடமாக இருக்க ஒரு விபூதியை மந்திரித்து தருகிறேன்.

வீரமாதேவி, இதோ, இந்த பையில் இருக்கிற விபூதியை தினமும் இவர் கழுத்தில் தடவு. சுறுசுறுப்பாவார். சிந்தை குளிர்ந் திருக்கும். மற்ற விஷயங்களை நான் தொடர்ந்து செய்து கொண்டிருப்பேன். நான் எங்கிருக்கிறேன் என்று தேட வேண் டாம். எங்கிருந்தாலும் என் மனம் இங்குதான் இருக்கும். வாழ்க சோழம். வாழ்க சிவம்'' என்று சொல்லி படியிறங்கினார். அவரை இராஜேந்திரர் பின் தொடர, 'நில்' என்று கையமர்த்தினார். படியை விட்டு நகர்ந்து அரண்மனை கதவு தாண்டி, ஜனங்கள் அலை அலையாய் போகின்ற கூட்டத்தில் தானும் கலந்தார்.

அவர் அப்படித்தான். எல்லா சித்தர்களும் அப்படித்தான். தான் இன்னார், தனக்கு இன்னது தெரியும் என்று அவர்கள் ஒருபொழுதும் எவருக்கும் சொன்னதே இல்லை. வருவார்கள், பேசுவார்கள், ஏதேனும் செய்வார்கள். விடைபெறுவார்கள்.

அந்த விபூதி என்ன மந்திரம் செய்ததோ தெரியவில்லை. இராஜேந்திர சோழர் நாடகங்கள் எதுவும் பாராது, பாட்டுகள் எதுவும் கேட்காது வெறுமே படுத்தார். உறங்கிப் போனார். அரசி மார்கள் கால் பிடித்து விட்டார்கள். சேடிகள் விசிறினார்கள்.

தொலைதூரத்தில் குழல் ஒலியும், பறை ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தது. ஜனங்கள் நகருவது தீப்பந்தத்தின் வெளிச் சத்தில் தெரிந்தது. விமானத்திலெல்லாம் விளக்குகள் ஏற்றப் பட்டு இருப்பதும், தொடர்ந்து எரிய வைக்கும் முயற்சியும் காண முடிந்தது. எங்கும் பூக்கள் வாசனையும், நெய் வாசனையும், மூலிகை வாசனையும் வீசின. உணவுக் கூடங்களில் சப்தம் வந்து கொண்டிருந்தது. மெல்ல, மெல்ல நகரத்தில் உள்ள சப்தங்கள் அடங்கின.

அரண்மனைக்கு அருகே அதிகம் சப்தம் எழாவண்ணம் பிரம்புகள் வீசி, ஜனங்களை கலைத்து அமைதி ஏற்படுத்தி னார்கள். மன்னருக்கு நெருக்கத்தில் வீரமாதேவி படுத்துக்

கொண்டிருந்தாள். மறுபக்கம் பரவை இருந்தாள். தலைமுடியில் சிறிது எண்ணெய் தடவி, அது நெற்றியில் படாதவண்ணம் ஒரு சேடி உதவி செய்தாள். தொடர்ந்து விசிறினாள். அவருக்கு குளிருவது போல் தோன்றியதும் ஒரு விசிறி நிறுத்தப்பட்டது. மெல்லிய போர்வை போர்த்தப்பட்டது. அவர் ஆழத் தூங்கினார். காற்று குளிர்ந்தது. இனி விசிறி வேண்டாம் என்று வீரமாதேவி கையமர்த்தினார். சேடிகள் வெளியே போய் அங்குள்ள படுக்கைகளில் படுத்துக் கொண்டார்கள்.

பரவை சிறிது வாய் பிளந்து, கால் பரத்து கடும் உறக்கத்தில் இருந்தாள். நடுநிசி தாண்டி முதல் ஜாமம் ஆரம்பிக்கும் நேரத்தில் இராஜேந்திர சோழர் சட்டென்று கண் விழித்தார்.

'சோழேஸ்வரத்தானே, சோழேஸ்வரத்தானே', என்று வாய்க்குள் முனகினார். 'பெருவுடையாரே' என்று கைகூப்பினார். எழுந்து உட்கார்ந்தார். எழுந்து பின்பக்கம் போய் வயிறை காலி செய்து கொண்டார். கை அலம்பி, மேல் துண்டால் முகம் துடைத்து, திருநீறு இட்டுக் கொண்டார். வந்து கட்டிலுக்கு வரும்போது வீரமாதேவி வேறு பக்கம் போய் அதேமாதிரி கை துடைத்துக் கொண்டு வருவது தெரிந்தது.

''என்ன தூங்கவில்லைய்யா.''

''தூங்கிக் கொண்டுதான் இருந்தேன். நீங்கள் அசைவது தெரிந்து நானும் எழுந்துவிட்டேன்.''

''அடாடா. உன் பக்கத்தில் ஒருவர் அசையவே கூடாதா. சட்டென்று தூக்கம் கலையுமா.''

''அது அல்ல. உங்கள் அசைவு என்னை அசைத்துவிடும். அதுதான் காரணம்.''

''வீரமாதேவி தூங்கியது போதும் என்று தோன்றுகிறது.''

''போதும் என்றால் போதும். வாருங்கள். வாசற் பக்கம் போய் அங்கிருந்து ஊரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப் போம்.''

''இல்லை. வேறு ஒரு எண்ணம் வந்துவிட்டது.''

"என்ன."

"எல்லாம் முடிந்துவிட்டதல்லவா இங்கே."

"ஒருமாதிரி ஆமாம்."

"என்ன ஒருமாதிரி."

"ஸ்தம்பம் நிறுவியாகிவிட்டது. கும்பாபிஷேகம் நடந்தாகி விட்டது. யார் யார்க்கு என்ன மரியாதை செய்ய வேண்டுமோ அது செய்தாகிவிட்டது."

"இப்போது இங்கு என்ன வேலை."

"இங்கு என்ன வேலை என்றால், வேறு எங்கு வேலை."

"அதுதான் முக்கியம். நான் ஊரை விட்டு கிளம்பப் போகிறேன்."

"எப்போது."

"இப்போதே."

"எங்கே."

"நாகைக்கு."

"ஏன்."

"கடல் பார்க்க வேண்டாமா."

"என் அரசே, பைத்தியமா பிடித்திருக்கிறது உங்களுக்கு."

"ஆமாம். என்னால் ஓய்வெடுக்க முடியவில்லை. நான் சோம்பித் தூங்குகின்றவன் அல்ல. சோம்பி தூங்குவது ஒரு சிறந்த விஷயம் என்றால், தொடர்ந்து வேலை செய்வது பைத்தியம் என்றால் நான் பைத்தியம்தான். இந்த வேலை இந்தளவு இங்கு முடிந்துவிட்டது. நான் எதற்காக இந்த கங்கை பயணம் தொடங்கினேன். இங்கு கொண்டு வந்து குளிப்பாட்டவா. அல்ல. என்னுடைய வணிகர்களின் கை அறுத்தவனை சிதைக்காமல் விடமாட்டேன். அந்த தேசத்தை சீரழிக்காமல் விடமாட்டேன். எனக்கு நாவாய்கள் வேண்டும் என்றுதான் வங்கம் போனேன். வங்கத்தில் ஏகப்பட்ட பெரும் நாவாய்கள்.

'வங்கம்' என்ற நாவாய்கள் வந்துவிட்டது. உத்திரலாடத்தி லிருந்தும், தட்சிணலாடத்திலிருந்தும், ஒட்ட தேசத்திலிருந் தும், வேங்கியிலிருந்தும், சேர தேசத்திலிருந்தும், நாஞ்சில் நாட்டிலிருந்தும், ஈழத்திலிருந்தும் நாவாய்கள் வந்துவிட்டன. இவைகளை ஒன்றாக குவித்து மறுபடியும் நாம் கடற்படைக்கு தயார் செய்ய வேண்டும். எனவே,''

அவரை வியப்போடு வீரமாதேவி பார்த்தாள். இவன் என்ன பேயரசன், கொள்கை வெறியன் என்று வியந்தாள். சந்தோஷப்பட்டாள்.

''எனவே, நீயும், நானும் குதிரை ஏறி இப்போதே நாகைக்கு போகிறோம். நாகைக்கு போவதற்கு சரியான பாதை எது என்பது எனக்கு தெரியும். உனக்கும் தெரியும். எனவே கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து உடையார்குடி போய் உடையார்குடியி லிருந்து சிதம்பரம் போய் சிதம்பரத்திலிருந்து பிச்சாவரம் வழி யாக திருமுல்லைவாயில் கடற்கரை ஓரமாகவே நாகைக்கு போனால் என்ன என்று தோன்றுகிறது.''

''சரி. நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டாமா.''

''இன்று நல்ல நாள்தானே.''

''எப்படி சொல்கிறீர்கள்.''

''கும்பாபிஷேகம் செய்திருக்கிறோமே. நாளை காலை வரை நல்ல நேரம் என்றல்லவா சொன்னார்கள். எனவே, மறுபடியும் நாள் பார்க்காது குதிரை ஏறி நாகைக்கு போனால் என்ன.'' அவர் கேட்க, அவள் திகைத்தாள்.

''போகலாம். இப்போதே போகலாம். நானும் உங்களோடு வருவது எனக்கு மிக்க மகிழ்ச்சி. என்னை கலந்தாலோசிக் காமல் நீங்களாக கிளம்பாமல் இருந்தீர்களே. அது மிக்க மகிழ்ச்சி. அதற்காக தனித்த நன்றிகள். தாராளமாக போகலாம். யாரை யாவது எழுப்பி ஏதேனும் சொல்ல வேண்டுமா.''

''ஆமாம். இங்கு வேண்டாம். எழுந்திரு.'' அவர்கள் படி யிறங்கினார்கள். பெரும் கூடத்திற்கு வந்தார்கள். ஓலைநாயகத்

திற்கு ஆள் அனுப்பினார்கள். ஓலைநாயகம் அலறி அடித்துக் கொண்டு வந்தார்.

''கடும் தூக்கத்தில் இருந்திருப்பார் போலிருக்கிறது. நன்றாக விழித்துக் கொண்டீர்களா. சூடாக பால் அருந்துகிறீர் களா.'' வீரமாதேவி கேட்க, சூடான பால் வந்தது. வீரமாதேவி ஆற்றிக் கொடுத்தாள். அவர் விருப்பத்தோடு குடித்தார்.

''என்ன உத்தரவு'', என்று கேட்டார்.

''நானும் வீரமாதேவியும் நாகை நோக்கி போகிறோம். கடற்படை தளங்கள் அமைப்பது பற்றி அங்கு திட்டமிடப் போகிறோம். கடலை வேடிக்கை பார்க்கப் போகிறோம். பருவ மழை என்ன, எப்படி என்று பார்க்கப் போகிறோம். அங்குள்ள பரதவரோடு கலந்து பேசப் போகிறோம். என் பின்னே இப்போது எவரும் தொடர வேண்டாம்.

அரையன் ராஜராஜன் சோழ சாம்ராஜ்யம் முழுவதும் நிர்வகிக்கக்கூடிய அதிகாரத்திற்கு ஆட்படப் போகிறார். அவர் கடற்படைக்கு வரப்போவதில்லை. அவருக்கு வேங்கியை பாதுகாக்கின்ற, ஒட்ட தேசத்தை பாதுகாக்கின்ற, மேலை சாளுக் கியத்தை தடுத்து நிறுத்துகின்ற, கிழக்கே ஒட்ட தேசத்தில் அமைதி ஏற்படுத்துகின்ற, தெற்கே நாஞ்சில் நாட்டில் ஒன்று கூடியிருக்கின்ற பாண்டிய மன்னர்களை ஒரு கட்டுக்குள் வைக்க, சேரர்களோடு நல்ல இணக்கம் வைத்துக் கொள்ள பல விஷயங்கள் இருக்கின்றன. ஆகவே, இராஜேந்திர சோழ ருக்கு பதிலாக இங்கு அரையன் ராஜராஜன் ஆட்சி செய்வார். கிருஷ்ணன் ராமன் தஞ்சைக்கு போகலாம். அருண்மொழி பட்டன் நான் சொல்லும்போது என்னை பின்தொடரலாம். பாண்டியன் ஸ்ரீ வல்லபனும், உதய திவாகரனும், புவனராஜ னும், கங்கை கொண்ட உத்தம சோழ மூவேந்த வேளாரும், அரையன் ராஜராஜனுக்கு துணையாக இருக்க, நீலன் வெண் காடன், குட்டன் கணவதி, சிவஸ்வாமி, மாணிக்கவாசகம், கருமாணிக்கம் போன்றவர்கள் என்னை பின்தொடர வேண்டும்.

சீராளன் தொண்டை தேசத்திற்கு போய் மேலைசாளுக் கியத்தின் எல்லையில் விழிப்பாக இருக்க வேண்டும் என்ற

தனித்த கட்டளையும் பெறுகிறார். எனவே, நாங்கள் செய்தி அனுப்பும் வரை எங்களை பின்தொடர வேண்டாம்.

இதோடு சோழப் படையெடுப்பு முடிந்து விடவில்லை இனிமேல்தான் உண்மையான படையெடுப்பு இருக்கிறது இனிமேல்தான் உண்மையான சோதனை இருக்கிறது. எழுதிக் கொண்டீரா.''

''எழுதிக் கொண்டேன்.''

''இவைகளை ஐந்தாறு, பிரதிகள் எடுத்து அங்கங்கே அவரவர்க்கு என் பொது உத்தரவாக கொடுத்துவிடுங்கள். குறிப்பாக அருண்மொழிபட்டனிடம் இதை சொல்லிவிடு. நாங்கள் கிளம்புகிறோம்.''

அவர் குளித்தார். வெளியே வந்து தலையை கோதி உலர விட்டார். அதற்குள் வீரமாதேவி குளித்து வந்துவிட்டாள். இருவருக்குமான துணிகளை மூட்டையாக கட்டிக் கொண்டாள். மேல் சால்வை எடுத்துக் கொண்டாள். தன்னுடைய கத்தியை எடுத்து இடுப்பில் தரித்துக் கொண்டாள். முதுகில் கேடயம் தரித்தாள். குதிரைகளை கொண்டு வரச் சொல்லி சேணங் களை சரி பார்த்தாள். மாமன்னர் இறங்கி வர, அவர் குதிரையை பிடித்தவண்ணம் காத்திருந்தாள்.

படியிலிருந்து ஒரே தாவலில் மாமன்னர் குதிரை ஏறினார். அது வீரமாதேவிக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளும் தன் குதிரையில் தாவி ஏறினாள். இரண்டு பேரும் வாசலுக்கு வந்தார் கள். வீரர்களிடம் அமைதி என்று எச்சரித்தார்கள். குதிரை அரண்மனையை விட்டு வெளியே கிளம்பியது. மற்ற மாளிகை களை தாண்டியது. வீரர்களின் இருப்பிடங்களை கடந்தது. வாசற் பக்கம் போய் மதிற் சுவரில் நின்றது. வீரர்கள் ஓடி வந்தார் கள். பந்தம் தூக்கி யார் என்று விசாரித்தார்கள். 'மாமன்னர்' என்று சொல்லி மண்டியிட்டார்கள். அவர் உதடில் விரல் வைத்து எச்சரித்துவிட்டு, 'நாங்கள் போனதை விடிந்த பின் சொன்னால் போதும். இப்போதைக்கு எதுவும் செய்ய வேண் டாம்' என்று சொல்லப்பட்டது.

அவர்கள் வெளியேற வாசற்கதவு திறந்து வைக்கப் பட்டது. பின்னால் ஒரு குதிரை ஓடி வந்தது. வாசற்கதவு மூடிக்கொண்டது. வந்த குதிரையிலிருந்து அருண்மொழி கீழ் இறங்கினான். கோட்டை சுவரின் மீது அருகே உள்ள படி களில் ஏறினான். மதில் உச்சியில் நின்றான். அந்த இரண்டு குதிரைகளும் வெளியே வந்தன. நேர்கோடாக உடையார்குடி நோக்கி போகும் சாலையில் புழுதி பறக்க ஓடின. வெளிச்சம் மெல்ல பரவத் துவங்கியது.

ஓலைநாயகம் உத்தரவு எழுதும்போதே அரசருக்காக வைக்கப்பட்ட ஒற்றன் ஒருவன் அருண்மொழிபட்டனிடம் ஓடிவந்து அரசர் ஊர்விட்டு போகப் போவதை சொன்னான். அதை எதிர்பார்த்தது போல அருண்மொழி கீழ் இறங்கினான். அரசர் வெளியே போகும் வரை மரநிழலில் காத்திருந்தான். அரசன் போன பிறகு மெல்ல தன் குதிரையில் பின்தொடர்ந் தான். வெளியே வந்து அவர் போவதை பார்த்தான்.

இருட்டினால் என்ன, வெளிச்சம் வந்தால் என்ன. சோழ தேசம் உறங்கப் போவதில்லை. சோழதேசம் உறங்குவதற்காக பிறந்ததில்லை. இராஜராஜர் செய்யாத விஸ்தரிப்பை இராஜேந் திரர் செய்துவிட்டார். மிகப் பெரிய பாதை ஒன்றை ஏற்படுத்தி விட்டார். கங்கைக்கு போவது இனி வாலிபருக்கு எளிது. பெண்கள் கூட போகலாம். காட்டு வழியெல்லாம் சீராக்கப் பட்டு விட்டது. அங்கங்கே கிராமங்கள் வந்துவிட்டன. எனவே, இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் ஜனங்கள் பரவப் போகிறார்கள். இது மிக அற்புதமான ஒரு செயல்.

இப்போது இன்னொரு பாதை போடுவதற்காக நாகைக்கு மன்னர் போயிருக்கிறார். இது கிழக்கு நோக்கி போகும் பாதை. பாய்மர நாவாய் பாதை. நல்லது. எனக்கும் கடல் கடந்து போக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. இது நடக்கும். அவன் சூரியனை நோக்கி கும்பிட்டான். இறங்கி வரும்போது வேறு ஏதோ மனதில் உறுத்தியது.

இதுவரை இல்லாதபடி வேறு ஒரு பாதை ஏற்படுத்தி இருக்கிறோமே. இது நல்லதா. ஏன் இதில் என்ன தவறு. காசியை நோக்கி துருக்கர்கள் வருகிறார்கள். கஜினி முகமது

என்பவன் வந்திருக்கிறான். அவனை பின்தொடர்ந்து பல வீரர்கள் வருவார்கள். பரத கண்டத்தின் செழுமை அந்த மலையில் உயிர் வாழ்கின்ற முரட்டு கூட்டத்திற்கு தெரிந்து விட்டது. இந்த மாட மாளிகைகளும், பெரும் குளங்களும், அற்புதமான நதிகளும், பச்சை வயல்களும், மரங்களும் அவர் களுக்கு இல்லை. இல்லாத பச்சையைத்தான் கொடியில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். வெறும் மணலை தேசமாகக் கொண்ட அந்த மக்கள் இந்த பக்கம் திரும்புவார்கள்.

ஒருவேளை தட்சிணலாடத்திலிருந்து சோழதேசம் வரை, பரத கண்டத்தின் தென் பகுதி வரும் வழியை நாம் ஏற்படுத்தி விட்டோமா. ஆமாம் என்று அருண்மொழிக்குத் தோன்றியது.

காடுகள் சீர்செய்யப்பட்டு, நீர்நிலைகளில் மூங்கில் பாலங்கள் அமைக்கப்பட்டு மிக அற்புதமான ஒரு வழி வந்து விட்டது. அவர்களுக்கு வசதியாகத்தான் இருக்கும். அவர்கள் தொடர்ந்து தாக்கக்கூடும்.

எப்போது நடக்கும். அடுத்த நூறு வருடங்களில் தட்சிண லாடம், உத்திரலாடம், ஒட்ட தேசங்களிலெல்லாம் யவனர் கள் உள்ளே புகுந்த விதமாகத்தான் இருக்கும். இது சரியா. தவறா.

அருண்மொழி நீ ஒரு சாதாரணன். இவ்வளவு பெரிய விஷயத்தை ஜீரணித்து உன்னால் தெளிவாக புரிந்து கொள்ள முடியாது. இந்த வெற்றி சரிதான். இந்த வெற்றி தவறுதான். எந்த ஒரு செயலுக்கும் நல்ல பக்கமும் உண்டு. கெட்ட பக்கமும் உண்டு.

என்ன செய்வது.

இருக்கும் வரை என்ன நடத்த முடிகிறதோ அதை செவ் வனே நடத்து. அடுத்தபடி கடற்படைக்கு தயார் செய்து கொள்.

அவன் குதிரையை திருப்பி தன்னுடைய அரண்மனைக்கு போனான். மனைவியை அழைத்தான். மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சத் துவங்கினான்.

''விடிந்து விட்டதே.'' அவள் அவனை விலக்க முற்பட்ட போது,

''விடியல் நேரத்தில் வேகம் அதிகமாக இருக்கும் வா'' என்றான். மிக அற்புதமான சல்லாபமாக அது இருந்தது.

வாழ்க்கை என்பது மிக நீண்டது. மிக அகலமானது. மிக உயரமானது. அதற்கு நடுவே இந்த சல்லாபத்தை எல்லாம் மனிதன் விட்டுவிட முடியாது. வாழ்க்கை இப்படித்தான் உருண்டு கொண்டிருக்கும்.

அருண்மொழிபட்டன் அயர்ந்து தூங்கினான். வடக்கத்தி குளிர் காற்று கங்கை கொண்ட சோழேஸ்வரத்தை அணைத்துக் கொண்டது.

(முற்றும்)

பின் குறிப்பு: இதன் தொடர்ச்சியாக நான்காம் பாகம் ஸ்ரீவிஜய படையெடுப்பு சொல்லப்படும்.

திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்செயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவிய ராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப்பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகட லீழத் தரசர்த முடியும்
ஆங்கவர் தேவிய ரோங்கெழின் முடியும்
முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த
சுந்தர முடியு மிந்திர னாரமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும்
எறிபடைக் கேரளர் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவி யிருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடு
பீடிய லிரட்ட பாடி யேழரை
யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளைஇய நாமணைக் கோணமும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரகவையிற்
சந்திரன் றொல்குலத் திந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேர்நற் கோசல நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணறத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்குகொட் டடல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்ம
னாகிய கடாரத் தரசனை வாகையும்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையிற் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகநகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சா திரத்தோ ரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமுந் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை யூரெயிற் றொன்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
விளைப்பந் தூருடை வளைப்பந் தூரும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் வல்வினை மாதமா லிங்கமும்
கலாமுதிர் கடுந்திற லிலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு...